② June & ② July 1982

# தமிழரசு

SL
V2 11m N82
N82.6
85338





இந்திய ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் திரு கே. வி. கிருஷ்ணாராவ் 21.5.82 காலையில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்தார். அவருடன் பூனாவைச் சேர்ந்த தென்னிந்திய தலைமை ராணுவ அதிகாரி லெப். ஜெனரல் டி. எஸ். ஓபராய், சென்னையிலுள்ள தென்மண்டல ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். எஸ். பன்னு ஆகியோர் சென்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ராணுவ தலைமைத் தளபதிக்கு கீதோபதேசக் காட்சியைச் சித்தரிக்கும் வடிவத்தை வழங்கினார்.

85338

கோயம்புத்தூரில் பெரியார் நூற்றாண்டு விழா நினைவுத் தூணை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 19.5.82 அன்று திறந்து வைத்தார்கள்.



# உதகமண்டலத்தில்...



மலர்க் கண்காட்சி துவக்க விழா (22.5.82)

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — வைகாசி 18

மலர்:12 இதழ்: 23

1—6—1982



மலர்க் கண்காட்சி நிறைவு விழா. (23.5.82)

தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறப்பு விழா (16.5.1982)








# மத்திய, மாநில உறவு

**திரு இரா. மோகனரங்கம், எம்.பி.**
**தமிழக அரசின் சிறப்புப்பிரதிநிதி**

மைய அரசு-மாநில அரசுகள் உறவு என்னும் பொருள் குறித்து இன்று நேற்றல்ல, ஒருவர் இருவரல்ல ஆயிரக்கணக்கானோர் அரசியல் வித்தகர்கள், அரசியல் புரிந்தோர், கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் பலர் விவாதித்து வந்திருக்கிறார்கள்.

உலகின் இரண்டாவது பெரிய நாடு இந்தியா. பல்வேறு மாநிலங்ளை உள்ளடக்கிய நாடு. பல்வேறு மாநிலங்களை மட்டுமல்ல, பல்வேறு மொழிகளை, கலாச்சாரங்களை கொண்டநாடு. உலகத்தோடு தொடர்புகொண்டு நாகரீகத்தைப் பிற நாடுகளுக்குக் கற்றுக் கொடுத்தநாடு. நாகரீகத்தின் சின்னமாகத் திகழ்ந்த நாடு, கிராம ஆட்சியை, நிர்வாகத் திறமையை உலகத்திற்கே எடுத்துக் காட்டிய நாடு. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குப் பின்னர் 200 ஆண்டுக் கால பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பின்னர் சுதந்திரம்கண்டநாடு இது. தனக்கென ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கி சமஷ்டி ஆட்சி முறையைப் பின்பற்றி வரும் நாடு மட்டுமல்ல, மொழி வழி மாநிலங்களாகப் பிரிந்து ஆட்சி முறை நடத்தி வருகின்ற நாடு இது. இந்த நாட்டிலே தான் சமஷ்டி முறையைப் பின்பற்றி வருகிறோம். மத்திய மாநில உறவைப் பற்றிப் பேசுகிறோம்.

1948ஆம் ஆண்டில் தமது இந்திய அரசியல் சாசனத்தை அளித்த அரசியல் வித்தகர்கள் சட்ட விற்பன்னர்கள் அரசியல் சட்டத்திலே மைய அரசின் அதிகாரங்கள் என்ன என்பதையும் இரு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் என்ன என்பதையும் வரையறுத்துச் சொல்லியுள்ளார்கள்.

இந்த அதிகாரப் பாகுபாடு நம் நாட்டில் ஏறக்குறைய 32 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டதாகும். அப்போதைய நிலைமை; தேவைப்பாடு - அரசியல் கூறுகள் சந்தர்ப்பங்கள் ஆகியவற்றைக்கருத்தில்கொண்டு இந்தப் பாகுபாடுகள்ஏற்படுத்தப்பட்டன.

மேலும் அனைத்திந்தியாவிலும் மைய-மாநில அரசுகளில் ஒரே கட்சி பொறுப்பேற்றிருந்த காரணத்தாலேயே - மைய அரசுக்கு அதிகாரங்கள் அதிகமா அல்லது மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் அதிகமா என்ற கேள்விக்கே இடமில்லாமல் இருந்தது.

ஆனால், காலம் தன் கடமையைச் செய்தது. மக்களின் அரசியல் கருத்துக்கள் மாறுபட்டன. நாடு முழுவதிலும் ஒரே கட்சியின் ஆட்சி என்ற நிலை மாறி பல்வேறு கட்சிகள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியை அமைத்தன. இந்தச் சூழ்நிலையில் தான் மைய மாநில உறவுக்கு ஒரு புது வடிவம் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தப் புது வடிவத்தினை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் தர முனைந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். தம் கட்சி பொறுப்பேற்று தமிழகத்தில் அரசாள வேண்டும். என்ற எண்ணம் அண்ணா அவர்களுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால், இயற்கையின் நியதியை யாராலே மாற்ற முடியும்? நேரு பெருமகனார் ஒரு முறை Tryst with Destiny என்ற அழகான ஒரு சொல்லோவியத்தைச் சொன்னார்கள். இந்திய நாடு விடுதலையடைந்தது. இந்திய மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்கான கால கட்டம் உருவானபோது அது இயற்கையின் நியதி என்பதை உணர்த்துவதற்காக பண்டிதர் நேரு அவ்வாறு கூறினார். அதுபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது சொன்னார், அது இயற்கைக் கட்டளை என்று.

தமிழகத்தின் முதல்வராக வர வேண்டும் என்ற எண்ணம் அண்ணா அவர்களுக்கு இல்லாமல் கூட இருந்திருக்கலாம். ஆனால், தமிழ் மாநிலத்திற்கு இன்னும் சொல்லப் போனால் இந்தியாவின் மற்ற எல்லா மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்ற எண்ணம்-கோரிக்கை அண்ணாவுக்கு நிறையவே இருந்தது. அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்படக் கூடாது, பரவலாக்க வேண்டும் என்று கேட்டார், வாதாடினார்.

அவர் தமிழக முதல்வரான சில நாட்களில் பத்திரிகையாளர்கள் மத்தியில் இதை அறுதியிட்டுக் கூறினார்.

"Although I am the Chief Minister and although I am interested to do enormous good to my people, my hands are tied. More powers are necessary for the State''.

''நான் முதல்வராக இருந்த போதிலும் என் மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று நான் ஆர்வம் கொண்டிருந்த போதிலும் என் கைகள் கட்டப்பட்டுள்ளன. மாநில அரசுக்கு நிறைய அதிகாரங்கள் தேவைப்படுகின்றன என்றார்'' அவர்.

மாநிலங்களுக்கு நிறைய அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டது, தான் எதேச்சாதிகாரியாக வேண்டும் என்பதற்காக அல்ல, மக்களுக்கு அதிக நன்மை தன்னால் செய்ய முடியும் என்ற அடிப்படையிலேதான். அவர் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல. மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட ஒரு மனிதாபிமானி ஆவார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவான நாளிலிருந்தே மத்திய-மாநில அரசின் உறவு பற்றிய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டு வந்துள்ளன.

ஆனால், இந்தப் பிரச்சினைக்கு இந்தியாவிலேயே முதன் முதலாக அதிகாரப் பூர்வமான முக்கியத்துவம் அளித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அவசியமான அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கு-அரசமைப்புச் சட்டம் செயல்படுவதை ஆராய்வதற்கு உயர் அதிகார ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சராகப் பதவியேற்ற இரண்டாவது மாதத்திலேயே புது டெல்லியில் இந்தியப் பத்திரிகையாளர் கழகத்தினர் நடத்திய கூட்டத்தில் வலியுறுத்தினார்.

'மாநில அரசுகளுக்கும் -மைய அரசுக்கும் உள்ள தொடர்பு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்' என்றார். 'மாநில அரசுகள்-மைய அரசு உறவு முறை மிக்க நிலையான அடிப்படையில் சீரமைக்கப் பட வேண்டும்' என்பது அவருடைய ஆணித்தரமான கருத்து.

அவர் கருத்தில் கொண்டது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது ஒன்று. மைய-மாநில அரசுகள் உறவு நீடித்து நிலை பெற்று வளர வேண்டும் என்பது.

-'இணக்கமான நல்லெண்ணத்தின் மூலம், நிலையானதும் நல்ல பலன் தரத்தக்கதுமான முடிவை நாம் காண வேண்டும் என்பதே என் வேட்கையாகும்'' என்று அவரே ஒரு முறைக்குப் பல முறை சொல்லியிருக்கிறார்.

தனிப்பட்ட மனிதர்கள் உறவில் எப்படி இணக்கமான நல்லெண்ணம் முக்கியமோ அப்படியே மாநில அரசின் நல்லுறவுக்கும் அது இன்றியமையாததாகும்.

ஒரு பக்கம் அதிக அதிகாரங்களைக்கோரும் மாநில அரசுகளின் நியாயமான வாதங்கள்; மறுபக்கம் இவ்வளவு பெரிய நாட்டை நிர்வகித்து நிதி வசதிகளைப் பங்கிட்டுத் தரவேண்டிய மைய அரசின் பிரச்சினைகள்.

இந்தச் சூழ்நிலையில் நடைமுறையில் சாத்தியமானது எது? நாட்டு மக்கள் நலனுக்கு உகந்த வழி என்ன? நாட்டின் நலத்தை மனத்திற் கொண்டோர் சிந்திக்க வேண்டிய கட்டம் இது. 427

அந்தக் கடமையைத் தமிழ் நாடு அரசு செவ்வனே முழுமையாக உணர்ந்திருக்கிறது.

இன்றைய தமிழ்நாடு அரசு அண்ணாவின் அரசு ஆகும். இதனை நமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு முறையிலும், வகையிலும் நினைவுறுத்தியிருக்கிறார்கள்.

இதுவேதான் அண்ணாவின் வழி-அன்பு வழி-அமைதி வழி. அதே வழியில் தான் தமிழக முதல்வரும் தவறாது தொடர்ந்து செல்கின்றார்கள்.

மைய - மாநில உறவினை இணக்கமான நல்லெண்ணத்தின் மூலம்தான் உருவாக்கி-உறுப்படுத்த முடியும் என்று அண்ணா சொன்னவை தாரக மந்திரமாகக் கொண்டு தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

இதனைச் சுட்டிக் காட்ட வேண்டுமானால் பிப்ரவரி திங்களில் தமிழகச் சட்ட மன்றப் பேரவையிலும் - மேலவையிலும் நடைபெற்ற ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து தமிழக முதல்வர் ஆற்றிய உரையில் ஒரு பகுதியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் பிரச்சனை பற்றிப் பேசிய முதல்வர், மைய அரசோடு மாநில அரசு எவ்வாறு நடந்து கொள்ள விரும்புகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நாட்டின்

**கடைசி அட்டையில்**
மதுரையில் நடைபெற்ற
சித்திரைப் பொருட்காட்சியில்
(1982) செய்தித் துறை அரங்கின்
முகப்பு

நலம் முக்கியமே தவிர, அரசியல் ஆதாயம் அல்ல.

''கூடுமான வரையில் இந்தியப் பேரரசோடு சுமுகமான வகையில் மீண்டும் கேட்டு எழுதி பதில் பெற்று அவர்களுக்கு விளக்கம் தந்து, அவர்களது கருத்துக்களை மாற்றிக் கொள்ளச் செய்ய நாங்கள் விரும்புகிறோமே தவிர, வேண்டுமென்றே ஒரு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி அதனால் நாம் போடுகின்ற திட்டங்கள் அனைத்தும் தடைபட்டு விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை எங்களுக்கு உள்ளது'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த முறையைத்தான் இந்திய துணைக்கண்டத்தை ஆளுகின்ற, பிரதம அமைச்சர் இந்திரா அம்மையாரும் விரும்புகிறார்கள்.

சுமுகமான ஒரு நல்லுறவை உருவாக்க இதைவிட இணக்கமான அணுகுமுறை வேறு எதுவும் இருக்க முடியாது. நாடாளவந்தோருக்கு நாட்டு மக்கள் நலந்தான் முக்கியமே தவிர தங்களது சொந்த விருப்பு வெறுப்புகள், வீம்புகள், பிடிவாதங்கள் முக்கியமல்ல. அரசியல் ஆதாயங்கள் அல்ல. இதனை மிகப் பெரிய ராஜதந்திரம் என்று கூறினாலும் சரி அல்லது ஒரு சராசரி மனிதனின் சமர்த்தான வாதம் என்று சொன்னாலும் சரி இந்தியாவைப் போன்ற இவ்வளவு பெரிய நாட்டில் இத்தகையதொரு கண்ணோட்டம்தான் மக்களுக்கு நிலைத்த நன்மைகளைச் செய்வதற்கு உதவியாக இருக்குமே தவிர வேறொன்றும் அல்ல

மைய அரசோடு மாநில அரசுகள் ஒத்துப் போவதன் வாயிலாகவும்-மாநில அரசுகளை மைய அரசு அரவணைத்துச் செல்வதன் வாயிலாகவும் ஒரு அமைதியான சூழ்நிலை நாடெங்கும் உருவாக வேண்டும். அப்போது தான் இரு அரசுகளும் இணைந்தும் தனித் தனியாகவும் வகுத்துச் செயல்படுத்தும் நல வளர்ச்சித் திட்டங்கள் முழு வெற்றியடைந்து இவற்றின் முழுப்பலன் மக்களுக்குக் கிடைக்கும்

இந்த உணர்வோடுதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தமிழக அரசு, மைய அரசோடு தனது நல்லுறவை வளர்த்து வருகிறது. வலுவுள்ள மாநிலங்கள் மூலம்தான் வலுவான நாடு அமைக்க முடியும் என நம்புகிறது, சுமுகமான உறவு தமிழகத்திற்கும் மத்திய அரசுக்கும் நிலவி வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்

*[16.5.82 அன்று வானொலியில் ஆற்றிய உரை]*



## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கலைக் களஞ்சியங்கள் தயாரிப்பு

சென்னையில் 20.5.82 அன்று கூடிய தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நிதிக்குழு ஆகியன, தமிழ்ப் பல்கலைக் கழகத் தலைமையின் கீழ் 20 தொகுதிகள் கொண்ட அறிவியல் கலைக் களஞ்சியம், 14 தொகுதிகள் கொண்ட சமூகவியல் கலைக் களஞ்சியம் மற்றும் 10 தொகுதிகள் கொண்ட தமிழ்ப் பேரகராதி ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டு தொடங்கி, 1986 மார்ச் மாதத்தில் முடிவுறும். ஆண்டுதோறும் இதற்காகும் செலவு தோராயமாக ரூ. 13 இலட்சமாகும். மத்திய அரசு மற்றும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து உதவிகள் பெறப்படும். முதல் இரண்டு அகராதிகள் தமிழ் பேசுவோர்களுக்கு நவீன செய்திகளைக் கொண்டதாக வெளிவரும். மூன்றாவது அகராதி தமிழ் இலக்கியங்களில் கிடைக்கக் கூடிய சொற்களின் விரிவான அட்டவணையைக் கொண்டிருக்கும்.

### தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு நாணயங்கள் புத்தகங்கள் மற்றும் ஓலைச் சுவடிகள் அன்பளிப்பு

பாண்டிச்சேரி வருவாய்த் துறைச் செயலாளரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு.பி. எல். சாமி அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களிடம் 20.5.82 அன்று அரிய நாணயங்களை கண்காட்சியில் வைப்பதற்காக வழங்கினார்கள். அவருடைய மறைந்த சகோதரரும் ஆராய்ச்சியாளருமான திரு.பி. ஜோசப் அவர்களின் பரிசாக அந்த நாணயங்களைக் காட்சிக்கு வைக்கலாம் எனவும் திரு பி.எல்.சாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரி முன்னாள் முதல்வர் திரு கே.எஸ். கணபதி அவர்கள் அச்சிட்ட அரிய புத்தகங்களையும் மற்றும் 300 ஓலைச் சுவடிகளையும் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திற்கு வழங்கினார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டம், ஒடுக்கத்தூர் திரு. பி. அ. வேதவியாசர் அவர்கள் தமது தந்தை பெயரால் ஆறு பனை ஓலைச் சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்துள்ளார்கள்.

இச்சுவடியில் வள்ளலாரின் திருவருட்பாவில் இடம்பெற்ற சில உபதேசங்கள் உரை நடையாகத் திரட்டப்பட்டுள்ளன.

பதஞ்சலி மாமுனிவர் அருளிச் செய்த ஞானத்திருப்புகழ் என்று நூலின்பெயர் முதலிலும் இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நூல் காப்பு வெண்பா ஒன்று சந்தப்பாக்கள் 8, ஆக மொத்தம் 9 பாடல்கள். இதனைத் தொடர்ந்து வருட பலன் (சோதிடம்) உரைநடையில் உள்ளது.

இரண்டு சுவடிகள் கயறு சார்த்திப் பார்ப்பதற்குரிய ஆருட ஏடுகள் (நிமித்த சோதிடம்)

ஒரு சுவடியில் மன்மதன் வரலாறு நாட்டுப்பாடலாக உள்ளது. இறுதியில் ''கருணீகர் குலத்தில் தோன்றிய சாமிநாதன் விளம்பரம் செய்திட்டானே'' என்று கூறப்பட்டுள்ளது. இது இந்தச் சாமிநாதன் அவர்களால் இயற்றப்பட்டது என்று கொள்ளவும், அல்லாமல் இவரால் அவைகளில் பாடிப் பரப்பப்பட்டது என்று கொள்ளவும் இடமுள்ளது.

ஒரு சுவடியில் அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் 110 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.





## மாமல்லபுரம் மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தில் ஏராளமாக அமைந்துள்ள சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வாய்ப்புகளை அறிந்தே, இவ்வரசு சுற்றுலா வளர்ச்சிக்கென மிக முக்கியத்துவம் அளித்து வருகின்றது.

**மாமல்லபுரம்**

மாமல்லபுரம் அழகிய கடற்கரையும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். சுற்றுலா வாய்ப்புக்கள் மிக்க இவ்விடத்தை இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுவினர், கிழக்கு மேற்குக் கடற்கரைப் பகுதிகளை ஆய்வு செய்து, கோவா, கோவளம், மாமல்லபுரம் ஆகிய மூன்று கடற்கரைச் சுற்றுலாத் தலங்களையும் மேம்பாடு செய்ய பரிந்துரைத்து உள்ளனர்.

இதன் அடிப்படையில் ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டத்தினை தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை வகுத்துள்ளது.

அதன் முக்கிய அம்சங்கள்:

1. பலதரப்பட்ட வருவாய் உள்ளவர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் தங்குமிட வசதிகளை விரிவு செய்தல்.

2. ஒலி, ஒளிக்காட்சி, உலாத் தலங்கள், திறந்த வெளி அரங்கம், திறந்த வெளி அருங்காட்சியகம் போன்ற பொழுதுபோக்கு வசதிகள் ஏற்பாடு செய்தல்.

3. குடிதண்ணீர், சுகாதார அடிப்படை மருத்துவ வசதிகள் செய்து தருதல்.

4. சுற்றுலாப் பயணிகள் முகாம், பேருந்துகள் நிறுத்துமிடம் போன்று வசதிகள் செய்தல்.

5. நினைவுச் சின்னப் பகுதியிலிருந்து போக்குவரத்தைத் திருப்புவதற்காகச் சுற்றுச் சாலை அமைத்தல்.

6. பேருந்து நிலையம் அமைத்தல்

7. அலங்கார வசதிகள் அமைத்தல்

8. அங்காடிகள் அமைத்தல்.

9. இவை சார்ந்த பிற வசதிகள் அமைத்தல் ஆகியவையாகும்.

சுற்றுச் சாலைகள் அமைக்க கீழ்க்கண்ட 5 திட்டங்களுக்கு இந்திய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளது.

| | ரூ. இலட்சம் |
|---|---|
| 1. சுற்றுச் சாலைகள் அமைக்க | 160.00 |
| 2. சுற்றுச் சாலையை ஒட்டி ஊர்திகள் நிறுத்துமிடம் அமைக்க | 16.00 |
| 3. பேருந்து நிலையங்கள்அமைக்க | 50.00 |
| 4. அங்காடிகள் அமைக்க | 32.00 |
| 5. அலங்கார வசதிகள், பொழுது போக்கு வசதிகள் செய்தல் | |
| 1. அருச்சுணன் தவம் பகுதியிலிருந்து கடற்கரை கோயில் வரையிலும் / 2. கலங்கரை விளக்கத்திலிருந்து ஐந்து ரதப்பகுதி வரையிலும் | 104.00 |
| ஆக மொத்தம் | 362.00 |

இதற்காக முதற் கட்டமாக ரூ. 25.00 இலட்சம் அனுமதிக்கும்படி கேட்ட கோரிக்கை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஒலி-ஒளிக்காட்சி**

மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்கும் திட்டம் வெகு காலத்திற்கு முன்பே தரப்பட்டது. ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் இப்பணி தள்ளிப் போய்க் கொண்டிருந்தது. கடந்த 3 ஆண்டுகளாக மத்திய அரசுடன் இது குறித்து வலியுறுத்தியதன் பயனாக இதற்கான செலவில் 50 தொகையை உதவியளிக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. பிலிப்ஸ் இந்தியா நிறுவ

ம் இதற்கான நடைமுறை சாத்தியக் கூறு அறிக்கையை அளித்துள்ளது. இதற்கான அனுமதி இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி இத்திட்டத்தின் கீழ்க்கண்ட முக்கிய சில பணிகளைத் தமிழக அரசு தனது நிதியிலிருந்து நிறைவேற்றத் தொடங்கி உள்ளது. அவை யாவன:

1. குறைந்த செலவில் சுற்றுலா மேற்கொள்ளுபவர்களுக்காகச் சுற்றுலாப் பயணிகள் முகாம்.

2. ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம்.

3. மாமல்லபுரத்தில் கடற்கரைப் பொழுதுபோக்கு வளாகத்தினை விரிவுபடுத்துதல்.

மேற்கண்ட திட்டங்கள் பற்றிய குறிப்பு வருமாறு:

**சுற்றுலாப் பயணிகள் முகாம்**

இதுவரை மாமல்லபுரத்திலுள்ள பயணிகள் தங்குமிடங்கள் வசதிபெற்ற பயணிகள் மட்டும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளன. எனவே, குறைந்த செலவில் பயணங்கள் மேற்கொள்ளும் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் உள்ள பயணிகள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் விரைவில் தொடங்கப் பெறவிருக்கும் சுற்றுலாப் பயணிகள் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம் கடற்கரையொட்டி கடற்கரைக் கோவிலுக்குச் செல்லும் வழியில் 10 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இதில் 40 படுக்கைகள் கொண்ட இளைஞர் விடுதி, 12 குடில்கள், கூடாரங்கள் ஆகியவற்றுடன் உணவு விடுதி, ஊர்தி நிறுத்துமிட வசதி, கழிவறை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. இந்த முகாம் சுமார் 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் விடுதி மூன்று பெரிய படுக்கையறைகள் கொண்டவை. இதில் ஆடவர், மகளிருக்குத் தனித்தனியே குளியலறை வசதிகள் உண்டு. மாமல்லபுரத்திற்குப் பெருமளவில் வருகைதரும் சுற்றுலாக் குழுக்கள் இளைஞர்களுக்குப் பயன்தரும்வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. அழகிய சூழ்நிலைக்கு மத்தியில் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூடாரங்களில் தேவையான வசதிகள் உள்ளன.

குடும்பத்தினர் தங்குவதற்கான எல்லா வசதிகளும் குடில்களில் உண்டு. இந்த மூன்று வகையான தங்குமிடங்களுக்கும் குறைந்த வருவாய் உள்ளவர்கள் செலவிடக்கூடிய வகையில் மிகக் குறைந்த கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திறந்தவெளி அருங்காட்சியகம்**

சுற்றுலாப் பயணிகளுக்குக் கல்வி புகட்டுதல், பொழுதுபோக்கு வசதிகள் அளித்தல் ஆகிய இரு நோக்கங்களுடன், திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்று ஜப்பான் நாட்டில் ஹோகோன் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்திலுள்ள அருங்காட்சியகமும், ஜப்பானில் உள்ளது போன்று விளங்கும்.

இந்த திறந்தவெளி அருங்காட்சியகம் கடற்கரைப்பகுதியில் 20, 25 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படும். இதற்காக மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் 33 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 6 அல்லது 7 ஏக்கர் பகுதி சுற்றுலாப்பயணிகள் முகாமுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப்பகுதி நில அமைப்பு கட்டடக்கலை நிபுணர் உதவியுடன் அலங்காரமாக, நிழல்தரும் அழகிய மரங்கள், புல்வெளிகள், அலங்காரச் செடிவகைகளுடன் அமைக்கப்படும்.

இப்பூங்கா, நமது வரலாறு, பழம்பெரும் கலாச்சாரம், இவைகளை எடுத்து கூறும், கலைச்செல்வங்கள் நிறைந்தவையாக இருக்கும். மாமல்லபுரத்திலிருக்கும் சிற்பக்கலைப் பள்ளி, இந்தப் பொருட்களை உருவாக்கும் பணியினை மேற்கொள்ளும். அரசு கொள்கையளவில் இதற்காகச் சுமார் 40 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்த அருங்காட்சியகம் நாட்டிலேயே முதலாவதாக அமையும். இதற்கான பணி விரைவில் தொடங்கும். இது உள்நாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குக் கல்வி அறிவு வழங்குவதாக அமையும்.

**மாமல்லபுரத்தில் கடற்கரைப் பொழுதுபோக்கு வளாகம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரைப் பொழுதுபோக்கு வளாகம் ரூ. 36.60 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படுகிறது. இதில் 18 நெடுங்கிய குடில்களும் 10 சொகுசு குடில்களும் புதியாக சேர்க்கப்படும். இவைதவிர நீச்சல்குளம் போன்ற பொழுதுபோக்கு அம்சமும் அமைக்கப்படும். பெரிய உணவு விடுதியும் கட்டப்பட்டு வருகிறது. இதில் பின்னர் கூட்ட அறை ஒன்று ஏற்படுத்தவும், சுற்றுலாக் கழகம் திட்டமிட்டுள்ளது.

**பிற துறைகளின் பணிகள்**

மாமல்லபுரத்தில் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்ய உள்ளாட்சி, ஊரக வளர்ச்சித்துறை திட்டமிட்டுள்ளது.

| | ரூ. இலட்சம் |
|---|---|
| 1. ஒளி விளக்குகளில் முன்னேற்றம் செய்ய .. | 2 |
| 2. அங்காடிகள் பகுதிக்கு .. | 5 |
| 3. பேருந்து நிலையம் .. | 5 |
| 4. பொழுதுபோக்கு வசதிகள் .. | 2 |
| 5. திறந்தவெளி அரங்கம்அமைக்க .. | 3 |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் ரூ.55 இலட்சம் செலவில் பாலாற்றிலிருந்து மாமல்லபுரம் நகருக்கு 6.75 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தினை ஆய்ந்து வருகின்றனர்.

நல்வாழ்வு, குடும்ப நலத்துறை, மாமல்லபுரத்தில் 12 படுக்கைகொண்ட ஒரு மருத்துவமனையினை ரூ. 3.50 இலட்சம் செலவில் அமைக்க கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

ஒரு நவீன பேருந்து நிலையம் அமைக்க பல்லவன் போக்குவரத்துக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அட்டை சொல்லும் கட்டுரை



# பண்டிதமணி நூற்றாண்டு நிறைவு விழா

நிகழ்ச்சித் தொகுப்பு :
**தமிழ்ப்பித்தன்**

பைந்தமிழும் வடமொழியும் பாங்குறக் கற்றுத் தேர்ந்து இருமொழிப் புலவராக ஒளி வீசித் திகழ்ந்த பண்டிதமணி கதிரேசனார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா தமிழக அரசின் சார்பில் 21-5-'82 அன்று கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

அரசுக் கலைஞர் டாக்டர் மதுரை எஸ். சோமசுந்தரம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா துவக்கம் ஆகியது.

விழாவுக்கு வந்திருந்தோரை டாக்டர் ஔவை. நடராசன் அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''காட்சிக்கு இனியர்; பேசுதற்கு இனியர்; உடை அழகிலும் இனியர் ஆகத் திகழ்ந்தவர் பண்டித மணி அவர்கள். காணும் போதெல்லாம் இனிமை தவழ்கின்ற தமிழ் உருவமாக அவர் விளங்கினார்''

விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர். ம. பொ. சி. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''பண்டிதமணி, தமிழிலே நிறைபுலமை பெற்ற ஒரு பெரும் புலவர் ஆவார். தமிழ்ப் பண்பாட்டின் வடிவமாக அவர் திகழ்ந்தார். பிறருடன் கருத்து வேற்றுமைகள் இருந்த போதிலும் அவர்களிடம் பண்பாகப் பேசுவதைத் தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தார்''

அடுத்து உரையாற்றிய டாக்டர் ந. சஞ்சீவி தெரிவித்தார் :

''ஒரு மனிதன் எத்தனைமொழிகளை வேண்டுமானாலும் கற்கலாம்; ஆனால், தாய்மொழியன்றி வேற்று மொழிகளுக்கு அடிமைப்பட்டு விடக்கூடாது என்பதைப் பண்டிதமணி எடுத்துக் காட்டினார்''

பண்டிதமணி கதிரேசனாரின் உருவப்படத்தைத் திறந்து வைத்த டாக்டர் ராஜாசர் எம். ஏ. முத்தையா செட்டியார் எம். எல். சி. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''எப்போதும் ஆராய்ச்சி செய்யும் இயல்பு படைத்தவராக விளங்கினார் பண்டிதமணி.''

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் ந. ரா. முருகவேள் தெரிவித்தார் :

''நூலார், நூல் வல்லார், நூலாருள் நூல் வல்லார் என மூன்று வகையினர் உண்டு. பண்டிதமணி அவர்கள் நூலாருள் நூல் வல்லாராகத் திகழ்ந்தார்.''

பின்னர் உரையாற்றிய டாக்டர் மெ. சுந்தரம் குறிப்பிட்டார்:

''எந்தத் துறையில் நுழைந்தாலும், இலச்சினை பொறித்தவர் பண்டிதமணி; அவர் நிறைகுடமாக விளங்கினார்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் தெரிவித்தார்:

''வடமொழிப் புலமை பெற்றிருந்தும் தமிழ் மூலமே கல்வி கற்க வேண்டும் என நினைத்தவர் பண்டிதமணி அவர்கள்''

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் தமது உரையில் தெரிவித்ததாவது :

''அறிவு, ஆற்றல், அருள், அன்பு ஆகிய பல பண்புகளைப் பெற்றிருந்தவர் பண்டிதமணி அவர்கள்.''

அடுத்து உரையாற்றிய மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தமது உரையில் குறிப்பிட்டார் :

''இனிமை, எளிமை, ஆழமுடைமை ஆகிய மூன்று இயல்புகளும் படைத்த நூல்களை ஆக்கியவர் பண்டிதமணி.''

அடுத்து, விழா நிறைவுப் பேருரையாற்றிய மாண்புமிகு

நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

'தமிழகம் பெருமை பெற— பூரிப்புப் பெற-ஏற்றம் பெற— சான்றோர்களின் பிறந்தநாள் விழாக்களைக் கொண்டாடி வருகிறோம்.

''தமிழகம் எந்தநாளும் விழாக் கோலம் பூண்டிருந்தது. சங்க காலத்தில் மதுரை, காஞ்சி, வஞ்சி, உறையூர் போன்ற நகரங்கள் எல்லாம் விழவு மலி மூதூர்களாக விளங்கின.

''இந்திய நாட்டின் இருபத்திரண்டு மாநிலங்களிலும் விழா நடத்தி மகிழ்கின்ற பெருமை கொண்டது தமிழ்நாடுதான்.

''பண்டிதமணி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை அரசின் சார்பில் நாம் கொண்டாடுகிறோம். பண்டிதமணி அவர்கள், உழைப்பால் உயர்ந்து தானே முயன்று, தமிழ்மொழியை ஆழ்ந்து கற்று, விரிந்த அறிவினைப் பெற்று, பிறர் பாராட்டத் தக்க அளவிற்குத் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்.

''தமக்கு இருந்த உடல் ஊனத்தை அவர் ஊனமாகக் கருதவில்லை. 'ஊனமுற்றதனால்தான் நான் தமிழ்க் கல்வி கற்று மேன்மை எய்த முடிந்தது. அதற்காக ஊனத்துக்கு நன்றி சொல்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

''சொல்லுக்குச் சொல் சுவை காண வேண்டும் என்பது அவரது கருத்து. கவிதைக்கு எவரும் பதவுரை கூறலாம்; பொழிப்புரை கூறலாம்; கருத்துரையும் கூறலாம்; ஆனால் நயவுரை கூறுதல் அரிது; பண்டிதமணி அவர்கள் நயம் சொல்லி விளக்குவது மிகுந்த பாராட்டுக்குரியதாக இருந்தது.

''சங்க இலக்கியங்களான அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, மற்றும் சீவகசிந்தாமணி போன்ற நூற்களுக்கெல்லாம் அவர் நயம் சொல்லி விளக்கும் பாங்கு சிறப்புடையதாக இருந்தது.''

விழா நிறைவுரைக்குப் பின்னர் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் நன்றியுரை கூற விழா இனிது முடிந்தது. பண்டிதமணி அவர்களின் நூறாவது ஆண்டு நிறைவு விழா அனைவரின் நெஞ்சங்களிலும் நிறைந்த விழாவாகத் திகழ்ந்தது.




ஜந்தர் மந்தர்-கட்டடத்தின் வரை படம் ஒன்பதாவது ஆசியப் போட்டியின் சின்னமாகும்.

புதுடில்லியில் நகரின் நடுவே யுள்ள வான ஆராய்ச்சிக் கூடம் ஜந்தர் மந்தர். கி. பி. 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஜந்தர் மந்தர் கட்டடத்தின் மைய கட்டடமே ஆசியா1982ன் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சூரியனின் உயரக்கோணத்தை அளக்கும் கருவியை (AZIMUTH) கட்டடமாகக் கட்டி வைத்துள்ளார் இதன் சிற்பி.

**வரலாற்றுச் சிறப்பு:** ஜந்தர் மந்தர் இந்தியாவின் தலைநகரான டில்லியின் மையத்தில் உள்ளது. கி. பி. 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்திய வான் ஆராய்ச்சி மற்றும் கட்டடக் கலையின் நினைவாலயமாக உள்ளது. அறிவு, நேர்மை; வேட்கைகளின் சின்னமாகத் திகழ்கிறது. இம்மூன்று காரணங்களால் ஜந்தர் மந்தர் ஒன்பதாவது ஆசியப்போட்டியின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**தனித் தன்மை:** ஜந்தர் மந்தரின் இந்த வரைபடம் இதுவரையில் பயன்படுத்தப்படாததால் இதற்கெனத் தனித்தன்மை கொண்டதாக அமைகிறது.

**எளிமை:** தடிப்பான இதன் கருநிறக் கோடுகள் எளிமையாக வரைந்து கொள்ளக் கூடியவை

**அதிர்ஷ்டக்குறி:** குட்டி யானையின் (குழந்தை) நடை ஒன்பதாவது ஆசியப் போட்டியின் அதிர்ஷ்டச் சின்னம். அதன் நெற்றியிலுள்ள செந்தூரப் பொட்டுதான் வெற்றித் திலகம்

வாலறிவு

வலிமை

நம்பிக்கை

ஆகியவற்றுக்கான யானை இந்திய நாட்டின் தெய்வீக இலக்கியங்களிலும் கிராமீயக் கதைகளிலும் போற்றப்படுகிறது.

வெற்றியைத் தேடி விளையாடுவோருக்குச் சித்தியைத் தர அத்தி (யானை) முன் வருவது நற்குறி என்று நம்பப்படுகிறது.



# நகல் எடுக்கும் பணிக்கு நல்லதொரு இயந்திரம்

ஜி. ஆனந்தன்

அறிவியல் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. அலுவலகப் பணிகளை விரைவுபடுத்துவதற்குத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்றவை தோன்றின. தட்டச்சு செய்வதன் மூலம் எடுக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளன. அதிக அளவில் தேவைப்படும்போது ஸ்டென்சில் தயாரித்து அதன் மூலம் நூற்றுக்கணக்கான பிரதிகள் எடுக்கப்பட்டன. அவற்றை விட வேகமான முறையில் பிரதிகள் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் விஞ்ஞானிகளின் இதயத்திலே சுற்றிச் சுழன்றன. அதன் விளைவாக தட்டச்சு செய்ய வேண்டியதின்றி 'ஜெராக்ஸ்' என்னும் புதிய முறையைக் கண்டுபிடித்தனர். மூலப் பிரதி புகைப்படக் காமிராவினால் நெகட்டிவ் எடுக்கப்பட்டு, உடனடியாக நகல் பிரதி எடுக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான பிரதிகளை எடுத்துத் தள்ளுவதற்கு இந்த இயந்திரம் பயன்பட்டது. என்றாலும் தானாகவே இதனால் பிரதி எடுக்க முடிவதில்லை. மனித சக்தி தேவைப்படுகிறது. எனவே அறிவியலார் மென்மேலும் இந்தத் துறையில் முயற்சி செய்தனர். அதன் விளைவு, மின்னாற்றலால், தானே இயங்கும் **'போட்டோமெக்ஸ் எம். பி. 50'** என்னும் நகல் எடுக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இயந்திரம் பல்வேறு வகைகளில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. நிமிடத்திற்கு 12 பிரதிகள் எடுக்கலாம். கறுப்பு மை, நீல மை ஆகியவற்றால் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் மட்டுமின்றி பல வண்ணங்களில் அச்சடிக்கப்பட்ட காலண்டர், படங்கள் ஆகியவற்றைக்கூட வெகு விரைவில் கறுப்பு வண்ணத்தில் நகல் எடுக்கிறது இந்த இயந்திரம்.

இயந்திரத்தில் உள்ள டயலில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் பிரதிகளுக்குரிய எண்ணை அழுத்தினால் போதும். தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக, பிரதிகள் தாமாகவே நகலாக்கப்பட்டு வெளிவருகின்றன.

எவ்வகையான சாதாரணத் தாள்களையும் பயன்படுத்தி நகலை எடுத்துக் கொள்ளலாம். இதற்கென உயர்ந்த காகிதமோ-தனியான காகிதமோ தேவை இல்லை.

முன்பு இந்த இயந்திரம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. தற்போது முழுக்க முழுக்க இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தை உருவாக்கும் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது. ஆக்ரா, ஆமதாபாத், பங்களூர், பம்பாய், போபால், கல்கத்தா, கொச்சி, ஹைதராபாத், ஜெய்பூர், லக்னோ, சென்னை, பாட்னா ஆகிய நகரங்களில் கிளை அலுவலகங்கள் உள்ளன.

சென்னையில், அண்மையில் இதன் கிளை நிறுவனம் துவக்கப்பட்டது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் துவக்கி வைத்தார்கள் நிறுவனத்தின் விற்பனைத்துறைப் பொது மேலாளர் திரு என்.வி. நாதனும், கிளை மேலாளர் மணியும் இயந்திரத்தை இயக்கிக் காண்பித்து விளக்கம் சொன்னார்கள்.

இந்த இயந்திரத்தின் உதவியினால் மூலப் பிரதிகளுக்குச் சேதமின்றி நகல் எடுக்க முடிகிறது. அதுவும் விரைவில், குறைந்த செலவில் எடுக்க முடிகின்றது என்பதை எண்ணும்போது நகல் எடுக்கும் பணிக்கு நல்லதொரு தொண்டனாக இது விளங்குகிறது என்று சொல்லலாம்.






# ஓவியர்களுக்கு உதவுவோம்!

தமிழ்நாடு ஓவியக் கலைத் தொழிலாளர் முன்னேற்றப் பேரவை சார்பில்நடத்தப்பெற்ற இரண்டாவது மாநாட்டில் மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

சென்னையில், திரு. வி.க. மணிமண்டபத்தில் நடைபெற்ற (16.5.82) இம் மாநாட்டின் துவக்கத்தில் ,மயிலையிலுள்ள திரு வள்ளுவர் சிலையிலிருந்து அலங்கார வண்டிகளும் இடம்பெற்ற மிகப் பெரிய ஊர்வலமொன்று நடைபெற்றது. ஓவியர்கள் அணி வகுத்த இதில் பல்லாயிரவர் பங்கேற்றனர்.

சாந்தி ஆர்ட்ஸ் கன்னையா, கார்த்திகேயன் குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு துவங்கியது தமிழ்நாடு ஓவியக் கலைத் தொழிலாளர் முன்னேற்றப் பேரவையின் இரண்டாவது மாநாடு. அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் திரு, எஸ். எஸ். வாசன் வரவேற்புரையாற்றினார்.

ஆர்.வி. ராகவன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் எஸ். கணபதி, ஜி. சண்முகம், சி. மணி, ஜி. சேது, அசரியா, பா. அங்கமுத்து, எஸ்.வி.வேலு, கிருஷ்ணா, சண்முகம், ஆர்.வி. ராஜு ஆகியோரும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. தங்கபாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு எஸ்.கே. சீனிவாசன், பச்சையப்பன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு, ராஜ் மோகன், தலை சிறந்த ஓவியர்களான ராகி, உபால்டு, ஜெயராஜ். மாருதி, ஏ.எஸ். நடராஜன், ஆர்.டி. ஜெயராமன் ஆகியோரும் மா. செங்குட்டுவன், நடிகர் ரவிச்சந்திரன், திரைப்பட இயக்குநர் துரை ஆகியோரும் பங்கேற்று உரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில், பெயர்பெற்ற 'பேனர் ஆர்ட்டிஸ்ட்' திரு, பி.ஈ. பிரம்மத்திற்கு மாண்புமிகு அமைச்சரும், திரு, உபால்டுக்குத் திரைப்பட இயக்குநர் துரையும் திரு, ஜெயராஜுக்கு நடிகர் ரவிச்சந்திரனும் திரு. மாருதிக்கு தங்கபாலுவும் பொன்னாடை போர்த்தினர்.





நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்

இந்த மாநாட்டில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

இரண்டு காரணத்தாலே இப்போது இந்த மாநாட்டில் நான் பங்கேற்றிருக்கிறேன். முதலாவது-உங்கள் பிரச்னைகளை அரசுக்குத் தூதுவனாக எடுத்துச் செல்ல முடியும். அடுத்தது, என் மூத்தமகள் ஓவியக் கலைத் தேர்வுக்குப் படித்து வருகிறாள் என்பதால் எங்கள் குடும்பத்திற்கும் ஓவியக் கலைக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறையில் இருக்கும்போது போய் சந்தித்தோமானால் இன்றைக்கு இந்த புத்தகத்தைப் படித்தேன் அந்தப் புத்தகத்தைப் படித்தேன் என்று கூறுவதோடு, மனதை அமைதிப்படுத்திக் கொள்வதற்காக-ஒருமைப் படுத்திக் கொள்ளுவதற்காகச் சிறிது நேரம் ஓவியம் போட்டுக் கொண்டிருந்தேன் என்பார்கள்.

அப்படிப்பட்ட உன்னதமான ஓவியந் தொழிலில் ஈடுபட்டுள்ள உங்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் வேறுபாடு உண்டு. மற்ற தொழிலாளர்கள் ஒரே தொழிலையே அதாவது ஒரே பொருளையே எண்ணிக்கையில் பலவாகச் செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்கள். நீங்களோ ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாகச் செய்யக்கூடிய கற்பனா சக்தி மிக்கவர்கள்.

இங்கே பதினாறு அம்சக் கோரிக்கை ஒன்றை வைத்திருக்கிறீர்கள். உங்கள் கோரிக்கைகளில் நியாயம் இருப்பதை நான் உணர்கிறேன். ஆகவே இவற்றை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இவைகள் நிறைவேற உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன்.

ஒன்பதாவது கோரிக்கையாக-அரசு எடுக்கிற விழாக்களில் எழுதுகின்ற ஓவியங்களோ, குடியரசு விழா போன்ற நேரத்தில் அமைகின்ற ஊர்வல வண்டிகளோ, பொருட்காட்சியில் அமைகின்ற அரசு அரங்குகளோ தனிப்பட்ட தொழில் தெரியாத வசதி படைத்த தரகர்களிடம் கொடுக்காமல், எமது பேரவையை அணுகி ஆலோசனை பெற்று, தொழில் மேம்பாட்டை வளர்த்து சிறந்த ஓவியர்களுக்கே வழங்கி அப்பணியை முடிக்க வேண்டுமெனத் தமிழக-இந்திய அரசைக் கேட்டுக் கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

ஓவியர்களாகிய நீங்கள் ஒற்றுமையாக இருந்து தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைப்பீர்களானால் தான் உங்கள் உழைப்பின் பயனை நீங்கள் அனுபவிக்க முடியும்-திறமையற்ற, வசதி படைத்த இடைத்தரகர்களுக்கு வேலை கிடைப்பதைத் தவிர்க்க முடியும். அரசும் உங்களுக்கு உதவ முடியும்.

படைப்பாளிகளாகிய உங்கள் படைப்புகளுக்கு உரிய பொருள் கிட்டவும், உங்களுக்கெல்லாம் பணிப்பாதுகாப்பு கிடைக்கச் செய்யவும் இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

மாநாட்டு முடிவில் ஓவியர் இ.சேது நன்றி கூறினார்.





# செல்வச் செழிப்புக்கு கால்நடை வளர்ப்பு!

பசு, எருது, காளை, எருமை, வெள்ளாடு, செம்மறியாடு பன்றி, கோழி அனைத்தும் கால்நடைச் செல்வங்கள். பண்ணையில் விவசாயியுடன் இணைந்து கால்நடைகள் விவசாயத்திற்கும், விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக உதவுகின்றன.

இந்தியாவிலுள்ள ஆறு இலட்சம் கிராமங்களில் வசிக்கும் 500 மில்லியன் மக்கள் நீர்ப்பாசன வசதியுடைய இடங்களில் நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். மக்களுக்கு அடுத்தபடி இடத்திற்குப் போட்டியாக வருவது கால்நடைகளே. கிராமங்களில் சாதாரண சிறு விவசாயி தன் வசதிக்கேற்ப ஒரு இணை எருவுடன், ஒன்று அல்லது இரண்டுகறவை மாடுகள் வைத்திருப்பதைக் காணமுடியும். குறைந்தது ஒரு பசு அல்லது எருமையைக் கிராமங்களிலுள்ள சிறு விவசாயிகளின் வீட்டில் காணமுடியும். முக்கியமாக நிலத்தை உழுவதற்காக எருதுகளை உற்பத்திச் செய்வதுதான் சிறு விவசாயி பசு மாட்டை வளர்த்து வருவதன் உள்நோக்கம்.

பசுவின் மூலம் பாலைப்பெறுவது, சாதாரண பசுவைப் பராமரிக்கும் சுழற்சியில் கிடைக்கும் பொருளாகத்தான் கருதப்பட்டு வருகிறது. பெரும்பாலான மாடுகள் சத்தற்ற வைக்கோல் தட்டு பருவமழைக்குப் பிறகு துளிர்விடும் பசுந்தீவனங்களை மேய்ந்து உயிர் வாழ வேண்டிய கட்டத்திலிருக்கின்றன. நம்நாட்டு மாடுகள், எருமைகள் கிடைக்கும் தீவனத்திற்கேற்ப உடலைச் சிறிய அளவில் மாற்றிக்கொண்டு, இயற்கையாக வெப்பம் மிகுந்தும் ஆரோக்கியமற்ற சூழ்நிலையிலும் வாழ்ந்து காட்டக்கூடிய பிராணிகளாக நடமாடிக்கொண்டிருக்கின்றன.

எந்தச் சூழ்நிலை மனிதனுக்கு ஏற்றதாயிருக்கின்றதோ அந்த இடங்களில் மனிதனுடன் மாடுகளும் போட்டி போட்டு மனிதன் நிலப்பரப்பு விகிதம் குறைந்து, மாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஏக்கர் நிலத்திற்கு அதிகமாகவே இருந்து வருகின்றன. நன்கு செயல்படும் கலப்புப் பண்ணைகளினால் பால் உற்பத்தி அளவு ஒவ்வொரு மாடுகளின் மூலம் அதிகம் கிடைப்பதுடன், தனி நபர் உட்கொள்ளும் அளவும் அதிகரிக்கிறது. குறிப்பாக பால் உற்பத்தி சிறந்த முறையில் செயல்படுமிடங்களில் கலப்புப் பண்ணை சீரிய வழியில் செயல்படுகிறதென்று தெள்ளத்தெளிய தெரியவரும்.

பால் உற்பத்தியில் எதிர் நோக்கி உருவாகி வரும் சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்தால் இலட்சக் கணக்கான பேர் பால் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பது தெரியவரும். பால் உற்பத்தி செய்வோர் ஒரு எக்டர் நிலத்திற்குக் குறைவாக நிலத்தைப் பெற்றிருப்பது மேய்ச்சல் வசதியின்றியும் இருக்கும் சிறிய நிலப்பரப்பில் பசுந்தீவன உற்பத்திக்கு ஒதுக்கமுடியாத நிலையும், மழையையே நம்பி நிலச்சாகுபடி செய்வது, மழை பெய்யத் தவறிய காலங்களில் தீவன வசதி குறைந்து மாடும், மனிதனும் உணவு பற்றாக்குறையில் தவிப்பது, பண்ணையில் கிடைக்கும் சத்தற்ற வைக்கோலையும், அறுவடைக் காலங்களிலும், மேய்ச்சல் இடங்களில் கிடைக்கும் சொற்பத் தீவனத்தை உட்கொண்டு அதற்கு ஏற்றவாறு மாடுகள் பாலை அளித்து, உழுவதற்கு வேண்டிய காளைக் கன்றுகளைப் பெற்றுக் கொடுப்பது ஆகியவை நன்கு தெரியவரும்.


**டாக்டர்**
**சி. ஏ. கோபாலகிருஷ்ணன்,**

**டாக்டர்**
**எம். ஆர் விசுவநாதன்,**
**கால்நடை பராமரிப்புத் துறை.**
**மதுரை விவசாயக் கல்லூரி.**


நம் நாட்டில் கால்நடைச் செல்வமும், விவசாயமும் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் நன்கு இணைந்து கலப்புப் பண்ணையும் செய்தால் ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதுடன் வருவாயைப் பெருக்கவும் வழி உண்டாகிறது.

பால் உற்பத்தித் துறையில் முதன்மையான இடத்தைப் பெறுவது கறவைப் பசு அல்லது எருமை. கறவைப் பசுக்கள், எருமைகளின் உணர்ச்சிகளுக்கேற்ப நாம் அன்றாடம் அவ்வப்போது உடனடியாகக் கவனித்து நன்கு பராமரித்தால்தான் பசுக்களிடமிருந்து முழுமையான பலனைப் பெறமுடியும். நாட்டுப்பசு ஒரு லிட்டர் பாலை அளிப்பது அதன் கன்றைப் பராமரிக்கப் போதுமானதாகும். ஆனால் மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 10 லிட்டரிலிருந்து 40 லிட்டர் வரையில் பால் அளிக்கும் பசுக்களை நல்லமுறையில் இனவிருத்தி செய்தும், நன்கு பராமரித்தும் உலகத்தில் பல பாகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் மிகுந்த பாலைப் பொழியும் கறவைப் பசுகள் பால் உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகவே மாறிவிடுகின்றன.

நல்ல கறவைப் பசு என்றால் நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 லிட்டர் பால் கொடுக்கவல்லதாக இருக்க வேண்டும். 300 நாட்கள் கொண்ட ஒருஈற்றில் 2220 முதல் 2400 லிட்டர் வரையில் பாலைப் பொழியும் பசுக்களே பண்ணை இலாபத்தை அளிக்க கூடியவையாகும்.

கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு ஒரு ஈற்றில் 1500 லிட்டர் வரையில் அளிக்கும் எருமை, பால் உற்பத்தியை இலாபகரமாக நடத்தவும், பால் உற்பத்திச் செலவினங்களைக் குறைக்கவும் உதவுகிறது. பால் பண்ணையை இலாபகரமாக நடத்த அதிக அளவில் பால் அளிக்கும் கலப்பின பசுக்களையே வளர்க்க வேண்டும் கலப்பினப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனால் ஏற்படும் பொருளாதார இலாபத்தைக் கணக்கிட்டால் அயல்நாட்டுக் கலப்பினப் பசுக்களை ஜெர்சி, ஹோல்ஸ்டிங் பிரிஷியன் கலப்பின பசுக்கள், நாட்டு பசுக்களைக் காட்டிலும் எட்டு முதல் பத்து மடங்கு அதிகமாகும்.



இந்திய உயர் இன பசுக்களான சிந்தி, ஹரியானா பசுக்களைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமாகவும் இலாபம் தருகின்றன. அதிக அளவில் அயல்நாட்டுக் கலப்பினப் பசுக்களை உற்பத்தி செய்து மொத்தப் பசுக்களின் எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பாகத்திற்கு கலப்பின பசுக்களாக மாற்றினால் பயனற்ற பசுக்களின் எண்ணிக்கை பத்தாண்டுகளில் 50 விழுக்காடு குறைவதுடன் பால் உற்பத்தியும் இருமடங்காகப் பெருகும்.

எருமைகள் சேற்றுழவில் மாடுகளைவிட மேன்மையாக உழுது ஆசியா கண்டத்தில் விவசாயத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. எருமைகளை ''ஆசியாவின் டிராக்டர்'' ( Asian Mini Tractor), ''நடமாடும் உரச்சாலை'' (MobileFertiliser Factory) என்று செல்லமாகக் கூறப்பட்டாலும் உழவுத்தொழிலுக்ு மட்டுமின்றி பால் உற்பத்தியிலும் பெரும்பங்கு பெறுகின்றன. குறிப்பாக இந்தியாவில் எருமைகள் மொத்த பால் உற்பத்தியில் 55 விழுக்காட்டிற்கு மேல் பாலை அளிக்கின்றன. மனிதனால் புறக்கணிக்கப்பட்ட நார்சத்து மிகுந்த சத்தற்ற தீவன வகைகளை உட்கொண்டு நம் நாட்டின் மாறுபட்ட தட்ப வெப்பத்திற்கு ஈடு கொடுப்பதுடன் கடின உழைப்பையும், பாலையும், இறைச்சியையும் அளிக்கின்றன. சிறுநில உழவர்களுக்குப் பால் பொருள் முதலான உற்பத்தியைப் பெருக்க அடிப்படை இடுமுதல்களான (Basic Inputs) கலப்பினப் பசுக்களும் உழுவதற்கு வேண்டிய பவர் டில்லர்களும், டிராக்டர்களும் கிடைக்க முடியாத நிலையில் பால் உற்பத்திக்கும், உழவுத் தொழிலுக்கும் எருமைகள் ஊன்றுகோல்போல் நின்று வளர்க்கும் விவசாயிகளின் பொருளாதாரத்தை உயரும் வகையில் உதவும் என்பதில் ஐயமில்லை.



நம் நாட்டில் மாடு, எருமை மற்றும் ஆடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. செம்மறியாடுகளின் மூலம் இறைச்சி, தோல, கம்பளமும், வெள்ளாடுகள் வழியாக இறைச்சி, பால் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில் 15-20 ஆடுகள் கொண்ட சிறிய மந்தையிலிருந்து 100க்கு மேற்பட்ட ஆடுகள் பெரிய மந்தை வரை, உழவர்களின் நிதி வசதி, மற்றும் நிலத்திற்குத் தேவையான உரம் ஆகியவற்றைப் பொறுத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இடுமுதல்களின்றி மேய்ச்சல் மூலமாக பண்டைக்காலந்தொட்டு ஆடுகள் வளர்க்கப்பட்டு வருவதால் ஆடு வளர்த்தல் ஒரு இலாபகரமான



துணைத்தொழிலாக இருந்து வருகிறது. குறிப்பாக மழை தவறிய காலங்களில் விவசாயத்தை நம்பி வாழும் பெரும்பாலான உழவர்கள், பயிர் விளைச்சலில் பாதிக்கப்பட்டு, பொருளாதாரம் குறைந்து, கஷ்டமான காலங்களில் விவசாயிகள் வளர்க்கும் ஆடுகளை விற்று நிதி பற்றாக் குறையைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். இதனால் ஆடுகளை பெரும்பாலும் அடமானம் மீட்கும் அமைப்புகள் (Mortgage Lifters) என்று கூறுவது வழக்கம்.

நம் நாட்டில் பெரும்பாலும் ஆடுகள் இறைச்சி, கம்பளம் ஆகியவற்றைவிட உரத்திற்கு என்றே வளர்க்கப்பட்டு வருகின்றன. வெள்ளாடுகள் நம நாட்டின் மாறுபட்ட சீதோஷ்ணத்திற்கும், ஏற்ற தாழ்வுகள் நிறைந்த பொருளாதார சூழ்நிலைகளின் ஒருங்கே இணைந்தும் கிடைக்கும் சத்தற்ற தீவனங்களையும், மேய்ச்சல் வசதி குறைந்த இடங்களிலும் கிடைக்கும் தீவனங்களை உட்கொண்டு இறைச்சி, பாலைக் கொடுத்து உதவுகின்றன. ஆடுகள் வளர்ப்பது குறிப்பாக சிறுநில, நிலமற்ற வ்விவசாயிகளுக்கு உபதொழிலாகவும், விவசாய வேலைகட்குப் பயன்படாத பையன்கள், உடல் ஊனமுற்றோர் வயதானவர்களுக்கு ஒரு முழுமையான தொழிலாக இருந்து வருகிறது. வெள்ளாடுகள் 15 மாத வயதிற்குள் குட்டிகளை பெறுவதுடன் ஈனும்பொழுது ஒரு குட்டிக்குமேல் இரண்டு, மூன்றுகளை பெறுவதால் மாடு, எருமைகள் ஆயுட்காலத்தில் ஈனும் கன்றுகளைக் காட்டிலும் அதிகமாக அளித்து, பால் இறைச்சியைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய வழி வகுக்கின்றன. இதனால் வெள்ளாடுகள் ஏழையின் பசுவென்றும், (Poor Man's Cow)

கிராமப்புற மக்களின் புரதப் பற்றாக் குறையை ஒரு அளவு பால், இறைச்சி வாயிலாக தவிர்த்து மக்களின் பொருளாதாரமும், ஆரோக்கியமும் மேம்பட உதவுகின்றன.

நாட்டுப் பன்றிகள் தாழ்த்தப்பட்ட மக்களால் உணவு, இட வசதியாகிய அடிப்படை இடு முதல்களின்றி விணடிக்கப்பட்ட தீவனங்கள் கழிவுப்பொருட்களை உட்கொண்டு 25 முதல் 30கிலோ எடையை ஓராண்டுக்குள் அடைந்து வளர்ப்பவர்களுக்கு ஆதாயத்தை அளித்து வருகின்றன.

ஆட்டின் இறைச்சி கிலோ 18 முதல் 20 ரூபாய் வரையில் விற்கும் காலத்தில் பன்றி இறைச்சி உற்பத்தி இலாபகரமானதாகும். ஒரு கிலோ பன்றி இறைச்சிக்கு 14 ரூபாய்க்கு மேல் கிடைத்தால் தான் இலாபம் கிடைக்கும். பன்றி இறைச்சி, மாமிசப் புரத உணவாக ஏற்றுக்கொள்ளும் இடங்களிலும் இறைச்சி விற்பனை அதிகமாக ஏற்படும் இடங்களை ஆராய்ந்தும் பன்றி வளர்ப்பை மேற்கொண்டால் இலாபகர முயற்சியாகும்.

சிறிதளவே நிலமுள்ள விவசாயி பயிர் தொழிலையே நம்பி வாழமுடியாமல் கலப்புப் பண்ணை மூலமாக வருவாயை பெருக்கும் முயற்சியில் பன்றி வளர்ப்பதும், கோழிப்பண்ணை நடத்துவதும் சாத்தியமென்று கருதினாலும் பன்றி இறைச்சிக்கு இன்னும் சமூகத்தில் சரியான வரவேற்பு இல்லை. இதனால் கோழி வளர்ப்பே உபதொழிலாகவும் முழு தொழிலாகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கலப்புப் பண்ணைத்தொழிலில் கோழி வளர்ப்பு இலாபகரமான தொழிலாக அமையும். கோழி வளர்ப்பில் ஒரு புத்துணர்ச்சியும், திருப்பமும் ஏற்பட்டுள்ளது. கோழிப் பண்ணைகளில் 100 முதல் பல ஆயிரம் கோழிகள் வளர்க்கப்பட்படுகின்றன.

சமீபகாலமாக கோழி பராமரிப்பில் நவீன முறைகளை பின்பற்றுவதுடன் அறிவியல் நோக்கோடு உணவு அளித்து நோய்களைத்தடுக்கும் முறைகளையும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டங்களில் (Integrated Rural Development) கோழி வளர்ப்பு நன்கு இணைவதுடன், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிப்பதுடன், முட்டை, இறைச்சி, உணவுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்வது மட்டுமின்றி மக்களின் ஆரோக்கியத்தினையும் பொருளாதாரத்தையும் உயர்வடைய சுடர்விளக்கினைத் தூண்டும் கோல் போன்று உதவுகிறது.





# உணவுத் தேர்வு

டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை

நோய் வந்து அதை நலப்படுத்த முனைவதைக் காட்டிலும் நோய் வராமல் உடம்பைக் காத்தலே உத்தமம். இதைத்தான் நம் முன்னோர்கள் இரத்தினச் சுருக்கமாக ''நோய்க்கு இடம் கொடேல்'' என்றனர். இன்னும் ஆசையும் உதாசீனமுமே மனித நோய்க்கு காரணங்களாகும். விரிவாகக்கூறுவதானால் நோய்க்குக் காரணங்கள்: பெற்றோர்களும், கருமங்களும், சீதோஷ்ண நிலைகளும், உணவு வகைகளும் ஆகும். மனித உடல் நலனுக்கு உண்ணும் உணவு அதிகப்பங்கு வகிக்கின்றது. உண்ணும் உணவு உருசியுடன் இருக்க நம்மில் பெரும்பாலோர் விரும்புகின்றனர். ''சாப்பாடு எப்படி?'' என்றால் ''பிரமாதம் பிரமாதம்'' என்பர். ஆனால் அந்த உணவு 'பிரமாதம்' என்று கூறியவரின் உடலுக்குப் பொருந்தியதா? என்பதைச் சிந்திக்கத் தவறுகின்றனர். நாக்குக்கு உருசி, உடலுக்குக் கேடு— என்கின்ற கருத்தை அறிந்திலர். அதன் விளைவாக உண்ட உணவு உடலில் நஞ்சாக மாற்றமடைந்து பல இன்னல்களைப் பின்னால் விளைவிக்கிறது. சில வேளை, உயிருக்கும் கேடாக முடிவதுண்டு. இந்தக் கருத்தை வள்ளுவப் பெருமானும்,

**''மருந்தென வேண்டாவாம்**
**யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்''.**

என்று கூறுகிறார்.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு சிறப்பானது. உடலுக்குப் பொருந்திய உணவை உட்கொள்ள, நோயின்றி வாழ முடிவதோடு, நம்முயிரும் உய்வடைய வழியுண்டாகும். இந்த நல்ல கருத்தைத் திருமூலரும்,

''உடல் வளர்த்தேனே, உயிர் வளர்த்தேனே'' என்று கருக்கிடையாக இயம்புகிறார்.

இந்நாகரிக உலகில் பொருளின்பம் நுகர 99.9 சதவிகித மக்கள் விழைகின்றனர். இதனால் பல தொல்லைகளும், பிரச்சனைகளும்கிளம்புகின்றன. நினைத்தது கிட்டாவிட்டால் கவலையிலும், வேதனையிலும் உழலுகின்றனர். மனக்கவலையில் ஆரம்பித்து இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், மனோநோய் முதலிய கொடிய நோய்களுக்கு ஆளாகின்றனர். நாகரிகம் பெருகப் பெருக, தேவைக்கும்வருவாய்க்கும் உள்ள தூரம் வளர்ந்து கொண்டே போகிறது. பலவித உடல்நோய்களும் உளநோய்களும் கிளர்ந்தெழுகின்றன.

நோயின் அடிப்படைக் காரணத்தை தத்துவார்த்தவகையில் விளக்கம், ''அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் ''என்று கூறியதிலிருந்து, மனித உடல் பஞ்சபூதத்தின் கலவையாகும் என்பது தெரிகிறது. ஒருவன் நோய்வாய்ப்படுகிறான் என்றால், பஞ்சபூதக் கலவையினாலான உடலில் வாத பித்த சிலேற்பனமாகிய திரிதோசம் மிகுந்தோ குறைந்தோ போதலாகும். இன்னும் ஒருவருக்கு வரும் ஒருநோய், வேறொருவருக்கு வேறுவிதமாய் அமைந்து நோயின் குணங்களைக் காட்டும். எனவே சித்தமருத்துவத்தில் ஒரு நோயாளிக்குத் தரும் மருந்து அதே நோயுள்ள இன்னொரு நோயாளிக்குப் பயனளிக்காது இருப்பதைப் பார்க்கிறோம். நோயாளியின் உடல் நிலையைச் சீர்தூக்கி சித்தமருத்துவத்தில் மருந்துகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, சித்த மருத்துவத்தில் மருந்துகளின் எண்ணிக்கையும் கணக்கிலடங்காதிருக்கிறதைக் காண்கிறோம்.

இன்னும், ஒருவன் நோயுறுகிறான் என்றால், அதிகமாகவும் நீண்ட காலமாகப் பல காரணங்களின் மூலமாக அவன்உடல் பாதிக்கப்பட்டு இறுதியாக இயலாத நிலைக்குக் கொண்டு வந்துவிடும் நிலைதான் ''நோய்''. இந்நிலையைத் தவிர்த்தல் புத்திசாலித்தனமன்றோ!

தற்போது பல இடங்களில் வசதியற்றோருக்கும், உடல் மெலிந்தோருக்கும் உடல் செம்மையுறச் சத்துணவு கொடுக்கப்படுகிறது. இதன் பலன் ஒருதரப்பட்டது. இச்சத்துணவு ஒருபோது கேடாகவும் விளையக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, குறிப்பிட்ட மனிதனுக்குச் சத்துணவு தர வருவதற்கு முன், அவரின் உடல் நிலையைச் சோதித்து உடலில் உள்ள கேட்டை நிர்ணயித்தல் அறிவுடைமை. அதன் பின்னரே, உடல் கேட்டை நிவர்த்திக்க என்ன உணவு வகை, எப்படித் தரலாம் என்பதை உறுதிப்படுத்தவும் இம்முறையைச் செய்யத் தவறினால் சத்துணவுத் திட்டம் ஒரு தரப்பட்டதாய் இருந்து வரும்.

''உணவே மருந்து, மருந்தே உணவு ''என்ற தாரக மந்திர ஒலியின் ரீங்காரம், அன்றைய நாட்களில் தமிழர் இல்லங்களில் கேட்ட வண்ணமாய் இருந்தது. இதுவே, பிந்திய நாட்களில் 'பாட்டி வைத்தியம்', 'பாட்டன் வைத்தியம்' என்ற புனை பெயரில் நடைமுறையில் இருந்து வருவதைக் காண்கிறோம். தமிழ்ப் பெண்கள் உணவுப் பொருள் தேர்விலும், செய்பாகம்-கைபாகத்திலும் வல்லுநராக விளங்கினர். தம் வீட்டிலுள்ள ஒவ்வொரு நபரின் உடல்நிலை, அவரின் விருப்பு, வெறுப்பு போன்றவைகளையும் நுட்பமாக அறிந்திருந்தனர். எனவே தமிழக சமையல் கலை சிறப்புள்ள தாகக் கருதப்பட்டு வருகிறது. அவியல், பொரியல், வறுவல், கிச்சடி, பச்சடி, சாம்பார், ரசம், பருப்பு, குழம்பு, ஊறுகாய் வகைகள், வற்றல் வகைகள், சாத வகைகள் சட்டிவகைகள், பற்பல சிற்றுண்டிகள் முதலியன தமிழரின் தனிப்பட்ட பதார்த்த வகைகளாகும். இன்னும் ,தேர்ந்தெடுக்கும் உணவுச் சிறப்பால், நோய்களை உடலில் அணுகாது செய்வதோடு, வந்த நோயும் உணவு மூலம் குணப்படுத்தப்பட்டு வாழ்வை நீட்டிக்கவும் இயலும்.

தற்காலத்தில், வந்த நோயை உடனே நிவாரணம் செய்ய வன்மையான மருந்துகளைத் தேர்ந்தெடுத்து உட்கொள்ளுகின்றனர். இதனால் நோயாளி தோற்றத்தில் குணமடைந்தார் எனலாம். இந்த மருந்தோ பஞ்ச பூதக்கலவையாலான உடலிலுள்ள உயிரணுக்களை பூகம்பமென அதிரச் செய்து, சிதறடித்து, செயலிழக்கச் செய்கிறது. அதன் விளைவாக மருந்தின் வேகம் பலவித நோய்களைக் கிளப்புகிறது. இவ்வாறு பல தடவை உட்கொள்ளும் வன்மையான மருந்தின் வேகத்தால் நச்சுப் பொருட்கள் உடலில் உருவாகி பிந்திய காலத்தில் பேதமறியா நோய்களாக மாறித் தோற்றமளிக்கும். இதனால் வாழும்,

நாட்கள் குறைவதோடு, வாழும் நாட்களில் தாங்கவொண்ணா துயரும் தொடருகிறது.

ஆகவே, நோயுற்ற போதும் சரி, மற்றைய போதும் சரி, உண்ணும் பதார்த்தங்களை நுட்பமறிந்து, தேர்ந்து செய்பாகம் கைபாகம் போன்ற விதிமுறைப்படி செய்து உணவாக்கி உட்கொள்ளுங்கால் உடலிலுள்ள உயிரணுக்கள் உரம் பெற்று உடல் நோய் அகல வாய்ப்பளிப்பதோடு **வாழ்வும் நீண்டு வளர ஏதுவாகிறது.**



எந்த நாட்டினரும் இது வரைக்கும் அறிந்திராத மருத்துவ இரகசியங்கள் தமிழக இல்லங்களில் தயார் செய்யும் உணவு பதார்த்தங்களில் அடங்கியுள்ளன.

தமிழ் நாட்டில் மேலை நாட்டு மருத்துவத்தைப் பூரணமாய் செய்துவரும் மருத்துவர் பலர், தம் வீட்டில் பாட்டி, பாட்டன் வழிவந்த பதார்த்த வகையில் தங்கள் தாய் மனைவி மூலம் செய்து தரச்சொல்லி சாப்பிடுகின்றனர். இதில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதை இவர்கள் அறிய முற்படுவதில்லை. எந்தஎந்தப் பதார்த்தம் தங்கள் உடலுக்கு நல்லது அல்லது கெட்டது என்பதையும் அறிவதில்லை.

அன்று தமிழர் கடைப்பிடித்த ஒவ்வொரு உணவுப் பதார்த்தமும் தனிப்பண்புள்ளது. இவர்கள் நாக்குக்கு ஒவ்வாத பதார்த்தமாய் இருப்பினும் அப்பதார்த்தம் உடலுக்கு நலமெனக் கருதினால் அதை நாக்குக்கு உருசிப்பட உருவாக்கும் பக்குவத்தை அறிந்திருந்தனர்.

இன்னும் ஒருவருக்குச் சிபாரிசு செய்யும் உணவு அவரின் உடல் நிலை, வசிக்கும் இடம், காலம், செய்யும் தொழில், விருப்பு வெறுப்பு முதலியவைகளை வரம் பாக்கிக் கொண்டு நிர்ணயிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

பத்திய பாகங்கள், இயற்கை உணவு போன்றவைகள் உணவுத் தேர்வின் சிறப்பம்சங்களாகும்.

விஞ்ஞானப் பாங்குடைய ''உணவுத் தேர்வை விரிவாகத் தெரிய முற்படுவது அறிவுடைமையாகும்.

நாம் படும் பாடெல்லாம் எண்சாண் உடம்புக்காகும். நல்லுணவைத் தேர்ந்தெடுத்து சாப்பிட, நோயற்ற வாழ்வு வாழலாமல்லவா?

உணவுத் தேர்வு என்கிற பயிற்சியைப்பொது மக்களுக்கு வழங்க அரசு முன்வரலாம். இதனால் இல்லறப் பெண்கள் உடலுக்கு ஏற்ற உணவைச் செய்து பரிமாற ஏதுவாகி, இல்லமெல்லாம் நோயற்ற வாழ்வு பெருகும்.

இன்னும் மருத்துவப்பட்டம் சான்றிதழ் பெற்றவர், 'உணவுத் தேர்வு' படிப்பைச் சிறப்புப்படிப்பாகக் கற்க, கீழ்க்கண்ட நலனையும் மக்கள் பெறலாம்.

1. மருத்துவ மனைகளில் நோயாளியின் உடல் தன்மையை அறிந்து, உடலுக்குப் பொருத்தமான உணவு சிபாரிசைச் செய்ய நோய் குணப் படுவதோடு, பின் விளைவு இல்லாது நோயாளியைக் காப்பாற்றலாம்.
2. நோய் வந்து நலன் காண்பதைப் பார்க்கினும் நோய் வராமல் பொதுமக்கள் உடலைப் பேண வேண்டுமாறு சித்த மருத்துவ வல்லுநர்கள் கொண்ட ஒரு தனிப்பிரிவினை (''நோய் தடுப்புத்துறை''யை) நிறுவி செயலாற்றச் செய்விக்கலாம்.

   வட்டாரத்துக்கு ஒரு வல்லுனர் வீதம் நியமனம் செய்து, தமிழகமெங்கும் உணவுத் தேர்வின் பண்பையும், பயனையும் எடுத்துக்கூறலாம்.

இவைகளை முறைப்படி செயல்படுத்த முயலுமிடத்து, இன்று நிறுவியுள்ள மருத்துவ மனைகளில் நிறைந்து வழியும் நோயாளிகளின் நெரிசலைக் குறைக்க வழி ஏற்படும்.

## தமிழகத்தில் ஆந்திர மாநில ஆட்சி மொழிக் குழுத் தலைவர்

ஆந்திர மாநில ஆட்சிமொழிக் குழுவின் தலைவர் டாக்டர் சி. நாராயணரெட்டி அவர்கள் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் அனைத்து மட்டங்களிலும் தமிழ் ஆட்சிமொழியாக எவ்விதம் இயங்கி வருகிறது என்பதைக் கண்டறிய தமது குழுவின் செயலாளர் திரு ஜி. இராமகிருஷ்ணராவ் அவர்களுடன் தமிழ்நாட்டில் இம்மாதம் 11-ம் நாள் முதல் 13-ஆம் நாள் வரை சுற்றுப்பயணம் செய்தார்கள்.

அந்நாட்களில், ஆட்சிமொழிக் குழுத் தலைவர் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களையும், மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர் அவர்களையும், தமிழ் ஆட்சிமொழிக் குழுவின் செயலாளரையும் மற்றும் பல்வேறு மாவட்ட அரசு அலுவலர்களையும் சந்தித்து விரிவான முறையில் கலந்துரையாடினர். வேலூரிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும், மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கும், காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் சென்று பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும் மற்றும் ஏனைய அமைச்சர்களும் எல்லா விதமானக் குறிப்புகளையும் தமிழில் எழுதுவது என்பதை ஒரு கொள்கையாகக் கொண்டிருப்பதையும் மற்றவர்களும் அதே போல் செய்ய தூண்டுகோலாய் இருப்பதையும் அறிந்து குழுத் தலைவர் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார். தமிழை ஆட்சிமொழியாக நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த முயற்சி எடுத்துள்ளதையும், இக்கொள்கையை 17 துறைத் தலைமை அலுவலகங்களில் தீவிரமாய் செயல்படுத்துவதையும் அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மூன்றாண்டுகளில் தமிழையே முழுமையாக அரசு நடவடிக்கைகளும் கையாளுவதற்கான ஒரு ஏற்பாட்டை அரசு செய்து வருவதறிந்து குழுத் தலைவர் பெருமிதம் கொண்டார். ஆந்திர மாநிலத்தில் அரசு துறையில் உள்ள தொடர்புடைய அனைவருக்கும் தூண்டுகோலாக தமிழ்நாடு அரசின் முயற்சி இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.





# புதுக்கோட்டையில் பனைப் பண்ணை

**எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**புதுக்கோட்டை.**

பனை மரம்-நமது ''மாநில மரம்'' என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதைப் பலரும் அறிவார்கள். மயில் எப்படி நமது தேசியப் பறவையாக விளங்குகிறதோ அதுபோல் பனை மாநிலமரமாகும். பனை மரம் மற்றும் பனைப்பொருள்கள் பல்வேறு வகைகளில் எவ்வாறு பயன்பட்டு ''கற்பகத்தரு''வாகத் திகழ்கின்றன என்பதை அறிந்தால் பனை மரம் மாநில மரமாக விளங்குவதன் சிறப்பினை உணர முடியும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை, எளிய கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி பொருளாதார ரீதியில் முன்னேற்றங்காண பனைத் தொழில் வழி வகுக்க உதவுகிறது. அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நவீன ரகப் பனை ஓலைப் பொருள்கள் செய்யப் பயன்படும் குருத்தோலை, கட்டில் மற்றும் இருக்கைகள் செய்ய நார் தூரிகைகள் செய்ய, தும்பு தரும் பத்தல்கள், துடப்பம் செய்ய ஈக்கு போன்ற பல்வேறு மூலப் பொருள்களைத் தருவதோடு, பதநீர், நுங்கு, பனங்கிழங்கு-கிழங்குமாவினால் செய்யப்படும் பணியாரம், ரொட்டி போன்ற பலகார வகைகள் ''பாம்டா'' ''பாம்கோவா'' போன்ற குளிர்பானங்கள் பனஞ்சீனி, பனங்கற்கண்டு உணவுப் பொருள்களையும் தரும் ''கற்பக தரு''வாகப் பனை மரம் விளங்குவதால் கிராமப்புற மக்கள் வாழ்வில் வளம்பெற தன்னிகரில்லாத தன்னிறைவுத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தும் அரசின் மாநில மரமாக பனைமரம் திகழ்வது ஏற்றமுடையதாகும்.

புதுக்கோட்டை நகருக்கு அருகில் அமைந்துள்ள திருக்கோகர்ணம் கோவில்பட்டியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 72.26 இலட்சம் மதிப்பீட்டில் பனைப் பொருள் பெருவளத்திட்டம் செயலாக்கம் பெறும் பனைப் பண்ணையினை மாநில பனைப் பொருள் இணையம் நிறுவியுள்ளது. இத்திட்டத்தினால் 8,450 பேர்கள் சுயவேலை வாய்ப்பு பெறுகின்றனர்.

புதுக்கோட்டை இம்மாவட்டத்தில் சுமார் 5 இலட்சம் பனை மரங்கள் உள்ளன. மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே பனை மரங்களை இட்டமிட்டு வளர்க்கப் பட்டதன் விளைவாய் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பனை மரங்கள் பரவலாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளன. கோவில்பட்டி பனைப் பண்ணைக்குப் பயன்படும் வகையில் சுமார் 52 ஆயிரம் பனை மரங்கள் தஞ்சை சத்திர நிர்வாகம், ஆவுடையார் கோவில் தேவஸ்தானம் மற்றும் நகராட்சியினரிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டுள்ளன. மேலும், கோரையாற்றுக்கரைகளிலுள்ள பனை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமையினை, கோவில்பட்டி பனை வகைகளை மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

### புகழ் பெற்ற புதுக்கோட்டை பனைத்தும்பு

புதுக்கோட்டையில் தயாராகும் பனைத்தும்பு தனித்தரமுடையதாகும்; பனைப் பண்ணை வளர்ச்சியடைவதற்கான அனைத்து அடிப்படைவசதிகளும் உள்ளன. பனை மரங்கள் சத்துள்ள பதநீரைத் தரக்கூடிய நல்ல தரமானவையாகும். மரங்கள் அதிக உயரமில்லாமல் சாதாரண உயரத்துடன் உள்ளன.

ரூ. 38 ஆயிரம் செலவில் பனைத்தும்புத் தூரிகை கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் தயாரிக்கப்படும் பனந்தும்பு சேகரிக்கப்பட்டு இங்கு சுத்தம் செய்யப்படுகிறது. தும்பைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு இம்மாவட்டத்தில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு ஒரு பேலிங் யூனிட்டும் நிறுவப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 95,000 மதிப்பீட்டில் ஒரு பணிக்கூடமும் கட்டப்பட்டுள்ளது. இங்கு அயல் நாடுகளுக்குத் தேவையான தும்பு இறுதி சுத்திகரிப்பு செய்யப்பட்டு நேரடியாக ஏற்றுமதி செய்யப்படும்.



முதன் முதலாக தும்பு இறுதி சுத்திகரிப்பில் பெண்களுக்குப் பயிற்சி அளித்து இயங்குவது புதுக்கோட்டை கோவில்பட்டியில்தான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கோவில்பட்டி பனைப்பண்ணையில் பனைத்தும்பு தயாரிப்பதில் 30 நபர்களும், நவீன முறையில் பனை ஏறுவதில் 27 நபர்களும், பனைவெல்லம் தயாரிப்பதில் 9 நபர்களும், பனை ஒலை பொருட்களை உற்பத்தி செய்வதில் 20 நபர்களுமாக தற்பொழுது பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் அதிக நபர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றது.

பனைத் தொழிலில் ஆர்வமுள்ள கிராம மக்கள் பயன் பெறும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பனைத் தொழில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே ஏழை எளியவர்களுக்கு மரம் வழங்கும் திட்டம் முதன் முதலாக புதுக்கோட்டையில் செயல்படுத்துவது என்பதனைப் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை, எளிய குடும்பத்துக்கு 100 பனை மரங்கள் வீதம் முதல் கட்டமாக 35 குடும்பங்களுக்குப் பனை மரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத் திட்டம் பனைத் தொழில் செய்ய ஆர்வமிருந்தும் மரமில்லாமல் அவதிப்படும் ஏழைகளுக்கும், மரச் சொந்தக்காரர்கள் குத்தகையை உயர்த்திக்கொண்டே போவதால் அல்லல் படும் ஏழைகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் மட்டும் சுமார் 4 கோடி பனை மரங்கள் இருக்கின்றன.



பின் தங்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் மனித சக்தியை ஆக்கப் பணிகளில் பயன்படுத்தி தகுந்த வேலை வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுத்து அதன் மூலம் பொருளாதார முன்னேற்றம்காணும் வகையில், நத்தம் பண்ணையில் ''சிப்காட்'' தொழில் பேட்டை நிறுவுதல், அறந்தாங்கி அருகில் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் அமையும் கூட்டுறவு நூற்பாலை ரூ. 20 இலட்சம் செலவில் விதைத்தறி மையம், சிறிய சர்க்கரை ஆலை நிறுவுதல் போன்ற பணிகள் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இத் தருணத்தில் புதுக்கோட்டை கோவில்பட்டியில் புதியதாக நிறுவப்பட்டுள்ள ''பனைப் பண்ணை'' ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்து அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது.



# கோவை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள்

கே. மலைச்சாமி, ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
கோயம்புத்தூர்.

பைந்தமிழ் கொஞ்சும் தமிழகத்தில் கிராமப்புற மக்களின் நிலைமையை வாய்ப்பை, வளத்தை, உயர்த்துதல் பொருட்டு தமிழக அரசு ''தன்னிறைவுத்திட்டம்'' என்ற தன்னிகரில்லாத் திட்டத்தை, தரணியே போற்றும் வண்ணம் தந்ததோடு, மக்களின் மனநிறைவை உருவாக்கும் செயல் திட்டங்கள் நாள்தோறும் வளர்ந்து வருவதை அனைவரும் ஏற்கும் வண்ணம் பார்க்கின்றோம்.

எண்ணி, எண்ணிப் பார்த்துவிட்டு, இது இனி கிடைக்குமா என ஏங்கிய நெஞ்சங்கள், மகிழ்ச்சியில் நீந்தும் வண்ணம், திட்டங்கள் செயலாக்கம் புரிந்து காட்சியளிக்கின்றன. எழிலார்ந்த வாழ்விற்குச் சொந்தம் கொண்டாட, பந்த பாச உணர்வோடு, பாங்கான செயல் திட்டங்கள், நாள் தோறும் செயல் வளம் பெற்று மக்களின் மனநிறைவை ஊட்டுகின்ற, காட்சி உலகோர் போற்றும் வண்ணம் காணமுடிகிறது.

உடல் ஊனமுற்றோர்க்கு, விதவைகளுக்கு, கைம்பெண்களுக்கு, சிறு விவசாயிகளுக்கு, மிகச்சிறு விவசாயிகளுக்கு, வாழ்வில் நலிவுற்றோர்க்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறவர்களுக்கு, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தோர்க்கு, மலை வாழுநருக்கு, கிராமப்புற இளைஞர்களுக்கு, முதியோர்க்கு எத்தனையோ திட்டங்கள் அடுக்கடுக்காய் எடுக்கப்பட்டு தமிழகத்தில் எங்கெணும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறத்தில் வாழ்கின்றவர்களின் வசதியை, வாய்ப்பை பெருக்கிடவும், அவர்களின் முக்கியத் தேவைகளை நிறைவு செய்திடவும், சமுதாயச் சொத்தை வளர்த்திடவும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளும், தன்னிறைவுத் திட்டப் பணிகளும் வெகு வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கோவை மாவட்டத்தில் உள்ள 21 ஊராட்சி ஒன்றியங்களில் 80-81 வது ஆண்டில் முதல் கட்டமாக அன்னூர், அவிநாசி, பொள்ளாச்சி தெற்கு ஆகிய மூன்று ஊராட்சிஒன்றியங்களில் இணைப்புச் சாலைகள் ரூ 79,08,500 செலவிலும், இணைப்புக் கல் பாலங்கள் ரூ 11,31,500 செலவிலும், ஆதி திராவிடர் குடியிருப்பில் இருந்து புதை குழிக்குச் செல்லும் பாதை ரூ 1,83,200 செல



விலும், சிறிய நீர்பாசனத் திட்டங்கள் ரூ 13,000 செலவிலும், கிராமப்புற மருந்தகங்கள் ரூ 52,000 செலவிலும், தாய்-சேய் நல விடுதிக் கட்டடங்கள் ரூ. 4,22,000 செலவிலும், பள்ளிக்கட்டடங்கள் ரூ 22,71,000 செலவிலும், கால் நடை மருந்தகங்கள் ரூ 5,000 செலவிலும், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் ரூ 35,000 செலவிலும், பெண்களுக்கென பொதுக் கழிப்பிடங்கள் ரூ 42,700 செலவிலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1981-82-வது ஆண்டு நிதியாண்டில் தன்னிறைவுத் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுதல் பொருட்டு, காரமடை, தொண்டாமுத்தூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, மடத்துக்குளம், பொங்கலூர், பல்லடம், சூலூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்கள், மக்களின் தேவைக்கேற்ப, உணர்ந்து எடுக்கப்பட்டு, அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மக்களின் மன நிறைவைப் பெரும்ளவில் உருவாக்கி உள்ளது என்று பகர்ந்தால் அது மிகையாகாது.

காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 33,81,000 செலவிலும், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 35,97,000 செலவிலும், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 59,11,000 செலவிலும், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 51,65,000 செலவிலும், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 39,32,000 செலவிலும், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 34,51,000 செலவிலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.66,23,000 செலவிலும், சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 73,67,000 செலவிலும், காரமடை, சூலூர், கிணத்துக்கடவு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் ரூ 1,45,000 செலவிலும், அரசு குறிப்பிட்ட நிதியாண்டில் நிதிச் செலவினங்கள் செய்யப்பட்டு திட்டங்கள் மக்களின் பேராதரவோடு நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ் ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள பணிகளில், 220 கி.மீ. நீளம் உள்ள 715 சாலைகளும், சிறு ஓடைகளைக் கட்டுப்படுத்தி இணைக்கின்ற சிறு பாலங்கள் 684-ம், ஆதி திராவிடர் குடியிருப்பில் இருந்து புதைகுழிக்குச் செல்ல 67 கி.மீ. நீளமுள்ள 114 இணைப்புச் சாலைகளும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் 18-ம், கிராமிய மருந்தகங்கள் 9-ம், மகப்பேறு நிலையங்கள் 27-ம், பள்ளிக் கட்டடங்கள் 139-ம், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் 3-ம் ஆக மொத்தம் 1709 வேலைகள் ஆகும்.

முறைசெய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென வைக்கப்படும்.

—என்ற குறளுக்கேற்பவும், எதுவும் அற்றவர்களுக்கு, அரும் பயன் விளைவிக்க வேண்டும் என்ற மகத்தான இலட்சியத்தை தமிழக அரசு செயலில் நிறைவேற்றி, கிராம மக்களின் பெருவாழ்வில் வளம் சேர்த்து வருகின்றது. நாடு விடுதலை பெற்று 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தகு திட்டங்கள் கிராமப்புற மக்களுக்குக் கிடைத்துள்ளதே என அனைவரும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்த வண்ணம் உள்ளார்கள். தன்னிறைவுத்டம் நிறைவேற்றப்பட்டுள்ள, கோவை மாவட்டத்தில் உள்ள, 11 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 9 இலட்சம் மக்கள் இத்திட்டத்தின் பயனைப் பெரிதும்பெற்று இருக்கிறார்கள். கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீரை வழங்குவதற்காக ஏறத்தாழ ரூ. 300 இலட்சம் செலவில் குடி நீர் வழங்குகின்ற பணிகள் குடி நீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நல்ல வீட்டினை, மழையால் புயலால், தீயால் அழியாத அளவிற்குக் கிராமப்புற மக்களுக்குக் கடன் உதவியோடு கட்டித் தருகின்ற மகத்தான திட்டத்தின் அடிப்படையில் 11 ஊராட்சி ஒன்றியங்களில் 2,000. வீடுகள் ரூ. 60,00,000 செலவில் கட்டித் தரப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஏழை எளிய மக்கள் 2,000 வீடுகளைப் பெற்று மகிழ்கிறார்கள். சிறு குடிசையில், இருள் சூழும் நிலையில், வாழ்வதை மாற்றி ஒளி உமிழும் மின் விளக்குத் தருவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு 11 ஊராட்சி ஒன்றியங்களில் 5,000-க்கு மேற்பட்ட குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கப்பட்டு இருக்கிறது.





கிராமப்புற மக்களுக்கு நல்ல சாலை வசதி, குடி நீர் வசதி, மின் வசதி, குடியிருப்பு வசதி, மருத்துவ வசதி, பாசன வசதி என்கின்ற வகையில் கோவை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் பொது மக்களின் பேராதரவோடு ஊராட்சியாளர்கள், மாண்புமிகு வளர்ச்சி பிரிவு அலுவலர்கள் ஆகியோரின் அயராத உழைப்பால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் மகத்தான இந்தத் திட்டம் பாங்குடன் நிறைவேற்றித் தரப்பட்டு இருக்கிறது. காற்றாற்றை கடக்கவும், மழை வெள்ளத்தில் அடித்து வரும் நீரோடைகளைக் கடக்கவும் வகை அறியாது தவித்த மக்கள் எல்லாம் மகிழ்வு எய்துகிற வகையில், சிறு பாலங்களும், பள்ளிச் சிறார்களும் கல்விச் செல்வம் பெற பள்ளிக் கட்டடங்களும், முள் சூழும் பாதையிலே நடந்துசென்ற மக்களுக்கு, அருமையான சாலைகளும், தோண்டத் தோண்ட கிடைக்காத குடி நீர் வசதிகளை உருவாக்கித்தரும் குடி நீர்த் திட்டங்களும், குழந்தையைக் காக்க, தாய்மார்களைக் காக்க, அவர்களுக்கு ஏற்படும் நோய் நொடிகளைப் போக்க மருத்துவ வசதியோடு கூடிய மருத்துவ கட்டடங்களும், பல நூறு ஓராண்டில் கிராமப்புறங்களில் உருவாக்கப்பட்டு உள்ளன.

நடப்பாண்டில் கோவை மாவட்டத்தில் பல இலட்சம் ரூபாய் செலவில் பத்து ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் பாங்காக நடைபெற்று வருகின்றன.

# கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சிப் பணிகள்

மாவட்ட ஊரக வளர்ச்சிக் கழகம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சிறப்புத் திட்டத்தின் கீழும், பூதான இயக்கத்தின் கீழும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் வாழ்வில் நலிவுற்றோர்க்காக, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்காகக் கோவை மாவட்டத்தில் ஆற்றப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் 21 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 126 இலட்சம் மானியம் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுகாறும் ரூ. 168.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 30,256 பேர் பயன் அடைந்து இருக்கிறார்கள். வேளாண்மைக்காக ரூ. 29.81 இலட்சமும், சிறு பாசன வசதிக்காக ரூ. 72,000மும், கால்நடைப் பராமரிப்பிற்காக ரூ. 40.81 இலட்சமும், பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்புக்கு ரூ. 5.96 இலட்சமும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்திற்காக ரூ. 79.72 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு ரூ. 21 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 4,474 பேர் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குச் சிறப்புத்திட்டத்தின் கீழ் ரூ. 35.85 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,581 குடும்பங்கள் பயன் அடைந்து இருக்கிறார்கள். சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் 1948 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

# பத்தாண்டுகளில்.... சுற்றுலா வளர்ச்சி!



தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வர்த்தக அடிப்படையில் விரிவு படுத்த வேண்டி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல்நாள் துவக்கப் பெற்றது. தமிழ்நாடு அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா இல்லங்களைப் பெற்று மிக எளிய முறையில் பணியாற்றத் தொடங்கிற்று. இக் கழகம் துவக்கத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான இடவசதி அளிக்கவும் மற்றும் அவர்கட்கென சுற்றுலாப் பேருந்துகளை நடத்தும் பணிகளையும் மேற்கொண்டது. கடந்த ஆண்டுகளில் இக்கழகம் சுற்றுலாப் பயணிகட்குத் தேவையான பிறபணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது.

இக்கழகத்தின் வரலாற்றில் 1977-ஆம் ஆண்டு ஒரு சீரிய திருப்பு முனையாகும். இவ்வாண்டில் கழகத்தின் பணிகள் வர்த்தக ரீதியில் மாற்றியமைக்கப் பெற்றுப் பல வழிகளில் பல்கிப் பெருகியது.

குறைந்த கட்டணத்திலும், உயர்ந்த தரத்திலும் இக்கழகம் வழங்கிடும் தங்கும் வசதி மற்றும் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மட்டுமின்றி வெளிநாட்டுப் பயணிகளையும் பெரிதும் கவர்ந்துள்ளது.

1971-72ஆம் ஆண்டில் ரூ. 4.58 இலட்சமாக இருந்த வருவாய், 1976-77ல் ரூ. 68.51 இலட்சத்திற்கு உயர்ந்து, பிறகு 1981-82ல் ரூ. 223.35 இலட்சத்தினை எட்டியது. 1982-82ல் வருவாய் ரூ. 308.00 இலட்சத்தினை எட்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் சீரிய தொண்டிற்கு கடந்த ஆண்டுகளில் வேகமாக உயர்ந்து வந்துள்ள வருவாய் இதற்குச் சிறந்த சான்றாகும்.

இவ் வருவாய் உயர்வின் அடிப்படையில் இக்கழகம் 1.7.1980 முதல் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறும் நிலையினை எய்தியது.

1976-77ஆம் ஆண்டு முதல் இக்கழகம் முதன் முறையாக இலாபத்தில் செயல் படத் துவங்கியது. 1977-78ஆம் ஆண்டு ரூ. 1.60 இலட்சமாக இருந்த இலாபம், 1980-81ல் ரூ. 5.73 இலட்சமாக உயர்ந்தது. 1981-82ல் இக்கழகம் பெற்ற இலாபம் ரூ. 21.39 இலட்சமாகும்.

இக்கழகத்தின் அனுமதிக்கப் பட்ட பங்கு முதலீடு 1971-72ஆம் ஆண்டு ரூ. 50 இலட்சமும், 1976-77ல் ரூ. 200 இலட்சமும், மற்றும் 1981-82ல் ரூ. 500 இலட்சமுமாகும்.

செலுத்தப்பட்ட பங்கு முதலீடு 1976-77ல் ரூ. 110.00 இலட்சமும் மற்றும் 1981-82ல் ரூ. 223.55 இலட்சமும் ஆகும். இக்கழகத்தின் வைப்புச் சொத்துக்களின் மதிப்பு 1971-72ஆம் ஆண்டில் ரூ. 34.40 இலட்சமும் 1976-77ல் ரூ. 185.71 இலட்சமும், 1980-81ல் ரூ. 334.43 இலட்சமும் மற்றும் 1981-82ல் ரூ. 424.43 இலட்சமும் ஆகும்.

## இளைஞர் விடுதிகள்

இளைஞர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகட்கென குறைந்த கட்டணத்தில் வசதிமிக்க தங்கும் விடுதிகள் நிறுவும் பணியினைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. இத்தகு இளைஞர் விடுதிகள் ஏர்க்காடு, மாமல்லபுரம், மண்டபம், ஒகேனக்கல், கொடைக்கானல், உதகமண்டலம், இராமேசுவரம், பிச்சாவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைக்கப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் பிரிவின் வரவு விவரம் வருமாறு.

| | ரூ இலட்சம் |
|---|---|
| 1971—72 | 4.17 |
| 1976—77 | 33.23 |
| 1980—81 | 81.05 |
| 1981—82 | 118.05 |

1982—83ல் ரூ. 177.50 இலட்சமாக உயரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## சுற்றுலாப் பயணத் திட்டங்கள்

1977-78ஆம் ஆண்டு முதல், இக்கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத்திட்டங்கள், சுற்றுலாப் பயணிகளின் கருத்துக்களை அறிந்து அதற்கேற்ப விரிவாக்கப் பட்டு, மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி பிற மாநிலங்களில் உள்ள சுற்றுலாச் சிறப்புப்பெற்ற இடங்களையும் கண்டுகளிக்கும் வண்ணம் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

இக் கழகத்தின் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளையும் கவர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாட்டுப் பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க, கோலாலம்பூரிலும் சிங்கப்பூரிலும், இக்கழகம் முகவர்களை நியமித்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே சுற்றுலாவிற்கென வெளிநாட்டில் முகவர்களை நியமித்துள்ள முதல் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான். இதன் மூலம் பெருமளவிற்கு அந்நியச் செலாவணி பெருகுவதற்கு வாய்ப்புள்ளது.

இலண்டன் மாநகரின் ''காஸ்மாஸ்'' சுற்றுப் பயணத்திட்டங்களைப் பின்பற்றி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பயணத்திட்டங்கள் நாட்டிலேயே சிறந்தவையெனக் கருதப் படுகின்றன. பிற மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்கள், இக்கழகத்தின் சுற்றுப்பயணத் திட்டங்களைக் கண்டறிய தங்களது அலுவலர்களைச் அனுப்புமளவிற்கு சிறப்பெய்துள்ளது.

பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப புதிய சொகுசுப் பேருந்துகளை அதிக அளவில் பெற்று வருகின்றது. இப்பேருந்துகளின் சிறந்த பராமரிப்பிற்கெனப் பணிமனை ஒன்றினையும் இக்கழகமே நடத்தி வருகின்றது. சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நடத்துவது மட்டுமின்றி சுற்றுலாக் குழுவினருக்கும் பேருந்துகள் வாடகைக்கு அளிக்கப்பெறுகின்றன. 1972-73ல் இரண்டு பேருந்துகளும், 1976-77ல் ஏழு பேருந்துகளாக உயர்ந்து 1980-81ல் இவை மேலும் 16ஆக உயர்ந்து 1981-82ல் இவைகளின் எண்ணிக்கை இருபதினை எட்டியுள்ளது. இவற்றில் மூன்று குளிர் சாதன வசதி பொருத்தப்பெற்றவையாகும்.



மதுரை – அலங்காநல்லூரில் நடக்கும் "ஜல்லிக்கட்டு"

## படகுக்குழாம்

இக்கழகத்திற்குச் சொந்தமாக உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும் படகுக்குழாம் உள்ளன. இவை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

## ஒலி–ஒளிக்காட்சி

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் நாள்தோறும் இக்கழகம் ஒலி-ஒளிக்காட்சியினை நடத்தி வருகிறது. ரூ. 40.00 இலட்சம் செலவில் அமைக்கப் பெற்ற இக்காட்சி அமைப்பு, தமிழர்களின் தொன்மைமிக்க வரலாற்றினை எதிரொலிக்கும் வகையில் உள்ளது.

## தொலை நோக்கி இல்லங்கள்

மிகத் தொலைவில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண் குளிரக் கண்டுகளிப்பதற்கென இக்கழகம், தொலை நோக்கி இல்லங்களை அமைத்துள்ளது. கொடைக்கானலில் 2 தொலை நோக்கி இல்லங்கள் உள்ளன. ஏர்க்காட்டிலும் உதகமண்டலத்திலும் தொலைநோக்கி இல்லங்கள் அமைக்கபெற்று வருகின்றன.



முதுமலைக் காட்டில் காட்டெருமைகள் கூட்டம்

சுற்றுலா விடுதிகள் நடத்தும் சிறப்பு இக்கழகத்தின் தனித்தன்மையாகும். 1971-72ல் ஐந்து சுற்றுலா விடுதிகளாக இருந்த எண்ணிக்கை, 1976-77ல் 12 ஆகவும், 1981-82ல் 20 ஆகவும் உயர்ந்துள்ளது. இவ்விடுதிகளின் மொத்தம் படுக்கை எண்ணிக்கை 1971-72ல் 253. 1976-77ல் 818 ஆக உயர்ந்து, 1981-82ல் 1334 ஆக மேலும் உயர்ந்துள்ளது.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புப் பெற்ற இடங்களான சிதம்பரம், மதுரை, இராமேசுவரம், திருச்சி, தஞ்சை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, உதக மண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, ஒகேனக்கல் மற்றும் மாமல்லபுரம் ஆகியவற்றில் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளிடையே பெரும்பேறு பெற்றுள்ளது. இச்சுற்றுலா விடுதிகள் அனைத்தும் நகரின் மையப் பகுதிகளில் அமைந்து சுற்றுலாப் பயணிகள் எளிதில் அணுகும் வண்ணம் உள்ளன.

குறைந்த கட்டணத்தில் உயர்ந்த தரத்தில் சிறந்த பணிகளை இச்சுற்றுலா விடுதிகள் ஆற்றிவருகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப சுவையான உணவு வகைகள் சுகாதார முறையில் தயாரிக்கப் பெற்று வழங்கப் பெறுகின்றன.

1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மதுரை மாநகரில் துவங்கப் பெற்ற முதல் மூன்று நட்சத்திர ஓட்டல், இக்கழக வரலாற்றில் ஓர் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். கோவையில் மூன்று நட்சத்திர ஓட்டல் அண்மையில் துவங்கப்பெற உள்ளது.

1978-ஆம் ஆண்டு முதல், நெடுஞ்சாலைப் பயணிகளின் வசதிக்கென, பெருவழி ஒய்வு விடுதிகளை (Motels) நிறுவத்தொடங்கிற்று. இராணிப்பேட்டையில் ''மரகதம்'' மற்றும் உளுந்தூர் பேட்டையில் ''வைரம்'' ஒய்வு விடுதிகளும் நிறுவப்பெற்றன. கிருஷ்ணகிரியில் ''கோமேதகம்'' பெருவழி ஒய்வு விடுதி அண்மையில் துவங்கப் பெற உள்ளது. ஏனைய நெடுஞ்சாலைகளிலும் இத்தகு பெருவழி ஒய்வு விடுதிகள் கட்டும் திட்டங்கள் உள்ளன.

சுற்றுலாத்துறையின் "மோட்டல்"களில் ஒன்று



## தருமபுரி மாவட்டத்தில் ஐந்து நாட்கள்:







# ஓங்கி வளரும் ஊரப்புறங்கள்

தமிழக அரசு தண்ணிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம் போன்ற பல திட்டங்களைச் செயற்படுத்தி, ஊரப்புறங்கள் ஓங்கி வளர்ந்திட உழைத்து வருகின்றது. அண்மையில், தருமபுரி மாவட்டத்தில் பயணம் மேற்கொண்டபோது நேரில் பார்த்த ஊரப்புறப் பணிகளின் தொகுப்பே இக்கட்டுரை.

எழுதியவர்

[illegible]

ஜீப் வளைந்து வளைந்து மேடு பள்ளங்களைக் கடந்து செல்கிறது. வழி நெடுகப் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

பர்கூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள, அங்கினாயனப் பள்ளியில் வந்து ஜீப் நிற்கிறது.

''தன்னிறைவுத் திட்டம் இரண்டாவது கட்டம்-அரசு கூடுதல் துவக்கப் பள்ளி'' என்ற பெயர்ப் பலகையைப் பார்க்கிறோம்.

பள்ளியினுள்ளே நுழைகிறோம். இரண்டு வகுப்பறை. 120 மாணவர்கள் படிக்க வசதி இருக்கிறது. ரூ. 61,147 செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பள்ளிக்கான நிலத்தை ஊர்ப் பெரியவர் ஒருவர் இலவசமாக வழங்கியிருக்கிறாராம். நான்கே

மாதங்களில் கட்டி முடிக்கப்பட்ட இந்தப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை இருக்கும். இந்தப் பள்ளிக் கட்டடம் எழுவதற்கு முன்பு, மாணவர்கள் மரத்தடியில் படித்துக் கொண்டிருந்தார்களாம். புதிய இந்தப் பள்ளிக் கட்டடம் மாணவர்களுக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கும் இல்லையா? இதே மாதிரி பர்கூரில் 25 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

ஜீப் அந்தச் சாலையில் 'ஜம்' மென்று செல்கின்றது. 'முன்பெல்லாம் இந்தப்பக்கம் வண்டியே போகமுடியாது, ஒரே கரடு முரடாயிருக்கும்' என்று சொல்லிக் கொண்டே வருகிறார் ஒருவர். அந்தச்சாலைதான், கிருஷ்ணகிரி-ராணிப்பேட்டை சாலையிலிருந்து பிரிந்து, பர்கூர்-திருப்பத்தூர் சாலையை இணைக்கும் மூன்று கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகும். இந்தச் சாலையில் மூன்று சிறு பாலங்கள் உள்ளன. இதன் மதிப்பீடு ரூ. 67,000.

அதோ! அந்தச் சாலையில் வரிசையாகச் செடிகள் காணப்படுகின்றனவே! ஆம். ஒப்பதவாடிச் சாலையில் சுமார் 3 கி.மீ. தூரத்துக்கு ஆயிரம் புளியஞ் செடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த வேலைக்கு, ஆள் ஒன்றுக்கு ஏழு ரூபாயும், ஒரு கிலோ அரிசியும் கூலியாக வழங்கப்பட்டிருக்கிறது.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள துவக்கப் பள்ளி.

அடுத்து, ஆதிதிராவிடர் காலனிக்கு வருவோம்.

புதிதாக 25 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 2.75 ஏக்கர் பரப்பளவில் காட்சி தரும் இந்த வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அருகே குடிசைகளில் வசித்து வரும் அவர்கள், புதிய வீடு கட்டுவதில் உதவியும் புரிகிறார்கள். தக்க ஊதியமும் பெறுகிறார்கள். ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 7,500. வீடு நல்ல வசதியாக இருக்கிறது. மாடு கட்ட இடம், திண்ணை, படுக்கை அறை, சமையலறை, குளிக்குமிடம், வீட்டின் பின்புறம் தோட்டம்-இப்படி காட்சி தருகிறது அந்த வீடு. வீடுகளுக்கு அருகே பள்ளியும், கடைகளும் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள இந்த வீடுகளைப் போல, மேலும் 23 வீடுகள் கட்டப்படும் என்றும் தெரிந்துகொள்கிறோம்.

அந்தக் குழந்தைகள் காப்பகக் கட்டடம் எவ்வளவு அழகாக இருக்கிறது!

கந்திக்குப்பத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 30,000 செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் காப்பகத்தில், 50 குழந்தைகள் பயன்பெறும். இதே போல பர்கூர், சந்தூர், போச்சம்பள்ளியிலும் குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. இந்தக்காப்பகங்களுக்குக் 'கேர்' நிறுவனமும் உதவி செய்கின்றதாம்.

பர்கூர்—திருப்பத்தூர் சாலையை இணைக்கும் சாலை.









உருவாகிவரும் ஆதிதிராவிடர் காலனி

வரட்டனப்பள்ளியில், கால் நடைகளுக்கான குட்டை ஒன்று சாவி துவாரம் வடிவில் கட்டப்பட்டுள்ளது. 28,000 லிட்டர் தண்ணீர் கொள்ளளவு உள்ள இந்தக் குட்டை 10 அடி ஆழமுள்ளது. இது போன்று ஐந்து குட்டைகள் பல பகுதிகளில் உள்ளன.

கிராமக் குடிநீர்த்திட்டம் பற்றிய சில தகவல்கள் தெரிந்தன.

1981-82க்கு ஒதுக்கீடு ரூ. 1,20,000. மல்லப்பாடி, வரட்டனப் பள்ளி, ஒப்பதவாடி, ஐகுந்தம் கொத்தப்பள்ளி, பெரிய பணமுட்லு ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து தண்ணீர் விநியோகிக்க 'பைப் லைன்' போடப்பட்டுள்ளது. ஒன்றியப்பகுதியிலுள்ள கைப்பம்புகள்—151.

1981-82ல் தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் புதிதாக 140 பம்புகளுக்குத் திட்டமிடப்பட்டது. அதில் போடப்பட்ட பம்புகள் 60.

## கிருஷ்ணகிரி

பர்கூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குச் செல்கிறோம்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் பெரிய முத்தூரில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட அழகிய துவக்கப் பள்ளியைப் போய்ப் பார்க்கிறோம். ரூ. 65,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட இந்தப் பள்ளியில் 125 மாணவர்கள் பலன் பெறுவார்கள்.

அதோ, அந்தக் காட்டுப்பாதையில், குழாய்ப்பாலம் ஒன்று தென்படுகிறதே! ஆம். ரூ. 66,000 செலவில் ஆறு குழாய்கள் பொருத்தப்பட்ட பாலம் தான் அது. கிருஷ்ணகிரி ஒன்றியப் பகுதிகளில் மொத்தம் 92 சிறு பாலங்கள் உள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் மோரமடுகுப்பகுதியில் ஒரு புதிய துவக்கப்பள்ளி கட்டப்பட்டிருக்கிறது.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள துவக்கப் பள்ளி.

கிருஷ்ணகிரி - வெலகலஹள்ளி சாலையில் ஏராளமான பெண்கள் பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அருகே போய்ப் பார்க்கிறோம். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டு வரும் சிமெண்ட் பாலம்தான் அது. ரூ.53,000 செலவில் கட்டப்பட்டு முடியுந்தறுவாயில் உள்ள இந்தப் பாலம், ஊர் மக்களுக்குப் பெரிதும் பயன்படும். பேருந்து போக்குவரத்துக்கும், காட்டாற்று வெள்ளத்திலிருந்து விடுபடவும் இந்தப் பாலம் உதவும்.

இதே பகுதியில், புதிய துவக்கப்பள்ளி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

ஆலப்பட்டியில், தாய்சேய் நிலையம் மற்றும் துவக்கப்பள்ளி ஆகியவை அருகருகே உள்ளன. இவற்றுக்கு முன்புறம் ஒரு ஏக்கரில், கிராம விளையாட்டு அரங்கம் ஒன்றும் உள்ளது. இது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணியாகும்.

கொரல்தொட்டியில் - ஆதி திராவிடர்களுக்கான 25 வீடுகள் முடியுந் தறுவாயில் உள்ளன. இதுவும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமாகும்.

உப்புக்குட்டையில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் உருவான இது காட்டாற்று வெள்ளத்திலிருந்து விடுபட பெரிதும் உதவும்.

1979-80ல், அகில இந்திய அளவில்-குடும்ப நல அறுவைச் சிகிச்சை இலக்கை எட்டியதற்காக, சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 5000 பரிசு பெற்றதுதான் சிக்க பூவத்தி. இந்தக் கிராமத்தில் இப்போது புதிய குழந்தைகள் காப்பகம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்:

''இராயக்கோட்டையில் 3 ஏக்கரில் கூபாபுல் வளர்க்கவும், மேலேரிக் கொட்டாயில் பாலம் ஒன்று கட்டவும், எல்லாப்பள்ளிகளுக்கும் கழிவறை கட்டவும் திட்டமிருக்கிறது.

''சிறு தொழில் செய்வோருக்குக் கடன்தர ஏற்பாடு செய்கிறோம். பட்டதாரி இளைஞர்களுக்கு 6 மாதக் காலம் பயிற்சி அளித்து, உதவித் தொகை வழங்கி, பிறகு வங்கி மூலம் கடன் தந்து அவர்கள் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட ஆவன செய்கிறோம். இதேபோல், பெண்களுக்குத் தையல் பயிற்சியும் அளித்து தையல் இயந்திரங்கள் வழங்கியுள்ளோம். குடும்ப நலத் திட்டத்துக்குக் குறிப்பாக, பெண்களிடம் ஆதரவு மிகுதியாக உள்ளது.

''இதுவரை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 22 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 92 பாலங்கள், 2 தாய்சேய் நலவிடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 13 வட்டாரங்களில் வேலைகள் முடிந்துள்ளன. 3 வட்டாரங்களில் மட்டும் வேலைகள் இவ்வாண்டு தொடங்கும்.''

ஆறு குழாய்கள் உள்ள பாலம்.





வெலகலஹள்ளி சாலையிலுள்ள சிமெண்ட் பாலம்.



ஆதிதிராவிடர்களுக்கான புதிய வீடுகள்.



ஆணையாளர்
திரு எஸ். இராமகிருஷ்ணன்



சிறந்த ஊர்நல அலுவலர்
திரு ஏ. பி. சுப்பிரமணியம்.

பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலராகப் பணியாற்றியவர் திரு ஏ.பி. சுப்பிரமணியம் அவர்கள். அவர் 1975ல் இந்தியாவிலேயே சிறந்த ஊர்நல அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசு பெற்றவர். இவர் பணியாற்றிய அமாணி மல்லாபுரம் என்ற கிராமமும் அப்போது சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தற்போது கிருஷ்ணகிரியில் பணியாற்றுகிறார். அவர் கூறுகிறார்.

''எங்கள் ஒன்றியத்தில் 29 சமூகக் கல்வி மன்றங்கள் உள்ளன. மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை மக்களுக்குப்பொது அறிவுச் செய்திகள் கூறுதல், கிராம வானொலி மூலமாக விவசாயச் செய்திகள் அறியச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறேன். இங்கு 10 கிராம இளைஞர் மன்றங்கள் உள்ளன. இவர்கள் பெரியமுத்தூரில் 2000 யூகலிப்டஸ் செடிகளை நட்டுள்ளனர். முதியோர் கல்வி, வாரத்தில் 5 நாட்கள் நடக்கின்றன.

இதற்காக 100 மையங்கள் உள்ளன. அதற்கு நாங்கள் உதவுகிறோம்.''

## ஓசூர்

மூன்றாம் நாள் ஓசூருக்கு வருகிறோம்.

ஓசூரில் கிராமங்கள் ஒருபக்கம் தன்னிறைவைப் பெற்றுத் தழைத்து வருகிறது. ஒரு பக்கம் நகரப் பகுதிகள் தொழில் கேந்திரமாக மாறிக் கொண்டு வருகின்றன.

ஓசூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள அந்திவாடிக் கிராமத்துக்கு, அதன் ஆணையாளர் திரு. க. பால்ராஜ் அவர்கள் நம்மை அழைத்துச் செல்கிறார்.

அங்கே, ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட 28 வீடுகள் காட்சி அளிக்கின்றன.

முக்கிய சாலை ஒன்றில் நின்று கொண்டு பார்க்கிறோம். பார்வைக்கு அழகாகக் காட்சியளிக்கும் அந்தக் காலனி, ஏழை எளிய மக்கள் குடிவரப்போகும் குடியிருப்புகள் என்பதை எண்ணும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒவ்வொரு வீடும் 9000 ரூபாய் மதிப்பில் மிகவும் வசதியாக, 435 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. சீமை ஓடுகள் வேயப்பட்ட இந்த வீட்டுக்கு முன்னால் இரண்டு தென்னை மரங்கள், நல்ல கருங்கல் சாலை, தெரு விளக்கு, வீட்டுக்கு மின்விளக்கு, பின்புறம் தோட்டம்- இப்படி நல்ல பல வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் காலனி உருவாகப் பலர் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் ஆணையாளர் திரு க. பால்ராஜ், ஊர் நல அலுவலர் திரு ஏ. பாலசுப்பிரமணியம், இளநிலைப்பொறியாளர் திரு சி. ராமன் ஆகியோர் முக்கியமானவர்கள்.



ஆணையாளர்
திரு க. பால்ராஜ்

'இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரிக் கிராமமாக விளங்கப் போகிறது' என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள் பெருமையோடு கூறுகிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்—

''இந்தக் காலனியின் மையப் பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கவும், நூலகம் ஒன்று அமைக்கவும், விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தவும் திட்டமிருக்கிறது.

"முடியுந்தறுவாயில் உள்ள இந்தக் காலனிக்குக் குடி தண்ணீர், கழிவறை, துவக்கப்பள்ளிபோன்ற வசதிகள் செய்து கொடுக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

''பதினெட்டு வீடுகளுக்கு பாரத ஸ்டேட் பாங்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடன்கள் தரவும், 10 வீடுகளுக்குக் கறவை மாடுகள் தரவும் ஏற்பாடாகியுள்ளது.

''தொழில் நகரங்களுக்கு மத்தியில் இந்தக் காலனி உள்ளதால் தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கும்.''

இந்தப் பகுதியில், பொதுக்கழிவறை ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. 30அடி ஆழத்தில் பொதுக் கிணறு ஒன்றும் தோண்டப்பட்டு வருகிறது. முகப்பில் அழகிய வளைவு ஒன்று கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளாக காலி மனைகளாகக் காட்சியளித்த இந்தப்பகுதி, இன்று கவின்மிகு குடியிருப்புகளாக உருவாவதற்குக் காரணம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் தான்.

அந்திவாடி ஆதிதிராவிடர் காலனி, அனைவரையும் கவரும் என்பதில் ஐயமில்லை.

மத்திய அரசு ஊரக வளர்ச்சித் துறையின் துணை இயக்குநர் (நடுவிலிருப்பவர்) கழிவு நீர்த்திட்ட வேலைகளைப் பார்வையிடுகிறார் (ஓசூர்)





காலனியை விட்டு நெடுந்தூரம் போகிறோம். அங்கே ஐந்து ஏக்கர் பரப்பளவில் சத்துணவுக்கான காய்கறிகள், பழங்கள், கீரைகள் பயிரிடப்பட்டிருக்கின்றன. அங்கே உள்ள பெரிய புதிய கிணறு இந்தத் தோட்டத்துக்கு வேண்டிய தண்ணீரைத் தருகிறது. மாட்டுத் தீவனம் அதிக அளவில் தேவைப்படுவதால், 19 ஏக்கர் பரப்பில் மாதிரி கூபாபுல் வளர்க்கவும் திட்டமிருக்கிறது.

1976 முதல் குடும்பநலத் திட்டத்தில், மாநிலத்திலேயே 2வது இடமும், சிறு சேமிப்பில் முதல் இடமும் இவ்வொன்றியம் வகித்து வருகிறது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் வரிசையாகப் புளியஞ்செடிகள் வைக்கப்பட்டுள்ளனவே! ஆம். போகப்பள்ளி சாலையில் 3 கி.மீ தூரத்துக்கு 550 புளியங்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ், மாசினாயக்கனப்பள்ளியில் கசிவு நீர்க்குட்டை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. 40. ஏக்கர் நீர்ப்பரப்பு இதன் கொள்ளளவாகும். இதில் நீர் தேக்கி வைப்பதால் 20 பம்ப்செட்டுக்கு நீர் கிடைக்கும். பக்கத்துக் கிராம ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் இது பெரிதும் பயன்படும். ரூ. 40,000 செலவில் வேலைகள் நடந்து முடியுந்தறுவாயில் உள்ளன. 145 மீட்டர் நீளமும் 5 மீட்டர் உயரமும் உள்ள இந்த அணை வேலையை ஆதிதிராவிடர் மக்களே செய்வது குறிப்பிடத்தக்கது. முன்பெல்லாம் இங்கு தேங்கும் மழைத் தண்ணீர் வீணாகப் போனது. இப்போது அது சேமித்து வைக்கப்படும்.

### அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர மாணவர்களுக்கு அரசு ஆணையில் விதிவிலக்கு

**1974-75**-ம் ஆண்டு முதல் அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படித்துவரும் மாணவர்கள் 6-ஆம் வகுப்பிற்குமேல் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று 1974-ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் வரப்பெற்ற வேண்டுகோளுக்கிணங்க அரசு இந்த ஆணையைத் தளர்த்தி கடந்த எட்டு ஆண்டுகளாக மாணவர்கள் 8-ஆம் வகுப்பு வரை சேர்த்துக்கொள்ளப்பட வகைசெய்தது.

1982–83-ஆம் கல்வியாண்டிலும் அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் அல்லது தனியாகப் பயின்ற மாணவர்கள் 6 முதல் 8–ஆம் வகுப்புவரை உள்ள அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 7 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கவும், 1974-ஆம் ஆண்டு ஆணைக்கு விலக்களித்து அரசு அனுமதி அளித்துள்ளது. தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் எல்லாவிதமான அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அரசின் இந்த விதிவிலக்கை மாவட்டக் கல்வி அலுவலர்களும், பெண்கள் பள்ளி கண்காணிப்பாளர்களும் அளிப்பர்.

### சென்னை நகரில் மலேரியா கொசுத் தொல்லையை சமாளிக்க சென்னை மாநகராட்சிக்கு அரசு ரூ. 25 இலட்சம் கடனுதவி

சென்னை மாநகரில் பெருகி வரும் கொசுத் தொல்லையைச் சமாளிக்க சென்னை மாநகராட்சி, கருவிகள் வாங்கவும் கூடுதல் ஊழியர் நியமனம் செய்யவும் வேண்டியுள்ளது. இத்தேவைக்கான கூடுதல் செலவினத்தை ஈடுகட்ட தமிழ்நாடு அரசு ரூ. 25 இலட்சத்தை சென்னை மாநகராட்சிக்குக் கடனாக வழங்கியுள்ளது.

### அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் கழிவறை வசதிக்கென ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு

அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் போதிய கழிவறை வசதிகள் இல்லாததைக் கருத்திற்கொண்டு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சம் செலவில் போதிய கழிவறை வசதிகள் செய்து கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காகும் தொகை சிறப்பு வழக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓசூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 4 உயர் நிலைப்பள்ளிகள் 4 துவக்கப்பள்ளிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. சுயவேலை வாய்ப்பில், 82 பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச்சாலைகள் போடப்பட்டுள்ளன. 52 சாண எரிவாயுச் சாதனம் அமைக்கவும் திட்டம் உள்ளது. குடும்பநல அறுவைச் சிகிச்சை, சிறு சேமிப்பு வசூல், கதர் விற்பனை ஆகியவற்றில் இது முன்னேற்றம் கண்டுள்ளது.

# கிழக்குக் கடற்கரையின் ஓர் அணிகலன்

இயற்கைத் துறைமுகமும், கடற்கரையும், சுடற்ற அழகும் மணற்பரப்பும் கொண்ட விசாகப் பட்டினம், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையின் அணிகலனாகத் திகழ்கிறது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆந்திரா மன்னர் ஒருவர் காசிக்குச் செல்லும் வழியில் இங்கு தங்கியதாகவும், இதன் அழகில் மயங்கி அங்கு தனது விருப்ப தெய்வமான வைசாகக் கோயில் ஒன்றைக் கட்டியதாகவும் கூறப் படுகிறது. அதே நேரத்தில் கி.மு. 200-ல் புத்த மதத்தைச் சேர்ந்த இளவரசி வைசாகா அங்கு வாழ்ந்ததாகவும், அவளது பெயரில் இந்த நகரத்துக்கு விசாகப்பட்டினம் என்று பெயரிடப்பட்டதாகவும் இன்னொரு கதைச் செய்தி அந்தப்பகுதியில் பேசப்படுகிறது. அசோகர் படையெடுப்புக்குப்பின் ஆந்திரம் புத்தமதக் கல்வியின் இருப்பிடமாக மாறியது.

நாட்டில் மிகப் பெரிய கப்பல் தளமும் இயற்கைத் துறைமுகமும், விசாகப்பட்டினத்துக்கே சிறப்பான தன்மையை அளிக்கிறது. உர ஆலை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, பாரதகனரக கப்பல்கள் மற்றும் பிளேட்டுகள், பெரிய தொழில்கள் போன்றவை விசாகப்பட்டினத்தை ஒரு தொழில் கேந்திரமாக உருவாக்கியுள்ளது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள எஃகாலை இந்த நகரை மிகப்பெரியதொழில் மையமாக வளர்ச்சி பெறச் செய்யும்.

வங்காள விரிகுடாவின் அருமையான காட்சிநகரைப் படம்பிடித்துக்காட்டும்.ஒரு பறவை பார்வை ஆகியவற்றை 157 மீட்டர் உயரத்திலுள்ள டால்ஃபின் மூக்கு பகுதியிலிருந்து காணமுடியும்.

70 இலட்சம் மெழுகுவர்த்தித் திறன் கொண்ட கலங்கரை விளக்கம் 64 கிலோமீட்டர் வீச்சில் செயல்படுகிறது. இது உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்தது. லாசன் வளைகுடா ஒரு கோடை சொர்க்கம் ஆகும். கடலில் குளிப்போர்களுக்கு இது ஒரு அருமையான இடம். கடலில் குளித்த பின்னர் நல்ல தண்ணீரில் நீராடவும், ஆடைமாற்றிக் கொள்ளவும் லாசன் வளைகுடாவில் வசதி உள்ளது. செங்குத்தாகச் சரிந்து செல்லும் சாலைகளில் கடந்து செல்லும்போது கிழக்கு மலைத் தொடரையும் வங்காள விரிகுடாவையும் எதிர் எதிரே கண்டு களிக்க முடியும்.

மாநிலத்தின் பல முக்கிய சுற்றுலா அம்சங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளன. விசாகப்பட்டினம் வருவோர் 24கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பீமுனிப்பட்டினம் செல்லத் தவறமாட்டார்கள். கடற்கரைச் சாலையில் இது அமைந்துள்ளது. பண்டைய டச்சுக்காரர்களின் குடியிருப்பு இது. பல டச்சு நினைவுச் சின்னங்கள் இங்கு உள்ளன. கடலோரத்தில் இதற்கு இணையான இடம் இல்லையெனலாம். அவ்வளவு அழகான சுற்றுலா மையம் இது.

இந்தப் பகுதியில் நீலக் கடல்பல வண்ண ஜாலங்கள் புரிவதாகச் சுற்றுலாப் பயணிகள் கூறுகிறார்கள். ஆந்திரத்தில் சுற்றுலா சர்க்யூட்டாக அபிவிருத்தி செய்வதற்குப் பீமுனிப்பட்டினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இங்கு இருவர் தங்கக் கூடிய அறைகள் 10 கொண்ட சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்டத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. 60 படுக்கைகள் கொண்ட விடுதி மாதிரியான கட்டடம் ஒன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விசாகப்பட்டினம், பீமுனிப்பட்டினம் இடையே சாலை மற்றும் பூங்காக்கள் அபிவிருத்தி செய்யப் படும். இந்தப் பகுதிகளுக்காக 50 இலட்சம் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தில் இருந்து 23 கிலோ மீட்டர் தூரத்தில் சிமாச்சலம் என்ற இடத்தில் ஸ்ரீ நரசிம்மர் கோயில் மலைப்பகுதியில் உள்ளது. சிமாச்சலத்தில் சுற்றுலா ஓய்வு இல்லம் ஒன்றும் கிழக்குத் தொடர் மலைப்பகுதியில் அழகு கொலுவிருக்கும் பகுதியாகும். இது கடல் மட்டத்திலிருந்து 1067 மீட்டர் தூரத்தில் உள்ளது. பசுமையான காட்சிகள் நிறைந்த பாதை வழியே பயணம் செய்து இந்தப் பள்ளத்தாக்கை அடைவது உற்சாகமளிக்கும் ஒன்றாகும். இந்த இடத்தில் சுற்றுலா இல்லம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

அனந்தகிரி மலைத்தொடர் அழகு நிறைந்த ஒன்றாகும். இதற்கு 5 கிலோமீட்டர் தொலைவிலும்விசாகப்பட்டினத்திலிருந்து அரக்குப் பள்ளத்தாக்கு செல்லும் வழியில் 8 கிலோமீட்டர் தொலைவிலும் போரா குகை அமைந்துள்ளது. போரா கிராமத்துக்கு பக்கத்தில் ஒரு நீரோடை சுண்ணாம்புக்கல் குன்று அருகே ஓடி திடீரென்று மறைந்துவிடுகிறது. மீண்டும் சுண்ணாம்புக்கல் மலை வழியாகப் புகுந்து வரும் அந்த நீரோடை படு பாதாளத்தில் பாய்ந்து ஓடுவதைக் காணலாம். இந்த நீரோடையின் பாதையில் குகைகள் இடம் பெற்றுள்ளன. சுற்றுலாப் பயணிகள் இந்தக் குகைகளைஅடைவதற்குப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது ஒரு புனிதத் தலமாகவும் கருதப்படுகிறது. ஒவ்வொரு சிவராத்திரியிலும் இங்கு விழா கொண்டாடப் படுகிறது. பக்கத்திலிருந்து தொலை தூரத்திலிருந்தும் ஏராளமாக குறிப்பாக மலைச் ஜாதி மக்கள் இந்த விழாக்களுக்கு வந்து கூடுகிறார்கள்.

விமானம், ரயில், சாலை ஆகியவற்றின் மூலம் விசாகப்பட்டினத்தை அடைய முடியும். ஹைதராபாத் மற்றும் கல்கத்தாவிலிருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் தினசரி விசாகப் பட்டினம் வருகின்றன. விசாகப் பட்டினத்துக்கும் வால்டேருக்கும் இடையே ரயில் இணைப்பு உள்ளது. இது சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் இடையில் பாதி வழி தூரத்தில் உள்ளது.

நவீன ஓட்டல்கள், வசதியான பஸ்கள், சுற்றுலா டாக்சிகள் விசாகப்பட்டினத்தில் எப்போதும் கிடைக்கின்றன. சுற்றுலாப்பயணிகளுக்கு வசதியான வகையில் சுற்றுலாப் பயணங்களுக்கும் இவை ஏற்பாடு செய்கின்றன.





# ஆரைக் கீரை



டாக்டர் ஜி. சாமுவேல்,
தென்னேரி.

தமிழ்ப்புலவன் கம்பனுக்கும் தமிழ் மூதாட்டி ஔவைக்கும் ஒரு சமயம் தகராறு ஏற்பட்டதாம். ஔவையை 'அடி அடி' என்று கூற விரும்பிய கம்பன் விடுகதை கூறுவது போல ''நாலுகாலடி ஒரு பந்தலடி'' என்று கூறினானாம். அதற்கு ஔவை

''எட்டேகால் லட்சணமே,
ஏமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை
வாகனமே – முட்டமேல்
கூரையில்லா வீடே,
குலராமன் தூதுவனே
யாரையடா சொன்னாய் அது' என்று

கூறிய அந்த விடுகதைக்கீரைதான் ஆரைக் கீரை. இக்கீரை நீர் ஆரைக்கிரை என்றும் ஆறாக்கீரை என்றும் வழங்கபெறும். இது பயிரிடப்படுகின்றன கீரை இனமல்ல. நீரோடைகளிலும் நீர் நிலைகளிலும் வயல்வெளிகளிலும் வாய்க்கால்களிலும், பயிர்களின் இடையிலும் தன்னிச்சையாக இக்கீரை வளரும். இயற்கை அன்னையின் இணையற்ற அன்பளிப்பு ஆரைக் கீரை. சக்தி மிகுந்த இக்கீரையும் குணமும் இன்னமும் அநேகருக்கு தெரிவதில்லை.

**உபயோக முறை:**

இக்கீரையை கிள்ளி எடுத்து தண்ணீரில் சுத்தமாக அலசி பூண்டு மிளகாய் கூட்டி தாளித்து நன்றாக வதக்கிச் சாப்பிடலாம். கிராமப்புறங்களில் சீதபேதிக்கு இக்கீரையை பச்சையாக கிள்ளி மென்று தின்பதை இன்றளவும் காணலாம்.

**ஆரைக்கீரை ஆணுக்கு ஆகாது:**

கிராமத்தில் வசிக்கும் ஒருவன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச சென்றானாம். அங்கிருந்த ஆரைக்கீரையை பறித்து வந்து மனைவியிடம் கொடுத்து சமைக்கச் சொன்னானாம். அவன் வயலுக்குச்சென்றபின் கீரையைச் சமைத்த அவன் மனைவி சிறிது சாப்பிட்டுப் பார்த்தாளாம். நல்ல ருசியுடன் இருக்கவே கொஞ்சம் கொஞ்சமாக எல்லா கீரையையும் சாப்பிட்டு விட்டாளாம். வயலிலிருந்து வீடு திரும்பிய கணவன் தன் மனைவியிடம் எங்கே கீரை என்று கேட்டானாம். அதற்கு அவள் ''ஆரைக் கீரை ஆணுக்கு ஆகாது'' என்று கூறினாளாம். அவள் கணவன் உண்மையை தெரிந்துகொண்டான். வயல் அறுவடை முடிந்ததும் தன் வயலில் விளைந்த 'குண்டஞ்சம்பா' நெல்லை அரைத்துத் தான் மட்டும் சாப்பிட்டானாம். அவன் மனைவி அவனைப் பார்த்து ஏன் என்று கேட்ட போது ''குண்டஞ்சம்பா அரிசி பெண்களுக்கு ஆகாது'' என்று அவன் திருப்பிக் கூறினானாம். இக்கதையிலிருந்து ஆரைக் கீரையின் சுவை நமக்குப் புரிகிறது. ஆரைக் கீரை மிகுந்த சுவை கொண்டது.

**நீரிழிவுக்கு (டயாபடிஸ்) மருந்து:**

ஆரைக்கீரையை மேற்கண்டபடி சமைத்து 1 மண்டலம் (40 நாள்) 2 மண்டலம் (80 நாள்) 3 மண்டலம் (120 நாட்கள்) தவறாமல் சாப்பிட இறைவன் அருளால் இக் கீரையின் மூலமாகவே நீரிழிவு நோய் அடியோடு ஒழிந்து போகும். சாகும்வரை 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொண்டிருப்பதைவிட நோயை வேருடன் அகற்றும் ஆரைக்கீரை சாலச்சிறந்தது. தவிர பித்தத்தால் ஏற்படும் அனைத்து வியாதிகளையும் கண்டிக்கும் சக்தி கொண்டது இக்கீரை. ஆரைக்கீரையின் அருங் குணத்தை சித்தர் வாக்கு அடியிற்கண்டவாறு கூறியுள்ளது.

''தின்றாலும் ருசிதரும் தீராப்பயித்தியத் தைப்
பொன்றாத நீரிழிவைப் புண்ணீரை— யென்றுமிந்த
வூராரைச் சாரலோட்டிவிடும் நாவி தழரார்
நீராரைக் கீரையது-நீ

—சித்தர்வாக்கு.

1. தின்பதற்கு ருசிதரும்
2. தீராத பைத்தியத்தைப் போக்கும்
3. நீரிழிவைப்போக்கும்
4. புண் ஏற்பட்டு நீர் கசியும் நோய் களைப்போக்கும்

எனவே, ஆரைக்கீரையை உணவில் சேர்த்து நோய் நீங்கி சுகம் பெறலாம்.

மாணவர் பக்கம்

# அறிவுச் சுடர்

உண்ணும் திராட்சைப் பழங்களைச் செக்கச் செவேல் என்று ஆக்குகின்றன; மது இறக்கும் திராட்சைப் பழங்களைப் பருமனாக்குகின்றன. பருத்திச் செடியின் இலைகள் உதிரச் செய்து பருத்தி அறுவடையை எளிதாககுகினறன; புகையிலைச் செடியின் பக்கக் கன்றுகளை அழித்துப் புகையிலையின் குணத்தைப் பெருக்குகின்றன; இவை மட்டுமா?

பச்சை வாழைக் காய்களைக கண்ணைக் கவரும் மஞ்சள் வண்ணப் பழங்களாக்குகின்றன. அவை எவை?

செடிகளில் இயற்கையாக உண்டாகும் ஹார்மோன்கள் போன்று செயற்கையாக உற்பத்தி செய்யும் இரசாயனப் பொருள்கள்! இவை இந்த வேலைகளையெல்லாம் செய்வது மட்டுமல்ல; இயற்கையில் பல ஆண்டுகள் பிடிக்கும் மாற்றங்களைச் சில மணி நேரத்திற்குள் ஏற்படுத்திப் பயிர்ப் பச்சைகளின் பலனைப் பெருக்கவும் உதவுகின்றன; வேளாண்மையின் உற்பத்தித் திறனையும் ஆதாயத்தையும் கூட்டுகின்றன.

வளர்ச்சி, உரிய மாற்றம். இனவிருத்தி இவையெல்லாம் தாவரங்களிலும் சரி, மனிதரிடத்திலும் சரி, ஹார்மோன்களினால் ஒழுங்கு செய்யப்படுவனவாகும். தாவர ஹார்மோன்கள் 1920-க்குப் பிறகு தான் விஞ்ஞானிகளுக்குத் தெரிய வந்தன.

ஹார்மோன்கள் செய்யும் வேலைகள் பலப்பல. ஒரு செடியிலே வேர்களை வளரும்படி ஆணை இடுவன ஒரு வகை ஹார்மோன்கள்; பழங்களை உதிரும்படி ஆணை இடுவன மற்றொரு வகை ஹார்மோன்கள்; செடியிலிருந்து ஈரம் வெளியேறுவதைக் குறைப்பவை இன்னொரு வகை; பூச்சிகளை எதிர்த் தடிப்பன மற்றொரு வகை. இவையெல்லாம் எப்படி நிகழ்கின்றன என்பது இன்னும் விளங்கவில்லை, என்கிறார் மிசிகன் பல்கலைக்கழக விஞ்ஞானி ராபர்ட் பண்டார்ஸ்கி.

## உலகின் மிகப் பெரிய கடிகாரம்

பவேரியாவில் அமைந்துள்ள உணவுவிடுதி ஒன்றில் உலகின் மிகப் பெரிய கடிகாரம் ஒன்றுள்ளது. இதற்கு 100 வயதாகிறது. 25 cwt எடையுள்ள இந்தக் கடிகாரத்தின் உரிமையாளர் ஆன்டன் ரிட்ஸ் (Anton Rietz) ஆவார். இதற்கு 10 முகங்கள் உள்ளன. அவற்றில் நான்கு, பெர்லின், வியன்னா, முனிச் மற்றும் பாரிசில் அப்போதுள்ள நேரத்தைக் காட்டுகின்றன.

ஆனால் இது உலகின் மிகப் பெரிய கடிகாரமானாலும் மிகச் சரியாக நேரத்தைக் காட்டுவதில்லை. மார்ச் 82 முதல் டுசெல்டார்ப் (Duesseldorf) டிவி டவரில் அமைக்கப்பட இருக்கிறது. ப்ருனிஸ்விக் (Brunsuick) அணுசக்தி கடிகாரத்துடன் இணைக்கப்பட்டு இயங்க இருக்கிறது. 40 முதல் 160 மீட்டர் வரை உள்ள குறுக்குவாட்டு அளவு கோலைக் கொண்டு உலகிலேயே நேரத்தைத் துல்லியமாக இது காட்ட இருக்கிறது.

## அமில மழை

அமில மழைத் துளிகளால் காரின் மேற்பகுதி அரிக்கப்படுகிறது. பூசப்பட்ட வண்ணம் மற்றும் சிமெண்ட்டு வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஏரியிலுள்ள தாவர வகைகள் சாகடிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு சில ஏரிகளுக்காவது இதனை எதிர்க்கும் சக்தி இருக்கிறது என மசாசுசெட்ஸைச் சேர்ந்த இரசாயன விஞ்ஞானி கருதுகிறார்.

ஆலிவர் டி சாஜிசெக் (Oliver T Zajicek) என்ற இரசாயன விஞ்ஞானி ஏரிகளுக்கு இயற்கையாகவே பாதுகாப்பு முறை உண்டு எனக் குறிப்பிடுகிறார். களிமண், மைக்கா, ஆஸ்பெஸ்டாஸ் போன்ற கூட்டுப் பொருட்களில் அலுமினிய சிலிக்கேட் உள்ளது. இது அமிலத்தை நடுநிலைப்படுத்துகிறது அல்லது தீங்கற்றதாக்கி விடுகிறது.

காற்றுமண்டலம் அசுத்தம் மிக்கதாகும் போது, மேகங்களும் பாதிப்படைகின்றன. இதனால் அமில மழை பெய்கிறது.

## ஆசான் தெய்வம்

கங்கை மணிமாறன், பி.லிட்.

எண்ணும் எழுத்தும் சொல்லித் தந்தவன்
இறைவன் போலாவான்;
கண்ணும் மனமும் ஒளிபெற் றோங்கிடக
கண்ட பொருளாவான்!

பாதை காட்டிப் பயணம் விளக்கிடும்
பரிவுச் சுனையாவான்;
ஏத மழித்தே இன்பம் சேர்த்திடும்
எளிமைத் துணையாவான்!

உலகைக் கற்க உரிய வழிகளை
உரைகளும் திறமாவான்;
இலகு செல்வம்; புகழை ஈந்திடும்
இனிய வரமாவான்!

மாக் கெடுத்து மாண்பு கொடுத்திடும்
மனித மருந்தாவான்;
ஆசான் புதிய எழுச்சி வித்திடும்
அறிவின் விருந்தாவான்!

ஆசான் இல்லாக கலைகள் உலகினில்
ஆற்றல் பெறுவதில்லை;
ஆசான் தெய்வம்; அறிவும் தெய்வமே;
அறிந்தால் துயரில்லை!.



## நேரு பற்றிய திரைப்படம்

பண்டித ஜவஹர்லால் நேரு பற்றிய திரைப்படம், இந்திய-சோவியத் கூட்டு முயற்சியால் உருவாகிறது. இந்தியா, சோவியத் யூனியன், பிரான்ஸ் மற்றும் பல நாடுகளிலிருந்து, இப்படத்திற்குத் தேவையான ஏராளமான விஷயங்கள் சேகரிக்கப்படுகின்றன.

சோவியத் தரப்பும் இந்தியத் தரப்பும், இரண்டு திரைக்கதைகளைத் தயாரித்துள்ளன; அவற்றிலிருந்து ஒரு திரைக்கதை உருவாக்கப்படும். நேருவைப் பற்றி இரண்டு பாகங்கள் கொண்ட முழு நீளப்படம் தயாரிக்கப்படும். எனவே, நேருவைப் பற்றிய டாக்குமெண்டரிப் படங்களை மட்டுமின்றி, அவரது கடிதங்கள் கட்டுரைகள், நூல்கள் ஆகியவையும் ஆராயப்படுகின்றன.

''நாங்கள் சேகரித்துள்ள ஏராளமான தகவல்கள், நேரு ஒரு தலை சிறந்த அரசியல்வாதி என்பதுடன், தலைசிறந்த மனிதர் என்பதையும் காட்டுகின்றன'' என்று இப்படத்தின் கூட்டு இயக்குநர் கூறியுள்ளார்.



## எழுதுகோலின் கதை!

பழந்தமிழ் அரசர்கள் தங்கள் ஆட்சி முறையையும், அறக்கட்டளையையும் கல்லில் தீட்டினர். இக்கல்வெட்டுகளில் உரைநடையை மட்டுமின்றிக் கவிதையும் காணலாம். எனவே தமிழர்கள் பயன் படுத்திய முதல் எழுதுகோல் 'சிற்றுளி'.

பதமாக வேகவைத்த பனை ஓலைகளை எழுதும் ஏடாகப் பயன் படுத்தி, கூரிய கருவிகளைக் கொண்டு எழுதும் வழக்கம் ஏற்பட்டது. இலக்கியமும், இலக்கணமும், சோதிடமும் மருத்துவமும் ஏட்டில் வளர்ந்தது. இந்நாள்தான் எழுத்தாணியின் காலம்.

ஏட்டுச் சுவடிக்குப் பதிலாகத் துணிச் சுருளைகளில் பறவைகளின் இறகுகளால் எழுதும் வழக்கம் அரசவைகளில் தோன்றிற்று. அழகான நீண்ட இறகுகளைக் கொண்டு எழுத புகைக் கரியிலிருந்தும் அரக்கு, மாசிக்காய், கடுக்காய் பச்சிலை முதலியவற்றிலிருந்தும் ஒரு வகை மை செய்யலாயினர். பறவையின் இறகு, காலப் போக்கில் கட்டைப் பேனாவாக மாறியது.

கி. பி. நூறாம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட காகிதம். அரேபியர்களால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. கட்டைப் பேனா, ஊற்றுப் பேனாவாக மாறிற்று. வழவழப்பான காகிதமும், தடையின்றி எழுத பேனாவும் சேர்ந்து இலக்கியம் வளர்கிறது. அறிவும் பெருகுகிறது.

**ச. புகழேந்தி,**
**வேளாண்மை 2-ஆம் ஆண்டு,**
**சீனிவாசராவ் மேல்நிலைப் பள்ளி,**
**திருவையாறு.**

## இரத்தத் தொழிற்சாலை

இங்கிலாந்தில் இரத்தத் தொழிற்சாலை நிறுவ அந்நாட்டு அரசு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவிட முடிவு செய்துள்ளது. இத்தொழிற்சாலை மனித இரத்தத்திலுள்ள புரோட்டீன்களைப் பிரித்துத் தூய்மைப் படுத்திச் சேகரித்து வைக்கும். தீக் காயங்களைக் குணப்படுத்துவதற்கும் பிற சில நோய்களைக் குணப்படுத்துவதற்கும் இப் புரோட்டீன்கள் பயன்படும்.

பூமியில் உள்ள மக்கள் அதிகரிக்க அதிகரிக்க பூமியின் எடை அதிகரிக்குமா அல்லது அதே எடை இருக்குமா!

பல டன் எடையைத் தூக்கும் தராசுத்தட்டில் சில குண்டுமணிகளைப் போட்டாலும் எடுத்தாலும், இதனால் ஏற்படும் மாறுபாட்டை உணர முடியாது. இதேபோல, நிலத்தின் அடியிலுள்ள கனிப்பொருட்கள், எண்ணெய், தண்ணீர், பாறைகள், எரிமலைகள் ஆகியவை நிலத்தின் எடையை ஆதிக்கச் செய்கின்றன. இந்த எடையுடன் மக்கள் தொகை எடையை ஒப்பிடமுடியாது. ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் இருந்த எடையைவிடச் சிறிது எடை அதிகரித்திருக்கும். ஆனால் இதனை உணர முடியாது அந்த அளவுதான் எடை கூடியிருக்கும்.



மான்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. உறண்டே அவர்கள் சான்றிதழ் வழங்குகிறார்

# சிறந்த ஆசிரியர்

மாணவர்களானாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி ஒவ்வொருவரிடமும் ஒன்றுக்கு மேற்பட்ட திறமைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஓவிய ஆசிரியர் ஒருவர் அண்மையில் 'சிறந்த ஆசிரியர்' என்ற சான்றிதழ் பெற்றுள்ளார். அவர்தான் திரு ஏ. எஸ். நடராஜன். உலக ஊனமுற்றோர் நாளை ஒட்டி, காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் தொழில் மறுவாழ்வுப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இதரப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுள் திரு ஏ. எஸ். நடராஜன் 1981 ஆம் ஆண்டின் சிறந்த ஆசிரியர் என்று தேர்வு செய்யப்பட்டு, தமிழக அரசு இவருக்குச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ள இவர், சென்னை அடையாறு புனித லூயிஸ் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். காது கேளாத மற்றும் பார்வையற்ற மாணவர்க்குப் பயிற்சி தரும் பணியில் சிறந்து விளங்குகிறார். குறிப்பாக ஓவியத்தில், அம்மாணவர்களுக்குப் பயிற்சி தந்து பரிசுகளும் பெறச் செய்திருக்கிறார்.

அண்மையில், சென்னை விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் (வி. டி. ஐ.) நடத்திய ஊனமுற்ற சிறுவர்க்கான ஓவியப் போட்டியில், இவர் பயிற்சி தந்த பார்வையற்ற மாணவன் ஒருவன் முதற் பரிசைத் தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

கதை, கட்டுரை, நடிப்பு என் நடனத்தில் கூடப் பயிற்சி உள்ளவர் நடராஜன். அவர் மேலும் வளர்ந்திட நாமும் வாழ்த்துவோம்!

## மடவை மீன்

உப்பங்கழிகளில் காணப்படும் மீன்களில் தரத்தால் இரண்டாம் இடம் பிடிப்பது மடவை மீனாகும். இங்கு உள்ள மீன்களில் அதிக அளவில் காணப்படும் மீன் இனமும் இதுவே ஆகும். அதிக வெப்பத்தையும், நீரின் மாறுபட்ட வெவ்வேறு உப்புத் திறன்களையும் தாங்கி நுண்ணுயிர் மிதவைகளையும் மக்கிய பொருட்களையும் உண்ணும் மீன் என்பதால் இது முக்கியமானது; உணவுக்கும் சிறந்தது. வளர்ப்புக் கண் கொண்டு பார்த்தால் பால் கெண்டைக்கு அடுத்த சிறப்பைப் பெறும் உப்பங்கழி மீன் மடவை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை முகில் (Mugil) என்ற அறிவியல் பெயரால் அழைப்பர். மொத்தம் பத்து இனங்களில் (genera) அடங்கும் மடவை மீன்களில், ஏறத்தாழ 281 உள்ளினங்கள் (species) உண்டெனச் சொல்வர். இருப்பினும் இவற்றுள் உண்மையானதோற்றவேற்றுமைகளைக் கொண்ட மீன்களைப் பார்த்தால் அவற்றுள் அடங்குபவை 77 உள்ளினங்களே என டாக்டர் தாம்ஸன் கூறுகின்றார். மடவை மீன்களைப்பற்றி 1972-ம் ஆண்டு முதல் 1973 வரை ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இம்மீன் இனத்தின் முக்கியத்துவத்தை இதன் மூலமும் அறியலாம்.



# வேகமாய் வளரும் வட்டாரங்கள்

## தருமபுரி மாவட்டத்தில் ஐந்து நாட்கள்:

இந்தியாவை அதன் ஒருசில
நகரங்களில் காணமுடியாது;
அதன் ஏழு இலட்சம்
கிராமங்களில்தான்
காணமுடியும்—என்றார்
காந்தியடிகள்.
அவர் கனவை நனவாக்க
தமிழக அரசு
பல்வேறு திட்டங்களைச்
செயற்படுத்தி வருகிறது.
அண்மையில்
தருமபுரி மாவட்டம்
சென்றபோது பார்த்த
வளர்ச்சிப் பணிகளின்
தொகுப்பே இது...

எழுதியவர்
**பி. வி. கிரி.**

தளி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள பென்னங்கூர் ஆதி திராவிடர் காலனிக்குச் செல்கிறோம்.

மற்ற ஒன்றியப் பகுதியில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் வீடுகளுக்கும், இங்குக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கும் ஒரு வித்தியாசம் இருப்பதைப் பார்க்க முடிந்தது.

பென்னங்கூர் கிராமத்தில் மாதிரிக்கு இரண்டு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடச் சுவர்களுக்கு வஜ்ஜிரப் பூச்சு ஒரு புதுமையாகும். இது பற்றிய விவரங்களை ஒன்றிய ஆணையாளர் கூறத் தெரிந்து கொள்கிறோம்.

பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கழகம் ஒரு எந்திரத்திற்கு வடிவமைப்புச் செய்துள்

..து. இதனால் எளிதாகவும் நல்ல தரத்திலும் சூளையில் வேக வைக்கப் படாத நாட்டுப்புறச் செங்கற்களைத் தயாரிக்க முடிகிறது. இந்த எந்திரத்தைப் பயன்படுத்தி, இந்தச் செங்கற்களுடன் இரண்டு வீடுகளைக் கட்டுவதன் சாத்தியக்கூறு பற்றி பரிசோதனை நடைபெற்று வருகிறது. பென்னங்கூர் கிராமத்தின் வட்டாரத்தில் வீட்டு மனைகளுள்ள இரண்டு ஆதிதிராவிடர்களுக்கு இவ்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இப்பொழுது அவர்கள் மண் சுவர்கள்கூட இல்லாத இரண்டு குடிசைகளில் வசித்து வருகிறார்கள். 10 × 6 அடி அளவில் இந்த வீடுகள் அமையும்.

வேறு ஆதிதிராவிடர்கள் குடியிருப்புப்போன்று இந்த வீடுகளின் வடிவமைப்பும் உள்ளது. அதே செலவும் ஆகும்.

கையினால் செய்யப்படுவதற்குப் பதில் இந்தப் பச்சை வெட்டுச் செங்கற்கள் செய்யப்படுகின்றன. இதற்குச் சிவந்த மண்ணும் (செம்மண்ணும்) சிறிது நீரும்தான் தேவை. இத்திட்டத்தின் கீழ் 6 தொழிலாளர்களே வேலை செய்து வந்தனர். நாள் தோறும் 500 செங்கற்கள் உற்பத்தியாயின. ஒவ்வொரு செங்கல்லும் 12''×6''×4" அங்குல அளவும் 9 கிலோகிராம் எடையும் உள்ளது. செங்கற்கள் வழவழப்பாகவும் இருக்கின்றன. மேற்புறச் சுவர்களைக் கட்ட இது உதவுகிறது.

இந்த எந்திரத்தை இயக்குவது எளிது. இது நீரியல் அழுத்தமுறையில் இயங்குகிறது. இதன் விலை ரூ. 2,500. பெங்களூர் இந்திய விஞ்ஞானக் கழகத்திலிருந்து இது இரவலாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டப்பட்ட வீட்டுச் சுவர்களுக்கு மூன்று பூச்சுக்கள் பூச வேண்டும்.

1. 3 சதவீத மாவுப் பண்டத்தினாலான கஞ்சிப் பசைப் பூச்சு (நீருடன் மைதாவும் ஒரு சதவீத மயில் துத்தமும் கலந்தது).

2. நீருடன் வச்சிரமும், மயில் துத்தமும் (15 சதவீத வச்சிரமும், 5 சதவீத மயில் துத்தமும்) சேர்ந்த முதல் பூச்சு.

3. நீருடன் வச்சிரமும், மயில் துத்தமும் (15 சதவீத வச்சிரமும், 5 சதவீத மயில்துத்தமும்) சேர்ந்த இரண்டாவது பூச்சு.

கரையான்களைத் தடுப்பதற்கு மயில் துத்தம் சேர்க்கப்படுகிறது.



**பென்னங்கூர் ஆதிதிராவிடர்க்கான வீடுகள்**

மழையினால் சுவர்களுககு அரிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கும், இறுகப் பிணைப்பதற்கும் வச்சிரப் பூச்சு பயன்படுகிறது. நல்ல தோற்றமளிப்பதற்குச் சுண்ணாம்பு அடிக்கப்படுகிறது.

முச்சந்திரம் என்னும் இடத்தில் 20 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகளுக்கு வஜ்ஜிரப் பூச்சு இல்லை. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன.

சுண்ணாம்பு-செம்மண்-மணல் கலவை, சுவர்களுக்குப் பூசப்படுகிறது. இவ்வாறு பூசப்படுவது இதுவே முதல் தடவை. மூன்று தெருக்களில் கட்டப்பட்டு வரும் இந்தக் காலனி முடியுந்தறுவாயில் உள்ளது. வீடுகள் ஒவ்வொன்றும் வசதியாக உள்ளன. இலவசமாக வழங்கப்படும் வீடு என்றாலும், கண்ணும் கருத்துமாகக் கவனிக்கப்படுகிறது. ரூ. 12,000 செலவில் ஒரு பொது புதுக் கிணறு முடிகின்ற நிலையில் உள்ளது. சாலை வசதி, குடிதண்ணீர், குழந்தைகள் காப்பகம், துவக்கப்பள்ளி, வானொலி, நூலகம்-இப்படி எல்லா வசதிகளும் இங்கே குடி வருகின்ற ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கப் போகிறது - கொடுத்து வைத்தவர்கள்!



**ஆணையாளர்**
**திரு எம். பாலசுப்பிரமணியம்**

இன்னொரு சிறப்பு - இந்த ஆதிதிராவிடர்காலனி எங்கேயோ ஒதுக்குப்புறத்தில் தனியாக இல்லை. இந்துக்கள் வாழ்கின்ற வீடுகளுக்குப் பக்கத்திலேயே இருக்கின்றன.

இந்த வீடுகளுக்குக் குடி வரப்பாகிறவர்கள், முன்பு குடி இருந்த குடிசைகளை, பாழடைந்த வீடுகளைப் பார்த்துப் பரிதாபப்படுகிறோம். தகுதியானவர்களுக்குத் தகுந்த வீடு கிடைக்கிறது என மன நிறைவு பெறுகிறோம்.

பொதுவாக, தளி ஊராட்சி ஒன்றியப் பகுதி கரடுமுரடான பகுதிகளாகும். இது படிப்படியாக வளம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ், டி. கொத்தனூரில் காய்கறி, கனிவகைத் தோட்டம் ஒன்று ஏழு ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இது குழந்தைகள் காப்பகங்களுக்குப் பயன் தருவது. தோட்டத்தில்,தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 20,000 செலவில் பெரிய புதிய கிணறு ஒன்று தோண்டப்பட்டு, அதில் 20 ஆழம் வரை தண்ணீர் உள்ளது.

திம்மசந்திரம்-ஒரு குக்கிராமம் தான். முன்பெல்லாம்சாலையிலே நடக்கவே முடியாதாம். அவ்வளவு கரடு முரடு. அது மட்டுமன்று, மழைத் தண்ணீர் குட்டையாகத் தேங்கி சேறும் சகதி



**கவின்மிகு காய்கறித் தோட்டம்**

யாய்க் காட்சியளிக்குமாம். ஆனால், இன்று நிலைமையே வேறு. போக்கு வர சாலை வசதிகள், மழைத் தண்ணீர் தேங்காமல் சாலை இருபுறமும் கால்வாய்.ரூ. 10,000 செலவில், 140 மீட்டர் நீளத்துக்கு இந்தக் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளது. இப்போது இந்தப் பகுதியில் புதிய துவக்கப்பள்ளி ஒன்றும், குழந்தைகள் காப்பகம் ஒன்றும் உள்ளது.

தளி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. எம். பாலசுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்கிறோம்.அவர் கூறுகிறார்:

''இவ்வொன்றியத்திலுள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் உள்ளன. சிறப்புக் கழிவிடம், குழந்தைகள் காப்பகங்கள், தாய்சேய் நல விடுதிகள், கூபா புல் பயிரிடுதல், சிறுசேமிப்பு, குடும்ப நலம், சுய வேலைவாய்ப்பு எல்லாவற்றிலும் எங்கள் ஒன்றியம் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.''

## பென்னாகரம்

பென்னாகரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்—

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக மண் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. 86 கி. மீ. தூரத்துக்குக் கற்சாலை போடப்பட்டிருக்கிறது. குட்டைகள், ஊருணிகள், ஓடைகள் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன.

**கால்நடைகளுக்கான தண்ணீர்க் குட்டை (பென்னாகரம்)**



ஆதிதிராவிடர்க்கான 25 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. நல்ல வசதியுள்ள ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 8,300. இது செங்கலாலும் சிமெண்ட்டாலும் ஆனது. மயானச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டு 12. கி. மீ. தூரத்துக்கு ஜல்லி போடப்பட்டு வருகிறது. 8 கி. மீ. தூரத்துக்குச் செடிகள் நடப்பட்டுள்ளன. அதாவது வீட்டுக்கு ஒரு மரம் என்ற திட்டத்தில் வீதிவாரியாக தென்னை, முருங்கை, புங்கை என இது வரை 4,000 மரங்கள் நடப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கான தண்ணீர்க் குட்டைகள் 26 அமைக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்து 16 கி. மீ. தூரத்திலுள்ள, சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லில் ரூ. 7500 செலவில் பரிசில் துறை அமைக்கப்பட்டுள்ளது.

## தருமபுரி

தருமபுரிக்கு வருகிறோம்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், உழைப்புக்கு உணவுத் திட்டம் போன்ற திட்டங்களால் தமிழகக் கிராமங்கள் தண்ணொளி பெற்று வருகின்றன.

ஊராட்சி ஒன்றியங்களின் ஓயாத உழைப்பினால், ஊர்ப்புறங்கள் எல்லாம் ஓங்கி வளர்ந்து வருகின்றன என்றால் அது மிகையல்ல.

தருமபுரி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் 25-ல் 15 முடிந்து விட்டன. 10 வீடுகள் முடியுந்தறுவாயில் உள்ளன. ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ. 5,000. இதுவரை 11 பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 4 குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன. மரம் நடும் திட்டத்தில் இது வரை 5,000 செடிகள் நடப்பட்டுள்ளன. கிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் மட்டும் 750 புளியங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கான தண்ணீர்க் குட்டை ஒன்றும் உள்ளது.

கடந்த ஆண்டு 1981-82ல் 120 பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்குத் தையல் மிஷின்கள் வழங்கப்பட உள்ளன. இதேபோல ரேடியோ மெக்கானிக், எலெக்ட்ரீஷியன், டிராக்டர் ரிப்பேர், பேக்கரி; அச்சகம், பாய்முடைதல் போன்ற தொழில்களுக்கும் பயிற்சி தரப்பட்டு, பயிற்சிக் காலத்தில் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்பட்டு, சுயமாகத் தொழில் தொடங்க வங்கி மூலம் கடன் தரப்படுகிறது.



ஆணையாளர்

திரு து. சுப்பராயன்

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு து. சுப்பராயன் அவர்களைச் சந்தித்துக் கேட்டதில் குறிப்பிட்டதாவது:

## சூளகிரி ஊராட்சி ஒன்றிய தன்னிறைவுத் திட்டப்பணிகள்

சூளகிரி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.33 லட்சம் செலவில் 33 பள்ளிக்கூட கட்டிடங்களும், 3 தாய்சேய் நல விடுதி கட்டிடங்களும் 3 கிராமிய மருந்தகக் கட்டிடங்களும், 100 சிறு பாலங்களும் கட்டிமுடிக்கப்பட்டன.

''இங்குள்ள வத்தல் மலையில் 4 குழந்தைகள் காப்பகங்களும், சமூகநலத் துறை மூலம் 9 காப்பகங்களும் உள்ளன. 81-82-ல் 32 கி. மீ. தூரத்துக்குப் புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. 112 கிராமப்புறச் சாலைகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. 45 பாசன ஆதாரங்கள் பழுது பார்க்கப்பட்டும், 18 புதிய கிணறுகள் வெட்டப்பட்டும் உள்ளன. 100 மீட்டர் தூரத்துக்குக் கழிவுநீர கற்றுக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 81-82-ல் 56 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பான்மையான கிணறுகள் ஆதிதிராவிடர் காலனிகளில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.''

தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை ஏற்பாடு செய்திருந்த இந்த ஐந்து நாள் பயணத்தில், ஊர்ப்புறங்கள் வேகமாய் வளர்ந்து வருவதை நேரில் காண முடிந்தது. அரசு முனைப்புடன் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில், பல ஆக்கப் பணிகளை செயற்படுத்திச் செழிப்பான கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

குள்ளனூரிலுள்ள ஆதிதிராவிடர் வீடுகள்






# பாஞ்சைப் பகுதியில் ஓர் உணர்ச்சிப் பெருவிழா!

இரெ. மங்காலிங்கம்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்.

''மண்ணின்பங்களை வேண்டி சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரெண்டும் விற்றுசுதந்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ?''

என்று கவிபாடி புரட்சிக்கனலை மூட்டினார் பாரதியார்.

அவர் பிறந்த மண்ணில்—எழுச்சியின் சின்னமாகத் திகழ்ந்து இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலை முழக்கம் எழுப்பினான், வீரபாண்டிய கட்டபொம்மன்.

மாற்றாருக்குத் தலைவணங்காத மாவீரனாக - போர் மறவனாகத் திகழ்ந்த கட்டபொம்மனின் பெருமையை உரைக்கவும் அவனது வீரத்தையும் தியாகத்தையும் நினைவு கூர்ந்து போற்றவும் தமிழ்நாடு அரசின் சார்பில்- இரண்டுநாள் விழா- பாஞ்சாலங்குறிச்சியில் நடைபெற்றது.

மே திங்கள் 14-ஆம் நாள் மாலை - கலைமாமணி திரு. சின்ன சுப்பையாவின் நாயன இசையோடு விழா தொடங்கியது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை துணை ஆணையர் திரு. வ. சௌ. கோதண்டபாணி விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

விழாவிற்குத் தலைமையேற்ற திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. நிர்மல்சிங் ஹீரா ''கட்டபொம்மனின் தியாகத்தினையும், தொண்டினையும் விவரிக்க வார்த்தைகளே இல்லை' என்றுரைத்தார்.

அடுத்துப்பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். கே. பெருமாள், பாஞ்சாலங்குறிச்சியின் வளர்ச்சிக்கும் அந்தப் பகுதிவாழ் மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கும் அரசு செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை விவரித்தார்.

விழாவில் பங்கேற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. சுப்பு, 'ஜாதி மத இன, கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் கூடி நின்று உணர்வுபூர்வமாக எடுக்கின்ற விழா இது' என்று குறிப்பிட்டார். கடந்த ஆண்டிலிருந்து, இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வரும் அரசுக்கும், முதல்வருக்கும், அறநிலையத் துறை அமைச்சருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

சிறப்புக் கூட்டத்திற்குப் பின் வழக்காடு மன்றம் நிகழ்ந்தது. 'பாஞ்சாலங்குறிச்சியின்வீழ்ச்சிக்கு புறப்பகையைவிட அகப்பகையே காரணம் எனக் கூறுவது குற்றம்' என்று புலவர் திரு வீ. செந்தில் நாயகம் வழக்குத் தொடுத்தார். அதனைப் புலவர் திரு. க. ஆ. இராமசாமி மறுத்தார். நடுவராக இருந்து, இருவரும் எடுத்து வைத்த வாதங்களைக் கேட்ட புலவர் திரு. பழநி கிருஷ்ணன், 'பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்கு அகப்பகையை விடப் புறப்பகையே காரணம் அதிகம்'' என்று தீர்ப்பளித்தார்.

வழக்காடு மன்றத்தை அடுத்து சுவையான பட்டிமன்றம் நடைபெற்றது. ''பாஞ்சாலங்குறிச்சிப் போர்-உணர்வு பூர்வமானது'' என்று பேராசிரியர் சிவசுப்பிரமணியம் தலைமையில் திரு. காசி விசுவநாதன், திரு. செல்வநாதன் ஆகியோர் வாதிட்டனர். இல்லை 'அது உணர்ச்சி பூர்வமானது' என்று திரு. கே. பி. ஆர்.

ஆர். சித்தார்த்தன் தலைமையில் திரு. இராமச்சந்திரன், திரு. இரா. தங்கமலை ஆகியோர் வாதங்களை எடுத்து வைத்தனர்.

பட்டிமன்றத்திற்குத் தலைமையேற்ற பேராசிரியர் தோத்தாத்திரி, 'கட்டபொம்மன் நடத்திய போர் உணர்ச்சி பூர்வமானது' என்றும் ஊமைதுரை நடத்திய போர் 'உணர்வு பூர்வமானது' என்றும் தீர்ப்பளித்தார்.

இறுதியில் மதுரை திரு எம். எஸ். பரமசிவம் குழுவினரின் 'வீரபாண்டியக் கட்டபொம்மன்' நாடகம் நடைபெற்றது. சுற்றுலா அலுவலர் திரு. இரா. சதாசிவம் நன்றி கூற விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

*15-5-1982* அன்று மாலை, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகக் கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு - வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின.

கட்டபொம்மனின் வீரத்தையும் விவேகத்தையும் சிறப்பினையும் எடுத்துரைக்கும் வகையில் கவியரங்கம் நடைபெற்றது.

கவியரங்கத்திற்குத் தலைமை ஏற்ற அறவாழி, திரு. வா. தி. சுப்பையா-

'தெலுங்கினது வாரிசாகத் தோன்றி தமிழில் நலுங்கு பாடி நாடாண்ட சூரன் —
குலுங்கவைத்தான் கும்பினியின் ஆட்சியையே. பாஞ்சால கட்டபொம்மு நம்மின் முதலுரிமை வீரன்''

என்றுரைத்தார்.

புலவர் கமலப்பிரியன் இளங்கவிஞர் பாரதிமாறன், கவிஞர் ஸ்ரீதரன் ஆகியோர் கவியரங்கில் பங்கேற்றனர். கட்டபொம்மனின் சிறப்பு..''தன்மானத்தால்'' ''வீரத்தால்'', ''விவேகத்தால்'' ''பக்தியால்'' - என்று பலபட உரைத்து, பார்போற்றும் பாஞ்சையின் பேர் நிலைக்கச் செய்த, கட்டபொம்மனுக்குப் புகழாரம் சூட்டி மகிழ்ந்தனர், புலவர் பெருமக்கள்.

அதன்பின், விழா நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்று, அமைந்த இறுதி நிகழ்ச்சி தொடங்கியது.

மாவட்ட வருவாய் அதிகாரி திரு இ ா. இரத்தினசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்து அரியதோர் உரையினை ஆற்றினார்கள்.

வீரபாண்டிய கட்ட பொம்மனின் வீரவரலாற்றையும்-அன்னியர் ஆதிக்கத்திற்கு எதிராக அவன் போர்முரசு கொட்டிய சரித்திரத்தையும் சிலம்புச் செல்வர் தொகுத்துரைத்தார். அதன் விவரம் வருமாறு:

''வீரபாண்டிய கட்ட பொம்மனின் விழாவில் கலந்து கொள்கிறேன் என்றால் அதன் பின்னே ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றது. வீரபாண்டியக்கட்டபொம்மன் படைத்த வரலாறு அல்ல; வீரபாண்டியக் கட்ட பொம்மனைப் பற்றி நான் படைத்த வரலாறு அது.

''வீரபாண்டியக் கட்டபொம்மன் படைத்த வரலாறு - தமிழினத்தின் புகழை தமிழ் நாட்டின் பெருமையை இந்தியாவின் முன்னே - உலகின் கண் முன்னே தலை நிமிரச் செய்ததாகும்.

''சுதந்திரப் போரைத் துவக்கி வைத்த முதல்வன் என்ற பேர் வீரபாண்டியனைத் தவிர இந்தியாவில் வேறு யாருக்கும் இருக்க முடியாது என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நான் எழுதிக் காட்டினேன். அது நான்படைத்த சரித்திரம்.

''ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து ஜான்சிராணி, ராணே சாகிப் ஆகியோர் போராடியது 1857-க்குப் பின்னர்தான். ஆனால் கட்டபொம்மன் போராடியது 1792-ல்—

'கட்ட பொம்மன் போர் நடத்திய பின் -60 ஆண்டுகள் கழித்துதான் சிப்பாய் புரட்சியே வெடித்தது.

'வீரபாண்டியன் தூக்கு மேடையை நோக்கி நடக்கும் போதும் வீரத்தோடு நடந்தான்.



தனது எதிரிகளையும் தனக்குத் துரோகம் இழைத்தவர்களையும் ஏளனத்தோடு பார்த்துச் சிரித்தான் - என்று ஆங்கில அதிகாரிகளே குறிப்புகள் எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள்.

''பலரைத் தூக்கு மேடைக்கு அனுப்பி, ஆயுள் கைதிகளாக அந்தமான் தீவுக்கு அனுப்பி விட்டு பெற்றது தான் இந்தச் சுதந்திரம்.

''இந்த சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டியது நமது கடமையாகும்;'

தொடக்கஉரையைத் தொடர்ந்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. ஆர். கே. பெருமாள், திரு. எம். அப்பாதுரை ஆகியோர் பேசினார்கள். அதன் பின் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். இல்லை - கட்டபொம்மனை, ஊமைத் துரையை வீரத் தளபதி வெள்ளையத் தேவனை - பாஞ்சாலங்குறிச்சி பெரும் போரை-, படம் பிடித்துக் காட்டும் வகையில் உணர்ச்சிப் பேருரை நிகழ்த்தினார்கள்.

''கட்ட பொம்மனின் வரலாற்றில் காளிமுத்து என்று ஒரு பாத்திரம் உண்டு. கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறியபோது - காளிமுத்து நல்லதம்பி என்ற இருவர் அவனுக்குப் பாதுகாப்பு தந்தார்கள். அவனது பரிவாரங்களைக் காத்து நின்றார்களாம். கட்டபொம்மன்கூட நான் மீண்டும் கோட்டையைக் கைப்பற்றினால் உங்களை அழைத்து செய்ய வேண்டிய சிறப்புகளைச் செய்வேன் என்று அவர்களிடம் சொன்னதாகக் கட்டபொம்மன் வரலாற்றில் ஒரு குறிப்பு உண்டு. அந்தக் காளிமுத்துவுக்கு அந்தச் சிறப்புக் கிடைத்ததோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் இந்தக் காளிமுத்துக்கு அந்தச் சிறப்பு கிடைத்திருக்கிறது என்ற வகையில் இந்த விழாவில் கலந்து கொள்கிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்'' என்ற பீடிகையோடு அமைச்சர் அவர்கள் தனது பேச்சைத் துவக்கினார்கள்.

பழந் தமிழகத்தின் வீரம், சிறப்பு, ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் மனப்பான்மை ஆகியவற்றை எடுத்துரைத்த மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''பாஞ்சைப் பதியில் நிகழ்ந்த அந்த வரலாறு வீரஞ்செறிந்த வரலாறு - ஜாதிய உணர்வுகளை எல்லாம் கடந்து ஒன்றுபட்டு நின்று அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்முரசு கொட்டிய வரலாறு ஆகும்.

''வீரம் செறிந்த தமிழர்களின் வரலாறு பிற்காலத்தில் எப்படி எல்லாம குறைந்தது எந்த அளவுக்கு மாறியது என்பதனை எண்ணிப் பார்த்து வேதனைப் படுகிறோம். ஆனால் வீரஞ்செறிந்த தமிழகத்தினுடைய கடைசிச் சின்னமாக நின்று போர்க்களத்தில் அன்னியர்களை எதிர்த்தவன் வீரபாண்டிய கட்டபொம்மன் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

'வீரபாண்டியக் கட்டபொம்மன் ஏதோ முரட்டுத்தனமான வீரனாக அல்ல; விவேகமுள்ள வீரனாக இருந்தான். நெஞ்சுரமிக்க வீரனாக, நேர்மைத் திறனுள்ள வீரனாக இருந்தான்.

'கட்டபொம்மனின் வரலாறு ஒரு கட்டத்தில் முடிந்தபோது இந்தப் பாஞ்சாலங்குறிச்சியின் வீரவரலாறு முடிந்து விடவில்லை அதை நினைக்கும்போது தான் நாம் ஆச்சரியப்படுகிறோம்.

'கட்டபொம்மன் கயத்தாறு புளிய மரத்தில் தூக்கிலிடப்பட்ட பின், அவனால் வளர்க்கப்பட்டவர்கள் ஊமைத் துரையைப் போன்றவர்கள் எப்படிப்பட்ட வீரம் செறிந்த வரலாற்றை இம்மண்ணில் தொடர்ந்து நிகழ்த்திக் காட்டினார்கள் என்பதை நினைக்கும்போது நெஞ்சு நெக்குறுகிறது. உடல் புல்லரிக்கிறது; உள்ளம் பொங்குமாங்கடலாக மாறுகிறது. கண்கள் குளமாகின்றன.

'ஆங்கிலம் ஆதிக்கம் வேரூன்றிக் கொண்டிருந்த நேரம். அப்படிப்பட்ட நேரத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு யாருக்கும் வராத துணிச்சல் இந்த மண்ணை அரசாண்ட மாவீரர்களுக்கு ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

'இந்த மண்ணின் வீரம் மங்காது; மறையாது. இங்கே இருக்கின்ற மண்ணைத் தண்ணீரில் கரைத்து குழந்தைக்குக் கொடுத்தால் அந்தக் குழந்தை வீரக் குழந்தையாக இருக்கும். அடைகாக்கும் கோழிக்கும் பக்கத்தில் இந்த மண்ணைத் தூவினால் பிறக்கின்ற குஞ்சு வீரக் குஞ்சாக இருக்கும் என்றெல்லாம் நம்பிக்கை இருக்கின்றது.

'வீரம் என்பது எதிரியைத் தாக்கி தகர்த்து தரை மட்டமாக்குவது; தலைகளைக் கொய்வது மட்டுமல்ல, இந்தச் சூழ்நிலையில் நியாயத்திற்காகப் போராடுகின்ற நெஞ்சுறுதியைப் பெற வேண்டும் என்பதாகும்.

''அந்த நெஞ்சுறுதிக்கு அடையாளமாக, இலக்கணமாகத்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன் ஊமைத்துரை போன்றவர்கள் வரலாற்றில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.'

செய்தி – மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் விழாவில் பங்கேற்ற பெருமக்களுக்கும், விழா வெற்றியுடன் நடந்தேற ஒத்துழைத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

அடுத்து நிகழ்ந்த 'வீரபாண்டிய கட்டபொம்மன்'' நாடகத்தோடு இரண்டு நாட்கள் சிறப்புடன் நடைபெற்ற, இந்த இனிய விழா நிறைவு பெற்றது. ஆனால், இந்த விழா உருவாக்கிய எழுச்சியும், உணர்ச்சியும் பாஞ்சைப் பதியில் நெடுநாட்கள் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.



# பார்த்தோம்! படித்தோம்!

**உல்லாசப் பயணம்**

1-5-82 'தமிழரசு' இதழில் ''உல்லாசப் பயணிகளே வருக' என்ற தலைப்பில் கவிஞர் அ. மருதகாசி எழுதிய கவிதை சென்னை, மாமல்லபுரம், வேடந்தாங்கல், சிதம்பரம், பூம்புகார், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, குற்றாலம், உதகை போன்ற குறிஞ்சி நகரங்களை எல்லாம் நேரடியாக பார்த்தது போல் இருந்தது.

-சுப. சண்முகம்
காரைக்குடி-1.

**மனங்குளிருகிறது**

தமிழரசின் - எழில்மிகு திருச்சி மலைக்கோட்டையின் அழகான அட்டைப் படம் அம்சமாக இருந்தது. சுற்றுலாத் துறை அமைச்சரின் ''சுற்றுலா வளர்ப்போம்'' கட்டுரை சுற்றுலா செல்லும் எனக்குமிகப் பயனுள்ளதாக இருந்தது. 'தமிழ் வளர்ச்சிப் பணியில் சில படிக்கட்டுகள்' மனங்குளிர உளமார பாராட்டக் கூடிய ஒன்றாகும். 'மாணவர் பக்கம்'' சிறப்பாகவும் - சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தது. நன்றி!

-ச. புகழேந்தி
திருவையாறு.



தண்ணீரில் நீண்டகாலம் அப்படியே கிடந்து ஊறிப் போன காட்டு மரம் ஒன்றின் வேரானது அசல் பாம்பு போலவே தோற்றம் அளிக்கின்ற அற்புதக் காட்சி மதுரையில் நடைபெற்ற அரசு சித்திரைப் பொருட்காட்சி (1982) வனத்துறை அரங்கில் இடம் பெற்றது.

**மகிழ்ச்சி**

''காரைக்குடியில் பாரதியார்'' என்ற பழைய நினைவுகளை மீண்டும் தமிழரசு இதழில் பிரசுரித்தமைக்காக பாரதி அன்பர்கள் சார்பில் எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-அரு. பாரதிவேலன்
கோயம்புத்தூர்

''மாணவர் பக்கம்'' அருமையாக உள்ளது. அதில் இன்னும் நிறைய துணுக்குச் செய்திகளை வெளியிடுங்கள்

-ஜி. திருமலை,
சென்னை-40.

**அறிவுக்கு முதன்மை**

அறிவுக்கு முதன்மை அளிக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை இளைய தலைமுறையினருக்கு நல்லறிவு புகட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது.

-ஆர். டி. ஜெயராமன்
ரேக்கட ஹள்ளி.

**அடிக்கடி வேண்டும்**

பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையை அழகுற எடுத்து வெளியிட்டிருந்தது 'தமிழரசு'. இதுபோன்று அறிவுபுகட்டும் உரைகளை அடிக்கடி வெளியிடுங்கள்.

-தில்லை சிதம்பரம்
திருச்சிராப்பள்ளி.

**பாராட்டுக்குரிய கட்டுரைகள்**

முதுபுகழ்த் திருச்சியில் முப்பெரும் விழாக்கள் கட்டுரையும் திரைப்படப் பயிற்சி நிலைய ஆண்டு விழா பற்றிய கட்டுரையும் அருமையான நேர்முக வர்ணனை போல அந்த விழாக்களைப் படம் பிடித்துக் காட்டியது. எழுதியவர்களுக்கு என்பாராட்டு.

-வீ. அருமைநாதன்
சேலம்.

**நன்றி**

ஊனமுற்றோருக்கு அரசு செய்து வரும் உதவிகளை 'தமிழரசு' மூலம் அடிக்கடி படித்துவரும் நாங்கள் 16-5-82 இதழ் மூலம் முழுமையாக அறிந்து கொண்டோம். நன்றி தமிழரசுக்கு!

-இரா. அண்ணாதாசன்
திருநெல்வேலி.



# தமிழகத்திற்குப் பெருமை!

தமிழ்நாடு அரசுக் கலைஞரான செல்வி கலைமாமணி அலர்மேல் வள்ளி இதுவரை எந்த இந்திய நாட்டியக் கலைஞரும் சாதித்திராத சாதனையைச் செய்துள்ளார்.

1966ஆம் ஆண்டில் அலர்மேல் வள்ளியின் அரங்கேற்றம் நிகழ்ந்தது. 1967ல் வெளிநாட்டுக்கு முதன் முறையாகச் சென்ற அலர்மேல் வள்ளி உலக நாடுகளில் இதுவரை 17 முறை சுற்றுப்பயணம் செய்து நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

அண்மையில் பத்திரிகையாளர்களை அலர்மேல் வள்ளி சென்னையில் சந்தித்தார். அந்நிகழ்ச்சியில் பங்கேற்ற செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள், பரத நாட்டியக் கலைக்குப் பெருமை தேடித் தரும் வகையில் அரசுக் கலைஞர் கலைமாமணி அலர்மேல் வள்ளி ஆற்றியுள்ள பெருமைமிகு நிகழ்ச்சியினை விளக்கினார்.

*அத்தகைய நிகழ்ச்சி என்ன?*

ஏப்ரல் 2ஆந் தேதி லண்டனில் நடைபெறும் இந்திய விழாவில் இவருடைய பரதநாட்டியத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; மார்ச் மாதத்தில் ரோமிலும் வியன்னாவிலும் இவருடைய நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அங்கிருக்கும் பொழுது லண்டனில் தொடர்ச்சியாக பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக் கொள்ள வேண்டும். பொது மக்கள் மிக அதிகமாக பரதநாட்டிய நிகழ்ச்சிகளைக் காண விரும்புகிறார்கள் என்று லண்டனிலிருந்து தொடர்ந்து டிரங்கால்கள் வந்தன. அதே சமயத்தில் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள்! போன் மூலமாக பாராட்டுக்கள். இதற்குக் காரணம்—

பி. பி. சி. யின் புகழ் பெற்ற தயாரிப்பாளர் Michael Macintyre. அலர்மேல் வள்ளியைவைத்து பரதநாட்டியம் பற்றிய ஒரு படம் தயாரித்தார். கடந்த டிசம்பர் மாதம் சென்னை வந்திருந்த அவர் இந்தியப் பண்பாட்டினை விளக்கும் வகையில் அமைத்திருந்த அப்படத்தில் அலர்மேல் வள்ளி பரதநாட்டியம் ஆடியதுடன் அதைப்பற்றி விளக்க உரையும் அளித்திருந்தார். இதை 'இந்திய விழா' லண்டனில் நடைபெறும் சமயத்தில் காட்டினார்கள். இதனால்தான் அவர் நாட்டியத்தைப் பார்த்திட பெரும் கூட்டம்.

அதனால் ஆறு நாட்கள் தொடர்ச்சியாக காமன்வெல்த் இன்ஸ்டியூட் தியேட்டரில் அலர்மேல்வள்ளியின் நாட்டிய நிகழ்ச்சிகள். இதுவரை இந்தியாவிலிருந்து சென்ற யாருக்கும் இதுமாதிரி வாய்ப்புக் கிடைத்ததிலலை. ஒவ்வொரு நாளும் 'ஹவுஸ்புல்' நிகழ்ச்சிகள்.

இதுவரை எந்தநாட்டிய நிகழ்ச்சிக்கும் இல்லாத கூட்டம் கூடியது, காமன்வெல்த் இன்ஸ்டியூட் தியேட்டர் நிர்வாகிகளையே வியப்பில் ஆழ்த்தியது, இங்கிலாந்து நாட்டில் பரதநாட்டியத்தின் மிக மிக ஆழமான ஈடுபாட்டை உருவாக்கியுள்ளது, அலர்மேல் வள்ளியின் பரதநாட்டிய நிகழ்ச்சி.

தென்கிழக்கு ஆசிய நாடுகள், சோவியத் நாடு, மேற்கு-கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார் அலர்மேல்வள்ளி.

வியன்னாவில் புகழ் பெற்ற ஆப்ரா ஹவுஸில் அலர்மேல் வள்ளியின் பரதநாட்டிய நிகழ்ச்சி அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கிறது. அங்கு அந்நிகழ்ச்சி நடைபெற்றால் முதன் முதலாக அங்கு நடைபெறும் இந்தியக் கலைஞர் ஒருவரின் பரத நாட்டிய நிகழ்ச்சியாக அமையும்.

தன்னுடைய பரதநாட்டியத்தால் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் ஏன் இந்தியக் கலைஞர்களுக்கும்புகழ் சேர்க்கும் அலர்மேல் வள்ளி, இந்தோனேஷிய நாட்டியக் கலைக்கும் பரதத்துக்கும் உள்ள ஒப்புமைகளையும் தொடர்புகளையும், விளக்கவிருக்கும் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார்.

பி. பி. சி.யின் புகழ் பெற்ற தயாரிப்பாளர் எடுக்கவிருக்கும் அந்தப் படத்தினாலும் பரதக் கலைக்கு மேலும் புகழ் சேர்க்க அலர்மேல் வள்ளியை வாழ்த்துவோம்!



—மாமூலன்

# பல்கலைச் செல்வர் பண்டிதமணியார்

டாக்டர் மெ. சுந்தரம்



தமிழன்னை ஈன்றெடுத்த தவ மைந்தர்களுள் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரும் ஒருவர். இவ் இருபதாம் நூற்றாண்டில் தம் பழுத்த தமிழ்ப் புலமையால் தமிழ் மொழியைப் பல்லாற்றானும் வளர்த்த பெருமை அவருக்கு உண்டு. சிலர் சில துறையில் மட்டுமே வல்லவர்களாய் விளங்குவர். பல்வேறு ஆற்றல்களும் ஒருங்கே பொருந்திய கூட்டுப் புலமையை நாம் பண்டித்மணியிடம் காணலாம். பல பட்டைகள் தீட்டப்பட்ட வைரக்கல்லைப் போல அவர்தம் புலமையும் திறனும் ஒளிவிட்டன. கருவிலே திருவுடைய அம்மேதையின் பலதரப்பட்ட திறனையும் ஓரளவு பகுத்தும் வகுத்தும் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## உரைநடை கைவந்த வல்லாளர்

இருபதாம் நூற்றாண்டினை ஓர் உரைநடைக் காலம் (Age of Prose) எனலாம். பாட்டின் செல்வாக்கு மெல்ல மெல்ல அருகி, எல்லாம் உரைநடையே என்று ஆகிவிட்ட நிலையை இன்றைய நாளில் காண்கிறோம். எனவே, தமிழின் இன்றைய வளர்ச்சியும் மலர்ச்சியும் உரைநடையாலேயே அமைகின்றன என்பது வெளிப்படை.

தமிழ் உரைநடைக்கு வலிவும் பொலிவும் ஊட்டிய தமிழ்ப் பெரும் புலவர்களில் பண்டிதமணிக்குத் தக்கதோர் இடமுண்டு. 'உரைநடைக் கோவை' என்னும் நூல் அவரது உரைநடைத் திறத்தை உலகுக்கு எடுத்துரைக்க வல்லது. அதில் ஒரு பகுதியைக் காண்போம்:

''கண்ணப்பர் ஆறு நாட்கள் இரவு பகல் உணவையும் உறக்கத்தையும் அறவே ஒழித்தார். அருட்குறியாகிய சிவலிங்கத்தைச் சிவபெருமானின் வேறாகக் கருதினாரல்லர். இரவெல்லாம் வேடராலும் விலங்குகளாலும் ஊறுபாடு நேராவண்ணம் பாதுகாத்தலிலும், பகலெல்லாம் இறைவனுக்கு உணவு தேடிக் கொணர்தலிலும் இவர் கருத்துச் சென்றது. தாய், தந்தை, சுற்றம், நட்பு முதலிய பிறப்புத்தொடர்புகளை அறவே மறந்தார். யாவர் எது செய்யினும் எது பேசினும், இவர்க்கு இறையருள் நாட்டமேயன்றிப் பிறிதொன்றில்லை. கரணமெல்லாம் பசுத்துவம் நீங்கிப் பதி கரணமாகத் திகழ்ந்தமையால் இவர்செயல் அனைத்தும் சிவச்செயலாயின.''

பண்டிதமணி எதையும் தெளிவாகவும் திட்ப நுட்பத்தோடும் செலச்சொல்லும் ஆற்றல் பெற்றவர் என்பதை இப்பகுதி காட்டுகின்றதல்லவா?

## நாவீறு படைத்த பாவலர்

பண்டிதமணி உரைநடைத் திறம் கைவரப் பெற்றவர் என்பது எந்த அளவு உண்மையோ, அதே அளவு அவர், நாவீறு படைத்த பாவலர் என்பதும் உண்மையாகும்.

பண்டிதமணி கவி பாடுவதைத் தம் தொழிலாகக் கொண்டவர் அல்லர். ஆனால், உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடும் ஒண்மையர். அவர் எழுதிய வாழ்த்துப் பாடல் கவிகளும் மிகப் பலவாகும். ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலிய பல்வேறு யாப்புகளிலும் விரைந்து பாடும் ஆற்றல் பண்டிதமணியிடம் இருந்தது. அவர் பாடும் அகவற் பாக்கள் சங்க இலக்கியப் பாக்களைப் போன்றே திட்பநுட்பம் துறுமியனவாய் விளங்கின.

காலமும் கருவியும் கண்ணிய
இடனும்
நூலோர் முறையின் நுண்ணிதின்
தேர்ந்து
தொடங்குமெக் கருமமும் மடங்க
லின்றிச்
செவ்விதின் முடிக்கும் எவ்வமில்
திறலினன்;
நாடுநன் னலம்பெற நாடிமற்
றதற்குக்
கல்வியும் அறியும் கவின்பெற
வளர்த்தலே
ஒல்லுவ தெனக்கண்டு ஓங்குதன்
பெயரால்
நல்லிய லறிஞர் நவின்றுபா
ராட்ட
பல்கலைக் கழகம் பாங்குற
நிறுவியோன்'

என வரும் பாடல் வரிகள் செட்டி நாட்டரசை வாழ்த்திப் பாடியனவாகும். இப்பாடலில் உள்ளசொல் வளமும், இழுமென் ஓசையும், ஆற்றொழுக்கான நடையும் சங்கச் சான்றோர்களின் பாட்டையே நமக்கு நினைவூட்டுகின்றன.

## சிறந்த திறனாய்வாளர்

பாட்டின் அழகையும் பொருளையும் நுண்ணிதின் உணர வல்லவர்கள் திறனாய்வாளர்களே. படைக்கும் புலவனைவிட அதன் நயத்தை நுனித்தறியும் திறனாய்வாளர்களே ஒரு வகையில் மேம்பட்டவர்கள் எனலாம்.

பண்டிதமணி பாட்டின்பத்திலே மூழ்கி மூழ்கித் திளைப்பவர்; தாமின்புறுவது உலகு இன்புற வேண்டும் என்று நினைப்பவர். காவியச் சோலையுள் நுழைந்து கவித்தேனை உண்டு தேக்கெறிபவர். இத்தகு ஆற்றல் பெற்றவராக இருந்ததால்தான் அவர் சிறந்த திறனாய்வாளராகவும் திகழ்ந்தார். பாட்டின் திறத்தையும், பாநலன் நுகரும் திறனாய்வாளனின் இலக்கணத்தையும் பின்வரும் பண்டிதமணியின் கூற்று நன்கு எடுத்துக் காட்டுகிறது :

''மதிவலி மிக்க முதுபுலவனிடத்தினின்றுந் தோன்றிய பாடல் நங்கைக்குத் திட்பநுட்பம், தெளிவு, விளக்கம், இனிமை முதலிய பண்புகளமைந்த சொற்பொருட் குழுவே அழகிய உடலும், சுவைநலந்துறுமுந்தொனிப் பொருளே உயிருமாம். இந் நங்கைக்கு உவமை முதலிய அணிகளே அணிகலன்களாம். அழகுக்கு அழகு செய்தல்போல் இவ்வணிகள் சேர்க்கப்படினும் இப் பாடன் மெல்லியற்பாவை நல்லாளின் இயற்கை வனப்பு மிக்க நல்லுடலைச் சார்ந்து, உவமை முதலிய அணிகளே சிறந்த அழகு பெற்றுத் திகழ்வனவாம். இங்ஙனம் இயற்கை நலம் மிக்குச் செயற்கை நலனையும் ஏற்றுத் திகழும் இத்தகைய பாடல் நங்கையைக் கூடி நுகர்தற்குரிய இளநலஞ்சான்ற மணமகனியல்பை இயம்பவும் வேண்டுங் கொல்? அன்னான் இலக்கிய இலக்கண நூலறிவானும் மதிநுட்பத்தானும் சிறந்து மலர்ந்து மணப் பருவம் வாய்க்கப் பெற்றுக் கட்டழகு வாய்ந்த பாடல் நங்கையைக் கண்டவிற் காதல் மிக்குடையனாய் அப்பேறு குறித்துத் தவம் புரிந்த தனிப்பெரும் செல்வனாதல் வேண்டும். வேட்கை முயற்சியும் தவப்பயனாகும் ஆகூழ் வலியும் ஒருங்கு கைவரப் பெற்றாலன்றி அப்பாடல் நங்கையின் பரிசுணர்தல் அரிதாகும்.''

பண்டிதமணி, திறனாய்வாளனுக்கு உரியதாகக் கூறும் அத்தனை பண்புகளும் அவர்மாட்டே அமைந்திருந்தன. எனவேதான், தம்மை நாடி வரும் ஆர்வலர்கள் அனைவரையும் பாட்டின்பத்தில் மூழ்கும்படி அவரால் செய்ய முடிந்தது.

## நல்ல உரையாசிரியர்:

இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரும் சான்றோர்கள் அனைவருமே மிகச் சிறந்த உரையாசிரியர்களாக விளங்கினர். மறைமலையடிகள், திரு. வி. க., ச.சோ. பாரதியார், இராகவையங்கார் போன்றோர் தம் திறனெல்லாம் புலப்படப் பழைய நூல்கள் சிலவற்றிற்கு உரையெழுதிப் போந்தனர். பண்டை இலக்கியப் பயிற்சியும், இலக்கணப் புலமையும் இல்லாதோர் உரையெழுதப் புகுவது, அரங்கின்றி வட்டாடுவது போலாகும். அதுவும் திருவாசகம் போன்ற சமய நூல்களுக்கு உரையெழுதுவோர் மேற்கூறிய இரு திறனோடு மட்டுமன்றிச் சமய சாத்திரங்களிலும் வல்லவராய் இருத்தல் வேண்டும். பண்டிதமணி இவ்வாற்றல் எல்லாம் ஒருங்கே நிரம்பப் பெற்றவராய் விளங்கினார்.



காரைக்குடி முத்துப்பட்டணம்
தவத்திரு. சொக்கலிங்க ஐயா அவர்கள்
(பண்டிதமணியாரின் சைவ சித்தாந்த ஆசிரியர்)

திருவாசகத்திலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகிய இரு பகுதிகளுக்கும் 'கதிர்மணி விளக்கம்' என்ற பெயரில் பண்டிதமணி ஓர் அழகிய உரை விளக்கம் எழுதியுள்ளார். இவ்வுரை பரிமேலழகரின் திருக்குறளுரை, நம்பிள்ளையின் சடு முப்பத்தாறாயிரப்படி முதலிய பண்டை உரை நூல்களோடு ஒப்பவைத்து எண்ணுதற் குரியதாகும். கண்ணழித்துக் கருத்துரைத்துப் பொழிப்புத் தந்து, நுட்பம் கூறி, ஆழ அகலமாய் உரை விரிக்கும் பண்டிதமணியாரின் உரைத்திறம் வியந்து போற்றுதற்குரியதாகும்.

ஏனை யாவரு மெய்திட
லூற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை ஆனெயைக் கரும்பினின்
தேறலைச்
சிவனைஎன் சிவலோகக்
கோனை மானை நோக்கிதன்
கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்
றேன்கெடு
வேனுயிர் ஓயாதே

என்ற திருவாசகப் பாட்டிற்கு உரையெழுதும்போது 'தேனை, ஆனெயைக், கரும்பினின் தேறலை' என்ற வரிக்கு அவர் தரும் விளக்கம் சுவையுடையது. இந்த வைப்பு முறைக்கு (தேனை முதலாவதாகவும், நெய்யை இரண்டாவதாகவும், கருப்புக் கட்டியை இறுதியாகவும் அமைத்துள்ளமை) அவர் தரும் விளக்கம் இது:

''ஆண்டவன் தன் இயல்பை முதலில் எளிமையில் காட்டி, சர்த்துப் படிப்படியாக அருமை நிலையை உணர்த்தி ஆட்கொண்டதைப் புலப்படுத்துவாராய், ''தேனை ஆனெயை'' எனத் தொடங்கி, முறையே கூறுவாராயினர். தேனைப் பெற்றவுடன் அடுதல் முதலிய செயற்படுத்தாமல் இனிமை தோன்ற எளிதில் உண்ணலாம். ''ஆனெயை'' என்றமையால் பசுவினிடத்தினின்றும் நெய் பெற வேண்டுமானால் பாலை அடுதற் செயற்படுத்துத் தயிராக்கிப் பெறல் வேண்டும், கரும்பின் இன்

தேறல் என்புழி, தேறல் ஆகுபெயராய்க் கட்டியை உணர்த்தும். கரும்பின் தேறல் பெற வேண்டுமானால், கரும்பை ஆலையில் இட்டுத் தெளிந்து சாறு எடுத்து, அடுதற் செயலாற் கட்டியாக்கிப் பெற வேண்டும். ஈண்டுக் கூறிய தேன், நெய், கருப்புக்கட்டி இம் மூன்றும் இனிமைச் சுவையில் ஒன்றுபட்டிருந்தாலும் முன்னதை நோக்கப் பின்னது அரிதிற் பெறத் தக்கதாக இருத்தல் அறியத் தக்கது. தேனை என அடைமொழி இன்றியும், ஆனெயை, கரும்பின் இன்தேறலை என மற்றைய இரண்டிற்கும் அடைமொழி புணர்த்தும்படி கூறியது, தேன் ஆக்கும் செயல், ஈக்களுக்கு அன்றியும் மக்களுக்கு இன்றென்பதும், நெய்யும் கருப்புக்கட்டியும் ஆக்கும் செயல் மக்களுக்குரியன என்பதும் புலப்படுத்தற்கு என்க."

மேற்கண்ட உரைப்பகுதி பண்டிதமணியின் பகுநிலைச் சிந்தனையையும், தொகுநிலைச் சிந்தனையும் ( analytic and Synthetic ) ஒருங்கே வெளிப்படுத்தக் காண்கிறோம். சுருங்கச் சொன்னால், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய உரையாசிரியர்களின் வரிசையில் பண்டிதமணிக்குத் தலையாய இடமுண்டு எனலாம்.

**மொழிபெயர்ப்பாளர்:**

மொழி பெயர்த்தல் என்பது அரிய கலை. பல்கலைத் திறனும் பன்மொழிப் புலமையும் இல்லாதோர் இத்துறையில் வெற்றி பெறல் முடியாது.

பண்டிதமணி வடமொழி, தமிழ் ஆகிய இருமொழியினும் கற்றுத் துறைபோயவர். வேதம், ஆகமம் முதலிய எண்ணிறந்த பல்வேறு அறிவுநூற் பெருக்கங்களையுடைய வடமொழியும் தமிழ்மொழியும் ஆகிய இருபெரு மொழிக்கும் இலக்கண முடிபுகள் பல ஒன்றி வரலானும், தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த புலனழுக்கற்ற அறிவுடையோர் பலர் வடமொழி வல்லாராய் அம்மொழி மரபு பலவற்றை எடுத்தாண்டமையாலும் தமிழ் இலக்கணப் புலமை நிரம்புதற்கு வடமொழியறிவும் வேண்டற்பாலதாகிறது. இவ்வுண்மையறிந்த பண்டிதமணி இருமொழியையும் அழுத்தமுறக் கற்றார். அதன் பயனாகச் சுக்கிர நீதி, மிருச்சகடிகம், கௌடலியம் முதலிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

''மிருச்சகடிகம்'' வடமொழியில் எழுதப்பட்ட ஓர் அரிய நாடக நூல். பண்டிதமணி ''மண்ணியல் சிறுதேர்'' என்ற பெயரில் இதனை மொழிபெயர்த்தார்.

இந்நாடக ஆக்கத்தின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், அழகும் உணர்ச்சியும் உடைய பல பகுதிகள் பாட்டாகவே எழுதப்பட்டிருப்பது தான். உரைநடையை மொழி பெயர்ப்பது எளிது. பாட்டைப் பாட்டாகவே மொழி பெயர்ப்பது அரிதினும் அரிது. நம் பண்டிதமணி இத்துறையிலும் மாபெரும் வெற்றி பெற்றுள்ளார்.

சாருதத்தன் கூற்றாக வரும் ஒரு பாடலைக் காண்போம்:



**சோழவந்தான் அரசன் சண்முகனார்**
(பண்டிதமணியாரின்
இலக்கிய, இலக்கண ஆசிரியர்)

''காமமிகு மங்கைகதுப் பென
வெளுத்துத்
தாரகையின் கணங்கள் சூழத்
தாமமிகு சந்திரன்கோப்
பெருந்தெருவின்
தனிவிளக்காய்ச் சார்ந்தான்
அன்னான்
சேமமிகு வெள்ளியதண்
கதிர்க்கற்றை
நீர்வடிந்த சேற்றின் கண்ணே
ஏமமிகும் பாலொழுக்கின்
இருட்குழாத்து
இடைவீழ்ந்து இலகு மாலோ'

**நாநலம் படைத்த சொற்பொழிவாளர்**

'நாநலன் என்னும் நலனுடைமை' எல்லா நலத்துள்ளும் சிறந்தது என்று கூறுவார் திருவள்ளுவர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறன் எல்லார்க்கும் வாய்ப்பதன்று. பண்டிதமணியோ, இந்நலத்தையும் கருவிலே வாய்த்த திருவாகப் பெற்றிருந்தார்.

கதிரேசனார் எங்கே இருப்பினும் அங்கே தமிழ்க் கதிரும் சைவக்கதிரும் ஒளி வெள்ளம் வீசி நிற்கும். புலவர் பலர் விண்மீன் போல் சூழ்ந்திருப்பத் தாம் சித்திரைத் திங்களே போல் ஒட்பமும் திட்பமும் ஒருங்கே பொருந்த வீற்றிருப்பார். பண்டிதமணி தலைமை தாங்காத கழகமே இத்தமிழ் நாட்டில் இல்லை எனலாம. சொற்பொழிவு நிகழ்த்துங்கால் பண்டிதமணியவர்களுடைய ஆன்ற புலமையும் அவையறிந்துரைக்கும் திறமையும் வெளிப்படும். பிறர் கூற்றை மறுத்துரைக்கும் அமையம் நேர்ந்த போதெல்லாம் அவர் கடுஞ்சொல் கூறியதே இல்லை. குறிப்பாகவும் நகைச்சுவையோடும் சதுரப்பாட்டோடும்தான் எடுத்துக் காட்டினார். அவர் அவையில் பேசுங்காலத்து அருங்கலை விநோதராகவே திகழ்ந்தார்.

மேடைப்பேச்சு என்னும் கலையில் காலஞ்சென்ற திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளும், அறிஞர் அண்ணாவுமே இவரொடு ஒப்புரைக்கத் தக்கவர்கள். மேடை தோறும் நாக்கடிப்பாக வாய்ப் பறை அறைந்து தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர் நம் பண்டிதமணியே ஆவர்.

**நல்லாசிரியர்:**

பண்டிதமணி, மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவதில் வல்லவர். தொல்காப்பியம், அகநானூறு முதலிய எல்லா இலக்கண இலக்கியங்களையும், திருமந்திரம் முதலிய சமய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றிருந்த பண்டிதமணி, மாணாக்கர்க்கு மிக மிக இனிமையாகப் பாடம் சொல்லி வந்தார். உரைக்கப்படும் பொருளை உள்ளத்தே அமைத்து, விரையாமலும், வெகுளாமலும், விரும்பி முகம் மலர்ந்து, கொள்வோன் குறிப்பறிந்து கற்பிக்கும் இவரது ஆற்றலை அந்தக் காலத்தில் பாராட்டாதார் யாருமே இல்லை. இவரிடம் கல்வி கற்றுப் பெரும்புலமை எய்திய மாணாக்கர்கள் பலராவர். திருப்பதி கீழ் நாட்டுக்கலையாராய்ச்சிப் பகுதிச் சொற்பொழிவாளராக விளங்கிய பெருந்திருவாளர் தி. பொ. பழனியப்பப் பிள்ளை அவர்கள் பண்டிதமணியின் மாணவரே யாவர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாகச் சங்க நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதி வெளியிட்ட உரை வேந்தர், பெருமழைப் புலவர், பொ. வே. சோமசுந்தரனாரும் பண்டிதமணியிடம் பாடம்கேட்டவரே யாவர்.

**உரையும் பாட்டும் உடையோர்:**

உலகத்தில் பிறப்போர் பலர். பிறந்தோர் அனைவருமே புகழ் வாழ்வு வாழ்கின்றவர் அல்லர். ஒரு சிலரே உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் நெஞ்சில் வாழ்கிறார்கள்.

தம் உழைப்பாலும், உரையாலும் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய இப்பெரும் புலவர் தமிழர் அனைவராலும் நன்றியோடு நினைக்கத் தக்கவர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
[illegible]


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு
1-6-1982 75 காசு







தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்ட 'ஓட்டல் தமிழ்நாடு' திறப்பு விழா - கோவை (28-5-1982)





தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், உதகமண்டலத்தில் கட்டப்பட்ட 'இளைஞர் விடுதி' திறப்பு விழா (28-5-1982)



# ஏழைச் சிறுவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம்

## ஜூலை 1ஆம் தேதி முதல் ஆரம்பம்

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வரலாறு காணாத வகையில் அறிவித்த ஏழைப்பிள்ளைகட்கு ஆண்டு முழுதுக்குமான மதிய உணவுத் திட்டம், தமிழகத்தில் இவ்வாண்டு ஜூலை 1-ஆம் தேதி முதல் தொடங்குகிறது.

**இளஞ்சிறார்கள்**

இத்திட்டம் இருபிரிவுகளாகச் செயல் படும். முதல் பிரிவு சமூகநலத் துறை கண்காணித்து நடத்துவது. இவர்கள் 2 முதல் 5 வயது வரை உள்ள சுமார் 25 இலட்சம் .பிள்ளைகட்கு கிராமங்களில் அதற்காக அமைக்கப்படும் சமையற் கூடங் களிலும் ஏற்கெனவே இருக்கும் குழந்தைகள் காப்பகங்களிலும் சத்துணவு அளிப்பார்கள்.

**பள்ளிப் பிள்ளைகள்**

இத்திட்டத்தின் பெரிய பிரிவு 36,000 பள்ளிகளில் சுமார் 40 இலட்சம் பிள்ளைகட்கு உணவளிப்பது. இத்திட்டம் முழுக்கமுழுக்க பள்ளிக் கல்வித்துறையின் கண்காணிப்பில் தமிழக ஆசிரியப் பெருமக்களின் மேற்பார் வையில் நடைபெறும். ஒவ்வொரு பள்ளியி லும் சமையலுக்கென்று தனியாக மகளிரும், அவருக்கு உதவியாளரும் நியமிக்கப்படு வார்கள்.

**இலவச உணவு, தட்டு, தம்ளர்**

இவை தவிர உணவு அருந்தும் 40 இலட் சம் குழந்தைகட்கும் இலவசமாக உணவுத் தட்டு, தம்ளர் போன்றவை பள்ளிகளி லேயே வழங்கப்பெறும். சமையல் செய்யப் பாத்திரம் இவை அரசின் செலவிலேயே பள் ளிகளில் அளிக்கப்படும்.

**அரிசி, பருப்பு, எண்ணெய் பள்ளியின் வாச லுக்கே வரும்**

அரிசி, பருப்பு, எண்ணெய் இவை தமி ழக நுகர்பொருள் வழங்குத்துறை, கூட்டுற வுத்துறை இலைகளால் பள்ளிகளிலேயே அளிக்கப்படும்.

**அரசு முன்மானியம்**

மற்றும் சமையலுக்கு வேண்டிய விறகு, காய்கறி மசாலா போன்றவற்றைப் பள்ளித் தலைமையாசிரியர் வாங்க மாவட்டக் கல்வி அதிகாரி முன் மானியம் அளிப்பார். பள்ளி யின் தலைமையாசிரியரே எல்லாச் செலவினங் களும் செய்து பெறுப்பாகக் கணக்கு வைத்துக் கொள்வார்.

**ஆசிரியருக்கும் உணவு**

பள்ளியில் மாணவர் சாப்பாட்டை மேற் பார்க்கும் ஆசிரியப் பெருமக்களும் மாணவ ருடன் சேர்த்து உணவருந்தி மகிழுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

**45 காசு ஒரு பிள்ளைக்கு ஒரு நாளைக்கு**

இந்தப் பள்ளி உணவுக்கு ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 45 காசு செலவாகும். சத்து நிரம்பிய உணவாக இது இருக்கும். ஆண்டு முழுவதும் இது வழங்கப்படும். விடுமுறை நாட்களிலும், பள்ளி இல்லா நாட்களிலும் கூட உணவு உண்டு.

**கிராம உணவு ஆலோசனைக் குழு**

இப்பள்ளி உணவை எல்லாவிடங்களிலும் சிருடன் நடத்த பள்ளியின் தலைமையாசி ரியரே செயலாளராகக் கொண்ட பள்ளி உணவு ஆலோசனைக்குழு 10 ஊர்ப் பிரமு கர்களைக் கொண்டு இயங்கும்.

பள்ளி மதிய உணவு கணக்குகளைக் கல்வித்துறை பள்ளித் துணை ஆய்வர்கள் தணிக்கை செய்வார்கள். மதிய உணவு மானியம் மாவட்டக் கல்வி அதிகாரிகளால் அந்த அந்த ஒன்றியக் கல்வித்துறை உதவிக் கல்வி அதிகாரிகள் மூலம் காசோலை வடிவில் வழங்கப்படும்.

**பழைய திட்டம்**

பழைய உணவுத் திட்டத்தில் 10 காசு அரசு மானியமும் 5 காசு ஒன்றிய மானி


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆனி 2

மலர்: 12 ● இதழ்: 24

16—6—1982

யமுமாக 15 காசு ஒரு நாளுக்கு ஒரு மாண வனுக்கு என்று இருந்தது. பல ஒன்றியங்கள் இந்த 5 காசை தர முடியவில்லை. எனவே, 10 காசில்தான் பழைய உணவுத் திட்டம் நடந்து வந்தது'கேர்' உதவியுடன்.

**புதிய திட்டம் சீர்மிகு திட்டம்**

இன்று வந்துள்ள புதிய உணவுத் திட்டமோ 45 காசு ஒரு மாணவனுக்கு என்று எல்லாம் முழுதுமாக அரசு மானியமாக அளிப்பதால் பழைய திட்டத்தைவிட இது ஐந்து மடங்கு சிறந்து விளங்குகிறது என ஆசிரியர்கள் மகிழ்ச்சியுறுகின்றனர். தவிர பொது மக்கள் நன்கொடை, பஞ்சாயத்து நன்கொடை என இனி எவரையும் போய் ஆசிரியர்கள் நாடி அலைய வேண்டியதில்லை. அரசின் கொடையே பெரும் கொடையாகி உள்ளது. இது ஆசிரியப் பெருமக்கட்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

**சமையல் செய்ய தனியாகப் பெண்கள்**

தவிர ஒவ்வொரு பள்ளியிலும் இனி எந்த ஆசிரியரும் சமையல் செய்ய வேண்டியதில்லை. சமையலுக்கென்று அரசின் சம்பளத்துடன் கூடியவரை பெண்களும் அவர்களுக்கு உதவியாட்களும் ஒவ்வொரு பள்ளியிலும் இனி உண்டு.



## தமிழக அரசின் சத்துணவுத் திட்டம்

## பெல்ஜிய நாட்டு சமூக சேவகி பாராட்டு !

"ஏழை-எளிய குழந்தைகளுக்குத் தமிழக அரசு அறிவித்துள்ள சத்துணவுத் திட்டம் மிகவும் பயனுள்ள திட்டம்" என்று பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த சமூக சேவகி ரோசா கியார்டின் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த சமூக சேவகி ரோசாகியார்டின் இராமநாதபுர மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு தாமரைக்கனி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் "மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு சத்துணவுத் திட்டத்தைத் தீட்டி ஏழை-எளிய மக்களின் பசியைப் போக்க உள்ளது. இந்த நல்ல திட்டத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். பசியால் துடித்திடும் ஏழை-எளிய குழந்தைகளுக்கு வாழ்வும், அறிவும் அளிக்கும் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் மீண்டும் மனமாரப் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.





# மீன்வளம் பெருக்கும் திட்டங்கள்

மீன் உற்பத்தி: கடல் மற்றும் உள்நாட்டு மீன் பிடிப்பை உள்ளடக்கிய மீன் உற்பத்தியில் 1981-82-ம் ஆண்டில் இந்தியாவிலேயே முதலிடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. 1981-82-ல் மொத்தம் 4.10 லட்சம் டன்கள் உற்பத்தியாகியுள்ளது. கடல் மீன் உற்பத்தியை 2.35 லட்சம் டன்களிலிருந்து 2.60 டன்களாகவும் உள்நாட்டு மீன் உற்பத்தியை 1.75 லட்சம் டன்களிலிருந்து 1.85 டன்களாகவும் பெருக்கி அதன் மூலம் மொத்த மீன் உற்பத்தியை 4.10 லட்சம் டன்களிலிருந்து 4.45 லட்சம் டன்களாகவும் 1982-83-ல் உயர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மீன் பிடி துறைமுகங்கள்:**

மத்திய அரசின் அனுமதி பெற்று சின்ன முட்டம், வாலி நோக்கம் ஆகிய இடங்களில் மீன் பிடி துறைமுகங்களை நிறுவுவதற்கு தமிழக அரசு ஒப்பளித்துள்ளது. சின்னமுட்டத்தில் ரூ. 234 லட்சம் செலவில், 240 விசை படகுகளும் 10 டிராலர்களும் தங்க வசதி கொண்ட மீன்பிடி துறைமுகம் ஆகஸ்ட்'82-ல் கட்ட ஆரம்பித்து 1985-ல் கட்டி முடிக்கப்படும். வாலி நோக்கத்தில் ரூபாய் 77 லட்சம் செலவில் 150 விசைப்படகுகள் தங்க வசதி கொண்ட மீன்பிடி துறைமுகம்-1983-க்குள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டங்களுக்காகும் செலவில் பாதியை மத்திய அரசும் பாதியை மாநில அரசும் ஏற்றுக் கொள்ளும்.

பழையாறு மற்றும் தொண்டியில் முறையே ரூ. 60 லட்சம் மற்றும் ரூ. 90.50 லட்சம் செலவில் மீன்பிடி துறைமுகங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப் பட்டினத்தில் ரூ. 18.50 லட்சம் செலவில் மீன்பிடி படகுகளுக்கான தங்குதுறை வசதிகள் செய்து தரப்படவுள்ளது. இதற்கான மத்திய அரசின் அங்கீகாரம் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இயங்கி வரும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மாபெரும் சாதனைகளினால் ஊக்குவிக்கப்பட்டு வட ஆர்க்காடு, பெரியார், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேலும் நான்கு முகமைகள் ரூ.16.80 லட்சம் செலவில் விரிவுபடுத்தி உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் தற்போது 11 மாவட்டங்களில் செயல்படுகின்றது. ஒட்டுமொத்த மீன்வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகமையிலும் இரண்டு குளங்களில் தீவிர மீன் வளர்ப்பை மேற்கொள்வது மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் விரிவாக்கப் பணிகளை முனைப்புடன் மேற்கொள்ள வழிகோலும். இதைத் தவிர ஒவ்வொரு முகமையிலும் ஓர் மீன் குஞ்சு நாற்றங்கால் நிறுவப்படும். தமிழ்நாட்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் வெற்றிகரமாகச் செயல்படுவதால் இங்குள்ள இரு முகமைகளுக்கு மீன்களை சேமித்து வைக்கவும் விற்பனை செய்யவும் வசதியளிக்க மத்திய அரசு முன் வந்துள்ளது.

இயந்திரப் படகுகள் வினியோகம்: கடலோர மீனவர்களுக்கு 1.06கோடி செலவில் 137 இயந்திரப் படகுகளை வாங்கி அவைகளை மீனவ வாலிபர்களுக்கு அதி



மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர்

லும் குறிப்பாகமீன் வளப் பயிற்சி பெற்றவர்ளுக்குப் பங்கு அடிப்படையிலோ அல்லது வாடகைக் கட்டண அடிப்படையிலோ விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வாடகைக் கொள் முதல் திட்டத்துன் கீழ் தனிப்பட்டவர்களுக்குப் படகுகள் இதுவரை வழங்கப்பட்டு வந்தன. இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் படகுகள் பங்கு அடிப்படையில் விநியோகிக்கப்படும். இத்திட்டம் இயந்திர மீன் பிடிப்பை மேற்கொள்ள மீனவ வாலிபர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களது வருவாயையும் அதிகரிக்க வழி வகுக்கும்.

**மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்:**

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிரளித்து அவற்றின் மூலம் மீனவர்கள் பயன்பெறுவதற்காக திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக நல்ல நிலையில் இயங்காத மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்துவிட்டு ஒரே இடத்தில் நன்கு இயங்கும் பல சங்கங்களை ஒருங்கிணைத்து அத்தகைய சங்கங்கள் செயல்படுவதற்குத் தேவையான நிதியுதவி அளிப்பதாகும். கிராமங்களில் செயல்படும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை மாவட்ட நிலையில் ஒரு விற்பனைச் சம்மேளனத்தின் கீழ் கொண்டுவந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மீன் விற்பனைச் சம்மேளனங்களின் பொறுப்பானது உபரியாயுள்ள மீன்களைக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனைசெய்ய ஏற்பாடு செய்வதாகும். இதைப் பொருத்தமட்டில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இணக்கத்துடன் செயல்படும்.

**விலைவாசி ஆதரவுத் திட்டம்:**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் தூத்துக்குடி, ஆர்க்காட்டுத்துறை மண்டபம், நாகர்கோயில் போன்ற இடங்களில் மீன்களை கொள் முதல் செய்து சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களிலுள்ள மீன் விற்பனை நிலையங்கள் மூலம் சில்லரையாக மக்களுக்கு விற்பனை செய்கிறது. 1982-83-ம் ஆண்டில் மீன் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை தற்போதுள்ள 54-லிருந்து 100 ஆக உயர்த்தப்படும். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேற் குறிப்பிட்ட இடங்களிலிருந்து மீன்களைக் கொள் முதல் செய்வதற்கு ''விலைவாசி ஆதரவு'' அளிக்கும். இத்திட்டத்



தின் கீழ் ஏற்கெனவே நிர்ணயித்து அறிவிக்கப்பட்டுள்ள விலைக்கு அங்கு வந்திறங்கும் எல்லா மீன்களையும் ஒட்டு மொத்தமாக கொள்முதல் செய்யும். இத்தகைய ஏற்பாடு தற்போது பிடிக்கும் மீன்களைக் காட்டிலும் அதிக மீன்களை மீனவர்கள் பிடிப்பதற்கு ஊக்குவிக்கும்.

**உவர் நீர் பண்ணைகள்:**

உவர் நீர் இறால் பண்ணைகளை மிகப் பெருமளவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 300 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 2.65 கோடி செலவில் இத்தகைய உவர் நீர் இறால் பண்ணைகளை அமைப்பதற்கான திட்டம் தயாரித்தனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலையும் நிதி ஆதரவையும் எதிர்நோக்கியுள்ளது. இதைத் தவிர தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கழிமுகப்பகுதிகளிலுள்ளவர்களை இறால் பண்ணைகளை அமைப்பதில் ஊக்குவித்து அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியை நல்குவதுடன் இறால் வளர்ப்புக்குத் தேவையான இறால் குஞ்சு, உணவு போன்றவைகளை வழங்கும் விரிவாக்கப் பணிகளையும் மேற்கொள்ளும்.

**ஆழ்கடல் மீன் பிடிப்பு:**

இந்திய அரசு கடற்கரையிலிருந்து 320 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகளை நம் நாட்டுக்குரிய தனிப்பட்ட பயன் வளம் வாய்ந்த பகுதியாக அறிவித்துள்ளதால் பரந்து கிடக்கும் வரையறையற்ற இப்புதிய வளவாய்ப்புகளைத் தமிழ்நாடு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். இறால் பிடிக்கும் நாவாய்களை வாங்கி மீன் பிடிப்பதன் மூலமோ அல்லது ஒப்பந்த மூலம் நாவாய்களை வாடகைக்கு விடுவதன் மூலமோ மேற்கொள்ளப்படும். இதற்குப் பொருத்தமான ஆழ்கடல்மீன்பிடி நலன்கள் மற்றும் நாவாய்களின் உருவரை மாதிரிகள் குறித்து யோசனை கூறுவதற்கு வல்லுநர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கூடவுள்ள இக்குழுவின் அறிக்கையினடிப்படையில் ஆழ்கடல் மீன்பிடிக் கலன்கள் மற்றும் நாவாய்களை வாங்குவதற்கோ ஒப்பந்த மூலம் வாடகைக்கு விடுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்சமயம் இந்தியாவில் சுமார் 56 ஆழ்கடல் மீன்பிடிக்கலன்கள் உள்ளன. இதை நடைமுறைத் திட்ட காலத்தில் 356 கலன்களாக அதிகரிக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது. மீன் பிடி கலன்களைப் பெருக்குவதில் தமிழக அரசு தனக்குரிய பங்கை எடுத்துக் கொள்ள உள்ளது.

**தமிழ்நாட்டு மீனவர்களுக்கு சேமிப்பு நிவாரணத் திட்டம்:**

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஆண்டுதோறும் மூன்று மாதங்களுக்கு முறையான வருவாய் கிடைப்பதில்லை. புயல் காலங்களில் மீன்பிடிப்புக்குச் செல்ல முடியாததாலோ கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் பருவங்களில் மீன் பிடிப்பு இல்லாததாலோ இந்த நிலை ஏற்படுகிறது. 1982-ம் ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் முறையாக வருவாய் கிடைக்கும் 9 மாதங்களிலும் மாதந்தோறும் ரூ. 10 வீதம் செலுத்தும் மீனவர்களுக்குத் தலா ரூ. 90 வீதம் அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும். இவ்வாறு சேமிக்கப்படும் ரூ. 180 முறையான வருவாயில்லாத மூன்று மாதங்களுக்கும் ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் ரூ. 60 வீதம் வழங்கப்படும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாதந்தோறும் ரூ. 10 வீதம் வசூலிக்கப்பட்டு இத்தொகை மீன் துறை உதவி இயக்குநர் இயக்கும் தனி நிதியின் கீழ் இருப்பு வைக்கப்படும். மாதந்தோறும் தரப்படும் ரூ. 60 மீன்துறை அலுவலர்கள் மூலம் வழங்கப்படும். இந்த ஏற்பாடு மீனவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமான தோர் திட்டமென்பதுடன் மீனவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்தும்.

**வேலை வாய்ப்புகள்:** மீன் துறைத்தலைமையக நடவடிக்கைகள்விரிவுபடுத்தப்பட்டு வருவதால் மீன்துறைப் பதவிகளுக்கு மீனவர்கள் தேவையாயுள்ளனர் இத்தகைய பதவிகளில் நியமனம் செய்வதற்கு கடலில் மீன்பிடிக்கையில் உயிரிழந்த மீனவர்களின் வாரிசுகளுக்குச் சலுகையளிக்கப் படும்.

*[மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 18-8-82 அன்று பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் வெளியிட்ட செய்தி]*

# எல்லார்க்கும் குடிநீர்

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் (சென்னை மாநகர் நீங்கலாக) நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான புதிய குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களை ஆய்வு செய்யவும், திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசால் தமழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை நிறைவேற்றி வந்த குடிநீர் மற்றும் வடிகால்திட்டங்களையும் இந்த வாரியம் செயல்படுத்தி வருகிறது.

**ஊரகக் குடிநீர் பற்றிய ஆய்வு**

தமிழ்நாட்டில் உள்ள எல்லாக்குடியிருப்புகளையும், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள்




பார்வையிட்டு குடிநீர் பற்றிய ஆய்வு மேற்கொண்டதன் விளைவாகத் தமிழ்நாட்டில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரமே இல்லாத கிராமக் குடியிருப்புகள், நீர் இருந்தும் குடிப்பதற்கு இயலாத நிலையில் உள்ள கிராமக் குடியிருப்புகள், நல்ல குடிநீர் இருந்தும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நீர் கிடைக்காத நிலையில் உள்ள கிராமக் குடியிருப்புகள் என்று கணக்கிடப்பட்டதில் தமிழகத்தில் 18,167 கிராமக் குடியிருப்புகள் குடிநீர் இல்லாத பற்றாக்குறை நிலையிருந்தன என அறியப்பட்டது. இதுபோன்ற குடிநீர் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மை இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இது போன்ற குடிநீர் இல்லாத பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதில் முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று 1977-78ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு அரசால் அறிவுறுத்தப்பட்டு 1977-78லிருந்து 1979-80ஆம் ஆண்டு வரை 3,465 கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஆக, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்துற்குள் எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட தமிழ்நாடு அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**தன்னிறைவுத் திட்டம்**

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி, கல்விக்கூடங்கள், மருத்துவ வசதி போன்ற தேவைகளை நிறைவு செய்திடும் வண்ணம் தமிழ்நாடு அரசால் தன்னிறைவுத் திட்டம் என்னும் தன்னிகரில்லாத் திட்டம், அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் திட்டமாக 1980ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. தன்னிறைவு நிறைவுபெற குடிநீருக்கே முதலிடம் என்னும் மகத்தான குறிக்கோளின் அடிப்படையில் எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடத் தீர்மானிக்கப்பட்டு முதற்கட்டமாகத் தேர்வு செய்யப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 2,158 கிராமக் குடியிருப்புகளுக்கு 1980-81ல் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்றிடத் திட்டமிட்டு 1982 சனவரி முடிய 1,768 பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள 390 கிராமக் குடியிருப்புகளுக்கும் 1982 மார்ச் இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் வகையில் திட்டப் பணிகள் விரைவு படுத்தப்பட்டன. தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாகத் தேர்வுசெய்யப்பட்ட 150 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 4076 பற்றாக்குறை கிராமக்குடியிருப்புகளில் 1981-82ல் நிதியாண்டில் 2000 கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கிடத் திட்டமிடப்பட்டு இதுவரையில் 1234 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 766 குடியிருப்புகளுக்கு 1982 மார்ச் இறுதிக்குள் குடிநீர் வழங்கிடும் வகையில் திட்டப் பணிகள் செயலாக்கம் பெற்றன. எஞ்சியுள்ள 159

ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் தொடரவிருக்கின்றன.

1980-83ம் ஆண்டு வரை நிறைவேற்றப்பட்ட, நிறைவேற்றப்படவிருக்கின்ற கிராமக் குடிநீர் திட்டங்கள் குறித்த பட்டியல் பின்வருமாறு:

| ஆண்டு | கிராமக் குடியிருப்பு களின் எண்ணிக்கை | செலவினம். ரூ (இலட்சத்தில்!) |
|---|---|---|
| 1980—81 | 2,300 | 1,721 |
| 1981—82 (எதிர் பார்ப்பது) | 32,00 | 3,291 |
| 1982—83 திட்டமிடப் பட்டுள்ளவை. | 3,200 | 3,200 |

**வறட்சி நிவாரணத் திட்டம்**

சென்ற ஆண்டு பருவமழை பொய்த்ததன் விளைவாக ஏற்பட்ட கடும் வறட்சி நேரத்தில் தாகம் தீர்த்திடும் பணியில் 6708 இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு கைப் பம்புகள் பொருத்தப்பட்டன.

**நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள்**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி நகர்ப்புற குடிநீர் திட்டங்களில் தற்பொழுது செயலாக்கத்திலுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரைவில் முடிக்கவும், போதுமான அளவு நீர் கிடைக்காத நகரங்களில் திட்டங்களை விரிவுபடுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளது. இதில் தொழில் ரீதியிலும் வணிக முறையிலும் சமயம் மற்றும் சுற்றுலா முக்கியத்துவ அடிப்படையிலும் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நகர்ப்புற குடிநீர்த் திட்டங்களை தனிக் கவனம் செலுத்தி கவனித்திடும் அடிப்படையில் 1982 சனவரியிலிருந்து ஒரு தனித்தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களில் 1980லிருந்து 1983 வரையில் நிறைவேற்றப்பட்ட-நிறைவேற்றப்பட விருக்கின்ற திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | திட்டங்களின் எண்ணிக்கை | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1980-81 | 9 | 1,591.49 |
| 1981-82 (எதிர்பார்ப்பது) | 30 | 1,392.52 |
| 1982-83 (திட்டமிடப் பட்டுள்ளது) | 22 | 1,431.00 |

மேலும் இவை தவிர 1982-83ம் நிதியாண்டில் கீழ்க்காணும் திட்டங்களையும் நிறைவேற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1. மறைமலை நகர் (சென்னை அருகில்) | 388.13 |
| 2. வண்டலூர் மிருகக் காட்சிசாலை | 14.45 |
| 3. ராணிப்பேட்டை பெல் நிறுவனம் | 76.32 |
| 4. புழல்-புதிய மத்திய சிறைச்சாலை | 13.50 |
| 5. பாரதியார் பல்கலைக்கழகம் (கோவை) | 15.00 |

**உலக வங்கித் திட்டம்**

மதுரை மற்றும் கோவை மாநகரங்களுக்கும், சேலம் மற்றும் ஆத்தூர் நகராட்சிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் மேலும் 75 நகரங்களுக்கும் 740 கிராமக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதியும் 15 நகரங்களுக்கு துப்புரவு வசதியும் அளிப்பதற்காகவும் ரூ. 104.45 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டப்பணிகளை 1983 சனவரி முதல் செயலாக்குவதற்கென நிதி உதவிக்காக வாரியம் உலக வங்கியை அணுகியுள்ளது. இவை சம்பந்தமாக உலக வங்கிக் குழு மூன்று முறைகள் தமிழகத்திற்கு வருகை தந்ததோடு 1982ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் முன்னோட்டத் திட்ட மதிப்பீட்டை முடிவு செய்யும் என்று பார்க்கப்படுகிறது.

**ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடனுதவி**

தமிழ்நாட்டிலுள்ள 194 நகரங்களில் செயலிலுள்ள திட்டங்களின் மேம்பாட்டிற்காகவும் மற்றும் 97 நகரங்களின் புதிய திட்டங்களுக்காகவும் சிறுவாணி குடிநீர்த் திட்டத்திற்காகவும் 1977லிருந்து 1982 வரை 2656 லட்ச ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனாக அளித்துள்ளது. மேலும் 1982-83ம் ஆண்டிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்காக ரூ. 747.53 இலட்சம் கடனுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

**கிராமக் குடிநீர் திட்டங்கள் பராமரிப்பு**

1976ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் முதல் தமிழ்நாட்டிலுள்ள கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் ஆகியவற்றின் அன்றாட பழுதுகளை நீக்கிப் பராமரிக்கும் பொறுப்பை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே ஏற்று செயலாற்றி வந்தது. மதுரையில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கைப்பம்புகள் பராமரிப்புப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகளை, விரைந்து, சுலபமாகப் பயனுள்ளதாக நிறைவேற்றும் பொருட்டு, கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தரும் பணிகளை மேற்கொண்டு வரும் ஊராட்சி ஒன்றியங்களிடம் விட்டுவிடலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கைப்பம்புகளின் பராமரிப்புப் பணிகளை 23-7-1981 முதல் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் ஒப்படைத்து அரசு ஆணை பிறப்பித்தது. மீண்டும் 1981 நவம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் விசைப் பம்புகளின் பராமரிப்பைச் சரிவரக் கவனிக்கும் பொருட்டுஊராட்சி ஒன்றிய, கோட்ட, மாவட்ட அளவில் தக்க தொழில் நுட்பப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, பணியிடங்கள் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசின் இறுதிஆணை வரும் வரையில், பராமரிப்புப் பணிகளைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே கவனித்துக்கொள்ளுமாறு முடிவெடுக்கப்பட்டு, வாரியம் பராமரிப்புப் பணிகளைத்தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

# சுற்றுப்புறச் சூழலில் நகர்ப்புற வளர்ச்சிப் பிரச்சினைகள்

பல நாடுகளைப்போல் இந்தியாவிலும் இயற்கை மனிதனின் கொடூரத் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுப்புறப் பிரச்சினைகள்பல ஏற்பட்டு மக்களின் நல்வாழ்வு பாதிக்கப்படுகிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் செல்வத்தின் மூலம் சுற்றுப்புறச் சுகாதாரப் பிரச்னைகள் பெரும்பாலும் ஏற்படுகின்றன.

வாழ்க்கைக்கான ஆதாரங்கள் வீணாக்கப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் சுற்றுப்புற ஆதாரங்களுக்கான பிரச்சினைகள் அடிப்படைத் தேவைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக உருவாகின்றன. சுற்றுப்புறச் சுகாதாரப் பிரச்சினையை திவாரி குழு இரண்டு பிரிவாக வகைப்படுத்தியுள்ளது. வறுமை மற்றும் வளர்ச்சி மூலம் ஏற்படக்கூடிய பிரச்சினை மற்றும் வளர்ச்சி ஏற்படும்போது எதிர்பாராமல் ஏற்படக்கூடிய விளைவுகள்என்று இந்தப் பிரச்சினை பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் பிரச்சினை மூலம் சுகாதாரமும், இயற்கை ஆதாரங்களின் ஒருங்கிணைப்பும் பாதிக்கப்படுகின்றன. இதற்குக்காரணம் வறுமை மற்றும் போதிய உணவு, எரிபொருள். இருப்பிடம், வேலை வாய்ப்பு முதலியவை இல்லாமை ஆகும்.

இரண்டாவது பிரச்சினை வேகமாக பொருளாதார வளர்ச்சியை எட்டும் முயற்சியின் ஒரு எதிர்விளைவாக ஏற்படுகிறது.

சுற்றுச்சூழல் பற்றிய நீண்ட கால அடிப்படையிலான கவனம் போதிய அளவு செலுத்தப்படாதது மற்றொரு காரணமாகும். சமூக, அரசியல், தொழில்நுட்ப சுற்றுச் சூழல் அம்சங்கள் காரணமாகவும் சுற்றுப்புறம் பாதிக்கப்படுகிறது. எனவே, சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டுமானால் தேசிய வளர்ச்சிப் பணிகள் உறுதியான காரண காரியம் உள்ள அடிப்படையில் அமைய வேண்டும்.

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கும் போது அந்தந்தப் பகுதியிலுள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். இயற்கை ஆதாரங்களை நியாயமான முறையில் பயன்படுத்த வேண்டும். மனிதர்கள் வாழும் பகுதியைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்ய வேண்டும். மனிதர்கள் வாழும் பகுதி என்று கூறும்போது கிராமப்புறத்திலும் நகர்ப்புறத்திலும் அடிப்படையான தேவைகள் வழங்கப்பட வேண்டும். இதனால் இயற்கை சூழல், கலாச்சாரப் பாரம்பரியம் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ளலாம். நாடு முழுவதும் 5 இலட்சத்து 79 ஆயிரம் கிராமங்கள் உள்ளன. இவற்றில் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் 3 ஆயிரத்துக்குமேல் காணப்படுகின்றன. நாட்டின் மக்கள் தொகையில் முக்கால் பகுதியினர் கிராமப்புறக் குடிசைப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

கிராமப்புறங்களில்சுற்றுப்புறத் தூய்மை பிரச்சினைகள் பெரும்பாலும் இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்துவது அல்லது தவறாகப் பயன்படுத்துவது மூலம் ஏற்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம் வறுமையும், வேறு வழி இல்லாத நிலைமையுமே ஆகும். நகர்ப்புறங்களில் அரசு, நகரியம் மற்றும் மாநகராட்சி நிர்வாகங்கள், தொலைநோக்குடன் திட்டமிட்டு வசதிகளைப் பெருக்காததால் சுற்றுப்புறத் தூய்மை தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன. அதே நேரத்தில் வேலையில்லாத திண்டாட்டம், கிராமப்புறங்களில் போதிய வேலையின்மை ஆகியவை நகர்ப்புறங்களில் மக்கள் குவியலை ஏற்படுத்தி சுற்றுப்புறத் தூய்மை பிரச்சினைகளை உருவாக்குகின்றன.

**எம். கே. முகர்ஜி,**
**செயலர்,**
**பொதுப்பணி மற்றும் வீட்டு வசதி அமைச்சகம்.**

1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 223.73 சதவிகிதம் அல்லது சுமார் 15.62 கோடி பேர் நகரங்களில்வாழுகின்றனர். 1971-81 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில் நகர்ப்புற மக்கள் தொகை 46 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களில் 18.96 சதவிகிதம்தான் இப்படி மக்கள் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் 3245 குடிசைப் பகுதிகள் உள்ளன. நகரங்களிடையை மக்கள் தொகைப் பெருக்கம் வேகமாக அதிகரித்துள்ளன. மொத்த மக்கள் தொகையில் இது 60 சதவிகித பெருக்கத்தைக்காட்டுகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 27 சதவிகிதம்பேர் 12 பெருநகரங்களில் வசிக்கின்றனர். இந்த நகரங்களில் சுமார் 53 சதவிகிதம் மக்கள் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பெருமளவு கிராமப்புற மக்கள் குடியேற்றமே காரணமாகும். சுதந்திரத்துக்குப் பின் பல புதிய நகரங்கள் தோன்றியுள்ளன. ஏற்கனவே இருந்த நகரங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன. இதனால்நகர்ப்புறத்தேவையும், சுற்றுப்புறச் சூழலும் பாதிப்படைந்துள்ளன. குடிசைகள், மக்கள் நெரிசல், போக்குவரத்து பெருக்கம் திட்டமற்ற வளர்ச்சி பணிகள், அபிமானம் இல்லாத மனிதப் போக்கு போதிய தண்ணீர் சப்ளை இல்லாமை, சுகாதாரச் சீர்கேடு போன்றவை கற்

றுச்சூழல் பாதிப்படைய பெரிதும் காரணமாகின்றன. பல நகரங்களில் சுகாதார மற்றும் குடிநீர் சர்வீசுகள் மோசம் அடைந்து வருகின்றன. 1981 மார்ச் இறுதி வரை உள்ள நிலவரப்படி 69 சதவிகித நகர்ப்புற மக்களுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆனால், வடிகால் வசதி 27 சதவிகிதம் பேருக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. 1 இலட்சத்துக்கு குறைந்த மக்கள் தொகை கொண்ட நகரங்களின் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது.

போதிய நிதி ஆதாரங்கள் திரட்டுவதற்கு இயலாத சூழ்நிலைகளாகும். பிரச்சினைகள் மேலும் மோசமடைகின்றன. நகர்ப்புற பிரச்சினைகள் பற்றிக் கூறும் போது குடிசைகளே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்பது உட்படகார் நிறுத்த இடமில்லை. கிராமப்புறங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது என்பது வரை மேட்டுக்குடியினர் பல காரணங்களைக் கூறுகிறார்கள். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் வறுமையை அகற்றுவதற்கு கிராமப்புற அபிவிருத்தி உயர் முன்னுரிமை பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதே நேரத்தில் நகர்ப்புற அபிவிருத்தியையும் கவனத்தில் கொள்வது அவசியம். இதனால் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சியில் நகர்ப்புறமும் பங்கேற்க முடியும். நகர்ப்புறங்களில் ஏராளமான மக்கள் மிகப்பரிதாபமான நிலையில் வாழுகின்றனர்.

நகர சபைகள் பல பணிகளைச் செய்வதாகக்கூறுகின்றன. ஆனால் நடைமுறையில் அத்தனையும் செயல் படுவதில்லை இதற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறையும், அரசியல் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளுமாகும். இந்த அமைப்புகளுக்குப் போதிய நிதி ஆதாரங்களை உருவாக்கி அதன் திறமையை அபிவிருத்தி செய்யாவிட்டால் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் போய்விடக் கூடும். எனவே நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கான திட்டங்கள் மிகவும் கவனத்துடன் தயாரிக்கப் பட வேண்டும். நகர் மக்களின் தேவையை அறிந்து அவர்கள் குடியிருப்பதற்கான வசதிகளை அளிப்பது அவசியம். நகர்ப்புறத்தில் பயன்பாடு திட்டமிட்ட அடிப்படையில் சிக்கனமாக அமைய வேண்டும். பணி இடங்களுக்கு அருகிலேயே தொழிலாளர் குடியிருப்பு அமைத்தால் ஏழை மக்கள் அதிக நேரம் பயணம் செய்வது தவிர்க்கப்படும்.

நகர்ப்புறங்களிலுள்ள ஏழைகளை வறுமைப்பிடியிலிருந்து விடுவிப்பது மிக முக்கியமானது. இதற்கு வேலைவாய்ப்பும், குடியிருப்பு வசதிகளும் அதிக அளவில் செய்து தரப்பட வேண்டும். சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் சுற்றுப்புற அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று மத்திய ஆதரவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள் செய்து தருவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்படுகிறது. குடிசைப் பகுதி பிரச்சினைகள் ஒரு குறிப்பிட்ட கால வரையறை கொண்ட வகையில் தீர்க்கப்பட வேண்டும். மிகவும் எளிய மக்களுக்கு முன்னுரிமை தருவது அவசியம்.



குடிசைப் பகுதி மற்றும் ஏழைகளுக்கான வீட்டுவசதி போன்றவை பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. பெரிய நகரங்களில் சர்வீஸ் மற்றும் சுற்றுச் சூழல் மோசம் அடைந்து வருவது நீண்ட நாட்கள் தாக்குப் பிடிக்க முடியாத ஒரு பிரச்சினையாகும். எனவே, காலங் கடத்தாமல் திட்டமிடும் அதிகாரிகளும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழில் நிறுவனங்களும் சமூகச் சேவை நிலையங்களும், பத்திரிகைகளும், சமுதாயத் தலைவர்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சர்வீசுகள் அபிவிருத்தி செய்யப்படவும் பராமரிக்கப்படவும் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

நகரங்களில் மக்கள் குவியல் மற்றும் அதிக அளவில் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மரங்களை நட்டால் மட்டும் போதாது. அவற்றை ஆடு, மாடுகள் அழித்து விடாதபடி பராமரிப்பதும் அவசியம்.



# மாமல்லபுரம்:
# இளைஞர் முகாம் திறப்பு விழா!

நிகழ்ச்சித் தொகுப்பு :
—பி.எம்.ராஜேந்திரன்

மாமல்லபுரத்தில், கவின்மிகுகடற்கரைக் கோயில் அருகே, பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவில் 'சுற்றுலாப் பயணியர் முகாம்' ஒன்று 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவும், திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கான கால்கோள் விழாவும் அண்மையில் (30.5.'82) சிறப்புற நடைபெற்றன.

12 தனிக்குடில்கள், 40 படுக்கைகள் கொண்ட இளைஞர்கள் முகாம், 8 துணிக் கூடாரங்கள், சிற்றுண்டி விடுதி ஆகியவை இதில் அடங்கும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பத்தாண்டு நிறைவு விழாவும் இவ்விழாவுடன் இணைந்துகொண்டாடப்பட்டது.

மாண்புமிகு இந்திய அரசு சுற்றுலா-விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஏ.பி. சர்மா அவர்கள் இவ்விழாவில் பங்கேற்று சுற்றுலாப் பயணியர் முகாமைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி.ஆர். அவர்கள், திறந்தவெளி அருங்காட்சியகத்திற்குக் கால்கோள் இட்டு, சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பத்தாண்டு நிறைவுவிழாவையொட்டிய பரிசுகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக அரசு செய்தி-அறநிலையம் - சுற்றுலாத்துறை அமைச்சர் திரு, இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது.

துவக்கத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு துரைகோவிந்தராசன் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு ஜே.ஆர். இராமநாதன் நன்றி கூறினார்.

## சிறப்புரைகள்

இவ்விழாவில் பலரும் சிறப்புரையாற்றினர்.

கடந்த ஓராண்டாக இம்முகாமை உருவாக்கப் பாடுபட்டவர்களுக்கும், அருங்காட்சியகம் எப்படி அமையவேண்டுமென அறிக்கை தயாரித்தளித்த குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார் செய்தி சுற்றுலா தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலாளர்திரு, பி.பி. கிருஷ்ணசாமி.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மாமல்லபுரம் சரித்திரச் சிறப்புடையதாக இருந்தது. அச்சிறப்பு மீண்டும் திரும்புவதற்கு அடையாளம் போன்றது இவ்விழா எனக் குறிப்பிட்டார், மத்திய சுற்றுலா-விமானப் போக்குவரத்துத் துறைச் செயலாளர் டாக்டர் திரு பி. வெங்கட்ராமன். மேலும் அவர் பேசுகையில், இந்தவிழா இந்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையில் உள்ள நல்லுறவுக்கோர் எடுத்துக்காட்டு என்றார்.

திரு இரா. அன்பரசு எம்.பி. பேசுகையில்—வசதிபடைத்தவர்களுக்காக நட்சத்திர ஓட்டல்கள் கட்டப்பட்டுவரும் இக்காலத்தில் ஏழை எளிய மக்களின் வசதி கருதி இப்படியொரு முகாமைத் தமிழக அரசுஅமைத்திருப்பதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன் என்றார்.

மாண்புமிகு தமிழகச் சிறப்புப் பிரதிநிதி திரு ஆர். மோகனரங்கம் எம்.பி. பேசுகையில்-மாமல்லபுரத்தைச் சிறந்த சுற்றுலாமையமாக்கத் தக்கவகையில் நாடாளுமன்றத்தில்









தான் ஆற்றிய உரைகளின் சாரங்களைச் சுருக்கிச் சொல்லி, அவைகளை விரைந்து நிறைவேற்றி தமிழகச் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. துரைகோவிந்தராசன் - ஆங்காங்கே ஐம்பது, நூறு என்று வாடகை வசூலித்துவரும் இக்காலத்தில், எளிய மக்களும் சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரவேண்டுமென்ற கருத்தில் உதகை போன்ற இடங்களில் கூட இப்படி ஏழரை ரூபாய் மட்டுமே வாடகையாக வரம்பிட்டு சுற்றுலா இளைஞர் முகாம்களை அமைத்திருக்கிறோம். தென்னிந்தியாவிலேயே சிறந்து விளங்குவது தமிழ்நாடு சுற்றுலாத்துறைதான் என்று பெருமையோடு குறிப்பிட்டார். மாமல்லபுரத்தில் குடும்பத்தோடு தங்கத் தகுந்த தனிக் குடில்களுக்கு ரூ. 30ம், துணிக் கூடாரங்களுக்கு ரூ. 10-ம் வாடகையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

செங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எச்.ஜே. இராமச்சந்திரன் பேசும்போது - தமிழ்நாடு சுற்றுலாத்துறை, சென்ற ஆண்டில் இந்திய அரசுக்கு 564 கோடி ரூபாய் ஈட்டித் தந்துள்ளது. இந்தியாவுக்கு வெளிநாட்டிலிருந்து எட்டரை லட்சம் பயணிகள் வந்ததில் 30 ஆயிரம் பேர் தமிழகத்திற்கு வருகை தந்தனர் என்றார்.

தொகுதிச்சட்டமன்ற உறுப்பினர் திரு ஆனூர் பு.கோ. ஜெகதீசன் மாண்புமிகு மத்திய அமைச்சர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை-சுற்றுலா அமைச்சர் ஆகிய மூவருக்கும் பெரிய அளவிலான வாழ்த்து மடல்களைப் படித்தளித்தார்.

**தலைமை உரை**

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையம்-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு, இராம. வீரப்பன் அவர்கள் தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது;

இந்த விழாவுக்கு, இதற்கு முன்னால் மூன்று முறை நாள் குறிப்பிடப்பட்டு, மாண்புமிகு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் வரச் சாத்தியப் படாததால்-நமது முதல்வர் அவர்கள், அவர் வருகிற வரை பொறுத்திருக்கலாம்; மத்திய அமைச்சர் இல்லாமல் விழாவா? அவர் எப்போது வர முடிகிறதோ அப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கூறியதன்பேரில் தள்ளிவைக்கப்பட்டு இப்போது நடைபெறுகிறது. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடைப்பட்ட நல்லுறவுக்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஏழரைரூபாய் வாடகையில், 40 படுக்கைகள் கொண்ட பயணியர் முகாமை இங்கே மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். குடும்பத்தோடு தங்க 30 ரூபாய் மட்டுமே தனிக் குடில்களுக்கு வசூலிக்கப்படும்.

திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். 50 இலட்சம் ரூபாய் செலவில் அமையவிருக்கும் அந்த அருங்காட்சியகத்தில், உலகமே காட்டுமிராண்டித்தனத்தில் இருந்த காலத்திலேயே தமிழன் எப்படி நாகரிகத்தோடு வாழ்ந்தான் - வளர்ந்தான் என்பதை விளக்கும் 50 தலைப்புகளிலான கல்வெட்டுகளும் சிற்பங்களும் இடம் பெறும் மூன்றாண்டுக் காலத்தில் இந்தப் பணி நிறைவடையும்.

மாமல்லபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சி அமைக்க, பாதித் தொகையைத் தர மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், தொல்பொருள் ஆய்வுத்துறை அதிலே கை வைக்காதே என்கிறது.

இந்த நிகழ்ச்சியையொட்டியாவது கடற்கரைக் கோயிலுக்கு, மிகவும் தள்ளி மணல் வெளியிலிருந்து விளக்குப்போடலாம் என்றிருந்தோம். அதற்கும் அவர்கள் மறுத்துவிட்டனர். எகிப்தில் பிரமிடுகளையெல்லாம் கூட இரவில் கண்டு ரசிக்கும்படி விளக்கலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. இங்கே, சுற்றுலாத் துறை வளர்ச்சியின் குறுக்கே நந்திபோல் இருக்கிறது தொல்பொருள் ஆய்வுத்துறை.

பழங்காலச் சின்னங்கள் பாதுகாக்கப்படாவிட்டால் நாளடைவில் அவை அழிந்து விடக்கூடும். புராதனத் தன்மை கெடாமல் அவைகளைப் புதுப்பிக்க அனுமதி தருவதே முறையாகும்.

இங்கே, சென்னை விமானநிலையத்தில் வந்திறங்கும் பயணிகள் பெரும் கெடுபிடிகளுக்கு அவசியமில்லாமல் ஆளாகிறார்கள். இதனாலேயே பெரும்பாலோர் பம்பாயிலோ டில்லியிலோ இறங்கிக் கொள்வதால் தமிழகத்திற்குச் சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் எண்ணிக்கை குறைகிறது.

இது குறித்து நமது முதல்வர் அவர்களும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இந்தச் சங்கடங்கள் நீங்க மத்திய அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுகிறேன்.

முதலீடு இல்லாமலே அரசுக்கு நல்ல நிதி ஆதாரம் தேடித்தருவதாகச் சுற்றுலாத்துறை இருக்கிறது. ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் இத்துறைக்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

**மத்திய அமைச்சர் உரை**

மாண்புமிகு மத்திய அரசு சுற்றுலா விமானப்போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு, ஏ.பி. சர்மா அவர்கள் பேச்சு விவரம் வருமாறு:

வேறுசில முக்கியப் பணிகள் காரணமாக, முன்பு மூன்றுமுறை தேதிதந்தும் வர இயலாமைக்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகிலேயே இந்தியா ஒரு மகத்தான நாடு. இந்தியாவில் தமிழகம் ஒரு மகத்தான நாடு. இந்த நாட்டின் வளர்ச்சியில் மத்திய அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. தமிழகச் சுற்றுலாத் துறை வளர்ச்சியில் நாங்கள் மிகவும் ஆர்வம் காட்டுகிறோம்.

சென்னை விமான நிலையத்தினருகே பத்துக்கோடி ரூபாய் செலவில் துணை விமான நிலையமொன்று 18 மாத காலத்தில் அமைக்கப்படவிருக்கிறது. இந்த விமான நிலையம் உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

மதுரை விமான நிலையத்தை விரிவுபடுத்த ஒரு கோடி ரூபாயும், திருச்சி விமான நிலையத்தை விரிவுபடுத்த 20 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கியுள்ளோம்.

சென்னையிலிருந்து திருச்சிக்கு போயிங் விமானப் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.

ஜுலை முதல் தேதியிலிருந்து சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கும்கோலாலம்பூருக்கும் இடையே நேரடி 'ஏர்பஸ்' விமானப்போக்குவரத்து தொடங்கப்படவிருக்கிறது.

கல்கத்தாவில் உள்ளது போல், பம்பாயிலும் டில்லியிலும் கட்டப்பட்டு வருவது போல் - தமிழக முதல்வர் அவர்கள் இடம் தந்தால் சென்னை விமானநிலையம் அருகிலும் ஓட்டல் கார்பொரேஷன் மூலம் சர்வதேச ஓட்டல் ஒன்று கட்டப்படும்.

மாமல்லபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சி அமைக்க தொல்பொருள் ஆய்வுத்துறை தடையாக இருப்பதாகச் சொன்னார்கள். டில்லி செங்கோட்டையிலும், காஷ்மீர் சாலிமாரிலும் ஆமதாபாத் சபர்மதி ஆசிரமத்திலும், அதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் எதனால் இப்படி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கல்வித்துறையோடு தொடர்புடைய தொல்பொருள் ஆய்வுத்துறையோடு பேசி, மாமல்லபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சி நடத்த விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.

மாமல்லபுரம், கன்னியாகுமரி, இராமேசுவரம் போன்ற சுற்றுலாத்துறை மையங்களின் வளர்ச்சிக்கான 'மாஸ்டர்பிளான்' திட்டத்தை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது. அதில் ஒருபாதி நடப்பு ஆறாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்திலும், மீதி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னையுடன் பாண்டிச்சேரி, தஞ்சை, மதுரை, நெல்லை ஆகிய நகரங்களை இணைக்க உள்நாட்டு விமான சர்வீஸ் நடத்துவது பற்றியும் ஆலோசித்து வருகிறோம். மேற்குறிப்பிட்ட நகரங்களில் விமானநிலையம் இல்லாத இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்படும்.

ஆக்கப்பணிகளைப் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் எல்லாம் தமிழ்நாடுதான் எங்கள் இதயத்திலிருக்கிறது.

**முதல்வர் உரை**

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி, சிறப்புறப் பணிபுரிந்த 59 பேர்களுக்குக் கைக் கடிகாரம்







வழங்கியும். 'டிராவல் ஏஜன்சி'யைச் சேர்ந்தவர்களுக்குக் கேடயம் வழங்கியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசியபோது குறிப்பிட்டதாவது:

இந்த ஊரை மகாபலிபுரம் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். அது தவறு. மாமல்லபுரம் என்பது தான் சரி. மகாபலிபுரம் என்றால் மகாபலி சக்ரவர்த்தியைக் குறிப்பிடுவது ஆகிவிடுமேதவிர, மாமல்லனைப் பற்றிய நினைவு வராமல்போய்விடும். ஆகவே, இனியாவது மாமல்லபுரம் என்றே அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஏழரை ரூபாயில் பயணிகள் தங்க விடுதி கட்டப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்கள் நலன் கருதியே இவ்வாறு செய்திருக்கிறோம். எந்த மாநிலத்திலிருந்து வந்தாலும் இந்த விடுதியில் தங்கிப்பயனடையலாம். இப்படிச் செய்திருப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு இலக்கணம் வகுத்ததாகும்.

இங்கே 25 ஏக்கர் நிலப்பரப்பில், 50 இலட்சம் ரூபாய் செலவில் அருங்காட்சியகம் ஒன்று இன்னும் சில ஆண்டுகளுக்குள் அமைக்கப்படவிருக்கிறது. இந்தக் காட்சியகத்தில் தமிழ்ப் பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் 50 சிற்பங்கள் இடம் பெறும்.

மாமல்லபுரத்தில் மேற்கொள்ளப்படும் பலவகைப்பட்ட திட்டங்கள் காரணமாக, நாம் பாதிக்கப்படுவோமோ என்று இங்கிருப்பவர்கள் அஞ்சத் தேவையில்லை.

முன்பு, சென்னையில் உலகத்தமிழ் மாநாடு நடந்த நேரத்தில்-அமரர் அண்ணா அவர்கள், பூம்புகாரில் இருந்ததாமே அதைப் போலவே சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை வழி நெடுகிலும் கடைகள் - அங்காடிகள் அமைக்க முடியுமா என்று என்னிடம் கேட்டார்கள். பிறகு அதுபற்றி யோசித்த போது, அதற்குப் பலகோடி ரூபாய்கள் தேவைப்படும் என்பதால் அத்துடன் நிறுத்தப்பட்டு விட்டது.

அப்படிப்பட்ட திட்டத்தின் முதற்கட்டமே இந்தப் பணி. எந்த நாட்டிலிருந்தெல்லாமோ வருகிறவர்களுக்கு, எல்லாப் பொருட்களும் கிடைக்கும் விதத்தில் வழி நெடுகிலும், இருபுறங்களிலும் கடைகள் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு என்ற பெயர் வெளிநாடுகளிலெல்லாம் இன்னும் நல்லமுறையில் விளம்பரப் படுத்தப்படவேண்டியுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாகப் பல்வேறு புதிய விமானப் போக்குவரத்துகளைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தவிருப்பதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகம் என் இதயத்தின் அருகே இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதற்காக, அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

## பள்ளி நேரத்தில் மதபோதனை— கல்வி நிலையங்கள் தவிர்க்குமாறு வேண்டுகோள்

அண்மையில் ஒரு தொடக்கப்பள்ளிக்கு முதலமைச்சர் அவர்கள் முன்னறிவிப்பின்றி சென்றபோது பள்ளி நேரத்தில் மத போதனை நடந்துவந்ததைக் கண்டு, அவ்வாறு செய்வது விதிகளுக்குப் புறம்பானது என்று பள்ளித் தலைமையாசிரியருக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்திய அரசியல் சட்டத்தின்படியும் தமிழ்நாட்டுக் கல்வி விதிகளின்படியும் அரசு கல்வி நிலையங்களிலும், உள்ளாட்சி மன்றக் கல்வி நிலையங்களிலும் பொதுவில் மத போதனை செய்யத் தடை உள்ளது.

அரசின் நிதியங்களிலிருந்து முற்றிலும் பராமரிக்கப்படும் கல்வி நிறுவனம் எதிலும், சமய போதனை எதுவும் அளிக்கப்படுதல் கூடாது என அரசியலமைப்பின் 28 (1) ஆவது பிரிவு கூறுகிறது.

ஆனால் 28 (2) ஆவது பிரிவின்படி ஒரு கல்வி நிறுவனம் அரசினால் நிர்வகிக்கப்பட்டு, ஆனால் அதில் சமய போதனை வழங்கப்பட வேண்டும் என வேண்டுறுத்துகிற நிலை கொண்ட (Endowment) அல்லது கட்டளை (Trust) ஏதொன்றின் படியும் அது நிறுவப்பட்டிருப்பதாய் இருக்குமானால், அத்தகைய கல்வி நிறுவனத்திற்கு இந்தத் தடை பொருந்தாது. மேலும், அரசினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற அல்லது அரசு நிதியங்கள் விருந்து உதவி பெறுகிற கல்வி நிறுவனம் எதிலும் பயிலுகிற எந்த நபரும் அத்தகைய நிறுவனத்தில் வழங்கப்படக்கூடிய சமய போதனை எதிலும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்றோ, அத்தகைய நிறுவனத்தில் அல்லது அதனுடன் சேர்ந்த இடம் எதிலும் நடத்தப் பெறக்கூடிய சமய வழிபாடு எதற்கும் வந்திருக்க வேண்டும் என்றோ, அத்தகைய நபரோ அல்லது அவர் இளையவராக (Minor) இருந்தால், அவருடைய காப்பாளரோ (Guardian) இதற்கு தம் சம்மதத்தை அளித்தாலன்றி, கட்டாயப்படுத்தப்படக் கூடாது என பிரிவு 28(3) தெளிவாகக் கூறுகிறது.

ஆகவே, அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு மானியம் பெறும் தனியார் கல்வி நிலையங்களிலும் எந்தெந்த மாணவர்கள் அவர்கள் வயது வராதவர்களாயிருப்பின் அவர்கள் காப்பாளர்கள் மத போதனை பெற ஒத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே சில நிபந்தனைகளுக்குட்பட்டு மத போதனை அளிக்கலாம். அத்தகைய மத போதனையைக் கல்வி நிலைய வேலை நேரத்தில் அளிக்கக்கூடாது. எந்தக் கல்வி நிலையமாவது மேற்கண்டவற்றை மீறி நடப்பது பள்ளிக் கல்வித் துறைக்கோ பிற அரசுத் துறைக்கோ தெரியப்படுத்தப்பட்டால் அத்துறைகள் தக்க நடவடிக்கை எடுக்கும்.

மேற்சொன்ன விதிமுறைகளுக்குப் புறம்பாக எந்தப்பள்ளியிலும் மத போதனை அளித்தல் இந்திய அரசியல் சட்டத்திற்கும் கல்வி விதிகளுக்கும் புறம்பானதாகையால் தவிர்க்கும்படி அனைவருக்கும் அரசு அறிவுறுத்துகிறது.



காயிதெ மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் 87வது பிறந்தநாள் விழா, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கா. இராசாமுகமது அவர்கள் தலைமையில் ஜூன் 5ஆம் நாளன்று சென்னை ராஜாஜி மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

துவக்கத்தில் இசைமணி திரு யூசுப் தமது குழுவினருடன் இன்னிசை விருந்தை வழங்கினார். காயிதெ மில்லத் அவர்களின் சிறப்புகளை எடுத்துரைக்கும் பாடல்களை அழுத்தமான உச்சரிப்புடனும் அன்பு நிறைந்த உணர்வுடனும் பாடி, அவையினரை வயப்படுத்திக் கொண்டிருந்தார்.

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்திரு கா.இராசாமுகமது அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

''சொல்லாலும் செயலாலும் தூயவராக-ஒழுக்கத்தின் உறைவிடமாக, பண்பாட்டின் வடிவமாகத் திகழ்ந்தவர் காயிதெ மில்லத் அவர்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கிடையே அவரைப்போன்ற மனிதர்கள் வாழ்ந்தது கிடையாது.

''அவரது நூல்களைப் படிக்கின்றபோது, ஒரு மனிதரின் உள்ள உணர்ச்சியை மட்டுமல்ல, அந்தக் கால கட்டத்தையே பார்க்க முடிகிறது.

''சூழ்நிலையின் காரணமாக-தோன்றிய இடத்தின் காரணமாக அன்றிருந்த காலகட்டத்தின் காரணமாக அவர் எந்தவிதமான மாற்றமும் அடையவில்லை. அதனால் தான் கண்ணியத்துக்கு உரியவர் என்று அவர் சொல்லப்பட்டார்.

''இனிமை, எளிமை, அறிவு, ஆற்றல், திறன், அன்பு, பணிவு, வாய்மை, தூய்மை, இவற்றின் மொத்த உருவம் காயிதெ மில்லத் அவர்கள். பேச்சை, மூச்சை, எண்ணத்தை, எழுத்தை, சிந்தனையை, செயலை, வாழ்வை, வளத்தை, உழைப்பை, உயிரை நாட்டுக்கு அர்ப்பணித்த தலைவர் அவர்''

அடுத்து உரையாற்றிய வலம்புரிஜான் தெரிவித்தார்:

''காயிதெ மில்லத் அவர்கள் நாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நாட்டுத் தலைவர் மட்டுமல்லர், மொழிப்போராட்டத் தலைவரும் ஆவார்.

''அவரது பார்வை விசாலமானதாக இருந்தது. அவர் அறிவு ஜீவியாக வாழ்ந்தார். தீர்க்கதரிசன உள்ளம் கொண்டிருந்தார்''.

அடுத்து உரையாற்றிய திரு. ஏ.பி. ஜனார்த்தனம் குறிப்பிட்டார்:

''காயிதெ மில்லத் அவர்கள் சிறந்த பண்பாளர். அவர் அடக்கத்தின் எல்லை. உறுதி மிக்க தலைவர்; அவரது சிந்தனைகள் சீரியவையாகும். பெருந்தன்மையும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் அவரிடம் இருந்தன.'

அடுத்துப் பேசிய திரு செய்கு தம்பி குறிப்பிட்டார்:

''கண்ணியமிக்க என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட பெருமை படைத்தவராக விளங்கினார் காயிதெ மில்லத் அவர்கள். அந்தச் சிறப்புக்கு உரியவராக இறுதிவரை வாழ்ந்தார்.''

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள், காயிதெ மில்லத் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''இன்று காயிதெமில்லத் அவர்களின் பிறந்தநாள்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர் பிறந்த முஸ்லீம் சமுதாயம் இந்த விழா

நிகழ்ச்சித் தொகுப்பு :
தமிழ்ப்பித்தன்





வைக்கொண்டாடவில்லை. அவர் சார்ந்திருந்த முஸ்லீம்லீக் கட்சி அவரது பிறந்த நாளைக்கொண்டாடவில்லை. ஆனால் தமிழக அரசே இன்று கொண்டாடுகிறது என்பது சிறப்பான செய்தியாகும்.

''அவர் நாடாளுமன்ற உறுப்பினராக டெல்லியில் வீற்றிருந்த போது, பத்தாண்டுக்காலம் அவரது அருகில் அமர்ந்திருக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

''சென்னையிலிருந்து டில்லி நோக்கி ரயில் பயணம் செய்யும்போதெல்லாம் அவருடன் பல முறை செல்லும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். அந்தப் பயணம் இன்பப் பயணமாக அமைந்திருக்கிறது. மறக்க முடியாத பயணங்கள் அவை.

"பயணத்தின்போது, உடனிருப்போரைக் களைப்புக்கு ஆளாக்காமல், இந்திய சரித்திரத்தைச் சொல்லிக் கொண்டே வருவார்.

''ஜனாப் ஜின்னா அவர்கள் பாகிஸ்தானைப் பெற்ற பிறகு, இந்திய நாட்டில் முஸ்லீம் லீக் கட்சிக்கு ஒரு தலைவர் தேவைப்பட்டார். அப்போது காயிதே மில்லத் அவர்களையே ஜின்னா தேர்ந்தெடுத்தார்.

''பம்பாயில், ஆக்ராவில், டெல்லியில், கல்கத்தாவில் எல்லாம் முஸ்லீம் லீக்கின் பெரும்புள்ளிகள் இருந்தனர். அவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள். காயிதெமில்லத் அவர்களை விட பட்டத்திலும் பணத்திலும் அந்தஸ்திலும் உயர்ந்தவர்கள். என்றாலும், காயிதெமில்லத் அவர்களைத்தான் இந்திய முஸ்லீம்களுக்கு வழிகாட்டியாகத் தேர்ந்தெடுத்தார் என்றால், காயிதெ மில்லத் அவர்களின் சிறப்பு எளிதாக விளங்கும்.

''தலைமைப் பதவியைப் பெற்றவுடன், காயிதெ மில்லத் அவர்கள் ''நாங்கள் இந்திய நாட்டின் முஸ்லீம்கள். நீங்கள் வேறு நாட்டவர்கள்; எங்களின் நிலை உங்கள் நிலையினின்றும் மாறுபடுகிறது'' என்று ஜின்னா அவர்களை வைத்துக்கொண்டு சொன்னார்.

''காயிதெ மில்லத் அவர்களுக்குத் தேசிய பாரம்பரியம் இருக்கிறதா? நாட்டுப் பற்று இருக்கிறதா என்று சிலர் கேட்டதுண்டு.

''சென்னை ராஜதானிக் கல்லூரியில் பி.ஏ. படித்துக்கொண்டிருந்தவர், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகப் படிப்பை உதறி வெளியே வந்தார்.

'அவர் அன்புக்குக் கட்டுப்பட்டவர்; அதிகாரத்தினாலோ, பணத்தினாலோ, பலத்தினாலோ சட்டத்தினாலோ அவரை வளைத்துவிட முடியாது.

சொல்ல வேண்டிய கருத்துக்களை அவர் ஆணித்தரமாகச் சொல்லுவார்.



1962ல் அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபாவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது அவர்கள் அடிக்கடி அங்குள்ள நூலகத்திற்குச் செல்வதுண்டு. அப்படி அங்கு சென்று படித்த போது, காயிதெ மில்லத் அவர்களின் நாடாளுமன்றப் பேச்சு வெளியிடப்பட்டிருந்த புத்தகத்தை அண்ணா அவர்கள் காண நேர்ந்தது.

''இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கத் தகுதி படைத்தது தமிழ்மொழி ஒன்றே'' என்று காயிதெ மில்லத் அவர்கள் ஒரு முறை பேசியிருந்தது அந்தப் புத்தகத்தில் வெளியாகியிருந்தது. அதைப் படித்துவிட்டு அறிஞர் அண்ணா அவர்கள்தான் காயிதெ மில்லத் அவர்களின் மொழிக் கொள்கையை நாட்டுக்கு எடுத்துரைத்தார். காயிதெ மில்லத் அவர்கள் 'நான் இவ்வாறு தமிழுக்கு ஏற்றம் தந்து பேசினேன்' என்று ஒரு இடத்தில் கூடக் கூறியது இல்லை. அதிலும் அவர் அடக்கமாகவே காட்சியளித்தார்.

''5 ஆண்டுக் காலம் சென்னை மாநிலச் சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருந்திருக்கிறார். எதிர்க்கட்சி என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணமாக அவர் திகழ்ந்தார்; வரம்பு மீறி அவர் ஒரு போதும் பேசியது கிடையாது. அரசியலில் அடி எடுத்து வைக்கும் இளைய தலை முறையினருக்கு அவரது சிந்தனைகள் வழி காட்டியாக அமையும் என்பது உறுதி.''

அதன்பின்னர், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஆய்வு அலுவலர் திரு பரஞ்சோதி நன்றி கூற, விழா இனிது நிறைவேறியது. காயிதெ மில்லத் அவர்களின் பிறந்தநாள் விழா, கருத்தில் நிறைந்த விழாவாக மலர்ந்தது.

# திரிபுராவில் ஒலித்த தீந்தமிழோசை



**யோ. தேவசகாயம்,**
**செய்தி-சுற்றுலா மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை.**

மத்திய அரசின் மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தின்படி, திரிபுரா மாநில அரசு, தமிழக அரசின் கலைக் குழுவிற்கு அழைப்பு விடுத்தது. இந்திய ஒருமைப்பாட்டுக்குச் செந்தமிழ் நாட்டின் சீரிய பங்கினையாற்று முகத்தான், மறைந்த நாட்டியக் கலை மேதை; தாமரைத் திரு. தண்டாயுதபாணியின் தவப்புதல்வி, செல்வி உமாவின் ''சுரவந்திதா'' எனும் நாட்டியப் பள்ளி, நந்தமிழ்க் கலைப் பெருமைகளை நனி சுமந்து, வட கிழக்கெல்லையில், வங்க தேசத்தின் வளைபிடியுள் இருக்கும் திரிபுராவை நோக்கி 21.4.82 அன்று, கலைப் பயணம் மேற்கொண்டது.

23.4.'82 அன்று காலை இரண்டு நாள் பயணத்தின் களைப்பு கல்கத்தா மாநகரில் கால்பட்டபோது தெரிந்தது. ஓடும் மேகங்களிடையே ஓடி, ஆடும் நதிகளின் மேல் ஆடி, அரை மணி நேரத்தில் அகர்தாலா நகரை அணைத்து நின்றது அந்த விமானம். தமிழ்க் கலைஞர்களை வரவேற்க, திரிபுரா அரசின் கல்வித் துறையே திரண்டு வந்திருந்தது. மலர்ந்த முகங்களின் கரங்கள் மலர்ச் செண்டுகள் வழங்கின. மகிழ்ச்சிப் பெருக்கில் அவர்கள் மனமொழிகள் கேட்டன.

சட்டமன்ற உறுப்பினர் விடுதி சந்தோஷக்களை கட்டியிருந்தது. வீசிய இளங்காற்றில் வெள்ளை மலர்கள் காலில் விழுந்து கொண்டிருந்தன. சிறிய நகரம். செந்தாப்போதரின் விருந்தோம்பல் அதிகாரத்துக்கு விரிவுரையாற்றும் வெள்ளை நெஞ்சங்கள், திரிபுராவின் அறிமுகமே திகைக்கச் செய்தது. மாலையில் வரவேற்பு வரிசை மமங்கும் வஞ்சியர் ஒரு வரிசை, நறுந் திலகமிட்டு வணங்கிய நங்கையர் ஒரு வரிசை, மாலையிட்டு மகிழ்ந்த மங்கையர் ஒரு வரிசை. இவரிடையே கணியன் பூங்குன்றனாரின் கவியோசை நெஞ்சில் எதிரொலித்தது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று திரிபுரா மக்களிடையே ஒன்றானோம். காட்சிக்கு எளியராம் கல்வி அமைச்சர் வந்தார். கனிவுடன் வாழ்த்தி வரவேற்றார். இரட்டை இனிப்புகள் வழங்கப்பட்டன. வழங்கியவர்கள் நேசம் நினைந்த போது அவை திகட்டவில்லை.

24.4.'82; முதன் முதலாக திரிபுராவில் தமிழ் ஒலித்தது. பாரதியின் பாடல்களை உமா தண்டாயுதபாணி உணர்ச்சியோடு பாடினார். அவற்றுக்கு உருக்கொடுத்து



உயிர் கொடுத்து ஆடினர் கலைச் செல்வியர். இன்னொரு முறை, இன்னொரு முறை என்று கெஞ்சும் குரல்கள் கேட்ட வண்ணமிருந்தன. ஆடல் வருணனைகளை ஆங்கிலத்தில் நானுரைக்க பேராசிரியர் முகர்ஜி, வங்க மொழியில் மொழி பெயர்த்தார். பாரதியைத் தென்னகத் தாகூர் என்று சொன்னவுடன் கரவொலிகள் முழங்கின. நிகழ்ச்சி நிறைவுற்றும், மண்டபத்தில் மக்கள் வெள்ளம் நீங்காது நின்றது. தமிழ்க் கலை சொன்ன தூதின் மகிமைதான், என்னே!

26.4.82 அன்று காலையிலிருந்தே கலைக் குழுவினர் பரபரப்புடனிருந்தனர். தங்கள் கல்வி அமைச்சர், தங்களைக் காண, தமிழ்க் கலையினைக் காண, அன்று அகர்தாலா வருகிறார் என்ற செய்தி கேட்டதும் சிறுமியர் முதல், பெரியவர் வரை உற்சாகமாயிருந்தனர். கலைக் குழுவினர் மொத்தமும் கல்வி அமைச்சரை வரவேற்க விமான நிலையம் புறப்பட்டனர். கல்வி அமைச்சரும், செய்தி, சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத் துறைச் செயலாளரும் நண்பகல் வந்து சேர்ந்தனர். களைப்புடன் காணப்பட்ட கல்வி அமைச்சர் கலைஞர்கள் மத்தியில் தம் களைப்பினை மறந்தார். கனிவுடன் உரையாடினார்.

அன்று மாலையில் நடந்த இரண்டாம் கலை நிகழ்ச்சி, இதயத்தை விட்டகலா இனிய நிகழ்ச்சியாகும். மாண்புமிகு கல்வி அமைச்சர் தமிழக மக்களின் சார்பாக, நிறையப் பரிசுகள் கொண்டு வந்திருந்தார். திரிபுரா மாநிலக் கல்வி அமைச்சருக்கும், கல்விச் செயலாளருக்கும், அகர்தாலா நகராட்சித் தலைவருக்கும், மலை வாழ் கலைஞர்களின் தலைவருக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் தமிழகத்து நினைவுப் பரிசுகளை வழங்கினார். திரிபுரா அரசு சார்பாக, மாண்புமிகு கல்வி அமைச்சருக்கும், செயலாளருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. தேசிய ஒருமைப் பாட்டுணர்வை வளர்ப்பதில் தமிழகத்தின் தானைத் தலைவர், புரட்சித் தலைவரின் தலைமையில் தமிழக அரசு முன்னணியில் விளங்குகிறதென்றும், கலையைக் காத்து வளர்ப்பதில், கலைஞர்க்கெல்லாம் கலைஞராய் விளங்கும் முதல்வர் கண்ணும் கருத்துமாய் இருக்கிறாரென்றும், அத்தகைய முதல்வரைப் பெற்ற தமிழ் மண்ணிலிருந்து வந்துள்ள தமது கலைஞர்கள், திரிபுரா மக்களின் மனதினைத் தங்கள் கலையின் வாயிலாகத் தொட்டிழுப்பார்கள் என்று தாம் நம்புவ

தாகவும், மாண்புமிகு கல்வி அமைச்சர் தம் சிறப்புரையில் குறிப்பிட்டார். மேலும், திரிபுரா மாநிலம், தனது கலைக் குழுவை தமிழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அன்புடன் அழைப்பு விடுத்தார். மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சரின் அழைப்பைத் தாம் நன்றியுடன் ஏற்பதாகத் திரிபுரா அரசின் கல்வி அமைச்சர் பதிலுரைத்தார். அன்றிரவு திரிபுரா மாநிலக் கல்வி அமைச்சர் விருந்தளித்தார். அடுத்த நாள் காலை, கலைக் குழுவின் தலைவி செல்வி உமா தண்டாயுதபாணிக்கும், அகர்தாலா நகராட்சித் தலைவருக்கும் மாண்புமிகு தமிழகக் கல்வி யமைச்சர் தேநீர் வழங்கினார். கலைப் பயணம் வெற்றியடைய வாழ்த்துக் கூறி, விடை கொடுத்தார்.



27.4.82 அன்று கல்வி அமைச்சரிடம் விடை பெற்ற கலைக் குழு தர்மா நகர் எனும் மாவட்டத்தை நோக்கிப் புறப்பட்டது. மஞ்சு தவழும் மலைத் தொடர்கள். மலையைத் தொடும் மரக் காடுகள். இயற்கை கொஞ்சும் எழில் பள்ளத்தாக்குகள், செண்பகப் பூக்களின் சிரிப்பு....எதிலும் மனம் லயிக்கவில்லை. மேட்டிலும், பள்ளத்திலும், வளைவுகளிலும், சரிவுகளிலும், உருண்டு சென்றது, பேருந்து. குடல்கள் குலுங்கின. எலும்புகள் அதிர்ந்தன. உடல்கள் வாடின. இளைத்துக் களைத்து, இருட்டில் சென்றடைந்தோம். தர்மா நகர் மிகச் சிறிய ஊர், உணவும் உறைவிடமும் வேண்டிய அளவுக்கு ஏற்பாடு செய்ய இயலாத நிலை. இத்தனை சோர்விலும், இலட்சியப் பயணம் தொடர்ந்தது.

கட்டுக் கடங்காத மக்கள் கூட்டம் கலையரங்கில் கூடியிருந்தது. அடங்கா ஆர்வத்தைத் தணிக்க அதிக நேரம் கலை நிகழ்ச்சி நடத்தி நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு கலைஞர்கள் திரும்பினர். ஒரே நாளில் இங்கு இரண்டு நிகழ்ச்சிகள் நடத்தினர். 29.4.82 அன்று தர்மா நகரை விட்டு தமிழகக் கலைக் குழு, புறப்பட்டு, கைலாச சாகர் எனும் மாவட்டத்தை அடைந்தது. 'வருக! வணக்கம்!!' என்று வரவேற்ற தமிழ்ப் பதாகைகள் புத்துணர் ஊட்டின. அன்றும் இரண்டு நிகழ்ச்சிகள்; அடுத்த நாள் அகர்தாலா வந்து ஓய்வெடுத்தனர். 1.5.82 அன்று உதயப்பூர் பயணம். உதயப்பூர் ஒரு எழில் கொஞ்சும் சிற்றூர். வனப்பும் வளமையும் வழங்கியவாறு ஒரு பெரிய ஏரி. அந்த ஏரியின் கரை மீது கலைக் குழுவினருக்கு வரவேற்பு. ஏழாவது கலை நிகழ்ச்சி இங்கு இனிதே முடிந்தது.

எட்டாம் நிகழ்ச்சி, என்றும் மறக்கவொண்ணாத் தன்மையுடைத்து. திரிபுரா மாநில முதலமைச்சர் மாண்புமிகு நிருபன் சக்ரபார்த்தி அவர்கள் அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றுச் சிறப்பித்தார். எழுபத்தைந்து வயதினைக் கடந்து விட்ட இளைஞர் அவர். தோற்றத்திலும், பழக்கத்திலும், மறைந்த பெருந் தலைவர் காமராஜரை நினைவூட்டினார். எளிமையே வடிவான முதலமைச்சர், இனிமையாகப் பேசினார். இதயம் திறந்து பேசினார். தமது சிறப்புரையில் தமிழக முதல்வரை அன்புடன் நினைவு கூர்ந்தார். நீண்ட நாள் பழகிய நெருங்கிய நண்பர் போல், முதலமைச்சர்கள் மாநாட்டில், தம்முடன் தமிழக முதல்வர் பழகியது பசுமையாய் தம் மனதில் இருப்பதாகவும், பாசம் நிறைந்த தமிழக முதல்வருக்குத் தேசம் நிறைந்த வாழ்த்துக்களையும், நெஞ்சம் நிறைந்த வணக்கங்களையும் உரித்தாக்குவதாகவும் குறிப்பிட்டார். கலைகள் சிறந்த தமிழ்நாட்டில் கலைஞர்களை வாழ்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்குவதைத் தாம் பெரும் பேறாகக் கருதுவதாக அவர் குறிப்பிட்ட போது கரவொலி அதிர்ந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் திக்கு முக்காடியது. எங்கள் மாநிலம் சிறிய மாநிலம். செய்ய நினைத்த வசதிகளைச் செய்ய முடியாமற் போயிருக்கலாம். குறைகளை மன்னித்து, எங்கள் அன்பினை ஏற்றுக் கொள்ளவும்'என்று அவர் பேசியபோது, திக்கு முக்காடிக் கொண்டிருந்த கண்ணீர் திரண்டு விழுந்தது.

3.5.82 அன்று [illegible]

மழை பொழிந்து கொண்டே இருந்தது. மழையைப் பற்றி மகாகவி பாரதியார் பாடிய பாட்டை உமா உணர்ச்சியோடு பாட, ஒப்பற்ற நடனமொன்று அரங்கேறியது. கொவ்வாயில் கலை நிகழ்ச்சி நடந்த கலை அரங்கிலிருந்து, வங்க நாடு, கூப்பிடு தொலைவில்தான் இருந்தது. வலது பக்கம் வங்கம், இடது பக்கம் இந்தியா என்று நெருக்கமாக எல்லை பிரிந்திருக்கிறது. எல்லையைக் கண்டோம், எல்லைக்கப்பால் உள்ள வங்க நாட்டிலும், தங்கத் தமிழோசை கேட்டிருக்கக் கூடும்.

4.5.82 அன்று கண்கள் கலங்கின. நெஞ்சங்கள் நெகிழ்ந்தன! விடை பெறும் நாள்! வீசி வரவேற்றஇளங்காற்றும் விழுந்து வணங்கிய மலர்களும் வேரிற் பழுத்த பலாக்களும் சோகமேற்று சோர்ந்தன. வெறிச்சோடிக் கிடந்த விடுதியைப் பார்த்து விருந்தோம்பினோர் விம்மினர். கலையின் மொழிக்கு எத்தனை பொருள், எத்தனை ஆழம் என்றுணர்ந்தேன். கணேசன் என்ற தமிழர் கைநிறைய இனிப்புடனும், கண் நிறைய நீருடனும் நின்ற காட்சி நெஞ்சை வலிக்கச் செய்தது. அன்பு, பண்பு, ஆசை, பாசம், அடக்கம் அனைத்தும் திரண்டு வந்து கரமசைத்தன. மெல்ல நகர்ந்தது, விமானம். பிரிந்தவர்கள் வேதனையைத் தவிர்ப்பது போல, வேகமுடன் மேலே எம்பியது விமானம். கீழே அகர்தாலா. ஒரே நிமிடம்.. மீண்டும் ஓடும் மேகங்கள்.. ஆடும் நதிகள்.. [illegible] நினைவுகள்! [illegible]

---

1966-ஆம் ஆண்டு உழவர்களுக்கு உறுதுணையாய் இருக்க தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் என்ற ஒரு அமைப்பு உண்டாக்கப்பட்டு, முதலில் டிராக்டர், ஆயில் என்ஜின் போன்ற விசைக் கருவிகளை தவணை முறையில் வாங்கி அளித்து, பெரும் அளவிற்கு உணவு உற்பத்தி செய்ய உதவிகரமாக இருந்தது. நாளடைவில் உழவுத் தொழிலில் நல்ல முன்னேற்றம் அடைந்ததன் காரணமாகவும், உழவர்கள் நேரிடையாக இக்கருவிகளை வாங்கிப் பயன்படுத்த, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் முன் வந்ததன் காரணமாகவும், தாய் தன்னுடைய இலக்கத்திலிருந்து மாறுபடாமல் வேளாண்மைத் தொழிலுக்கு உறுதுணையாக வேறு எத்த விதத்தில் இருக்க முடியும் என்பதை ஆராய்ந்து பல தொழில்களை தேவைக்கு ஏற்ப செயல்படுத்தி வருகிறது. டிராக்டர் போன்ற கருவிகளை வாங்கியும் இவ்விணையத்தில் உதிரி பாகங்களை குறைந்த விலையில் தரம் உயர்ந்தவைகளாகப் பெற்றும் உழவர்களுக்கு அளித்து விவசாயத்திற்கு சீரிய சேவை செய்து வருகிறது.

இது தவிர பி ஹெச் ஸி 10./• டிடிடி 25./• போன்ற பூச்சி கொல்லி மருந்துகளை தரமாக உற்பத்தி செய்து குறைந்த விலையில் உழவர்களுக்கு கிடைக்க, தாய் நிறுனம் முயற்சி செய்து வருகிறது. தாய் நிறுவனத்திலிருந்து அளிக்கப்பட்டு வருகின்ற பிஹெச்ஸி 10./• இன்று உழவர்களிடத்திலே பெரும் வரவேற்பைப்பெற்றிருக்கிறது.

மேலும் சூரியகாந்தி எண்ணையை உற்பத்தி செய்தும், சுத்திகரித்தும் நல்லதொரு விற்பனை நிலையமாகத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. சூரியகாந்திப் பயிர் ஆரம்ப காலத்திலே விளைவித்தபோது பயிர் நன்றாக விளைச்சலைக் கொடுத்தாலும், நல்ல விலையைப் பெற முடியாத காரணத்தினாலும், சூரியகாந்தி எண்ணையின் தரமும், குணமும், மக்களுக்கு விரிவாகத் தெரியாமல் இருந்த காரணமாகவும் சூரியகாந்தி விதையை வாங்கி எண்ணையைப் பிழிந்து விநியோகிக்கப் பலர் முன் வராததன் காரணமாகவும், உழவர்களிடத்திலே பெரும் ஏமாற்றம் ஏற்பட்டு ஏறக்குறைய 60,000 ஏக்கர்களுக்கு மேல் பயிராகி வந்த சூரியகாந்திப் பயிர் மிகவும் குறைந்து, பகுதியிலேயே சூரியகாந்திப் பயிர் இருக்குமோ என்ற அளவிற்கு ஒரு நிலையை அடைந்த போது தாய் நிறுவனம் அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு சூரியகாந்தி எண்ணையைப் பிழிந்து, சுத்திகரித்து, நல்ல முறையிலே மக்களுக்கு விநியோகிக்க முன் வந்தது. இதன் மூலமாக சூரியகாந்தி விதையைப் பயிர் செய்வோர்களுக்கு நல்லதொரு விலை கிடைக்கவும் வகை செய்தது. போச்சம்பள்ளியில் 1978ம் ஆண்டு சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணையைப் பிழியும் ஆலை ஒன்றை அமைத்து, சூரியகாந்தி எண்ணையை சுத்திகரித்து, சென்னை, பெங்களூர், கொச்சி, ஹைதராபாத் போன்ற பல முக்கிய நகரங்களிலே விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு நல்ல முறையில் விநியோகமும் செய்துவருகின்றது. 1978-79ம் ஆண்டு மட்டும் இந்த ஆலையில் இருந்து ஏறக்குறைய ரூபாய் 48 லட்சத்திற்கு மேல் ''சனோலா'' என்ற சூரிய காந்தி எண்ணெய் விற்பனையாகி உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இதன் உற்பத்திபெருகி நடப்பு ஆண்டு மட்டும் ஏறக்குறைய ஒரு கோடி மதிப்புள்ள 3500 டன்னுக்கு மேல் விதை கிடைக்கும் அளவிற்கு இந்தப்பயிர் மீண்டும் மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது. இது இந்த தாய் இணையகத்தின் ஒரு தனிப்பெரும் சாதனை என்று சொன்னால் அது மிகையாகாது. உழவர்கள் இந்தப் பயிரை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். அதன் மூலம் நல்லதொரு சத்துள்ள, அதேசமயத்தில், சுகவாழ்விற்கு ஏதுவான ஒரு எண்ணையை மக்களுக்கு அளிக்கும் பேற்றை தாய் இணையகம் பெற்றதை பெருமையாகக் கருதுகிறது.

ஆகவே, ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் உபயோகிப்பதன் மூலம் இருதய நோயாளிகள், கொழுப்புச் சத்து அதிகம் உள்ளவர்கள் ,ரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு ஒரு பேரமிர்தம் ஆகவும், மணமும், திறமும், குணமும் ,குன்றாமலும், விரும்பி உண்பதற்கு ஏதுவான சத்

# சத்துள்ள சனோலா

வே. கருப்பன், இ.ஆ.ப.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம்.

துள்ள உணவுப் பொருட்களை உண்டாக்குவதற்கும் உதவிகரமாக இருக்கிறது. குறைந்த காலத்திலே பயிரிடுவதன் மூலமாகவும், குறைந்த செலவிலே இப்பயிரை உற்பத்தி செய்ய முடியும் என்பதாலும், இவ்விளைச்சலின் மூலம் குறைந்த காலத்திலே நிறைந்த லாபம்பெறமுடியும் என்ற காரணத்தினாலும், உழவர்களுக்கும் இது ஒரு பேருதவியாக இருக்கும் பயிர் வகையாகும்.

உண்பதற்கு ஒரு சிறந்த மருந்தாகவும், உற்பத்தியாளர்களுக்கு ஒரு சிறந்த விளை, பொருளாகவும் இருக்கின்ற ஒரு இணைப்பை இந்த தாய் நிறுவனம் செய்திருக்கிறது. இதன் வளர்ச்சி மேலும் பெருகிடும்; நல்லதோர் எதிர்காலத்தை ''சனோலா'' பெறும் என்பது உறுதி.

''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் இன்று இவ்வளவு சீரும் சிறப்போடும் விற்பனை ஆகி வருவதற்குக் காரணம், இந்த எண்ணெய், மருத்துவர்களிடையே ஒருபெரும்

வரவேற்பினைப் பெற்றதேயாகும். மருத்துவர்கள் குழாம் இன்று இந்த எண்ணையை, இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும், கொழுப்பு சத்து அதிகம் ஆகி அவதிப்படுபவர்களுக்கும் சிபாரிசு செய்வதால், அவர்களுக்கு இது ஒரு பேரமிர்தமாகி அமைந்திருக்கிறது. இதய நோய் நிபுணர்கள் இந்த எண்ணையை வாங்கி உபயோகிக்கும்படி தம்மிடம் வரும் நோயாளிகளை ஊக்குவிக்கிறார்கள். ஏன், நமது மாண்புமிகு தமிழக முதல்வர்கூட தாம் செல்லும் விருந்துகளிலெல்லாம் பலகாரங்கள் ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணையில் செய்யப்பட்டவைதானா என்பதை அடிக்கடி விசாரித்து அதை உபயோகிக்குமாறு ஊக்குவிப்பது அனைவருக்கும் தெரிந்ததே.



சில முக்கிய சமையல் எண்ணெய் வகைகளின் உட்பொருள்களின் வகைகள்:—

| எண் | எண்ணெய்-கொழுப்பு வகைகள் | பூரிதகொழுப்பு அமிலங்கள் | அபூரித கொழுப்பு அமிலங்கள் | உடலுக்கு தேவையான கொழுப்பு அமிலங்கள் |
|---|---|---|---|---|
| | | சதவிகிதம் | சதவிகிதம் | சதவிகிதம் |
| 1. | சூரியகாந்திவிதை எண்ணெய் | 7.50 | 34.00 | 58.05 |
| 2. | பருத்திகொட்டை எண்ணெய் | 21.70 | 35.80 | 42.5 |
| 3. | நல்லெண்ணெய் | 13.60 | 47.40 | 39.0 |
| 4. | கடலை எண்ணெய் | 17.40 | 61.20 | 21.4 |
| 5. | பாம் ஆயில் | 47.50 | 43.00 | 8.5 |
| 6. | நெய் | 61.50 | 34.20 | 4.3 |
| 7. | வனஸ்பதி | 61.35 | 28.35 | 3.05 |
| 8. | தேங்காய் எண்ணெய் | 91.70 | 5.67 | 2.70 |

அதோடு மட்டுமல்ல, சூரியகாந்தி எண்ணெயில் பொறிக்கப்படுகின்ற பலகாரங்கள் அநேக நாட்கள், அதன் மணமும், குணமும் குறையாமல் உண்பவர்களைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது. வறுத்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை இந்த எண்ணெயை உபயோகித்து செய்வதால் நல்லதொரு பயன் கொடுத்திருக்கி[illegible] அந்த ஏற்றுமதி தொழிலில் சடுபட்டவர்கள் கூறுகிறார்கள். இந்த எண்ணெயில் பொறிக்கப்படுகின்ற பலகாரங்கள் காந்தல், சுவை குன்றுதல், எண்ணெய் கசிவு ஏற்படுதல் போன்ற பாதிப்புகளிலிருந்து அறவே விடுபட்டு மிகவும் அழகாகவும், அதே சமயத்தில் மணமுள்ளதாகவும், ருசி உள்ளதாகவும் அமைந்திருக்கிறது. குறைந்த அளவு எண்ணையில் அதிக அளவு பதார்த்தங்கள் செய்ய கூடுமாதலால் சிக்கனத்தின் சின்னமாகத் திகழ்கிறது. இப்படி பலரும் போற்றி பயன்படுத்தும் வண்ணம் நல்ல தரமான எண்ணெய் நியாயமான விலையிலேயே வேண்டிய அளவு கிடைக்க தாய் இணையகம் தன்னை முடுக்கிக் கொண்டுள்ளது.

கலப்படம் செய்வது கொள்ளை வியாபாரிகளுக்கு கைவந்த கலை. [illegible]வில் தண்ணீரைக் கலப்பது போல, அரிசியில் கல்லை கலப்பது போல, எண்ணெயிலும் தரம் குறைந்த விலை குறைந்த எண்ணெயைக் கலந்து பெரும் லாபம் பெற்று வருகின்ற எண்ணெய் வியாபாரிகளிடையே, தாய் இணையகம் கலப்படமற்ற, தரமான, அளவு குறையாத ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெயை விநியோகித்து தன் தனித்தன்மையை நிலைநாட்டி வருகின்றது. தகுந்த பாதுகாப்போடு, திறக்க முடியாத மூடிகளோடு கூடிய 1 லிட்டர் பாட்டில்களிலும், 5 கிலோ 'ஜெரி கேன்' மூலமும் ''சனோலா'' எண்ணெயை விநியோகித்து வருகிறது. இந்த எண்ணெய் பற்றாக்குறை இருந்து வந்தது. தமிழக விவசாயிகள் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களான, கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநில விவசாயிகளும் பயன் பெறும் வண்ணம் அவர்களது சூரியகாந்தி விதைகளை வாங்கி போதிய அளவு இந்த ஆண்டு இருப்பு வைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த அளவிற்கும், இதற்கு மேலும் கொள்முதலை அதிகப்படுத்தி வேண்டிய அளவு ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தாய் தொழில்கள் இணையகம் செய்து கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறோம்.

# திரைக் காவியம்

இம்மாநிலத்தில் திரைப்படத் தொழிலை எதிர் நோக்கியுள்ள பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்களின் தரக் குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசிய அளவில் மக்களின் நலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக பொருளாதாரத்தை முன்னேற்ற உதவும் கருத்துக்களான மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, தீண்டாமை, நாட்டின் ஒருமைப்பாடு இவற்றில் ஏதாவது ஒன்றை மையக் கருத்தாக வைத்து திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு உதவுவதற்காக ''நிதி உதவித் திட்டம்'' பிப்ரவரி 1978-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1 படத்திற்கு 1 லட்ச ரூபாய் வீதம் தேர்வு செய்யப்பட்ட 5 படங்களுக்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள காலவரம்பிற்குள் தயாரித்து, தணிக்கை குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்ய தகுதி வாய்ந்த படங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் குழு அரசுக்கு ஆலோசனை நல்குகிறது. இத்திட்டத்தின கீழ் 1979–80 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, தணிக்கைக்கு வந்த தமிழ்ப் படங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது.



**சிறந்த திரைப்படங்கள்- கலைஞர்களுக்குப் பரிசுகள் :**

உயர்ந்த கலைத் திறம், சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக, ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978–79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள கால வரம்பிற்குள் தயாரித்து தணிக்கை குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்யத் தகுதி வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. இதற்காக அமைக்கப்பட்ட குழுவில் இவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

1979–80 ஆம் ஆண்டுத் தயாரிப்புகளுக்கான பரிசுகள் ரூ. 2,30,000 செலவில், சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகை. இயக்குநர், கதாசிரியர், வசனகர்த்தா, ஒளிப்பதிவாளர், இசை அமைப்பாளர், பின்னணி பாடகர், பாடகி, துணை நடிகர், துணை நடிகை, சிறந்த குழந்தைகள் படம், ராஜா சாண்டோ நினைவுப் பரிசு ஆகியவை அளிக்கப்பட்டன.

**குழந்தைகள் திரைப்படங்களுக்கு உதவி :**

இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் வேண்டுகோளின்படி சிறந்த குழந்தைகள் திரைப்படங்களைத் தமிழில் தயாரிக்கவும், சிறந்த மற்ற மொழிக் குழந்தைகள் படங்களை தமிழில் மொழி மாற்றம் செய்யவும் ரூ. 4 லட்சம் உதவி செய்ய இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ. 2 லட்சம், குழந்தைகள் திரைப்படச் சங்கத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளது.

மேலும் நவம்பர் 14, 1981 முதல் நவம்பர் 23, 1981 வரை சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகக் குழந்தைகள் திரைப்பட விழாவைச் சிறப்புற தமிழக அரசு முன்னின்று நடத்தி பல விதங்களில் உதவி செய்தது. இதற்காக அரசு ரூ. 2.80 லட்சம் ஒப்புதல் அளித்து, இத்தொகை முழுவதும் விழாவின் மேம்பாட்டிற்காகச் செலவு செய்து, உலகக் குழந்தைகள் திரைப்பட விழா வெற்றிகரமாக நடைபெற வழிவகை செய்தது. இவ்வரசின் உதவியை விழாக்குழுவினர் மிகவும் பாராட்டியுள்ளனர்.

திறமை மற்றும் இதர வசதிகள் இருந்தும் நிதி வசதியின்மை காரணமாக குழந்தைகளுக்காக படம் எடுக்க முடியாத நிலையில் இருக்கும் தயாரிப்பாளர்களுக்கு விரைவில் செயல்படத்துவங்கவிருக்கும் திரைப்பட நிதி நிறுவனம் மூலம் உதவலாம் என்பது பற்றிய கருத்து தற்பொழுது அரசின் ஆய்விலுள்ளது.

அரசு தற்பொழுது குழந்தைகளுக்கான சிறந்த திரைப்படத்திற்கு ரூ. 25,000 ரொக்கப்பரிசும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும் அளிக்கும் திட்டத்தில் மாறுதல் செய்து ரூ. 5,000 மதிப்புள்ள மூன்று தங்கப் பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 10,000 இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவாக வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

நாட்டின் கலாச்சாரம், ஒழுக்கம், பண்பாடு, கண்ணியம் ஆகியவற்றைக்கருத்திற் கொண்டு குழந்தைகள் மனதைக் கவரும்படி எடுக்கப்படும் படங்களுக்கு வரிவிலக்கு அளிப்பதைப் பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

**தமிழ்நாடு திரைப்பட நிதியுதவிக் கழகம் :**

நிதி நிலையற்ற திறம் வாய்ந்த திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு, நிதி உதவி செய்திட திரைப்பட நிதி உதவிக் கழகம் ஏற்படுத்தும் விதத்தில், அரசு நிலை ஆணை எண். 122, செய்தி, சுற்றுலா, மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறை, நாள் 28–8–1981 ஆணை ஒன்று வெளியிட்டது. இதனுடைய தலைமையகம் சென்னையில் இருக்கும். இந்த நிறுவனத்தின் ஒப்பிய முதலீடு சுமார் ரூ. 2 கோடியாக இருக்கும். இந்நிறுவனத்தின் நடைமுதல் ரூ. 50 லட்சம். மேலும், இந்நிறுவனத்தின் பங்கு முதலீடாக ரூ. 10 இலட்சம் அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. விரைவில் இந்நிறுவனத்தைப் பதிவு செய்யவும்முறைப்படி தொடர்ந்து செயல்படச் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரைப்பட, தொலைக்காட்சி தொழிற் பயிற்சி நிறுவனம் :**

திரைப்படத் தயாரிப்பில் பல பிரிவுகள், மற்றும் நடிப்பு இவற்றில் பயிற்சி அளிப்பதற்காக இந்நாட்டில் நிறுவப்பட்டுள்ள இரு நிறுவனங்களில் ஒன்றுதான் சென்னையில் உள்ள தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம். இந் நிறுவனம் தமிழ்நாடு அரசின் செய்தி, சுற்றுலா மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது. 1948-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு தொலைக் காட்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு, தொலைக்காட்சி இயக்குதல் ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. மேற் கூறியவற்றில் நடிப்புப் பயிற்சி சான்றிதழ் பயிற்சியாகும். மற்றவை டிப்ளமோ பயிற்சிகளாகும். தமிழ்நாடு அரசின் மாநில தொழில் நுட்பக் கல்விக் குழுவினரால் டிப்ளமோத் தேர்வுகள் கடைசி ஆண்டில் நடத்தப்பட்டு, டிப்ளமோக்கள் வழங்கப்படுகின்றன.



பல்வேறு பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் கல்வியாண்டில் செய்முறைப் பயிற்சியின் ஒரு பகுதியாக ஒரு சிறிய கதைப்படமும், ஒரு கருத்து விளக்கப் படமும் தயாரிக்கின்றனர். மாணவர்களுக்கு பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிப்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுவதுடன், தொழில்முறையில் மற்றும் அரசின் படத் தயாரிப்பு வேலைகளும் இந்நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

படப்பிடிப்புத்தளங்களும் திரைப்படத்தொழில் நுட்பக்கல்லூரியிலுள்ள சாதனங்களும் விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவுக்குக் கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ்பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில்கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாகவும் அமைகிறது. இந்நிறுவனத்தில் பயின்று வெற்றியுடன் திரும்பும் மாணவர்களுக்கு பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள் நன்முறையில் உள்ளன.

இந்நிறுவனத்தின் பணிகளை மேம்படுத்த இவ்வாண்டு குரல் மாற்றும் (டப்பிங்) அரங்கு அமைப்பதற்கும், புதிய கருவிகள் வாங்குவதற்கும், மாணவர் விடுதி கட்டுவதற்கும், மொத்தம் ரூ. 16 லட்சம் செலவில் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு திரைப்படப் பிரிவு :**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப்பணிகளை, மக்கள் பங்கேற்கும் பொதுநிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து, படமாக்கி, செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின்மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக்குத் தேவையான செய்திகளை கருத்து விளக்கப்படங்களாக (டாகுமென்டரி) எடுத்து இத்திரைப்படப்பிரிவு வெளியிடுகிறது. இப்படங்களும் (35 மில்லி மீட்டர் அளவில்) திரையரங்குகளுக்கு மத்திய அரசின் திரைப்படப் பிரிவின்மூலம் வெளியிடப்படுகின்றன. 16 மில்லி மீட்டர் அளவில் அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

**தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.**

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட அரசு தனி நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக, மாற்றவும் புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இதுவரை இக்கழகம் பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் மட்டுமே கடனுதவி செய்துள்ளது, இக்கழகத்திற்கு அரசால் முழுவதுமாக செலுத்தப்பட்ட மூல தனம் ரூ. 35·00 இலட்சம். மேலும் ரூ. 15.00 லட்சம் நீண்ட காலக் கடனாக அரசு அளித்துள்ளது.

இந்நாள் வரையில் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பளிப்புகள் 81 ஆகும். இவற்றில் 74 பேர் திரையரங்குகளைக் கட்டி முடித்து திரைப்படக் காட்சிகள் நடத்துகின்றனர். ஒரு திரையரங்கிற்கு அதிகபட்சம் அளிக்கும் தொகை ரூ 1.20 லட்சம் ஆகும். இக்கழகம் இதுவரை ரூ. 93·23 லட்சம் கடன் தொகை அளிக்க ஒப்பளித்துள்ளது. ஒப்பளித்துள்ளதில் ரூ. 87.25 லட்சம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகை ஆண்டு ஒன்றுக்கு 17 சதவித வட்டி வீதம் 60 சமமான தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.



**தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்), விதிகள் 1957.**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பகுதி மக்களுக்கு குறிப்பாக ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு பொழுது போக்குக்கேற்குரிய சாதனமாகவும், பெரும்பகுதி ஊராட்சி நகராட்சிகளுக்கும் ஒரு பகுதி அரசுக்கும் வருவாய் திரட்டக்கூடிய துறையாகவுள்ளது. திரைப் படத்துறை வளர்ச்சி அடைய ஊக்கமளிக்கும் வகையில், திரை அரங்குகள் அதிகப்படுத்தும் முயற்சியாக, இக்காலத்திற்குப் பொருந்தாத விதிகளையும், கட்டுப்பாடுகளையும் தளர்த்தியுள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டின முக்கிய நகரங்களில் எல்லாம், நல்ல வசதிமிக்க தரமான திரை அரங்குகள் குறிப்பிடத்தக்க அளவில் பெருகியுள்ளன. பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் டூரிங் திரை அரங்குகளில் சுலபத்தில் நெருப்புப் பிடிக்கும் கூரைகளை அகற்றிவிட்டு, சுலபத்தில் நெருப்புப் பிடிக்காத கூரைகளை அமைக்கவேண்டும் என்ற ஆணைக்கிணங்க அமைக்கப்படும் டூரிங் திரை அரங்குகளின் கட்டுமானச் செலவு பெரிய அளவில் உயர்ந்துள்ள நிலையில் உரிமக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற பரவலான கோரிக்கைகளை ஆழ்ந்து பரிசீலித்து ஐந்து ஆண்டுகளாக இப்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இவ்வரசு திரைப்படங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும்—பாதுகாப்புகளும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் கண்டிப்பாக இருக்கிறது.



# நூல் நயம்

## பொழுது புலர்ந்தது

ஆசிரியர் : கவிஞர்
பட்டுக்கோட்டை
இராசேந்திரன்

வெளியீடு : சங்கீதா பதிப்பகம்
27 அம்மையப்ப முதலி
சந்து, இராயப்பேட்டை
சென்னை-600 014.

பக்கம் 248 விலை ரூ. 13

ஆறு தலைப்புகளில் யாக்கப்பட்ட மரபுக் கவிதைகள் எழுபத்து நான்கு கொண்டதொகுப்பு இந்நூல். அகப்பொருள் கவிதைகள் அதிக அளவில் இடம் பெற்றிருப்பது இளைய சமுதாயத்துக்கு இனிய விருந்தாகும். கதைப் பாடலும், கவியரங்கக் கவிதைகளும் நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

'முதலாவது கவிதைத்தொகுப்பு இது' என நூலாசிரியர் முன்னுரையில் கூறியிருப்பதை நம்ப முடியவில்லை; அந்த அளவுக்குச் சிறப்பாகக் காணப்படுகிறது. சிற்றூரின் பின்னணியை வருணிக்கும் போது, நம்மை அங்கேயே இழுத்துச் சென்று விடுகின்றன கவிதை வரிகள். பாவேந்தரிடம் பயிற்சி பெற்றவர் இவர் என்பதை ஒவ்வொரு கவிதையும் எடுத்துச் சொல்கிறது.

'கண்ணீர்க் கவிதைகள்' என்னும் தலைப்பில் மறைந்த தமிழ்ச் சான்றோர் சிலரைக் குறித்து எழுதப் பெற்றுள்ள கவிதைகள் பேனா ஓவியங்களாகவே திகழ்கின்றன. இனிய நடை, துள்ளுநடை, சுகமான நடை அனைத்தும் இந்நூலில் உண்டு. கவிதையன்பர்களுக்குப் பல்சுவை விருந்தாக விளங்குகிறது இந்நூல்.

## வீணை மலர்கள்

ஆசிரியர் : நாவேந்தன்

வெளியீடு : நாயகி பதிப்பகம்
32 புதுப்பங்களாத்
தெரு, சிந்தாதிரிப்
பேட்டை, சென்னை-
600 002.

பக்கம் 120 விலை ரூ. 6

மரபுக்கவிதை மல்லிகைகளும் புதுக்கவிதை மருக்கொழுந்தும் சேர்த்து இணைக்கப் பெற்ற கதம்பச் சரமாகத் திகழும் இந்நூலிலே புதுமை ஒன்று உண்டு. ஒவ்வொரு கவிதையையும்மற்றொரு கவிஞர் ஆய்வு நடத்திச் சில வரிகளில் தீட்டியுள்ள மதிப்புரைதான் அந்தப் புதுமை.

கவிதைகள் அனைத்தும் எளிய, இனிய நடையில், உள்ளத்தைத் தொடுகின்ற விதத்தில் அமைந்துள்ளன. 'மயக்கும் மழலை' என்ற கவிதை முதிர்ந்தோரையும் மயக்கி விடுகிறது. பல பிரச்சினைகளையும் கவிதைகளாக்கி, அவற்றிற்கு விடையையும் சுவையுறக் கூறியிருக்கிறார். மறைந்த மேதைகளைக் குறித்து எழுதப் பெற்றுள்ள கவிதைகள் அவர்களை உயிர் பெற்று உலா வரச் செய்கின்றன.

## கனவுப் பூக்கள்

ஆசிரியர் : ஆலந்தூர்
மோகனரங்கன்

வெளியீடு : வசந்தா பதிப்பகம்,
21 தர்மராஜா கோயில்
தெரு, ஆலந்தூர்.

பக்கம் 96 விலை ரூ. 4.26

காதல் மணத்திற்கு எதிர்ப்புத் தோன்றுவதும் அதன் காரணமாக காதலர்கள் தற்கொலையை நாடுவதும், பின்னர், பெற்றோர்கள் மனம் வருந்தி அழுவதும் பொதுவாக அவலக் காப்பியத்தின் அணுகு முறையாகும். அதே உத்தி இந்தக் குறுங்காவியத்திலும் பின்பற்றப்பட்டிருக்கிறது.

கவிதையில் சொல்லாட்சி நிறைந்திருக்கிறது; உவமைகளில் புதுமை மிளிர்கின்றது. நடையில் விறுவிறுப்புத் தென்படுகிறது. பாத்திரப் படைப்புகள் தெளிவாகத் தீட்டப்பட்டுள்ளன. அவர்தம் பண்புகள் தக்க வகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. கருத்துச் செறிவுமிக்க கவிதை நாடகமான இந்நூல் கவிதை நாடகத் துறை வளர்ச்சிக்கு உதவுகிறது என்று சொல்லலாம்.

**இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், மதிப்புரை செய்யப்படுவதில்லை**

## குற்றங்களே தீர்ப்பு எழுதினால் !

ஆசிரியர் : கவிஞர்
துரை வசந்தராஜன்

வெளியீடு : இளந்தேவி பதிப்பகம்,
சர்க்கரை வீதி,
குருவராயப்பேட்டை -
631 101.

பக்கம் விலை ரூ. 5

மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் கலந்து உருவாக்கப் பெற்ற நூல் இது. புதிய சமுதாயத்தைக் காணும் உணர்வுகள் ஆசிரியரின் எழுத்துக்களில் காணப் பெறுகின்றன. துணுக்குக்கவிதைகளும் சுவை கூட்டுகின்றன.

உழைப்பைப் போற்ற வேண்டும் என்ற கொள்கையும் உழைப்புப் பலன் தரும் என்ற செய்தியும், உழைக்கும் இனத்தின் பெருமையும் பல கவிதைகளில் சிறப்பித்துச் சொல்லப் பெற்றிருக்கின்றன. எளிய நடை, எவரும் படித்துப் புரிந்து கொள்ளலாம்.

## நினைவுக்கலை

ஆசிரியர் : தசாவதானி
எம். இராமையா

வெளியீடு: இளங்கோ பதிப்பகம்
கருணாநிதி நகர்
கோவில்பட்டி-627701

விலை ரூ. 7.50 பக்கம் 130

நினைவாற்றல் என்பது பெரும் பேறாகும். இது பயிற்சியால் வளர்த்துக் கொள்ளக் கூடியது என்பதை நூலாசிரியர் தெளிவாக, சான்றுகளுடன் எடுத்துக் கூறியுள்ளார்.

நினைவாற்றலை வளர்ப்பதற்குரிய உடற்பயிற்சி முறைகளையும், வழிபாட்டு முறைகளையும், உணவு முறைகளையும் சொல்லியிருப்பதுடன், மறதி என்பது மனிதனை நெருங்காதவாறு பார்த்துக் கொள்வதற்குரிய வழிவகைகளையும் தெரிவித்திருக்கிறார். அவதானம் என்றால் என்ன என்பதையும் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

— தமிழ்ப்பித்தன்

# குழந்தைகள் நலனுக்குச் சத்துணவு



இந்திய அரசால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் சென்னை மாநகர், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தளி, மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ஒவ்வொரு இடத்திலும், 100 அங்கன்வாடிகளைக் கொண்டு மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் அம்சங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. துணைச் சத்துணவு, 2. நோய்த் தடுப்பூசி போடுதல், 3. உடல்நலப் பரிசோதனை, 4. மேற் சோதனைகளுக்குப் பரிந்துரை செய்தல், 5. சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி 6. முறை சாராக் கல்வி, 7. நடைமுறைக் கல்வி (15-44) வயதுக்குட்பட்ட வளர்ந்த பெண்களுக்கு.

இத்திட்டத்தின் எல்லா அம்சங்களின் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை 21,000 குழந்தைகளும், 9,000 மகளிர்களும் ஆவர்.

1982-83-லிருந்து மேலும் 36 இடங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் நடத்தப்பட்டுவரும் மூன்று திட்டங்களும் மொத்தச் செலவு ரூ. 50.63 இலட்சத்தில் 19.93 இலட்சம் இந்திய அரசும் 30.70 இலட்சத்தைத் தமிழ்நாடு அரசும் ஏற்கும்.

**உலக வங்கி உதவியுடன் சென்னை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாய் சேய் நலப் பணிகள் திட்டம்:**

இந்தியஅரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணி திட்டத்தைப் போலவே உலக வங்கி உதவியுடன் சென்னை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாய்சேய் நலப் பணிகள் திட்டம் நடைபெற்று வருகின்றது.

தற்போது இத்திட்டத்தின் கீழ் 126 குழந்தை நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு குழந்தைகள் நல நிலையமும் ஒரு குழந்தை நல அமைப்பாளர், இரு ஆயாக்கள் மூன்று மருத்துவ அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மருத்துவப் பணியாளர்கள் உதவியுடன் மருத்துவ அலுவலர்கள் நடமாடும் மருத்துவமனை வாயிலாக மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி வருகின்றனர். துணைச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 'கேர்' (CARE) நிறுவனம் இலவசமாக வழங்கும் பாலாகாருடன் உணவு வகையிலான செலவினமாக 4.5 பைசா பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது.

12,600 பேர் பயனடையும் இத்திட்டத்திற்கு 1982-83-ம் ஆண்டிற்கு 44.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



**சிறப்புச் சத்துணவுத் திட்டம்:**

வாழ்வில் சத்துணவுக் குறைவால் நலிவுற்ற, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள 6 மாதம் முதல் 6 வயது வரை நிரம்பிய குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்து நிறைந்த ''பாலாகார்'' மற்றும் ''சாலட்'' எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களைக் கொண்டு உணவுப் பண்டம் தயாரித்து, நாள்தோறும் வழங்கப்படுகிறது. சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும், புதுக்கோட்டை நகராட்சியிலும் திருத்தப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்து நிறைந்த பாலாகார் பயன் பெறுபவர்களுக்கு அவரவர் இல்லங்களிலேயே சமையல் செய்து குழந்தைகளுக்குப் போடுவதற்கு வழங்கப்படுகின்றது. மருத்துவர்கள் மூலம், மருத்துவ வசதிகளும் அளிக்கப்பட்டு, நோய்த்தடுப்புக்காக முன் தடுப்பு ஊசி, மற்ற தடுப்பு ஊசிகளும் போடப்பட்டு, விட்டமின் மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

சிறப்புச் சத்துணவுத் திட்டம் 55 உள்ளாட்சி நிறுவனங்களிலும் திருத்தியமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம் 4 மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு அதன் மூலம் 2,76,530 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்காக 1981-82ம் ஆண்டு ரூ. 61.40 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

அரசின் குழந்தை நலத்திட்டம் சத்துணவு வழங்குதல் [illegible]

குழந்தைகளுக்கு முன்னாதாரக் கல்வி அளித்தல், உடல் நலச் சோதனை செய்தல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல் ஆகியவை உள்ளடங்கியவை. இவை குழந்தைகள் நல நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் எண்ணிக்கை 3.76 இலட்சமாகும். 2 வயது முதல் 5 வயது வரை குழந்தைகளும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் மகளிரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். ''கேர்'' நிறுவனத்தின் மூலம் ஒரு நபருக்கு 80 கிராம் பாலாகார் மற்றும் 4 கிராம் சாலட் எண்ணெய் காய் கறிகளுடன் சேர்ந்து உப்புமா அல்லது கிச்சடி ஆக வழங்கப்படுகிறது.

தற்பொழுது தமிழகம் எங்கும் 4,343 குழந்தை நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் 50 குழந்தைகள் நல நிலையங்கள் செயல்படுகின்றன. குழந்தைகள் நல நிலையங்கள் பல ஆதி திராவிட குழந்தைகளுக்காகவும், மலைச்சாதியினரின் குழந்தைகளுக்காகவும் நடத்தப்படுகின்றன. இத்திட்டப் பணிகளுக்காக 1982-83ம் ஆண்டுக்கு ரூ. 6.14 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 'கேர்'நிறுவன உதவியுடன் உணவு வழங்கு திட்டம்:

மக்கள் தொகையில் நலிந்த பிரிவினராய் உள்ள பள்ளிப்பருவமடையாத குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், மற்றும் தாய்மார்கள் ஆகியோரிடையே பொதுவாகக் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைவைச் சரிசெய்யும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் ''கேர்'' நிறுவனத்தின் உதவியுடன் சத்துணவு வழங்கும் திட்டம் 1970-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது.



இத்திட்டத்தின் கீழ் 3,322 நிலையங்களின் மூலம் ஓர் ஆண்டில் 300 நாட்களில் 60,000 குழந்தைகள் மற்றும் 20,000 தாய்மார்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. சென்ற நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,09,19,000 மதிப்புள்ள உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

## திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம்:

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், மற்றும் கருவுற்ற தாய்மார்கள் ஆகியோரின் சத்துணவு நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் 30 குழந்தைகள் காப்பகங்கள் மூலம் உணவு வழங்குதல், உடல் நலம் பேணுதல், மற்றும் சத்துணவுக் கல்வி ஆகியவற்றை ஒருங்கே அளிக்கும் திட்டமிது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு 120 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

''கேர்'' நிறுவனத்தால் அளிக்கப்படும் உணவினைக் கொண்டு இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. உப்புமா, புட்டு மற்றும் பொங்கல் போன்ற உணவுப் பொருட்களும், காய்கறிகளும் வழங்கப்படுகின்றன. சிறு பாடங்களும், நல்வாழ்வுப் பழக்க வழக்கங்களும் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படும். குழந்தைகள் விளையாட விளையாட்டுப் பொருட்கள் அளிக்கப்பட்டு அவர்களின் அறிவு வளர வகை செய்யப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பணி யாற்றும் மருத்துவ அலுவலர்களின் துணையோடு உடல்நலம் காக்கும் பணி நிறைவேற்றப்படும். அவ்வப்போது உடல்நிலை பரிசோதனை மருத்துவ அதிகாரிகளால் நடத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் பயனடைவோர்க்கு வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டு தொற்று நோயிலிருந்து குழந்தைகள் காக்கப்படுவர்.

பயிற்சி முகாம்கள் மூலம் சத்துணவுக் கல்வி கிராமப்புற மகளிர்க்கு அளிக்கப்படும் சத்துணவு, நல்வாழ்வு பற்றிய பயிற்சி முகாம்கள் ஒன்றியத்தின் சத்துணவுத் திட்டக்காலத்தில் நடத்தப்படும். இம்முகாம்களில் 60 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் சில ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு [illegible] சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்படும்.

## தொழிலாளர் சத்துணவுத் திட்டம்:

தமிழ்நாடுதான், தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தை முதலாவதாக 1969ல் இருந்து தொழிலாளர் குடும்பங்களின் நல்வாழ்விற்காக ''கேர்'' நிறுவனத்தின் உதவியுடன் அமல்படுத்தி வருகிறது. பெண் தொழிலாளர்களில் அல்லது ஆண்தொழிலாளர்களின் மனைவியரில் கர்ப்பமாக இருக்கும் அல்லது தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 80 கிராம் சத்துணவு கோதுமையும், 7 கிராம் எண்ணையும் ''கேர்'' நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்பட்டு தொழிற்சாலையில் சமைத்து விநியோகிக்கப்படுகிறது. நிறுவனத்தினர் போக்குவரத்து, சமையல் செய்ய ஏற்படும் செலவை மட்டுமே ஏற்கவேண்டும்.

இத்திட்டம் 107 நிறுவனங்களில் 27,000 நபர்களுக்குப் பயன்பெறும் முறையில் நடைபெறுகிறது. குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதன் மூலம், உடல்வளம் உயர்ந்து சிறுவயதில் ஏற்படும் மரணம் தடுக்கப்படும். தங்கள் குழந்தைகள் திடகாத்திரமாக இருப்பார்கள் என்பதால் தொழிலாளர்கள் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கடைப்பிடிக்க விழைகிறார்கள்.

## டானிடா நிதி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல பிராந்தியத் திட்டம்

இத்திட்டம் டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் ஒரு ஒருங்கிணைந்த மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்திட்டமாகும். இத்திட்டத்தினால் தென் ஆர்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் வாழும் ஏறத்தாழ இருபது இலட்சம் மக்கள் பயன்பெறுவர். சுகாதாரத்தையும் குடும்பநலத்தையும் மையமாகக் கொண்டு, மற்ற வளர்ச்சிப் பணிகளான குடிதண்ணீர் வசதி, சுற்றுப்புறச் சுகாதாரம், ஊட்டச்சத்து, பயிற்சி, சுகாதாரம், குடும்பநலம் சம்பந்தப்பட்ட கல்வி முறைகள் சமுதாய நல நிதிப் பணிகள், திட்டம்பற்றிய தகவல் தொடர்பு முறைகள், சுகாதாரம் பிரச்சினைகளுக்கான புதிய மாற்றுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்[illegible]

மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள், சோகை நிலையிலுள்ள சூலுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மேம்பாட்டிற்காக, ஒரு ஊட்டச்சத்துத் திட்டம் சோதனை முறையில் சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் ஒன்றியத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் மைலம் ஒன்றியத்திலும் இந்த ஆண்டு செயலாக்கப்பட இருக்கிறது.

இந்த ஒன்றியங்களில் ஒவ்வொரு 1,500 மக்கள் தொகைக்கும் ஒரு சத்துணவு நிலையம் அமைக்கப்படும். இந்நிலையங்களில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு அளிப்பதோடு மட்டுமல்லாமல், சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துப் பற்றிய கல்வியும் பயிற்றுவிக்கப்படும். திட்டப்பணிகளில் மக்கள் பங்கு பெறுவது இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்:

உலக வங்கி உதவியுடன் நடத்தப்படும் இத்திட்டம் சமூக நலத்துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய இரண்டு துறைகளும் இணைந்து செயல்புரியும் ஒரு அமைப்பில் நடைபெறுகிறது.

மூன்று வயதிற்குட்பட்டிருக்கும் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறையைக் களைவதும், அவர்களது ஊட்டச் சத்து நிலையை உயர்த்துவதும், குழந்தைகள் இறப்பு விகிதத்தை 25 சதவிகிதம் குறைப்பதும், நோய்ப் பராமரிப்பு முதலியன நல்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

3 மாதம் முதல் 36 மாதங்கள் வரை உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களது எடை ஒவ்வொரு மாதமும் எடுத்து எடைக்குறிப்பேட்டில் குறிக்கப்படுகிறது. ஊட்டச்சத்துணவு தேவைப்படும் குழந்தைகளுக்கு 90 நாட்களுக்கு உணவளிக்கப்பட்டு அவர்களது வளர்ச்சியை மாதா மாதம் எடை எடுத்து மதிப்பிடப்படும். எடை அதிகரிக்காத குழந்தைகளிடம் என்ன குறைபாடு உள்ளது என்று கண்காணிக்கப்படுகிறது.

## திட்டங்களின் கூறுகளாவன:

1. நல்வாழ்வுப் பணி, 2. குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் கூடுதல் ஊட்டச் சத்துணவு தயாரித்து அளித்தல், 3. குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் வளர்ச்சி மதிப்பிடல், 4. ஊட்டச் சத்துக் [illegible] விளக்கம்.

இத்திட்டம் ஆறு மாவட்டங்களில் - மதுரை, இராமநாதபுரம் புதுக்கோட்டை, செங்கற்பட்டு, வடார்க்காடு, திருநெல்வேலி-உள்ள 173 ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாகச் செயல்படுத்தப்பட உள்ளது.

முதல்கட்டமாக மதுரையில் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் ஒரு முன் மாதிரித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் 1980 நவம்பர் மாதம் முதல், குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும், ஊட்டச்சத்து வழங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1,500 மக்கள் தொகைக்கு ஒரு சத்துணவு நிலையமும், 5,000 மக்கள் தொகைக்கு ஒரு தாய்சேய் நல நிலையமும் அமைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

## ரூ 100 கோடி அளவில் குழந்தைகளுக்கான இலவச உணவுத் திட்டம்:

இது முழுக்க முழுக்க பெண்கள் பொறுப்பேற்று நடத்தக் கூடியது. இத்திட்டத்தின் மூலம் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூடப் பெற முடியாத 2 வயது முதல் 10 வயதுக்குள் இருக்கும் ஏழைக்குழந்தைகளுக்கு இலவசப் பகல் உணவு அளிக்கப்படும்.



இரண்டு வயதிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வயது வரையில் குழந்தைகள் தங்களை மறந்து தாங்கள் எந்தச் சாதிக் குழந்தையோடு உட்கார்ந்து சாப்பிடுகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாத நிலையில் அவர்கள் ஒன்று கூடிவாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படும். அதே நேரத்தில் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்திப் பழகுவது சாதி உணர்வைப் போக்கப் பயன்படும்.

5 முதல் 6 வயதிற்குள் முடிந்த வரையில் அவர்களுக்கு அவ்வப்போது எழுத்துக்களும் சொல்லிக் கொடுக்கப்படும். ஆகவே, குழந்தைகள் பள்ளிக்குப் போகும் போது அவர்கள் புதிதாக 'ஆனா ஆவன்னா' தெரிந்து கொள்வதற்குப் பயிலாக, அங்கே போகும் போதே சமத்துவ உணர்வு மற்றும் இந்த எழுத்துக்களைத் தெரிந்து கொண்டு செல்ல முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

## செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்:

தமிழகத்தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. மக்கள் தங்கள் வருவாய்க்குள் தங்களுக்குக் கிடைக்கும் எளிமையான உணவுகளிலேயே ஊட்டச் சத்து நிரம்பிய உணவு பெற முடியும் என்பதைக் குறிப்பாகத் தாய்மார்களுக்கு அறிவிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாவது கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும், ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்ப்பால் மறக்கச் செய்யப்பட்ட குழந்தைகளும் எத்தகைய சத்துணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பது குறித்து அறிவுறுத்தலாகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 குழந்தைகள் கர்ப்பிணி முதல் 6 வயதிற்குட்பட்ட 80 குழந்தைகளும், 40 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 'கேர்' நிறுவனம் வழங்கும்



உணவுப் பொருட்களின் உதவி யால் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. தங்களைச் சுற்றி யுள்ள இடங்களிலேயே தங்களுக் குக் கிடைக்கக் கூடிய பருப்பு வகைகள், பசுமைமிகு கீரைகள், காய்கறிகள், கனி வகைகள் உற் பத்தி செய்து உட்கொள்ளச் செய்யுமாறு அறிவுரை கூறப்பட்டு வருகிறது.

சுமார் 60 கிராமப்புறப்பெண் களுக்கு இரண்டு நாட்களில் இத் திட்டத்தின் கீழ் சுகாதார முறை யிலும் சத்து இழக்காத வகை யிலும் உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் முறை குழந்தைகள் உணவு, கவனம், குடும்ப நலம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக் கப்படுகிறது. மேலும் குழந்தை களுக்கு உணவுச் சத்துக் குறைவி னால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்கவும் தொற்றுநோய் தடுப்பு ஊசி மருந்தும் வைட்டமின் மாத் திரைகள் வழங்குதலும் முதலியன இத்திட்டத்தின் கீழ் நடைபெறு கின்றன.

இத்திட்டமானது மத்திய அரசு, யூனிசெப் மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் 1962-63 முதல் தொடங்கப்பட்டது. 1978-79ம் ஆண்டு முடிய இத் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 73.62 இலட்சம் அளித்துள்ளது. 1979-80 முதல் இத்திட்டமானது முழு அளவில் மாநில அரசு நிதியி லிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் 85 ஊராட்சி ஒன்றி யங்களில் ஆரம்பிக்கப்பட்டு 53 ஊராட்சி ஒன்றியங்களில் முடிவு பெற்று விட்டது. இவ்வாண்டில் 32 ஒன்றியங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது. இவ் வொன்றியங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடைபெற மாநில மற்றும் ஒன்றிய நிதியுடன் 800க்கும்மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 1981-82ம் ஆண்டிற்குரூ.31 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத் தினால் ஆண்டு ஒன்றுக்கு 52,000 குழந்தைகளும் 26,000 கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் பய னடைகின்றனர்.



## ஆசிய விளையாட்டுப் போட்டியின் கதை

ஏறக்குறைய முப்பது ஆண்டு களுக்கு முன், ஆசியாவுக்கு எனத் தனி ஒலிம்பிக் போட்டிகள் என்ற கருத்து முதன் முதலாக வெளி வந்தது. இந்தக் கருத் தினை வெளியிட்டவர் பேராசிரி யர் ஜி. டி. சோந்தி என்ற இந்தி யர் ஆவார்.

இந்தியர் ஒருவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப் படையில் உருவெடுத்த விளை யாட்டுப் போட்டிகள் என்ற காரணத்தால், முதல் ஆசிய ஒலிம்பிக் பந்தயங்கள் 1951ஆம் ஆண்டு டெல்லியிலேயே தொடங் கின.

இந்தியாவின் முதல் பிரதம அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்தான் முதல் ஆசிய போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

ஏறக்குறைய முப்பது ஆண் களுக்குப் பின்னர், 1982, நவம் பர் 19ஆம் தேதியன்று திருமதி இந்திராகாந்தி அவர்கள் 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டி யைத் திறந்து வைக்க இருக்கி றார்கள்.

முப்பத்து ஒன்று ஆண்டுகள் எட்டு ஆசிய ஒலிம்பிக் பந்தயங் கள் உருண்டோடிவிட்டன. மீண் டும் இந்த ஒன்பதாவது ஆசிய ஒலிம்பிக் போட்டிகள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முதல் ஆசிய ஒலிம்பிக் பந்தயமான டெல்லி ஒலிம்பிக் பந்தயம் கூட 1950-ஆம் ஆண்டில் தொடங்கு வதாகத்தான் (இலண்டன் மாநக ரத்தில் 1948ஆம் ஆண்டு நடந்த உலக ஒலிம்பிக் பந்தயத்திற்கு வந்திருந்த ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேரா சிரியர் டாக்டர் சோந்தி நடத் திய மாநாட்டில்) முடிவு செய் யப்பட்டது

ஆனல், ஒரு கண்டம் தழுவிய விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்வதற்குக் காலம் போதாத ஒரே காரணத்தால் முதல் ஆசிய ஒலிம்பிக் போட்டி களை டெல்லியில் 1951ஆம் ஆண்டு சற்றுத் தள்ளி நடத்த அனுமதி வழங்கப்பட்டது. முதல் போட்டியைச் சற்றே தள்ளி வைக்க அவகாசம் தரப்பட்டதே தவிர தொடர்ந்துவரும் போட்டி கள் 1954, 1958, 1962 என்ற அடிப்படையில் நடத்தப்படும் என்றே முடிவு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில்! தான் 1954 முதல் 1982 வரை ஆசிய ஒலிம்பிக் போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றன.

| | |
|---|---|
| 1954 | மணிலா (பிலிப்பைன்ஸ்) |
| 1958 | டோக்கியோ (ஜப்பான்) |
| 1962 | ஜகார்த்தா (இந்தோனேசியா) |
| 1966 | பாங்காக்(தாய்லாந்து) |
| 1970 | பாங்காக்(தாய்லாந்து) இரண்டாவது தடவை |
| 1974 | டெக்ரான் (ஈரான்) |
| 1978 | பாங்காக்(தாய்லாந்து) மூன்றாவது தடவை |
| 1982 | புதுடெல்லி (இந்தியா) |

1951ஆம் ஆண்டில் நடத்திய முதல் ஆசிய ஒலிம்பிக் பந்தயம் கீழ்க்கண்ட ஐந்தே ஐந்து ஆட் டங்களில்தான் போட்டிகள் நடத் தியது.

கூடைப்பந்து, சைக்கிள் பந்த யங்கள், கால்பந்து, நீச்சல்போட் டிகள், தடகளப் போட்டிகள்.

1982ஆம் ஆண்டு ஆசிய ஒலிம்பிக் பந்தயங்களில் 21 ஆட் டங்களில் போட்டிகள் நடை பெறப் போகின்றன. முப்பதுக் கும் மேற்பட்ட ஆசிய விளை யாட்டுப் போட்டிக் கூட்டமைப்பு நாடுகள் பங்கேற்கப்போகின்றன.

விளையாட்டுப் போட்டிகள் 16 நர்ட்கள் நடக்கப் போகின் றன. பம்பாயில் பாய்மரப் படகு போட்டியும் (YACHTING) ஜெய்ப்பூரில் துடுப்புப் படகுப் போட்டியும் ( ROWING ) தவிர மற்றப் போட்டிகள் அனைத்தும் புதுடெல்லியில் எழுப்பப்படும் பிரமாண்டமான விளையாட்டு அரங்குகளில் நிகழவுள்ளன.

பெரியதொரு திறந்தவெளி மைதானம், உள் விளையாட்டு அரங்குகள், சைக்கிள் பந்தயத் துக்கு என்று ஒரு ''வேலோட் ரோம்'' சிறப்பான நீச்சல் குளம், ஓடுகிறவர்களுக்கு ஒரு டார்டான் ஓடுகளம் (TARTAN TRACK) என்று அத்தனை அமைப்புகளும் அசுரவேகத்தில் தயாராகிக் கொண்டு இருக்கின் றன.

1982-ஆம் ஆண்டு நவம்பர் 19லிருந்து, டிசம்பர் 4 முடிய ஆசியாவின் நினைவு, எண்ணம் நம்பிக்கை, அத்தனையும் புது டெல்லியைச் சுற்றியே இருக்கும்.

# சிறு தொழில் வளர்ச்சிக்கு ஒரு சிட்கோ

அளவு சிறிது, அழகு பெரிது' என்பது ஒரு பிரபலமான கருத்து. மக்களாட்சியின் பலன்கள், தொழில் துறையிலும் பரவலாகக் கிடைக் கும் வகையில், குறைந்த அளவு தனிநபர் முதலீடு—அதிக அளவு வேலை வாய்ப்பு, என்ற அடிப்படையில், அரசின் சமூக நோக்கங் களுக்கு ஏற்ப, வேகமான தொழில் வளர்ச்சி ஏற்படுவதில் சிறு தொழில் துறை ஆற்றவேண்டிய முக்கிய பணியை உணர்ந்து, 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) என்ற தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. தொழில் மற்றும் வர்த்தக இயக்குந ரகம் கவனித்து வந்த பணி 'சிட்கோ'விற்கு மாற்றப்பட்டது. ஆரம் பத்தில் இது தனியார் நிறுவனமாக இருந்தது. 1971-ஆம் ஆண்டு, பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. இதன் உரிமை முழுவதும் மாநில அரசுக்குச் சொந்தமானது.

சிட்கோவின் முக்கிய நோக்கங்கள்

★ தொழிற்கூடங்கள் தவணை முறை கொள்முதல் திட்டம் உள்பட கட்டமைப்பு வசதிகளை சிறு தொழில்களுக்கு அளித்தல்.
வளர்ச்சி மையங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள், கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் மிகச்சிறிய தொழில்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட பணிக்கூடங்கள் ஆகியவை அமைத்தல்.

★ மத்திய அல்லது மாநில மானியம் வழங்குதல்.

★ வட்டியில்லா விற்பனை வரிக் கடன் உதவி.

★ குறைந்த அழுத்த மின் கட்டண உதவி.

★ முக்கிய பொருட்கள் வினியோகம்

★ விற்பனை உதவி

★ அடிப்படை மூலதன உதவிக்கான அனுமதி

★ படித்த வேலை வாய்ப்பற்றவர்களுக்கு விளிம்புத் தொகை உதவி அளித்தல்

★ நலிந்த தொழில் புனரமைப்பு

★ தொழில் வினைஞர்களுக்கு வழிகாட்டுதல்.

சிறு தொழில்களுக்கான வரையரையின்படி நிலம், கட்டடம், இயந்திரம் ஆகியவை சம்பந்தப்பட்ட தொகை, 20 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள தொழில்களாகும். இதே நோக்கங்களுக்காக ரூ. 25 லட்சத்துக்கும் குறைவாகத் தேவைப்படும் துணைத் தொழில்களும், சிறு தொழில்களாகக் கருதப்படுகின்றன.

சிறு தொழில் துறையின் நலனைக் கவனித்துக்கொள்வதற்காக சிட்கோ, டிஐஐசி, தொழில் மற்றும் வர்த்தக இயக்குனரகம் தவிர மேலும் தேசிய சிறு தொழில் நிறுவனம், அபிவிருத்தி ஆணையர் (சிறு தொழில்கள்) போன்ற பல அமைப்புகளும் உள்ளன.

வட்டிவிகிதம், இரும்பு-எஃகு, தேனிரும்பு, சுட்டநிலக்கரி, பாரஃபின் மெழுகு போன்ற முக்கிய மூலப் பொருட்களை வழங்கல் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சிறு தொழில் துறை ஆற்றவேண்டியுள்ள முக்கியமான பணிகள், மற்றும் தொழில் அதிபர்கள், குறிப்பாக முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருக்கும் தொழில் அதிபர்களின் சிறப்பான பிரச்னை கள், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கட்டமைப்பு வசதி அளித்தல், வளர்ச்சி மையங்களில் தொழிற் கூடங்களை நிர்மாணித்தல் மூலப்பொருட்களை வழங்கல், எளியமுறை கடன் உள்ளிட்ட தாராள கடனுதவி, விற்பனை வசதிகள், தொழில் முறை ஆலோசனை, நலிந்த தொழில்கள் புனரமைப்பு போன்ற கூட்டுச் சலுகைகள், உற்பத்தித் திறன் உயர்வு, அதிக வேலைவாய்ப்புப் பெருக்கம் ஆகியவற்றை நோக்கில் கொண்டு, இவைகளை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி யாக, சிட்கோ அளித்து வருகின்றது.

சென்னையில் தலைமையகத்தைக் கொண்ட 'சிட்கோ'வின் கிளை கள், அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் உள்ளன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இதன் கட்டுப்பாட்டில் 49 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. சிறு தொழில் துறைக்கு முக்கியமான மூலப் பொருட் களை வழங்குவதற்காக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மூலப் பொருள் கிடங்குகள் உள்ளன.

சிட்கோவின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி. இதில், ரூ. 4.60 கோடி செலுத்தப்பட்ட மூலதனமாகும். இந்த நிறுவனத்தில் ஆண்டு ஒன்றுக்கு மூலப் பொருள் விநியோகம் மூலம் ரூ. 20 கோடி, உதவிகள் மூலம் ரூ. 3 கோடி, விற்பனை உதவி மூலம் ரூ. 3 கோடி, என்ற அளவுகளில் வர்த்தகப் புழக்கம் நடைபெறுகிறது.

இந்த நிலையில், இனிவரும் ஆண்டுகளில் நாட்டின் முன்னோடி சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்களில் ஒன்றாக, சிறு தொழில் துறையில் வேகமான தொழில் வளர்ச்சியை மேற்கொள்வதற்கு, 'சிட்கோ' பண்படுத்தப் பட்டுள்ளது.

## சிறுதொழில்களுக்குக் கூட்டமைப்பு வசதிகள்

தவணை முறை கொள்முதல் திட்டத்தின்கீழ், 'சிட்கோ' 200 சதுர அடி முதல் 6000 சதுர அடி வரையிலான பல்வேறு அளவுகளில், அதிக பரப்பளவை உள்ளடக்கி நிர்மாணிக்கப்பட்ட தொழிற் கூடங்களை சிறு தொழில்களுக்கு அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், கடன் தொகையை 10 ஆண்டு காலத்துக்குள் செலுத்தலாம். இதில் தவணைகளைத் தாமதித்து செலுத்த, அனுமதிக்கப்படும் இரண்டு ஆண்டுகளும் உள்ளடங்கும். இதற்கான வட்டி விகிதம் பின்தங்கிய பகுதிகளில் 10.5 சதவிகிதமும், பிற பகுதிகளில் 13.5 சதவிகிதமும் ஆகும்.

இதுவரை 'சிட்கோ' தவணைமுறை கொள்முதல் திட்டத்தின் கீழ், 1005 தொழிற் கூடங்களை பல்வேறு பகுதிகளில் நிர்மாணித்துள்ளது. இந்தத் தொழிற் கூடங்கள் மூலம் சுமார் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. மரபு ரீதியான 33 தொழிற் பேட்டைகளையும் சிட்கோ நிர்வகிக்கின்றது. இவற்றில் அரசுக்குச் சொந்தமான 783 தொழிற் கூடங்கள் உள்ளன. இத்தொழிற் கூடங்கள் மூலம் ஏறத்தாழ 20,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சிறு தொழில்கள் தேவைகளுக்கு ஏற்ப, மேம்படுத்தப்பட்ட மனைகளையும் பல்வேறு வளர்ச்சி மையங்களில் சிட்கோ அளிக்கிறது. இதுவரை, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், 951 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 30,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இனிவரும் ஆண்டுகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், சிறு தொழில் முனைவோருக்கு நலம் பயக்கும் வகையில், பெருமளவில் மனைகளை ஒதுக்கீடு செய்ய 'சிட்கோ' உத்தேசித்துள்ளது.

## ஊக்கங்கள்

### மத்திய அல்லது மாநில மானியம் வழங்குதல்

தமிழ் நாட்டில், பின் தங்கிய தாலுகாக்களென மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ள 33 பின் தங்கிய தாலுகாக்களில் அமைக்கப்படும் சிறு தொழில்கள், நிலம், கட்டடம், இயந்திரம் போன்ற நிரந்தர மூலதன முதலீட்டில், 15 சதவிகிதத்திற்கு இணையாக, மத்திய அரசு மூலதன முதலீட்டு மானியம் பெற தகுதியுள்ளவையாகும். இவை தவிர, தமிழ்நாடு அரசு அறிவித்து உள்ள 24 பிற தாலுகாக்களும், மாநில மானிய உதவி பெறத் தகுதி உள்ளவை. ஒவ்வொரு வகையிலும் சிறுதொழில் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை, ரூ. 3 லட்சம் ஆகும்.

இதுவரை (28-2-'82 வரை) 2,455 சிறு தொழில் நிலையங்களுக்கு பலனளிக்கும் வகையில் மத்திய மாநில திட்டங்களின் கீழ் ரூ. 678.46 லட்சம் அளவுக்கு சிட்கோ மானிய அனுமதி அளித்துள்ளது. இந்தத் தொழில் நிலையங்கள் மூலம், ஏறத்தாழ 2o ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

### வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வசதி

தமிழகத்தில் சென்னை நகரை ஒட்டி 15 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்கு அப்பால் உள்ள இடங்களிலும் கோவை, மதுரை, சேலம், திருச்சி ஆகிய நகரங்களை ஒட்டி 8 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்கு அப்பாலுள்ள இடங்களிலும் அமைந்துள்ள எல்லா புதிய சிறு தொழில் நிலையங்களும் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறத் தகுதி பெற்றவை. ஆனால் 3 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரியங்கள், இந்த உதவியைப் பெறத் தகுதி பெற்றவை



அல்ல. ஒரு சிறு தொழிலுக்கு அனுமதிக்கப்படத்தக்க அதிகபட்ச கடனுதவி 1.25 லட்சம் ரூபாய் அல்லது நிரந்தரச் சொத்துக்களின் மதிப்பில் 8 சதவிகிதம். 6-வது ஆண்டிலிருந்து கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தக் கடனுக்கு வட்டி கிடையாது. இதுவரை (28-2-1982 வரை) இத்திட்டத்தின் கீழ் 17 தொழிலகங்களுக்குப் பயனளிக்கும் வகையில் சிறு தொழில் முனைவோருக்கு ரூ. 14.68 லட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### குறைந்த அழுத்த மின் கட்டண வசதி

இத்திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம், நகர்ப்புற நிலவரி ஆளுகை, நகர்ப்புற நில உச்சவரம்பு ஆளுகை ஆகியவைக் குட்பட்ட பகுதிகள் தவிர, தமிழகத்தில் எங்கும் அமைக்கப்படும் சிறு தொழிலகங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மானியம் அளிக்கப்படுகிறது. தொழிலகம் உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து, 3 ஆண்டு வரைக்கும், மானியம் வழங்கும் வகையில் கட்டுப்பாடு உள்ளது.

28-2-1982 வரை, இத்திட்டத்தின் கீழ் 160 சிறு தொழிலகங்கள் பலன் பெறும் வகையில், 1.30 லட்சம் ரூபாய் மானியம் அளிக்க, சிட்கோ அனுமதி அளித்துள்ளது.



### அடிப்படை மூலதன உதவிக்கான அனுமதி

50,000 அல்லது அதற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமப்புற, மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் அமைக்கப்படும் மிகச் சிறிய தொழிலகங்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது. நிரந்தர மூலதன முதலீடு, முன்-இயக்க செலவுகள், மற்றும் 3 மாத பணிச் செலவுக்கான மூலதனம் அடங்கிய மொத்த முதலீட்டில், 10 சதவிகிதம், அல்லது ரூ. 20,000 இரண்டில் எது குறைவோ, அந்த அளவுக்கு கடனுதவி அளிக்கப்படும். ரூ. ஒரு லட்சத்துக்கும் மேற்படாத ஆலை-இயந்திர முதலீடு கொண்ட மிகச்சிறிய தொழிலங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பலன் கிடைக்கும். விளிம்புத் தொகை உதவி மீது ஆண்டுக்கு 4 சதவிகிதம் தனிவட்டி விதிக்கப்படும். கிராமப்புறங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் அமையும் மிகச்சிறிய தொழிலகங்களுக்கு இது பேருதவியாகும்.

### விளிம்புத் தொகை உதவி

படித்த வேலை வாய்ப்பற்றவர்கள், தங்களுடைய புதிய சிறு தொழிலகங்களைத் தொடங்கும் போது, நிதி நிறுவனங்கள் அனுமதிக்கும் பிரதான கடன் தொகையில், 10 சதவிகிதத்தை இத்திட்டத்தின் கீழ் விளிம்புத் தொகை உதவியாக சிட்கோ அளிக்கிறது. இதுவரை 864 பேருக்கு இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 97.87லட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 10,200 பேர் வேலை வாய்ப்பை பெறுகின்றனர்.

### முக்கிய மூலப் பொருட்கள் விநியோகம்

இரும்பு-எஃகு, சுட்ட நிலக்கரி, தீக்குச்சி மெழுகு, காரீயம்-துத்தநாகம், பாரஃபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட், காஸ்டிக்சோடா, சோடா ஆஷ், வச்சிரம், இறைச்சி கொழுப்பு, கொழுப்பு அமிலங்கள் போன்ற அரிதான தொழில்துறை மூலப்பொருட்களை சிட்கோ கொள்முதல் செய்து விநியோகிக்கிறது. இந்தப் பொருட்களை பெரிய உற்பத்தியாளர்களிடமிருந்து சிட்கோ கொள்முதல் செய்து பதிவு பெற்ற சிறு தொழில்களுக்கு, மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் மதிப்பீட்டின் அடிப்படையில் விநியோகம் செய்யப்படுகிறது. தேவைப்பட்டால், அரிதான மூலப்பொருட்களை பல்வேறு நாடுகளில் இருந்து சிட்கோ இறக்குமதியும் செய்கிறது. 28-2-1982 வரை சிட்கோ விநியோகித்துள்ள முக்கிய மூலப் பொருட்களின் விவரங்கள் விருடவாரியாக கீழே தரப்பட்டுள்ளன.

### விற்பனை உதவித் திட்டம்

தமிழ் நாட்டில் சிறு தொழில்களுக்கு விற்பனை உதவிகளை அளிப்பதற்கான வழிமுறை ஒன்றை, சிட்கோ உருவாக்கி உள்ளது. 1978-79 ம் ஆண்டு, விற்பனை உதவிக்கான பணி தொடங்கியது. 1978-79ல், வர்த்தகப் புழக்கம் ரூ. 26 லட்சம் என்ற சிறிய தொடக்கத்திலிருந்து, சிட்கோவின் தீவிரப் பணியின் மூலம், 1980-81ஆம் ஆண்டு

ரூ. 177.20 லட்சம் அளவுக்கு வர்த்தகப் புழக்கம் உயர்ந்தது. நடப்பு ஆண்டில் 28-2-82 வரை சிறு தொழில் நிலையங்களிடம் ரூ. 317.31 லட்சம் மதிப்புக்கு உத்தரவுகள் (Order) கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ரூ. 150.06 லட்சம் மதிப்புள்ள உத்தரவுகள் (Orders) நிறைவு செய்யப்பட்டுவிட்டன. 31-3-82-க்குள் விநியோகங்களின் (Supply) அளவு ரூ. 200 லட்சத்தை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு அரசு துறைகள் அமைப்புகள், எழுப்புகின்ற ஒப்பந்த கோரிக்கைகளில், சிறு தொழில் சார்பில் சிட்கோ தவறாமல் பங்கு ஏற்று, இதன் மூலம் தமிழக அரசு சிறு தொழில்களிடமிருந்து கொள் முதல் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 401 பொருள்கள், மற்றும் பிற பொருட்களைவிட சிறு தொழில்களின் பொருட்களுக்கு 15 சதவிகிதம் விலை முன்னுரிமை போன்ற கொள்கை ஆதரவுகளின் பலன்கள், உரியவர்களுக்குக் கிடைக்க சிட்கோ வழி வகுக்கின்றது. சிட்கோவில் விற்பனை உதவி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில்கள், டேவணித் தொகை மற்றும் உத்தரவாத முன் பணம் போன்றவற்றைக் கட்டுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது.

1981-82 ஆண்டுக் காலத்தில் துவங்கி கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ள சிட்கோவின் மற்றொரு பணி விநியோகம் மற்றும், பைசல் தலைமை இயக்குனரகத்தின் கொள் முதல் திட்டத்தில் பங்கு ஏற்றதாகும். இதன் மூலம், சிட்கோவின் பதிவு பெற்ற சிறு தொழிலகங்களுக்கு உத்தரவாத முன் பணம் கோரிக்கையிலிருந்து, விலக்கு மற்றும், விலை முன்னுரிமை போன்ற வசதிகள் அளிக்கப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில், இந்த இயக்குனரகத்திடம் இருந்து ரூ. 10.93 லட்சம் மதிப்புள்ள ஆர்டர்கள் பெறப்பட்டு, 11 தொழிலகங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டன. இது தவிர ஒரு பொருளுக்கு விலை உடன்பாடு பெறப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில், சிட்கோ எதிர்பார்க்கப்படும் வர்த்தகப் புழக்கம் ரூபாய் 10 இலட்சம் ஆகும்.

ஒரு பொருளுக்கான விகித ஒப்பந்தத்தின் கீழ், ரூபாய் 15 இலட்சம் அளவில் விற்பனைக்கு உரிய அளவு, இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.





## நலிந்த தொழில்கள் புனரமைப்புத் திட்டம்

நலிந்த தொழிலகங்களுக்கு ரூ. 20,000 வரை சிட்கோ அதிக பட்ச உதவி அளிக்கிறது. நிதி நிறுவனங்கள் அனுமதித்துள்ள கூடுதல் வசதிகள்அனைத்தையும் பெறுவதற்கு தொழில் முனைவோர் விளிம்புத் தொகையை செலுத்த வேண்டிய கூடுதல் மூலதனத் தேவையில், 50 சதவிகிதம் அளிக்கப்படுகிறது. சில குறிப்பிட்ட நிலைமைகளில் விளிம்புத் தொகை உதவி 75 சதவிகிதம் வரை அளிக்க நலிந்த தொழில் புனரமைப்புக்கான குழு பரிந்துரை செய்யலாம். இதுவரை (28—2—82 வரை), 19 சிறு தொழிலகங்கள் பலன் பெறும் வகையில் ரூ. 17.39 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## சிறுதொழில் முனைவோருக்கு ஆலோசனை மற்றும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு தமிழகத்தில் தொழில் துவக்க உதவி

சிறு தொழில் முனைவோர், தங்கள் திட்டங்களைச் செயல்படுத்த சிட்கோ ஆலோசனை மற்றும் தொடர்புப் பணிகளை அளிக்கிறது. சிறு தொழில் முனைப்பை வளர்ப்பதற்காக அவ்வப்போது பயிற்சித் திட்டங்களை அளிக்கவும் சிட்கோ விரும்புகிறது. இதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களில் முதலீடு செய்யும் வகையில், உதவிகளையும் சிட்கோ அளிக்கும்.

வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் முதலீடு செய்ய விரும்பும் தொகைக்கு ஏற்ப தகுந்த திட்டங்களைக் கண்டறிவதில் அனைத்து முயற்சிகளும் சிட்கோ'வினால் மேற்கொள்ளப்படும்.



## மிகச் சிறிய துறைத் திட்டம் (TINY SECTOR SCHEME)

சிறு தொழில்களிலும் சிறிதாக உள்ள தொழில்களுக்கு உதவும் வகையில், 'மிகச் சிறிய துறை திட்டம்' 1977-ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இது சிறு தொழில் துறை உதவியில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியாகும். இயக்கத் தொழிற்பேட்டை என்ற கோட்பாடு ஆரம்பகாலத்தில் பல சிக்கல்களைச் சமாளிக்க நேரிட்டபோதிலும், இப்போது போதுமான அளவு பரவியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், அதிக பலன் அடைந்துள்ள பிரிவுகள் தீப்பெட்டித் தொழில், பட்டுப்பூச்சி வளர்த்தல், மரச் சிற்பக் கூடங்கள் அமைத்தல் முதலியன.

இயக்கத் தொழில் பேட்டைகளை, சிறு தொழில்களிலும் மிகச் சிறிய தொழில்களுக்கு உதவும் வகையில், தோல் தொழில், ஆட்டோ மொபைல் மற்றும் கைத்தறித்துறை ஆகியவைகளுக்கு உதவும் வகையில், விரிவமைக்க வேண்டும் என்று கோரும் அளவுக்கு, கணிசமான ஆதரவு பெருகி வருகிறது. மாநிலத்தின் தொலைதூர உட்பகுதிகளுக்கும் தொழில் திட்டத்தை எடுத்துச் செல்லும் வகையில், தீவிர தொழில் வளர்ச்சிக்கு 'மிகச் சிறிய துறை' உண்மையிலேயே ஒரு புரட்சிகர நடவடிக்கையாகும். சமுதாயத்தின் எளிய பிரிவினர், குறிப்பாக பெண்கள், கிராமப்புற கைவினைஞர்கள், சிறு தொழில்



நுட்ப வியலாளர் ஆகியோருக்கு இதன் சேவைகள் முக்கியமாகக் கிடைக்க வேண்டும் என்பது குறிக்கோளாகும்.



ஒவ்வொரு தொழிலகத்துக்கும் ரூ. 10 ஆயிரம் முதல் ரூ. 15 ஆயிரம் வரை முதலீடு தேவைப்படும். ஒவ்வொரு தொழிலகத்திலும் சுமார் 10 பேருக்கு வேலை கிடைக்கும் என்ற அடிப்படையில் பார்க்கும்போது இதன் மூலம் உருவாகும் வேலைவாய்ப்பு கணிசமானதாகும்.

மாநிலத்தில் இதுவரை 84 இடங்களில் 1360 மிகச்சிறிய கூடங்களை சிட்கோ அமைத்துள்ளது. உண்மையிலேயே சிறிய தொழில் முனைவோருக்கு உதவும் வகையில், இந்த ஆண்டுத் திட்ட காலத்தில் அம்பத்தூரில் சுமார் 100 கூடங்களும் கிண்டி தொழிற்பேட்டையில் சுமார் 50 கூடங்களும் வேகமாக அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான ஆதரவு, ஊக்கம் அளிப்பதாக உள்ளது. இத்திட்டத்தினால் கிடைக்கும் அதிக பயன் காரணமாக, பெருமளவு விழிப்புணர்வு ஏற்பட்டு இந்தக் கூடங்களை அமைக்க முன்னுரிமை அளிக்கவேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி



கல்விக்காக 1982-83ஆம் ஆண்டில் ஒதுக்கியுள்ள ரூ. 291 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,370 கோடியில் 21.3 விழுக்காடாகும்.

கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1982-83 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

அந்த நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1982-83ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 318 கோடியாகும்.

ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள்; ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோர்க்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு; மருத்துவக் கல்வி; வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவை கல்விகளுக்கு ஆகும் செலவு முதலிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய புள்ளி விவரங்கள் சேரா என்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

## பள்ளிக்கல்வி (பொது)

1982-83ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 291 கோடியில் பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 239 கோடியாகும். 1981 அக்டோபர் 1ஆம் தேதி அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,896 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல்நிலை பள்ளிகள் 27,767. நடுநிலைப்பள்ளிகள் 5,556. உயர்நிலைப் பள்ளிகள் 3,573 (1,405 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட) மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 137 பள்ளிகளும்—79 உயர்நிலைப் பள்ளிகளும் 58 மேல் நிலைப் பள்ளிகளும்— மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 36,896-ல் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.71 இலட்சம்.



பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 93.75 இலட்சம்.

1982-83ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள் நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 150 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 500 தமிழாசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளுகளுக்கு 300 பி.எட். தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

## இளஞ்சிறார் கல்வி

தமிழக அரசு முதன் முறையாக 1982-83ல் இளஞ்சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான ஒரு திட்டத்தைத் தொடங்கவிருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப் போக்கைப் புகட்டுவதன் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். மேலும் இது பள்ளி செல்லும் வயதுள்ள சிறுமியர் தம் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுபட்டு அச்சிறுமியர் பள்ளி செல்வதற்கும் உறுதுணை புரியும். பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் சிறுமியரிடையே தொடக்கக் கல்வியை மேலும் பரப்புவதற்கு குறிப்பான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1982-83ல் தொடங்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் முதற்கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த நர்சரி பிரிவுகளுக்கான பாடத் திட்டங்களை வகுப்பதற்காக 1981 நவம்பரில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கென 1982-83ல் ரூ 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தொடக்கக் கல்வி









தொகுதிச் சிறுவர்களில் 64.55 விழுக்காட்டினரும் இதுவரை (1981-82 )பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984-85க்குள்) இந்தியாவெங்கும் 6—11 வயதுத் தொகுதியினரில் 95 சதவிதத்தினரும் 11—14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகத்தில் 6—11 வயதுத் தொகுதியைப் பொறுத்தவரை அந்த இலக்கு இப்பொழுதே எய்தப்பட்டு இருப்பதும் 11—14 வயதுத் தொகுதியரைப் பொறுத்த வரை அந்த இலக்கை விஞ்சியிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 1981-82ஆம் ஆண்டில் 1.83 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1981-82ஆம் ஆண்டில் இருந்த 33.323 தொடங்கப் பள்ளிகளில் முதல் நிலைப் பள்ளிகள் (1– 5 வகுப்புகள்) 27,767 நடுநிலைப் பள்ளிகள் (1– 8 அல்லது 6– 8 வகுப்புகள்) 5,556 ஆகும். படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 70.12 இலட்சமாகும். பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,257 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர் மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

பள்ளியில் சேரும் (6—11வயது) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு 1973-74ஆம் ஆண்டில் 51 சதவீதமாக இருந்தது. 1980-81ல் 30 சதவீதமாகக் குறைந்து உள்ளது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் இலவசமாகப் புத்தகங்கள் கற்பலகைகளை வழங்கும் திட்டம்; 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை (1977-78 முதல் அமலாக்கப்பட்டது); போன்றவை வரவேற்கத்தக்க இம்முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணங்களாகும்.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வி**

1981-82ல் தமிழ்நாட்டில் 14—16 வயது தொகுதியினர் 17.25 இலட்சம் பேர்களுள், 41 விழுக்காடாகிய 7.13 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1981-82ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை 3,573 ஆகும்.

1981-82ல் மேற்கண்ட 3,573 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 23.63 இலட்சமாகும்.

1981-82ல் அரசுப் பள்ளிகள் 97; நகராட்சிப் பள்ளிகள் 2 தனியார் பள்ளிகள் 19; ஆக மொத்தம் 118 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. சிறுபான்மையினரால் புதிதாகத் திறக்கப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை இதில் சேரவில்லை.

**கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள்:**

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும், இதர வசதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதேபோன்று வசதியைப் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப் புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்குப் புதிதாக படிப்பு உதவித் தொகைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகையினைப் பெற்ற மாணவர் மேல்நிலை கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர்.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி:**

1981-82இல் செயல்பட்டு வந்த 1347 மேல்நிலைப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு (1981-82ஆம் ஆண்டு மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட 106 பள்ளிகள் உட்பட):



| பள்ளிகளின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி | 1,274 |
| ஆங்கிலோ-இந்தியன் | 26 |
| மெட்ரிகுலேசன் | 33 |
| தொழில் நுட்பப் பள்ளிகள் | 14 |
| மொத்தம் | 1,347 |

(மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 58 மேல்நிலைப் பள்ளிகளின், எண்ணிக்கை மேற்கண்ட 1,347 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை.)

**மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள்:**

1981-82ல் மொத்தம் 1,014 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,602 ஆகும். 1981-82ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 2.75 இலட்சம் மாணவர்களில் 58,520 பேர் (அதாவது சுமார் 21 சதவிகிதத்தினர்) விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர்.

| தொழிற்பாட வகை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. வேளாண்மை | 4,561 | 35 | 4,596 |
| 2. மனையியல் | 73 | 2,818 | 2,891 |
| 3. வாணிகத்துறை | 20,884 | 10,617 | 31,501 |
| 4. பொறியியலும் தொழில்நுட்பவியலும் | 15,037 | 86 | 15,123 |
| 5. உடல்நலம் | 327 | 3,919 | 4,246 |
| 6. பலவகை | 66 | 97 | 163 |
| மொத்தம் | 40,948 | 17,572 | 58,520 |

முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களும், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் ஆக சுமார் 4,300 பகுதி நேர ஆசிரியர்களும் (மாதம் ரூ. 150 ஊதியத்தில்) தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் செயற்பட்டு வருகிறது.

மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன், மேல்நிலைக் கல்வித் தொழிற் பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத்திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக, 1982 சனவரியில் உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

**கல்லூரிக் கல்வி:**

தமிழ்நாட்டில் கலை, அறிவியல், மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்பொழுது 187ஆக உள்ளது. அவற்றில் பயில்வோர் எண்ணிக்கை 1980-81ல் 1,54,700 பேர் ஆக இருந்தது. 1981-82ல் 1,77,100 ஆக அதிகரித்து உள்ளது.

இத்துறையில் 1979-80ஆம் ஆண்டு முதல் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில் கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும், ஒரு துணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகின்றனர். 1982-83ஆம் ஆண்டில் இவ்வலுவலகங்களில் ஒவ்வொன்றிலும் மேலும் ஒரு உதவி இயக்குநர் பதவி ஏற்படுத்தப்படும்.

அண்மையில் பாரதியார் பல்கலைக் கழகமும், பாரதிதாசன் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்ட நிலையில் பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 187 கல்லூரிகளின் விவரம் வருமாறு:

| பல்கலைக்கழகம் | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள் | கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எணணிக்கை. |
|---|---|---|
| சென்னைப் பல்கலைக் கழகம் | சென்னை, செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி | 44 |
| பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி | 33 |
| மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் | மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி, கன்னியாகுமரி | 77 |
| பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் புதுக்கோட்டை [illegible] | [illegible] |
| [illegible] | | 187 |

இவ்வாண்டில் (1981-82) நிறுவப்பட்ட மூன்றாவது பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகும்.

1981-82ல் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள 3 கல்லூரிகளையும் சேர்த்து இம் மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக் கல்லூரிகள் தாமே பாடத்திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும்.

**தொடர் கல்வி:**

மாலை நேர வகுப்புகளை நடத்திவரும் கல்லூரிகளின் எண்ணிக்கை 33-மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் சட்டக் கல்லூரிகளும் உட்பட, இம்மாலை நேர வகுப்புகளில் பயில்வோர் சுமார் 8000 பேராவர். மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 1981-82ல், ''கோடை விடுமுறைக்கால வகுப்பு மற்றும் அஞ்சல் வழிக் கல்வி'' தரும் முனைப்புத் திட்டம் ஒன்றின் கீழ் கணிதம் இயல்பியல், வேதியியல், விலங்கியல், தாவர இயல், மனையியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங்களில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் கல்லூரிகளில் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 172 ஆசிரியர்கள் ''எம்.ஏ''வும், 731 ஆசிரியர்கள் ''எம்.எஸ்.சியும்'' பயின்றனர். 1982-83ல் அரசுக் கல்லூரிகளில் கூடுதல் மற்றும் புதிய மாலை நேர வகுப்புகளைத் துவங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது மதுரை காமராஜ் ,அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல்முறை வகுப்புகளை நடத்தி வருகின்றன. 1981-82ல் மொத்தம் 90,000 பேர் அவற்றில் பயின்று வந்தனர். மேலும், முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்திவந்த ''அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக'' வகுப்புக்களில் ஏறத்தாழ 14,000 பேர் பயின்று வந்தனர்.

**கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி:**

தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவி பணம் புத்தகப்படியாக ரூ. 180 தரப்பட்டு வருகிறது. 1980-81ல் 18,040 பேர்களும் 1981-82ல் 20,695 பேர்களும் இவ்வுதவிப் பணம் பெற்றனர். இத்திட்டத்திற்காக 1982-83ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 901 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. ரூ. 50 லட்சம் விலை மதிப்புள்ள புத்தகங்கள் கல்லூரிகளிலுள்ள புத்தக வங்கிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தை மதிப்பீடு செய்யவும் வருங்காலத்தில் புதிய வெளியீடுகள் பற்றிய திட்டமிடவும் அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பக் கல்வி:**

தொழில்நுட்பக் கல்விக்காக 1982-83ல் சுமார் ரூ. 15.66 கோடி (கட்டிடங்கள்,



கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும், 50 பல் தொழில் நுட்பப் பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் ஏழும், தனித் தொழில் பட்டய டிப்ளமா-கல்வியகங்கள் எட்டும் உட்பட) 14 தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

இவற்றில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை பொறியியற் கல்லூரிகளில் (திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேரப் பட்ட வகுப்புகளில் 1,470 பேர் பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில், 6,800 பேர்; மற்றும் தொழிற் பாட மேல் நிலைப் பள்ளிகளில் 840 பேர்; பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதோடு, பின்வருமாறு புதிய பல் தொழில் நுட்பப் பயிலகங்களையும் திறந்துள்ளதால் அப்பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது:

| ஆண்டு | புதிதாகத் திறந்த பல் தொழில் பயிலகங்கள் |
|---|---|
| 1979—80 | 1 |
| 1980—81 | 5 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |
| 1981—82 | 6 |

அண்ணாமலை பல்தொழிற் பயிலகம், செட்டிநாடு, மற்றும் முத்தையா பல்தொழிற் பயிலககம் அண்ணாமலை நகர் ஆகிய பயிலகங்களில் 1981-82இல் ஷிப்டு முறை புகுத்தப்பட்டது. அவற்றில் இம்முறை செயல்படும் பாங்கைக் கவனித்த பின்னர் மற்றும் சில நிறுவனங்களுக்கும் இம்முறை விரிவாக்கப்படும். 1981-82இல் திருநெல்வேலியில் புதிதாக ஒரு அரசு பொறியியற் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகள்:**

1982-83ல்; பொறியியற் கல்லூரிகளில் பின்வரும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்படும்.

| தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகள்: | |
|---|---|
| அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி | நுண் அலை மற்றும் ஒளி அலை பொறியியல். |
| அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி கோயம்புத்தூர் | செயல் முறை வேதியியல் |
| கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர் | கணக்கீட்டுப் பொறி சார்ந்த வரைவு வடிவமைப்பு. |

**அண்ணா பல்கலைக் கழகம்:**

பொறியியலிலும் தொழில் நுட்பத்திலும் தரமான உயர்கல்வி தரும் ஒரு சிறந்த மையத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் 4.9.1978 அன்று அண்ணா பல்கலைக் கழகம் சென்னையில் நிறுவப்பட்டது. பொறியியல் கல்லூரி, கிண்டி ஏ.சி. தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருந்த சென்னைப் பல்கலைக் கழகத் தொழில் நுட்பத் துறைகள்;அப் பல்கலைக்கழக கட்டிடக் கலை— நகர்ப்புறத் திட்டப்பள்ளி; சென்னைத் தொழில் நுட்ப நிறுவனம் குரோம்பேட்டை ஆகிய நான்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்து அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 3,900க்கும் அதிகமாகும். அவர்களில் பட்ட வகுப்புகளில் 3,255 பேரும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் 686 பேரும் பயிலுகின்றனர். இவ்வெண்ணிக்கையில் 300 மாணவியரும் அடங்குவர். இப்பல்கலைக் கழகத்தில் 21 பட்ட வகுப்புப் பாடமுறைகள், 31 பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள், 7 பட்ட மேற்படிப்புக்கு உயர்ந்த நிலையில் பட்டயப் படிப்பு பாடமுறைகளும் உள்ளன. கணிதம், இயல்பியல், வேதியியல் ஆகியவற்றில் எம்.ஃபில், படிப்பிற்கான வசதிகளும், பொறியியல், தொழில் நுட்பம், அறிவியல் ஆகிய துறைகளில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளன. நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் ''எத்தனால்'' ஐக் கொண்டு தானியங்கி உந்து வண்டிகளை இயக்குதல் போன்றவற்றில்— ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சக்திவள் ஆதாரங்கள்; கட்டடத் தொழிலியல் ஆகிய துறைகளில் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக் கழகத்திற்குத் திட்டமல்லாத மானியமாக ரூ. 180 லட்சம் வழங்க 1982-83ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியையும் பெற்று, மேலும் பல வளர்ச்சிப் பணிகளை அண்ணா பல்கலைக் கழகம் மேற்கொள்ள வகை செய்யும் பொருட்டு திட்ட மானியமாக ரூ. 62 இலட்சம் தரவும் 1982-83ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வரசின் நிதியுதவியுடன் 'அண்ணா பல்கலைக் கழகம் ''தொலைவிலுணரும் ஆராய்ச்சி நிலையம் (Remote Sensing Centre) அமைக்க அரசு ஏற்பளித்துள்ளது. பூமியிலுள்ள பலவகையான கனிமம் போன்ற மூலப் பொருட்களை ஆய்வு செய்து கண்டறிந்து, கணக்கெடுத்து, வகைப்படுத்தி பயன்படுத்தும் பணிகளுக்கு இந்நிலையம் உதவிபுரியும். இதனால் வேளாண்மை, கனிமப் பொருள்களைக் கண்டுபிடித்துக் கணக்கெடுத்தல் போன்ற பல்வேறு துறைகளிலும் இம் மாநிலத்தில் உள்ள மூலப் பொருள் ஆதாரங்களை மிகு பயன்விளையும் வகையில், பயன்படுத்த இயலும்.

**ஆவணக் காப்பக நூலகம்:**

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம், நிறைய புத்தகங்களையும் ஆவணங்களையும் கொண்ட மாபெரும் நூலகங்களில் ஒன்றாகும். மற்ற பொது மற்றும் கல்லூரி பல்கலைக் கழக நூலகங்களைப் போல் அல்லாமல் புத்தகங்கள் மட்டுமின்றி ஆவணக் காப்பக நூலகத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் வெளியீடுகள்- சென்சஸ் அறிக்கைகள், மாவட்ட விவரச் சுவடிகள், நிருவாக அறிக்கைகள் போன்றவை— ஏராளமாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் நாள்தோறும் சுமார் 100 புத்தகங்கள் வரப்பெற்று வகைப்படுத்தப்பட்டு, பட்டியலிடப் பெறுகின்றன.

**அருங்காட்சியகங்கள்:**

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில்



மாவட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. வேலூரில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றுமாக 1982-83ல் மாவட்ட அருங்காட்சியகங்கள் மேலும் இரண்டு அமைக்கப்படும்.

சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் கட்டும் பணியும் சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசிய கலைக்கூடத்துக்கு ரூ. 25 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும்பணியும் நடைபெற்று வருகின்றன.

**தொல் பொருள் ஆய்வுத்துறை:**

மாநில தொல் பொருள் ஆய்வுத்துறை பண்டைய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் காட்சியகங்கள் அமைத்தல்; தமிழகத்தின் பண்டைய வரலாற்றை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்தல்; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாய்வு செய்தல்; பண்டைய தமிழ் ஓலைச்சுவடிகளை சேகரித்து பாதுகாத்து வெளியிடுதல் ஆகிய தனது பணிகளை முனைப்புடன் செய்து வருகிறது.



அண்மையில் கோவாவிலுள்ள "தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு" இணைந்து இத்துறை காவிரிப்பூம்பட்டினத்திற்கு அப்பாலிலுள்ள கல்லுக்கடியில் நடத்திய தொல் பொருள் ஆய்வு பயனுள்ள முடிவுகளைத் தந்துள்ளது. தரங்கம்பாடி வரை நடந்த இந்த ஆய்விலிருந்து பூம்புகார் வானகிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும் மூழ்கிப்போன கப்பல்களும் புதைந்து கிடக்கின்றன என்பதாகத் தெரியவருகிறது. இந்த ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பண்டைய வரலாற்றுச் சின்னங்களைப் பழுதுபார்த்து பேணிவரும் பணி தொடர்ந்து விரிவாக மேற்கொள்ளப்படும். கங்கை கொண்ட சோழபுரம், கோவலன்பொட்டல் ஆகிய இடங்களில் இத்துறை மேற்கொண்டுள்ள அகழ்வாய்வுகள் தீவிரமாக்கப்படும். வரும் 1982-83ம் ஆண்டில் பின்வரும் புதிய பணிகளை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டியுள்ளது. அதாவது ஆசிரியப் பெருமக்கள் 200 பேர்களுக்குக் கல்வெட்டு, பண்டைய வரலாறு ஆகியவை குறித்து பயிற்சி அளித்தல் அண்மையில் அகழ்வாய்வு மற்றும் கல்வெட்டுகள் மூலம் வெளியாகியுள்ள வரலாற்றுச் செய்திகளை அறிஞர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் மாவட்டக் கருத்தரங்குகள் நடந்ததுதல்; சுற்றுலாத் துறையுடன் இணைந்து செஞ்சிக் கோட்டை போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைச் சுற்றுலா மையங்களாக மாற்றுதல்: தமிழக வரலாறு பற்றிய புதிய கண்டுபிடிப்புகளை அறிஞர்கள் ஆராய்ந்து கல்வித் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்தல்; கல்வெட்டு ஆராய்ச்சியைத் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேலும் விரிவாக மேற்கொள்ளுதல்; தமிழகக் கோயில்களிலுள்ள பண்டைய ஓவியங்களை வேதியியல் முறையில் தூய்மைப் படுத்தி பாதுகாக்கும் முயற்சிகளை விரிவாக்குதல்—ஆகிய இந்தப் புதிய பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் இத்துறையிடம் இருந்து வரப்பெற்று ஆய்வில் உள்ளன.

## தமிழ் வளர்ச்சி

**தமிழ் வளர்ச்சி இயக்ககம்:**

அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணிகள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித்துறை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தைச் செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981-82ல் 17 துறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் அது மேலும் பல துறைகளுக்கு விரிவாக்கப்படும்.

1867-1935 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 19 தொகுதிகளாக இதுவரை வெளியிடப்பட்டுள்ளது. 1935க்குப் பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. 1981-82ல் இத்திட்டத்தின் கீழ் 7 புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு நிதியுதவி தரப்பட்டது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின் கீழ் 1975-80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றுக்கு 1982ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று (சனவரி 15) விருதுகள் அளிக்கப்பட்டன.

**தமிழ்நாட்டு வரலாறு:**

தமிழ்நாட்டு வரலாற்றில் தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரைவில் வெளியிடப்படும்.

**மொழி பெயர்ப்புப் பணி:**

பிறமொழி நூல்களில் சிறந்தவற்றைத் தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டத்தின் கீழ் இதுவரை மொழி பெயர்ப்பு நூல்கள் ஆறு வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு நூல்கள் விரைவில் வெளியாகும். மேலும் நூல்கள் மொழிபெயர்ப்புக்கு எடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்க் கவிஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் பாராட்டு:**

இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று, சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழ் கிறித்துவ இலக்கிய வளர்ச்சிக்கு அறக்கட்டளை ஒன்று, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக ஒன்றும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக ஒன்றுமாக இரண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் "விருது" ரூ. 10,000. இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன், எஸ்.டி சுந்தரம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், முத்துலிங்கம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டது தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு வி.க.விருது ரூ. 10,000 இதுவரை திருவாளர்கள் நாரண துரைக்கண்ணனுக்கும், அ.கி. பரந்தாமனாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம்:**

மாத வருமானம் ரூ. 400க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 120 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

**பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்:**

பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24க்குத் தமிழில் பகுதிநேர பட்டய வகுப்புகள் தொடங்குவதற்காக இதுவரை நிறுவனத்துக்கு ரூ. 15,000 வீதம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திலுள்ள "திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி"யின் ஆராய்ச்சிப்பணிகளுக்காகவும் மானியம் தரப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் கற்றுக் கொள்ளப் பயன்படுத்தக்கூடிய பாடங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வெளியிடும் பணியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

**செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி:**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல் மடலத்தின் முதல் பகுதி— மொழியியலறிஞர் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்தது—விரைவில் வெளியிடப்படும். அவ்வகர முதலியின் மற்ற பகுதிகளைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்:**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 19 ஆராய்ச்சி அலுவலர்கள், 12 முழு நேர ஆராய்ச்சி மாணவர்கள், டாக்டர் பட்டம்பெற ஆய்வு நிகழ்த்தும் 38 பகுதிநேர மாணவர்கள் ஆகியோர் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. வெளி நாட்டு மற்றும் பிற மாநில மாணவர்கள் 28 பேருக்கு இந்நிறுவனம் இவ்வாண்டு தமிழ் கற்றுத் தந்தது. தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதா மாதாந்திர கருத்தரங்குகளுடன் இந்நிறுவனம் இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. 1981-82ல் வரலாற்று மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களும், இதுகாறும் வெளியிடப்படாத சில



ஓலைச் சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 44 தரமான நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் "சுவடி"யியல் "மொழிபெயர்ப்பியல்" எனும் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்:**

இவ்வாண்டு 15-9-1981ல் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு புலங்களுடனும் துறைகளுடனும் செவ்வனே செயல்படுகிறது. அண்மையில் வெளியீட்டுப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் இப்பல்கலைக் கழகத்துக்காகக் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்திற்கான கட்டிட வேலை இன்னும் சில மாதங்களில் தொடங்க இருக்கிறது.

**உலகத் தமிழ்ச் சங்கம்:**

மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவப்படும். இச்சங்கம் நிறுவுவதற்காக நிலம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும். இச்சங்கம் நிறுவ 1982-83ல் ரூ. 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அரசு அருங்காட்சியகம்,
சென்னை-600 008.

# கலைப்பொருட்கள் கொள்முதல்

அரசு அருங்காட்சியகம், மற்றும் தேசியக் கலைக் கூடத்திற்குக் கலைப் பொருட்களை வாங்கும் குழு கீழ்க் கண்ட வகை கலைப் பொருட்களைக் கொள்முதல்செய்யும் பொருட்டு ஆலோசனை நடத்த அருங்காட்சியக நூற்றாண்டு பொருட்காட்சி மண்டபத்தில் 1982 ஜூலைத் திங்கள் 9-ம் நாள் காலை 11 மணி அளவில் கூட இருக்கிறது.

**வகை : 1**

*கீழ்க்கண்ட பண்டைய கலைப்பொருட்கள்*

இந்திய கற்சிற்பங்கள; துணி மணிகள்; மரம்; கண்ணாடி; தந்தம்; அப்பிரகம்; காகிதம் முதலியவற்றின்மேல் தீட்டப்பட்ட தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள் பொம்மைகள் போன்ற கோவிலில் பயன்படுத்தப்படும் கலைப் பொருட்கள். கிராமிய மற்றும் பழங்குடி மக்கள் கலைப் பொருட்கள்; இந்திய நாணயங்கள் மற்றும் செப்பேடுச் சாசனங்கள்.

**வகை : 2**

*சம காலத்திய கலைப் பொருட்கள்*

சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவை.

மேற்படி இருவகை கலைப் பொருட்களை அளிக்க விரும்பும் நபர்கள் பொருட்களின் விரிவான பட்டியல் ஒன்று தயாரித்து குறைந்தபட்ச விலைகளையும் குறித்து 1—7—1982க்குள் " செயலாளர், கலைப்பொருட்கள் வாங்கும் குழு,
அரசு அருங்காட்சியகம், சென்னை—600 008 "
என்ற முகவரிக்கு எழுதவும்.

மேலும் 9—7—1982 அன்று கலைப்பொருட்கள் குழுவினிடம் நேரில் சமர்ப்பிக்க வேண்டும் தேர்ந்தெடுக்கப்படாத பொருட்களை உரிமையாளர்கள் குழுவின் கூட்டம் முடிந்தவுடன் அன்றைய தினமே எடுத்துச் செல்ல வேண்டும். வகை இரண்டில் ஒரு நபர் ஒரே கலைஞரின் கலைப் பொருட்களில் இரண்டிற்கு மேல் சமர்ப்பிக்கக் கூடாது.

குறிப்பு : சம காலத்திய கலைப்பொருட்களில் நன்கு சட்டம் போடப்பட்ட பொருட்கள் மட்டுமே ஒப்புக் கொள்ளப்படும்.

அருங்காட்சியகங்களின் இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை.





# மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா !

## நாகர்கோயில் 6.6.1982







# சிலைத் திருட்டும் மீட்பும்

*[குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறைத் துணைத் தலைவர் அவர்களின் அறிக்கையின் சுருக்கம். தஞ்சை திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கோயில்களில் நிகழ்ந்த சிலை திருட்டுக்களும், அவற்றை அமெரிக்கா மற்றும் இலண்டனிலிருந்து மீட்பது பற்றிய நடவடிக்கைகளும்.]*

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவிலாக்குடி என்ற கிராமத்தில் 20.2.78ந் தேதி இரவில் கள்வர்கள் ஈசுவரர் கோவிலை உடைத்து அதனுள் இருந்த விலை மதிக்க முடியாத சுமார் 100 கிலோ எடையுள்ளதும் 105 சென்டி மீட்டர் அளவுள்ளதுமான நடராஜர் சிலையை பீடத்துடன் (பீடம் 76 சென்டிமீட்டர் அளவுள்ளது) பெயர்த்து எடுத்துக்கொண்டு சென்று விட்டனர்.



21.2.1978 அன்று மேற்படி கோயில் நிர்வாக அதிகாரி (அருள்மிகு மணவாளேஸ்வர சுவாமி கோயில்) குத்தாலம் காவல்நிலையத்தில் மேற்படி சிலை களவு போனது குறித்து விசாரிக்கும்படி முறையீடு அளித்தார்.

இவ்வழக்கு சம்பந்தமாக மேற்கொண்டு துப்பு எதுவும் கிடைக்காததால், 9.8.79ந் தேதி தமிழகக் குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை இவ்வழக்கு விசாரணையை மேற்கொண்டது. புலனாய்வில் கிடைத்த தகவல்படி பழைய குற்றவாளியும், மாயூரம் மாப்படுகையைச் சேர்ந்த தங்கப்பாவின் குமாரர் சுப்பிரமணியன் என்பவர் 17.11.1979ந்தேதி கைது செய்யப்பட்டு கவனமாக விசாரிக்கப்பட்டதில், சென்னையில் சிதம்மாள் தாலனியில் முதல் குறுக்குத் தெருவில் 13-ஆம் எண் வீட்டில் வசிக்கும் விஜயராகவன் என்பவரின் குமாரர் சி.வி.ராமன் என்ற நபர் தன் கூட்டாளிகள் பத்துபேர்களுடன் 1974ஆம் ஆண்டிலிருந்து 1979-ம் ஆண்டு வரை 15 கோயில்களில் கும்பலின் துணையுடன் தொன்மை வாய்ந்த சிலைகளை, தஞ்சை மாவட்டம், பாபநாசம், திருநீலக்குடி, குத்தாலம், பேரளம், பெரம்பூர், குடவாசல், பொறையார், நடுகாவேரி, பாலையூர், தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்திலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மீன்சுருட்டி, தி. பழூர், விக்கிரமங்கலம் ஆகிய ஊர்களிலும் களவாடியுள்ளனர். சட்ட விதிகளின்படி சி.வி. ராமனும் அவர் கூட்டாளிகளான பத்து நபர்களும் கைது செய்யப்பட்டனர். குற்றவாளிகளான டி. சுப்பிரமணியம், எஸ். ராஜாராம், ஏ. கிருஷ்ணமூர்த்தி, டி. கணேசன், அருணாசலத்தின் குமாரர் ராஜேந்திரன், சி.வி.ராமன் ஆகியோர் சீர்காழி கும்பகோணம் இரண்டாம்வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் தங்கள் குற்றங்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர்.

மேற்கண்ட களவாடப்பட்ட சிலைகள் சி.வி. ராமனிடம் தரப்பட்டது. அச்சிலைகளை சி.வி. ராமன், சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் வசிக்கும் பால்ராஜ் நாடார் என்பவரிடம் கொடுத்து அவைகளைப் பம்பாயில் உள்ள வல்லப பிரகாஷ் பிரேம்தார் ஷரிசா மூலமாகவும், கல்கத்தாவைச் சேர்ந்த ஜேதா அகுஜா மூலமும் வெளிநாட்டிற்கு விற்று விட்டனர். அரிய நடராஜர் சிலை உட்பட மேற்கண்ட அனேக சிலைகள் இலண்டன் நகரைச் சேர்ந்த பெரியதொரு நிலையத்தின் பின்ஸ்பர்க் சர்ச்சில் கலைப் பொருள் விற்பனை அகம் நடத்தும் பினாகுல்கி என்பவருக்கும் ஆல்பர்ட் அம்ரான் என்பவருக்கும் விற்கப்பட்டது. களவாடப்பட்ட இச்சிலைகள் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு மரபுமீறிய சட்டத்திற்குப் புறம்பான வகையில் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டுள்ளன. எவரெஸ்ட் காலரி என்ற கலைப்பொருள் விற்பனை அகம் கையாண்ட நடைமுறை தந்திரம் என்னவெனில் கடத்தப்பட்ட சில சிலைகளை வைத்துக்கொண்டு, ஒரு சிலையை விற்பனை செய்யப் போவதாக 'அபாலோ' என்ற லண்டன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி, விளம்பரத்தைக் கண்டு வாங்க வந்த வாடிக்கையாளர்களிடம் களவாடப்பட்ட எல்லாச் சிலைகளையும் விற்பனைக்கு காட்டுவது என்பதே அவர்கள் செயல்.

மேற்கண்ட சிலை திருட்டு வழக்கில் புலனாய்வு செய்ய காவல்துறை துணைத்தலைவர் (குற்றப்புலனாய்வுத்துறை) குற்றப்பிரிவு திரு. கே. கே. ராஜசேகர நாயர் அவர்களும், குற்றப்புலனாய்வுத்துறை துணைக் கண்காணிப்பாளர் திரு ஜே. இராமகிருஷ்ணனும் வெளிநாடுகள் சென்றனர். அமெரிக்காவில் அமெரிக்க சுங்க இலாகா அதிகாரியுடன் தொடர்பு கொண்டு டெக்சாசு மற்றும் போர்ட் ஓர்த்தில் உள்ள கிம்பல் கலைப் பொருள் விற்பனையிடத்திற்குச் சென்று நடராஜர் சிலையைப் பார்வையிட்டனர். டெக்சாசில் நடத்திய விசாரணையில் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட நடராஜர் சிலை 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வினாகுலால், எல்.டி.சோராரியாவும் இலண்டனில் 15, பெர்க்லி தெருவில் உள்ள எவரெஸ்ட் கலைப் பொருள் விற்பனையகத்தினைச் சேர்ந்த ஆல்பர்ட் அம்ரான் அறுநூறு ஆயிரம் அமெரிக்க டாலருக்கு டெக்னாசில் போர்ட் ஓர்த்தைச் சேர்ந்த கிம்பெல் கலைப் பொருள் அருங்காட்சியகத்திற்கு விற்கப்பட்டுள்ளது. ஆல்பர்ட் அம்ரான் என்பவர் இலண்டனில் 111-ஆம் எண்ணில் போர்டசா ஆவில், போட்சா என்ற இடத்தில் வசிக்கிறார். பினாகுலால் என்பவர் ஏமாற்றும் உள்நோக்கத்தோடு முறைகேடாகத் தவறான உறுதி மொழிகளைத் தந்து மேற்கண்ட சிலையை விற்றுள்ளார். வாஷிங்டனில் உள்ள உலகப் போலீஸ் (இண்டர்போல்) நிறுவனத்தைச் சேர்ந்த திரு ஹோலின்ட்ராப்பைச் சந்தித்து அவரிடம் இந்தியாவிலிருந்து களவாடப்பட்ட நடராஜர் சிலை திரும்ப தாயகம் கொண்டுவரும் முயற்சிக்கு உதவி அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



**தஞ்சை மாவட்டம் புன்செய் கிராமத்திலுள்ள அருள்மிகு நல்துணை ஈஸ்வரர் ஆலயத்திலிருந்து திருடப்பட்ட சிலைகள் மீட்பது குறித்து.**

10.5.79-ந்தேதி இரவு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வரசநாடு அஞ்சல் மகாராஜபுரம் பெருமாள் குமாரன் கணேசன் என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் தஞ்சை மாவட்டம் புஞ்சை கிராமத்தின் கண் உள்ள அருள்மிகு நல்துணை ஈஸ்வரர் கோயில் சுவர் ஏறிக் குதித்து கோயில் பூட்டை உடைத்து, தனி அம்மன், ஸ்ரீவள்ளி, ஸ்ரீதெய்வானை, ஸ்ரீ பிரதோஷநாயகரும் அம்மனும், ஸ்ரீ மாணிக்க வாசகர் ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீவள்ளி, மற்றும் ஸ்ரீ தேவசேனை முதலிய எட்டு பஞ்சலோகத்தாலான சிலைகளைக் களவாடினர்.

மேற்கண்ட எட்டு சிலைகளையும் கணேசன் என்பவர் பம்பாயில் மாடர்ன் ஆண்டிகிராப்ட் உரிமையாளர் டி. ரமணிக்லால் பட்டுக்கு விற்றுவிட்டார். இதனை விலைக்கு வாங்கிய ரமணிக்லால் லண்டனில் உள்ள தன் குமாரரும் இங்கிலாந்தில் வாம்பனை மிடில் செக்ஸ் எண். 31-ல் கிங்ஸ்மோர் சாலையில் புராகிரசில் கலைப் பொருள் விற்பனையக உரிமையாளருமான கிஷோருக்கு அனுப்பி விட்டார். இந்தத் தகவலின்பேரில் உலகப் போலீஸ் (இன்டர்போல்) டெல்லி கிளையினரை இது சம்பந்தமாக இலண்டன் இன்டர் போலை அணுகி, கடத்தப்பட்ட சிலைகளைப்பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. சிலைகளின் போட்டோ பிரதிகளும் இலண்டன் இன்டர்போலுக்கு அனுப்பப்பட்டது. இலண்டன் ஸ்காட்லாந்து யார்டு போலீஸ் ஹிதேந்திர ராவலை (ரமணிக்லால் குமாரர்) இது சம்பந்தமாகக் கைது செய்தது. இவர்களைக் கைது செய்து 240 சிலைகளையும், பஞ்சலோகத்திலான ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை, தஞ்சை மாவட்ட புஞ்சைக் கிராம அருள்மிகு நல் துணை ஈசுவரர் கோயில், மற்றொரு ஸ்ரீ வள்ளியைக் கைப்பற்றினர்.

செம்பனார் கோயில் காவல் நிலைய வழக்கு சம்பந்தப்பட்ட கடத்தப்பட்ட மூன்று சிலைகள் தானா என்பதை நேரில் கண்டு அடையாளப் படுத்த உரிய கோவில் அர்ச்சகரை 5.1.1982ந் தேதிக்குள் லண்டன் நகருக்கு அனுப்பும்படி ஸ்காட்லாந்து யார்டு போலீசார், டெல்லி இன்டர் போல் நிறுவனத்திற்குச் செய்தி அனுப்பினார்கள். அவ்வாறே தமிழக அரசு ஒப்புதலுடன், தஞ்சை மாவட்டம் புஞ்சைக் கிராம கோயில் குருக்கள் திரு எஸ். முத்தையா குருக்கள் (சுந்தரம் குருக்கள் குமாரர்) 2.1.82ல் அழைத்துக் கொண்டு போகப்பட்டது. 4.1.1982ல் திரு முத்தையா குருக்களை, காவல்துறை பண்டகசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மூன்று சிலைகளை—ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை மற்றுமொரு ஸ்ரீ வள்ளி முதலிய மூன்று சிலைகளை உரிய முறையில் கண்டுபிடித்து அடையாளங்காட்டி ஊர்ஜிதப்படுத்தினார். அவருடைய தமிழ் வாக்கு மூலம் உரிய மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் ஆங்கிலத்தில் லண்டன் 4-ஆம் நெம்பர் குற்ற ஆய்வு மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. அச்சமயம் குற்றவாளி ஹிதேந்திர ராவல் வழக்கு மன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

மேலும், ஸ்காட்லாந்து காவல் துறையினர், பிரதோஷ நாயகரும், அம்மனும் உள்ள நல்துணை ஈசுவரர் கோயில் சிலைகளின் கலர் போட்டோ ஒன்றைக் குற்றவாளி ஹிதேந்திரா ராவலிடமிருந்து கைப்பற்றினர். இலண்டனில் உள்ள இந்தியத் தூதுவராக வர்த்தகப் பிரிவு ''முதற் செயலாளர்'' திரு. ஏ.பார்டியா அவர்கள், ஸ்காட்லாந்து போலீசார் கைப்பற்றி வைத்துள்ள 240 சிலைகளையும் சம்பந்தப்பட்ட ஹிதேந்திர ராவல் பற்றிய வழக்குகள் முடிந்ததும், இந்தியாவுக்குத் திரும்ப அனுப்ப ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்துள்ளார். இதுகுறித்து இந்திய அரசாங்கத்திற்கு அமெரிக்காவில் உள்ள நம் இந்தியத் தூதுவரை அணுகி தற்போது போர்ட் ஓர்த் கிம்பெல் கலைப்பொருள் விற்பனையகத்தில் வைக்கப்பட்டுள்ள திருவிலாக்குடி கோயிலில் களவுபோன நடராஜர் சிலையை மீட்டு விரைவில் தாயகம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும், அங்ஙனமே இங்கிலாந்து நாட்டு இந்தியத் தூதுவரை அணுகி தமிழகத்தினைச் சேர்ந்த நல்துணை ஈஸ்வரர் கோயிலில் இருந்து களவுபோன மூன்று சிலைகளையும் மீட்டுக்கொண்டு வர, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.




# வெற்றி பெற்ற மாணவ மணிகள்!

இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களில் 61.9 சதவிகித மாணவர்கள் தேறிவிட்டனர். இவர்கள் பள்ளிகள் மூலம் இறுதித் தேர்வு எழுதியவர்கள். இந்த ஆண்டு இத்தேர்வுகளை எழுத பள்ளிகள் மூலமாகப் பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 309 மாணவர்கள் ஆவார்கள். இவர்களைத் தவிர தனிப்பட்ட முறையில் இத்தேர்வு எழுதியவர்கள் 27 ஆயிரத்து 210 பேர் ஆவர்.

இவர்களில் மொத்த மதிப்பெண்களில் 60 சதவிகிதமோ, அதற்கு மேலோ பெற்று சிறப்பாகத் தேறியவர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 484 ஆகும்.

வெற்றி பெற்ற மாணவர்களில் 226 பேர் கணிதத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களும் 128 பேர் "அக்கவுண்டென்சி" தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

சென்னையில் மேல் நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (பிளஸ் 2 தேர்வு) முடிவுகள் வெளியிடப்பட்டன. இதில் சென்னை எழும்பூர் டான்பாஸ்கோ மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர் எம். டி. கிரிதர் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் 1138 மதிப்பெண்கள் (94.8 சதவிகிதம்) பெற்று தேறியுள்ளார். டான்பாஸ்கோ பள்ளி மாணவர்கள் இத்தேர்வில் மிகப் பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இத்தேர்வில் முதல் பத்து இடங்களைப் பெற்றுள்ள 13 மாணவர்களில் 7 பேர் டான்பாஸ்கோ பள்ளியைச் சேர்ந்தவர்கள். அத்துடன்முதல்5 இடங்களையும் இப்பள்ளி மாணவர்களே பெற்றுள்ளனர்.



எம். டி. கிரிதர்

மேல்நிலை இறுதித் தேர்வில் முதல் 10 இடங்களைப் பெற்று இருக்கும் 13 மாணவர்கள் விவரமும், அவர்கள் பெற்றுள்ள மொத்த மதிப்பெண்களும் வருமாறு:

(1) எம். டி. கிரிதர் (டான் பாஸ்கோ) 1138 மதிப்பெண்கள் (94.8 சதவிகிதம்).

(2) வி. எஸ். ஸ்ரீகாந்த் (டான் பாஸ்கோ) 1126 மதிப்பெண்கள் (93.8 சதவிகிதம்).

(3) எம். ஜெயந்த் (டான் பாஸ்கோ) 1118 மதிப்பெண்கள் (93.2 சதவிகிதம்).



வி. எஸ். ஸ்ரீகாந்த்

(4) கே. ஹரீஷ் நாயுடு (டான் பாஸ்கோ) 1116 மதிப்பெண்கள் (93.0 சதவிகிதம்).

(5) (1) எஸ். நந்தகுமார் (டான்பாஸ்கோ) (2) எஸ். வெங்கடேஷ்குமார் (சென்னை எம்.சி.சி. மேல் நிலைப் பள்ளி). இருவரும் 1114 மதிப்பெண்கள் (92.8 சதவிகிதம்).



எம். ஜெயந்த்

(6) சி. இராமச்சந்திரபட் (திருச்சி ஈ. ஆர். மேல் நிலைப் பள்ளி) 1110 மதிப்பெண்கள் (92.5 சதவிகிதம்).

(7) எஸ். சென்னியப்பன் (கடலூர் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி) 1106 மதிப்பெண்கள் (92.2 சதவிகிதம்).

(8) (1) எம்.ராதாகிருஷ்ணன் (தூத்துக்குடி காரப்பேட்டை நாடார் மேல் நிலைப் பள்ளி)[2] வி. சீனிவாசன் (சென்னை டான் பாஸ்கோ) இருவரும் 1105 மதிப்பெண்கள் (92.1 சதவிகிதம்).

(9) (1) வி. ஷோபனா(திருச்சி எஸ். வி. இந்து பெண்கள் மேல் நிலைப் பள்ளி) ; [2] பி அருணா (சென்னை ஆர். கே. எம்.சாரதா வித்யாலயா) இருவரும் 1103 மதிப்பெண்கள் (91.9சதவிகிதம்.)



பி. அருணா

(10) டி. செசில் மனோகர் (சென்னை டான்பாஸ்கோ)1101 மதிப்பெண்கள் (91.8 சதவிகிதம்).

பிளஸ் - டு தேர்வில் மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் வாங்கி முதலாவதாக வந்துள்ள எம்.டி. கிரிதரன் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு 1138 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.




# மூங்கில் துறைப்பட்டு -ஒரு முன் மாதிரி!

**மு. முத்துக்காளத்தி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.**

மூங்கில் துறைப்பட்டு என்ற பெயரில் ஒரு மோகனம் இருப்பதாகத் தோன்றிற்று எனக்கு.

''என்ன அங்கே?'' என்று கேட்டேன், என் நண்பர் தென்னார்க்காடு மாவட்ட நேரு இளைஞர் மன்றங்களின் இணைப்பாளர் திரு எம். பாலசுப்பிரமணியம் அவர்களை.

'கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அங்கே இருக்கிறது. திரு க. இளங்கோவன் தனி அலுவலர். நிர்வாகத்தினர் -தொழிலாளர்-விவசாயிகள் முத்தரப்பு ஒத்துழைப்புக்கு உன்னதமானதோர் எடுத்துக்காட்டு. அவர்களிடையே நிலவும் நல்லுறவு நம்மைப் புல்லரிக்கச் செய்யும். நாட்டுக்கு இப்படிப்ப ட்ட அமைப்புகள் தான் அடித்தளமாக அமைய வேண்டும். ஒரு துறையினர் தங்கள் நலனை மட்டும் வற்புறுத்தி, பிற துறையினர் நலனைப் புறக்கணிக்கும் தன்மையை இங்கே கடுகளவும் காண முடியாது. ஒருவர் மற்றவர் நலனைப் பேணுகிறார்கள். கடமையைச் செய்து விட்டுத் தான் உரிமையைக் கேட்கிறார்கள். போராடுவதில்லை. வாதாடுகிறார்கள். இதமாக எடுத்துரைக்கிறார்கள். நாட்டின் ஒட்டு மொத்தமான நலனில் அக்கறை காட்டுகிறார்கள். நீங்கள் ஒரு தடவை வந்து நேரில் பாருங்கள்'' என்றார் பாலசுப்பிரமணியம்.

அந்த வாய்ப்பு 4.4.'82-ந்தேதி கிட்டியது. நானும் நண்பரும் சென்றிருந்த சமயம் சென்னையிலிருந்து திரு எஸ்.வி. கனகராசன் தொழிலாளர் நல துணை ஆணையர் (சர்க்கரைத் துறை) திரு எஸ் செயராமன், முதுநிலை தொழிலாளர் கல்வி அலுவலர், இந்திய அரசு, புதுவையிலிருந்து அனைத்திந்திய வானொலி நிலையத்தைச் சேர்ந்த திரு முல்லைவளவன் ஆகியோரும்தொழிலாளர் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்திருந்தனர். அனைவரையும் ஆலையின் சார்பில் தனி அலுவலர் திரு. க. இளங்கோவன், தொழிலாளர் நல அலுவலர் திரு பி. முத்துவேலப்பன், அலுவலக மேலாளர் பக்தவத்சலம் ஆகியோர் வரவேற்று, ஆலையின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிக் காண்பித்து விளக்கமளித்தனர்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1961-ல் பதிவு செய்யப்பட்டு, 1967ல் உற்பத்தி தொடங்கியது. கரும்பு உற்பத்தியாளர் 13,006 பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்கள் தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் வட்டங்களையும், வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களையும் சேர்ந்தவர்கள். இவர்களில் 5-10 ஏக்கர் வைத்திருப்பவர்கள் 500-க்கும் குறைவானவர்களே. மற்றவர்களெல்லாம் சிறு விவசாயிகள்தான். இந்த விவசாயிகள் நாட்டு நலனிலும், சமூகப் பொறுப்பிலும் காட்டும் அக்கறை மிகச் சிறப்பானது. நிர்வாகத்துடன் ஒத்துழைத்து, தொழிலாளர்களுடனும் சமூக உறவை வளர்த்துக் கொண்டுள்ளனர். விவசாயிகள் அனைவரும் சேர்ந்து சமூகக்கூடம் ஒன்று கட்ட ரூ.2.5 இலட்சம் அளவிற்கு உதவ முன் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார், கூட்டுறவு ஆலையின் நிறுவனத் தலைவர் திரு நாராயணசாமி நாயுடு. இது போலவே, தொழிலாளர்களும் ஆண்டுக்கு 4, 5 நாட்கள் தங்கள் ஊதியத்தை நல்ல காரியங்களுக்குக் கொடுக்கின்றனர் என்றார் தனி அலுவலர் நண்பர் இளங்கோவன்.

பெண்ணாற்றின் தென்கரையில் 142 ஏக்கரா பரப்பில் ஆலை அமைந்துள்ளது. ஆயிரம் மெட்ரிக் டன் சாறு பிழியும் திறனுடன் ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது 2,000 மெட்ரிக் டன் திறன் பெற்றுத் திகழ்கிறது. ஆலை விஸ்தரிப்பு வேலைகள் 1977 நவம்பரில் முடிக்கப்பட்டன. இவைகளுக்கு மொத்தச் செலவு ரூ. 295 இலட்சம். ஒட்டச் சாறு பிழியும் டிஃப்யூஷன் பிளாண்ட் Diffusion Plant அமைக்கப் பெற்ற முதல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தமிழ்நாட்டிலேயே இதுதான். இந்த இயந்திரத்திற்கு மட்டும் ரூ.59 இலட்சம் செலவாயிற்று. ஒரு டன் கரும்பு அரைத்தால் அதிலிருந்து கிடைக்கும் சாறு உலக நாடுகளில் 12 சதவிகிதமாகவும், இந்தியாவில் 11 சதவிகிதமாகவும் இருக்கிறது. இந்த ஆலையில் 10.4 சதவிகிதம்.

ஆயிரம் பேர் வேலை செய்யும் ஆலை. 5லிருந்து 6 மாதக்காலம் அரைவைப் பருவம். இந்தக் காலத்தில் வழக்கமான தொழிலாளர்களைத் தவிர, 150 முதல் 200 வரை அன்றாடத் தொழிலாளர்களும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, கேன்டீன், ஓய்வு அறை, கல்விக்கூடம், கூட்டுறவுச் சங்கம், மனமகிழ் மன்றம் எல்லாம் இருக்கின்றன. இனிக்கின்றன!

அத்தியாவசிய தொழிலாளர்களுக்குசுமார் 200 இல்லங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. வேலை செய்பவர்களில் சுமார் 25 சதவிகிதம் பேர் இவ்வாறு வீட்டு வசதி பெற்றுள்ளனர்.

இங்கிலீஷ் மீடியம் பள்ளியொன்று எல்.கே.ஜி, யு.கே.ஜி-யுடன் இயங்கி வருகிறது. குழந்தைகள் நர்சரியுடன் நாற்றங்கால் நர்சரியும் இருக்கிறது. இங்கே உற்பத்தியாகும் காய்கறிகள் ''கேஜி''யில் விற்கப்படுகின்றன.



தொழிலாளர்கள், அலுவலர்கள், அதிகாரிகள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் தனித்தனியே மனமகிழ் மன்றங்கள் எல்லா வசதிகளுடனும் இருக்கின்றன. மூன்றிலும் டி.வி. உண்டு. டேபிள் டென்னிஸ், பத்திரிகைகள் இருக்கின்றன.

மகளிர் சங்கம் ஒன்றும் சிறந்த பணியாற்றி வருகிறது. குடும்பநலத் திட்டம், சத்துணவு, வீட்டு நிர்வாகம், நுண்கலை ஆகியவற்றில் பெண்களை ஈடுபாடு கொள்ளச் செய்கிறது. இதன் வெற்றியின் பெரும்பங்கு பம்பரமாகச் சுழலும் திருமதி சிநேகலதா இளங்கோவனைச் சாரும்.

தொழிலாளர்களின் முத்தமிழ்க் கலை மன்றம் நாடகம், இசை நிகழ்ச்சிகளை வளர்த்து வருகிறது.

தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு செட் சீருடையும், காலணிகளும் வழங்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கத்தில் மாவரைக்கும் இயந்திரம், எண்ணெய் ஆட்டும் செக்கு எல்லாம் இருக்கின்றன. உணவுப் பண்டங்கள் சத்துடனும் சுத்தமுடனும் கிடைக்க இவை உதவுகின்றன. ''இங்கே ஒரு பேக்கரி நடத்துகிறோம். கேக் 25 காசு தான். சாஃப்ட்டாக இருக்கும்''. என்றார் நண்பர் இளங்கோவன்.

''சாப்பிட்டால்தானே தெரியும்!'' என்றேன் நான்.

அனைவருக்கும் 'கேக்' வரவழைத்துக் கொடுத்தார்கள். மிகவும் சுவையாகத்தான் இருந்தது!

மட்டன் கிலோ 14 ரூபாய் தான். இலாப நோக்கின்றிச் செயல்படுவதால் இந்த விலைக்கு விற்கப்படுகிறது.

கேன்டீனில் தரமான உணவுப் பண்டங்கள் குறைவான விலைகளில் வழங்கப்படுகின்றன. தேநீர் 10 காசு, காபி 20 காசு; இட்லி 10 காசு, வடை 10 காசு, பூரி 30 காசு, சாப்பாடு ஒரு ரூபாய். சாப்பாட்டுக்கு அங்கே போய்விடலாம் போல தோன்றுகின்றது அல்லவா? விழாக் காலங்களில் சிறப்புணவு இனிப்புப் பொட்டலங்கள் இந்த மாதிரியே குறைந்த விலையில் கிடைக்கின்றன.

தொழிலாளர் உடல் நலனை உறுதி செய்ய மருந்தகம் ஒன்று உள்ளது. மருத்துவ அலுவலர் மருந்து கலக்குவோர், நர்சுகள், ஏனைய பணியாளர்களுடன் நவீன வசதிகள் பொருந்தியது இந்த மருந்தகம். இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவசர கேசுகளைக் கவனிக்க ஆம்புலன்ஸ் வசதி உண்டு.

அன்று இந்த மருத்துவமனையில் இரண்டு பிரசவங்கள் நடந்தன. இரண்டும் ஆண் குழந்தைகள். கடந்த ஆறாண்டில் 580 பிரசவங்கள் நல்லமுறையில் நடைபெற்றுள்ளன. தினசரி 160 -180 பேர் சிகிச்சைக்காக வருகின்றனர். குடும்ப நல அறுவைச் சிகிச்சையிலும் சிறந்த அக்கறை காட்டப்படுகிறது.

''தொழில் தொடர்பான நோய் என்ன ஏற்படுகிறது?'' என்று டாக்டரைக் கேட்டேன்.

''இருதய நோய், ஆஸ்துமா, காசம்'' என்றார் டாக்டர் பி.ஜி. மோகன கிருஷ்ணன்.

''குழந்தைகளிடம்?''

''மாலைக்கண் வியாதி அதிகமாக இருக்கிறது. வைட்டமின் 'ஏ' குறைவால் இது ஏற்படுகிறது'

''வீட்டுக்கொரு முருங்கை வளர்த்தால் இந்த நோயை முறியடித்து விடலாமே'' என்று பட்டது எனக்கு!

நாட்டில் எத்தனையோ இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களைவிட, நல்ல நிலையில் உள்ள இத் தொழிலாளர்கள் சத்துணவில் சிறந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அவர்களது வருமானத்துக்குள் இதைச் செய்துகொள்ள முடியும். முயற்சி மட்டுமே தேவை!

''செய்யும் தொழிலே தெய்வம்'', ''நீ வாழ பிறரைக் கெடுக்காதே'' ''இந்த ஆலை உனக்கு என்ன செய்தது என்று பார்க்காதே, நீ இந்த ஆலைக்கு என்ன செய்தாய் என்று பார்'' இப்படி வாசகங்களை எழுதி வைத்து வழிகாட்டும் தொழிலாளர்கள், இந்த வகையிலும் மற்றவர்களுக்கு வழிகாட்ட முன் வருவார்களாக!



# முகப்பரு நீக்க எளிய வழி



**டாக்டர்கே.வி.திருவேங்கடம்**
அமைப்பாளர்
மருந்து வேதியல் ஆராய்ச்சி நிலையம்,
சென்னை மருத்துவக் கல்லூரி.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது அண்ணாரின் ஊக்கத்தினால் 1969ல் உருவாகிய மருந்து வேதியல் ஆராய்ச்சி நிலையத்தின் அரும்பணியை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

முகப்பருவிற்குச் சிறந்த ஒரு நிவாரணியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் திருநீற்றுபச்சையெனப் படும் மூலிகையையும், சரும நோய்ப் பகுதியில் கையாளப் படும் மருந்துகளையும் ஒப்பிட்டுப் பார்த்து மருந்து வேதியல் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி நடத்தி சிறந்த முடிவுகளை அறிவித்துள்ளது. திருநீற்றுப் பச்சை முகப்பருச் சிகிச்சைக்கு உகந்தது என்பது இந்த நிலையம் நடத்திய ஓர் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது.

தற்போது ஒப்பிடப்பட்ட சோதனைக்கு முகப்பரு உள்ள 51 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒரு பிரிவில் 25 பேர்கள் திருநீற்றுப் பச்சை உபயோகித்தனர். அதாவது தேவைக்கேற்ப அதன் இலைகளைக் கசக்கி அதனின்று வெளிப்படும் சாற்றை பரு இருக்கும் இடங்களில் தினந் தோறும் ஒரு வேளை பகலிலோ அல்லது இரவிலோ தடவிக் கொண்டனர். மற்றொரு பிரிவில் 26 பேர்கள், சருமநோய்ப் பகுதியில் கையாளப்படும் மருந்துகளை அதாவது, 500 மில்லி லிட்டர் அளவுள்ள டெட்ராசைக்லினின் மாத்திரைகளைத் தினமும் உட்கொண்டனர், தவிர பரு இருக்கும் இடங்களில் தேவைக்கேற்ப கந்தகக் களிம்பைத் தடவிக் கொண்டனர்.

இவ்விதம் 6 வார சிகிச்சைக்குப் பிறகு, இரு பிரிவினரையும், பரிசோதனை செய்ததில் முதற் பிரிவில் அதாவது திருநீற்றுபச்சை இலையை உபயோகித்தவரில் 18-பேர்களுக்கு (72 %) முகப்பரு, புண் இவற்றின் எண்ணிக்கை 60% க்கும் மேலாகக் குறைந்து காணப்பட்டது. 6 பேர்களுக்கு (24%)எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை. ஒரே ஒருவருக்கு பரு, புண் இவற்றின் எண்ணிக்கை கூடுதலாயிற்று. இரண்டாவது பிரிவில், அதாவது சருமநோய் பிரிவில் கையாளும் மருந்துகளை உபயோகித்தவரில் 15 பேர்களுக்கு முகப்பரு, புண் இவற்றின் எண்ணிக்கை 60%க்கும் மேலாகக் குறைந்து காணப்பட்டது. 10 பேர்களுக்கு (38.46%) எவ்வித் மாற்றமும் ஏற்படவில்லை. ஒரே ஒருவருக்கு பரு, புண் இவற்றின் எண்ணிக்கை கூடுதலாயிற்று. மற்றும் திருநீற்றுப் பச்சை இலைகளை உபயோகிக்கும் பொழுது வேறு எவ்விதமான விளைவுகளும் ஏற்படவில்லை.

இந்தச் சிறிய ஒப்பிடப்பட்ட சோதனையிலிருந்து. திருநீற்றுப் பச்சை, சருமநோய்ப் பகுதியில் கையாளப்படும் முறையைவிட சிறந்தது, எளிமையானது என்பது புலப்படுகிறது. மேலும் சிகிச்சை முறைக்கான செலவினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சருமநோய்ப் பகுதியில் மருந்துகளுக்கு ஒரு நபருக்கான செலவு குறைந்தது, ரூ. 100- என்றும், ஆனால் அதே கால அளவிற்குத் திருநீற்றுப் பச்சைக்கான செலவு ரூ. 5-தான் என்பதும் அறியவருகிறது. எனவே திருநீர்ப் பச்சை ஓர் எளிய, சிறந்த ,சிக்கனமான முகப்பரு நிவாரணி என்பது குறிப்பிடத் தக்கது.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு
16-6-1982 75 காசு

கண்ணைக் கவரும்
வண்ணப் பேழையாக....
படித்துப் பாதுகாக்க வேண்டிய
கருத்துக் கருவூலமாக....
நாட்டு மக்கள் ஏற்றம் பெற்றிட
நல்ல பல திட்டங்களைத்
தீட்டிச் செயல்படுத்திடும்
அரசின் ஆக்கப் பணிகள்
தொகுப்பு மலராக....
அதிகப் பக்கங்களுடன்



# தமிழரசு

# தமிழரசு

3 ஜூலை 1982








# விளையும் பயிர்

தமிழரசு
மலர்: 13 இதழ்: 1
1—7—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — ஆனி 17

"வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராக பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

"நாற்றங்கால் பயிர் — பார்ப்பதற்கு பச்சைப் பசேல் என்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல - அதை நன்றாக வளர்த்து விரிவான வயலில் முறையாக நட்டு - ஒழுங்காக வளர்த்தால் - தரமான பயன் கிட்டும்."

பேரறிஞர் அண்ணா



# நம் கடமை

''ஒரு வேளை கஞ்சிகூட இல்லாமல் 50 இலட்சம் முதல் 60 இலட்சம் குழந்தைகள் பட்டினியால் வாடுகிறார்கள். மூன்று வேளையும் பட்டினி கிடக்கும் இந்தக் குழந்தைகளுக்கு, ஒருவேளை உணவாவது அளிக்க வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தின்-எண்ணத்தின் அடிப்படையில்தான் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிவித்திருக்கிறோம்.

''இரண்டு வயது முதல் பத்து வயதுள்ள குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

''இந்தத் திட்டம் பற்றி இந்தியா முழுவதும் பேசப்படுகிறது; பாராட்டப்படுகிறது. ஏழைகளுக்கு ஏற்ற திட்டம் என்று பத்திரிகைகளும் பாராட்டுகின்றன.

''பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒருவேளை உணவாவது அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தைப் பாராட்டாமல், சிலர் இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும்? என்று கேட்கிறார்கள். நாங்கள் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோதும், இப்படித்தான் 'இதை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? இதற்குப் பணம் எங்கே ஒதுக்கியிருக்கிறார்கள்?' என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் அவற்றையெல்லாம் சிறப்பாக நிறைவேற்றிய பிறகு, 'அது போதாது' என்றார்கள்.

''அதுபோலவே இந்தத் திட்டத்தையும் சிறப்பாக நடத்திக் காட்டுவோம். எப்படிச் செயல்படுத்துவோம் என்பதை அப்போது பாருங்கள்.

''நான் ஏழ்மையை உணர்ந்தவன். எனக்கு மூன்றரை வயதாக இருக்கும்போது நான், எனது அண்ணன், எங்கள் தாய் மூவரும் மூன்று நாட்கள் பட்டினி கிடந்தோம். அப்போது பக்கத்து வீட்டில் இருந்த பெண், முறத்தில் அரிசியைக் கொண்டுவந்து கொடுத்தார். 'நாங்கள் பட்டினி கிடந்து சாவோமே தவிர, அந்த அரிசியை வாங்கமாட்டேன்' என்று என் தாய் கூறினார். 'உங்களுக்காக இந்தப் பிள்ளைகள் ஏன் சாகவேண்டும்' என்று அந்தப் பெண் கேட்டார். பின் அந்த அரிசியை வாங்கி என் தாய், காய்ச்சிக் கொடுத்த கஞ்சியைக் குடித்த நாட்கள் இன்னும் நினைவில் இருக்கின்றன.

''அம்மா பசிக்கிறது'' என்று நான் கூறியபோது, என் தாயார் கண்ணீர் வடித்த நாட்கள் என் நினைவில் இருக்கின்றன.

''அதுபோல் மற்றத் தாய்மார்கள் கண்ணீர் விடக்கூடாது, குழந்தைகள் பட்டினி கிடக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தேன்.

''அதிகாரிகளைப் பழக்கப்படுத்தி அதன் பிறகு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதால் 4 ஆண்டுக்காலம் பொறுத்திருந்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

''இந்தத் திட்டத்தை வெளியிடுவதற்கு முன் என் நண்பர்களிடம் கூடச் சொல்லாமல், மனத்தில் வைத்து இருந்தேன். தேர்தல் அறிக்கையில் கூட, தாய்மார்களின் கண்ணீரைப் போக்குவோம் என்றுதான் குறிப்பிட்டோமே தவிர. என்ன திட்டம் என்பதைக் குறிப்பிடவில்லை.

''பட்டினியால் எத்தனையோ கிராமங்களில் உள்ள மக்கள் அவதிப்படுகின்றனர். 63 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டின் கீழே தங்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதமின்றி வாழ்கிறார்கள்.

"அந்த உத்தரவாதத்தை அரசால தரமுடியுமா? நாம் அனைவரும் சேர்ந்துதான் தர வேண்டும். அது நம் கடமை!'

— மாண்புமிகு முதல்வர்



# புரட்சித் திட்டம் புனிதத் திட்டம்



'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'-

என்று முன்னோர்கள் கூறினர்.

'எல்லாரும் ஓர் குலம் ; எல்லாரும் ஓர் நிறை', 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்' என்ற மக்களாட்சிக் காலத்தில் வாழும் நாம்,

''எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்'என்பாவேந்தர் பாரதிதாசன்போற்றிய சமதர்ம நெறி தழைத்திடப் பாடு படுகின்றோம்.

இந்நிலையிலும் வருங்கால மன்னர்களான இளஞ்சிறார்கள்- பிஞ்சுக் குழந்தைகள் ஒருவேளை உணவுமில்லாமல் வாடுவது கொடுமையல்லவா ?

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்றார் கவியரசர் பாரதியார். 'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பதும் நாம் அறிந்த மொழியே. வறுமையும் பசிக் கொடுமையும் இளஞ்சிறார்களின் பிஞ்சு உள்ளத்தைத் தைத்திட வேண்டுமா? தமிழகத்தின் கிராமப்புறங்களிலும் பிற நகரப் புறங்களிலும் வாழும் ஏழை, எளிய, மக்களின் குழந்தைச் செல்வங்கள் ஒரு வேளையேனும் உண்டு மகிழும் வாய்ப்பை அளித்தால் அது வருங்காலத்தில் சீரிய குடிமக்களாகும் இன்றைய தலைமுறையினருக்கு நாம் செய்யும் பெரும் தொண்டு ஆகாதா? இக்கருத்து, மாண்புமிகு முதல்வரின் இதயத்தில் வித்தாகி வளர்ந்து - இன்று மதிய இலவசசத்துணவுத் திட்டமாக மலர்ந்துள்ளது. ஏழை, எளிய, உழைக்கும் மக்கள் அமைத்ததே அண்ணாவின் அரசு, இம்மக்களின் குழந்தைச் செல்வங்கள் ஒருவேளை உணவு - உறுதியாகப் பெற்றிடும் நிலையை உருவாக்கித் தருவதே, இந்த அரிய திட்டத்தின் நோக்கம். இந்தியாவில் முதன் முதலாக ஏழை, எளியோர் மகிழ்ந்திடும் இத்தகைய திட்டத்தை அறிவித்துச் செயலாக்கிடுவது தமிழ்நாடு அரசே.

1982-83-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ஏழைச் சிறு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தின் குறிப்பு அறிவிக்கப்பட்டது.

''ஏழ்மைக் கோட்டுக்குக் கீழேயுள்ள பல குடும்பங்களில் குழந்தைக்குப் பிசைந்து ஊட்டுவதற்குச் சோறு இல்லாமல், கை பிசைந்து, கண்கலங்கி அன்னைகள் நிற்கும் அவல நிலையைப் போக்கச் சிறிதேனும் முயற்சி செய்வது அரசின் அவசர, அவசியக் கடமை என்பதை இந்த அரசு உணர்கிறது. இந்த அடிப்படையில் 2 முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒருவேளையாகிலும் சத்துணவு கிடைப்பதற்கு வகை செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1982 ஜூலைத் திங்கள் முதற் கொண்டு தமிழ்நாடு முழுவதிலுமுள்ள, ஒரு வேளை உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.''

இவ்வாறு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கு ரூ. 100 கோடி செலவாகுமெனவும் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், வரலாறு காணாத வகையில் அறிவித்த ஏழைப்பிள்ளைகட்கு ஆண்டு முழுதுக்குமான மதிய உணவுத் திட்டம், தமிழகத்தில் இவ்வாண்டு ஜூலை 1 முதல் தொடங்குகிறது.

இத்திட்டம் இருபிரிவுகளாகச் செயல்படும். முதல் பிரிவு சமூகநலத்துறை கண்காணித்து நடத்துவது. இவர்கள் 2 முதல் 5 வயது வரை உள்ள சுமார் 25 இலட்சம் பிள்ளைகட்குக் கிராமங்களில் அதற்காக அமைக்கப்படும் சமையற் கூடங்களிலும் ஏற்கெனவே இருக்கும் குழந்தைகள் காப்பகங்களிலும் சத்துணவு அளிப்பார்கள்.



இத்திட்டத்தின் பெரிய பிரிவு 36,000 பள்ளிகளில் சுமார் 40 இலட்சம் பிள்ளைகட்கு உணவு அளிப்பது. இத்திட்டம் பள்ளிக் கல்வித்துறையின் கண்காணிப்பில் தமிழக ஆசிரியப் பெருமக்களின் மேற்பார்வையில் நடைபெறும்.

இவை தவிர உணவு அருந்தும் 40 இலட்சம் குழந்தைகட்கும் இலவசமாக உணவுத் தட்டு, குவளை போன்றவை பள்ளிகளிலேயே வழங்கப் பெறும். சமையல் செய்யப் பாத்திரம் அரசின் செலவிலேயே பள்ளிகளுக்கு அளிக்கப்படும்.

அரிசி, பருப்பு, எண்ணெய் இவை தமிழக நுகர்பொருள் வழங்குதுறை, கூட்டுறவுத் துறை இவைகளால் பள்ளிகளிலேயே அளிக்கப்படும்.

மற்றும் சமையலுக்கு வேண்டிய விறகு, காய்கறி, மசாலா போன்றவற்றைப் பள்ளித் தலைமையாசிரியர் வாங்க, மாவட்டக் கல்வி அதிகாரி முன் மானியம் அளிப்பார். பள்ளியின் தலைமையாசிரியரே எல்லாச் செலவினங்களும் செய்து பொறுப்பாகக் கணக்கு வைத்துக் கொள்வார்.

பள்ளியில் மாணவர் சாப்பாட்டை மேற்பார்க்கும் ஆசிரியப் பெருமக்களும் மாணவருடன் சேர்ந்து உணவருந்தி மகிழுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

**45 காசு, ஒரு பிள்ளைக்கு, ஒரு நாளைக்கு :**

இந்தப் பள்ளி உணவுக்கு ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 45 காசு செலவாகும். சத்து நிரம்பிய உணவாக இது இருக்கும். ஆண்டு முழுவதும் இது வழங்கப்படும். விடுமுறை நாட்களிலும், பள்ளி இல்லா நாட்களிலும் கூட உணவு உண்டு.

**கிராம உணவு ஆலோசனைக் குழு :**

இப்பள்ளி உணவை எல்லா இடங்களிலும் சீருடன் நடத்த, பள்ளியின் தலைமையாசிரியரைச் செயலாளராகக் கொண்டு பள்ளி உணவு ஆலோசனைக்குழு ஊர்ப் பிரமுகர்கள் 10 பேரைக் கொண்டு இயங்கும்.

**பழைய திட்டம் :**

பழைய மதிய உணவுத் திட்டத்தில் 10 காசு அரசு மானியமும் 5 காசு ஒன்றிய மானியமுமாக 15 காசு ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு என்று இருந்தது. பல ஒன்றியங்கள் இந்த 5 காசைத் தர முடியவில்லை. எனவே 10 காசில்தான் பழைய உணவுத் திட்டம் 'கேர்' உதவியுடன் நடந்து வந்தது.

**புதிய திட்டம்-சீர்மிகு திட்டம் :**

இன்று வந்துள்ள புதிய உணவுத் திட்டமோ [illegible] காசு ஒரு மாணவனுக்கு [illegible]

## ஊட்டம் சொல்லும் செய்தி

எல்லாம் முழுதுமாக அரசு மானியமாக அளிப்பதால் பழைய திட்டத்தை விட இது ஐந்து மடங்கு சிறந்து விளங்குகிறது என ஆசிரியர்கள் மகிழ்ச்சியுறுகின்றனர். தவிர பொதுமக்கள் நன்கொடை, ஊராட்சி நன்கொடை என இனி எவரையும் போய் ஆசிரியர்கள் தேடி அலைய வேண்டியதில்லை. அரசின்கொடையே பெரும் கொடையாகி உள்ளது. இது ஆசிரியப் பெருமக்கட்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

ஒவ்வொரு பள்ளியிலும் இனி எந்த ஆசிரியரும் சமையல் செய்ய வேண்டியதில்லை. சமையலுக்கென்று அரசின் சம்பளத்துடன் கூடியவரை பெண்களும் அவர்களுக்கு உதவியாட்களும் ஒவ்வொரு பள்ளியிலும் இனி உண்டு.

### 10 முதல் 14 வயதிலான ஏழைக் குழந்தைகளுக்கும் ஆண்டு முழுவதும் இலவச உணவு

5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே ஓர் ஆண்டிலுள்ள 365 நாட்களிலும் நாள்தோறும் இலவச மதிய உணவு வழங்கும் வகையில் ஏற்கெனவே தமிழ்நாடு அரசு, ஆணைகள் பிறப்பித்துள்ளது. நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் உணவானது மற்ற செலவுகளைத் தவிர்த்து 45 காசாகும். 10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றில் 200 நாட்களுக்கு உணவளிக்கும், ஏற்கெனவே நடைமுறையிலிருந்துவரும் திட்டத்தைத் தொடர்வதற்கும் அந்த ஆணையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்பொழுது நடைமுறையிலிருந்துவரும் 10 முதல் 14 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கான திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கும் 5லிருந்து 9 வரையிலான பிரிவிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவே வழங்கப்படும். இதன்படி உயர்தர ஆரம்பப் பள்ளியில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 10 முதல் 14 வயது வரையிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு 10 காசு செலவில் ஆண்டொன்றில் 200 நாட்களுக்கு வழங்கப்படும் தற்போதைய இலவச உணவு வழங்கும் முறையானது 1-7-'82 முதல் 5 வயதிலிருந்து 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு வழங்கப்படுவது போல இவர்களுக்கும் 45 காசு செலவில் ஆண்டு ஒன்றின் 365 நாட்களுக்கும் இலவசச் சத்துணவு வழங்கப்படும்.



## வகைவகையான இலவச உணவு

தமிழகத்தில் உள்ள ஏழை எளிய குழந்தைகளுக்கு வழங்கப்படும் இலவசஉணவு தினமும் ஒவ்வொரு வகையான சத்துணவு தயாரித்து அளிக்கப்படும். இதைப் பற்றி அரசு அறிவித்துள்ள உணவு வகைகள் விவரங்கள்:

1) பருப்பு சாதம், காய், முளைக்கீரைப் பொரியல், பப்பாளிப்பழம்.
2) பொங்கல், காய், முளைக் கீரை, தக்காளிப்பழம்.
3) பருப்பு சாதம் - கத்தரிக் காய், கீரைப் பொரியல், தக்காளிப்பழம்.
4) எலுமிச்சை சாதம், கீரைப் பொரியல், பப்பாளிப்பழம்.
5) பருப்புசாதம், கீரைப்பொரியல், தக்காளிப்பழம்.
6) கலவை சாதம், -முள்ளங்கி கீரைப் பொரியல், கொய்யாப்பழம்.
7) கோதுமை உப்புமா, காய், தண்டுக்கீரைப் பொரியல், தக்காளிப்பழம் ஆகிய உணவு வகைகள்,

இந்த இலவச மதிய சதது உணவுத் திட்டத்தைக் கண்காணிக்கவும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வழிகாட்டிடவும் ஓர் உயர்மட்டக் குழு மாண்புமிகு முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் வருமாறு:

1. மாண்புமிகு நிதியமைச்சர்.
2. மாண்புமிகு கல்வியமைச்சர்.
3. மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர்
4. திரு.ஜி.சுவாமிநாதன் எம்.எல்.சி.
5. திருமதி தாரா செரியன் எம்.எல்.சி.
6. **திருமதி டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ்**
7. டாக்டா மு.அறம் (துணைவேந்தர் கிராம பல்கலைக்கழகம்)காந்தி கிராமம்.
8. திரு சிவந்தி ஆதித்தன்.
9. தலைமைச செயலாளர்.
10. நிதித்துறைச் செயலாளர்.
11. கல்வித்துறைச் செயலாளர்.
12. சமூகநலத்துறைச் செயலாளர்
13. ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறைச் செயலாளர்
14. உணவு - கூட்டுறவுத்துறைச் செயலாளர்
15. திட்டம்-வளர்ச்சித் துறைச் செயலாளர்
16. மதிய உணவுத் திட்டச்சிறப்பு அலுவலர்
17. சமுசநலத்துறை இயக்குநர்.
18. பள்ளிக் கல்வி இயக்குநர்.

இது தவிர 'அலுவலர்கள் குழு' ஒன்று தலைமைச் செயலாளர், தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் நிதித்துறைச் செயலாளர், கல்விச் செயலாளர், சமூகநலத் துறைச் செயலாளர், ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறைச் செயலாளர். உணவு கூட்டுறவுத் துறைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைச் செயலாளர், மதிய உணவுத் திட்ட சிறப்பு அலுவலர், பள்ளிக் கல்வி இயக்குநர், சமூகநலத்துறை இயக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளார்கள்.

ஐந்து வயதிற்கு மேற்பட்டு 14 வயதுக்கு உட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலும் இரண்டு வயதிற்கு மேற்பட்டு ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைகள் நல மையத்தின் மூலமும் இலவசச் சத்துணவு வழங்கப்படும்.

விடுமுறை நாட்களிலும் பள்ளிக் கூடங்களில் இலவசச் சத்துணவு வழங்கப்படும்.

இலவசச் சத்துணவுத்திட்டம் எதிர்கால இளைஞர்கள் வாழ்வில் ஒளியேற்றிடும் ஒப்பற்ற திட்டமாகும்.

'எல்லா மாநிலத்தவரும் ஏற்றிப் போற்றிடும் வகையில் உருவாகியுள்ள இந்தத் திட்டம்,

இல்லாமையால் அல்லலுறும் ஏழை, எளிய குழந்தைகளின் வாழ்வை மாற்றி அமைக்கும் புரட்சித் திட்டம் மட்டுமல்ல,

சமுதாய வளர்ச்சியில் ஒரு பெரும் மாற்றத்தை உருவாக்க விருக்கும் புனிதத் திட்டமுமாகும்.

ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கும் இந்தத்திட்டம் பள்ளிகளிலும் சமூக நலத்துறையின் குழந்தைகள் நல மையங்களிலும் தனித்தனியே நடைபெற்றாலும், மாவட்ட அளவில் இத்திட்டத்திற்கான முழுப் பொறுப்பினையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஏற்பர்.

இந்த இலவசச் சத்துணவுத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களேநேரடிப் பொறுப்பேற்றுள்ளார் என்பதிலிருந்து இத்திட்டத்தின் முக்கியத்துவமும் பெருமையும் விளங்கும்.

**ஏழை குழந்தைகளுக்குச் சத்துள்ள மதிய உணவு வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தினை நிறைவேற்ற பொதுமக்கள் பலரிடமிருந்து தானாக நன்கொடை அரசுக்கு வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு பொதுமக்கள் அனுப்பும் நன்கொடைத்தொகை கிராமப்புறத் திட்டங்களுக்கென்று குறிப்பிடப்படுமானால் வருமானவரிச் சட்டம் 35 சிசி/35 சிசிஏ. ஆகிய பிரிவுகளின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. ஊரகவளர்ச்சித் துறை இயக்குநர் / கிராமப் புற வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கென அமைக்கப் பட்டுள்ள தமிழ்நாடு ஊரக மறுவடிவமைப்புச் சங்கத்தின் தலைமைச் செயல்அலுவலர் ஆவார். எனவே, இது போன்ற நன்கொடைகள் ஊரக வளர்ச்சித் துணை இயக்குநருக்கு நன்கொடை பொதுவான திட்டத்திற்கு அல்லது குறிப்பிட்ட கிராமத்திற்கு அல்லது பகுதிக்கு என்று குறிப்பிட்டு அனுப்பலாம்.**

**கிராமப்புறப் பகுதி அல்லாத பகுதிகளில் (சென்னை மாநகராட்சிபகுதியிலிருந்து 15 கி.மீ. வெளியே உள்ள பகுதி, திருச்சி, சேலம், கோயம் புத்தூர், மதுரை நகரம் இவற்றிற்கு 10 கி.மீ. வெளியேயும் மற்ற நகராட்சிப் பகுதிகளுக்கு 8 கி. மீ. வெளியே பகுதியில் உள்ளவையும் இந்தச் சட்டத்தின்படி கிராமப்புறங்களாகும்.)**

**நிதி வழங்க விரும்புவோருக்காக "முதலமைச்சரின் சத்துள்ள மதிய உணவுத் திட்ட நிதி" என்ற பெயரில் நிதி அமைப்பு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இந்த நிதிக்கு நன்கொடை அனுப்புவோர் இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அலுவலருக்கு அனுப்பலாம்.**



# காவல் துறையின் சீரிய பணிகள்

**இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மாநிலக் காவல் படைகளில் தமிழகக் காவல் படைக்கு ஒரு தனிச்சிறப்பும் மதிப்பும் உண்டு. மக்கள் தொகை, காவல் துறையினரின் விகிதாசாரம் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவு. ஓராயிரம் மக்களுக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் உள்ளது. காவலர்களின் எண்ணிக்கை உயர்த்திய போதிலும் மக்கள் தொகைப் பெருக்கின் காரணத்தினால் விகிதாசாரம் தேக்க நிலையிலேயே இருக்கும் வண்ணம் உள்ளது. எனினும் காவல்துறையினரின் செயல் திறனினால் குற்றம், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் கட்டுக்குள்ளடக்கி வைக்கப்பட்டு கண்காணிக்கப் பட்டு வருகிறது.**

**செயல்திறன் தழைத்தோங்கியிருக்க தரமுள்ள பயிற்சி, கண்காணிப்பு அவசியம். காவல்துறையில் பணிபுரிவோரின் நல்வாழ்க்கையில் தக்க கண்ணோட்டமிருந்தால்தான் பணித்திறன் சிறப்பாக அமைந்திருக்கும். இத்துறையிலுள்ளவர்களுக்கு, நேரம் காலம் கிடையாது. இருபத்து நான்கு மணிநேரமும் கண்காணிப்புடன் செயல்பட வேண்டும். பணியில் ஈடுபடும்போது உடலுக்கும், உயிருக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்புகள் ஏராளம். பலர் உயிரிழந்திருக்கின்றனர். பலர் ஊனமுற்றுள்ளனர்.**

**எந்த ஒரு நடவடிக்கை எடுத்தாலும் பல கண்ணோட்டங்களில் விமரிசனத்திற்குட்பட்டு ஏச்சுக்கும்,** கண்டனத்திற்கும் இலக்கு ஆவதற்கு வாய்ப்புகள் கணக்கற்றவை. பணியை சர்க்கஸில் கம்பி மேல் நடக்கும் வித்தைக்கு ஒப்பிடுவதுண்டு. பல நெருக்கடிகளுக்குட்பட்ட இப்பணி பொது மக்களுக்கு அதிகபட்சம் திருப்தியளிக்கும் வகையில் அமைந்திருக்கவேண்டும். மக்கள் ஆதரவு இருந்தால்தான், காவல்படையினரின் பணி சிறப்புடன் விளங்கும். பயனுள்ளதாகவும் இருக்கும்.

பல கொள்ளை, களவுகள் திறம்படக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் நாட்டின் எந்த மூலை முடுக்கிலிருந்து வந்தாலும் தப்பித்ததில்லை. பீஹாரிலிருந்து வந்து காட்பாடி அருகே முகமூடியணிந்து பஸ்ஸை வழிமறித்து அடித்த கொள்ளை கோஷ்டி, சென்னை நகரி[...] கன்னக் களவுகள் செய்த வ[...] மாநிலக் கொள்ளைக் கும்ப[...] இவற்றைக்கண்டு பிடித்தவைக[...] எல்லாம் திறமைக்கு எடுத்து[...] காட்டுகள். நூற்றுக்கு நூ[...] சதவிகிதம் கண்டுபிடிப்[...] என்பது ஒரு இயலாத காரியம்[...] அவ்வாறு மார் தட்டிக் கொ[...]டால், அது உண்மை நிலைமை[...] குறிக்காது. ஒரு கணிசமான ச[...] விகித அளவில்தான் இருக்க மு[...]யும். அந்த வகையில் பார்க்கு[...] போது, தமிழகக் காவல் துறை[...]யினரின் சாதனை பெருமை[...] படும் அளவில் உள்ளது என்பது[...] எல்லாராலும் ஒப்புக்கொள்[...]ளப்பட்ட ஒரு உண்மை நிலை[...] அந்த நிலையை ஏற்றுக் கொள்[...]தற்கு ஒரு பாரபட்சமின்மை[...] தன்மை தேவை.

காவல் படையினரின் பணி[...] எப்படிப்பட்டது, செயல்திறனை[...] வளர்க்க சூழ்நிலை, பணி[...] சலுகைகள், காவலர்களின் நல்[...] வாழ்வு, மக்களின் ஆதரவு[...] போன்ற அடிப்படைப் பிரச்னை[...]களுக்குத் தமிழக அரசு அண்மை[...] காலத்தில் செயல்படுத்திய பின்[...] வரும் பட்டியலை நல்நோக்குடன் பார்த்தால் விளங்கும் :

இடர்ப்படி: (Risk Allowance) காவலர் நிலை 2-லிருந்து ஆய்[...] வாளர்கள் வரை மாதம் ஒன்[...]றுக்கு இடர்ப்படி ரூபாய் 20 வீத[...]மும், துணைக் கண்காணிப்பாள[...]ருக்கு மாதம் ரூ. 30 வீதமும் அளிக்கப்பட்டது.



வீரமரணம் எய்திய காவல்துறை அதிகாரியின் துணைவியாரிடம் விருது வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர்

<u>துணிப்படி:</u> குற்றப் புலனாய்வுத் துறை, மாவட்ட தனிப் பிரிவு மற்றும் இரயில்வேயைச் சேர்ந்த காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் துணிப் படி ரூ. 1.87-லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டது.

<u>மலிவு விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்குதல்:</u> காவலர் 2-ஆம் நிலை முதல் ஆய்வாளர்கள் வரை மாதந்தோறும் மலிவு விலையில் அதிகபட்சம் 4பேருக்கு மட்டும் இன்றியமையா பொருட்களை 1-10-80 முதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

வீட்டு வாடகைப்படி: வாடகையின்றிக் குடியிருப்புகள் வழங்கப்படாத காவல்துறைப் பணியாளர்களுக்கு, சென்னை மாநகரம் உட்பட எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும் வாடகைப்படி ரூ. 50 ஆகவும், மாவட்டத் தலைமையிடம் இல்லாத ஏனைய இடத்தில் உள்ளவர்களுக்கு ரூ. 30 ஆகவும் கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது.

<u>சீருடை மானியம்:</u> ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், இளநிலை உதவி ஆய்வாளர்கள் சீருடை மானியம் ரூ. 15 முதல் ரூ. 25 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

<u>தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரை மாவட்ட சேமப் படைக்கு மாற்றம் செய்தல்:</u> தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 10 ஆண்டுகள் பணிபுரிந்து மாவட்ட சேமப்படைக்கு மாறுதல் ஆவதற்கு விருப்பம் தெரிவிப்போருக்கு மாற்றுதல் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

<u>குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்புப் பிரிவினருக்குசிறப்பு ஊதியம்</u>: குற்றப் புலனாய்வுத் துறை சிறப்புப் பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கு 1-5-81 முதல் ரூ.10 முதல் ரூ. 25 வரை சிறப்பு ஊதியம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

சீருடை பராமரிப்புப் படி: காவல்துறையிலுள்ள எல்லாக் காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும், இளநிலை உதவியாளர்களுக்கும் சீருடைப் பராமரிப்புப் படி ரூ.10-லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டது. இந்தியக்காவல் பணியைச்சேராத காவல்துறை கண்காணிப்பாளருக்கும், கூடுதல் கண்காணிப்பாளருக்கும், துணைக் கண்காணிப்பாளருக்கும் மாதம் ரூ. 30 வீதமும் மற்றும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்களுக்கு ரூ.20 வீதமும் சீருடை பராமரிப்புப் படியை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

<u>சமையற்காரரின் பணியினை ஒழுங்கு படுத்துதல்</u>: சிறப்புக்காவல் படையைச்சார்ந்த சமையற்காரர்களுடைய ... 26-9-81 முதல் வரைமுறை செய்து அவர்களுக்கும் அடிப்படை அரசு ஊழியர்களுக்குரிய எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

<u>அறிவுரைப் படி:</u> வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள காவல் பயிற்சிப்பள்ளிகள் மற்றும் சென்னையிலுள்ள காவல் பயிற்சி கல்லூரியில் பணி புரியும் அறிவுரையாளருக்கு அறிவுரைப் படி ரூ. 25 முதல் ரூ. 150 வரை புதிதாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

<u>காவல் துறையை நவீனப் படுத்தும் திட்டங்கள்:</u> செய்தித் தொடர்பு இதுவரை பெறாத தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கும், மற்றும் காவல் நிலையங்களுக்கும், மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதிகளுக்கு வகை செய்ய 350 மீவுயர் மின்னலை செய்தித் தொடர்புக் கருவிகளுக்கும் மற்றும் 1800 இருவழி செய்தித் தொடர்புக் கருவிகளும் மற்றும் துணைப் பொருள்களும் வாங்க ரூ. 1,98,45,000 நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது. இவை சிறிது சிறிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

மாவட்டத் தலைமை இடங்களிலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையைச்சேர்ந்த 15 சிறப்புப் பிரிவுகளும் ரூ. 120 இலட்சம் செலவில் மிகை உயர் மின்னலை செய்தித் தொடர்புக்கு வகை செய்ய அனுமதித்துள்ளது.

வேலூரில் ஒரு குற்றத்தடய அறிவியல் ஆய்வுக்கூடம் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

<u>புதிதாக ஏற்படுத்தப்பட்ட காவல் நிலையங்கள் மற்றும் புதிய அமைப்புக்கள்:</u>1980-81-ல் 17 புதிய காவல் நிலையங்களும், 8 புறக்காவல் நிலையங்களும் திறக்கப்பட்டன. 3 புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்கும் ரோந்து பணியில் 350 முன்னாள் இராணுவ வீரர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

1981-82-ல் 29 புதுக் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இரண்டு புதிய புறக்காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இரண்டு புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் வேலைப் பளுவைக் குறைக்க 1981-82-ல் 90 புதிய பதவிகள்தோற்றுவிக்கப்பட்டன.

இரண்டு புதிய தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அணிகள் தோற்றுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இந்தியாவிலேயே மிகக் கூடுதலான எண்ணிக்கையுடன் இயங்கும் பெண் போலீஸ் பிரிவு தமிழகத்தில்தான் உள்ளது. அரசு 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 60 பெண் உதவி காவல் ஆய்வாளர்கள், 60 பெண் தலைமைக் காவலர்கள், 600 பெண் காவலர்கள் நியமித்தது மிகக்குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பெண் போலீஸ் பிரிவினரில் இரண்டு யூனிட்டுகள் சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்திலும், பொது மக்கள் தொடர்புப்பணிக்காக நியமிக்கப்பட்டிருப்பது, பெண் பயணிகளுக்குப் பேருதவியாக இருக்கிறது.

1982-83 நிதி ஆண்டில் காவல் துறையில் இருந்த 245 துணை ஆய்வாளர் பதவிகளை ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தியும், 825 இளம் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை உதவி ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தியும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னையில் உள்ளது போலவே, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களிலும் குதிரைப்படை அமைக்க அரசு அனுமதித்துள்ளது.



1982-83 நிதி ஆண்டில் தமிழகத்தில் கூடுதலாக 30 காவல் நிலையங்கள் திறக்கப்பட இருக்கின்றன.

நெடுங்காலமாக இத்துறையில் காவலர்களை அதிகாரிகளின் இல்லங்களில் ஏவலர்களாக பணியமர்த்தி வந்த முறை 15-8-'80 முதல் ஒழிக்கப்பட்டு விட்டது. அவர்களுக்குப் பதிலாக அடிப்படை ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் காவல்துறையினருக்கு உதவுகின்ற பொதுமக்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 5,000 வரை பரிசு அளிக்க வகை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளில் வழிப்பறிக் கொள்ளைஆகியவற்றைத் தடுப்பதற்கு நெடுஞ்சாலை ரோந்து குழு சென்னை-வேலூர், சென்னை நெல்லூர், சென்னை -விழுப்புரம் ஆகிய வழித்தடங்களில் பணியாற்ற கூடுதல் பணியாளர்கள், தேவையான வாகனங்கள் ஆகியவற்றிற்கு அரசு அனுமதித்துள்ளது.

மாவட்டங்களில் மதுவிலக்குப் பிரிவுப் படைகளின் களப்பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆய்வாளர் -1, துணை ஆய்வாளர்-1, உதவி ஆய்வாளர் -4, இளநிலை உதவி ஆய்வாளர்-4, தலைமைக் காவலர்கள் -4, முதல்நிலைக் காவலர்கள் -2. காவலர்கள்-24- அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 1 ஜீப்பும், 1 பிக்-அப் வேனும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

காவல்நிலையங்களில் பணி புரியப்பெண் உதவி ஆய்வாளர்களுக்கு 50 மொபட் மோட்டார் சைக்கிள்களும், 200 மோட்டார் சைக்கிள்களும் காவல் நிலையங்களுக்கும் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

<u>காவலர் குடியிருப்புத் திட்டம்</u> : காவலர் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 1980-82-ஆம் ஆண்டில் 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் காவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 363.29 இலட்சங்களாகும்.

1981-82-ஆம் ஆண்டில் மொத்தம் 292 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் காவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 211.34 இலட்சங்களாகும். இந்த ஆண்டில் மேலும் 620 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கும், கட்டுமானப்பணிகளுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை ரூ. 204 இலட்சங்களுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது.

மார்ச் 31, 1982 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் மொத்தம் 22036. கட்டி முடிக்கப்பட்ட 22036 குடியிருப்புகளை காவல்துறை அதிகாரிகளின் எண்ணிக்கையான 52507-உடன் ஒப்பு நோக்குகையில் எட்டியிருக்கும் சாதனைக் குறியீடு 41.97 சதவிகிதங்களாகும். திறமை வாய்ந்த காவல் துறையினரை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு ஆண்டுக்கு இருமுறை குடியரசு தினத்தின்போதும், சுதந்திர தினத்தின்போதும் பதக்கங்கள் வழங்குகிறது. மேலும் தமிழக அரசும் முதலமைச்சர் பதக்கம் என ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று பதக்கங்கள் வழங்குகிறது. இவை அதிகாரிகளுக்கும் காவலருக்கும் பொதுவானதால், ஒரு ஆண்டில் பத்துக் காவலருக்கு மேல் பதக்கம் பெற வாய்ப்பில்லாமலிருந்தது. இந்த ஆண்டு முதல் பொங்கல் பரிசாக தமிழக அரசு ''முதலமைச்சர் காவலர் பதக்கம்' என ஒரு புதிய பதக்கம் ஒன்று துவக்கப்பட்டு ஆண்டுதோறும பத்து ஆண்டுகளுக்கு மேல் குற்றம் குறையின்றிப் பணியாற்றியுள்ள 1500 காவலர்களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கம் பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்குக் கூடுதல் ஊதியமாக ரூ. 20-லிருந்து ரூ. 25-கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இதுவன்றி, ஒய்வு பெறுமுன் அகால மரணமடைந்த காவல் துறையினரின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்கள் குழந்தைகளில் ஒருவருக்கு, விதிகளைத் தளர்த்தி, உடனடியாக வேலை வாய்ப்புக் கிடைக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



# உணவுத் துறையில் ஒப்பற்ற பணிகள்

பொது விநியோக முறைக்குத்
,வையான கொள்முதல் இருப்பு
பத்துக் கொள்வதற்காக வர்த்
ர் அல்லது உற்பத்தியாளர்
ு லெவிமுறை 1981, சனவ
கு முன்னர் இருந்ததில்லை.
80 ஆம் ஆண்டு இறுதியிலும்,
81 ஆம் ஆண்டுத் தொடக்கத்தி
ம் தமிழ்நாட்டில் கடும் வறட்சி
லை வாட்டியது. எனவே,
வுநிலை எவ்வாறுள்ளதென்
த அரசு ஆய்ந்தது. அரசிடம்
ள அரிசியின் மூடை
ருப்பையும் பொது விநியோக
றையின் கீழ் வழங்கப்படும் அதி
த்த அரிசித் தேவையையும்,
சி வெளிச்சந்தையில் அதிக
லைக்கு விற்பதைத் தடுக்க
ண்டியதன் அவசியத்தையும்
த்தில் கொண்டு, மொத்த
யாபாரிகள் வாங்கும் நெல்,
சி மீது 40 சதவீதம் லெவியை
க்க அரசு முடிவு செய்தது.
31 சனவரி 20ஆம் தேதி முதல்
வி விதிக்கப்பட ஆணைகள்
ப்பிக்கப்பட்டன. எனினும்,
பத்தியாளர்கள் மீதோ, சில்
ற வர்த்தகர்கள் மீதோ இனி
வி எதையும் அரசு விதித்
வில்லை.

ற மாநிலங்களிலிருந்து தமிழ்
டிற்கு அரிசி அல்லது நெல்
ண்டுவரப்படுவதை ஊக்கு
பதற்காக, அத்தகைய இருப்
கும் லெவி விதிக்கப்படாது
க்களிக்கப்பட்டது. 1981,,

சம்பா அறுவடைப் பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1,20,108 டன் நெல்லும், 44,538 டன் அரிசியும் கொள்முதல் செய்தது. 1981ல் தமிழகத்திற்கு ஏற்பட்ட நிலையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இத்தகைய இடர்ப்பாடுகள் நேராவண்ணம் தவிர்க்கவும், மாநிலங்களில் கொள்முதல் செய்வதை அதிகப்படுத்தவேண்டுமென்றும், பொதுமக்கள் தேவைகளுக்கு மத்திய அரசையே நம்பி இருக்கும் நிலையைத் தவிர்க்க வேண்டுமென்றும், மாநிலங்களில் அரிசி மூடையிருப்பு அதிகமான அளவிற்குச் சேமிக்கப்படவேண்டுமென்றும் இந்திய அரசு மாநில அரசுகளை வலியுறுத்தி வந்ததாலும், 1981 குறுவை அறுவடைப் பருவத்திற்கு லெவியை 40 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்தது. இம்முறை 1982 சம்பா பருவத்திற்கும் கடைப்பிடிக்கப்பட்டது. பல பருவங்களில் 1981-82-ஆம் ஆண்டுகளில் கொள்முதல் செய்த அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | மெட்ரிக் டன்களில் நெல் | அரிசி |
|---|---|---|
| 1. சம்பா (81) | 1,20,108 | 44538 |
| 2. குறுவை(81) | 2,23,977 | 8365 |
| 3. சம்பா 1982 முதல் 27.5.82 வரை | 3,11,037 | 104189 |

குறுவை நெல் அறுவடை, பொதுவாக வடகிழக்குப் பருவ மழையின்போது நடைபெறுவதால், நெல் அதிக அளவில் சரப்பதமுள்ளதாக இருக்கும். சரப்பதமுள்ள நெல்லை வாங்குவதில் வர்த்தகர்கள் பொதுவாகவே தயக்கம் காட்டுகின்றனர். மேலும் அவர்கள் விலையைக் குறைப்பார்கள். உற்பத்தியாளர்கள் நெல்லைக் குறைந்த விலையில் விற்பதைத் தடுக்கும் பொருட்டு இந்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைக்குக் கிராமங்களிலேயே விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்குவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நேரடியாகக் கொள்முதல் செய்யும் நிலையங்களை நூற்றுக் கணக்கில் திறந்தன.

இந்த நிலையங்களில் அரசின் கொள்முதல் விலைக்கு நெல்லை விற்க முன்வரும் உழவர்களுக்கு வசதி செய்ய, சம்பாப் பருவத்திலும் இவை செயல்பட்டன. நெல் கொள்முதலில் அரசு தலையீட்டினால், தனிப்பட்ட மொத்த வியாபாரிகளிடம் உற்பத்தியாளர்கள் மிகக் குறைந்த விலைக்கு நெல்லை விற்கும் நிலை தடுக்கப்பட்டுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மேலும், இந்திய அரசின் நிர்ணயக்குறிப்பின்படி, 18 சதவீதத்திற்கு மேற்பட்டு ஈரப்பதம் உள்ள நெல்லைக் கொள்முதல் செய்யக்கூடாது. எனினும் தமிழ்நாட்டிலுள்ள நிலைமையைக் கருதி, மத்திய அரசிடம் அனுமதி 22 சதவீதம் வரையில் ஈரப்பதமுள்ள குறுவை நெல்லைக் கொள்முதல் செய்யவும் மத்திய அரசின் இசைவைப் பெற்றுள்ளது. 25 சதவீதம் வரையில் ஈரப்பதமுள்ள குறுவை நெல்லை வாங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த முறையில், மாநில அரசு நடவடிக்கை எடுக்காமல் போயிருந்தால் குடியானவர்கள் ஈரப்பதமான நெல்லை விற்க முடியாத வகையில் பேரிழப்பை அடைந்திருப்பார்கள்.



தமிழ்நாட்டில் இரண்டொரு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களும் 1980-81ல் இரண்டாவது அரையாண்டுக் காலங்களில், கடுமையான வறட்சி நிலையைச் சந்தித்தன. பொது விநியோக முறையில் குடும்பக் கார்டுகளுக்கு மாதத்திற்கு 10,000 முதல் 12,000 டன்கள் வரை வழங்கும் அரிசியின் அளவு 1981 ஆகஸ்ட் மாதத்தில் 78,000 டன்கள் வரை உயர்ந்தது. இவ்வாறு குடும்பக் கார்டு பெற்றுள்ளவர்களுக்கான அரிசியின் தேவை உயர்ந்து கொண்டே போகும் நிலையில், மாநில அரசு அரிசி விநியோகிக்கும் அளவை மிகுதியாக்கப் பல்வேறு முறைகளை மேற்கொண்டது. அது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்தும், டெண்டர் முறையில் தனி விற்பனையாளர்களிடமிருந்தும் அரிசியை வாங்கியது. மத்தியக் கிடங்கிலிருந்து அரிசியின் அளவை மாதத்திற்கு 1 இலட்சம் டன் வீதம் உயர்த்தும் அளவிற்கு இந்திய அரசும் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், இந்திய அரசு மாதத்திற்கு 60,000 டன்கள் வீதம் வழங்கியது.

மத்திய அரசு வழங்கிய அரிசியின் பெரும் அளவு, ஆந்திர மாநிலத்திலிருந்து வந்ததால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருப்புக்களைச் சாலை வழியாகவும், இருப்புப்பாதை வழியாகவும் கொண்டுவருவதற்காகவும், தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இப்படியாக மாநில அரசு பிற மாநிலங்களிலிருந்து பொது விநியோகத்திற்காக அரசுக்குத் தேவையான அரிசியை வாங்குவதில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது. பொது விநியோக முறை தடைபெறாமல் நடைபெறவும் வழிசெய்தது.

பொது விநியோக முறையின்கீழ் அரிசி வழங்குவது உறுதிப்படுத்தப்பட்டதையொட்டி, வெளி மார்க்கெட்டில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடிந்தது. கார்டு பெற்றுள்ளவர்களுக்கு 1981 ஜனவரி முதல் 1981 டிசம்பர் வரை மொத்த அளவாகிய 6.71 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டது. 1977 ஜூன் மாதம் ஆட்சி மேற்கொள்ளப்பட்டது முதல் நாட்டுப்புறங்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் வசதிகளை அதிகப்படுத்தும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடையைத் திறக்கும் திட்டத்தை அரசு அறிவித்தது. நியாயவிலைக் கடைத் திட்டத்தின் மூலமாக மாநிலத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் பயன்பெற்றன.

மாநிலத்தில் 17,536 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அக்கடைகள் பங்கீட்டுப் பொருள்கள் மட்டுமில்லாமல், பிற அத்தியாவசியப் பொருள்களான சமையல் எண்ணெய், மிளகாய், புளி, தனியா ஆகியவற்றையும் கூட விற்பனை செய்கின்றன. 1981ஆம் ஆண்டில் கிராமப்புற நியாயவிலைக் கடைகளின் மொத்த வியாபாரம் 115 கோடி ரூபாய் ஆகும். கடைசியாக 1975ஆம் ஆண்டில் பொதுக் கணக்கெடுப்பு நடந்து குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டன. புதுக் குடும்பக் கார்டுகளை வழங்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தவண்ணம் இருந்தன. பழைய குடும்பக் கார்டுகள் மிகவும் பழசாகிவிட்டன. புதுக் கார்டுகள் தேவைப்பட்டன. போலிக் கார்டுகளின் நடமாட்டமும் தெரியவந்தது. ஆகவே, மாநிலம் முழுவதும் பொதுக் கணக்கெடுப்பு நடத்தி புதுக் குடும்பக் கார்டுகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வேலை நிறைவு செய்யப்பட்டு சென்னை, புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டன. மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்த வேலை முன்னேற்றம் அடைந்து வருகின்றது. மேலும் 1982 ஜூலை 31 முடிவுக்குள் எல்லா மாவட்டங்களிலும் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மீனவர் நலத் திட்டங்கள்

**வே**ட்டையாடுதல், கால்நடைப் பராமரிப்பு, விவசாயம் ஆகிய தொழில்களைவிட மிகவும் தொன்மையான தொழில் மீன் பிடி தொழிலாகும். இத்தொழில் தற்சமயம் மிகுந்த முன்னேற்றம் அடைந்து வருகிறது. இத்தொழிலை மேற்கொண்டுள்ள பரதவர்கள் எனப்படும் மீனவர்கள் கடலைச் சார்ந்த இடங்களிலும் உள்நாட்டு நீர்நிலைகளை ஒட்டியும் வாழ்கின்றனர். கடலைச் சார்ந்த இடங்களில் வாழும் மீனவர்களின் எண்ணிக்கை 3,37,713 எனவும் இவர்களில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 80,035 எனவும் உள்நாட்டு மீனவர்களின் எண்ணிக்கை 1,20,000 எனவும், 1978-ல் கணிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் முயற்சிகளாலும், மீன்துறையின் பல திட்டங்களாலும் கடந்த 1981-82-ல் 4.10 லட்சம் டன்கள் மீன்பிடிக்கப்பட்டு தமிழ்நாடு இந்தியாவிலேயே மீன்பிடிப்பில் முதல் இடம் வகிக்கும் பெருமை பெற்றுள்ளது. புரதச்சத்து மிகுந்த மீன் உணவு மக்களுக்குக் கிடைக்க வழி செய்வதில் முக்கியமாக விளங்கும் மீனவர்களின் நலத்தைப் பேணுவதில் தமிழக அரசும், மீன் துறையும், மீன் வளர்ச்சிக் கழகமும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளன. இதற்காகப் பல நலத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களால் மீனவர்களின் பொருளாதார நிலை உயரவும், மீன் பிடிப்பு அதிகரிக்கவும், மீனவர்களுக்கு, சமுதாயத்தில் கிடைக்கும் மதிப்பு உயரவும்



நவீன மீன்பிடிப்பின் தொழில் நுணுக்கங்களை அறியவும், வேலைவாய்ப்புக்கள் பெருகவும் வாய்ப்புகள் உள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து மீனவர்களை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிப்பது, மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உதவிகள் அளித்தல் நவீன மீன்பிடி சாதனங்களை வாங்குவதற்கு நிதி உதவி (அரசாங்க வங்கிகள் ஏனைய உதவி நிறுவனங்கள்) பிடிபட்ட மீன்களைக் கெடாமல் பாதுகாக்க வசதிகள், மீன்களுக்கு சரியான விலையை நிர்ணயித்தல் மீனவர்களுக்கு வீட்டு வசதிகள், மீனவர் கிராமத்திற்குச் சாலை வசதிகள், புயல் காலங்களில் தங்குவதற்குப் புகலிடம் கட்டுதல், தொழில் செய்யும் போது இறக்கும் மீனவர்களுக்கு நிதி உதவி, இரவு நேரங்களில் கரை சேர உதவும் வழிகாட்டி விளக்குகளை அமைத்தல், மீனவர்களுக்கு நவீன மீன் பிடிப்பு முறைகள், இறால் வளர்ப்பு—உள்நாட்டு மீன் வளர்ப்பு முறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல் ஆகியவை முக்கியமான நலத்திட்டங்களாகும்.



## மீனவர் கூட்டுறவுத் திட்டம்

மீனவர்களை இடைத்தரகர்களிடமிருந்து விடுவிக்கவும், கடன் சுமைகளிலிருந்து காப்பாற்றவும் வங்கிகள் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் உதவிகள் கிடைப்பதற்கு வழி வகுக்கவும் மொத்தம் 515 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 476 முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் (289 கடலோரச் சங்கங்கள்; 187 உள்நாட்டுச் சங்கங்கள்) வேலை வாய்ப்புத் திட்டச் சங்கங்கள், 8 கூட்டுறவு மீன் விற்பனை ஒன்றியங்கள், 9 கூட்டுறவு சம்மேளனங்கள் அடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் மாநில அளவில் ஓர் மீனவர் கூட்டுறவு சம்மேளனம் உருவாகவில்லை. இச்சங்கங்களுக்குப் பதிவாளர் மீன் துறை இயக்குநர் ஆவார். இச்சங்கங்கள் 1961-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு விதி 53-ன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இச்சங்கங்களின் நிருவாகத்தை மீன் துறை உதவி இயக்குநர்களும், துணை இயக்குநர்களும் மேற்பார்வை செய்து சங்கங்களின் சீரிய நடைமுறைக்கு வழி வகுக்கின்றனர். இச்சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு நீண்ட காலக் கடன், மத்திய காலக் கடன், குறுகிய காலக் கடன், முதலீட்டுக் கடன் ஆகியவை வழங்கப்படுகின்றன. கடந்த திட்ட காலங்களில் ரூ. 73.44 லட்சம் இதற்காக வழங்கப்பட்டுள்ளது. 1981-82-ல் செயல்பாட்டு முதலீட்டுக் கடனாக (Working Capital Loan) ரூ. 5 லட்சம் 76 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் 1982-83-ல் 38 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.5 இலட்சம் (Working Capital Loan) வழங்கப்படும். இதன் மூலம் நியாய விலையில் கடைகளைத் திறந்து மீன்பிடி சாதனங்களை வாங்கி மீனவர்களுக்குச் சகாய விலையில் விற்கப்படும்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளித்து ஊக்குவிப்பதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகங்களின் மூலம் நிதி உதவி பெற்றுத்தரப்படுகிறது. இதுவரை 35 கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல லட்சம் மீன் பிடி சாதனங்கள் வாங்குவதற்கும் கிடங்கு கட்டுவதற்கும் மீன் விற்பனை செய்வதற்கும் வழங்கப்பட்டுள்ளது.

## தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உதவிகளின் முக்கிய அம்சம்

கடன் திருப்பித் தர வேண்டிய காலத்திற்கு நான்கு ஆண்டுகள் கழித்து செலுத்திய பங்கு முதலீட்டுத் தொகையைப் பத்துத் தவணைகளில் திரும்பப் பெறலாம். மேலும் படகுகள் மற்றும் வலைகள் வாங்குவதற்காக வழங்கப்படும் கடன்களில் 20 சதம் மானியமாக வழங்கப்படுகிறது. கிடங்கு கட்டுவதற்கும், மீன் விற்பனை நிலையங்கள் கட்டுவதற்கும், மீன்களைக் கொண்டு செல்வதற்கான ஊர்திகள் வாங்குவதற்கும் வழங்கப்படும் கடன்களில் 50 சதம் மானியமாக வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 1981-82-ல் ரூ. 68.67 லட்சம் மானியமாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டுச் சங்கங்களுக்கும், மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன் பண்ணைகள் அமைக்க வழங்கப்பட்டுள்ளது.

மீனவ மகளிரின் மேம்பாட்டிற்காக திருச்சினாங்குப்பம் (செங்கை மாவட்டம்), கரையூர் தெரு (தஞ்சை மாவட்டம்), தருவைக்குளம் (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 484 அங்கத்தினர்கள் உள்ளனர். இவற்றிற்குச் செயல் முதலீட்டுக் கடனாக (Working capital loan) ரூ.70,000 வழங்கப்பட்டுள்ளது.

## மீனவர் வீட்டு வசதித் திட்டம்

மீனவர்களுக்கு வசதிகள் மிகுந்த நவீன வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் இதற்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்படுகிறது. மொத்தம் 9,931 வீடுகள் கட்டுவதற்கு 1981-82 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மீனவர் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்

மீனவர் கிராமங்கள் மீன் விற்பனையாகும் நகர்ப் புறங்களிலிருந்து தொலைவில் இருப்பதால் பிடிபட்ட மீன்களைத் துரிதமாக எடுத்துச் செல்ல நல்ல சாலைகள் தேவைப்படுகின்றன.

ஆகவே 52 இணைப்புச்சாலைகள் ஏற்படுத்த ரூ 130.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 24 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 52 இணைப்புச் சாலைகளின் மொத்த நீளம் 98.25 கிலோ மீட்டர்களாகும்.

**தண்ணீர் வசதி**

தமிழ்நாடு தண்ணீர் மற்றும் வடிகால் வாரியத்தின் உதவியுடன் குடிதண்ணீர் வசதியற்ற கிராமங்கள் கணக்கெடுக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

**மீனவர் துயர் துடைப்பு நிவாரண நிதி**

மீனவர்கள் தொழில் செய்யும் பொழுது கடலில் இறக்க நேரிட்டால் இறந்தவரின் குடும்பம் பிழைக்க வழிவகை செய்யும் வகையில் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 வழங்கப்படுகிறது. இத்தொகையில் ரூ. 2,000 உடனடியாக ஒரே தவணையில் வழங்கப்படுகிறது. மீதி ரூ. 3,000, 30 மாதங்களில் மாதம் ரூ. 100 வீதம் வழங்கப்படுகிறது. 1981-82-ல் ரூ. 1,55,000 இதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 7,39,113.05 வழங்கப்பட்டுள்ளது. 138 குடும்பங்கள் இதனால் பலனடைந்துள்ளன.

**மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஆண்டுதோறும் மழை மற்றும் பலத்த காற்றுக் காலமாகிய மூன்று மாதங்களுக்கு முறையான வருவாய் கிடைப்பதில்லை. புயல் காலங்களில் மீன்பிடிப்புக்குச் செல்ல முடியாததாலோ கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் பருவங்களில் மீன் பிடிப்பு இல்லாததாலோ இந்த நிலை ஏற்படுகிறது. 1982 ஜூன் முதல் செயல் படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், முறையாக வருவாய் கிடைக்கும் 9 மாதங்களிலும் மாதந்தோறும் ரூ. 10 வீதம் செலுத்தும் மீனவர்களுக்குத் தலா ரூ. 90 வீதம் அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும். இவ்வாறு சேமிக்கப்படும் ரூ. 180-ம் (ரூ. 90 + ரூ.90) முறையான வருவாயில்லாத மூன்று மாதங்களுக்கும் ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் ரூ. 60 வீதம் வழங்கப்படும். மீனவர்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாதந்தோறும் ரூ.10 வீதம் வசூலிக்கப்பட்டு இத்தொகை மீன்துறை உதவி இயக்குநர் இயக்கும் தனி நிதியின் கீழ் இருப்பு செய்யப்படும். மாதந்தோறும் தரப்படும் ரூ. 60 மீன்


மீனவர் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டி விளக்கு

துறை அலுவலர்கள் மூலம் வழங்கப்படும். இந்த ஏற்பாடு மீனவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமானதோர் திட்டமென்பதுடன் மீனவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்தும்.

**மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டம்**

மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சிறிய அளவில் மீன்பிடி தொழில் புரியும் மீனவர்களுக்குக் கூடுதல் நிதி உதவி கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50 சதவீதம் மானியமும், தனிப்பட்ட மீனவர்களுக்கு 33 1/3 சதவீதம் மானியமும் இயந்திரப் படகுகள், கண்ணாடி இழைப்படகுகள், நாட்டுப் படகுகள் மற்றும் மீன்பிடி விற்பனை சாதனங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைப்பகுதிகளில் உள்ள 25 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் அங்கத்தினர்களுக்கும் 55 நாட்டுப் படகுகள், 100 கட்டு மரங்கள், 47 கண்ணாடி இழைப் படகுகள் மற்றும் போதிய மீன் பிடிவலைகள் குளிர் பதனப் பெட்டிகள், மீன் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் இன்னும் பிற சாதனங்கள் வழங்க ஏதுவாக இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மாநில அளவான இணைப்புக் குழு, அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் ரூ. 80.54 இலட்சம் செலவில் இத்திட்டத்தை அமல் படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டச் செலவில் ரூ. 42.43 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, ஏழு மாவட்டங்களில் உள்ள 25 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் பயனடைவர்.

இதைத் தவிர மாநில அளவான இணைப்புக் குழு, கீழ்க்கண்ட திட்டங்களுக்கும் நிதி உதவி அளிப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளன.

மீன் விற்பனைக்கான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 21.65 இலட்சத் திட்டம். மீனவர்களுக்கு, இத்திட்டத்தினால், அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு, நியாய விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

மதுரை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மீன் முட்டை உற்பத்திப் பண்ணைகள் அமைக்க ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு.

மீனவர் கிராமங்களை, நகரங்கள், மற்றும் சந்தை உள்ள இடங்களுடன் இணைக்கும் வகையில் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 1.30 கோடி மதிப்புற்ற 52 சாலைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக, 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 35 லட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழும், தேசிய கிராமிய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழும் மீனவர் கிராமங்களை இணைத்துச் சாலைகளை அமைக்க, மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் மீனவர்கள் கடலில் மூழ்கியிருக்கும் பாறைகளினின்றும் விலகி நன்முறையில் கரையை அடைய மீனவர் கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும்திட்டத்தை



அரசு செயற்படுத்தி வருகிறது. 1980-81-ஆம் ஆண்டில் அத்தகைய ஒன்பது விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1981-82-ஆம் ஆண்டில் மேலும் 10 கிராமங்களில் அத்தகைய விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1982-83-ஆம் ஆண்டில் 11 கிராமங்களில் அத்தகைய விளக்குகள் அமைக்கப்படும்.

**படகுகளும் வலைகளும் வழங்குதல்**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டுமரங்கள், நாட்டுப் படகுகள் - இவற்றின் மீன்பிடி திறனை அதிகரித்து மீனவர் வருமானத்தைப் பெருக்க வெளிப்புறம் (Out board) மற்றும் உள்புறம் (In board) பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இருபது வெளிப்புற மோட்டார்களும் 40 கண்ணாடி இழை கொண்டு வலுவூட்டப் பெற்ற பிளாஸ்டிக் படகுகளும் மீனவர்களுக்கும் 137 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவை நிதி உதவியில் 20 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. இதே போல், 1982-83லும் ரூ. 8 லட்ச மதிப்புள்ள, நைலான் வலைகள், கட்டுமரம், மற்றும் நாட்டுப்படகு மீனவர்களுக்கு 20 சதம் மானியத்தில் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

**மீனவர்களுக்குப் பயிற்சி நிலையங்கள்**

சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் மீனவர்களுக்கு நவீன மீன்பிடிப்பு முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலம் ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை பத்து மாதங்களாகும். ஒரு வருடத்தில் மண்டபம் பயிற்சி நிலையத்திலிருந்து 60 மீனவர்களுக்கும் மற்ற நிலையங்களில் 50 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 75 பயிற்சிக்கால ஊதியமாக வழங்கப்படுகிறது. இதுவரை 41869 மீனவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கடலுக்குச் சென்று மீன்பிடித்து அனுபவம் உள்ள 18 லிருந்து 35 வயதுக்குள் உள்ள மீனவர்கள் இப்பயிற்சியில் சேரத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். தமிழ்நாடு மீனவர் பயிற்சி நிலையம் வழங்கும் இயந்திரப் படகுகளில் இந்தப் பயிற்சியில் தேறிய மீனவர் ஒருவரை வேலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதால் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டுகிறது.

இத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகள் பாதி விலையில் (50 சதம் மானியத்தில்) வழங்கப்படுகின்றன. மேலும் குளங்களையும், நாற்றங்கால்களையும் பராமரிக்கவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1980-81 வரை இத்திட்டத்திற்காக ரூ 3 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் அதாவது செங்கை, தஞ்சை, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்தம் 100 ஹெக்டேர் அளவிற்கு, சிறிய குளங்களை ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் தீவிர மீன் வளர்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கான செலவில் 75 சதம் அரசைச் சார்ந்ததாகும். 25 சதம் ஊராட்சி ஒன்றியங்களால் செலவிடப்படும்.

பெரிய மற்றும் சிறிய பாசன நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் உரிமை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகை மூலம் ஐந்து வருடங்களுக்கு அளிக்கப்படுகிறது. குத்தகைத் தொகையை கடந்த மூன்று வருட சராசரியை விட 20 சதம் கூடுதலாக வைத்து நிர்ணயிக்கப்படுகிறது.

**புயல் காலங்களில் உதவி**

புயல் காலங்களில் புயல் வருவதை மீனவர்கள் முன்கூட்டியே தெரிந்து கொள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இந்திய செஞ்சிலுவை நிறுவனத்தாரின் உதவியுடன் கடலோரப் பகுதிகளில் புயல் புகலிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்**

மீன்பிடி துறைமுகங்கள், மீன்பிடி தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானவை. சென்னையில் ரூ. 11 கோடி செலவில் மீன் பிடி துறைமுகம் கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ளது. இத்துறைமுகத்தில் 500 மீன் பிடிபடகுகளும் 50 ஆழ் கடல் மீன் பிடிக் கலன்களும் நிறுத்த வசதிகள் செய்து தரப்படும். மேலும் தஞ்சையில் உள்ள கோடிக்கரை என்னுமிடத்தில் படகுகள் நிறுத்தி வைக்க ரூ. 14 லட்சம் செலவில் இறக்கு மேடைகள் அமைக்கும் வேலை துவக்க நிலையிலுள்ளது. கன்னியாகுமரியிலுள்ள சின்னமுட்டம் என்ற இடத்தில் ரூ. 234 லட்சம் செலவில் துறைமுகம் கட்டப்படும். இதைத் தவிர வாலிநோக்கம் ரூ. 77 இலட்சம் செலவிலும் மேலும் தஞ்சையில் பழையாறு மற்றும் இராமநாதபுரத்தில் தொண்டியிலும், புதுக்கோட்டையில் கோட்டைப் பட்டினத்திலும் இறக்கு மேடைகள் அமைக்கப்படும்.



எழுபதாம் ஆண்டுகளுக்கிடைவரை, 25 சதம் முதல் 75 சதம் அளவுக்கு விட்டு விட்டு மின்வெட்டை அனுபவித்ததன் விளைவாகத் த[redacted]ட்டின் தொழில் வளர்ச்சி பாதிக்கப் பட்டது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மின்சாரமே அடிப்படைத் தேவை என்பதை ஏற்று, மாநில அரசு மின்சார வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் ஈந்து, மாநில அரசின் வளர்ச்சித் திட்டத்தில் 35 சதம் அளவுக்கும் அதிகமான தொகையை மின் துறை வளர்ச்சிக்கு ஒதுக்கியது. 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மின்துறை வளர்ச்சிக்கென மொத்தம் 1230 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 572.3 கோடி ரூபாய் மின் உற்பத்தித் திட்டங்களுக்கும், 325.0 கோடி ரூபாய் மின் செலுத்துகை - மின் பகிர்வுத் திட்டங்களுக்கும், 115.0 கோடி ரூபாய் ஊரக மின்மயமாக்குத் திட்டத்திற்கும் ஆகும். 1982-83-ஆம் ஆண்டுக்கான மின் துறை முதலீட்டுச் செலவு கீழே பிரித்துக் காட்டியுள்ளபடி 220 கோடி ரூபாயாகும்.

| | | (ரூபாய் கோடி) |
|---|---|---|
| மின் உற்பத்திக்காக | ... | 126.5 |
| மின் செலுத்துகை— மின் பகிர்வுக்கென | ... | 63.5 |
| ஊரக மின்மயமாக்கத்திற்கென | ... | 29.0 |
| இதர வகைகளுக்கென | ... | 1.0 |
| மொத்தம் | ... | 220.0 |

**மின் வளர்ச்சித் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு:**

1975-76-ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாயாக இருந்த மின்துறைக்கான முதலீட்டுச் செலவு, 70-ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கத் தொடங்கி, 1981-82-ஆம் ஆண்டில் 167 கோடி ரூபாய் அளவுக்கும், 1982-83-ஆம் ஆண்டில் 220 கோடி ரூபாய் அளவுக்கும் வளர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கீழே குறிக்கப்பட்டுள்ள அட்டவணையில் இது ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது:

4-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சராசரி :

| | | கோடி. |
|---|---|---|
| 1969—74 (சராசரி) | ... | 42.8 |
| 1974—75 முதல் 1976—77 வரை (சராசரி) | ... | 54.13 |
| 1977—78 முதல் 1978—79 வரை [சராசரி) | ... | 106.56 |
| 1979—80-ஆம் ஆண்டில் | ... | 152.00 |
| 1980—81-ஆம் ஆண்டில் | ... | 160.94 |
| 1981—82-ஆம் ஆண்டில் | ... | 167.06 |

**என்றுமே அதிகரித்து வரும் உச்ச நேரத் தேவை அளவும் தினசரித் தேவையளவும்**

10-12-81 அன்று உச்ச நேரத் தேவையளவு எப்பொழுதுமில்லா உயர் அளவான 2101 மெகாவாட்டை எட்டியது. இதேபோல் தினசரிப் பயனீட்டின் அதிக அளவும் 38.548 மில்லியன் யூனிட்டை 23-1-82 அன்று எட்டியது.

**நிறுவு திறனை அதிகரிக்கும் முயற்சிகள்**

31.3.1979 இறுதியில் 2509 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் நிறுவு திறன், தற்பொழுது 3139 மெகா வாட் அளவுக்கு உயர்ந்துள்ளது. 210 மெகாவாட் கொண்ட மூன்று அனல் மின் உற்பத்தி நிலையங்கள் தூத்துக்குடியில் செயலுக்குக் கொணரப்பட்டதே இந்த உயர்வுக்குக் காரணம். குறித்த காலத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டம் செயலாக்கி வழங்கப்பட்டது தமிழ்நாட்டின் மின்துறை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கதாகும்.

**நிறைவேறி வரும் திட்டங்கள்**

மாநிலத்தின் மின் உற்பத்தியளவை அதிகரிக்கப் பல புதிய திட்டங்கள் அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை கீழ் மேட்டூர் புனல் மின் திட்டமும், மேட்டூர் அனல் மின் திட்டமும் ஆகும். நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களின் விவரங்களைக் கீழே காணலாம்:

| | | செயலுக்குக் கொண்டு வர நிர்ணயிக்கப்பட்டுள்ள கால இலக்கு |
|---|---|---|
| அ. மேட்டூர் அனல் மின் திட்டம் | 420 மெ.வா. | 1985-86 |
| ஆ. சேர்வலாறு புனல் மின் திட்டம் | 20 மெ.வா. | 1983-84 |
| இ. காடம்பாறை நீரேற்று புனல் மின் திட்டம் | 400 மெ.வா. | 1983-84 |
| ஈ. குந்தா 5-ஆவது மின் நிலையத்தில் 2வது பிரிவு | 20 மெ.வா. | 1984-85 |
| உ. கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் | 120 மெ.வா. | 1985-86 |

**புதிய அனல் மின் திட்டங்கள்**

மாநிலத்தை மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதாக ஆக்க வேண்டும் என்ற நோக்கோடு புதிய அனல் மின் திட்டங்களும் ஏற்கெனவே உள்ள அனல் மின் நிலையங்களை விரிவாக்குவதற்கான திட்டங்களும் தீட்டப்படுகின்றன. தமிழ்நாடு மின்சார வாரியம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனல் மின் திட்டங்களைப் பரிந்துரை செய்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| வடசென்னை அனல் மின் திட்டம் | 1050 மெ.வா. | ரூ 614.65 | கோடிகளில் |
| தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம் | 710 மெ.வா. | ரூ 410.77 | „ |
| மேட்டூர் அனல் மின் நிலைய விரிவாக்கம் | 420 மெ.வா. | ரூ 215.70 | „ |
| கியாஸ் சுழலித் திட்டம் | 300 மெ.வா. | ரூ 117.00 | „ |
| | 2480 மெ.வா. | ரூ 1359.12 | „ |

மேற்கூறிய திட்டங்களுக்கான அறிக்கை இந்திய அரசினருக்கு மிகக் குறுகிய கால அளவில் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும். இவற்றிற்கு விரைவில் அனுமதி பெற தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசினரின் தீவிர முயற்சிகள் காரணமாக மேட்டூர், அனல் மின் நிலைய விரிவாக்கத்திற்கு மத்திய மின்சார அதிகார மன்றத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. மற்ற இரண்டு திட்டங்களுக்கான அனுமதியும் கூட கிடைத்துவிடும் என்று அரசு நம்பிக்கையோடு காத்திருக்கிறது. இவை 1990-ஆம் ஆண்டுவாக்கில் பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்றும், அவ்வாண்டுகளில் மின் தேவையின் அளவை ஈடுகட்டக் கூடிய அளவிற்கு மின் உற்பத்தியானது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்கள் என்பது,படிப்படியாக நீண்ட காலத் தேவையைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டியதாகும். இல்லையெனில், தமிழ்நாடு மின் பற்றாக்குறையைச் சந்திக்கவேண்டியிருக்கும். அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகள் காரணமாக, 70-ஆம் ஆண்டுகளில் தொடக்கத்தில் இருந்த மின் பற்றாக்குறை நிலையானது படிப்படியாக அகற்றப்பட்டு வருவதும், அடுத்த வரவுள்ள பத்தாண்டுகளில் இறுதியில் தமிழ்நாடு மின் தேவையைப் பொறுத்தவரை தன்னிறைவு பெறக்கூடும் என்பதும் பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

நலிவுற்ற பிரிவினரும் மின் வசதி பெறுகின்றனர்.

சாதாரண மக்களுக்கும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கும் மின்சக்தியின் பயன் சென்றடைய வேண்டும் என்பதில் மாநில அரசு தீவிரமாயுள்ளது.

அரசினரின் ஊரக மின்மயமாக்குத் திட்டத்தில் தீவிர பங்கு வகிப்பது குடிசை வாழ்வோர்க்கு மின் வசதி அளிப்பதே. கிராமப்புறங்களிலுள்ள குடிசைகளுக்கு 40 வாட்டு





டன் கூடிய மின்சார. பல்பு பொருத்தப்பட்ட மின் இணைப்பை வழங்கும் திட்டம் ஒன்றை அரசு தொடங்கியுள்ளது. மாதமொன்றுக்கு மிகக்குறைந்தமின் கட்டணமாகரூ.2.50 மட்டுமே ஒவ்வொரு குடிசைவாசியிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. 1979-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம் மிகத் தீவிர மாகியது. இன்று கிட்டத்தட்ட 4.6. இலட்சம் குடிசைவாசிகளால் இதன் பயன் நுகரப் படுகின்றது. ஆண்டுதோறும் மின் இணைப்பு வழங்கப்பட்ட. குடிசைகளின் எண்ணிக்கையைக் கீழே காணலாம்:

| ஆண்டுகள் | மின்னிணைப்பு வழங்கப் பட்ட குடிசைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1979-80 | 1,67,297 |
| 1980-81 | 1,28,153 |
| 1981-82 | 1,54,662 |
| 1982-83 (4/82லிலும் 5/82லிலும்) | 12,629 |
| மொத்தம். | 4,62,741 |

**ஆதிதிராவிடர், குடியிருப்புகள் அனைத்திற்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளன.**

இன்று தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் (25,872) மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி தமிழ்நாட்டிற்குப் பெருமை அளிக்கக் கூடியதாகும். இத்தகைய பெருமையைப் பெற்றுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.

**பெருமளவிலான விசையேற்றங்கள் மின்னிணைப்புப் பெற்றுள்ளன.**

புதிய விவசாய விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவதைத் தமிழ்நாடு மின்சார வாரியம் தீவிரப் படுத்தியதன் விளைவாகக் கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கீழே காணலாம்:

| ஆண்டுகள் | மின்னிணைப்பு பெற்ற விசையேற்றங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1980-81 | 31,935 |
| 1981-82 | 26,358 |

1982-ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி அன்றுள்ள நிலவரப்படி ஏறக்குறைய 9.5 இலட்சம் விவசாய விசையேற்றங்கள் மின்சாரத்தினால் இயங்கி வருகின்றன. மின் இணைப்புக் கோரிக் காத்துக் கிடக்கும் விண்ணப்பங்கள் எல்லாவற்றிற்கும் மின்சாரம் வழங்க, 31.3.1976க்கு முன்பு வந்துள்ள எல்லா இணைப்புக்களுக்கும் மின்சாரம் வழங்குவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. 31.3.1976க்கு முன்பு வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை சுமார் 55,445 ஆகும். இவை எல்லாவற்றிற்கும் 31.3.1983க்கு முன்பு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுவிடும்.

**தன்னிறைவுத் திட்டத்தில் அடைந்துள்ள முன்னேற்றம்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் சுமார் 1523 மேல்நிலை நீர்த்தொட்டிகளுக்கும் தரை நிலை நீர்த் தொட்டிகளுக்கும் மின் இணைப்பு வழங்கியுள்ளது.

**விவசாயிகளுக்கு அதிகச் சலுகைகள்.**

விவசாயிகளுக்கான மின் கட்டணம், நாட்டிலேயே மிகக் குறைவானதாகும். 1977 ஆம் ஆண்டு ஜூலை முதல் சிறு விவசாயிகளுக்கான மின் கட்டணம் 16 காசுகளிலிருந்து 14 காசுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1980- ஆம் ஆண்டு ஜூன் முதல் இது சிறிய விவசாயிகளுக்கு 12 காசுகளாகவும், மற்றவர்களுக்கு 14 காசுகளாகவும் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள் முதல் விவசாய இணைப்புகளுக்கு மின் அளவி வாடகைக் கட்டணம் நான்கு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகக் குறைக்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் விவசாயத்திற்கான மின் கட்டண வீதம் எல்லா இனங்களையும் உள்ளடக்கியதாகச் சிறிய விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 காசுகளாகவும், மற்றவர்களுக்கு 15 காசுகளாகவும் திருத்தப்பட்டபோது, இந்த மின் அளவி வாடகைக் கட்டணம் முற்றிலும் நீக்கப்பட்டது.

நிறுவுதிறன் 3000 மெ.வா. அளவைக் கடந்து விட்டது. மின்துறை வளர்ச்சிக்கான முதலீட்டளவும் கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது, மின் உற்பத்தியைக் கூடுதலாக்கப் பல்வேறு புதிய திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் 2400 மெ.வா. அளவிற்கு ஏற்கனவே உள்ள அனல் மின் நிலையங்களை விரிவுபடுத்தவும், புதிய அனல் மின் நிலையங்களை அமைக்கவும் இந்திய அரசினருக்குப் பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்கும் மின்சாரத்தின் பயன் சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடு குடிசைகளுக்கு மின் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்புகள் எல்லாவற்றிற்கும் மின்வசதியளிக்கப்பட்டுள்ளன. புதிய விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு வழங்குவது விரைவுபடுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மின் நுகர்வோரை மன நிறைவு கொள்ள வைக்கப் பல நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. புதிய மாற்று மின்விசை ஆதாரங்களைக் கண்டுபிடிக்கவும், ஏற்கெனவே உள்ள மின்சாரத்தைச் சேமிக்கவும், திறம்படப் பயன்படுத்தவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு, மின் வளர்ச்சியில் தன்னிறைவு நிலையை எய்த எல்லா வகையிலும் தயாராக்கப்பட்டுள்ளது.

# வெண்மைப் புரட்சி

உலக நாடுகளின்வள வாழ்வை அளவிட வேண்டுமானால் அந்த நாட்டின் தொழில் புரட்சியும், வேளாண்மைப் புரட்சியும் தான் அடிப்படையாக விளங்கும். தமிழகத்தின் வளவாழ்விலே வேளாண்மைப் புரட்சியிலே பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும்தான் மிக முக்கியமாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சியின் அடித்தளமாக விளங்குவது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாகும்.



1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் உதயமானது. தமிழக அரசின் கொள்கை அடிப்படையில் தமிழ்நாட்டில் பால் வளத்தை மேம்பாடு அடையச் செய்ய கிராமப் புறத்தில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கமாகவும், மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களாகவும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் இணையமாகவும் மொத்தத்தில் மூன்று அடுக்கு அமைப்புகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இணையத்தின் முக்கிய பணிகள்:**

இணையம், பால் வளத்தை அதிகரித்துப் பால் பண்ணைகளையும் மேம்பாடு அடையச் செய்து சிறப்பாகப் பணிபுரிகின்றது. மேலும் பாலைச் சேகரிப்பதற்கும், பல ஊர்களுக்கு ஏற்றிச் செல்வதற்கும்,விற்பனை செய்வதற்கும் புதிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றது. நகர்ப்புற மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பாலை வழங்குவதும் இணையத்தின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்று.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு 19 குளிர் பதன நிலையங்களில் குளிர வைக்கப்பட்ட பால் இவ்விணையத்தின் பால் சேகரிக்கும் வண்டிகளின் மூலமாக மாதவரம், அம்பத்தூர், மதுரை ஆகிய பால் பண்ணைகளுக்கு அனுப்பப்படுகிறது. குளிர் படுத்தப்பட்ட பாலில் இருந்து ஒரு பகுதியினை ரயில் தொட்டிகளின் மூலமாகவும் ஈரோட்டிலிருந்து அம்பத்தூர் பால் பண்ணைக்குத் தருவிக்கப்படுகிறது. இப்படித் தருவிக்கப்பட்ட பாலுடன் ஆடை நீக்கிய பால் பொடியும் (Skim Milk Powder) வெண்ணெய் கொழுப்புச் சத்தும் (Butter Oil) கலந்து, தரப்படுத்தப்பட்ட பாலாக ( Standerdised Milk ) (4.5°/. கொழுப்புச் சத்து 8.5./° மற்றச் சத்து நிறைந்த) பாலாக மாற்றிச் சென்னையில் உள்ள பால் விற்பனை நிலையங்கள் (டிப்போக்கள், பாலகங்கள்) மூலமாக விற்பனை செய்யப்படு



பால் விற்பனை நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில்



கிறது. இதைப்போன்று மதுரை மாநகரிலும் விற்பனை செய்யப் படுகிறது. மற்றும் சென்னையில் மொத்த விற்பனைப் பிரிவுகள் மூலமாகவும் தானியங்கி இயந்திரங்கள் மூலமாகவும் (Automatic Vending Machine) பால் விநியோகம் செய்யப்படுகிறது.

**கால்நடைத் தீவன உற்பத்தி:**

மாதவரம் பால் பண்ணையில் அமைக்கப்பட்டிருக்கும் கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையும், வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூரில் அமைந்துள்ள கால்நடைத் தீவன ஆலையும், ஒவ்வொன்றும் ஒரு மணிக்கு 4 முதல் 5 டன் உர்பத்தித் திறன் உள்ளதாக அமைந்துள்ளது. தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரி 1500 டன் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது.

1981ல் 1.2.1981 முதல் 31.12.1981 வரை 16,000 டன்களுக்குக் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. 1982ல் 1.1.82 முதல் 31.12.82 வரை 18,000 டன்கள் உற்பத்தியை எட்டும் என்றும் திட்டமிடப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. ரூ. 10 இலட்சம் செலவில் ஒரு குளிகை வடிவில் (முறுக்கு) தீவனம் தயாரிக்கும் ஆலை (Pellitiser Plant) மாதவரத்தில் நிறுவப்பட்டுச் செயல்பட உள்ளது.

**முதல் பால் பெருக்குத் திட்டம்:**

1981 மார்ச் முடிய முடிவுற்ற முதல் பால் பெருக்குத் திட்டம் அடிப்படை வளர்ச்சிகளுக்காக நிதி உதவி 70 விழுக்காடு கடனாகவும் 30 விழுக்கர்டு மானியமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், அம்பத்தூர் புதிய பால் பண்ணை தொடங்கப்பட்டது. பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் புதிய பால் பண்ணை தொடங்கப்பட்டது, மாதவரம், மதுரை பால் பண்ணைகள் விரிவு படுத்தப்பட்டன. ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் பால் பவுடர் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பட்டன.



சங்கிராண்டம் பாளையம், சத்தியமங்கலம், சின்னசேலம், ஆம்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுச் செயலாக்கப் பணிகள் ஆரம்பமாகிவிட்டன. திருவண்ணாமலையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் பணி தொடங்க இருக்கிறது.

முதல் பால் பெருக்குத் திட்டத்தினால் 1972ல் பால் கொள்முதல்



நாளொன்றுக்கு 46,000 லிட்டராக இருந்தது 1982ல் 4 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. அதேபோன்று பால் விற்பனை நாளொன்றுக்கு 1972ல் 81,000 லிட்டராக இருந்தது 1982ல் 3,60,000 லிட்டராக உயர்ந்துள்ளது. 1972ல் 4,239 விவசாயிகள் பயனடைந்திருந்தார்கள். ஆனால் 1982ல் 3 இலட்சம் விவசாயிகள் முதல் பால் பெருக்குத் திட்டப் பணியில் ஈடுபட்டுப் பயன்பெற்றார்கள்.

முதல் பால் பெருக்குத் திட்டத்திற்கு ரூ. 16.83கோடி முடிவான நிதி ஒதுக்கப்பட்டது. இந்தியப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் 1981 டிசம்பர் மாதம் வரை கொடுத்துள்ள நிதி 15.47கோடியாகும். இதில் 30-11-'81 முடிய உபயோகப் படுத்தப்பட்ட தொகை ரூ. 15.21 கோடியாகும்.

**2-வது பால் பெருக்குத்திட்டம்:**

தமிழ்நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக முதல் பால் பெருக்குத் திட்டத்தினைத் தொடர்ந்து 2ஆம் பால் பெருக்குத் திட்டத்திற்குச் சுமார் ரூ.42 கோடி மதிப்பீட்டில் செயல் வடிவம் கொடுத்து நிறைவேற்றும் பணியில் 9 மாவட்டங்களில் படிப்படியாகப் பால் உற்பத்தி





யாளர்கள் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1984-85 ஆம் ஆண்டுக்குள் மொத்தம் 4,550 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் அமைக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் கோயமுத்தூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் புதிய பால் பண்ணைகள் அமையும். ஈரோடு, சேலம், வேலூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய பால் பண்ணைகள் விரிவு படுத்தப்படும். மதுரையில் கால் நடைத்தீவன ஆலை ஒன்று நிறுவப்படும்.

பால் கொள்முதலுக்காக 13 இலட்சம் கறவை மாடுகளைச் சேர்க்கவும், இதில் 48 விழுக்காடு செயற்கை முறைக் கருத்தரித்தல் திட்டத்தின்கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் முடிவில் நாள் ஒன்றுக்குப் பால் உற்பத்தி 34.8 இலட்சம் லிட்டராக அதிகரிக்கும் பொழுது பால் கொள்முதல் நாளொன்றுக்குச் சுமார் 10.90 இலட்சம் லிட்டராக இருக்கும். முதல் பால் பெருக்குத் திட்டத்தினால் 3 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்றார்கள் என்றால் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தினால் 1986-ல், 13 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள். 1982-ல் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தினால் 1986-ல் 10.9 இலட்சம் லிட்டராக உயரும். அதேபோன்று 1982ல் பால் விற்பனை நாளொன்றுக்கு 3.6 இலட்சம் லிட்டரிலிருந்து 1986-ல் 10.8 இலட்சம் லிட்டராக உயரும். பால் விற்பனை எல்லா முக்கிய நகரங்களிலும் செயல்படுத்தப்படும்.

**1982-83ஆம் ஆண்டின் சிறப்புத் திட்டங்கள்:**

1982-83ஆம் ஆண்டில் திருநெல்வேலி, திருச்சி ஆகிய இடங்களில் புதிய பால் பண்ணைகளுக்கான ஆரம்ப வேலைகள் தொடங்கும். செங்கோட்டைப் பகுதி, நாங்குநேரிப் பகுதி, புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, சேத்தியாத் தோப்பு முதலிய



இடங்களில் பால் குளிரூட்டு நிலையங்கள் அமைக்கப்படும்.

கால்நடைகளின் பாதுகாப்பிற்குத் தமிழ்நாட்டில் புதிதாகக் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்படுகின்றன. பால் உற்பத்தியினைப் பெருக்கிடவும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும் புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 500 அமைக்கப்படும். தஞ்சையிலும், திருச்சியிலும் மக்களுக்கு, பிளாஸ்டிக் பைகளில் தரமான பால் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**கிருஷ்ணகிரியில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை:**

தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தக் கூடிய திறன் கொண்ட உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணையை வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிகள் திட்டத்தின்கீழ் அமைப்பதற்கான ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்குச் சுமார் 2.75 கோடி ரூபாய் செலவாகும்.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், விவசாயிகளை ஊக்குவிப்பதற்காகவும், 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாலின் கொள்முதல் விலை ஒரு லிட்டருக்கு 42 காசு வரை கணிசமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

**சென்னை நகரில் பால்விநியோகம்:**

சென்னை நகரில் தற்பொது ஒரு நாளைக்கு 2.97 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. நாளொன்றுக்கு 2.5 டன் வெண்ணெய் மற்றும் நெய் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை நகரில் தற்போது பால் டெப்போக்கள் 448, பால் பொருட்கள் விற்பனை நிலையங்கள் (பார்லர்கள்)48. தானியங்கிப் பால் வழங்கும் நிலையங்கள் 22 செயல்பட்டு வருகின்றன.

சென்னை நகரில் பால் விநியோக முறையை அபிவிருத்தி செய்வதற்காகவும் பால் விநியோக முறையில் உள்ள முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காகவும் சென்னை மாநகர் முழுவதும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டு அவைகளில் இதுவரை 9 சங்கங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன.

**மதுரை நகரில் பால் விநியோகம்:**

மதுரை நகரில் பால் விற்பனை, 122 டிப்போக்கள் மூலமும் பால், பால் பொருட்கள் 13 விற்பனை நிலையங்கள் (பார்லர்கள்) மூலமும் செயல்பட்டு வருகின்றது.

மதுரையில் நாளொன்றுக்கு 60 ஆயிரம் லிட்டர் பாலும் 1.7டன் வெண்ணெய் மற்றும் நெய்யும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறாகத் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் விவசாயிகள், நகர்ப்புற நுகர்வோர்கள் ஆகிய சாரார்களுக்கும் சீரிய முறையில் நற்பணியாற்றி வருகிறது.





# வறட்சி நிவாரணப் பணிகள்

மா நிலத்தில் 1980-81-ஆம் ஆண்
் தென்மேற்குப் பருவ மழையும், வட
க்குப் பருவ மழையும் பொய்த்து விட்ட
ரணத்தால் சென்னை, நீலகிரி, கோயம்
துார் மாவட்டங்கள் தவிர 13 மாவட்
்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன.
ாமப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டால்.
ிர்கள் நீரின்றிச் சாவியாயின. உழவுத்
ாழிலாளர்கள் வேலையின்றி வாடினர்.
்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்டு
ால்லைக்கு ஆளான மக்களின் துயர்
டைக்க 1980 நவம்பர் மாதத்திலிருந்து
்லா நிவாரணப் பணிகளையும் அரசு
ற்கொள்ள வேண்டியிருந்தது.

வறட்சி நிவாரணப் பணிகளைச்
யல்படுத்தும் விதம் பற்றி அரசுச் செய
ளர்களும் துறைத் தலைவர்களும் ஒன்று
ி விவாதித்து முடிவு செய்தனர். இக்
கூட்டம் 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் நாள் அன்று நடைபெற்றது. இதற்குத் தலைமைச் செயலாளர் தலைமை தாங்கினார். ஏற்கெனவே உள்ள குடிநீர் வாயில்களைப் பராமரித்தல், கிணறுகளில் விசையேற்றம் நிறுவுதல், இருக்கின்ற துளையிடு கருவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல், குடிநீர் பம்புகள் பராமரிக்கக் கூடுதலாகப் பணியாளர்களை நியமித்தல், வேலையின்றி வாடும் உழவர்களுக்கு வேலை அளிக்கும் பணிகளை நிறைவேற்றுதல், பொது விநியோக முறையின் கீழ், உணவு தானியங்களை வழங்குதல் ஆகியவை குறித்துக்கவனம் செலுத்தப்பட்டது. 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாளிலிருந்து 22-ஆம் நாள்வரை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குச் சென்று அங்கு நிறைவேறி வரும் பல்வேறு பணிகளைப்





பார்வையிட்டார். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ஆம் நாள் அன்று விரிவாக விவாதித்தார்.

துளைக் கிணறுகள் அமைக்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், வேளாண்மைப் பொறியியல் துறையும் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப் பிரிவும் மேற்கொண்டன. துளையிடு கருவிகள், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்டன. அவற்றுடன் நம் மாநிலத்திலிருக்கும் துளையிடு கருவிகளும் இப்பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 7,249 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலத்தடி நீர்ப்பிரிவுச் சோதனை அடிப்படையில் ஏற்கனவே தோண்டியுள்ள 698 துளைக் கிணறுகள் குடிநீர்க்காரியத்திற்காக ஒப்படைக்கப்பட்டன. 19.461 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. பொதுப் பணித்துறை, ஏரிப் படுகைகளில் அல்லது ஏரிகளுக்கருகாமையில் திறந்தவெளிக் கிணறுகள் தோண்டியுள்ளன. நீர் கிடைக்காத பகுதிகளுக்கு லாரிகள், டிராக்டர்கள் மூலமாகவும் நீர் கொண்டு சென்று வழங்கப்பட்டது. இவ்வாறு நீர் கொண்டு செல்லத் தேவைப்படும் உருக்குத் தொட்டிகளைத் தயாரித்து, வாங்கித் தேவையுள்ள பகுதிகளுக்கு வழங்கப்பட்டன. நகராட்சிகள், பேரூராட்சிகளில் நீர் வழங்கு பணிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும், தொடர்ந்து மின்சக்தி வழங்கும் வகையில் நீர் வழங்கும் பணிகளுக்கு மின்சக்தி வழங்கத் தனியாக 50,00,000 ரூபாய் செலவில் மின்கம்பித் தொடர்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் நீர் வழங்கும் ஏற்பாட்டினைச் சீரமைக்க ரூ. 87 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சென்னை நகர் உட்பட வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் வழங்க அரசு மொத்தம் ரூ. 1,960 இலட்சம் செலவு அனுமதித்துள்ளது.

வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளைப் பொறுத்த வரையில் 50 ஏக்கருக்கு மேலாக உள்ள ஆயக்கட்டு உள்ள ஏரிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் பணியைப்பொதுப் பணித் துறை நிறைவேற்றி உள்ளது. 50 ஏக்கருக்கும் குறைவாக உள்ள ஆயக்கட்டிற்குப் பாசனம் அளிக்கும் சிறிய ஏரிகளைச் சீரமைக்கும் பணியையும் புதிய சாலைகள் அமைத்தல், கிராமச் சாலைகள் சீரமைத்தல் பணிகளையும் நெடுஞ்சாலை - நிவாரணப் பணிகள் துறை நிறைவேற்றியது. ஏனைய சாலைகளைச் செப்பனிடும் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும், நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை நிறைவேற்றியுள்ளது. குளங்கள், ஊருணிகள் ஆகியவற்றைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் பணியையும் நெடுஞ்சாலை நிவாரணப் பணிகள் துறை நிறைவேற்றியுள்ளது. நீர் சேகரிப்புக்குட்டைகள் அமைத்தல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறையும், பொதுப் பணித் துறையும் (நீர்ப் பாசனம்) நிறைவேற்றியுள்ளன. காடு வளர்ப்புத் திட்டங்களை வனத் துறை நிறைவேற்றியுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பல பணிகளுக்கு மொத்தம் ரூ. 2,928 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீர் வழங்கு பணிகளுக்கும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கும் மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியையும் பணிகளின் முன்னேற்றத்தையும் காட்டும் இரு விவர அறிக்கைகள் வருமாறு :



(1) மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீட்டைக் காட்டும் விவர அறிக்கை.

| மாவட்டத்தின் பெயர் | | நீர் வழக்கு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு | வேலை வாய்ப்பு அளிக்கும் பணி களுக்கு நிதி ஒதுக்கீடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் | இலட்சத்தில்) |
| வட ஆர்க்காடு | ... | 314.85 | 520.31 | 835.16 |
| தென் ஆர்க்காடு | ... | 185.87 | 291.07 | 476.94 |
| செங்கற்பட்டு | ... | 85.00 | 198.86 | 283.86 |
| திருச்சிராப்பள்ளி | ... | 183.46 | 166.18 | 349.64 |
| மதுரை | ... | 140.53 | 186.91 | 327.44 |
| தஞ்சாவூர் | ... | 40.31 | 64.90 | 105.21 |
| இராமநாதபுரம் | ... | 201.09 | 480.20 | 681.29 |
| திருநெல்வேலி | ... | 73.98 | 70.09 | 144.07 |
| சேலம் | ... | 214.04 | 188.34 | 402.38 |
| தருமபுரி | ... | 139.41 | 281.58 | 420.99 |
| புதுக்கோட்டை | ... | 150.14 | 272.59 | 422.73 |
| பெரியார் | ... | 70.60 | 50.45 | 121.05 |
| கன்னியாகுமரி | ... | 3.47 | 7.00 | 10.47 |
| சென்னை | ... | 87.00 | ... | 87.00 |
| மொத்தம் | ... | 1,889.75 | 2,778.48 | 4,668.23 |
| (1) | | (2) | (3) | (4) |
| தனி மின் கம்பித் தொடர்கள் அமைத்தல் | ... | 50.00 | ... | 50.00 |
| உருக்குத்தொட்டிகள் அமைத்தல் | ... | 20.00 | ... | 20.00 |
| மண்வளப் பாதுகாப்பு | ... | ... | 60.00 | 60.00 |
| காடு வளர்ப்பு | ... | ... | 90.00 | 90.00 |
| மொத்தம் | ... | 1,959.75 | 2,928.48 | 4,888.23 |



(2) நிறைவேற்றப்பட்ட நீர் வழங்குப் பணிகள், தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை :

| மாவட்டத்தின் பெயர் | தோண்டப் பட்ட துளை கிணறுகள் | ஆழப்படுத் தப்பட்ட கிணறுகள் | நிறைவுற்ற பாசனப் பணிகள் | நிறைவுற்ற சாலைப் பணிகள் | நிறைவுற்ற ஊருணிகள், குளங்கள் மேம்பாட்டுப் பணிகள். |
|---|---|---|---|---|---|
| வட ஆர்க்காடு | 1,153 | 6,390 | 2,551 | 1,056 | 490 |
| தென் ஆர்க்காடு | 824 | 1,946 | 1,646 | 444 | 403 |
| செங்கற்பட்டு | 380 | 1,452 | 1,183 | 345 | 516 |
| திருச்சிராப்பள்ளி | 727 | 1,591 | 1,229 | 472 | 550 |
| மதுரை | 690 | 780 | 853 | 327 | 199 |
| தஞ்சாவூர் | 79 | 61 | 303 | 112 | 123 |
| இராமநாதபுரம் | 1,053 | 1,313 | 2,975 | 713 | 695 |
| திருநெல்வேலி | 310 | 297 | 481 | 142 | 137 |
| சேலம் | 608 | 1,392 | 708 | 613 | 111 |
| தருமபுரி | 705 | 2,168 | 1,408 | 624 | 356 |
| புதுக்கோட்டை | 470 | 1,524 | 1,953 | 506 | 897 |
| பெரியார் | 250 | 431 | 187 | 206 | 238 |
| கன்னியாகுமரி | ... | 116 | 71 | 11 | ... |
| மொத்தம் | 7,249 | 19,461 | 15,448 | 5,571 | 4,715 |

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பயிர்களின் நிலைமையைக் கருதிப் பார்த்து 13 மாவட்டங்களில் 1390-ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, தண்ணீர்த் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றைத்தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டது. பயிர் விளைச்சலின் மதிப்பு 50 சதவீதத்திற்குக் குறைவான அதாவது 37காசுக்கு குறைவாக இருக்கும் பகுதிகளில் வயல்களை நேரடியாகச் சென்று பார்த்து அதற்குரிய நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரியைத் தள்ளுபடி செய்த வகையில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 746 இலட்சமாகும். ஒரு கிராமத்தில் உழவர்கள் வைத்திருக்கும் நிலத்தில் 50 சதவீதத்திற்கும் குறையாத நிலப்பரப்பிற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ள இனங்களில் 1390-ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி, அரசுக் கடன் பாக்கிகளையும் வசூலிப்பது 1391-ஆம் விளைச்சல் ஆண்டுக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் கிடைக்காத இடங்களில் வைக்கோல் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. சுமார் 8,100 மெட்ரிக் டன் வைக்கோல் விற்கப்பட்டது. இவற்றை ஏற்றிச் செல்லவும் இறக்கவும் ஆன செலவை அரசு ஏற்றுள்ளது. இந்த வகையில் ரூ. 47 இலட்சத்தை உதவித் தொகையாக அரசு வழங்கி உள்ளது. கால்நடைகளுக்கு ரூ. 17.25 இலட்சம் செலவில் நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. நோயில் வாடும் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க ரூ. 50 இலட்சம் செலவில் மருந்துகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. கால்நடைகள் நீர் அருந்துவதற்குச் சுமார் 600 நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டன.

குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் சுமார் 3,000 நிலையங்களைத் தொடங்கிச் சத்துணவு வழங்க சமூக நலத் துறை மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக ரூ. 155.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. வறட்சிக் காலத்தில் சுமார் 6,000 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் வகை செய்தது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கைம்பெண்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும், முதியோர் உதவித்தொகை பெறுவோர்களுக்கும் 1981 ஜுலை முதல் 1981 செப்டம்பர் வரை மூன்று மாத காலத்திற்கு, வாரத்திற்கொரு முறை கூடுதலாக 1 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. இந்த வகையில் ரூ. 13.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவமனைகளுக்கு மருந்துகளும் நோய்த் தடுப்பு ஊசிகளும் வழங்க ரூ. 150 இலட்சம் அனுமதித்துள்ளது.



வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு உழவர்களுக்கும் ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் விதைகள், பூச்சி கொல்லி மருந்து, இரசாயன உரம் வழங்க அரசு ரூ. 380 இலட்சம் அனுமதித்துள்ளது.

நிவாரணப் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் செயல்படுத்த அரசு இரு குழுக்களை அமைக்க ஆணை பிறப்பித்தது. (1) மாவட்ட அளவிலான குழுவில், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரும்; (2) மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் அமைக்கப்பட்ட குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்பட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். மாவட்ட அளவிலான குழுக்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டு அவற்றிற்கு மாவட்ட ஆட்சியரும் உள்ளூர் பகுதிக் குழுக்களின் கூட்டங்களுக்குக் கோட்டாட்சியரும் தலைமை வகித்தனர்.



மாநில அளவில், வறட்சி நிவாரணப் பணிகளை வகுத்தல், செயல்படுத்தல்; ஒருங்கிணைத்தல் பணிக்குத் தனி ஆணையர் மற்றும் வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் பொறுப்பு வகித்தார். அவர் நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டு நிவாரணத் திட்டத்தை விரைவாகவும் செம்மையாகவும் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தெரிவித்தார். நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, ஆணையரும் அரசும் வாரம் ஒரு முறை ஆய்வு செய்தனர்.



வறட்சி நிவாரணத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதை ஆராயவும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காகவும், செயலாக்க முகவர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதற்காகவும், வறட்சி நிவாரணக் கொள்கை குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் அரசுத் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், அரசு இரண்டாம் செயலாளர், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் உயர் அதிகாரக் குழு அமைக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தபோது வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். நிவாரணப் பணிகளை விரைவில் செயல்படுத்த மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட அதிகாரிகளுக்கும் ஆலோசனை நல்கி, தக்க உத்தரவுகளைப் பிறப்பித்தார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரும் தனது சுற்றுப் பயணத்தின்போது, நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். மாவட்ட அளவிலான குழுக்களின் கூட்டங்கள் சிலவற்றில் தலைமை தாங்கி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு நிவாரணப் பணிகளை விரைவாக முறையாகச் செயல்படுத்த ஆலோசனையும் அறிவுரையும் நல்கினார்.

கடும் வறட்சியையும் மேற்கொள்ளப்பட வேண்டிய பெருமளவு நிவாரணப் பணிகளையும் கருதி விரிவான அறிக்கை ஒன்றை அரசு தயாரித்து 1981 மார்ச் திங்களில் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. மத்திய அரசு அதிகாரிகள் குழு 1981 ஏப்ரல் திங்களில் இம்மாநிலத்திற்கு வந்து வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு நிலைமையை மத்திய அரசுக்கு எடுத்துரைத்தது. அவர்களுடைய பரிந்துரையின் பேரில் பல நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 49.77 கோடி உச்ச வரம்புத் தொகைக்கு மத்திய அரசு இசைவளித்தது.

வறட்சி நிவாரண உச்சவரம்புச் செலவு ரூ. 49.77 கோடி என்று மத்திய அரசு நிர்ணயித்திருந்தபோதிலும் அரசு மொத்தம் ரூபாய் 57.64 கோடி செலவிட அனுமதித்துள்ளது. 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்திற்காக ரூ. 56.85 கோடி செலவு செய்துள்ளது. மேலும் தனியார் பாசனக் கிணறுகள் ஆழப்படுத்துவதற்காக கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூ. 2,500 வீதம் தக்காவிக் கடன் வழங்க ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 22,700 பேர் பயனடைந்துள்ளனர்.

வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆன செலவை, பின்வரும் அட்டவணை காட்டுகிறது :

| பணிகள்/திட்டங்கள் குறித்த விவரம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| லாரிகள், டிராக்டர்கள் முதலியவற்றின் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல். | 41.24 |
| மருத்துவம்-பொதுச் சுகாதாரம் :— | |
| நோய் தீர்க்கும் மருந்துகள் ... | |
| நோய் தடுப்பு மருந்துகள் ... | 147.32 |
| கால் நடை வளர்ப்பு : | |
| நோய் தீர்க்கும் மருந்துகள் ... | 49.99 |
| நோய் தடுப்பு மருந்துகள் ... | 17.25 |
| தீவனம் : | |
| தீவனத்தைக் கொண்டு செல்லவும் அவற்றை ஏற்றியிறக்கவுமான செலவுகள் | 46.92 |
| முதியோர்களுக்கும், ஏலாமையுற்றவர்களுக்கும் இடருதவி ... | 13.74 |
| குடிநீர் வழங்கல் : | |
| 1. புதிய துளைக் கிணறுகள் அமைத்தல் ... | 1,222.17 |
| 2. கிணறுகளை ஆழப்படுத்துதல் ... | 302.32 |
| 3. குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்காக நகராட்சிகள் பேரூராட்சிகளுக்கு நிதியுதவி ... | 258.07 |
| 4. தண்ணீர்கொண்டு செல்வதற்கான தொட்டிகள் அமைத்தல் ... | 27.50 |
| 5. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் ... | 90.50 |
| வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பணிகள் : | |
| 1. பாசனப் பணிகள் ... | 1,843.49 |
| 2. சாலைகள்-ஏனைய ஊரகப்பணிகள் ... | 674.44 |
| 3. மக்கள், கால்நடைகள் பயன்படுத்தும் ஊருணி, குடிநீர்க் குட்டைகள் ஆகியவற்றைப் பழுது பார்த்தல் ... | 252.35 |
| 4. மண்வளப் பாதுகாப்பு ... | 60.65 |
| 5. காடு வளர்ப்பு ... | 96.41 |
| சிறு உழவர்களுக்கும், ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் வேளாண்மை விளை பொருள்களை வழங்குதல் ... | 385.64 |
| சத்துணவுத் திட்டம் ... | 155.30 |
| மொக்கம் ... | 5.685. |



# நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்!

நிலம், மனிதனுக்கு ஒரு மதிப்பு வாய்ந்த உடைமை ஆகும். நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் அதன் எல்லைகள், அதில் தனது சுயேச்சையான அனுபோகம், அதன் மீது தகராறு ஏதும் இல்லாத தன் உரிமை ஆகியவற்றில் அக்கறை உள்ளவராக இருக்கிறார். நிலங்கள் அளக்கப் பெற்று, வருவாய்த் துறை ஆவணங்களிலும், பதிவுத் துறைப் புத்தகங்களிலும் தன்பெயரில் நில உடைமையாளன் பதிவு செய்து கொள்வதன்மூலமும் தன் பெயரில் தன்னுடைய நிலங்களுக்குப் 'பட்டா' பெறுவதன் மூலமுமே, மேலே குறிப்பிட்டவை உறுதியளிக்கின்றன.

தனி உடைமை நிலங்கள் மற்றும் கிராமங்களின் எல்லைகளை வரையறுத்தலும், உடைமை நிலங்களின் தொகுப்பான (1) நில அளவுப் புலன்களின் எல்லைகளைக் காட்டும் கிராமப் படங்கள் (2) ஒவ்வொரு உடைமை நிலத்தின் எல்லைகள், அதிலுள்ள தல விவரக் குறியீடுகள், அளவுகள் இவற்றுடன் கூடிய [illegible] அளவு வரைபடங்கள் [illegible] புல எண், தன்மை, உரிமை முறை, பரப்பு, தீர்வை, உடைமையாளரின் பெயர் இவற்றைக் குறிக்கும் நிலவரிப் பதிவேடுகள், ஆகியவற்றைத் தயாரித்தல், ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் பட்டா வழங்குதல் ஆகியவை வரி விதிப்புக்காகச் செயல்படும் நில அளவையின் குறிக்கோள் ஆகும்.

இன்றைய நிலைக்கேற்ற நில அளவை முறை, நிலப் பதிவுருக்கள், நிலம் பற்றிய பதிவுகள் ஆகியவற்றுக்கு, கீழ்க் குறித்த காரணங்களால் ஏற்படும் மதிப்பின் மிகுதியால் அவற்றைப் பராமரிப்பது அவசியமாகிறது.

1. குடியானவனுக்கு, நிலத்தின் உரிமைச் சாசனமாகவும், நிலஉரிமைப் பட்டயமாகவும் இத்திட்டம் மிகுந்த மதிப்புடையதாக விளங்குகிறது.
2. பயிரிடுபவர்களின் உரிமைகளையும், நிலத்தையும், பாதுகாக்க இது உதவுகிறது.
3. நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயற்படுத்த வகை செய்கிறது.
4. நம் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு, குறிப்பாக, உணவுதானியம் மற்றும் விவசாய மூலப் பொருட்களை மிகுதியாகத் தயாரிப்பதற்கு, இது அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறது.
5. சுருக்கமாகச் சொல்லப் போனால், கிராமப் புறங்களில் நெறிப்படுத்தப்பட்ட நிருவாகம் அமையவும், நில எல்லை சம்பந்தப்பட்ட நில வழக்குகளைத் தீர்த்து வைக்கவும், நிலங்களை இனம் கண்டு கொள்ளவும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், நாட்டின் மக்களுக்குள் ஏழ்மை நிலையிலுள்ள பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்க, இம்முறை உத்தரவாதம் செய்கிறது.

நிலச் சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழே தரப்படுகின்றன:

1. வேளாண்மைக்கு உரிய அமைப்பின் விளைவாக எழும் விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு ஏற்படும் தடையை நீக்குதல்.

விவசாய நிலத்தின் உரிமையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், சமூக அநீதிகள் போன்றவற்றிற்கான அடிப்படைகளை நீக்குதல்.

பயிரிடுவோரின் உரிமைக் காலப் பாதுகாப்பை நிர்ணயித்தல்; சுயமாகப் பயிரிடுவதற்கு நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கும் பயிரிடுவோருக்கு உரிமையை மாற்றம் செய்து கொடுப்பதற்கும் உரிய, விதிமுறைகளை முறைப் படுத்தல்.

பின்னால் திருத்தி அமைக்கப் பட்டபடி, 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலப் பதிவுருக்கள் (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டப்படி, நிர்ணயிக்கப்பட்ட 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும், தன்னுடைய நிலங்களின் பரப்பளவைக் காட்டும் பட்டியல் தரவேண்டும். அவரது வாக்குமூலத்தின் துல்லியத்தைச் சரிபார்க்கவும், மேற்குறித்த அறிக்கையைத் தரத் தவறிய நபர்களைக் கண்டு பிடிக்கவும், உச்ச வரம்பை மீறிய கைப்பற்றைத் தடுக்கவும், சரியானதும் இன்றைய நிலையைப் பிரதிபலிப்பதுமான நிலப்பதிவுருக்கள் தேவையாகின்றன.

கிராமப்புற மக்களுக்கு — குறிப்பாக, நாட்டின் நலிந்த பிரிவினருக்கு, நிலப்பதிவுருக்கள் மற்றும் நிலப் பதிவுகள் இன்றைய நிலையைப் பிரதிபலிக்கும் முறை மிகவும் பயன்தரத் தக்கது. ஏனென்றால் அவர்கள் தங்களுடைய நில சொத்துரிமைகளைப் பத்திரங்களாக்கவோ, பின்னால் பதிவு செய்து கொள்ளவோ இயலாத நிலையில் இருப்பதால், அவர்கள் தங்கள் அனுபோகத்தையும் சொந்தத்தையும் நிரூபிப்பதற்கு இப்பதிவுருக்களையும், பதிவுகளையும் பெரும்பாலும் நம்பியிருக்கிறார்கள். சொல்லப்போனால், அவர்களுடைய சொந்தத்தையும் உடைமையையும் விளக்குவதற்குச் சிட்டா, நில வரித்திட்டப் பதிவேடு ஆகிய நிலப் பதிவுகள் தாம் சான்றுகளாக உள்ளன.

நடைமுறையில், தனி நபர் நடவடிக்கைகளான தானம், பரிவர்த்தனம், வாரிசுரிமை, வழியுரிமை முதலிய பல்வேறு காரணங்களாலோ, அரசுத் தரப்பில் நில ஒப்படை மற்றும் நிலக் கைப்பற்று ஆகியவற்றின் விளைவாக தரமாறுபாடுகளாலோ, ஏற்படும் உரிமை மாற்றங்கள் மிகுந்த தாமதத்திற்குப் பிறகு அல்லது குறைபாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டு, அதன் காரணமாகச் சில தவறுகள் நேர்ந்து விடுகின்றன. இந்த நிலை எங்கும் காணப்படுகிறது.

உட்பிரிவுகளிலும், பதிவு மாற்றங்களிலும் குவிந்து விட்ட நிலுவையினங்களை முடிப்பதற்காக 1.6.1979 முதல் தமிழ்நாட்டில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் தேவை

முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநிலஅளவை மற்றும்மறு நிலவரித் திட்டம் மேற்கொள்ளுதல் என்ற கொள்கை, அரசினரால் 1937-இல் தமிழ்நாட்டில் கைவிடப்பட்டது. இதன் விளைவாக, 'ரயத்துவாரி' கிராமங்களுக்கு நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட நிலவரித் திட்ட ஆவணங்கள், புல அளவைச் சுவடிகள் மற்றும் கிராமப் படங்கள் ஆகியவை வழக்கிழந்தவை ஆயின. விற்பனை, வழியுரிமை முதலியவற்றால் ஏற்பட்ட பதிவு மாற்றங்களின் விளைவான கணக்கில்லாத உட்பிரிவுகள் ஏதோ ஒரு காரணத்தினால் நிலவரித் திட்டப் பதிவுருக்களில் சரிவர மேற்கொள்ளப்படவில்லை. மேலும், புலஅளவுச் சுவடிகள், நிலவரித் திட்டப் பதிவுருக்கள், கிராமப்படங்கள் போன்ற அடிப்படைக் கிராம ஆவணங்கள், பெரும்பான்மையான கிராமங்களில் அன்றாடத் தேவைக்குப் பயன்படுத்த இயலாத நிலையில் மிகவும் கிழிந்தும் மோசமான நிலையிலும் உள்ளன. பதிவுகளில் உள்ள குறைபாடுகளின்



[illegible] த்தில் [illegible] இலவச மனைப்பட்டா வழங்கு விழாவில்

காரணமாக, தங்கள் நிலங்களை மேம்படுத்துவதற்காக நிதி உதவும் நிறுவனங்களில் இருந்து கடன் பெறுவதில் தவிர்க்கக் கூடிய சங்கடங்களுக்கும் செலவினங்களுக்கும் குடியானவர்கள் ஆட்பட்டுள்ளார்கள். ஆகவேதான், பதிவுகளை இன்றைய நிலைக்கு ஒத்திருக்கும்படி செய்து நிலவரித் திட்டப் பதிவுரு, புல அளவுச் சுவடி மற்றும் சிட்டா ஆகியவற்றைப் புதியதாகத் தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### திட்டம் செயல்படுத்தப்படும் இடங்கள்

அண்மையில் மறுநில அளவை மேற்கொள்ளப்பட்ட கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி 12 மாவட்டங்களில் சுமார் 30,000 ச.மைல்கள் (80,000 ச.கி.மீ) பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 1.6.1979 முதல் 12 மாவட்டங்களில் உள்ள 30 வட்டங்களில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

இந்தப் பணி முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டம் சமூகப் பொருளாதார ஊரக வளர்ச்சிக்கு அடிப்படையானதாகவும், கிராம அளவில் போதுமான வேலை வாய்ப்புகளைத் தருவதாகவும் உள்ளதால் 2-3 ஆண்டுக் காலங்களில் இத்திட்டத்தை முடிக்கும் வகையில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட அலகுகள் உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டுமென்று கருதினார்கள். இதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் வெற்றி, நில உடைமையாளர்கள் இதில் ஈடுபட்டுள்ள நிலஅளவை, வருவாய்த் துறை அலுவலர்களுக்குத் தங்களுடைய உரிமை, அனுபோக விவரங்களைச்சரியாகக் கொடுப்பதில்தான் இருக்கிறது.

ஆகவே, பெரும் செலவில் விரிவான முறையில் செயல்படும் இத்திட்டத்தின் பயன்களை முழுமையாகப் பெற விவசாயப் பெருங்குடி மக்கள் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கோரப்படுகிறது.

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

**உலகம் சுருங்கி வருகிறது:**

**உலக காடுகள் நெருங்கி வருகின்றன**

1.5.1982 ல் உள்ளபடி நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணியின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின்படி கீழ் வரும் மொத்தப் பரப்பு | | | 80,000 ச.கி.மீ. |
| 2. | (அ) முதல் கட்டமாக, 30 வட்டங்களில் நில உடைமைப் பதிவேடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | | | 3,340 |
| | (ஆ) திட்டத்தின் முதல் கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்பு | | | 24,652,55 ச.கி.மீ. |
| 3. | புல அளவைப் பணிமுடிக்கப்பட்டகிராமங்களின் மொத்த எண்ணிக்கை | | | 1,420 |
| 4. | இனம் 3-இன் கீழ் பணி முடிந்த நிலப்பரப்பு | | | 8,602.66 ச.கி.மீ. |
| 5. | துணிக்கையிடப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை | | | 16,72,488 |
| 6. | அளந்து முடிக்கப்பட்ட மொத்த உட்பிரிவுகள் | | | 12,07,877 |
| 7. | புதுப்பிக்கப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை | | | 7,13.062 |
| 8. | பதிய பெற்ற ஆக்கிரமிப்புகளின் மொத்த எண்ணிக்கை | | | 49,415 இனங்கள் |
| 9. | அளக்கப்பட்ட தல விவரக் குறியீடுகளின் மொத்த எண்ணிக்கை | | | 1,52,080 |
| 10. | அறிக்கைப்படி, வழக்குகளுக்கு உட்பட்ட மொத்த இனங்கள் | | | 3,963 இனங்கள் |
| 11. | தூய கணக்குகள் வட்டாட்சியர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கிராமங்களின் மொத்தஎண்ணிக்கை | | | 855 கிராமங்கள் |
| 12. | பிரிவு 13-இன் கீழ் இறுதி அறிக்கை வெளியிடப் பெற்ற கிராமங்களின் மொத்த எண்ணிக்கை | | | 632 கிராமங்கள் |
| 13. | நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்துக்கு முன் வழங்கப்பட்டிருந்த பட்டாக்களின் விவரங்கள் | தனிப் பட்டா | கூட்டுப் பட்டா | மொத்தம் |
| | | 2,06,885 | 1,37,374 | 3,44,259 |
| 14. | நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டபட்டாக்களின் விவரங்கள் | 3,04,340 | 1,11,718 | 4,16,058 |
| 15. | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை | | | 6,68,681 |



# சமூக நலக்காடுகள் வளர்ப்பு

மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி 48.3 மில்லியன் ஆகும். மொத்த நிலப்பரப்பில் 95 விழுக்காடு கிராமப்புறங்களில் உள்ளன. சுமார் 70 விழுக்காடு மக்கள், 15,735 கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். செம்மண், கருமண், ஆற்றுமண் ஆகிய மண்வகைகள் காணப்படுகின்றன. சராசரியாக ஆண்டுக்கு 945 மில்லி மீட்டர் மழை அளவாம். அக்டோபர்-நவம்பர் மாதங்களில் சராசரியாக 945 மி.மீ. மழை கிடைக்கிறது. மொத்த நிலப்பரப்பில் சுமார் 58 விழுக்காடு அதாவது 7.45 மில்லியன் எக்டரில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பரப்பில் 1.2 மில்லியன் எக்டரில்தான் பருவமழையையும், தண்ணீர் வசதியையும் பொறுத்து இரண்டாவது போகம் பயிரிடப்படுகிறது. 3.4 -மில்லியன் எக்டர் நிலப்பரப்பில் விவசாயம் மழையை நம்பித்தான் நடை பெறுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 38,297 குளங்களும் 19 நீர்த்தேக்கங்களும் 11,500 கிலோ மீட்டர் நீளமுடைய கால்வாய்க்ள், பயிர்ப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

மொத்த மாநில நிலப்பரப்பில் 16.7 விழுக்காடு அதாவது 21,73,726 எக்டர் நிலப்பரப்பு தான் வனங்களின் கீழ் உள்ளது. இப்பரப்பில் காடுகள் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவாகவே உள்ளன.

1959-60-ஆம் ஆண்டில் மக்களின் எரிபொருள் தேவை, சிறு மரங்கள் தேவை மற்றும் காடுகளின் வளத்தைப் பெருக்குதல் போன்ற பல நோக்குகளுடன்வனப்பண்ணைத் தோட்டங்கள் எழுப்பும் திட்டம் ஒன்று நடைமுறையாக மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டம் பல வகைகளில் கிராமநலக் காடுகள், வனவிரிவாக்கத் திட்டம், சமூகநலக் காடுகள் என்ற பெயரில் எஞ்சிய மாவட்டங்களிலும் விரிவு படுத்தப்பட்டது. காப்புக் காடுகளுக்கு வெளியே,சென்ற ஆண்டு வரை சுமார் 1.99 இலட்சம் எக்டர் பரப்பில் மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.இந்த மொத்தப் பரப்பளவில் 1980-81 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் 66,000 எக்டர் பரப்பில் மரங்கள் நடப்பட்டுள்ளன. முக்கியமான குளப்படுகைகளில் அதிகமாகத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அதாவது, இத்திட்டம் செயலாக்கப்பட்ட முதல் இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட சாதனையின் பாதி அளவு கடந்த இரு ஆண்டுகளிடையே எய்தப்பட்டுள்ளது. இயற்கைக் காடுகள் அழிந்து வருவதைத் தடுப்பதன் பொருட்டு விறகுக் கூப்புகள் வெட்டுதல் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதற்குப்பதிலாக காப்புக்காடுகளுக்கு வெளியே எழுப்பிய தோட்டங்களிலிருந்து விறகும் மரமும் வெட்டப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் ஊராட்சிகளுடன் சமமாகப் பங்கீடு செய்யப்படுகிறது.



நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எரிபொருள் தேவைக்கு காடுகளுக்கு வெளியே மரங்கள் வளர்க்கும் திட்டத்தைப் பெருமளவில் விரிவுபடுத்தினாலன்றி எதிர்காலத்தில் பெருத்த எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் நெருக்கடியைத் தடுக்க இயலாது. 1980-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் விறகுத்தேவை 10.1 மில்லியன் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இத்துறையின் மூலம் கிடைக்கும் விறகோ 0.1 மில்லியன் டன் தான். வருகிற 2000 ஆண்டில் தமிழ்நாட்டில் மக்களின் தொகைசுமார் 6.4 மில்லியனாகப் பெருகும் எனவும்அவர்களின் விறகு தேவை சுமார் 12.5 மில்லியன் டன் எனவும் கணக்கிடப்படுகிறது. துறையின் மூலம் வெட்டப்பட்டு கொடுக்கப்படும் விறகினை கணக்கிட்டால் சுமார்0.3மில்லியன் டன் தான் ஆகும். தற்போதைய பெருமளவு விறகுத் தேவை த்னியார் நிலங்களிலிருந்தும் பூர்த்தி செய்யப்பட்டு வரப்படுகின்றது. அண்டை மாநிலங்களிலிருந்தும் ஓரளவு பெறப்பட்டு வரப்படுகின்றது. காப்புக் காடுகளில் உள்ள மரத் தோட்டங்களிலிருந்து தொழிற்சாலைக்குவேண்டியமூலப்பொருட்கள் மட்டுமே கொடுக்க இயலும். எரிபொருள் நியாய விலையில் கிடைக்காமல் மக்களுக்கு ஏற்படும் இன்னல்-கிராமங்களிலும் நகரங்களிலும் பெண்களும், குழந்தைகளும் விறகு சேகரிப்பதில் அவர்களது பொன்னான நேரம் வீணாக்கப்படுவது, இவற்றையெல்லாம் தவிர்க்கும் பொருட்டு, வனத்துறை மூலம் மட்டும் மரங்கள் வளர்த்தால் போதாது என உணர்ந்து, பெருமளவில் மக்கள் அவரவர்கள் சொந்த நிலங்களிலும், கிராமத்தைச் சார்ந்த நிலங்களிலும் மரங்கள்வளர்த்து பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் இடங்களில் சமூகநலக்காடுகள் திட்டத்தின்கீழ் மரங்கள் வளர்க்க வாய்ப்பிருப்பதாக 1977-ஆம் ஆண்டில் எடுத்த ஒரு கணக்கு எடுப்பைக் கொண்டு. அனுமானிக்கப்படுகிறது.

1. விவசாயம் செய்யத் தகுதியற்ற தரிசு நிலங்கள் (எக்டர் 6,23,520)
2. மேய்ச்சல் புல்வெளி (எக்டர் 1,78,604)
3. குளக்கரை (எக்டர் 5,57,950)
4. கால்வாய்க்கரையோரங்கள் (கி.மீ. 15,854)
5. சாலையோரங்கள் (கி.மீ. 1,00,650
6. இருப்புப்பாதை ஓரங்கள் (கி.மீ. 3,814)

சமூக வனங்களை வளர்க்கும் திட்டத்தை தீவிரப்படுத்துவதற்கும் சமுதாய நிலங்கள், கால்வாய் ஓரங்கள், சாலையோரம், மலை தரிசு நிலங்கள் ஆகிய இடங்களில் பெருமளவில் மரங்கள் வளர்க்க வாய்ப்பிருப்பதை உணர்ந்து இந்திய அரசு மூலம், ஸ்வீடன், நாட்டு மேம்பாட்டுக் கழக உதவியுடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தமிழக அரசு 1981-82-ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 45 கோடி செலவிட உத்தேசித்துள்ளது. ஏற்கெனவே, 1981-82-ல் ரூ. 418.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டில் ரூ.794 இலட்சம் செலவு செய்து 43,000 எக்டர் பரப்பில் மரங்கள் வளர்க்கவும் சுமார் ஒரு கோடி மரக் கன்றுகள் மக்களுக்குக் கொடுத்து அவர்களின் மரங்கள் வளர்க்கும் பணியினை ஊக்குவிக்கவும் திட்டம் இடப்பட்டுள்ளது. சுமார் 34.75 இலட்சம் செடிகள் விலையின்றியே மக்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

சமூக வனக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் தற்சமயம் முக்கிய குறிகோள்கள் யாதெனில் கிராம ஏழை மக்களுக்குத் தேவையான விறகு, விவசாயக் கருவிகளுக்கு வேண்டிய சிறு மரங்கள், கிராமக் கைத்தொழிலுக்கு குடிசைத் தொழிலுக்கு வேண்டிய மரப்பொருள்கள், மாட்டுத் தீவனத்தழை வேண்டியவற்றைத் தரும் மரத்தோட்டங்களை மக்களின் உதவியுடனும் உழைப்புடனும் வளர்த்தல் ஆகும்.

சமூக வன வளத் திட்டத்திற்கு நிதி உதவி அளித்த சுவீடன் நாட்டுப் பிரதமர் சென்னைக்கு (13.2.82) வருகை புரிந்த போது.



குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் கீழ்வரும் முக்கிய குறிக்கோள்களைக் கொண்டதாகும்.

1. கிராமப்புற மக்களை அவர்களது சொந்த நிலங்களில் மரங்கள் வளர்க்க ஊக்குவித்தல்.

2. கிராமப்புற மக்களின் தேவைக்கென விறகு மரங்கள், சில மரங்கள், தீவனம்மற்றும் பழமரங்கள் வளர்த்தல்.

3. குளப்படுகை, புறம்போக்கு நிலம், சாலையோரம் மற்றும் கால்வாய்க்கரை ஓரங்கள், தனியாரின் வேளாண்மைக்குத் தரம் குன்றிய-உபயோகமற்ற இடங்களில் மரங்களை வளர்த்து சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தூய்மைப்படுத்தல்.

4. மேற்கூறிய மரங்களிலிருந்துகிடைக்கவிருக்கும் விறகு மற்றும் விளைபொருளைக் கிராமங்கள் பெறுமாறு செய்தல்.

5. மரம் வளர்க்கும் பணியில் கிராமப்புறச் சமூகத்தினர்—பெண்கள், குழந்தைகள் உட்பட மற்றும் பஞ்சாயத்தினை விருப்பத்துடன் ஈடுபடச் செய்தல்.

6. பொருளாதர்ரத்தில் பின் தங்கியவர்கள், நிலமற்றவர்கள், ஏழை எளியவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பு அளித்து அவர்கள் வருமானத்தைப் பெருக்கிக் கிராமங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.



மரங்கள் வளர்க்கும் திட்டமல்லாது ஆராய்ச்சி, கல்வி, விரிவு மற்றும் சமூகமற்றும் தொழில் நுட்பக்கலைகளை வளர்க்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய பிரிவு திட்டங்களைப் பற்றி விரிவான விவரங்கள் பின்வரும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மரங்கள் வளர்ப்பு ஊக்குவிக்கும் திட்டம் : இத்திட்ட காலத்தில் 5 ஆண்டுகளுக்கு விறகு மரங்கள், சிறு மரங்கள், மாட்டுத் தீவனம் மற்றும் பழம் தரும் மரங்கள் உட்பட 500 மரக்கன்றுகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்கப்படும். பழம் தரும் மரங்கள் ஒரு மரமாவது ஒருவீட்டிற்குத்தரப்

இத்திட்டத்தின்படி 1981-82-லிருந்து ஐந்து ஆண்டுகளில் செய்யவிருக்கும் பணிகள் கீழே கட்டமிட்டுக்காண்பிக்கப்பட்டுள்ளன:

| பிரிவின் பெயர் | இலக்கு |
|---|---|
| 1. மரங்கள் வளர்த்தல் ''ஊக்குவிப்புத் திட்டம்'' | ஆண்டொன்றுக்கு 20,000 குடும்பங்கள் என்ற கணக்கில் 126 லட்சம் நாற்றுக்களை 1,00,000 குடும்பங்களுக்கு வழங்குதல். |
| 2. சமநில புறம்போக்கு மற்றும் குன்றுகளிலும் மரங்கள் வளர்த்தல் | 14,700 எக்டர் சமநிலங்களிலும் 24,500 எக்டர் குன்றுகளிலும் மரத் தோட்டம் எழுப்புதல். |
| 3. ஏரி, குளப்படுகைகளில் மரத் தோட்டங்கள் எழுப்புதல். | 1,32,000 எக்டர் |
| 4. தொடர் வரிசைத் தோட்டம் (சாலையோரம், கால்வாய் ஓரம், ரயில்பாதையோரம்) | 6,075 கிலோ மீட்டர் தொடர் வரிசை. தோட்டம் |
| 5. மரங்கள் வளர்த்தல் ''விரிவுத்திட்டம்'' | தனி விவசாயிகளுக்கும் மற்றவருக்கும் அடக்க விலைக்கு 375 இலட்சம் நாற்றுக்கள் கொடுத்தல். |
| 6. மாட்டுத் தீவனத் தோட்டங்கள் வளர்த்தல். | 5,250 எக்டர். |

படும். மக்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு ஊக்கப்பணம் வளர்க்கப்பட இருக்கும் மரங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து முதலாண்டு முடிவிலும், இரண்டாமாண்டு முடிவிலும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| உயிர்ச் செடிகளின் எண்ணிக்கை | ஒருசெடி வைக்கப் பணத்தின் அளவு | மொத்த தொகை |
|---|---|---|
| 1—10 | 1.00 | 10.00 |
| 11—30 | 0.50 | 10.00 |
| 31—100 | 0.25 | 17.50 |
| 101—500 | 0.10 | 40.00 |
| | | 77.50 |

ஒரு குடும்பத்தில் பெற்ற 500 செடிகளும் நன்கு வளர்க்கப்பட்டிருந்தால் கீழ்க்கண்ட அளவில் பணம் வழங்கப்படும்.

| முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|
| ரூபாய் 77.50 | ரூபாய் 77.50 | ரூபாய் 155.00 |

இந்தத் திட்டகாலத்தில் அதாவது ஐந்தாண்டுக் காலத்தில் 0.1 மில்லியன் குடும்பங்கள் (ஒவ்வொரு ஆண்டும் 20,000 குடும்பங்கள் வீதமாக) பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புறம்போக்குச் சமவெளிகளிலும் மலைகளிலும் மரங்கள் வளர்த்தல் :**

இத்திட்ட காலத்தில் 14,700 எக்டர் புறம்போக்கு சம நிலங்களில் முக்கியமாக தைல (யூகலிப்டஸ்) மர வகைகள் வளர்க்கப்படும். இது தவிர சவுக்கு, பரம்பை கொடைவேலன், வேப்பமரம் முதலிய இதர மரங்களும் மண்வளத்திற்கேற்ப வளர்க்கப்படும். மேலும், நீலகிரித்தைல மரங்களுடன் கூபாபுல் (கே. 8 ஓ. கே. 28) மரங்களையும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 100 எக்டரில் தக்க வளம் வாய்ந்த இடங்களில் வளர்க்கப்படும். மரங்களுக்கிடையில் மேய்ச்சல் புல்லும் செடிகளும் வளர்க்கப்படும். மலைப்புறம்போக்குகளில் ஓடை, பரம்பை போன்ற மர வகைகள், வேப்பமரம் மற்றும் செம்மரங்களுடன் சேர்ந்து பயிரிடப்படும். மண் அரிப்பினைத் தடுக்க மண்வளப் பாதுகாப்பு வேலையும், தோட்டங்கள் எழுப்பும் வேலையும் செய்யப்படும்.

**கண்மாய்த்தோட்டங்கள் :**

பொதுப்பணித்துறை, பஞ்சாயத்தைச் சார்ந்த குளப் படுகைகளில் மரம் வளர்க்கும் திட்டம் இதில் ஒரு முக்கியப் பிரிவாகவும், கருவேல மரங்கள் அதிகமாக நடப்படும். உவர்ப்பு நிலங்களில் வெவ்வேலன் மரங்கள் வளர்க்கப்படும். மூங்கிலும் சவுக்கும் தகுந்த இடங்களில் பயிரிடப்படும். இப்பிரிவின் கீழ் சுமார் 1,32,000 எக்டர் பரப்பில் மரங்கள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஓராண்டிற்கு 1,000 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அக்கிராமங்களில் மரங்கள் நடும் திட்டம் செயலாற்றப்படும். எரிபொருள் மரம், சிறுமரம் முதலியவைகளை வளர்த்து கிராம மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வது இப்பிரிவின் நோக்கமாகும். இத்தோட்டங்களில் இடைவெளி விட்டு மரங்களில் கிளைகளைக் கழிப்பது அடர்த்தி குறைப்பது ஆகியவைகளில் கிடைக்கக் கூடிய மிலாறு மற்றும் விறகுகளை கிராம மக்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

சாலையோரம், கால்வாய்க் கரையோரம், இருப்புப்பாதை ஓரங்களில் தொடர்வரிசைத் தோட்டங்கள் தகுந்த மர வகைகளைக்



கொண்டு எழுப்பப்படும். இதன் இலக்கு 5 ஆண்டிற்கு 6075 கிலோ மீட்டர்.

**மரத் தோட்டங்கள் ''வனவிரிவாக்கத்திட்டம்:**

ஊக்குவிப்புத் திட்டம் எப்படி ஏழை எளியவர்களை ஊக்குவிப்பதற்காகச் செயலாற்றப்படுகின்றதோ அதுபோல் இத்திட்டம் நிறைய நிலங்கள் வைத்திருப்பவர்களுக்காகத் தீட்டப்பட்டுள்ளது. இப்பிரிவின் கீழ் மரக்கன்றுகள் பழவகை மரங்கள் உட்பட அடக்க விலையில் இவர்களுக்கு வழங்கப்படும். 37.5 மில்லியன் நாற்றுகள் இப்பிரிவின் கீழ் இத்திட்டகாலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும்.

**மாட்டுத்தீவனத் தோட்டங்கள் :**

மாட்டுத் தீவன புல் வகைகளையும், தீவனத் தழை உரத் தழை மர வகைகளையும் வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். கொழுக்கட்டைப்புல், கொளிஞ்சி போன்ற புல் வகைகள், மயில் கொன்றை, பொன்னவரை, வாத நாராயணை போன்ற மர வகைகளும் வளர்க்கப்படும். இயன்ற அளவுக்கு மாட்டுத் தீவனத் தழையையும் புல்லையும் கிராமங்களில் கிடைக்கச் செய்வதற்கான இத்திட்டத்தின் ஐந்தாண்டுக்காலத்திற்கான இலக்கு 5250 எக்டர்.

**தேவை மற்றும் வருவாயைப் பகிர்தல் :**

இந்நாள்வரை மரங்கள் ஒப்பந்ததாரர் மூலமாக வெட்டப்பட்டு அவை நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்கப்பட்டது. பஞ்சாயத்து நிலங்களில் எழுப்பப்பட்டுள்ள தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் 50 விழுக்காடு அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது மக்களுக்குத் தேவையான எரிபொருள், மரங்கள், சிறுமரங்கள் முதலியவைகளை அளவுடன் இரண்டாவது ஆண்டு முடிவிலிருந்து கிடைக்கும் வழியில் மரங்கள் வளர்க்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தோட்டங்கள் வளர்க்கப்படும் நிலங்கள் பஞ்சாயத்துக்குசொந்தமான தானாலும்சரி, இதர பொதுப்பணித்துறை அல்லது மாநில நெடுஞ்சாலைத் துறையினர் போன்ற பஞ்சாயத்து நிலங்களல்லாத வேறு நிலங்களானாலும் சரி கிடைக்கும் வருவாயில் பாதித் தொகையை பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்படும். சமூகநலத் திட்டத்தின் கீழ் பங்கு பெறும் பஞ்சாயத்துக்களுக்கு இது ஒரு கூடுதல் ஊக்கத்தொகை ஆகும்.

இதுகாறும் வனத்துறையினர் பல்வேறு சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களில் மரங்கள் வளர்ப்புப் பணியினைத் திறம்பட செயல்படுத்தினாலும் அதில் மக்களின் ஈடுபாடு அவ்வளவு இல்லை. கிராமப்புற சமுதாயத்தைத் தற்பொழுது இத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபடுத்தவும், அவரவர் தேவைக்கான மரங்களை அவரவர்களே வளர்த்துக் கொள்ளும் பொருட்டும், மக்களின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தும் பொருட்டும் கிராம மக்களைக் கொண்ட சமூக வனக்குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராம சமூக வனக்குழுவின் ஆலோசனையின் படி இடத்தேர்வு, பயிரிடப்படும் மரவகைத் தேர்வு முதலிய செயல்கள் வனத்துறையின் சமூகநலக் காடுகள் பிரிவு செய்யும். இத்திட்டம் செயல்படும் ஒவ்வொரு கிராமத்திலும் எழுப்பப்பட்ட செடிகளைப் பாதுகாக்க ஒரு கிராம சமூக வனப் பணியாளர் நியமிக்கப்படுவார். அந்தந்த கிராமத்தில் உள்ள தகுதி வாய்ந்தவர்களே நியமிக்கப்படுவர். இக்கிராம சமூக வன ஊழியருக்குத் தக்க பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு கருத்தரங்கு நடத்தி திட்டம் செயல்படும் விதத்தையும், திட்ட குறிக்கோள்கள் பெருமளவில் கிராமப்புற மக்களுக்குச் சென்றடைகின்றதா என்பது பற்றி முடிவெடுத்து மாறுபாடுகள் செய்து அமல்படுத்தப்படும்.



சமூகக் காடுகள் திட்டத்தின் சிறப்பு இயல்புகளைச் செயல்படுத்தும் பொருட்டு. வனத்துறையின் சமூகநலக்காடுகள் பிரிவினருக்குக் கிராமநல சமூக இயல்புகளைப் பற்றி ஆலோசனை கூறவும், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது அதன் சமூக பயனை. அவ்வப்போது ஆராய்ந்து அறிந்து முன்னேற்ற மற்றும் ஈடுகாட்டும் திறன் தேவைப்படுகிறது. திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் இதர வேலை செய்கைகள் வனத் துறையினால் செய்யப்படும். சிக்கன விஷயங்களைச் செயல்படுத்த, கிராமங்களில் சமூக பொருளாதார நிலையை ஆராய்ந்து அறியும் திறன் உள்ள தனியார் நிறுவனங்களைக் கொண்ட ''சமூகநலக் காடுகள் ஆலோசனைக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்பு :**

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதின் மூலம் திட்ட காலமான 5 ஆண்டுகளில் சுமார் 390 இலட்சம் மனித சக்தி நாட்கள் அளவுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதில் ஆதிதிராவிட மக்களும் பின் தங்கியவர்களும் மிக்க பயனடைவர். இந்நடவடிக்கைகளால் கிராம மக்களின் வருவாய் பெருகுவதுடன் அதன் மூலம் கிராமப்புறப் பொருளாதாரமும் குறிப்பிட்ட அளவில் மேம்படும்.

இது தவிர, வேளாண்மை மறு நிதி மற்றும் அபிவிருத்திக் கழகம், வங்கிகள் ஆகியவற்றின் உதவியுடன் தனியார் நிலங்களில் ஹைபிரிட் தைல மரங்கள், முந்திரி, சவுக்கு, கருவேல் ஆகியவற்றை வளர்ப்பது ஊக்குவிக்கப்படும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தக்க உதவிகளும் அளிக்கப்படும். மேலும், தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊரக, ஒன்றிய சாலைகளின் இருமருங்கும் மரங்கள் நடப்படும்; ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆதித் திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் மரங்கள் நட்டு வளர்க்கப்படும்.

சமூகவனத் திட்டம் ஒரு கிராம மேம்பாட்டுத் திட்டம். கிராம மக்களின் எரிபொருள் தேவையை நிறைவு செய்வது மட்டுமல்லாது, ஊரக வேலைவாய்ப்புக்களையும் இது பெருமளவு அதிகரிக்கும். இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் புதுமையான மற்றும் மாறுபட்ட முறைகள் கையாளப்பட விருக்கின்றன. சமூக வனங்களை உருவாக்கி பேணிக் காப்பதில் தமிழக மக்கள் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்யும் பணியில் தமிழ்நாட்டு வனத்துறை முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.



# சுற்றுலா வளர்ச்சி

மாண்புமிகு மைய சுற்றுலா அமைச்சர் திரு ஏ. பி. சர்மா அவர்கள் மாமல்லபுரத்தில் பங்கேற்ற இளைஞர் முகாம் திறப்பு விழாவில்.

தமிழகத்தின் தொன்மைமிக்க வரலாற்றுச் சிறப்பிடங்களும் அழகுமிகு இயற்கை வளங்களும் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. சுற்றுலா, சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கை நிலைமைகளில் சீரிய மாறுதல்களை ஏற்படுத்துவதோடு தேசிய ஒருமைப்பாட்டையும் அனைத்து நாடுகளிடையே ஒற்றுமை உணர்வையும் உண்டாக்க உறுதுணையாக அமைகிறது. எனவே தமிழக அரசு இவைகளை உணர்ந்து சுற்றுலா வளர்ச்சிக்கெனத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

சுற்றுலா மேம்பாட்டிற்கென அரசின் நிதி ஒதுக்கீடுகளே இதற்குச் சான்றாகும். 1975-76ல் ரூ. 22.7 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கீட்டை 1980-81ல் ரூ. 63.22 இலட்சமாகவும் 1981-82ல் ரூ. 115.86 இலட்சமாகவும் 1982-83ல் ரூ. 140 இலட்சமாகவும் உயர்த்தியுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கென ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தினை இவ்வரசு அமலாக்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சர்வதேச மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அழகிய கடற்கரையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமுமான மாமல்லபுரத்தை அபிவிருத்தி செய்ய ரூ. 6 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அங்கு சுமார் ரூ. 40 இலட்சம் செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பெற்றுள்ளன.

இராமேசுவரத்தின் அமைப்பு ஒரு சர்வதேசச் சுற்றுலா மையமாக அமைய எல்லா வகையிலும் தகுதி பெற்றுள்ளது. எனவே இராமேசுவரத்தின் வளர்ச்சிக்கு ரூ. 28 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரி மிகவும்



சிறப்பு வாய்ந்த சுற்றுலா மையமாகும். சுமார் 16 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரிக்கென ஒரு சுற்றுலாப் பெருந்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பிச்சாவரம், மண்டபம், ஏர்க்காடு, ஒகேனக்கல் ஆகிய இடங்களை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பிச்சாவரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 17.50 இலட்சம் செலவில் குடில்கள், படகுத்துறை ஆகியவை அமைக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண்டபத்தில் படகுத்துறை, துயிற்கூடம் ஆகியவை அமைப்பதற்காக ரூ. 5.30 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒகேனக்கல்லில் காவேரிக்குக் குறுக்கே நடைபாலம் ஒன்று அமைக்க, கடந்த ஆண்டு ரூ. 7.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்காக மாவட்டத்திற்கு இரண்டெனச் சுற்றுலா மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தின் மிக முக்கிய சுற்றுலா மையங்களிலும், ரயில் நிலையங்களிலும் 17 சுற்றுலாத் தகவல் நிலையங்களை இவ்வரசு அமைத்துள்ளது. கடந்த ஆண்டில் சென்னை விமான நிலையத்திலும், புது டெல்லியிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. கடந்த மூன்றாண்டுகளில் சிதம்பரம் மற்றும் சென்னை நகரில் சுற்றுலா [illegible] திறக்கப்பட்டுள்ளன. [illegible] பணியை [illegible] படுத்த விளம்பரம் இன்றியமையாத கருவியாகும். இத்துறையின் வெளியீட்டுப் பிரிவு, கையேடுகள், சிறு வெளியீடுகள், புத்தக வடிவிலான வெளியீடுகள், வண்ணப்பட அஞ்சல் அட்டைகள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள சுற்றுலா வாய்ப்புக்களை அதிகரிக்க மாவட்டந்தோறும் நடத்தப்பெறும் அரசுப் பொருட்காட்சிகளில் சுற்றுலாத் துறை முக்கிய பங்கேற்கிறது.





முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன்; திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருந்த இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம் மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன் - ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம். நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

—பேரறிஞர் அண்ணா

1981-82ல் ''தென்னிந்தியாவை நோக்கி'' என்ற திட்டத்தின்கீழ் அயல்நாடுகளிலிருந்து வந்த பயண எழுத்தாளர்களுக்கும், நிழற்படம் எடுப்பவர்களுக்கும், நிழற்படத் தொகுப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள சிறப்புமிக்க சுற்றுலா இடங்களைக் கண்டு களிக்கவும் இத்துறை ஏற்பாடு செய்தது.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வர்த்தக ரீதியில் விரிவுபடுத்த வேண்டி தமிழக அரசின் நிறுவனமான சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறந்த பணிகளை ஆற்றி வருகிறது. குறைந்த கட்டணத்தில் உயர்ந்த தரத்தில் இக்கழகம் வழங்கிடும் தங்கும் வசதி மற்றும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டுமின்றி வெளிநாட்டுப் பயணிகளையும் பெரிதும் கவர்ந்துள்ளது. 1971-72ல் ரூ. 4.58 இலட்சமாக இருந்த இக்கழகத்தின் வருவாய் 1976-77ல் ரூ. 68.51 இலட்சமாகவும், 1980-81ல் ரூ. 164.51 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 223.55 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. 1982-83ல் ரூ. 308 இலட்சமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வருவாய் உயர்வின் காரணத்தால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1-7-80 முதல் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறியுள்ளது.

தென்னகத்தில் மிக அதிக அளவில் சுற்றுலா விடுதிகள் நடத்தும் சிறப்பு இக்கழகத்தின் தனித்தன்மையாகும். இவ்விடுதிகளின் எண்ணிக்கை 1971-72ல் 5 ஆகவும், 1976-77ல் 12 ஆகவும் 1979-80ல் 14 ஆகவும், 1980-81ல் 15 ஆகவும் 1981-82ல் 20 ஆகவும் உயர்ந்துள்ளது. ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டினையொட்டி 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், மதுரை மாநகரில் ரூ. 58 இலட்சம் செலவில் துவங்கப்பெற்ற முதல் மூன்று நட்சத்திர ஓட்டல் இக்கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். கோவையிலும் ரூ. 40 இலட்சம் செலவில் மற்றொரு மூன்று நட்சத்திர ஓட்டல் 1982ஆம் ஆண்டு மே திங்களில் மாண்புமிகு தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்டது. குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தங்கும் வசதிகள் ஏற்படுத்த, முக்கியமான சுற்றுலா மையங்களில் இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஏர்க்காட்டில் 1981ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ரூ. 4 இலட்சம் செலவில் இளைஞர் விடுதியும், 1982ஆம் ஆண்டு மே திங்களில் உதகமண்டலத்தில் ரூ. 12 இலட்சத்தில் இளைஞர் விடுதியும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ரூ. 12 இலட்சத்தில் மாமல்லபுரத்தில் இளைஞர் விடுதி, குடில்கள், கூடாரங்கள், உணவு விடுதி ஆகியவை அடங்கிய சுற்றுலாப் பயணிகள் முகாம் 1982 மே திங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மண்டபத்திலும் இராமேசுவரத்திலும், கோடைக்கானலிலும், ஒகேனக்கல்லிலும் இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டு, திறக்கும் தறுவாயிலுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள், பெருவழி ஓய்வு விடுதிகள், இளைஞர் விடுதிகள் ஆகியவற்றின் படுக்கை எண்ணிக்கை 1971-72ல் 253 ஆகவும் 1976-77ல் 818 ஆகவும் 1979-80ல் 985 ஆகவும் 1980-81ல் 1,059 ஆகவும், 1981-82ல் 1,334 ஆகவும் உயர்ந்துள்ளது. விடுதிகளின் மூலம் வந்த வருவாய் 1975-76ல் ரூ. 14.27 இலட்சம் ஆகவும், 1979-80ல் ரூ. 30.08 இலட்சம் ஆகவும் 1980-81ல் ரூ. 46.84 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 70.04 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

இக்கழகத்தின் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில் மட்டுமின்றி பிற மாநிலங்களில் உள்ள சுற்றுலாச் சிறப்புப்பெற்ற இடங்களையும் கண்டு களிக்கும் வண்ணம் இந்த சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்துகளில் பயணம் செய்தோர் எண்ணிக்கை பெருகி வருவதே இதற்குச் சான்றாகும்.

1972-73ல் பேருந்துகளின் எண்ணிக்கை 2 ஆக இருந்து 1976-77ல் 14 ஆகவும், 1980-81ல் 19 ஆகவும், 1981-82ல் 20 ஆகவும் உயர்ந்துள்ளது. மேலும் 4 பேருந்துகள் இவ்வாண்டு பெறப்படவிருக்கின்றன. 1980ஆம் ஆண்டு குளிர்சாதனம் பொருந்திய பேருந்து ஒன்றும் 1981-ம் ஆண்டு குளிர் சாதனம் பொருந்திய பேருந்துகள் இரண்டும் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.






வெளிநாட்டுப் பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் இக்கழகம் முகவர்களை நியமித்து உள்ளது. இலங்கையிலும் முகவர்களை நியமிக்க உத்தேசித்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே சுற்றுலாவிற்கென வெளிநாட்டு முகவர்களை நியமித்துள்ள முதல் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும். 1975-76ல் பேருந்துகளின் மூலமாகப் பெற்ற வருவாய் ரூ. 8.7 இலட்சமாகவும், 1979-80ல் ரூ. 17.97 இலட்சமாகவும், 1980-82ல் ரூ.37.37 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 65 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மற்றுமொரு சிறப்பு இக்கழகம் ஆண்டுதோறும் சென்னையில் நடத்தும் சுற்றுலாப் பொருட்காட்சி ஆகும். இந்தப் பொருட்காட்சி நாட்டிலுள்ள சிறந்த சுற்றுலா இடங்களை எடுத்துக் காட்டுவதோடு மட்டுமின்றி தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் தொன்மையான பண்பாட்டினையும், கலை எழுச்சியையும் விளக்கித் தரும் வகையில் அமைந்து வருகிறது. இப்பொருட்காட்சி ஆண்டுதோறும் 25 இலட்சம் பார்வையாளர்களை ஈர்த்து வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் வசதி, சுற்றுலாப் பயணத் திட்டங்கள் அளிப்பதுடன் அவர்களின் பொழுது போக்கிற்காக படகுக் குழாம்களை உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும் அமைத்துள்ளது. 1982ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ரூ. 40 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஒலி - ஒளிக்காட்சியினை இக்கழகம் ஏற்று நடத்தி வருகிறது. மிகத் தொலைவில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொலை நோக்கி இல்லங்களைக் கொடைக்கானலில் இரண்டும், ஏர்க்காட்டில் ஒன்றுமாக இயக்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறப்பு, இதன் ஊழியர்களின் பண்யை ஊக்குவிப்பதேயாகும். எனவே இக்கழகம் தொழிலாளர் நலனைப் பேணிப் பாதுகாக்கிறது. ஊழியர்களின் சேவை மனப்பான்மையை வளர்த்து வருகிறது. இதன் அடிப்படையில் இக்கழகம் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் 1972-73ல் ரூ. 5.37 இலட்சமாகவும், 1976-77ல் ரூ. 14.02 இலட்சமாகவும், 1979-80ல் ரூ. 26.29 இலட்சமாகவும், 1980-81ல் ரூ. 38.18 இலட்சமாகவும், 1981-82ல் ரூ. 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், உற்பத்தித் திறன் அடிப்படையில் ஊழியர்களுக்கு சிறப்பு போனஸ் அளிக்கும் திட்டம் அமலாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கென மேலும் பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டித் தமிழக அரசின் உதவியோடு செயல்படுத்தி வருகின்றது.

கோவையில் கட்டப்பட்டுள்ள
ஓட்டல் தமிழ்நாடு



கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கிறார்கள்.

—பேரறிஞர் அண்ணா



# ஆசிரியர் சமுதாயத்துக்கு அரசு நல்கிய உதவிகள்

தமிழ்நாட்டில் தற்பொழுதுள்ள 37,000 பள்ளிகளிலும் பயின்றுவரும் 94,00,000 மாணவ மாணவியரும் தரமான கல்வி பெற வேண்டுமாயின் அவற்றில் பணியாற்றி வரும் 2,70,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பெருமக்கள் மனநிறைவுடனும் ஆர்வத்துடனும் பணி செய்து வரும் சூழலை உருவாக்குவதும் இன்றியமையாத ஒன்று என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கும் இது பொருந்துவதாகும். இந்த அடிப்படையில் கடந்த சில ஆண்டுகளில் இவ்வரசு ஆசிரியர் சமுதாயத்தின் நெடுநாளைய கோரிக்கைகள் பலவற்றைப் பரிவுடன் ஆய்வு செய்து, தீர்த்து வைத்து, அவர்களுக்குப் பல்வேறு உதவிகளையும், சலுகைகளையும் நல்கி உள்ளது.

**பள்ளி ஆசிரியர் நலன், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்றமை:**

தமிழகத்தில் உள்ள சுமார் 23,000 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளிலும் பணியாற்றிவந்த ஆசிரியர்கள் கடந்த பல ஆண்டுகளாகத் தங்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் எனத் தொடர்ந்து கோரி வந்துள்ளனர். அக்கோரிக்கையை அரசு ஏற்று அவர்கள் அனைவரும் (ஏறத்தாழ 95,000 பேர்கள் )1.6.1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அப்பள்ளிகளில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையை ஆசிரியர் சமுதாயம் பெரிதும் வரவேற்றுள்ளது.

இடை நிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்ற இளநிலை-(ஹையர் கிரேடு) ஆசிரியர்களை அத்தகுதி பெற்றபின் அடுத்த செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் உடனுக்குடன் (யாதொரு தனி ஆணையுமின்றி) இடை நிலைக்கு உயர்த்தி இடைநிலைச் சம்பளம் தரவேண்டும் என்ற நிலையான அரசாணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இளநிலை ஆசிரியர்களும், இடைநிலைத் தகுதி பெற்று இடைநிலைச் சம்பளம் பெற வகை செய்து தமிழ்நாட்டுக் கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் மூலம் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாட முறை ஒன்றை அரசு நடத்தி வருகிறது. படிப்படியாக இளநிலை ஆசிரியர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் எட்டாம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பின்னர், இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு 1.6.1981 முதல் அவர்களுக்கு அவரவர் ஊதிய



சிரியர் விருது வழங்கு விழா



நல்லாசிரியர் விருது வழங்கு விழா

விகிதத்தில் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**முதல் நிலை-நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்**

முதல்நிலை (பிரைமரி) பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் யாதொரு நிபந்தனையின்றிச் சிறப்பு ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

நடுநிலைப்பள்ளிகளில் இடைநிலைத் தர (செகண்டரிகிரேடு) தலைமையாசிரியராகப் பணியாற்றுபவர் பி.டி. அல்லது தமிழாசிரியர் தகுதி பெற்றால் அடுத்த செப்டம்பர் முதல் தேதியிலிருந்து பி.டி. ஆசிரியர் சம்பள விகிதத்தில் ஊதியம் பெற வகை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பதவி காலியாகும்பொழுது அந்த நிருவாகத்தின் கீழ் பணியாற்றி வரும் இடைநிலை ஆசிரியர்களுள் பி.டி. தமிழாசிரியர் தகுதி பெற்றுள்ள பணி மூப்பு உடையவரை அப்பதவியில் நியமிக்கவும், அவ்வாறு தகுதி உடையவர் அந்நிருவாகத்தின் கீழ் பணி செய்து வராத பட்சத்தில் வெளியிலிருந்து தமிழாசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுத்த பி.டி. தரத்தில் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியராக நியமித்துக் கொள்ளவும் ஆணை வெளியிடப்பட்டு உள்ளது. இப்பொழுதுதான் முதன் முதலாகத் தமிழாசிரியர்களும் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களாக நியமனம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் பணி செய்து வரும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களின் முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிக்கு உரிய தகுதி பெற்றவர்கள் வகித்துவரும் பதவிகள் ஆண்டுக்கு ஏறத்தாழ 200 வீதம் முழுநேரப் பதவிகளாக உயர்த்தப்பட்டு வருகின்றன.

**பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் ஈட்டிய விடுப்பு நாட்கள் அதிகரிப்பு**

அனைத்து நிருவாகங்களின் கீழும் உள்ள தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளி முடிய அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வரும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கும் ஆண்டுக்கு ஈட்டிய விடுப்பு நாள் எண்ணிக்கையை 3-லிருந்து 10ஆக 1982-83-லிருந்து உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**20 ஆண்டுப் பணிக்குச் சிறப்பு நிலை**

ஆசிரியர்களில் அவரவர் நிலையில் திருப்திகரமாக 20 ஆண்டு பணியாற்றுபவர்களுக்கு (அவர்கள் தம் பதவிக்குரிய தேர்வு நிலையில் 10 ஆண்டு பணியாற்றி முடித்திராவிட்டாலும் கூட) சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1.6.'81 முதல் இளநிலை, இடைநிலை மற்றும் அவற்றுக்குச் சமமான நிலை ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டு முதல், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் அதே ஊதிய விகிதத்தில் உள்ள இதர ஆசிரியர்களுக்கும் தரப்பட்டுள்ளது. ஆசிரியர் பணியின் தனித் தன்மையைக் கருதி இச்சலுகை தரப்பட்டுள்ளது.

**அரசுப் பணிகளில் ஏ. பி. சி. பிரிவுகள் இணைப்பு**

அரசுப் பள்ளிகளில் முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியிலிருந்து வந்தவர்கள் (1.4.70க்கு முன் நியமிக்கப்பட்டவர்கள்) பி. பிரிவு என்றும் மற்றவர்கள் ஏ. பிரிவு என்றும் வைக்கப்பட்டு அவ்விரு பிரிவினரிடையே பணி நிலைமைகள் ஒரே சீராக இல்லாதது பற்றித் தொடர்ந்து குறை தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வரசு அவ்விரு பிரிவுகளையும் நியாயமான அடிப்படையில் ஒருங்கிணைத்து 2.11.'78 அன்று ஆணையிட்டது. அவ்வாணை செல்லுபடியாகக் கூடியது என்று 1980ல் டெல்லி உச்ச நீதி மன்றமும் தீர்ப்பளித்தது. அந்த ஒருங்கிணைப்பு ஆணை தற்பொழுது செயல்படுத்தப்பட்டு இரு பிரிவினரிடையேயும் பணி நிலைமைகள் ஏறத்தாழ ஒரே சீராக்கப்பட்டுள்ளன.

அரசு ஏற்று நடத்தி வந்த நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களையும் (சி பிரிவு) அரசு ஊழியர்களாக ஒருங்கிணைக்க அரசு ஆணையிட்டு உள்ளது.

ஒவ்வொரு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளியிலும், பள்ளித் தலைமையாசிரியரும், ஒரு இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியைச் சார்ந்தவராகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறை அல்லாத பணிக்கான ஈட்டிய விடுப்பு வசதிகளை அவர்கள் பெறலாம்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் துறைத் தேர்வுகளை எழுதி அவற்றில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் அவ்வாறு தேர்ச்சி பெறாதவர்கள் இரண்டாவதும் அதற்கு அடுத்த ஆண்டுக்கான ஊதிய உயர்வுகளும் பெற இயலாத நிலை இருந்தது. இந்நிலையை மாற்றித் தகுதிகாண் பருவம் முடிப்பதற்குத் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டியதில்லையென்றும் அவர்கள் எல்லா ஆண்டு ஊதிய உயர்வுகளும் பெற வழி செய்யும் வகையிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் துறைத் தேர்வுகளை நீக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளிகள்**

தனியார் பள்ளி ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்புக்காகவும் அவர்கள் நன்மைக்காகவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**தனியார் பள்ளிகளில் நியமன விதிகளில் கட்டுப்பாடு**

சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை ஆதிதிராவிடர் மற்றும் மலைச் சாதியினருக்கும் 50விழுக்காடு பதவிகளைப் பிற்பட்டோருக்கும் ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளிகளில் மீண்டும் பணியில் சேர்க்க ஆணையிடப்பட்ட ஆசிரியர்களை நிருவாகங்கள் கண்டிப்பாக நியமனம் செய்வதற்கான வரன் முறைகள்:**

தனியார் பள்ளி நிருவாகங்களில் சிலவற்றால் பதவிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மேல்முறையீட்டில் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் திரும்பவும் பணியில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடும் பொழுது இந்நிருவாகங்கள் அவ்வாணையைச் செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருந்தது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் இன்னலைக் களைந்திடு விதிகளைக் கண்டிப்பாக அமல் படுத்தும் நோக்கத்துடன் அப்படிப்பட்ட பள்ளிகளின் பணியாளர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை ஆய்வு அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை அவர் பள்ளியிலிருந்து கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு அவர் பதவியோடு, சேர்த்து மாற்றிவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளிகள் உரிய விதிகளைப் பின்பற்றாவிட்டால் அவற்றுக்கு மானியம் தர, பள்ளிக் கல்வித்துறை மறுத்துவிடலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளிகளில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுபவர்களுக்குப் பாதுகாப்பு**

தனியார் பள்ளிகளில் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பள்ளி நிருவாகங்களால் தொல்லைப்படுத்தப்படாமல் காத்துக்கொள்ளவும், அவர்கள்மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை தற்காலிக வேலை நீக்கக் காலத்திற்குள் (பொதுவாக 2 மாதம் உரிய கல்வித்துறை அதிகாரியின் முன் அனுமதி பெற்று நீட்டித்தால் கூடுதலாக மேலும் 2 மாதம் வரை) முடிவடையும்படி பார்த்துக் கொள்ளவும் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகளுக்குத் தக்க செயல்முறைக் கட்டளைகளைப் பள்ளிக் கல்வி இயக்குநர் இட்டுள்ளார்.

**தனியார் பள்ளிச் சட்ட மறு ஆய்வுக்குழு**

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1973-மற்றும் அச்சட்டத்தின் கீழ் வகுத்த விதிகள் 1974 ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை வெளியிட அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காகப் பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் வல்லுநர் குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

**தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பணங்கள் போன்றவை**

அரசுப் பணியாளர்கள் ஏற்கெனவேபெற்று வந்த பின் வரும் சலுகைகளும் அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன:

(அ) அரசு நிதியிலிருந்து பின் வரும் முன்பணங்களைத் தருதல்

1. விழா முன்பணம்.
2. கைத்தறி, கதர்த் துணி வாங்க முன்பணம்.
3. சைக்கிள் வாங்குவதற்கான முன்பணம்

(ஆ) சி & டி பிரிவின் கீழ்வரும் ஆசிரியர்களுள் கண்ணாடி தேவைப்படுபவர்கள் தங்கள் பணிக்காலத்தில் ஒரு முறை கண்ணாடி வாங்கும் செலவை ரூ. 40-க்கு மேற்படாமல் அரசுப் பணத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களில் சி & டி, பிரிவுகளைச்சார்ந்தவர்களுள் தேவைப்படுபவர்களுக்கு காது ஒலி வழங்கும் கருவிகளை இலவசமாக வழங்கும் சலுகை 1981-82ல் விரிவாக்கப்பட்டது.

**தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒரு நிருவாகத்திலிருந்து மற்றொரு நிருவாகத்திற்கு மாற்றம்**

தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒரு நிருவாகத்திலிருந்து மற்றொரு நிருவாகத்திற்கு முழுப் பணி உரிமைகளுடன் மாற்றுதலில் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**தனியார் பள்ளி குற்றேவலர் பதவிகள், அடிப்படை ஊழியர் பணியிடங்களாக உயர்வு**

தனியார் பள்ளிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி செய்யும் குற்றேவலர் பணியிடங்களை அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் அடிப்படை ஊழியர் பணியிடங்களுக்கு ஈடாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

**மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்**

1978-79ல் அமலுக்கு வந்த பிளஸ் 2 கல்வியைப் பள்ளிகளில் வைக்கவேண்டும் என்று இவ்வரசு எடுத்த சீரிய முடிவின் காரணமாக மேல்நிலைப்பள்ளிக் கல்வி வசதி தமிழகத்தில் கிராமப்புறங்களுக்கெல்லாம் எளிதில் கிட்டியதோடு, பள்ளிகளில் ஏற்கெனவே பணிசெய்து வந்த ஆசிரியர்களில் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றிருந்தவர்களுள் பெரும் எண்ணிக்கையினர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியராக நியமனம் பெற்று உயர் சம்பளம் பெறவும் வழி ஏற்பட்டுள்ளது. பட்ட மேற்படிப்புத் தகுதி இல்லாதவர்களும் பலர் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்களாக மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் பெற்றனர். இவர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு 1.7.'78-லிருந்து 5 ஆண்டுகளுக்குள் பட்ட மேற்படிப்புத் தகுதி அடைய அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இந்தத் தகுதியை அடைய அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளதுடன் வேறு பல உதவிகளையும் செய்து வருகிறது.

**உயர்நிலை - மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள்**

உயர்நிலை - மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கல்வி விஷயங்களை நன்கு கவனிக்க வகை செய்து அன்றாட நிருவாக விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான மாணவர் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேலுள்ள உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு பணி மூப்புள்ள ஆசிரியரை உதவித் தலைமையாசிரியராக நியமித்து அவருக்கு மாதம் ரூ. 25 படி தர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷிப்ட்





நல்லாசிரியர் விருது வழங்கு விழா

முறைப்படி செயல்படும் பள்ளிகளில் இரண்டாவதாக ஓர் உதவி தலைமையாசிரியரையும் நியமித்துக்கொள்ளலாம்.

**பொது (பள்ளி ஆசிரியர்கள்)**

**பள்ளி ஆசிரியர் பிள்ளைகளுக்குத் தொழிற்படிப்புப் படிக்கப் படிப்பு உதவித்தொகைகள்**

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதியிலிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குத் தொழிற் படிப்புப் படிக்க, படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள ஓய்வுபெற்ற மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப் படிப்புதவித் தொகையின் மதிப்பு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

**ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம்**

ஆசிரியர் குறைகளை அவ்வப்போது அறிந்து பல்வேறு மட்டங்களில் உரிய பரிகாரம் காண்பதற்கு வகை செய்து ஆசிரியர் சங்கங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் தரப்பட்டு வருகிறது.

**மாநில – மாவட்ட ஆசிரியர் நலக் குழுக்கள்**

மாநில மட்டத்திலும் மாவட்டங்களிலும் ஆசிரியர்நலனுக்காகக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கல்லூரி ஆசிரியர்கள் நலன்:**

**பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள்**

பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து 1977-78ல் தான் தீர்த்து வைக்கப்பட்டது. பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள் அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகள், சமுதாயப் பணிப்பள்ளிகள், கீழ்த்திசைப் படிப்புக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள்; சட்டக் கல்லூரிகள்; பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும்; மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகிய அனைத்தின் ஆசிரியர்களுக்கும் 1.1.74 முதல் அமல்ாக்கப்பட்டன. பணப்பயன் 1.1.1977 முதல் தரப்பட்டது. ரூ. 700-40-1100-50-1300-இபி. -50-1600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1,100 என்ற நிலையில் பேராசிரியர்களின் தொடக்கச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 1,200-1,900 என்னும் சம்பள விகிதம் தரப்பட்டது.

**பயிற்றுநர்கள் - விளக்குநர்களுக்கு உதவிப் பேராசிரியராகப் பதவி உயர்வு**

1.12.77 அன்று, மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள் (டெமான்ஸ்ரேட்டர்) பயிற்றுநர் (டியூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம்; போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1.12.'77 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டது. அத்தேதிக்குப் பின் இந்தத் தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்டமேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கு இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியையடையும் நாள் முதல் தரப்பட்டு வருகிறது.

**10+2+3 படிப்பு முறையினால் பாதிக்கப்படாதவாறு கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு:**

10+2+3 ஆண்டு படிப்பு முறை அமலுக்கு வந்து புகுமுக வகுப்பு நீங்கியதால் கல்லூரி ஆசிரியர்கள் பாதிக்கப்படாதவாறு பணிப் பாதுகாப்புத் தரப்பட்டது.

**உதவிப் பேராசிரியர்களுள் 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்குப் பேராசிரியராகப் பதவி உயர்வு**

உதவிப் பேராசிரியர்களில் 1.4.80 நிலவரப்படி 10 ஆண்டுகள் பணி செய்து முடித்து இருந்தவர்கள் அனைவரும் ரூ, 700-40-1100-50-1300 இ.பி. -50-1600 சம்பள விகிதத்தில் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். 1.4.80க்குமுன்னரே 10 ஆண்டு அல்லது அதற்கு அதிகமான காலம் பணி செய்திருந்த உதவிப் பேராசிரியர்கள் அன்றையதேதியில் ரூ. 1100க்கு குறைவாகச் சம்பளம் பெற்று வந்தார்களானால் அவர்கள் சம்பளம் அந்நாள் முதல் ரூ. 1100 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அவர்கள் உதவிப் பேராசிரியர் பதவியில் பணி செய்த காலம் என்னவாயிருந்தாலும் சரி. பேராசிரியர்களாக உயர்த்தப்பட்ட பின்னரும் அவர்கள் உதவிப் பேராசிரியர்களாக இருக்கும்பொழுது விரிவுரையாற்றிய மணி நேர அளவுக்கே பணி நேரம் இருக்கும். இனிமேல் 10 ஆண்டு உதவிப் பேராசிரியராகப் பணி செய்து முடித்தவர்கள் மட்டுமே பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவர். உதவிப் பேராசிரியர்கள் இவ்வாறு பேராசிரியர்களாவதால் ஒரே துறையில் பல பேராசிரியர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டால் அவர்களுள் பணி மூப்பு மற்றும் தகுதி இரண்டின் அடிப்படையில் துறைத் தலைவர் நியமிக்கப்படுவார்.

**ஆ**சிரியர்கள் நிலை உயர்ந்தாலொழிய-சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கு நன்மதிப்புக் கிடைத்தாலொழிய-ஆசிரியர்கள் எதிர்காலச் சிற்பிகள் என்பது மக்களால் உணரப்பட்டாலொழிய, 'நாம் குழந்தைகளைப் பெறுகிறோம்; அவர்கள் உடலை வளர்க்கிறோம்; ஆனால் உள்ளத்தை வளர்க்கின்றவர்கள் ஆசிரியர்கள்தான்' என்று பெற்றோர் உணர்ந்தாலொழிய நம்முடைய கல்விக்காக நாம் எவ்வளவு பணத்தைச் செலவழித்தாலும் அதன் முழுப் பயனும் சமுதாயத்துக்குக் கிடைப்பது என்பது இயலாத காரியமாகும்.

—பேரறிஞர் அண்ணா

**தனியார் கல்லூரி ஆசிரியர்கள் நலன்**

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு முழுமையாகவும் காலத்தாழ்வின்றியும் சம்பளம் கிடைக்கச் செய்ய வகை செய்து அக்கல்லூரிகளின் சம்பளச் செலவில் நிகரப் பற்றாக் குறை முழுவதையும் அரசே ஏற்றுச் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாகப் பட்டுவாடாச் செய்யும் முறை அமலாக்கப்பட்டுள்ளது.

பின்வரும் நன்மைகளும் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளன.

(1) பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்துவிட்டால் அவர் குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் 'குழு ஈட்டுறுதித் திட்டம்' 2.6.1979.

(2) அரசுக் கல்லூரிகளைப் போலவே விடுப்புச் சலுகைகள்.

(3) அரசு மருத்துவ மனைகளில் இலவசமாக மருத்துவம் செய்து கொள்ளும் சலுகை.

(4) பண்டிகை முன்பணம், வெள்ளம் போன்ற நிவாரண முன்பணம் போன்றவை வழங்குதல்.

நிருவாகம் சரிவர இல்லாத தனியார் கல்லூரிகளிலும் நிர்வாகங்களைத் தாமாகவே அரசிடம் ஒப்படைக்கும் கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துகிறது. உதாரணமாக வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி கல்லூரியை தற்காலிகமாகவும், சிவகங்கை ராஜா துரைசிங்கம் கல்லூரியை நிரந்தரமாகவும் அரசு ஏற்று நடத்தி வருகிறது. இந்நடவடிக்கைகளால் சம்பந்தப்பட்ட தனியார் கல்லூரி ஆசிரியர்களும் பயனடைகின்றனர்.

உபரி ஆசிரியர்கள் ஒரு தனியார் கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்கு மாற்றப் பணித் திட்டத்தின் கீழ் (ரீடிப்ளாய்மெண்டு) அனுப்பப்படும்போது அங்கேயே அவர்கள் நிரந்தரமாக இருக்க விரும்பினால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஒரு கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்கு ''மாற்றலில்'' செல்ல சம்பந்தப்பட்ட நிருவாகங்கள் ஒப்புக் கொண்டால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



தனியார் கல்லூரி ஆசிரியர் அல்லாதோர் தகுந்த கல்வித் தகுதியைப் பெற்றால் அவர்களையும் கல்லூரி ஆசிரியராக நியமிக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

**கல்லூரிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் சம்பள விகிதங்கள்**

கலைக் கல்லூரி உடற்பயிற்சி இயக்குநர்கள் மூன்று பிரிவினர்களையும் உடற்பயிற்சி இயக்குநர் என்ற பெயரில் ஒரே பிரிவாக்கி சம்பள விகிதம் ரூ. 700-40-1100லிருந்து ரூ. 700-40-1100-50-1300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போன்று சலுகைகள் கல்லூரி நூலகர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

**முதுகலைப் பட்டப் படிப்புத்துறை தலைவர்கள் பதவிகள்**

முதுகலைப் பட்டப்படிப்புப் பேராசிரியர் மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புத்துறைத்தலைவர் பதவியைத் திரும்பவும் ஏற்படுத்தி ரூ. 1200-1900 ஊதிய விகிதத்தில் அவர்களுக்கு ஊதியம் தர ஆணையிடப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பக் கல்வி நிறுவன ஆசிரியர்கள் நலன்**

பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் பொறியியற் கல்லூரிகள், மற்றும் பாலிடெக்னிக்குகளின் ஆசிரியர்களில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அரசின் செலவில் உயர் படிப்பு, பயிற்சி ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையப் பணியாளர்களுக்கும் ''குழு ஈட்டுறுதித் திட்டம்'' விரிவாக்கப்பட்டுள்ளது.

பொறியியற் கல்லூரி பாலிடெக்னிக்குகளில் 1.1.1975 வரை பதவி உயர்வு பெற்ற விரிவுரையாளர்களுக்கும் ரூ.1100 ஆரம்ப சம்பளமாக அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப்பள்ளி ஆசிரியர்கள் தனியார் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆசிரியர்கள் பிற பணியாளர்கள், ஆகியோருக்கான ஓய்வு ஊதியம் மற்றும் குடும்ப ஓய்வு ஊதிய சலுகைகள் தாராளமாக்கப் பட்டமை.

தனியார் பள்ளி ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்கள்; தனியார் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்களின் ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் ஆகிய பல்வேறு வகையினருள் பல்வேறு குறிப்பிட்ட கால கட்டங்களுக்கு முன் ஓய்வு பெற்றவர்கள் அல்லது பணியிலிருக்கும்பொழுது இறந்து விட்டவர்கள் ஆகியவர்களுக்கு அல்லது அவர்கள் குடும்பங்களுக்கு ஓய்வு ஊதியம் அல்லது குடும்ப ஓய்வு ஊதியம் கொடுக்கப்பெறாத நிலை இருந்து வந்தது. அவ்வாறு பெறாதவர்கள் அச்சலுகைகளை தங்களுக்கும் கொடுக்கும்படி வேண்டி நெடுநாளாகச்-செய்யப்பட்டு வந்த கோரிக்கைகளை அரசு பரிவுடன் ஆய்வு செய்து அவர்களுக்கெல்லாம் ஓய்வு ஊதியம் அல்லது குடும்ப ஓய்வு ஊதியம் தரத்தக்க வகையில் தாராளமான ஆணைகளை அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கானவர் பயன் எய்துவர்.

# செலவு குறைய, சிபாரிசுப்படி உரமிடுங்கள்.




நெல்லுக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு குவின்டாலுக்கான உற்பத்தி செலவு குறையும். குறுவை நெல்லைப் பொறுத்தவரை, இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| உயர்விளைச்சல் நெல் சாகுபடி செலவு (ஏக்கருக்கு) | ரூ. 960 | ரூ. 1286 |
| விளைச்சல் (ஏக்கருக்கு) | 8 குவி. | 20 குவி. |
| எனவே ஒரு குவின்டால் உற்பத்திக்கு ஆகும் செலவு | ரூ. 120 | ரூ. 64 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து விடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது.

குறுவை நெல்லுக்கு ஏற்ற உரம் விஜய் 17-17-17. ஏக்கருக்கு 90 கிலோ விஜய் 17-17-17 உரத்தை அடியுரமாகவும் 35 கிலோ விஜய் யூரியாவை மேலுரமாகவும் இடவேண்டும். 5 கிலோ யூரியாவுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு என்ற விகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

மேலும் நெல் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS



சமச்சீர் உரமிட
விஜய்

| விஜய் 17-17-17 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 17 |
| மணிச் சத்து | 17 |
| சாம்பல் சத்து | 17 |
| கிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 12.5 |

HTM-MPL-2831




ஆண்டுதோறும், தமிழக அரசின் வருமானத்தைப் பெருக்கித் தமிழக மக்களுக்கு வளமான வாழ்வை அளிப் பதில், தமிழக அரசு நல்ல முன்னேற்றத்தைக் காட்டி வரு கிறது- தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், அதாவது, 1975—76 ல் பொதுக்கல்விக்கு 141 கோடி செலவழிக்கப்பட்டது; இன்று சுமார் ரூ. 265 கோடி செலவு செய்யப்படுகிறது. மருத்துவம்-பொதுநலத்துறையின் மூலம் முன்பு ரூ. 56 கோடி செலவழிக்கப்பட்டது: மக்களுக்கு வளமான வாழ்வு அளிக்க, இன்று சுமார் ரூ. 130 கோடி செலவு செய்யப்படுகிறது.

**மாண்புமிகு நிதியமைச்சர்**
**டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்**



தமிழக அரசு செயல்படுத்தி வரும் தூத்துக்குடி அனல் மின்திட்டம், சேர்வலாறு நீர் மின் திட்டம், காடம்பாறை நீர் ஏற்று மின்திட்டம், குந்தா கடை நிலை நீர் மின் உற் பத்தித் திட்டம் ஆகியவையும் விரைவுபடுத்தப்படும். இதன் மூலம் 680 மெகாவாட் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்துக் கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம், சண்முகா நதி நீர் மின் திட்டம், மேல் அமராவதி நீர் மின்திட்டம் ஆகியவற்றின் ஆரம்ப வேலை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் 180 மெகாவாட் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

**மாண்புமிகு மின்துறை அமைச்சர்**
**திரு எஸ். இராமச்சந்திரன்**



சிறு தொழில்களையும், கிராமத் தொழில்களையும் ஏராளமான அளவில் உருவாக்கிப் பெருமளவுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்பது தமிழ்நாடு அரசின்தொழில் கொள்கையாகும். கடந்த மூன்றாண்டுகளில் இவ்வகையில் சிறு தொழில்கள், கிராமத் தொழில்களின் வழியாகப் பெரு மளவுக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது.

சிறிய தொழில்களைச் சிற்றூர்தோறும் வளர்ப்பதால், நாட்டின் பொருளாதாரத்தைப் பொலிவாக்க முடியும் என்ற வகையில் ஜப்பான் நாடு சீர் பெற்றுச் செழித்திருப்பதை உலகமே கண்டு வியந்திருக்கிறது. அந்த இலட்சிய அடிப் படையில் கிராமத் தொழிலை ஊரகத் தொழில்களைப் பெருக்கவும், - நலிந்த எளிய கிராம மக்களின் வாழ்வில் புன் னகை அரும்பவும், புதிய திட்டங்களை நமது அரசு நாளும் வகுத்து வருகின்றது.

**மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்**
**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**



நிலம் வைத்திருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்துன் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும் அதன் பேரில் உள்ள நன்மைகளை முறைப்படி பெறுவதிலும் பலவித இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

இந்த இன்னல்களை நீக்கி விவசாயிகள் நன்மைபெற வேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

அந்தத் திட்டம் தான் ''நில உடைமைப் பதிவ மேம்பாட்டுத் திட்டம்''

கிராம செட்டில்மெண்டு பதிவேடுகள், சிட்டாபோன்ற நிலப் பதிவேடுகள்- அவற்றின் பராமரிப்பு, விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் உள்ள சட்ட பூர்வமான உடைமைகளை பாதுகாத்து கொடுப்பது அரசின் கடமையாகும்.

**மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்**

**திரு எஸ். டி. சோமசுந்தரம்**



தமிழக வேளாண்மைத்துறை உருவாகி நூறு ஆண்டுகள் ஆகின்றன. நூற்றாண்டு விழாக்காணும் இவ்வாண்டிலே புரட்சித் தலைவர் அரசு இந்திய அரசின் மூலம், உலக வங்கியிடம் ரூ. 36½ கோடி நிதி உதவி பெற்று கடந்த 1.9.1981 முதல் 'பயிற்சி மற்றும் தொடர்பு வழி திட்டம்' அதாவது Training and visit system' என்னும் திட்டத்தைத் தமிழகத்தின் 8 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாவட்டம் நீங்கலாக மீதமுள்ள 7 மாவட்டங்களில் இத்திட்டம் 1.7.1982 முதல்செயல்படுத்தப்படும்.

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலாக உயர்மட்டக் குழுவை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைப்படி ரூ. 118 கோடிக்கு 'வழிவகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ரூ. 26.84 கோடி அளவில் தக்காவிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்படி அடுக்கடுக்கான நன்மைகளை உழவர் பெருமக்களின் நலன் கருதிப் புரட்சித்தலைவர் அரசு செய்து வருகிறது.

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்**

**டாக்டர் கா. காளிமுத்து**

''வீட்டுக்கு ஒரு மரம்'' என்பதை மாற்றி, இப்பொழுது ''குழந்தைக்கு ஒரு மரம்'' வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

தமிழக வனத்துறையின் மூலமும், பொதுமக்கள், பொது நிறுவனங்கள் மூலமும் கடந்த ஆண்டில் சுமார் 2 கோடி நாற்றுகள் வழ்ங்கப்பட்டு நடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 2 கோடி நாற்றுகள் நட்டு வளர்ப்பது என்று திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் விறகுத் தேவைக்காக சமுதாயக் காடுகள்-விரிவாக்கக் காடுகள் வளர்க்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இனிமேல் புதிதாக வீடு கட்ட அனுமதி வழங்கும் பொழுது வீட்டைச் சுற்றி, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மரங்களும் நட்டு வளர்க்க வேண்டும் என்ற விதியும் சேர்க்க வேண்டும் என்ற கருத்து ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர்**

**திரு இராம. வீரப்பன்**



பொருளாதார்மேம்பாட்டில்அக்கறை் கொண்டு, வாங்கிய கடனை உழவர் பெருமக்கள் குறிப்பாக பெரு விவசாயிகள் திரும்பத் தரவேண்டும். அதே நேரத்தில் குறைந்த செலவில் அதிக வருவாய் பெறும் பயிர்த்தொழில் உபதொழில் போன்றவற்றிற்கு அரசின் திட்டப்படி கூட்டுறவு அமைப்பு நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் பலனை உண ரவும் உழவர்கள் முன்வரவேண்டும்.

இந்த ஏற்பாடுகளால் நிலைமையில் முன்னேற்றம் காண இயலும். கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்காக உள்ள அமைப் புகள். அவர்களால் நடத்தப்படும் அமைப்புகள் மக்கள் கூட் டுறவுச் சங்கங்களின்பால் தம் கடமைகளை உணர்ந்து சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளைச் செலுத்தி வந்தால், அச்சங்கங்களுக்குப் புத்துயிர் ஏற்பட்டு மேலும் சிறப்பாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும்.

**மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சர்**

**திரு சி. பொன்னையன்**





14 வயது முடிய அனைவருக்கும் தொடக்கக் கல்வி வசதி அளிக்கவேண்டும் என்பது இந்திய அரசியல் சட்டத்தின் கோட்பாடாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1984-85) 6-11 வயதுத் தொகுதியில் 95% யினரையும் 11-14 வயதுத் தொகுதியில்50% யினரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்பது அனைத்து இந்தியாவிற்கும் மைய அரசு திட்டக்குழு வகுத்துள்ள இலக்காகும். தமிழகத்தைப் பொருத்தவரையில் தற்பொழுது (1980-81) 6-11 வயதுத் தொகுதியினரில் 95.22 யினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 61.42% யினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடக்கப் பள்ளிகளில் உரிய வயதுச் சிறுவர்கள் அனைவரையும் சேர்ப்பதற்கும் சேர்ந்த மாணவர்கள் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன,

**மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்**

**திரு செ. அரங்கநாயகம்**



நகரங்களும் நகரையடுத்துள்ள புறநகர்ப்பகுதிகள் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களிலும் முறையான வளர்ச்சி ஏற்பட்டு. அவை சிறுசிறு நகரங்கள் போல் மிளிர, அரசு மேற்கொண்டுள்ள அருமையான திட்டம் தான் 'தன்னிறைவுத்திட்டம்' என்பதாகும். இது மிகப்பெரிய புரட்சிகரமான திட்டமாகும். கடந்த 30 ஆண்டுகளாக, சாதிக்க முடி[illegible] 3 ஆண்டுகளில் சாதிக்கும் திட்டம்.

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை [illegible]**

**திரு ப. குழந்தைவேலு**

85338



## அண்ணா வழியில்....

பொருளாதார, சமத்துவம் மற்றும் மக்களுடைய சமத்துவம் இரண்டும் தான் அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கை. இந்த நிலையில் நின்று பார்த்தால் அண்ணாவின் கொள்கை நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், "மக்களுக்காகத் தான் கொள்கையே தவிர, கொள்கைக்காக மக்கள் அல்ல." இது தான் எனக்குத் தெரிந்தவரையில் நான் அறிந்து கொண்ட பாடம். சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும். சமுதாயத்திலே பொருளாதாரத்தையும், சமுதாய அமைப்பையும் சமத்துவ நிலைக்குக் கொண்டு வர வேண்டும். சமநிலைக்குக் கொண்டு வர வேண்டும்.

"லெவலிங் அப், அண்ட் லெவலிங் டவுன்" என்று அமரர் அண்ணா அவர்கள் சொல்லி மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்களை மத்திய நிலைக்குக் கொண்டுவாருங்கள், அதே சமயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களையும் மத்திய நிலைக்குக் கொண்டு வாருங்கள், அந்த நிலை அமைய வேண்டும் என்று எண்ணிய அமரர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று, அவர்களின் கொள்கையைப் புரிந்து கொண்டு நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.





ஜெய்...



தமிழ்நாட்டில் 11,664 நிறுவனங்களில் சுமார் எட்டு இலட்சத்து இருபதாயிரத்து எண்ணூற்று தொன்னூற்று ஒன்பது தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந்த அரசு, தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றுவதிலும், உரிமைகள் பாதுகாப்பதிலும் தீவிர கவனம் செலுத்துவதால், தொழிலாளர்கள் தேவையற்ற வேலை நிறுத்தங்களில் ஈடுபட எந்த அவசியமும் ஏற்படவில்லை. இன்று தமிழ்நாட்டில் காணப்படும் தொழில் அமைதி நிலைமை அனைத்து இந்தியாவிலும் பாராட்டப்படும் அளவிற்கு இருக்கின்றது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
**திரு எஸ். இராகவானந்தம்**

பொதுவாகச் சென்னை போன்ற பெருநகரங்களில் கிடைக்கின்ற மருத்துவ வசதி, மற்ற இடங்களில் கிடைப்பதில்லை என்ற குறைபாடு உண்டு. இக்குறையை மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இந்த அரசு, புதிய திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தி வருகின்றது. அதன்படி, பெருநகரங்களில் கிடைக்கும் வசதிகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் கிடைக்கவும், மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள வசதிகள், தாலுக்கா மருத்துவமனைகளில் கிடைக்கவும், தாலூகா மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால், பெருநகரங்களிலும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் ஏற்படும் கூட்டத்தைத் தவிர்ப்பதுடன், கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு ஆங்காங்கே தரமான சிகிச்சைப் பெறவாய்ப்பு ஏற்படுகின்றது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**டாக்டர் எச். வி. ஹண்டே**





சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்களை அடுத்த ஐந்தாண்டுகளில் நிறைவேற்ற 168 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை நம்முடைய அரசு தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடியும்போது இவைகளின் மூலம் 2 லட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதியைப் பெறும்.

பொதுவாக, தமிழ் நாட்டில் உள்ள விளை நிலங்கள் ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவகையில் பாசன வசதிகளைப் பெறுகின்றன. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 95-சதவிகித நீர் வளத்தைப் பயன்படுத்தி வருகிறோம். எஞ்சியுள்ள நீர் வளத்தையும் பயன்படுத்தவும் பாசனம் பெறும் நிலங்களுக்கு மேலும் உறுதியான பாசன வசதி அளிக்கும் வகையிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர்
**திரு க. இராசாமுகமது**



புரட்சித்தலைவரது அரசு கடந்தஒப்பந்தத்தில்போராட்டம் இல்லாமல் கணிசமாக ஊதிய உயர்வைக் கொடுத்திருக்கிறது. இந்தப் போக்குவரத்துக் கழகத்தொழிலாளர்களது நலனுக்காக இன்னும் பல நல்லத் திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளவிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகத்திலேதான் போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாக இயங்கிகொண்டிருக்கிறதென வெளிநாட்டினரும் பாராட்டுகின்றனர். இது தொடர்ந்து நீடிக்க மக்களின், அரசியல் கட்சிகளின் ஆதரவு தொடர்ந்துத் தேவைப்படுகிறது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
**திரு எஸ். முத்துசாமி**

மத்திய அரசால் தொழிலில்பின்தங்கிய பகுதிகளாக
அறிவிக்கப்பட்டுள்ள 35 வட்டங்கள் தவிர, தமிழக அரசும்
25 வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதிகளாகஏற்
கனவே அறிவித்தது; இவ்வட்டங்களில் தொழில் துவங்குவோர்
மானியதொகைகள் பெற்று வருகின்றனர். தமிழகத்தில்
இன்றும் சில வட்டங்களை தொழிலில் பின்தங்கிய பகுதி
களாக அறிவிக்கவேண்டுமென தமிழக அரசு தொடர்ந்து
மத்திய அரசை வற்புறுத்தி வருவதோடு, மாநில அரசும்
இன்னும் சில வட்டங்களைத்தொழிலில் பின்தங்கிய பகுதி
களாக அறிவிக்க தீவிரமாக பரிசீலித்து வருகிறது. பொதுக்
துறையில் அரியலூரில் ரூபாய் 30 கோடி அளவில் ஏற்படுத்தப்
பட்டுள்ள சிமெண்ட் தொழிற்சாலை, பெரிய செவலையில்
நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தனியார்
துறையிலும் பல புது தொழிற்சாலைகள்-இவ்வரசின் சீரிய
தொழில் முயற்சிகளால் ஏற்பட்ட பலன்கள்



மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
**திரு எஸ். திருநாவுக்கரசு**



தமிழ் நாட்டில் கதர்த்துணிகள் ரூ. 7.54 கோடிக்கு உற்
பத்தி ஆகின்றன. கிராமத் தொழில் பொருள்கள் ரூ. 4 கோடி
அளவுக்கு உற்பத்தி ஆகின்றன. இரண்டிலும் சேர்த்து 4 இலட்
சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள். மேலும்
33,403 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

கதரின் தரத்தை உயர்த்தவும், வடிவமைப்புகள் தயாரிக்க
பவானிசாகரில் ரூ. 5.21 இலட்சம் மதிப்பில் ஓர் ஆராய்ச்சிக்
கூடம் நிறுவிட அரசு அனுமதி அளித்துள்ளது. முதன் முதலாக
இப்படி ஓர் ஆராய்ச்சிக்கூடம் அமைக்கப்படுகிறது. ரூ. 5 இலட்சம்
செலவில் 85 பட்டை போடும் கருவிகளும் 2 பஞ்சு உடைக்கும்
கருவிகளும் பல்வேறு இடங்களில் நிறுவப்படும்.

மாண்புமிகு கதர்-பொதுப்பணித்துறை அமைச்சர்
**திரு எஸ். என். இராசேந்திரன்**



சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் நலனுக்காகவும், மேம்பாட்டிற்காகவும், தனிக் கவனம் செலுத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

தமிழ் நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டு வந்த பலமுனைத் திட்டங்களின் கீழும், கல்வி, வேளாண்மை, கால் நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு, தொழில் போன்ற பல பொதுத் துறை திட்டங்களின் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறையினர் செயற்படுத்தி வரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக மேற் சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின்கீழும் மொத்தத்தில் 47.36 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப்போல் ஆதி திராவிடர், பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

**மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்**
**திரு எம். விஜயசாரதி**



குழந்தைகள் நலநிலையங்கள், இம்மாநிலத்தின் மூலைமுடுக்கிலுள்ள கிராமங்களிலும், ஆதிதிராவிட காலனியிலும், மலைவாழ்மக்கள், மற்றும் போக்குவரத்து வசதியே இல்லாத பூர்வீக பழங்குடிகள் பகுதிகளிலும், அகதிகள்காலனிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1972ம் ஆண்டு 21 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம், படிப்படியாக விரிவடைந்து, இன்று தமிழகத்தில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்**
**திருமதி கோமதி சீனிவாசன்**

## அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

தமிழக அரசு மாநில அரசு ஊழியர்களுக்கு கடந்த மார்ச்சுத் திங்கள் இறுதியில் வரலாறு காணாத வகையில் நான்கு அகவிலைப்படிகளை ஒரே சமயத்தில் அறிவித்தது.

1.12.'81 முதல் ஓர் அகவிலைப்படியும் 1.2.'82 முதல் ஓர் அகவிலைப்படியும் 1.3.'82 முதல் ஓர் அகவிலைப்படியும் 1.5.'82 முதல் நான்காவது அகவிலைப்படியும் வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் தமிழக அரசு பதவி ஏற்ற பிறகு 11 தடவை அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அளித்துள்ளது.

# பத்தும் இரண்டும் படிப்புக்கு உறுதி 10+2

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி"
"நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"
—என்பன பழகிய மொழி

ஆனால்,

"பத்தும் இரண்டும் படிப்புக்கு உறுதி"
—என்பது புது மொழி; பயன் மொழி.

மேலை நாட்டு மாதிரியைத் தழுவி ஏட்டுக் கல்வியைப் பரப்பி, ஏற்றம் பெற வழியின்றி ஏங்கித் தவிக்கும் நிலை மாறி, கற்றதனாலாய பயன், உற்ற தொழில் மேற்கொள்ளல் என்ற கல்வியை நோக்கமுடையதாகச் செய்யும் பத்தும் இரண்டும் என்ற முறை, படிப்புக்கு உறுதியைக் கூட்டுகின்றது. இம்முறையின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஈண்டுக் காண்போம்.

**கல்வி அமைப்பு மாற்றம்**

பன்னெடும் ஆண்டுகளாகப் பல கல்விக் குழுக்களும், பள்ளிப் படிப்பைப் பயனுள்ள



தாக்கி, மாணாக்கர்களிடமும் பெற்றோர்களி
டமும், கல்வியில் நம்பிக்கையையும் உறுதி
யையும் வளர்க்க வேண்டும் என்று பரிந்
துரைத்தன. வளர்ந்து வரும் நாட்டில், கல்விக்
காகப் பெருந்தொகை ஒதுக்கியும் அதில்
பெரும்பங்கு கல்லூரி நிலையில் செலவிட்டு,
அக்கல்லூரிகள் பயன்தரு பல் தொழில்களி
லும் ஈடுபாடு கொள்ள முடியாத பட்டதாரி
களை மட்டும் சமூகத்துக்கு அளித்துக் கொண்
டிருந்தால், நாட்டின் பொருளாதார நலன்
பாதிக்கும் என ஆராய்ந்து, 10+2+3 என்ற
கல்வி அமைப்பு முறை மாற்றத்தைக் கோதாரி
கல்வி ஆணைக்குழு (1964-66 )தெரிவித்தது.
இக்குழுவின் அறிக்கையின் முக்கிய கருத்து,
எண்ணளவில் கல்வி ஆண்டுகளை மாற்றுவது
அன்று; சமூகத்திற்குப் பயனளிக்கக் கூடிய
வகையில், கல்வியை மாற்றி, பல்லாயிரக்

கணக்கான மாணாக்கர்களை, பல்வேறு
தொழில் சார் படிப்பினை மேற்கொண்டு
கல்வி அமைப்பு, நாட்டின் பொருளாதார
முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்க
வேண்டும் என்பது ஆகும்.

கல்வித்துறையில் தமிழகம் தன்னிகரில்லா
முன்னோடியாகப் பல திட்டங்களைக்
கொணர்ந்துள்ளது. பசி வந்திடப் பத்தும்
பறந்திடும் எனில், கல்வி மட்டும் கற்க இய
லுமா என்ற கேள்விக்குப் பதிலாக விளங்கிய
நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்பு
மாநாடுகள் போன்ற புதுத் திட்டங்கள் இந்தி
யாவின் முன்னோடியாகத் தமிழகத்தை ஆக்கி
யது. இவ்வகையில், பல்வேறு மாநிலங்களும்
10+2+3 என்ற கல்வி அமைப்பு முறையை
அமல்படுத்துவதில், இம்முறையமைப்பின்

அடிப்படைக் கார்ணங்களையும், நோக்கங் களையும் அதிகமாகக் கருத்தில் கொள்ள வில்லை. ஆனால், தமிழகக் கல்வித்துறை, முதலிலிருந்தே பல வகையிலும் திட்டமிட்டு, ஆர்ராய்ந்து, எண்ணித்து:ணிந்து, ஏற்றமுறு மேனிலைக் கல்வி முறையை, அறுதியிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் உறுதியுடன் அமல்படுத்தி வருகின்றது; பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்து வருகின்றது.

மத்திய அமைச்சர், ''சிறந்த மேனிலைக் கல்வி முறையையும், தொழில்சார் கல்வியையும் காணவேண்டுமானால் தமிழகத்திற்குச் சென்று பாருங்கள்'' என்று கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் பரிந்துரைக்குமளவிற்குத் தமிழகம் மேனிலைக் கல்வித் திட்டத்தை அமல் நடத்துவதில் சிறந்துள்ளது.

**நலிந்தவர்க்கு நல்லுயர் கல்வி**

தமிழகக் கல்வி வரலாற்றிலேயே, கோதாரி கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரையின் கருத்து நடைமுறைப்படுத்தும் வகையில், மேல்நிலைக் கல்வியை மாபெரும் அளவில் அமல்படுத்தியது ஒரு மைல் கல்லாகும்.

1978-79ல் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே 912 பள்ளிகளில் 1.16 இலட்சம் மா'ணவர்கள் பயிலத் தொடங்கினர். புகுமுக வகுப்புகளில் 78,000 மாணவர்களே உயர் கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் மேல் நிலைக் கல்வியைப் பள்ளிகளில் ஏற் படுத்தியதால் கிராமங்களுக்கு உயர் கல்விப் பயன் கிடைத்து $1\frac{1}{4}$ (ஒன்றேகால்) இலட்சம் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் படித்து வருகின்றார்கள். உயர்கல்வி பட்டிதொட்டிகளில் பரவவும், நலிந்த பிரிவினர் பெறவும் வழி ஏற்பட்டது. இப்போது, இரண்டு ஆண்டு படிப்பிலும் 2,75 இலட்சம் மாணவர்கள் (30.9.81 கணக்குப்படி) படிக்கின்றனர். இதில் 38.06 சதவீதம் பெண்கள் ஆகும்.

**தொழில்சார் கல்வி**

மேல்நிலைக் கல்வியின் மையக் கருத்தாக தொழில் சார்ந்த கல்வி, மிகச் சிறப்பான முறையில் பலவகையிலும் திட்டமிடப்பட்டு, அனைவரும் பாராட்டும் வகையில் அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த திரு பேராசிரியர் கோவிந்தராவ் அவர்கள் மேற்கொண்ட ஓர் ஆராய்ச்சியில், குஜராத், கர்நாடகம், மேற்கு வங்காளம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் பயிலும் தொழில் சார்ந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைவிட, நம் தமிழகத்தில் அதிக மாணவர்கள் படிக்கின்றார்கள் என்ற அரும் பெரும் உண்மையை-சாதனையைக் கண்டுரைத்தார். அவ்வாராய்ச்சியின் போது கண்ட மாநில வாரியாகத் தொழிலோடுகூடிய கல்வி பயின்றவர்கள் விவரம் வருமாறு:—

| மாநிலம் | தொழிலோடு கூடியகல்வி பயின்றவர்கள் |
|---|---|
| தமிழ்நாடு | 24,000 |
| குஜராத் | 3,516 |
| கர்நாடகம் | 2,412 |
| மேற்கு வங்காளம் | 2,300 |
| மகாராட்டிரம் | 2,400 |
| தில்லி | 1,180 |

இப்போது தொழிற்கல்வியில் மட்டும் சுமார் 58,000 மாணவ, மாணவியர் படிக்கின்றார்கள். இவர்களில் 31 சதவீதம் மாணவியர், தொழில் சார்ந்த கல்வியின் வெற்றிக்கு வழி வகுத்த பலவற்றுள் பின்வருபவை முக்கியமான செயல்கள்:

அ. தலைமை ஆசிரியர்களுக்கு, முடிவெடுக்கும் உரிமை வழங்கியது.

ஆ. எல்லாத் துறையினர்களும் தங்கள் அலுவலர்களைப் பகுதிநேர ஆசிரியர்களாகப் பள்ளிகளுக்கு அனுப்பப் பொது அனுமதி.

இ. மாணவர் பயிலும்போதே ஊதியம் பெறும் சட்டாம் பிள்ளைத் திட்டம்.

ஈ. தொழிற்சாலைகளுடன் தொடர்பு.

சமூகநலத் தொண்டில் மாணவியர்



உ. மாவட்ட தொழில் கல்விக்கும் விளக்கமான ஆசிரியர் துணைப் புத்தகங்கள் வெளியிட்டது. இப்புத்தகங்கள் பிற மாநிலக் கல்வியாளர்கள் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

ஊ. மாவட்ட அளவில் தொழில் சார்ந்த கல்விக் குழு அமைத்தல்.

**ஓர் ஆராய்ச்சி**

தொழில் சார்ந்த கல்வியுடன் கூடிய மேல்நிலைக் கல்வியின் பயன் எவ்வாறு உள்ளது என்று திட்டவட்டமாகக் காணுமாறு, வடஆர்க்காடு மாவட்டத்தில் ஓர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் கண்ட உண்மை, இத்திட்டத்தின் வெற்றியைத் தெளிவாக்குகின்ற

இம்மாவட்டத்தில் மேல்நிலைக் கல்வி பயின்ற மாணவர்களில் 47 சதவீதத்தினர், உயர்கல்வியை மேற்கொண்டு தொடர்ந்து படித்து வருகிறார்கள்.



சமூகநலத் தொண்டில் மாணவியர்

49 சதவீதத்தினர், பயன்தரு தொழில் தானாகவோ, பிற அலுவலகங்களிலோ, செய்து வருகின்றனர்.

உயர்கல்வி தொடரும் 47 சதவீத மாணவர்களில் 32% தொழில் கல்வியில் உயர் படிப்பு தொடர்ந்துள்ளனர் என்பது பாராட்டத்தக்கது. மீதமுள்ள 15 சதவீதத்தினரே, பொதுப் படிப்புக்காகக் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.

**மேனிலைக் கல்வி சிறக்க மேற்கொண்ட திட்டங்கள்**

மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணிவிதிகள் ஏப்ரல் 1981ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளியிலிருந்து உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையாக நியமனம் பெறுவதற்கு 1.7.1978 லிருந்து ஐந்தாண்டுக்குள் பட்ட மேற்படிப்புத் தகுதியடைய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் பெற்று வந்த சிறப்பூதியம் 1.9.1981 முதல் ரூ. 25-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டது.

இவ்வாசிரியர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்று முழுமையான தகுதி பெற உதவும் வகையில் அரசு சிறப்புப் பாடமுறைகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. அவர்களுடைய (பட்ட மேற்படிப்பிற்கான) படிப்புக் கட்டணத்தில் ஒரு பகுதியை அரசே ஏற்றுக் கொள்கிறது. மேலும், பள்ளி விடுமுறைக் காலங்களில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் கலந்து கொள்ள இந்த உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் தம் குடும்பங்களை விட்டு அயலிடத்தில் தங்குவதற்கு ஏற்பாட்டுச் செலவை ஈடுகட்ட இவர்களுக்கு ஆளுக்கு ரூ. 1,000 கடனாகவும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

உயர்நிலை-மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கல்வி விஷயங்களை நன்கு கவனிக்க வகை செய்து அன்றாட நிருவாக விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மாணவர் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேலுள்ள உயர்நிலைப் பள்ளி-மேல் நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு பணி மூப்புள்ள ஆசிரியரை உதவித் தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்கு மாதம் ரூ. 25 படிதர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷிப்டு முறைப்படி செயல்படும் பள்ளிகள் இரண்டாவதாக ஓர் உதவித் தலைமை ஆசிரியரையும் நியமித்துக் கொள்ளலாம்.

இத்திட்டம் மேலும் வெற்றி பெற மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், பட்ட மேற்படிப்புப் பெறச் சிறப்புப் பயிற்சி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப நிறுவனங்களில், மேல்நிலைக் கல்வி படித்து வருபவர்களுக்காக 10% இடம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஏற்கனவே ஆய்வுக்கூட உதவியாளர்கள் இல்லாத (அரசு மற்றும் அரசில்லாத) மேல்நிலைப் பள்ளிகளில் 400க்கு 1980 மார்ச் மாதம் பள்ளிக்கு ஓர் ஆய்வுக்கூட உதவியாளர் பதவி ஏற்பளிக்கப்பட்டது. 1981-82 கல்வியாண்டில் 500 பணியிடங்கள் வழங்கப்பட்டன.

கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்து 'கல்லூரி இணையங்களும்' 'பாலி டெக்னிக் இணையங்களும்' அமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. மொத்தம் 661 மேல்நிலைப் பள்ளிகள் 176 கல்லூரிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. பிற மேல்நிலைப்பள்ளிகள் பள்ளித் தொகுப்புகளாக (school clusters) இணைக்கப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க அரசு மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 6000 செலவுக்கும் அரசல்லாத மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் (ரூ. 2,400 என்னும் வரம்புக்குட்பட்டு) 40 விழுக்காடு இணை மான்யத்துக்கும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் தரமான புத்

தகங்களைத் தேர்ந்தெடுக்கவும், விரைவில் அவற்றை வாங்கவும் உதவி செய்யும் வகையில் இத்திட்டத்தின் கீழ் வாங்கக்கூடிய பொருத்தமான புத்தகங்களின் பட்டியல் ஒன்று, வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டு, பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுவரையில் ரூ. 43 இலட்சம் செலவில் இத்திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் பலநோக்கு (Multi Purpose) ஆய்வுக் கூடங்கள் கட்ட அரசு ஒரு பள்ளிக்கு ரூ. 2.5 இலட்சம் வீதம் 630 அரசு பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 1675 இலட்சம் செலவிட ஆணை வழங்கியுள்ளது.

தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 40% மானியத் திட்டத்தின் கீழ் 450 மேல்நிலைப் பள்ளிகள் பயனடையும் வகையில் ரூ. 320 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிலோடு கூடிய கல்வியினை நடத்தப் பகுதிநேர ஆசிரியர்கள் சுமார் 5,000 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 13,000 முழு நேர முதுகலை ஆசிரியர்கள் மேல்நிலை வகுப்புகளை நடத்த என நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடத்திற்கு நவீன விஞ்ஞானக் கருவிகளை வழங்க ஒரு பள்ளிக்கு ரூ. 1 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேல் நிலைப்பள்ளிக்குத் தொழிற்கல்விக்கு மானியமாக, பள்ளி ஒன்றுக்கு ரூ.5,000 வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வியின் சட்டாம் பிள்ளைகள் நியமிக்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 2,000 மாணவர்கள் இதனால் பயனடைகின்றனர்.

மேல்நிலைப் பள்ளிகள் பகுதிநேர நூலகர் நியமனம் செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 10 மாதங்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேல்நிலைக் கல்வி வரை இலவசக் கல்வி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேல்நிலைக் கல்விக்கெனத் தனியாக உடற்கல்வி இயக்குநர்கள் 400 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியக் கல்வி வரலாற்றில் முக்கியக் கல்வி மறுமலர்ச்சித் திட்டமாகிய 10+2+3 கல்வி முறையைப் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் தமிழகம் செயல்படுத்தி வருகின்றது. இதில் நாம் பெருமுயற்சி செய்து வெற்றி கண்டவை பல; என்றாலும், நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டுமென நிரம்ப உள்ளன என்று கருத்தில் கொண்டு, அவற்றைச் செம்மையாகச் செய்ய முயல்வோமாக!

## பாரதியார் நூற்றாண்டு விழா!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா, தரணியே புகழத் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. பாவலர்க்கு மட்டுமே புரியும்படி இருந்த பாட்டுத் தமிழைப் பாமரர்க்கும் விளங்கும்படிச் செய்த பாரதியாரின் பெயர், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பலவற்றிற்கும் உயர்வளிக்கும் விதத்தில் சூட்டப்பட்டது.

1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் நாளன்று தொடங்கிய பாரதி நூற்றாண்டைத் 'தேசிய ஒருமைப்பாடு நாள்' எனத் தமிழக அரசு அறிவித்தது.

பாரதியாரின் பணியையும், வாழ்வுச் சிறப்பையும் விளக்கும் வகையில், எட்டயபுரத்தில் நூற்றாண்டு விழாக் கண்காட்சி அமைக்கப்பட்டது, ஏறத்தாழ ஒரு மாத காலம் நடைபெற்ற அக் கண்காட்சி காண்போரைக் கவர்ச்சிப்பதாக அமைந்திருந்தது.

எட்டயபுரத்தில் உள்ள பாரதி மணி மண்டபத்தை அரசு ஏற்றுக் கொண்டு அதை 2.5 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து எட்டயபுரத்தில் உள்ள மணிமண்டபத்தின் முன்னாலே மகாகவி பாரதியாரின் முழுஉருவச் சிலை நிறுவி, 1981 டிசம்பர் 11-ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது.

பாரதி பற்றிய கலைக்கூடம் அம் மண்டபத்தினருகே அமைக்க 10 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படுகிறது.

பாரதி நூற்றாண்டு நிறைவையொட்டி, முழு நீளத் திரைப்படமொன்று தயாரிப்பதென அரசு முடிவெடுத்துள்ளது.



# பசுமைப் புரட்சி



தமிழகத்தில் வேளாண்மைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, வேளாண்மையின் அபிவிருத்தியே முக்கிய காரணமாக உள்ளது. தமிழ்நாட்டின் அரிசித் தேவைக்கு, வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த நிலைமை மாறி, தன்னிறைவு அடைந்ததோடு மட்டுமல்லாது 1979-80-ஆம் ஆண்டு சுமார் 50,000 டன்கள் அரிசி ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேற்றம் அடைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழக வேளாண்மைத் துறையின் அயராத உழைப்பினாலும் வேளாண் பெருமக்களின் பெருமுயற்சியாலும் 1981-82ஆம் ஆண்டு கீழ்க்கண்ட முன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவு உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| அரிசி | 55.73 இலட்சம் டன்கள். |
| சிறுதானியங்கள் | 20.80 ,, |
| பயறு வகைகள் | 2.80 ,, |
| கரும்பு(வெல்லம்) | 19.18 ,, |
| பருத்தி | 3.50 இலட்சம் பேல்கள் |

உயர்விளைச்சல் தரும் புதிய ரகங்கள் கண்டுபிடிப்பினாலும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நுணுக்கங்களைக் கையாண்டதாலும் உற்பத்தி உயர்வினை அடைய முடிந்தது.

1950-51-ஆம் ஆண்டு 19.31 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, கடந்த ஆண்டு 55.73 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

சிறுதானிய உற்பத்தி 1950-51-ஆம் ஆண்டு 8.33 இலட்சம் டன்களேயாகும். இது, 1981-82-ஆம் ஆண்டு 20.8 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

இதே போன்று 1950-51-ஆம் ஆண்டில் 0.70 இலட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தியானது கடந்த ஆண்டு 2.80 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

பருத்தி உற்பத்தி, 2.26 இலட்சம் பேல்களிலிருந்து 3.50 இலட்சம் பேல்களாக உயர்ந்துள்ளது.

1950-51-ஆம் ஆண்டு 54,000 டன்கள் மட்டுமே இருந்த கரும்பு (வெல்லம்) உற்பத்தி, 1980-82-ஆம் ஆண்டில் 19.18 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

உற்பத்தியினை மேலும் அதிகரித்திட 1982-83-ஆம் ஆண்டில் பயிர் உற்பத்தி கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அரிசி | 68.00 இலட்சம் டன்கள் |
| சிறுதானியங்கள் | 23.05 ,, |
| பயறு வகைகள் | 4.80 ,, |
| கரும்பு(வெல்லம்) | 23.52 ,, |
| பருத்தி | 5.00 இலட்சம் பேல்கள் |

பயறு உற்பத்தி நமது தேவைக்குக் குறைவாகவே உள்ளது. கடந்த ஆண்டு முதல், பயறு உற்பத்தியில் உயர்வு காண 6 ஆண்டுத் தீவிரத் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 1985-86ஆம் ஆண்டு இறுதியில் 6.4 இலட்சம் டன்கள் பயறு உற்பத்தி செய்யப்படும்.

வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்கள் விநியோகம் வேளாண்மைத் துறையின் கிடங்குகள் மற்றும் தனியார் விற்பனை மையங்கள் மூலமும் செயல்படுத்தப்படுகிறது. இடுபொருள்களின் தரம், தரக் கட்டுப்பாட்டுச் சட்டங்களின் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

**1982–83-க்கான புதிய திட்டங்கள்:**

நடைமுறையில் உள்ள திட்டங்கள் தவிர, கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

1. ஆதார மற்றும் சான்றிதழ் பெற்ற விதைகளின் அதிகப்படியான தேவையைக் கருதி 80 எக்டேர் பரப்பளவுள்ள இரண்டு அரசாங்க விதைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படும்.
2. தற்போதுள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்



படித்தவன் உழ வேண்டும்-உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க-உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்னும் நிலை ஏற்பட வேண்டும்.

இந்தியப் பொருளாதாரமே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கட்டப்பட்டிருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா



களை மேம்படுத்துவதோடு, மேலும் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூன்று அமைக்கப்படும்.

பயறு விதைகளைப் பூச்சி தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில்மாவட்டமையக் கிடங்குகள் கட்டப்படும்.

தற்போது செயல்பட்டு வரும் 41 தர நிர்ணயப் பரிசோதனைச் சாலைகளுக்கு உதவும் பொருட்டு குடுமியான் மலையில் மையத் தர நிர்ணயப் பரிசோதனைச் சாலை அமைக்கப்படும்.

வேளாண்மை விரிவாக்கப் பணியினை மேலும் சிறப்புறச் செயல்படுத்திட உலக வங்கியின் உதவியோடு "பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்" 1.9.1981 முதல் 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மற்றைய ஏழு மாவட்டங்களிலும் 1.7.1982 முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் புதிய தொழில் நுணுக்கங்கள் வேளாண் பெருமக்களுக்குத் துரிதமாகவும் தொடர்ச்சியாகவும் தெரிவிக்கப்படும். மேலும் விவசாயிகளின் பயிர்ச் சாகுபடி பற்றிய பிரச்சினைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த நிபுணர்களுக்குத் தெரிவிக்கப் பட்டுப் பிரச்சினைகள் தீர வழிவகைகள் கண்டறியப்படும்.

தமிழக அரசின் உதவியினாலும், வேளாண் பெருமக்களின் ஒத்துழைப்பினாலும் வேளாண்மைத் துறை விரிவாக்க அலுவலர்களின் அயராத உழைப்பின் மூலமும் 1982-83ஆம் ஆண்டு உற்பத்திக் குறியீட்டினை அடைந்து வேளாண்மைத் துறை மேலும் பெருமையுறும்.





# எண்ணெய் வித்துக்கள் பெருக்கத் திட்டம்

மனிதனின் உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது "உணவு எண்ணெய்" என்பதை யாரும் மறுக்க முடியாது. உணவு ஆராய்ச்சியாளர்களின் கணக்குப்படி ஒரு மனிதனுக்கு உணவு எண்ணெயின் மூலம் கிடைக்கும் கொழுப்புச் சத்து, நாள் ஒன்றுக்கு 30 கிராம் தேவைப்படுகிறது. ஆனால், நம் நாட்டில் ஒருவருக்குக் கிடைப்பதோ சராசரி 11 கிராம் கொழுப்புச் சத்துதான். எனவே, இத்தகைய நிலை மாறி, நாட்டு மக்கள் அனைவரின் உடல் நலத்திற்குத் தேவையான கொழுப்புப் பொருட்களினைப் பெற எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் மூலம் அதிக அளவில் தாவர எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க மத்திய, மாநில அரசுகள் பெரு முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி மேம்பாட்டிற்காகத் தனி இயக்கத்தினை 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலேயே துவக்கிய பெருமை தமிழ்நாடு அரசைச் சாரும்.

உணவுஎண்ணெய் உற்பத்துயல் தன்னிறைவு காணவும், தற்போது ஆண்டொன்றிற்கு உணவு எண்ணெய் இறக்குமதிக்கென ரூ. 800கோடிக்கும் அதிகமாக ஆகும் அந்நியச் செலாவணிச் செலவினை நாளடைவில் முழுமையாக நீக்கவும், நமது இந்தியப் பிரதமர் இந்த ஆண்டு (1982) பொங்கல் திருநாளில் அறிவித்துள்ள புதிய 20 அம்சத் திட்டத்தில், இதற்கு முக்கியமான இடம் அளித்துள்ளார்கள். 1982-ஆம் ஆண்டு "உற்பத்தி ஆண்டு" என ஏற்றுக் கொள்ளப்பட்டதால், எண்ணெய் வித்து உற்பத்தியில் மிகுந்த முன்னேற்றம் குறுகிய காலத்திலேயே அடைய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எண்ணெய்வித்துப் பயிர்களிலேயே ஒரு முக்கிய பயிரான நிலக்கடலைச் சாகுபடியில் உலகிலேயே முதல் இடம் வகிப்பது நமது இந்திய நாடுதான். உலகின் நிலக்கடலைப் பயிரில் 40 சதவிகிதப் பரப்பும் 31.7 சதவிகித உற்பத்தியும் நம் நாட்டில்தான் உள்ளது. எனினும் உற்பத்தித் திறனில் நம்நாடு பத்தாவது இடம்தான் வகிக்கிறது. சராசரியாக எக்டேருக்குக் கிடைக்கும் நம் நாட்டின் விளைச்சலான 830 கிலோ, உலக சராசரி விளைச்சலை (900 கிலோ) விடக் குறைவானது.

இந்தியத் துணைக் கண்டத்தில், குஜராத் மாநிலத்திற்கு அடுத்து, தமிழகம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கிறது. நமது நாட்டின் மொத்த உற்பத்தியான 114 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் மட்டும் 16 லட்சம் டன் உற்பத்தி செய்கிறது. தமிழகத்தில் உள்ள சாகுபடிப் பரப்பில் நெல்லுக்கு அடுத்த படியாக நிலக்கடலைதான் அதிகமாக, சுமார் 15 சதம் பரப்பில் பயிரிடப்படுகிறது. நிலக்கடலையில் வழக்கமாக 8.85 லட்சம் எக்டேர் மானாவாரியிலும் 2.50 லட்சம் எக்டேர் பாசனத்தின் கீழும் பயிரிடப்படும். எள் சுமார் 1.40 லட்சம் எக்டேரிலும் ஆமணக்கு 0.13 லட்சம் எக்டேரிலும், சூரியகாந்தி 0.80 லட்சம் எக்டேரிலும், தென்னை 1.40 லட்சம் எக்டேரிலும் பயிரிடப்படுகின்றன.

நிலக்கடலையில் தமிழ்நாட்டின் சராசரி மகசூல் எக்டேருக்கு 1,000 கிலோவுக்கு மேலாகக் கிடைக்கிறது. இது நம் நாட்டின் சராசரி விளைச்சலைவிட அதிகம். இருப்பினும், இதைவிட மேலும் அதிக அளவு விளைச்சல் பெற வாய்ப்பு உள்ளது.



எண்ணெய்வித்துப் பெருக்கத்தின் முக்கியத்துவம் குறித்து, தமிழ்நாடு அரசு எண்ணெய்வித்துப் பெருக்கத்துக்காக ஒரு தனித் துறையை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முறையாக நிறுவியுள்ளது என முன்னரே குறிப்பிடப்பட்டது. எண்ணெய் வித்துப் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படும் தென்னார்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலக்கடலை உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி 3-1-'81 முதல் தமிழ்நாடு எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களின் கூட்டுறவு இணையம் ஒன்றையும் இந்நாட்டிலே குஜராத் மாநிலத்திற்கு அடுத்த படியாக தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத்தின் (தேசிய பால்வள் வளர்ச்சி நிறுவனம்) உதவியோடு நமது மாநிலத்தில் நிறுவிய பெருமை அரசையே சாரும்.

1981-ஆம் ஆண்டு முதல் நிலக்கடலைச் சாகுபடியைப் புதிய பரப்புகளில் பாசனத்தின் கீழ் கொண்டு வர இத்துறை முயற்சிகள் எடுத்து வருகிறது. வழக்கமான பாசனப் பரப்பான 2.66 லட்சம் எக்டேருக்குப் பதில் 1980-81 ஆம் ஆண்டு 3.40 லட்சம் எக்டேர் நிலக்கடலைப் பயிரைப் பாசனத்தின் கீழ் கொண்டு வந்தது. 1981-82ஆம் ஆண்டில் 2.82 லட்சம் எக்டேர் குறியீட்டிற்கு, 4.75 லட்சம் எக்டேர் நிலக்கடலை பாசனப் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் நிலக்கடலை சாகுபடியாகும் பரப்பில் 2 சதம் பரப்பிற்குத் துறையினால் தரமானவிதை வழங்கப்பட்டு வருவது 1982-83-ஆம் ஆண்டில் 3 சதம் பரப்பளவிற்கு உயர்த்தப்படும். இது படிப்படியாக அதிகரித்து ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவிற்குள், மத்திய அரசின் பரிந்துரைப்படி 5 சதம் பரப்பிற்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த 1981-82 ரபி பருவத்தில் புதிய பரப்பில் பாசனத்தின் கீழ் மேட்டூர் கால்வாய்ப்பகுதியில் இருந்து சுமார் 70 நாட்களுக்குப் பொது மராமத்துத் துறையின் உதவியுடன் தண்ணீர் விடப்பட்டு, 6,000 எக்டேர் எள், பெரியார், சேலம் மாவட்டங்களில் பயிரிடப்பட்டது.

**நிதி ஒதுக்கீடு :**

எண்ணெய் வித்துப் பயிர்களுக்காக ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நம் மாநில அரசால் செலவிடப்பட்ட தொகையைக் காட்டிலும் இன்று அதிக அளவில் இவ்வரசு செலவிட்டு நம் மாநிலத்து எண்ணெய்வித்துக்களை விளைவிக்கும் வேளாண் பெருங்குடி மக்களுக்குப் பேருதவி ஆற்றி வருகிறது. 1977-78-ல் எண்ணெய்வித்து மற்றும் தென்னைப் பயிர்களுக்காக மொத்தம் ரூ. 221.90 இலட்சங்கள் செலவிடப்பட்டது. இந்தத் தொகை 1980-81-ல் ரூ. 358.96 இலட்சங்கள் ஆக உயர்ந்து 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 547.57 இலட்சங்கள் என்ற அளவை எட்டியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் எண்ணெய்வித்துத்துறை மொத்தம் ரூ. 673.19 இலட்சங்கள் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இம்மாநிலத்திற்கு, நிலக்கடலை மற்றும் சூரியகாந்தித் திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியுடன் 1980-81-ல் ரூ. 50.61 இலட்சம் செலவிடப்பட்டது. 1981-82-ல் ரூ. 87.39 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 1982-83-ல் ரூ. 147.54 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பொருள் இலக்குகள் :**

1980-81 ஆம் ஆண்டில் பருவ மழை தவறியதால், மாநிலமெங்கும் பயிர்கள் முழுமையாகவும், நல்ல விளைச்சலுடனும் சாகுபடி செய்ய இயலவில்லை. எனவே 9.50 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. மேற்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காகத் தமிழ்நாடு அரசு, நடப்பு ஆண்டில் ரூ. 160.87 இலட்சம் செலவில் வறட்சி நிவாரணத் திட்டம் ஒன்று செயல்படுத்தி, எண்ணெய்வித்துச் சாகுபடிக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்து மற்றும் தென்னை நாற்றுகள் ஆகியவற்றை மானிய விலையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விநியோகம் செய்தது.

மேலும் ஆதி திராவிட வேளாண் மக்களுக்காகச் சிறப்புப் பகுதித் திட்டமொன்று இவ்வாண்டு முதன் முறையாகச் செயலில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிலக்கடலை, சூரியகாந்தி விதை மற்றும் தென்னை நாற்றுப் போன்ற இடு பொருள்கள் 25 சதம் மானிய விலையில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 2.75 இலட்சம் செலவிடப்பட்டு 4705 ஆதி திராவிட விவசாயிகள் பயனடைய வழி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ஆதி



திராவிட விவசாயிகள் பயன் பெறுவதற்கென ரூ. 7.10 இலட்சம் செலவிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர எண்ணெய்வித்து பெருக்கத் திட்டங்களின் சாதனைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டு போவதைப் பின்வரும் புள்ளி விவரங்களினால் அறியலாம். எண்ணெய்வித்து உற்பத்திக்கு உதவும் முக்கியமான இனங்களில், தரமான விதைகளைப் பயன்படுத்துவது சிறந்ததாகும். இந்திய நாட்டிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் அரசுத் துறையே விதைப் பண்ணைகள் அமைத்து, விதைகள் அதிக அளவில் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறது. எண்ணெய்வித்து விதைகள் விநியோகத்தில் 1980-81-ல் அடைந்த சாதனை 3859 டன்கள், 1981-82-ஆம் ஆண்டில் 6704 டன்கள். நடப்பு ஆண்டில் 7615 டன்கள் விநியோகிக்கப்படவுள்ளன. மேலும் விளைச்சலைப் பெருக்குவதற்காக, பயிருக்கு ஜிப்சம் இடுதல், நுண்ணுயிர்ச் சத்து இடுதல், பெருமளவுப் பயிர்ப் பாதுகாப்புச் செய்தல்போன்ற சில இனங்களில் 1980-81 மற்றும் 1981-82-ல் அடைந்த சாதனை 1982-83-ல் திட்டமிட்டுள்ள இலக்குகள் ஆகியன வருமாறு:

| | 80-81 | 81-82 | 82-83 |
|---|---|---|---|
| ஜிப்சம் விநியோகம் (டன்கள்) ... | 17053 | 19462 | 25000 |
| நுண்ணூட்டச்சத்து விநியோகம் (டன்கள்) | 372 | 341 | 500 |
| மானியத்துடன் கூடிய பயிர்ப் பாதுகாப்பு (எக்டேர்) | 28932 | 49714 | 60000 |
| எண்ணெய்வித்து உற்பத்தி (லட்சம்) (மெ. டன்) | 8.95 | 15.85 | 16.38 |

**தென்னை அபிவிருத்தி :**

1979-80 வரை தென்னை அபிவிருத்திக்காக நமது மாநிலத்தில் தென்னை பயிரிட, பல சிறிய நாற்றுப் பண்ணைகள் மட்டுமே இயங்கி வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது திட்டப்படி தென்னை அபிவிருத்திக்கு அதிவிரைவுத் திட்டம் (Crash Programme) ஒன்று 1980-81-ல் துவக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் 15.50 லட்சம் தென்னங்கன்றுகள் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய நிலை, ஆண்டுக்கு 35 லட்சமாக உயர்ந்தது. சுமார் 1.5 லட்சம் நெட்டை, குட்டைக் கன்றுகளின் உற்பத்தி இன்று 5 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழக அரசு இதுவரை புதிதாக ஒப்புதலளித்த அதி விரைவுத் தென்னைத் திட்டங்களின் வாயிலாக மேலும் பல லட்சம் தென்னங்கன்றுகளின் உற்பத்திக்கு வழி செய்து, இன்னும் 10 ஆண்டுகளில் ஆண்டுக்குச் சுமார் 60 லட்சம் தரமான தென்னங்கன்றுகளுக்கு மேல் உற்பத்தி செய்து விநியோகிக்கும் நிலையில் உள்ளது. இவ்விதம் அதிக அளவில் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதால், ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரத்திற்கு 1.6 தேங்காய் மட்டுமே கிடைத்து வருகின்ற இன்றுள்ள நிலை மாறி, அடுத்த 20 ஆண்டுகளில் 4.6 தேங்காய்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படவுள்ளது.

1980-81-ல் 15.58 லட்சம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 1981-82-ஆம் ஆண்டில் 26.21 லட்சம் தரமான



நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 35 இலட்சம் தரமான தென்னங்கன்றுகள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தியில் கன்றுகள் விநியோகம் தவிர, பூச்சியால் பாதிக்கப்பட்ட மரங்களில் ஒட்டுண்ணியை விட்டுப் பாதுகாப்பு அளிப்பதற்கும், தென்னைச் சாகுபடியாளர்கள் தென்னையில் அதிக விளைச்சல் பெறத் தேவையான சாகுபடி முறைகளை மேற்கொள்ளச் செய்வதற்கும் திட்டங்கள் இயங்கி வருகின்றன. 1980-81-ல் 3678 எக்டேர் பரப்பு தென்னந்தோப்புகளில் 1164 இலட்சங்கள் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன. 1981-82-ல் 3,000 எக்டேர் பரப்பில் 1520 இலட்சம், ஒட்டுண்ணிகள் விடப்பட்டன.

தென்னை மரங்களைத் தாக்கும் கேரள வேரழுகல் நோய், தஞ்சாவூர் குருந்தழுகல் வாடல் நோய் போன்றவற்றிற்கும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளுக்கும் நோயுள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி, புது ரகக் கன்றுகளைப் பயிரிடுவதற்கு மானியமும் வழங்கும் திட்டங்கள் இந்த இண்டு இரண்டாம் பகுதித் திட்டங்களாகச் செயல்பட உள்ளன. சென்னை, திருச்சி, சேலம், மதுரை கோவை ஆகிய நகரங்களில் தென்னை மரங்களின் உற்பத்தியினைப் பெருக்கவும் நோய்களைத் தவிர்க்கவும் தரமான தென்னங் கன்றுகளை விநியோகிக்கவும் மாநில முழுமையில் தற்போது விஸ்தரிப்புப் பணியாளர்கள் இல்லாத இடங்களில் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் இரண்டாம் பகுதித் திட்டங்கள் அரசினால் இந்த ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

3-1-1981 முதல் துவக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து உற்பத்தியாளர் இணையம் தேசிய பால்வள வாரியத்தின் துணையோடு ரூ. 11.45 கோடியில் 7 ஆண்டுகளில் எண்ணெய் வளம் பெருக்கும் திட்டம் ஒன்றை நிறைவேற்றவுள்ளது. வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் மானாவாரிக் கடலை அதிகம் விளையும் 12 வட்டங்களில் 500ஆனந்தபாணி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி 1.75 லட்சம் எக்டேரில் சாகுபடியாகும் நிலக்கடலையில் 1.36 லட்சம் டன்கள் கொள்முதல் செய்யவுள்ளது. இவ்வாண்டு கூட்டுறவுச் சங்கங்கள் திருவண்ணாமலைப் பகுதியில் 33 அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 116 கிராமங்களில் 2427 எக்டேர் கடலை விளையும் பரப்பளவையும் 1839 உறுப்பினர்களையும் கொண்டு செயல்படுகின்றன. 21 விளக்கப்பண்ணைகள் அமைத்தும், 1000 எக்டேரில் மானிய உதவியோடு பூச்சி மருந்து தெளித்தும், மற்றும் விதை வழங்கியும் இணையம் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுத்துள்ளது. விவசாயிகளின் விளைபொருளுக்கு அங்காடி விலையினில் கிராமத்திலேயே கொள்முதல் செய்து வழங்குவதோடு, சங்கத்தின் இலாபத்தில் 50 சதம் வரை ஊக்கத்தொகையாக வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தலைமைச் செயலரின் விழுமிய தலைமையில் இயங்கும் இவ்விணையம் விரைவில் திட்டப் பகுதிகளில் வரவேற்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்நோக்கலாம்.



# கூட்டுறவுக் கடன் வசதி

குறுகிய காலக் கடன் வசதி அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் சுமார் 4,700 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களையும் கொண்ட மூன்றடுக்குகளைக் கொண்டுள்ளது. ஓராண்டிற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய குறுகிய காலக் கடன்களைச் சாகுபடி செலவிற்காகவும், மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய மத்தியக் காலக் கடன்களை வேளாண்மையைச் சார்ந்த துணைத் தொழில்களுக்காகவும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. விவசாய உற்பத்திக்கான குறுகிய காலக் கடன்கள் மற்றும் துணைத் தொழில்களுக்கான மத்தியக் காலக் கடன்களை வழங்குவதில் 1977-78ஆம் ஆண்டு வரையில் சீரான முன்னேற்றம் இருந்தது. அந்த ஆண்டில், குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களாக மொத்தம் 127.13 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இத்தொகை இதுவரையில் வழங்கப்பட்ட அளவை விட அதிகமானதாகும். பின்னர், கடன் வழங்குவதில் கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு ஆண்டிலும் சுணக்கம் ஏற்பட்டது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 1980-81 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 16 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வசூலித்தன. தவணை தவறிய' கடன்களை வெகுவாகக் குறைப்பதற்காக, வசதியான கடன்தாரர்களிடமிருந்து ஜப்தி நடவடிக்கை

> ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரம் போன்றது கூட்டுறவு இயக்கம். ஒரு அணு பிறழ்ந்துவிட்டாலும் மொத்தத்தில் பாழ்பட்டுப் போய்விடும்.
>
> — பேரறிஞர் அண்ணா

மூலம் தவணை தவறிய கடன்களை வசூலிக்க, 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம்முதல் வாரத்தில் அரசு அனுமதி அளித்தது. தவணை தவறிய கடன்களை வசூலிக்க எடுத்த தீவிர முயற்சிகளாலும், மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் கொடுத்த பூரண ஒத்துழைப்பினாலும் ஏப்ரல் 81 முதல் ஜூன் 81 வரையான மூன்று மாதக் குறுகிய காலத்தில், மத்திய கூட்டுறவு வங்கிகள் 62 கோடி ரூபாயை வசூலிக்க முடிந்தது. 30.6.79ல் 42.7 ஆகவும் 30.6.80ல் 70.5 ஆகவும் இருந்த, மத்திய கூட்டுறவு வங்கிகள் அளவிலான தவணை தவறிய கடன்களின் சதவீதம் 30.6.81ல் 31.8 அளவிற்குக் குறைக்கப்பட்டது. இவ்வாறாக, இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் அளவுகளைப் பெறுவதற்கான தகுதியை அடைந்ததோடு, அவ்வகை அளவுகளின் பணத்தைப்பெறுவதற்கும் மத்திய கூட்டுறவு வங்கிகள் தகுதி பெற்றன. இதன் விளைவாக 1981-82ஆம் ஆண்டில், 77.20 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய காலக் கடன்களையும், 9.79 கோடி ரூபாய் அளவிற்கு நடுத்தரக் காலக் கடன்களையும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்க முடிந்தது.

**நீண்ட காலக் கடன்கள்:**

தமிழக விவசாயிகளின் விவசாயக் காரியங்களுக்கான நீண்ட காலக் கடன் தேவைகள் இம்மாநிலத்திலுள்ள வட்டம் அல்லது ஒன்றிய அளவிலான 182 பிரதம நிலவள வங்கிகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இந்த வங்கிகள் சிறுபாசன, சிறுபாசனமில்லாத மற்றும் பலதரப்பட்ட காரியங்களுக்குக் கடன்களை வழங்குகின்றன. 1981-82ஆம் ஆண்டில் இந்த வங்கிகள் மூலம் 5.52 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டன.

**நகைக் கடன்கள்:**

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு, நகைகளின் ஈட்டின் பேரில், நுகர்வுக் கடன்களை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த வகைப் பிரிவினர், தேவையான கடன்களைப் பெறத்தக்க வகையில், சவரன் ஒன்றுக்கு 800 ரூபாய் வரையில் கடனின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வகைக் கடன்களின் மீதான வட்டி வீதம், ஆண்டொன்றுக்கு 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1981-82க்கான குறியீடு 130.00 கோடி ரூபாயாக இருக்க, 179.86 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை வழங்கியுள்ளன. இது மாநிலத்திலுள்ள கடன் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை செய்யாத சாதனையாகும்.

**நலிந்த பிரிவினருக்குத் தொழில் கடன்கள்:**

நலிந்த பிரிவினரின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக, இவ்வகைப் பிரிவினர், ரிசர்வ வங்கி குறித்துள்ள விரிவான 22 சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களைச் செய்வதற்காகக் கடன்கள் வழங்குகின்ற இன்னொரு திட்டம் குறிப்பிடத்தக்கதாகும். கிராமப் புறத்தில் 2,500 ரூபாய்க்கும், நகர்ப்புறத்தில் 3,000 ரூபாய்க்கும் அதிகப்படாமல் வருமானம் உள்ளவர்களுக்கு இவ்வகைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. நடைமுறை மூலதனத்திற்கு 2,000 ரூபாயும், நிரந்தர ( Block ) மூலதனத்திற்கு 5,000 ரூபாயும் அதிகப் பட்சக் கடனாக வழங்கப்படுகிறது. இக்கடன்கள் 5 ஆண்டிற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை. இவற்றின் மீதான வட்டிவீதம் 4% இந்தச் சிறப்பு வகைக் கடன்களால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படுகின்ற வட்டிக் குறைவை ஈடுகட்ட, மாநில அரசு மான்யம் வழங்க இசைந்துள்ளது. நலிந்த பிரிவினருக்கான இத்தொழிற் கடன்களை தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 64 நகரக் கூட்டுறவு வங்கிகள், மற்றும் 26 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. 1981-82ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 83 இலட்ச ரூபாய்க்கு இவ்வகைக் கடன்களை வழங்கியுள்ளன.

**மலைவாழ் பழங்குடியினருக்குக் கடன்கள்:**

மாநிலத்திலுள்ள 12 மலைவாழ் பழங்குடியினர் 'லேம்ப்' (LAMP) கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயத்திற்கான குறுகிய காலக் கடன்களையும், கறவை மாடுகள் வளர்த்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் முதலிய துணைத் தொழில்களைச் செய்வதற்கான நடுத்தரக் காலக் கடன்களையும், நுகர்வுக் கடன்களையும் பழங்குடி உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்றன. இந்தக் கடன்கள் சலுகை வட்டியில் அதாவது ஆண்டிற்கு 4 சதவீதத்தில் கொடுக்கப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில், 48.46 இலட்சரூபாய்க்கு இவ்வகைக் கடன்கள் கொடுக்கப்பட்டன.

**பயிர் ஈட்டுறுதித் திட்டம்**

வெள்ளம், வறட்சி, பூச்சிகள் முதலிய இயற்கையின் சீற்றங்களினால் பயிர் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படுவதைத் தடுக்க, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை முன்னோடி அடிப்படையில் செயற்படுத்துகின்றன. 1979-80ஆம் ஆண்டு நெல் 2-ஆம் பயிருக்கு இத்திட்டம் முதன் முதலில் துவங்கப்பட்டு, 1980-ஆம் ஆண்டு நெல் முதல் பயிருக்கும், 1980-81-ஆம் ஆண்டு நெல் 2-ஆம் பயிருக்கும், 1981-ஆம் ஆண்டு நெல் முதல் பயிருக்கும் 1981-82ஆம் ஆண்டு நெல் 2-ஆம் பயிருக்கும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. பொது ஈட்டுறுதிக் கழகமும் (General Insurance Corporation) தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதியும், பிரிமியத் தொகை மற்றும் ஈட்டுத் தொகையை 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 1980-81 மற்றும் 1981-82ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்ச ரூபாய் வீதம், தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதிக்கு ஈட்டுத் தொகையை வழங்க மாநில அரசு மான்யம் வழங்கியுள்ளது

**விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

விவசாயிகளின் சில பிரச்சினைகளை ஆராய, மாநில அளவிலான உயர்மட்டக் குழு ஒன்றை அரசு நியமித்தது. கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில், இக்குழுவின் பரிந்துரைகளின் பேரில், 1979 மே மாதத்தில், விவசாயிகளுக்குச் சில நிவாரணங்களை அரசு அளித்தது. 30-6-78ல் நிலுவையுள்ள அனைத்துக் கடன்களின் மீதான அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தும், 1977-78ல் அளிக்கப்பட்ட அபராத வட்டியைத் திருப்பிக் கொடுத்தும், மாற்றியமைக்கப்பட்ட/தவணை நீட்டிக்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்களின் மீதான சாதாரண வட்டியைத் தள்ளுபடி செய்தும் சலுகைகள் வழங்கப்பட்டன. இந்தச் சலுகைகளின் மூலமாக 4.85 கோடி ரூபாய் அளவிற்கு 5.21 இலட்ச நபர்கள் பயனடைந்தனர். இதைத் தவிர, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாற்றியமைக்கப்பட்டு



தவணை நீட்டிக்கப்பட்ட நடுத்தரக் காலக் கடன்கள் 3 முதல் 6 ஆண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டன. 2.35 இலட்சக் கடன்தாரர்களின் 52.72 கோடி ரூபாய்க்கான கடன்கள் இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும், இக்கடன்களின் மீதான வட்டி, சிறு விவசாயிகளுக்கு 10.5.% ஆகவும், இதர விவசாயிகளுக்கு 12% ஆகவும் குறைக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த வறட்சி முதலியவற்றால் பாதிக்கப்பட்ட, 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலமுடைய -நிலத்தில் பயிரிடுகின்ற சிறு விவசாயிகளின் கடன் சுமை அதிகமாக இருப்பதாக அரசு கருதியது. இந்த வகைச் சிறு விவசாயிகளுக்கு மேலும் நிதியுதவி வழங்க 1980ல் அரசு முடிவு செய்து, 31-3-80ல் நிலுவையுள்ள மாற்றப்பட்ட கடன்களை, வட்டி, அபராத வட்டி முதலியவை உட்பட, திருப்பிச் செலுத்தியது. இவ்வாறாக 4.52 இலட்ச உறுப்பினர்களின் 49,64 கோடி ரூபாயை அரசு திருப்பிச் செலுத்தியுள்ளது. 1.7.75 முதல் 31.3.80 வரையில், இவ்வகைக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு அத்தொகைகளை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்க, 1981-82ல் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. இவ்வாறாக, 9.29 இலட்ச சிறு விவசாயிகளுக்கு, 23.59 கோடி ரூபாய் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகளின் பிரச்சினைகளை மேலும் தீர்க்க எண்ணி 1981ல் அரசு மேலும் ஒரு சலுகையை அளித்தது. இதன் வழியாக, 31-12-80ல் நிலுவையுள்ள குறுகிய காலக் கடன்களை முழுவதுமாக 30.6.81க்குள் திருப்பிச் செலுத்துகின்ற சிறு விவசாயிகளுக்குச் சாதாரண மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யவும், 1-4-80க்குப் பிறகு செலுத்தியிருந்த சாதாரண மற்றும் அபராத வட்டியைத் திருப்பிக் கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதர விவசாயிகளைப் பொறுத்த மட்டில், குறுகியகாலக் கடன்களைச் சாதாரண வட்டியுடன் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு அபராத வட்டி மட்டும் தள்ளுபடி செய்யவும் திருப்பிக் கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. வட்டிச் சலுகையைப் பெறுவதற்கான கடைசி நாள் 31-12-81 வரை நீட்டிக்கப்பட்டது. இது 1-7-81 முதல் கடனைப் பைசல் செய்கின்ற தேதி வரையான சாதாரண வட்டி அல்லது சாதாரண வட்டி மற்றும் அபராத வட்டியையும் செலுத்துவதைப் பொறுத்ததாகும். வட்டிச் சலுகையை 8.46 இலட்சக் கடன்தாரர்கள் 14.60 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றனர்.

கடன்களைக் குறித்த தினத்தில் சிறுவிவசாயிகள். செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக, 1981-82ல் குறுகிய காலக்கடன்களையும், நடுத்தரக் காலக் கடன் தவணைகளையும் குறித்த தினம் அல்லது அதற்கு முன் திருப்பிச் செலுத்துகின்ற சிறு விவசாயிகளுக்கு 2% வட்டிக் தள்ளுபடி என்ற சலுகையை அரசு அளித்துள்ளது. வட்டித் தள்ளுபடிச் சலுகையை 7,155 சிறு விவசாயிகள் 95,309 ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளவர். வட்டித் தள்ளுபடி, நடப்பு ஆண்டு 1982-83க்கும் நீட்டிக்கப்படுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகளுள் ஒன்றாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு நெல், பருப்பு வகைகள், தானிய வகைகள், குளிர்காலப் பருத்தி, நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர் வகைகளுக்கான உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளைக் குறைந்த விலையில் விற்பதற்கான மான்யத்தை அரசு அளித்துள்ளது. சிபாரிசு செய்யப்பட்ட அளவிற்குட்பட்டும், நபர் ஒன்றுக்கு அரசு நிர்ணயித்துள்ள உச்ச அளவிற்குட்பட்டும், உரம், பூச்சி கொல்லி மருந்தின் விலையில் 25% சிறு விவசாயிகளுக்கும் 33 1/3% மிகச்சிறிய விவசாயிகளுக்கும் மான்யமாகக் கொடுக்கப்பட்டது. இச் சலுகை 31.12.81 வரை நீட்டிக்கப்பட்டு 304 இலட்ச ரூபாய் மான்யமாக அளிக்கப்பட்டது.

1974-78 ஆண்டுகளில், இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்சாக, பாதிக்கப்பட்ட கடன்தாரர்களின் கடன் தவணைகளைத் தள்ளி வைக்கவும்-நீட்டிக்கவும், இந்திய ரிசர்வ் வங்கி மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிக்கு அனுமதியளித்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கடன்தாரர்கள் தங்களது சாதாரணக் கடன் தவணையுடன் நீட்டிக்கப்பட்ட கடன் தவணைகளையும் கட்டுவதில் சிரமப்பட்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கடன்தாரர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்பதற்காக, விவசாய மறுநிதிக் கழகம்-இந்திய ரிசர்வ் வங்கி, 1974-78ல் நீட்டிக்கப்பட்ட கடன் தவணைகளின் நிலுவையை முடக்கி, சுலபமாகத் திருப்பிச் செலுத்துவதற்காக ஏற்றவாறு கால அவகாசம் கொடுத்துள்ளது. 75.84 கோடி ரூபாய் அளவிற்கு, 1.39 இலட்சக் கடன்தாரர்கள் இந்த வகையில் பயனடைந்துள்ளனர்.

நிலவள வங்கிகளின் கடன்தாரர்களின் கிணறுகள் பொய்த்த நிலையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க 'பொய்த்த கிணறுகள் நிதி' மாநில நிலவள வங்கி அளவில் ஏற்படுத்தப்பட்டது. பொய்த்த கிணறுகள் நிதியைப் பராமரிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின்படி, 1-4-68க்குப் பின்னர் நிலவள வங்கிகளிலிருந்து புதிய கிணறுகளுக்கான கடன்பெற்று, அக்கிணறுகள் பொய்த்த கடன்தாரர்களுக்கு இந்நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது. 1981-82 ல், 23.57 இலட்ச ரூபாய் அளவிற்கு 771 பொய்த்த கிணறுகளுக்காக நிதியுதவி அளிக்கப்பட்டது.

நிலவள வங்கிகளின் கடன்தாரர்களில் சிறு விவசாயிகளுக்குப் புதுக்கிணறு தோண்டும் செலவில் 25 சதவீதம் 500 ரூபாய்க்குட்பட்டு மான்யமாக அளிக்கப்படுகிறது. 14-7-81க்குப் பின்னர் வழங்கப்பட்ட கடன்களுக்கு, இந்த மான்யத் தொகை 1,000 ரூபாயாகத் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. 1981-82ல், 551 புதியக் கிணறுகளுக்காக மூன்று இலட்ச ரூபாய் மான்யமாக அளிக்கப்பட்டது. மலைவாழ் பழங்குடியினருக்குப் புதுக்கிணறுக்கான செலவில் 50 சதவீதம், 3,500 ரூபாய்க்கு உட்பட்டு மான்யமாக அளிக்கப்படுகிறது. 1981-82ல் திருச்சி மாவட்டத்தில் இரண்டு மலைவாழ் உறுப்பினர்களுக்கு 4,800 ரூபாய் மான்யமாகக் கொடுக்கப்பட்டது.



# தனிப்பெரும் தன்னிறைவுத் திட்டம்!

சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கி 30 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், ஊராட்சி நிர்வாக முறை 1959-ஆம் ஆண்டிலேயே தொடங்கப் பெற்று, செயல்பட்டு வந்த போதிலும் தமிழக ஊர்ப்புறங்களின் நிலை, கட்டுக்கோப்பாக வளர்ச்சியடையவில்லை என்பது அனைவரும் அறிந்த ஓர் உண்மையாகும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கிய அங்கம் வகிக்கின்ற குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய வேண்டியது அரசின் தலையாய பொறுப்பு என்பதுடன் மக்களின் நல்வாழ்வைப் பேணும் ஓர் அடிப்படைத் திட்டமாகவும் இது அமைகிறது.

தவிர, மக்களின் முக்கியத் தேவைகளான நல்ல சாலை வசதிகள், சிறுபாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், தாய் - சேய் நல நிலையங்கள், ஊரக மருந்தகங்கள், சிறு பாசன மேம்பாடுகள் மற்றும் ஆதி திராவிட மக்களுக்கான மயானச் சாலைகள், அவர்களுக்கான வீட்டு வசதிகள் ஆகியவை இதுகாறும் ஒரு காலக் கட்டத்திற்குள் நிறைவேற்றப்படாமலேயே விடப்பட்டுவிட்டன.

எனவே, கிராம மக்கள் அனைவருக்கும் அடிப்படை வசதிகளை அளித்து அவர்களின் சமூக வாழ்விலும் பொருளாதார நிலையிலும் ஓர் உன்னத நிலையை அவர்கள் எய்த வேண்டும் என்ற பெரும் நோக்கங்களைக் கொண்டு மூன்றாண்டுக் கால அளவிற்குள், ஒன்பது பணிகளையும் ஒருமித்து முடிக்க வேண்டுமென்று உருவாக்கப்பட்டதே தன்னிறைவுத் திட்டமாகும்.

தமிழகத்தில் 378 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அவை அனைத்திலும் தன்னிறைவுத் திட்டத்தை ஒரே காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்பது தான் அரசின் ஆர்வமாக அமைந்தது.

ஆனால், தளவாடப் பொருள்கள், சிமெண்ட், எஃகு போன்ற[illegible]கும். அடிப்படை கட்டடப் பொருள்கள் போதுமான எண்ணிக்கையில் அனுபவம் வாய்ந்த பொறியாளர்கள், அலுவலர்களின் தேவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது, தன்னிறைவுத் திட்டத்தை மூன்றாண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றுவதே சாலச் சிறந்தது என்று நல்லதொரு முடிவெடுக்கப்பட்டது. இதற்கு நிதி வசதியும் ஒரு காரணமாக அமையக் கூடும்.

தொடக்கக் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களும், இரண்டாம் கட்டமாக 150 ஒன்றியங்களும் இறுதி நிலையில் 159 ஒன்றியங்களும் திட்ட நிறைவேற்றத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

தன்னிறைவுத் திட்டம் 1980-81 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட 69 வட்டாரங்கள் ஊரக வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்ட வட்டாரங்களா



1981-82இல் இரண்டாம் நிலை தொடங்கப்பட்டு, 150 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு 219 ஒன்றியங்களில் மக்கள் திட்டத்தின் பயன்களை நுகரத் தொடங்கிவிட்டனர்.

1983ஆம் ஆண்டு மார்ச் சுத் திங்கள் இறுதியில் தமிழக கிராமங்கள் தன்னிறைவு பெற்று அனைத்து நல்வாழ்வு, பொருதார அடிப்படை வசதிகளைப் பெற்று சிறுசிறு நகரங்கள் போல் சிறப்புடன் காட்சியளிக்கும்.

இத்திட்டத்தை இத்துணை சிறப்புடன் உருவாக்கி, மூலதளவாடப் பொருள்கள் பெறுவதில் உள்ள சிக்கல்களைக் களையத் தனிப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டு, போதுமான அலுவலர்களைத் தந்து கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கித் தந்த பெருமைகள் அனைத்தும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையே சாரும்.

தன்னிறைவுத் திட்டத் தொடர்பான உயர்மட்ட ஆய்வுக் குழுக் கூட்டங்கள் பலவற்றிற்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே தலைமைப் பொறுப்பேற்று அறிவுரைகளும் ஆலோசனைகளும் நல்கினார்கள்.

இவற்றையெல்லாம் ஒருமித்து நோக்குகையில் தமிழகக் கிராம மக்கள் மீது அரசு கொண்டுள்ள பொறுப்பு நன்கு தெரியும்.

தன்னிறைவுத் திட்டத்தைப் போன்ற மிகப்பெரிய திட்டம் மூன்றாண்டுகளுக்குள் தமிழகமெங்கும் நிறைவேற்றி முடிக்கப்பட வேண்டுமென்ற அரிய திட்டம்- நம் நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் உருவாக்கப்படவேயில்லை. இத்தகைய நன்மைகள் இலட்சம் [illegible]ம் திட்டங்கள் நம் ம[illegible]தில் தான் செயலாகும் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மற்ற மாநிலங்கள் -மற்றவர்கள் புருவங்களை உயர்த்தி வியப்படைகின்றனர்.

இறுதி நிலையிலுள்ள 159 ஒன்றியங்களில் 32 கோடி செலவிட்டு 4,000 குடியிருப்புகளில் குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. ஏனைய பணிகளுக்கென 5620.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5495.06 கி.மீ. இணைப்புச் சாலைகளும், மயானப்பாதைகளும் அமைக்கப்படும். மற்ற வேலைகளின் எண்ணிக்கை 16,517 ஆவன.



தற்போது தன்னிறைவை நோக்கி நடைபோடும் தமிழகம் வெகு விரைவில் நம் நாடே வியக்கும் முறையில் தன்னிறைவைப் பெற்ற தமிழகமாகி விடும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமேயில்லை!

தமிழுக்கு ஏற்படுகிற ஆபத்தைத் தடுத்து அதை உலக மொழிகளில் தலை சிறந்த ஒன்றாக ஆக்கும் கடமையில் மாணவர்களுக்கு நிரம்பப் பங்கு உண்டு.

—பேரறிஞர் அண்ணா

# கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி



கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் கிராம மக்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வழங்குவதற்கென 1976-'77-ஆம் ஆண்டிலிருந்து கிராமிய வீட்டு வசதித் திட்டம் தாலுக்கா மற்றும் கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலமாக அமல்படுத்தப்பட்டது. அரசாணையின்படி 110 தாலுக்கா மற்றும் கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் துவக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுத் தமிழகம் அனைத்தும் அச்சங்கங்கள் செயல்படத் தொடங்கின.

## இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான திட்டம்

கிராமப்புறங்களில் அதிக வீடுகள் கட்டும் பொருட்டு, 80 சதவிகிதத்திற்கும் அதிகமாக மக்கள் வாழும் பகுதியில் வீடுகள் கட்டுவதற்காக அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் வீடுகள் 1978-1979 முதல் ஆரம்பித்து வீடுகள் கட்டி முடிக்க, பின்வருமாறு திட்டமிடப்பட்டது.

| ஆண்டு | கட்டி முடிக்கப்பட்ட முடிக்கபபட வேண்டிய வீடுகள் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1978—'79 | 10,000 | 300.00 |
| 1979—'80 | 20,000 | 600.00 |
| 1980—'81 | 20,000 | 600.00 |
| 1981—'82 | 25,000 | 750.00 |
| 1982—'83 | 25,000 | 750.00 |

மத்திய திட்டக்குழு தீர்மானித்தபடி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான காலம் 1978-1983 என்பதனை 1980-1985 என்று மாற்றப்பட்டது. அதன்படி 1980-81 முதல் 1984-'85 வரை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான காலம் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மாற்றப்பட்ட காலத்தைக் கணக்கில்கொண்டும் கிராமப்புறங்களிலிருந்து கிடைக்கும் அதிகப்படியான வரவேற்பினைக் கருத்தில் கொண்டும் இரண்டு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க மீண்டும் ஒரு திருத்தப்பட்ட திட்டம் ஒன்று பின்வருமாறு வரையறுக்கப்பட்டது.

| ஆண்டு | கட்டி முடிக்கப்பட வேண்டிய வீடுகள் | மதிப்பு (ரூபாய்) இலட்சத்தில்) | கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆதிதிராவிடர் | இதரர் | மொத்தம் |
| 1980—81 | 40,000 | 1200.00 | 34510 | 6321 | 40831 |
| 1981—82 (30-4-82) முடிய | 40,000 | 1200.00 | 18576 | 2227 | 20803 |
| 1982—83 | 40,000 | 1200.00 | | | |
| 1983—84 | 40,000 | 1200.00 | | | |
| 1984—85 | 40,000 | 1200.00 | | | |



இது தொடர்பாக ரூ. 3750-க்குட்பட்ட ஒரே மாதிரி வரை படம் கொண்ட வீடுகளைத்தான் கட்ட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. இதற்கான கடன் ஒரு வீட்டிற்கு ரூ. 3,000 எனக் கட்டுப்படுத்தப் பட்டது.

எல்லாப் பிரதமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்யும் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இதற்கான நிதியை அரசுக் கடன்களிலிருந்தும், இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும், பொதுக் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும், மாநில அரசின் பங்கு மூலதனத்திலிருந்தும் மற்றும் உறுப்பினர் சங்கங்களின் இட்டு வைப்பு மூலமாகவும் பெறுகிறது.

**சாதனைகள்**

1980-81-ம் ஆண்டிற்கு இந்தக் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ்40,000 வீடுகள் கட்டுவதற்குக் குறியீடு நிர்ணயிக்கப் பட்டது. 1980-81-ஆம் ஆண்டில் சுமார் 1,67,978 கடன் ம்னுக்கள் பிரதமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிடமிருந்து பெறப் பட்டன. அவைகளின் மதிப்பு ரூ. 4955:92 இலட்சமும் ரூ. 2,942.17 இலட்சம் மதிப்புடைய. 96,929 கடன் ம்னுக்கள் பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களால் அனுமதிக்கப்பட்டு, 40,831 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. (இவைகளில் 34510 வீடுகள் ஆதி திராவிடர்களாலும், 6321 வீடுகள் இதரர்களாலும் கட்டப்பட்டன).

1981-'82-ஆம் ஆண்டிற்கும் 40,000 வீடுகள் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயிக்கப் பட்டு, 30-4-1982 முடிய ரூ. 2460 இலட்சம் மதிப்பீட்டில் 79801 கடன் மனுக்கள் தன்னிறைவுத் திட்டங்கள் செயல்படும் இடங்களிலிருந்து பெறப்பட்டன. ரூ. 589.73 இலட்சம் மதிப்புடைய 19076 கடன் மனுக்கள் பிரதமக்கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களால் அனுமதிக்கப்பட்டு, ரூ. 674.62 இலட்சம் கடனாகப் பட்டுவாடா செய்யப்பட்டது. இது வரை 20,803 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(இவைகளில் ஆதி திராவிடர்களால் 18576 வீடுகளும், இதரர்களால் 2227 வீடுகளும் கட்டப்பட்டன).

**தன்னிறைவுத் திட்டம்**

1980-'81-ஆம் ஆண்டில் 69 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு, இந்த ஒன்றியங்களில் 11948 வீடுகள் ரூ. 357.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1981-'82-ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் 150 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 100வீடுகள் வீதம் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயிக்கப் பட்டு 1981-'82-ல் 17969 வீடுகள் (மதிப்பு ரூ. 630.95 இலட்சம்) கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் 15876 வீடுகள் ஆதி திராவிடர்களாலும், 2093 வீடுகள் இதரர்களாலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



# குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அப்போது எடுத்த சமூகப் பொருளாதாரக் கணக்கின்படி சென்னை மாநகரில் 1202 குடிசைப் பகுதிகளிலுள்ள, 87210 குடிசைகளில் 1,63,804 குடும்பங்கள் சுகாதார வசதிகளின்றி வசித்து வந்தன. ஆண்டுதோறும் குடிசை வாழ் மக்கட்தொகை 2.5 சதவீதம் பெருகி வருகிறது. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான அண்ணாவின் அரசு அமைந்த பிறகுதான், புது வேகமும் புதுப்பொலிவும் பெற்று, திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குடிசைவாழ் மக்களின் துயர்துடைக்க தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள்:

1. குறித்த காலத்திற்குள் சென்னை மாநகரத்தில் உள்ள குடிசைப் பகுதிகளை இயன்றவரை அகற்றி அங்கு வசிப்பவர்களுக்குச் சுகாதார வசதியுடன் கூடிய குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பது.

2. புதிதாக குடிசைப் பகுதிகள் உருவாவதைத் தடுப்பது அல்லது அப்படி உருவான குடிசைப் பகுதிகளை அகற்றுவது மற்றும் நில ஆக்கிரமிப்புகளைத் தடுப்பது.

3. தனியார் நிலங்களில் வசிக்கும் குடிசைவாழ் மக்களை நிலச் சொந்தக்காரர்களால் வெளியேற்றப்படாமல் தடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது.

4. அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு மின்விளக்கு, மழைநீர் வடிகால், பாதாளச்சாக்கடை, பொதுக் கழிப்பறை, குளியலறை, சாலைகள் போன்ற வசதிகளை எல்லாக்குடிசைப் பகுதிகளிலும் அமைப்பது.

**குடிசை மாற்றுத் திட்டம்**

குடிசைப் பகுதிகளை அகற்றி அங்கு வாழும் மக்களை அவ்விடத்திலேயோ அல்லது அவ்விடத்திற்கு அருகிலேயோ குடியிருப்புகள் கட்டி, குடியமர்த்துவதே இத் திட்டத்தின் அடிப்படை நோக்கம். இக்குடியிருப்புகளுக்குத் தற்போது ரூ. 20 சலுகை வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகின்றது.

இதுகாறும் கட்டிமுடிக்கப்பட்ட குடியிருப்புகளின் விவரம் கீழ்வருமாறு:

| ஆண்டு | கட்டப்பட்ட குடியிருப்புகள் | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சங்கள்) |
|---|---|---|
| 1980வரை | 39,578 | 3,714.92 |
| 1980-81 | 3,212 | 330.06 |
| 1981-82 | 2,584 | 271.91 |
| மொத்தம் | 45,374 | 4,316.89 |



1982-83 ஆண்டில் ரூ. 320 இலட்சங்கள் செலவில் 2200 குடியிருப்புகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

## தவணை முறையில் வீடு வழங்கும் திட்டம்

குடியிருப்புகளில் வசித்துவரும் குடும்பங்கள் விரும்பினால் இக்குடியிருப்புகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். மாதந்தோறும் ரூ. 30லிருந்து ரூ. 45 வரை செலுத்தி 20 ஆண்டுகளில் வீட்டு விற்பனைப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளலாம்.

## விரைவு படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் 10 குடும்பங்களுக்கு ஒரு கழிவுநீர் அறை, 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய், 40மீ. நீளமுள்ள பாதைக்கு ஒரு மின் விளக்கு போன்ற வசதிகள் செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்த குடும்பங்களின் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயன் அடைந்த குடும்பங்கள் | திட்டத்தின் மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1980-ஆம் ஆண்டுவரை | 28,700 | 221.81 |
| 1980—81 | 6,000 | 49.38 |
| 1981—82 | 6,000 | 49,21 |
| | 40,700 | 320.40 |

1982-83ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 50 இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 6000 குடும்பங்கள் பயன் பெறுவர்.

## உலகவங்கித் திட்டம்-பகுதி-1

அடிப்படை வசதிகள் மட்டுமில்லாமல் குடிசைவாழ் மக்களுக்கு அவர்கள் வாழும் இடத்தைச் சொந்தமாக்கிக் கொடுத்து அவர்களே சொந்தமாக வீடுகட்டிக் கொள்ள கடன் உதவியும் பெற வழிவகை செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தினால் பயன் அடைந்த குடும்பங்களின் விவரம் வருமாறு:

| ஆண்டு | பயன் அடைந்த குடும்பங்கள் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1980 ஆண்டுவரை | 18,338 | 282,60 |
| 1980-81 | 7,500 | 91.70 |
| 1981-82 | — | 53.95 |
| | 25,838 | 428.25 |

இத்திட்டம் 1981-82ஆம் ஆண்டோடு முடிவுபெற்றது.



## உலக வங்கித் திட்டம்-பகுதி-2

இத்திட்டம் 1981-ல் துவங்கப்பட்டது. 1981-82ஆம் ஆண்டில் 10,000 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 49 குடிசைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 101.28 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளன.

1982-83ஆம் ஆண்டு 10,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ. 2 கோடி செலவிடப்படும். அடுத்த மூன்று ஆண்டுகளில் ரூ. 17.1 கோடி செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு இறுதிக்குள் 50,000 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடையும். உலக வங்கிப் பகுதி 1, 2 திட்டத்தின் கீழ் 118 பாலர்பள்ளிகளும், 3 உயர்நிலைப் பள்ளிகளும், 8 ஆரம்பப்பள்ளிகளும், 47 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

## நிலப்பட்டா மற்றும் வீடு கட்டுவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குக்கடனுதவி

உலக வங்கித் திட்டம் பகுதி 1 மற்றும் பகுதி 2,இன் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நில உரிமையும் மற்றும் தாங்களாகவே வீடுகள் கட்டுவதற்குக் கடனுதவியும் தரப்படும். கடனுதவி விவரம் வருமாறு:

| மாதவருமானம். | கடன்தொகை |
|---|---|
| ரூ. 201—250 | ரூ. 1500 |
| ரூ. 250—300 | ரூ. 2500 |
| ரூ. 300க்கு மேல் | ரூ. 3500 |

மாத வருமானம் ரூ.200க்குக்குறைவாக உள்ளவர்களுக்கு ரூ.600 மான்யமாக வழங்கப்படும். மேற்கண்டவாறு கடன் அளிப்பதற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டு முடிய 1440 குடும்பங்களுக்கு ரூ. 42.14 இலட்சங்கள் கடனாக வழங்கப்பட்டது. 6600 குடும்பங்களுக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கித் திட்டத்தால் பயன்பெறும் 75,000க்கும் மேற்பட்ட குடும்பங்களிடமிருந்து மனைக்கான கிரயம், வீட்டுக்கடன் மேம்பாட்டுக் கடன் போன்றவைகள் எளிய தவணை முறையில் திருப்பிப் பெறப்படும். முழுமையாகக் கடனைத் திருப்பிக் கொடுப்பவர்களுக்கு மனை விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

## வாரியத்தின் வேறு-சில பணிகள்

அ. பல பொதுத் தொண்டு நிறுவனங்களின் உதவிகளோடு குடிசைவாழ் மக்களுக்கு மருத்துவ வசதி, முதியோர் கல்வி, தாய் சேய் நல வாழ்வுத் திட்டங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன.

ஆ. குடிசைவாழ் குடும்பங்கள் தங்கள் வருமானத்தை கணிசமாக உயர்த்திக் கொள்ள இளைஞர்களுக்கு அரசு, தனியார் நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 3866 பேர் தையல், பூ வேலை, தச்சு வேலை, ரேடியோ, தொலைக் காட்சிப் பெட்டி பழுது பார்த்தல் போன்ற வேலைகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இ. சிறு வியாபாரம் நடத்தவும், கைத் தொழில்கள் செய்யவும் தேவைப்படும் மூலதனங்கள் சுமார் ரூ. 200 லிருந்து 2000 வரை வங்கிகளிலிருந்து 4% வட்டியில் கடன் உதவி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதுவரை 1153 பேர் இத் திட்டங்களின் மூலம் ரூ. 8.71 இலட்சங்கள் கடன்பெற்று சிறு தொழில் நடத்தி வருகின்றனர்.

ஈ. குடிசைவாழ் மக்களுக்கு சுகாதாரம், கல்வி, குடும்பக்கட்டுப்பாடு இவற்றின் அவசியத்தை வலியுறுத்தும் வண்ணம் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

உ. குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் 27 இடங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

ஊ. குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடிசைப் பகுதிகளுக்கு நான்கு லாரிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வினியோகிக்கப்பட்டு வருகின்றது.

## ஒரு கண்ணோட்டம்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் 91,500 குடும்பங்கள் கீழ்க்கண்ட திட்டங்களால் பயன்பெறுவர்.

| | |
|---|---|
| 1. குடிசை மாற்றுத் திட்டம் | 11,500 |
| 2. விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம் | 30,000 |
| 3. உலக வங்கித் திட்டம் | 50,000 |
| | 91,500 |

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பக் காலத்தில் 48,100குடும்பங்கள் வாரியத்தின் பணியை எதிர்நோக்கி இருப்பர். மேலும் மக்கட்தொகைப் பெருக்கத்தால் 67,800 குடும்பங்கள் அதிகரிக்கும் என மதிப்பிடப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் குடிசைமாற்றுப் பகுதிகளின் தற்போது உள்ள வேகத்தைச்சிறிது அதிகப் படுத்துவதன் மூலம் 1991ஆம்ஆண்டில் குடிசை மாற்று மற்றும் மேம்பாட்டுப் பணிகளின் பலன்கள், சென்னை மாநகர எல்லாக் குடிசை வாழ் மக்களுக்கும் கிட்டிவிடும் என எதிர் பார்க்கலாம்.





# குழந்தைகள் நோய்த்தடுப்பில் புதிய முன்னேற்றம்



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்னும் பழமொழி தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக வழக்கிலுள்ளது. நோய் வந்த பின் சிகிச்சை அளிப்பதைவிட நோய் வருமுன் காத்தல் சாலச் சிறந்தது. ஏனெனில் நோய் வராமல் காத்தல் எளிதானது மட்டுமன்றி சிக்கனமானதும்கூட.

1981-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 483 இலட்சம். ஆண்டொன்றுக்கு 13 இலட்சம் குழந்தைகள் தமிழ்நாட்டில் பிறக்கிறார்கள். இக்குழந்தைகள் நாட்டின் வருங்காலக் குடிமக்களாவர். இவர்களுக்கு சாதாரணமாக ஏற்படக் கூடிய உடல் நலிவுகளைப் போக்கிட அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அவர்கள் வருங்காலத்தில் நல்ல உடல் நலத்துடன் அறிவு வளர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்கி,தம்க்கும் தம் நாட்டிற்கும் பயனளிக்கக்கூடிய வகையிலே கடமையாற்ற இயலும். ஒரு நாட்டின் மக்களுடைய உடல் நிலை நல்ல தரத்தில் அமைந்திருந்தால் அது அந்நாடு பொருளாதாரத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு ஒரு சான்றாகும்.

ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை உழுது, நீர் பாய்ச்சி, விதை விதைத்து, களையெடுத்து, தான்விட்ட பயிர் நன்கு வளர்ந்து இருப்பதைப் பார்க்கும்போது மட்டற்ற மகிழ்ச்சி அடைவான். அதே பயிர் கருகிவிட்டால் மனமுடைந்து வேதனையில் ஆழ்வான். அதேபோல், இந்நாட்டு மழலைச் செல்வங்கள் நல்ல உடல் நலத்துடன் வளர்ந்து தம்க்கும் தம் குடும்பத்தார்க்கும் பின் நாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் கடமையாற்றினால் அவர்களைப் பெற்ற தாய் தந்தையர் மகிழ்ச்சிப் பெருங்கடலில் நீந்துவர். அதே குழந்தைகள் நோயினால் பீடிக்கப்பட்டு, உடல் ஊனமுற்று, கண் பார்வையிழந்து இருப்பதைப் பார்க்கும்போது அவர்களின் தாய், தந்தையர் மீளாத்துயரத்தில் ஆழ்ந்திடுவர். பொருளாதாரத் துறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளின் காரணமாகவும் போதுமான கல்வியறிவு இல்லாமையாலும் சமூகத்திலுள்ள பின்தங்கிய நலிவுற்ற பிரிவினரைச் சேர்ந்த பெரும்பான்மையான தாய், தந்தையர் தங்கள் மழலைச் செல்வங்களுக்கு இளம் வயதில் ஏற்படக்கூடிய நலிவுகளிலிருந்து தக்க பாதுகாப்பு அளிக்க இயலாத நிலையில் உள்ளனர். இங்குதான் அரசு தன்னுடைய கடமையைச் செய்யவேண்டியுள்ளது.

பொதுவாக, காசநோய், தொண்டை அடைப்பான் ( DIPTHERIA ) கக்குவான், இளம்பிள்ளை வாதம், இரணசன்னி, தட்டம்மை போன்ற வியாதிகளால் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வியாதிகளிலிருந்து அவர்களைக் காக்க, கீழ்க்கண்ட திட்டங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன :



| | | |
|---|---|---|
| 1. குழந்தை பிறந்தது முதல் மூன்று மாதத்திற்குள் | | பி. ஸி. ஜி. என்னும் காசநோய் தடுப்பு |
| 2. மூன்று மாதம் முதல் ஒரு வருடத்திற்குள்ளாக | | மூன்று நோய் தடுப்பு மருந்து (D.P.T.) மூன்று தவணையில் |
| | (அ) | இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து—மூன்றுதவணையில் |
| | (ஆ) | மணல்வாரி அம்மை (Measles) தடுப்பு மருந்து (ஒருதவணை) |
| 3. 2.5 முதல் 3 வயது வரை | (அ) | மூன்று நோய் தடுப்புக்கு வீரியம் ( Booster ) |
| | (ஆ) | இளம்பிள்ளை தடுப்புமருந்து வீரிய தவணை. |
| 4. 5 வயது (பள்ளி) | (அ) | D.T. (இரு நோய்) தடுப்பு மருந்து |
| | (ஆ) | T.A. (டைபாய்டு) தடுப்பு மருந்து. |
| 5. 10 வயது (பள்ளி) | | T. T. (இரணசன்னி தடுப்புமருந்து) ஒரு தவணை. |

தமிழ்நாட்டில் 1980-81, 1981-82-ஆம் ஆண்டுகளில் பல்வேறு வகையான தடுப்பு மருந்து அளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு :—



| | | 1980—81 | 1981—82 |
|---|---|---|---|
| 1. பி. ஸி. ஜி. | ... | 13,16,407 | 13,30,456 |
| 2. டி.பி.டி. | ... | 5,98,238 | 7,07,881 |
| 3. இளம்பிள்ளை வாதத் தடுப்பு | ... | 1,39,912 | 2,19,012 |
| 4. டைபாய்டு தடுப்பு | ... | 91,395 | 3,13,563 |
| 5. கருவுற்றவர்களுக்கு சன்னித் தடுப்பு மருந்து | ... | 3,14,740 | 3,50,851 |
| 6. மணல்வாரி தடுப்பு மருந்து | | ... | 7,60,000 |

தாய்-சேய் நிலையங்களில் கருவுற்றுள்ள பெண்களுக்குத் தங்களுடைய உடல் நிலையை சரியாக வைத்துக் கொள்வதற்குத் தேவையான பரிசோதனைகள் செய்து, பிறகு அவர்களுக்குத் தேவையான மருந்துகள், உணவு வகைகளைப் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு, டெட்டனஸ் என்னும் இரணசன்னிக்குத் தடுப்பு மருந்தும் கொடுக்கப்படுகிறது. இத்தடுப்பு மருந்தின் மூலமாக தாய்க்கு மாத்திரம் அல்லாமல், கருவிலுள்ள சிசுவுக்கும், இரணசன்னியைத் தடுக்கக்கூடிய சக்தி அளிக்கப்படுகிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள தாய்-சேய் நல நிலையங்கள் நீங்கலாக, தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 932 தாய்-சேய் நல நிலையங்களைக் கிராமப் பகுதியில் அரசு நிறுவியுள்ளது.

இது தவிர, இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஒரு பெரிய குழந்தை நல மருத்துவமனையில் தடுப்பு ஊசிக்கென தனிச் சிறப்புப் பகுதி தொடங்கியதன் மூலம் தமிழக அரசு தன்னிகரில்லாத பெரும் சாதனை புரிந்துள்ளது. 1981-ஆம் ஆண்டு சனவரி மாதம் சோதனை முறையில் தொடங்கப் பெற்ற இப்பகுதிக்கு கடந்த 1-4-'82 முதல் தமிழக அரசு தனது பூரண ஒப்புதல் அளித்து, தேவையான அலுவலர்களையும் நியமித்துள்ளது. 1980-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 5,000 குழந்தைகள் தடுப்பு ஊசிபோடப்பட்ட நிலையிலேயிருந்து 1981-ல் 10,762 என்ற எண்ணிக்கை 1982 மே மாதம் வரை 12,181 என்று அதிகரித்துள்ளது. இக்குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து, முத்தடுப்பு ஊசி 60,000 டோஸ்களுக்கு மேல் கொடுக்கப்பட்டுள்ளது. நலக் கல்வி போதனை மூலம் மேலும் அதிகக் குழந்தைகள் தடுப்பு ஊசியின் நன்மைகளைப் பெறச் செய்யும் திட்டங்களும் ஆராயப்பட்டு வருகின்றன.

கனடா நாட்டு ரோட்டரி சங்கத்தினர் சென்னை நகர் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து தமிழக அரசின் ஒப்புதலோடும் ஒத்துழைப்போடும் தட்டம்மை தடுப்பு ஊசி தீவிர முகாம்கள் குழந்தைகள் நல மருத்துவ மனை இயக்குநர் அவர்கள் மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

குழந்தைகள் மருத்துவமனையில் மட்டும் மாதத்திற்கு ஏறத்தாழ 600 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பு ஊசி போடப்படுகிறது. 1979 அக்டோபர் மாதம் முதல் 1982 மே மாதம் இறுதி வரை ஏறத்தாழ 1 இல்ட்சம் குழந்தைகள், குழந்தைகள் மருத்துவமனை மற்றும் அதன் மேற்பார்வையில் தட்டம்மை தடுப்பு ஊசி போடும் இதர மருத்துவ மனை களிலும் முகாம்களிலும் பயன் பெற்றுள்ளனர். அண்மையில் ஏப்ரல், மே '82 மாதங்களில் செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் சுமார் 15,000 குழந்தைகள் தட்டம்மை தடுப்பு ஊசி போடப்பட்டுப் பயன் பெற்றனர். இவர்கள் தவிர மாநிலம் முழுவதும் ஏறத்தாழ 5 இலட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயன் பெற்றுள்ளனர். 9 மாதம் முதல் 5 வயது வரை உள்ள தட்டம்மையால் பாதிக்கப்படாத குழந்தைகளுக்கு ஒரே ஒரு முறை போட்டால் வாழ்நாள் முழுவதும் தட்டம்மையிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

தமிழக அரசின் சாதனைப் பட்டியலில் மருத்துவத் துறையிலே பொன்னேடுகளில் பதிக்கத் தக்க-மாண்புமிகு தமிழக முதல்வர், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சமூக நலத் துறை அமைச்சர், மருத்துவக் கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறை இயக்குநர்கள், திருச்சி மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் இணைந்து திட்டமிட்டு சிறப்புற நிறைவேற்றி ஏறத்தாழ 3 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் பயன் பெற்ற - திட்டம் 1982 -ஆம் ஆண்டு ஜனவரி பிப்ரவரி, மார்ச் திங்களில் திருச்சி மாவட்டம் முழுவதும் நடைபெற்ற உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மற்றும் தடுப்பு ஊசி முகாம்கள் ஆகும். இந்தியாவிலேயே முதன் முதலாக நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தின் குழந்தைகள் நல மருத்துவமனையைச் சார்ந்த 150க்கும் மேற்பட்ட குழந்தை மருத்துவ நிபுணர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவ, மாணவியர் அடங்கிய குழு பங்கேற்கும் நல் வாய்ப்பினைப் பெற்றது.



இந்தியாவிலேயே முதன் முதலாகச் சிறப்பாகத்திட்டமிடப்பட்டுத் தொடர்ந்து நடை பெற்ற இந்த முகாம்கள் உலக நலக் கழகத்தின் கவனத்தை ஈர்த்து அதன் அதிகாரிகள் இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களை மதிப்பீடு செய்ய அனுப்பப்படுகிறார்கள் என்றால், அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அவருடன் இத்திட்டத்தின் பங்கு பெற்ற இதர அலுவலருக்கும் கிடைத்த மிகப் பெரும்பேறு என்றால், அது மிகையாகாது. திருச்சி மாவட்டம் நடந்த வெற்றிப் பாதையில் இதர மாவட்டங்களும் அடியெடுத்து வைக்கும் நல்வாய்ப்பினை இத்திட்டத்தின் வெற்றி அளித்துள்ளது.

மேற்கூறிய வகையில் பல சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி, குழந்தைகளைக் காத்து அவர்கள் நல்வாழ்வு வாழ அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இப்பணிகள் ஒரு காலக் கட்டத்தில் முடிவடையக் கூடியதல்ல. இப்பணிகள் என்றும் எந்தவிதத் தடையோ தயக்கமோ இல்லாமல் தொடர வேண்டிய பணிகளாகும். இதற்குத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்களின் ஒத்துழைப்ப இன்றியமையாததாகும்.





# பெருகிடும் பாசன வசதிகள்

மண்ணும் நீரும் நமது நாட்டின் செல்வங்கள். அதனால் நீர்ப் பாசனம் நாட்டில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

1981-82ஆம் ஆண்டில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்கள்) மற்றும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும்திட்டம் (மதுரை மாவட்டம்) ஆகிய இவ்விரண்டு பெரிய திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வந்தன. 1.01 இலட்சம் எக்டேர் (2.50 இலட்சம் ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் எல்லா வகையிலும் முடிவு பெற்று ஏற்கனவே பயனளித்து வருகிறது. இத்திட்டத்தின் ஆயக்கட்டை விரிவாக்கி கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் வட்டங்களில் 0.466 இலட்சம் எக்டேர் 1.15 இலட்சம் ஏக்கர்) கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கான திட்டம் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு, திட்டவேலைகள் நடைபெறுகின்றன. ஆயக்கட்டு விரிவாக்க வேலைகளின் மதிப்பீடு ரூ.14 கோடியாகும். இந்த வேலை 1985ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் பதிவுபெற்ற ஆயக்கட்டுகளால் சூழப்பட்ட நிலங்களையும் மற்றும் பதிவுபெற்ற ஆயக்கட்டுகளுக்கு இடைப்பட்ட நிலங்களையும் அத்திட்டத்தின் முறைப்படுத்தப்பட்ட ஆயக்கட்டுகளில் சேர்க்க வேண்டும் என்ற விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, அரசு சமீபத்தில் ரூ 400 இலட்சம் செலவில் அத்தகைய 10,125 எக்டேர் (25,000 ஏக்கர்) நிலங்களை பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளது.

பெரியாறு-வைகை நவீனப்படுத்தும் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டிற்கு இத்திட்டம் திருத்தி யமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் உலக வங்கியால் ஒப்புக்கொள்ளப்பட்ட மூலத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள 10305 எக்டேர் (25,000 ஏக்கர் புதிய) நிலங்கள் பாசன வசதி பெறும் திட்ட வேலைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இத்திட்டம் டிசம்பர் திங்கள் 1984ஆம் ஆண்டு முடிவுறும் என எதிர் பார்க்கப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு ரூ 10 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தின் பிரதானக் கால்வாய்கள், மற்றும் கிளைக் கால்வாய்களில் ''சிமெண்ட் லைனிங்'' வேலை அநேகமாக முடிந்து விட்டதால் போதுமான அளவு தண்ணீர் சேமிப்பு இருக்கும் என்றும் இந்த சேமிப்பு நீரைப் பயன்படுத்தித் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 10,305 எக்டேர் புதிய நிலங்கள் தவிர மேலும் கூடுதலான நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும் என்றும் உலக வங்கி கணக்கிட்டுள்ளது. எனவே இறுதியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் சேமிப்பு நீரைப் பயன்படுத்தி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை வட்டம், மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் ஆகிய வட்டங்களில் ஏற்கனவே 1978ல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சுமார் 7,270 எக்டேர் 18,000 ஏக்கர் மறைமுக ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி அளிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நடுத்தரப்பாசனத் திட்டங்கள்:**

முந்தைய ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 13 நடுத்தரப் பாசனத் திட்டங்களில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி மாவட்டத்தில் ஒன்றும் தருமபுரி மாவட்டத்தில் ஒன்றும், கன்னியாகுமரி



தமாக 9880 எக்டேர் (24410 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1982-83ம் ஆண்டில் உப்பாறு நீர்த்தேக்கத்திட்டம் (720 எக்டேர்கள்) மற்றும் பரம்பிக் குளம் ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதி (9040 எக்டேர்கள்) ஆகியவற்றை நிறைவேற்றுவதன் மூலம் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் கூடுதலாக 9760 எக்டேர்கள் (24120 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறு பாசனம்:**

1981-82ஆம் ஆண்டில் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்திற்காக ரூ.199.57 இலட்சமும், தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்காக ரூ.4.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1.4.1981ல் நிலுவையில் இருந்த 110 வேலைகளில் 1981-82 ஆம் ஆண்டில் 40 வேலைகள் முடிக்கப்படவிருக்கின்றன. இந்த வேலைகள் முடிவுறும்போது கூடுதலாக 2040 எக்டேர் (5100 ஏக்கர்) நிலங்கள் பாசனவசதி பெறும்.

1981-82ஆம் ஆண்டில் ரூ 356.07 இலட்ச மதிப்பீட்டில் 24 புதிய திட்டங்களுக்கு இது வரை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டில் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 255 இலட்சமும் தூர்வாரி புனரமைக்கும் திட்டங்களுக்காக ரூ.3:41 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம்ஆண்டில் 30 வேலைகள் முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் 2530 எக்டேர் (6325 ஏக்கர்) நிலங்கள் பயனடையும்.

நாட்டின் நீர்வளத்தைப் பயனுள்ள முறையில் உபயோகிப்பது பற்றிய ஆய்வுகள் மற்றும் அளவைப் பணிகள் மேற்கொள்ளுவதற்காக மத்திய அரசு. சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக ''தேசிய நீர்வள அமைப்பு'' ஒன்றை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது.

பாசனத் திட்டங்களை நிறைவேற்றும்போது, விலைவாசி ஏற்றத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினைத் தவிர்ப்பதற்காகத் திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

மாவட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. அவை யாவன:

(அ) பெரியாறு மாவட்டத்தில் நொய்யல் ஆற்றில் ரூபாய் 713 இலட்சம் செலவில் அணை ஒன்று கட்டுதல். இத்திட்டம் திருச்சி மாவட்டத்தில் 3,900 எக்டேர் (9,625 ஏக்கர்) புன்செய் நிலங்களுக்குப் பயனளிக்கும்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்தில் கேசரிகுலிஹல்லாவில் ரூ279 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கம் கட்டுதல். இத்திட்டத்தினால் 1620 எக்டேர் (4,000 ஏக்கர்) புன்செய் நிலங்கள் பாசன வசதிபெறும்.

(இ) ரூபாய் 46.70 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருப்பரப்பு அணைக்கட்டின் வலப்புறக் கால்வாயை விரிவுபடுத்துதல். இதனால் 97 எக்டேர் (238 ஏக்கர்) புதிய நன்செய் நிலங்கள் இருபோக பாசன வசதி பெறுவதோடு மற்றைய நிலங்களுக்குப் பாசன உறுதி செய்யப்படும்.

நொய்யல் அணைக்கட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தி அதிக, நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கமுடியுமா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1982-83ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நடுத்தர புதியபாசனத் திட்டங்களுக்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11 புதிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 50.79 கோடியாகும். இத்திட்டங்களினால் 20,800 எக்டேர் (51,321 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறும்.

**பாசனத் திட்டங்கள் ஆய்வு:**

பொதுப்பணித்துறையின் ஆய்வுப் பிரிவில் இருபத்தி எட்டு திட்டங்கள் விரிவான ஆய்வின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. இத்திட்டங்கள் ரூ.63 கோடி செலவில் 21600 எக்டேர் (52000 ஏக்கர்) நிலங்களுக்குப் புதிதாகப் பாசனமும், 7290 எக்டேர் (18,000 ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன உறுதியும் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆய்வுப் பணிகளை விரிவுபடுத்தவும், வருங்காலத்தில் செயல்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரித்துத் தொகுத்து அளிக்கவும் பொதுப்பணித்துறையின் ஆய்வுப் பிரிவைப் பலப்படுத்த அரசு முடிவு செய்து ஒரு வட்டம் மற்றும் நான்கு கோட்டங்கள் அமைக்க சமீபத்தில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**பாசன வளம்:**

1981-82ம் ஆண்டில் (1) குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம் (40 எக்டேர்கள்) (2) தும்பலஹல்லி நீர்த்தேக்கத்திட்டம் (920 எக்டேர்கள்) (3) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டப்பணியில் ஒரு பகுதி (7300 எக்டேர்கள்) மற்றும் வறட்சிப் பகுதிகளுக்கான திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் பாம்பாறு நீர்த்தேக்கத்திட்டம் (1620 எக்டேர்கள்) ஆகிய பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலம் மொத்




# கிராமப்புறங்களில் பேருந்து வசதி!

இந்தியா கிராமங்களில் வசிக்கிறது. இந்திய மக்களில் 76 சதவீதம் கிராமங்களில் வசிக்கின்றனர். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ்நாட்டிலுள்ள 4.83 கோடி மக்கள் தொகையில் 3.24 கோடி மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்றார்கள். தமிழ்நாட்டில் மாநகரங்கள், நகரங்களின் எண்ணிக்கை தற்பொழுது 434 ஆகும். கிராமப்புறங்களில் குடியிருப்போர் அதிகமாக அண்டை நகரங்களுக்கு கல்வி, மருத்துவம், தொழில், வியாபாரம் முதலிய அத்யாவசியத் தேவைகளுக்கு அன்றாடம் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். கிராமப்புறங்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் போக்குவரத்து இன்றியமையாததாகும். இருப்புப்பாதை, நீர்வழி, ஆகாய வழி போக்குவரத்தைவிட சாலை போக்குவரத்து வீட்டுக்கு வீடு கொண்டு செல்ல வாய்ப்புள்ளதாகவும், சிக்கனமாகவும், நகர்ப்புற, கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு மிக்க வசதியாகவும் உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராமப்புறங்களில் சாலைப்போக்குவரத்தை அபிவிருத்தி செய்து, நகர்ப்புறங்களில் நெரிசலைத் தவிர்ப்பது என்பது ஒரு முக்கிய கொள்கையாகும்.

கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்த வேண்டுமானால், கிராமச்சாலைகளைச் சீர்படுத்தவேண்டியது மிக அவசியமாகிறது. சாலைப் பராமரிப்புத் துறையும், சாலைப் போக்குவரத்துத் துறையும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தேசிய நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்து ஆகிய மூன்று துறைகளும் திட்ட நிலையிலும் செயல் படுத்தும் நிலையிலும் தலைமையகத்தில் ஒரே துறையின் கீழ்இயங்க அரசு கட்டளை பிறப்பித்தது.

ஆட்சிப் பொறுப்பில் அமருவதற்கு முன்பே பஸ் தொழிலை நாட்டுடைமையாக்குவோம் என்பதை மக்கள் முன் எடுத்துரைத்து வந்திருக்கிறோம். ஆட்சிக்கு வந்த பின்னர் சட்ட மன்றத்தில் எடுத்துக் கூறி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அரசின் புதிய முயற்சிகள் யாரையும் எந்தத் தொழிலில் உள்ளவர்களையும் நிலை குலையச் செய்வதற்காக அல்ல, அடிப்படைத் தொழில்கள் நாட்டுடைமையாக இருக்க வேண்டும் என்ற பொதுக் கருத்துக்கு ஒப்பவே இவை செய்யப்படுகின்றன.

— பேரறிஞர் அண்ணா





கிராமப்புறப் பகுதிகளுக்கு, போக்குவரத்து வசதியளிப்பதில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும். 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாளன்றுள்ளவாறு, இம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 12,902பேருந்துகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் 7829 பேருந்துகளை இயக்கின. இது மொத்தத்தில் 51 சதவீதமாகும்.

தற்பொழுது தமிழ்நாட்டில், மற்ற மாநிலங்களைப் போலல்லாமல், 'இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்' கீழ் பதிவு செய்யப்பட்டு எட்டு பயணிப் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இவை நாள்தோறும் சுமார் 23 இலட்சம் கிலோ மீட்டர்கள், ஏறத்தாழ 66 இலட்சம் மக்களை நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்கின்றன. விரைவுப் பேருந்துகள் இயக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர மற்ற 7 போக்குவரத்துக் கழகங்களும் உள்ளடக்கிய கிராமப்புறப் பகுதிகளுக்குப்பேருந்து வசதியளித்து வருகின்றன. இப்பணியை மேலும் நல்ல முறையில் செவ்வனே செய்யும் பொருட்டு, மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு முடிவெடுத்திருக்கிறது.

சனவரி 1979-ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பெரும் அளவில் சாலைப் போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. போக்குவரத்துத்துறை, போக்குவரத்துக் கழகங்கள், நெடுஞ்சாலைத்துறை, அனைத்தும் இந்த மாபெரும் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டன. அதன் விளைவாக இன்று இத்தகைய கிராமச் சாலை வசதியின்றி உள்ளன. எவ்வளவு மக்கள் இவ்வாறு சாலை வசதியின்றி அவதியுறுகின்றனர்? சாலைகளிலிருந்து இந்தக் கிராமங்கள் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதை கண்டறியப்பட்டது. அதுபோலவே எத்தனை கிராமங்கள் போக்குவரத்து வசதியில்லாமல் உள்ளன, அதில் உள்ள மக்கள் தொகை முதலியவையும் கண்டறியப்பட்டன. ஆய்வு முடிவுகள் கணக்கீட்டுப்பொறி (Computer) உதவியுடன் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதனால் கிராமப்புறங்களுக்கு பேருந்துகள் விடுவதற்கு முக்கியத் திட்டம் தற்போது கைவசம் கிடைத்திருக்கிறது. ஆய்வின் முக்கிய முடிவுகள் பின் வருமாறு:

மாநிலத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள்—13,239

ஏற்கனவே பேருந்து வசதி அளிக்கப்பட்டவை—8,034

மீதமுள்ளவை—4,205

சாலை சீராக இருப்பதால் உடனடியாகப் பேருந்து வசதி அளிக்கப்படக்கூடியகிராமப் பஞ்சாயத்துக்கள்—969

13936 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்தால்தான் பேருந்து வசதியளிக்க முடியும் என்ற நிலையிலுள்ள கிராம பஞ்சாயத்துக்கள்—3,237

சாலை மேம்பாட்டிற்கு ஆகும் செலவு—ரூ. 91 கோடி.

முதற்கட்டமாக கிராமப்புறப் போக்குவரத்திற்குக் கண்டறியப்பட்ட 968 கிராமப் பஞ்சாயத்துக்கு பேருந்து வசதி அளிக்கும் வகையில் 476 பேருந்து வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலிருக்கின்றன. சாலை மேம்பாட்டிற்கு ஆகும் செலவுக்கான தொகையும் வெவ்வேறு வழிகளில் ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் சென்ற நான்காண்டுகளில் மட்டும் ஏறத்தாழ ரூ. 163 கோடி மதிப்பில் சுமார் 6,000-க்கும் மேல் புதிய பேருந்துகள் வாங்கி, அதில் 3,400 பழைய பேருந்துகளுக்குப்பதில் மாற்றியமைக்கப்பட்டும், மீதம் 2,600 பேருந்துகளில் சில ஏற்கனவே உள்ள வழித்தடங்களில் கூடுதலாகவும், சில புதிய வழித் தடங்களிலும் இயக்கப்பட்டன. 2243 புதிய வழித்தடங்கள் உருவாக்கி இதுவரை 4,410 கிராமங்களுக்கு முதல் முறையாக பேருந்து வசதிசெய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பயனடைந்த கிராமப்புற மக்கள் தொகை சுமார் 80இலட்சமாகும். மலைப்பாங்கான கிராமங்களுக்கும், உள்ளடக்கிய கிராமப்புறப் பகுதிகளுக்குச் செல்ல ஏற்ற வகையில் 49 சிறு பேருந்துகள் (Mini buses) இயக்கப்பட்டு வருகின்றன. இராமேஸ்வரத்தீவு போன்ற இடங்களிலும், நீலகிரி மாவட்டத்திலும் 70-க்கும் மேற்பட்ட குறுஞ் சக்கர அடிப் பகுதிகள் கொண்ட பேருந்துகளையும் (Short wheel base buses) அவை இயக்கி வருகின்றன. கிராமப்புறமக்கள் உணவு தானியங்கள், காய்கறி, பால் போன்ற விற்பனை செய்யத்தக்க பொருள்களை எடுத்துச் செல்ல உதவும் பொருட்டு இதுவரை 11 'அங்காடிப் பேருந்துகளை' ஓடவிட்டிருக்கின்றன. நாளடைவில் கூடுதலாக விடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. உரிய காலத்திற்கு மேல் அதிகக் காலம் ஓடிய பழைய பேருந்துகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இயன்ற இனங்களில் அவை குறுஞ்சக்கர அடிப்பகுதி கொண்ட பேருந்துகளாக மாற்றப்பட்டு குறைந்த மக்கள் தொகை உள்ள, தொலைவான பகுதிகளில் இயக்கப்படுகின்றன.

கிராமப்புறப் பேருந்துகளின் அணிவகுப்பு



பேருந்துகளின் விலையேற்றம் டீசல் எண்ணெய்விலை அதிகரிப்பு முதலியவற்றைக் கருத்திற்கொண்டு முறையான பேருந்துகளைக் கொண்டு அதிகமான கிராமங்களுக்குப் பேருந்து வசதிகளை அளிக்கும் பொருட்டு 585 புதிய வழித்தடங்களைக் கொண்ட 252 பலமுனை வழித்தடங்கள் (Multi pronged routes) நடைமுறையிலிருக்கின்றன.

நகரங்களைச் சுற்றிலும், சிறிய சிறிய குடியிருப்புகள் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன. கூடுதலான கிராமங்களை நகரத்துடன் இணைக்கும் பொருட்டும், நகர எல்லைக்குள் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், மக்கள், தொலைவிலிருந்து மலிவுச் செலவில் நகருக்கு வந்து போக வசதியளிக்கும் பொருட்டும், நகர்ப்புற வழித்தடங்களின் 25 கி.மீ. ஆக இருந்ததை 30 கிலோ மீட்டராக மாற்றியமைக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஒவ்வொரு கிராமத்திற்கும், பேருந்து வசதி செய்து தர மக்கள் குரலெழுப்புகிறார்கள். இவைகளை நன்கு ஆராய்ந்து, பேருந்து வழித்தடங்கள் அமைக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட இக்குழுவில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, போக்குவரத்து கழகத்தின் நிர்வாக இயக்குநர், நெடுஞ்சாலைக் கோட்டப் பொறியாளர், மாவட்ட ஆட்சியரின் ஊர் வளர்ச்சி உதவியாளர் முதலானோர் அங்கத்தினராவர்.

புதிய கிராமப்புற வழித் தடங்களில் பேருந்து விடுவதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டம் ஏற்பட்ட போதிலும், கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கத்துடன், அரசு போக்குவரத்துக் கழகங்கள் இவற்றை நடத்தி வருகின்றன. ஆதாயம் ஈட்டிய போக்குவரத்துக் கழகங்கள் குறிப்பாக சேரன் போக்குவரத்துக் கழகமும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகமும் சென்ற ஆண்டின் ஆதாயத்திலிருந்து ரூ. 30 இலட்சம் கிராமப்புற மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஊரகச் சீரமைப்புச் சங்கத்திற்கு உதவித் தொகையாக அளித்திருக்கிறது.

கிராமப்புறச் சாலைப் போக்குவரத்து நாட்டிற்கு இன்றியமையாதது என்று கருத்தில் கொண்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ. 378 இலட்சம் இவ்வாண்டில் கடனாக அளிக்க முன்வந்துள்ளது. உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களுக்குச் சாலைகள் அமைக்கவும், பேருந்து வசதிகள் செய்யவும் ஆய்வுசெய்து அதை நிறைவேற்ற உண்டாகும் செலவுக்கு நிதி திரட்டுவதற்கு 'கிராமப்புறச் சாலை மற்றும் போக்குவரத்து அதிகாரிக் குழு (Rural Road & Transport Authority) ஒன்று போக்குவரத்து ஆணையரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

'தமிழக அரசும், அரசு போக்குவரத்துக் கழகங்களும், அரசு போக்குவரத்துத் துறையும், கிராமங்களை நகரங்களுடன் போக்குவரத்து வசதிகள் மூலம் இணைப்பதை ஒரு முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பதை இதிலிருந்து அறியலாம்.



தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்தமொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்.

—பேரறிஞர் அண்ணா

# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி



வேலை வாய்ப்பினைப் பெருமளவில் உருவாக்கவும் நமது மாநிலத்தில் ஒரு பகுதியில் தொழில்கள் பெருகியும், மற்றொரு பகுதியில் குறைந்தும் இருப்பதைப் போக்கி, எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் சீராக அமைந்திடவும் நடவடிக்கை எடுப்பதுதான் தமிழ்நாடு அரசு பின்பற்றிவரும் தொழில் துறைக் கொள்கையின் இரு நோக்கங்கள் ஆகும்.

அதே நேரத்தில் சிறு தொழில்கள் துறையோடு தொடர்பை ஏற்படுத்தவும் இன்றியமையாத் துறைகளின் உற்பத்திக்கும், முக்கியத் துறைகளின் உற்பத்திக்கும் உதவி செய்யவும் இம்மாநிலத்தில் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் பெரிய, நடுத்தரத் தொழில்களும் இணைந்து சீரான முறையில் வளர்ச்சி பெறச் செய்வதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. திட்டமிட்ட வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், பெருந் தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கும் வகையில் மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய அளவிற்கு அவற்றை முடுக்கி விடுவதிலும் பெருந் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தனியார் தொழில் முனைவர்களின் திறனை ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால், சமூக நீதியை நிலைநாட்டவும், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டு பிடிக்கவும், நலம் பயக்கும் அளவிற்கு வருமான வாய்ப்புக்களைப் பகிர்ந்தளிக்கவும் அவசியமாயிருக்கிற உற்பத்திப் பிரிவுகளில் மட்டுமே அரசு நேரடியாகத் தலையிடும். அரசு உள்ளூர் வள வாயில்கள், மூலப் பொருள்கள், மனித ஆற்றல் போன்ற வகையில் இம்மாநிலத்தில் கிடைக்கக் கூடிய இயற்கை வள வாயில்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும். தனித்தியங்க வல்ல திட்டங்கள் எவை எவை என்பதைக் கண்டறிந்து கட்டுபடியாகும் திட்டங்களைத் தீட்டி அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது, செயலூக்கம் அளித்தல், கடன் வசதி, ஏனைய இடு பொருட்கள் வழங்குதல், பயிற்சி வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல், சிறு தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் போன்றவற்றில் உதவி செய்வதன் வாயிலாக அவற்றை உற்பத்தியைப் பெருக்கும் வளங்களாக மாற்றிட வேண்டும்.

ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, மத்திய அரசுத் துறை திட்டங்களில் செயல்படும் முதலீடுகளின் அளவைப் பொறுத்து அமைகிறது. தமிழ்நாட்டில் மத்திய அரசு ...

வேலை வாய்ப்பினைப் பெருமளவில் உருவாக்கவும் நமது மாநிலத்தில் ஒரு பகுதியில் தொழில்கள் பெருகியும், மற்றொரு பகுதியில் குறைந்தும் இருப்பதைப் போக்கி, எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் ஊக்குவிப்பதில் அரசு அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. ஆனால், சமூக நீதியை நிலைநாட்டவும், தொழில் நுட்ப உத்திகளைப் புதிதாகக் கண்டு பிடிக்கவும், நலம் பயக்கும் அளவிற்கு வருமான வாய்ப்புக்களைப் வீடு கடந்த சில ஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளது. அதிகமான பொதுத்துறைத் திட்டங்களை நம் மாநிலத்தில் ஏற்படுத்த மாநில அரசு தீவிரமாக முயன்று வருகிறது. 'பெல்' நிறு

வீடு கடந்த சில ஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளது. அதிகமான பொதுத்துறைத் திட்டங்களை நம் மாநிலத்தில் ஏற்படுத்த மாநில அரசு தீவிரமாக முயன்று வருகிறது. 'பெல்' நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்றை இராணிப்பேட்டையில் தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர சோதனைப் பிரிவு ஒன்றையும் நிறுவ மத்திய அரசு அனுமதியளிக்க முன் வந்துள்ளது. இனி வரும் ஆண்டுகளில் இம்மாநிலத்திற்கு இப்படிப்பட்ட திட்டங்கள் பலவற்றிற்கு அனுமதி வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது.

பெரிய, நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டிலும், வளர்ச்சியிலும் மாநில அரசுக்குள்ள பெரும் பொறுப்பு, தனியார் துறையில் முறையான வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதேயாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காகப் பல கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள் அரசிடமிருந்து, தேவையான நிதி உதவியும் நிருவாக உதவியும் பெறுவதுடன் இப்பணிகளுக்காக நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெருமளவிற்கு நிதி உதவியும் பெறுகின்றன. போர்த்திற நோக்கங் கொண்ட காரணங்கள் இவைக் ...

சில பகுதிகளில் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடும்படி சில கழகங்களுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

பொதுத்துறையில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்தும் நிருவகிக்கும் பணியும் தனியார் தொழில் முனைவோர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழிற் பிரிவுகளை உருவாக்கும் பணியும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் (டிட்கோ) ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது அரக்கோணத்தில் உருக்காலை ஒன்றையும் ஆலங்குளம், அரியலூர் ஆகிய இடங்களில் சிமெண்ட் தொழிற்சாலைகளையும் டிட்கோ நிறுவனம் நிருவகித்து வருகிறது. இப்பிரிவுகளை விரிவுபடுத்துவதோடு வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் உட்பட பொதுத்துறையில் புதிய திட்டங்கள் சிலவற்றை நிறுவி 'டிட்கோ' நிறுவனம் செம்மையாகச் செயல்பட இருக்கிறது. அரக்கோணத்தில் உள்ள உருக்கு உருளை ஆலையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உருக்குத் தகடுகள், கம்பிகள் தயாரிக்கும் ஆலையும் நிறுவுவதும் மேற்படி பணியில் அடங்கும்.

தமிழ்நாடு தொழில் ஆக்கக் கழகத்திற்கு (சிப்காட்) தனியார் துறையில் பெரிய நடுத்தரத் தொழில்களை மேம்படுத்துதல், நமது மாநிலத்தில் போதிய அளவு வளர்ச்சி அடையாத பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைக்கும் பணியை விரைவுபடுத்துதல் ஆகிய இரு பொறுப்புகள உள்ளன. இக் கழகம் ஊக்கத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துகிறது.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிப்பதோடு, தொழில் முனைவோருக்குப் பல்வேறு துணைப் பணிகளையும் செய்து தருகிறது. மாநிலத்தில் பல இடங்களில் தொழில் மையங்களை உருவாக்கி எளிய நிபந்தனைகளின் பேரில் தொழிற்சாலைகளும் மேம்பாடு செய்யப்பட்ட மனைகள் கிடைக்க வகை செய்கிறது. இந்த ஊக்கத் திட்டங்களில் மத்திய அரசின் உதவித் தொகையும் மாநில அரசு வழங்கும் வட்டி இல்லா விற்பனை வரிக்கடனும் அடங்கும். மாநிலத்தில் தொழில்கள் விரைந்து வளர்ச்சி பெற மேலும் பல புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குத் தொழில் முனைவோரைக் கவரும் வகையில் தனித் திட்டங்களும், ஊக்கத் திட்டங்களும் அண்மையில் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் வளர்ச்சிக்குத் தனிச் சலுகைகள் பலவற்றையும் அரசு அறிவித்துள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தற்போது அனுமதித்துள்ள வட்டியில்லா விற்பனை வரிக் கடனுக்காக உச்சவரம்பினை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தியுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானா மதுரை ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் உருவாகி வருகின்றன. தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் உள்ள புதிய தொழிற் பிரிவுகள் முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்குப் பெறும். மின் அணுவியல், மருந்துகள், மோட்டார் வண்டி துறைத் தொழில்கள் ஆகிய துறைகளில் புதிய தொழிற்களை உருவாக்க உதவித் தொகையும் அளிக்கப் படுகிறது.



1949-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி.ஐ.ஐ.சி.) தமிழ்நாட்டில் மாநில நிதி உதவி கழகமாகச் செயல்பட்டு வருகிறது. நடுத்தரக்காலக் கடன்கள் வழங்குதல், இயந்திரங்கள் வாங்கியதற்கான தொகையைக் காலந் தாழ்த்திச் செலுத்த உத்தரவாதம் அளித்தல், பொதுமக்கள் வாங்காத மூலதனப் பங்குகளையும், முன்னுரிமைப் பங்குகளையும் வாங்குதல் ஆகிய வழிகளில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தவும், ஏற்கெனவே உள்ள தொழிற் பிரிவுகளை விரிவுபடுத்தி, நவீனப்படுத்தவும் இது உதவுகிறது. மேலும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கிராமப்புற மருத்துவர்கள், போக்குவரத்துப் பணியை நடத்துபவர்கள் ஆகியோருக்கும், ஓட்டல்களுக்கும் குறைந்த வட்டிக் கடன் திட்டங்கள் மூலம் நிதி உதவி வழங்குதல், தொழில்நுட்ப வினைஞர், தொழில் முனைவோருக்கான திட்டங்கள் முதலியவற்றின் கீழ் கடனுதவி அளித்தல் போன்ற தனித் திட்டங்களையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடியனவும், குறிப்பாக பின் தங்கிய, கிராமப்புறப் பகுதிகளில் அமைக்கப்படுவனவும் சிறப்பாகச் சமுதாயத்தில் பொருளாதார ரீதியில் நலிந்துள்ளவர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப் பட்டவையுமான தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து, வருங்காலத்தில் இவற்றிற்கு அதிக உதவியளிக்க இக்கழகம் கருதியுள்ளது.

நீண்ட கடற்கரையையும், கதிரவனின் ஒளியையும் பெருமளவில் பெறும் பேறு பெற்றுள்ள தமிழ்நாடு, உப்பு உற்பத்தியில் நாட்டிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உப்புத் தொழில் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களில் ஒன்றாகும். இதனால் கடற்கரையிலோ மாவட்டங்களிலோ உள்ள உழவுத் தொழிலாளர்களுக்கும் அந்தந்தக் காலங்களில் வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. உப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை நிறுவுவதற்கு ஊக்கமளிப்பதிலும் மாநில அரசுக்குத் தமிழ்நாடு உப்பு -உப்பு சார்ந்த இரசாயனங்கள் வாரியம் ஆலோ

கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உருக்குத் தகடுகள், கம்பிகள் தயாரிக்கும் ஆலையும் நிறுவுவதும் மேற்படி பணியில் அடங்கும்.

தமிழ்நாடு தொழில் ஆக்கக்

வற்றையும் அரசு அறிவித்துள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தற்போது அனுமதித்துள்ள வட்டியில்லா விற்பனை வரிக் கடனுக்காக உச்சவரம்பினை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூ. 1 கோடியாக உயர்த்தியுள்ளது. கடலூர், புதுக்கோட்டை, மானா

டங்கள் மூலம் நிதி உதவி வழங்குதல், தொழில்நுட்ப வினைஞர், தொழில் முனைவோருக்கான திட்டங்கள் முதலியவற்றின் கீழ் கடனுதவி அளித்தல் போன்ற தனித் திட்டங்களையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. அதிக அளவில் வேலை




யில் பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்ட உப்புக் கழகத்திடம், புதுப்புது இடங்களில் உப்பளங்கள் தொடங்குதல், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களை ஏற்படுத்துதல் ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது இக்கழகம், இராமநாதபுர மாவட்டத்தில் மறையூர், வாலி நோக்கம் என்னுமிடத்தில் ஒன்றுமாக இரு பெரும் உப்பளத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இக்கழகம் புதிய இடங்களில் உப்பு உற்பத்தியைத் தொடங்கி சிறுஉற்பத்தியாளர்களுக்கு நிதி உதவியும், விற்பனை வசதியும் செய்து கொடுக்கும். கடல் இரசாயனங்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலைகளை நிறுவவும் நடவடிக்கை எடுக்கும்.

சர்க்கரைத்தொழில், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிலாகும். கிராமப் பொருளாதாரத்தில் இது முக்கிய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத் துறை இயக்ககமும் பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காக 1974-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் 1982-83-ஆம் ஆண்டிலும் அடுத்து வரும் ஆண்டுகளிலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்புகளும் உள்ளன. பொதுத் துறையும் கூட்டுறவுத் துறையும் சர்க்கரை ஆலைகளை அமைக்க முன் வராவிட்டால் கரும்பு கிடைக்கக்கூடிய பகுதிகளில் தற்போது சர்க்கரை ஆலைகள் இருப்பின் அவற்றின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்காமல் சர்க்கரைஆலைகளைப் புதிதாக அமைக்கத் தனியார்துறையினருக்கு ஊக்கமளிக்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இந்த வகையில் சர்க்கரை ஆலை நிறுவ அனுமதி கேட்டு மூன்று விண்ணப்பங்கள் வந்தன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (டேசல்) திருமழிசையில் இயந்திரச் செங்கற்சூளை ஒன்றையும், சென்னையிலும், விருத்தாச்சலத்திலும் மட்பாண்டப் பிரிவுகளையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தனது தொழிற் பிரிவுகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தி கிராமப் புறங்களில் குயவர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் உதவுவதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு மின்னணுத்தொழில் நிறுவனம் - இம்மாநிலத்தில் மின்னணுத் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் அரசானது தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தை அமைத்தது. பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் நவீன மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்கும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் தொலைக்காட்சிப் பெட்டிகள், எலெக்ராலிட்டிக் கெப்பாசிட்டர்கள் முதலியன தயாரிக்க தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரெசிஸ்டர்கள் உற்பத்தி செய்தல், கதிர் மின் கருவிகளை உற்பத்தி செய்தல் முதலான கூட்டுத் துறை திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மேலும் பல மின்னணுத் தொழிற்சாலைகளை அமைக்க, ஊக்கமளிக்கும் வகையில் இம்மாநிலம் முழுவதும் அமைக்கப்படும் புதிய மின்னணுத் தொழிற்சாலைகளுக்கு ''மாநில மானியத் திட்டத்தை'' அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புகளூரில் ஆண்டுக்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதங்களையும், 40,000 டன் எழுது தாள்களையும், அச்சிடுவதற்கான தாள்களையும் உற்பத்தி செய்ய ரூ.50 கோடி அனுமதி பெற்ற பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் 190 கோடி ரூபாய் (நடைமூலதனத்தையும் சேர்த்து) செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு, இந்திய நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள், உலக வங்கி ஆகியவை நிதி உதவி செய்யும். இத்திட்டத்திற்கு 100 மில்லியன் டாலர் கடன் வழங்க உலக வங்கி ஒப்புக் கொண்டுள்ளது. இதற்காக உலக வங்கியுடனும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடனும் இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டு அதற்கான பத்திரங்களில் கையெழுத்திட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகளூரில் அமைய இருக்கும் இத்திட்டம், நாட்டில் ஒரு புதுவகையான தொழில் நுட்பவியலுக்கு முன்னோடியாக அமையும். இது தற்போது சர்க்கரை ஆலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுத்தும்.

மாநிலத்தில் கனிமத் தொழில் வளர்ச்சியில் அரசு தனிக் கவனம் செலுத்தும். சேலத்தில் உள்ள மாக்னசைட் கனிமங்கள் சிலவற்றை நடத்துவதற்கான 1979 இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் கனிம வேலைகளை விரிவாக்கியும், கரிந்த மாக்னசைட் உற்பத்திக்கான ஒரு தொழிற் பிரிவு ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் ஏற்படுத்தியும் தனது பணியை விரிவுபடுத்தும். தற்போது கரும் பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யும் தமிழ்நாடு கனிம நிறுவனம், கரும்பாறைகளை மெருகேற்றும் நவீன தொழிற்சாலை ஒன்றை நிறுவும். இம்மாநிலத்தில் உள்ள கிராபைட் படிவங்களை வெட்டி சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் நிறுவ உத்தேசித்துள்ளது.

# வளரும் கதர்த் திட்டம்



தமிழகத்தில் துவக்க காலத்தில் கைராட்டைகள் அதிக அளவில் புகுத்தப்பட்டன. கைராட்டை நூலின் தரத்தை உயர்த்தவும், நூற்போரின் வருவாயைப் பெருக்கவும்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக நான்கு கதிர், ஆறு கதிர் அம்பர் இராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் மூலம் நூற்போர் நாளொன்றுக்கு ஒன்றரை ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் வரை ஊதியம் பெற்றனர். மேலும், நூற்போரின் உற்பத்தித் திறனை அதிகரித்து நூற்போரின் வருவாயை அதிகரிக்க முற்றிலும் உலோகத்தால் அமைக்கப்பட்ட ஆறு கதிர், 12 கதிர் ராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக, ஒரு நூற்போர் நாளொன்றுக்கு ஐந்து ரூபாயிலிருந்துஏழு ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர்.

இத்தகைய ராட்டைகள் 30ஐக் கொண்ட கிராமிய நூற்புக் கூடங்கள் 411 வாரியத்தின் நேரடிப் பார்வையின்கீழ் இயங்கி வருகின்றன. இந்நிலையம் ஒன்று நிறுவிட ரூ. 90,000 தேவைப்படுகிறது. இவை ஒவ்வொன்றிலும் முப்பது நபர்களுக்கு, பெரும்பாலும் பெண்களுக்கு நிலையான பணி கிடைக்கின்றது. இந்தக் குறைந்த மூலதனத்தில் இத்தகையோருக்கு, வேறு எந்தத் தொழிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது. திக்கற்ற பெண்களும், விதவைகளும் கிராமிய நூற்புக்கூடத்தில் சேர்க்கப்பட்டு வாழ்வளிக்கப்படுகிறது. இவ்வாரியத்தின் கீழ் 26,345 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டில் 355.72 இலட்சம் சிட்ட நூலை உற்பத்தி செய்து ரூ. 119.25 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். இவ்வாண்டில் மேலும் 186 கிராமிய நூற்புக் கூடங்கள் புதியதாகத் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5880 பேருக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைத்திடும்.




## நெசவு

நூல் உற்பத்திக்கு ஏற்றவாறு துணி உற்பத்தி செய்வதற்கும், நெசவாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், கிராமப் புறங்களில் படித்த, வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்களை நெசவு தொழிலை எளிதில் ஏற்று நடத்தவும் வசதியாக உள்ள நேபாள மாதிரி தறிகளைத் தமிழ்நாட்டில் புகுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி வரும் ஆண்டில் 640 நேபாளத் தறிகள் இயக்கி வைக்கப்படும். 1980-81-ஆம் ஆண்டு 5832 நெசவாளர்கள் மூலம் 657.78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 51 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது. நெசவாளர்கள் ரூ. 137.45 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். 1980-81ஐவிட 1981-82-ல் 11 இலட்சம் மீட்டர் துணி கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது. நடப்பாண்டில் ரூ. 700 இலட்சம் மதிப்புள்ள கதர்த்துணி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

வாரியத்தின் கீழ் உள்ள சாயச் சலவை அச்சுக் கூடங்களில் ரூ. 76 இலட்சம் மதிப்புள்ள துணி சாயமிடப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. 1981-82-ல் ரூ. 36 கோடி மதிப்புள்ள துணி சாயமிடவும், அச்சிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆயத்த ஆடைகள் :**

வாரியத்தின் ஆயத்த ஆடைகளுக்கு என்றும் நம் நாட்டில் ஒரு நல்ல வரவேற்பு உண்டு. வாரியத்தின் கீழ் மூன்று தையல் அலகுகள் இயங்கி வருகின்றன. இவற்றைத் தவிர பல்வேறு தனியார் துறை மூலம் வாரியம் தனது ஆயத்த ஆடைகளைத் தயாரித்து வருகிறது. 1981-82-ல் ஆயத்த ஆடைகள் மட்டும் ரூ. 40 இலட்சத்திற்கு விற்பனையாயிற்று.

**கதர்ப்பட்டு :**

வாரியம் தனது 15 உற்பத்தி அலகுகள் மூலம் ரூ. 257 இலட்சம் மதிப்புள்ள கதர்ப் பட்டு சென்ற ஆண்டு உற்பத்தி செய்தது. கதர்ப் பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு என்றுமே உள்ளது. இதனால் வரும் ஆண்டில் மேற்கொண்டு அதிகமாசப் பட்டுத்துணி உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 60 இலட்சம் கதர்ப் பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

வாரியத்தின் கீழ் குறளகத்திலுள்ள பேரங்காடி உட்பட 155 காதி கிராப்டுகள் இயங்கி வருகின்றன. இவைகள் மூலம் கதர் கிராமக் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கதர் பருத்திரகத்திற்குச் சாதாரணக் காலத்தில் 10 விழுக்காடு தள்ளுபடி உண்டு. சாந்தி பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்காலங்களில் மாநில அரசு, கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிதி உதவி பெற்று சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. 1981-82-ல் ரூ. 786 இலட்சம் துணி விற்பனையாயிற்று. நடப்பு ஆண்டில் ரூ. 1000 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணி விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான மற்றும் சமமான நூல் உற்பத்திக்குச் சரியான முறையில் பஞ்சை அடித்துப் பட்டை போட வேண்டும். இது காறும் இது கையினாலேயே பெரும்பாலும் செய்து வரப்பட்டது. இயந்திரத்தினால் பஞ்சை உடைத்து பட்டை போடும் 48 அலகுகள் நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. மேற்கொண்டு 56 அலகுகள் நிறுவிடும் பணி நடைபெற்று வருகிறது.

கதரின் தரத்தையும் ஆராயும் வடிவமைப்புச் செய்யவும் ஒரு ஆராய்ச்சிக்கூடம் பவானிசாகரில் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் அது செயல்படத் துவங்கும்.

**ஆதி திராவிடர் முன்னேற்றத் திட்டம் :**

கதர் தொழிலில் பல்லாயிரக் கணக்கான நபர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வாய்ப்புள்ளது. ஆதி திராவிட மக்களை இத்தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை



ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கருதி, அவர்களுக்காக 20 கிராமிய நூற்புக் கூடங்களும், 8 நேபாள மாதிரித் தறிகளும் துவக்கிட 198182-ல் சிறப்புத் திட்டத்தின் கீழ் அரசு ரூபாய் 84.84 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 1,000 நபர்கள் பயனடையும் மேற்கொண்டு 20 கிராமிய நூற்பு கூடங்களும், 8 நேபாள மாதிரித் தறி அலகுகளும், 2 பட்டு நூல் முறுக்காலை, 3 மெத்தை, தலையணை தயாரிக்க வேண்டிய இலவம் பஞ்சு உடைக்கும் அலகு, 3 சாயச் சலவை அச்சுக் கூடம், ஜெக்காடு துணி நெசவியல் கூடம் ஒன்றும் ரூ. 147.05 இலட்சம் மதிப்பில் அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் 1365 பேர்கள் பயனடைவர். ஏழை எளிய ஆதி திராவிட மக்களின் வருவாயைப் பெருக்க, செயல்படும் இத்திட்டங்கள் இவர்களது வாழ்க்கையில் மலர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பான்மையோர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது இத்திட்டம்.

கதர் உற்பத்தியிலும், விற்பனையிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையில் இருப்பது பெருமிதத்திற்குரியதாகும். இதில் வாரியத்தின் பணி அரும் பணியாகும். மேலும், இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வாரியம் பருவ காலத்திலும் கதர் உற்பத்தியில் முன்னின்று பல்லாயிரக் கணக்கோருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.





# ஆதிதிராவிடர் நலத்துறையின் அரும்பணிகள்

சாதிக் கொடுமையினை அகற்ற வேண்டும் எனச் சீரிய குறிக்கோளுடன் புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நல்லரசு பல முற்போக்குத் திட்டங்களைத் தீட்டி அவற்றினைச் செம்மையான பாங்கில் செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிட மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டினைச் செம்மையான வகையில் தீவிரப்படுத்துவதற்கு புதியதாகக் கொண்டு வரப்பட்ட சிறப்பு உட்பகுதித் திட்டமானது 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுத் துறையிலிருந்து குறைந்தது 18 சதவீத நன்மையினை ஆதி திராவிடர்கள் பயன் பெற அரசு வழி வகுத்துள்ளது.

ஆதி திராவிடர் மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு உட்பகுதித் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இம்மாநிலத்தில் உள்ள மொத்த ஆதி திராவிடர் குடும்பங்களில் 50 குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டுவர வகை செய்யப்படும். இந்த இலக்கினை அடைய ஒருங்கிணைந்த முறையில் எல்லாத் துறைகளும் செயல்பட்டு, ஆதி திராவிடர்களுக்கு அதிகப் பயனை நல்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரே குடும்பத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட திட்ட நலனை அளித்து மேம்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மக்கள் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களாக உளர். இவர்கள் நலனுக்கு விவசாய இடுபொருள்கள் 25./• மானியத்தில் வழங்கப்படுகின்றன. நவீன வேளாண்மை முறைகளை இம்மக்களுக்குப் "பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின்" கீழ் நல்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பயிர் செய்யப் பாசனக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. 1982-83 ஆம் ஆண்டில் 2,000 குழாய்க் கிணறுகள், ரூ. 4 கோடி செலவில் தமிழ்நாடு குழாய்க் கிணறு கழகத்தின் மூலம் ஏற்படுத்தித் தரப்படும். நில உச்ச வரம்புச் சட்டத்தினால் எடுக்கப்பட்ட நிலங்களைப் பெற்றவர்களில் ஏறக்குறைய 40•/. ஆதி திராவிட மக்கள் ஆவர். அவர்களுக்கு 1 எக்டேருக்கு ரூ.1000 மானியமாக அந்நிலங்களிலிருந்து பயன் துய்க்க உதவியளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தேசிய



கலப்புத் திருமண விழாவில் மாண்புமிகு முதல்வர்

ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், ஆதி திராவிடர்கள் அதிகப் பயன் பெற வகை செய்யப்படுகிறது.ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களில் 50./· ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் நலனில்60./· ஆதி திராவிடர்களுக்குக் கிடைக்கிறது. இத்திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள், குடிநீர் வழங்கல், வீடுகட்டுதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கால்நடைப் பராமரிப்பின் கீழ் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதி திராவிட மக்களின் உறுப்பினர் அளவினை 16 சதவீதத்திலிருந்து18சதவீதமாக உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. சரியாக இயங்காத பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நிதியுதவி வழங்குவதன் மூலம் மேம்பாடு பெறுமாறு செய்யப்படுகின்றன. ஆதி திராவிட மக்கள் கறவை மாடுகள் வாங்க இதுகாறும் பெற்று வந்த 33 சதவிகித உதவித் தொகை 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட இவர்கள் வாழும் குடியிருப்புகளுக்குஎல்லா அடிப்படை வசதிகளையும் செய்துதர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றனதன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இவர்களின் குடியிருப்புகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதை வசதி செய்து தரப்படுகிறது. எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவ,-மாணவியர்களுக்கான விடுதிகளில் உணவுக்காகச்செலவிடப்படும்தொகை 1981-82ம் ஆண்டிலிருந்து கணிசமாக உயர்த்தப்பட்டு திங்கள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.95 வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற இதர இடங்களில் உள்ள இத்தகைய விடுதிகளில் திங்கள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

புதியதாக 90 அரசு விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

ரூ. 20 இலட்சம் செலவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளிகளுக்கு 5 நல்ல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ. 112 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்பட்டு வரும் 32 பள்ளிக் கட்டடங்கள் பல நிலைகளில் கட்டுமானப் பணியில் வெகுவான முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூ. 291.32 இலட்சம் செலவில் அரசு விடுதிகள் 51 கட்டப்பட்டன.408.90லட்சம் மதிப்பீட்டில் 139 கட்டடங்களுக்கான கட்டுமானம் பல நிலைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

1976-77ல் கடன் உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 11.21 இலட்சம் மட்டுமே.1981-82ல் இத்தொகை ரூ. 55.65 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1977-78 முதல் 1981-82 வரை 26,248 மா/ணவ மாணவியர்களுக்குக் கடன் உபகாரச் சம்பளமாக ரூ. 204 இலட்சம் வழங்கப்பட்டது.

சட்ட பட்டதாரிகள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு உதவியாகவும், புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள் முதலியவை வாங்குவதற்கும் மானியமாக ரூ. 500ம் பதிவுக் கட்டணம் மற்றும் அறை வாடகை போன்றவைகளுக்கு ரூ. 750 கடனாகவும் வழங்கப்பட்டு வந்தது. 1980-81 முதல்,மேற்படி மானியத்தொகை ரூ. 500ல் இருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நபர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் வழங்கப்பட்ட உதவித் தொகை 1.8.'80 முதல் ரூ. 55 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குடிதண்ணீர்க் கிணறு தோண்ட 1977-78ல் ரூ. 5000லிருந்து ரூ. 6000 ஆக உயர்த்தி அனுமதிக்கப்பட்ட அளவு உச்சவரம்பு 1980-81ல் ரூ. 6000லிருந்து ரூ. 7,500 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் அவர்களது ஈமக்கடனைச் செய்ய ரூ. 50 நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் 1978-79ஆம் ஆண்டு கொணரப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கலப்பு மணம் புரிந்துகொண்ட தம்பதியர்களுக்கு வழங்கப்படும் சலுகையைப் பன்மடங்கு அதிகரிக்க ஆணையிடப்பட்டுள்ளது. ரூ. 4000 அவர்கள் பெயரில் வைப்புத் தொகையாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் போடப்படுவதுடன் ரொக்கமாக ரூ. 300, தங்கப் பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன.

ஆதிதிராவிட நலத் துறை மூலம் 150 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டுச் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1980-81ம் ஆண்டு 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1981-82ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நலனுக்காக, சிறப்பு உட் பகுதித் திட்டத்தின்கீழ் ரூ. 53 கோடி செலவிடப்பட்டது. 1982-83ல் இவர்களது நலனுக்காக ரூ. 114 கோடி செலவிடப்படும்.

ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவங்களில் 2½ முதல் 5 வயது வரையிலான முன்பள்ளிப் பருவம் மிக முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் அப்பருவம் அக்குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு அடிகோலும்பருவம். இப்பிரச்சினையில் குழந்தைகள் நலத்தில் அக்கறை கொண்ட ...நர்களுக்கோ அல்லது ...னாதத்துவ நிபுணர்களுக்கோ மாற்றுக் கருத்து இல்லை என்பதை ஆணித்தரமாகக் கூற முடியும். ஆனால் எல்லோருக்கும் ஆதாரக் கல்வி வசதி செய்ய வேண்டுமென்ற கொள்கையுடைய நம் நாட்டில், ஆதாரக் கல்விக்குப் பாலமாகவும் அஸ்திவாரமாகவும் கருதப்படும் முன்னாதாரக் கல்வி புறக்கணிக்கப்பட்டுள்ளது ஒரு துரதிருஷ்டமே.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முன்னாதாரக் கல்வி அரசின் திட்டங்களில் ஒன்றாகவும் ...க நலத்துறையின் முக்கிய ...டமாகவும் இருந்து வருகிறது. ஆதாரக் கல்விக்கு அடிப்படையான மனோ நிலையையும் நல்ல பழக்க வழக்கங்களையும் உருவாக்கித்தரும் முன்னாதாரப் பள்ளியினை அமைப்பது ஆதாரப் பள்ளிகளை அமைப்பதற்கு ஈடான செயலாகும் என்பதை அரசு உணர்ந்துள்ளது.

2½ முதல் 5 வயது வரையுள்ள முன்பள்ளிப்பருவம்தான் குழந்தைகளிடையே நல்ல பழக்க வழக்கங்கள், குண நலன்கள்,





அறிவு வளர்ச்சி முதலியன உருவாக்கத் தகுதியான பருவமாகும். இப்பருவத்தில் அதைச் செய்யத் தவறினால் அச்குழந்தையின் வளர்ச்சியில் மிகப் பெரிய இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய அடுத்தடுத்த பருவங்களில் எவ்வளவு முயன்றாலும் முடிவதில்லை. இந்த வகையில் பார்த்தால், முன்னாதாரப் பள்ளி மூலம் குழந்தைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், நாட்டின் நீண்ட கால வளர்ச்சிப் பணிகளில் ஒன்றாகவே கொள்ளலாம். இதனை மற்ற தொழில் வளர்ச்சித் திட்டங்கள் போல் நாடு முழுவதற்குமான ஒரு பொருளாதாரத் திட்டம் என்று கூறினாலும் மிகையாகாது.

முன்னாதாரப் பள்ளிகளில் காணப்படும் சுற்றுப்புறச் சூழ்நிலை வளர்ச்சிக்கும் நல்ல பழக்க வழக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்து சொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு குழந்தைகள் வளரும் சாதகமான சூழ்நிலைக்கும், ஒரு மனிதனின் சிறந்த எதிர்காலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இச்சாதகமான சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவுவார்கள். பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கு இது போன்ற முன்னாதாரப் பள்ளிகளை அமைத்துக்கொடுப்பது, அவர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் பற்றிய கவலையை நீக்கி நிம்மதியைத் தருவதுடன், நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக உதவுகிறது.

முன்னாதாரக் கல்வியின் பயனைப் பெற்ற குழந்தைகளுக்கு பள்ளிப்படிப்பில் ஆர்வமும். அக்கறையும் ஏற்படுகின்றன. அதன்மூலம் கல்வியில் சாதனை புரியவும் வாய்ப்பு ஏற்படுகிறது. முன்னாதாரப் பள்ளிகளில் காணப்படும் பாகுபாடற்ற சமத்துவ நிலையும், நல்ல சூழ்நிலையும் பள்ளிகளில் ஒழுக்கமிக்க மாணவ மணிகளை உருவாக்கவும் தற்போது பள்ளி மாணவ மாணவிகளிடையே காணப்படும் குறைபாடுகள் நீங்கவும் வழி வகுக்கும். பள்ளிக்குழந்தைகள் அரைகுறைப் படிப்புடன் நின்று விடும் பழக்கத்தை இது வெகுவாகக் குறைக்கிறது.

இம்முன்னாதாரப் பள்ளிகள் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இலவசக் கல்வித்திட்டம் வெற்றிபெற உதவுகிறது என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் இதே முன்னாதாரக் கல்விதான் பெண்கள் கல்விக்



கும் ஊக்கமளிக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது. ஏனெனில் தம்பி, தங்கைகளை நாள்முழுவதும் வீட்டில் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்புமிக்க பெண்குழந்தை, அத்தம்பி தங்கைகள் கல்விக்கூடம் சென்றால் தம் கல்வியையும் கவனிக்க அவகாசம் கிடைக்கிறதல்லவா?

முன்னாதாரப் பள்ளிகள் பெருமளவில் நடத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மாநிலத்திலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஏறத்தாழ 4343 குழந்தைகள் காப்பகங்கள் எனப்படும் முன்னாதாரப் பள்ளிகள் அரசால் நேரடியாக நடத்தப்பட்டு வருவதிலிருந்து, முன்னாதாரக் கல்வித் திட்டத்திற்கு அரசு அளித்துவரும் முக்கியத்துவம் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது. சிறு கிராமங்கள், மலைப்பகுதிகள், கால்நடையாக மட்டுமே சென்றடைய முடிகின்ற பகுதிகள் எனத் தமிழ்நாட்டிலுள்ள மூலைமுடுக்கெங்கும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களிலுள்ள எல்லாக் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தின் பலன் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதையும் பெருமளவில் இத்திட்டம் செயற்படுத்தப்படுவதன் நோக்கமாகும்.

இம் முன்னாதாரப் பள்ளிகள் பால்வாடி, குழந்தைகள் காப்பகம் என்ற பெயர்களில் மக்களுக்கு அறிமுகமாகியுள்ளன.

குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகள் விளையாடுவதற்கான விளையாட்டுக் கருவிகள் உள்ளன. அதுமட்டுமின்றிப் பற்பல விளையாட்டுக்கள், ஆடல், பாடல், சுத்தம், சுகாதாரம் பற்றிய பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவை குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கின்றது. இ[illegible] குழந்தைகள் காப்பகங்களிலுள்ள விளையாட்டுக் கருவிகள், மற்றும் கற்றுத்தரப்படும் விளையாட்டுகள் மூலம் குழந்தைகளிடம் இயற்கையாகவே காணப்படும் சக்தியும் ஆற்றலும் திறமையும் வளர்ச்சியடைகின்றன. கூடிவாழ்தல், பகிர்ந்துண்ணுதல், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல், ஒன்றுபட்டு உழைத்தல் போன்ற சமுதாய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நற்குணங்கள் உருவாகவும் வாய்ப்பளிக்கின்றன. உடற்பயிற்சி, விளையாட்டுக்கள், ஊட்டத்திட்டம் போன்றவற்றின் மூலம் குழந்தைகளின் உடல் வளர்ச்சி கவனிக்கப்படுகிறது.

குழந்தைகள் காப்பகங்களின் மூலம் முன்னாதாரக் கல்வியளிப்பது மட்டுமின்றி சத்துண[illegible] அளிக்கவும், உடல் நலம் பேணவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் பல்வேறு தேவைகள் ஒருங்கிணைந்து கவனிக்கப்படுகின்றன. குழந்தைகளின் தேவைகளில் இன்ன தேவைதான் மிகவும் முக்கியமானது என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாது. எல்லாத் தேவைகளையும் ஒருங்கிணைந்த வகையில் பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.

கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளை அதிகவனம்செலுத்தும் முறையில் இம்மாநிலத்தைப் பல் வேறு மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் தக்க அலுவலரை நியமித்துள்ளது. 1980-81-ஆம் ஆண்டில் [illegible] மண்டலங்கள் இருந்தன. ஆயின் 1981-82ல் மேலும் 2 மண்டலங்களை சேலம் மற்றும் திருச்சியில் நிறுவி. இம்மண்டலங்களிலும் அலுவலர்களை நியமித்துள்ளது. இம்மண்டலங்களின் கீழ், மாநிலம் முழுவதும் 61 கால்நடைப் பராமரிப்புக் கோட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால்நடைப் பராமரிப்புக் கோட்டத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர் கால்நடை மருத்துவ நிலையங்கள், கோழி விரிவாக்க நிலையம், ஆடு மற்றும் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலமாக ஆற்றப்படும் பணிகளையும், திட்டங்களையும் தம் தொழில் நுட்பப் பணியின் மூலம் திறம்பட நிருவகிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

மாடு, ஆடு, பன்றி மற்றும் கோழி ஆகியவற்றிடமிருந்து அதிகப்பட்ச உற்பத்தியைப் பெறும் பொருட்டு அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்த முயற்சிகள் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



உள்ளூர் இன மாடுகளின் தரம் விஞ்ஞான ரீதியாக உயர்த்தும் பொருட்டு, பல்வேறு தொற்று நோய்த்தடுப்புச் சிகிச்சைகள் மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி அதிகரிக்கும் பொருட்டு தக்க வசதிகள் அளித்து, பால் உற்பத்தியைப் பெருக்குவதே தீவிரக் கால்நடை அபிவிருத்தித்திட்டத்தின் நோக்கமாகும். ஏற்கெனவே 7 திட்டங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது 1981-82 ஆம் ஆண்டில் தமிழகஅரசு மேலும் இரண்டு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை பண்ருட்டி மற்றும் தாம்பரத்தில் ஏற்படுத்தியுள்ளது.

தரமுள்ள இறைச்சி மற்றும் கம்பள உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகத்தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட ஆட்டினங்கள் தரம் உயர்த்துவதற்கான பண்ணைக் கால்நடைப் பராமரிப்புத்துறை மேற்கொண்டுள்ளது. இவற்றிற்காக கிடாக்களை வேளாண்மை மறுநிதிஅபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 34 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் கால்நடைப் பராமரிப்புச் சிறப்புத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி



மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்தமேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 455 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் வழங்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. மேலும் 1981-82 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மேற்கூறப்பட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் 93 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களைத் தமிழக அரசு நிறுவியுள்ளது.

கோழி இனவிருத்திக்கான தரமுள்ள பறவைகளும், குஞ்சு பொரிக்கும் முட்டைகளும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்றன. எளிய மக்களையும் கோழி வளர்ப்பு நிலையங்கள் அமைப்பதில் ஊக்குவிக்கும் பொருட்டு இத்துறையினரால் 29 கோழி நிருவாக நிலையங்களும், 2 குஞ்சு பொரிக்கும் நிலையங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் கடனுதவி மற்றும் தொழில் நுட்ப உதவி வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 5 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வந்தன. இவற்றைத் தவிர 1980-81 ஆம் ஆண்டில் 2 சங்கங்களும் 1981-82 ஆம் ஆண்டில் 2 சங்கங்களும் தமிழக அரசு இம்மாநிலத்தில் நிறுவியுள்ளது.

பன்றி வளர்ப்பினால், பின் தங்கிய மக்கள் போதிய பொருளுதவி பெறுகின்றனர். பொருளாதாரத் துறையில் இம்மக்கள் மேலும் வளம் பெற இக்கால்நடைப் பராமரிப்புத் துறையில் 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் மேலும் பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்று இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அயலினப் பன்றியான வெள்ளை ஆர்க்ஷயர் பன்றிகள் இப்பிரிவில் வளர்க்கப் படுகின்றன. இனவிருத்திக்கேற்ற பன்றிகள். இப்பிரிவுகளிலிருந்து பன்றி வளர்ப்போர்க்கு வழங்கப் படுகின்றன.

1980-81 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் குறுநில விவசாயிகளுக்கு 11,343 கறவை மாடுகள் வழங்கப்பட்டன, ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு 8.66 இலட்சம் நிதி உதவி 877 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 364 உழவு மாடுகள் வழங்கப்பட்டன. 21 கோழி வளர்ப்புப் பிரிவுகளும், 11 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 15.34 இலட்சம் ரூபாய் செலவில் 13 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களைத் தமிழக அரசு அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் நிரந்தர வசதிகளைச் செய்வதற்காக 1980-81 ஆம் ஆண்டு 60.94 இலட்சம் ரூபாய் தமிழக அரசு அளித்துள்ளது. அவ்வசதிகளாவன:- இராமநாதபுரத்தில் 2351 கறவை மாடுகள் விநியோகித்தல், 179 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆரம்பித்தல் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் 255 கறவை மாடுகள் விநியோகித்தல், 251 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல் ஆகும். 1981-82ல் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு தமிழக அரசு இத்திட்டத்தின் கீழ் 31.15 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது.

1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு ரூபாய் 6.76 இலட்சம் ஒதுக்கீடு அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ். உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைக்கும் குருத்துகுழி கோல் கிரேன் தீவனப் பயிர்ப் பண்ணைகளுக்கும் கூடுதல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 4 ஆடுகள் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 415 ஆடு வளர்ப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதகமண்டலத்தில் கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 40 பன்றி வளர்ப்புநிலையங்கள் 0.32 இலட்சம் ரூபாய் செலவில் இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் நோக்கம், மேற்குத்தொடர்ச்சிமலைப் பகுதிகளில் உள்ள சிறு-குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கன்றுபராமரிப்பில் போதிய நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி அளித்து உதவுவதே ஆகும். 1980-81 ஆம் ஆண்டில் இம்மலைப் பகுதிகளில் உள்ள 23 வட்டாரங்களில் 2000 கன்றுகள் பராமரிக்கப்ப கின்றன. இவ்வுதவிக்காக மத்தி அரசு 1981-82 மற்றும் 1982-8 ஆண்டுகளுக்கான 22.85 இல சம் ரூபாய் வழங்கச் சம்மதித்து ளது.

ஆடு உற்பத்தித் திட்டத்தி கீழ் 20 பெட்டை ஆடுகளும், ஒ கிடாவும் கொண்ட பிரிவு 1981 82 ஆம் ஆண்டில் 364 விவசா களுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறு விவசாயிகளுக்கு இந்நி யத்துக்கு ஆகும் செலவான 4000-த்தில் ரூ. 1000-ரூபா மானியமாகவும் குறுநில மற்று வேளாண்மைத் தொழிலாள களுக்கு ரூ. 1330- மானியமா வும் வழங்கப்பட்டுள்ளது. இ திட்டத்தினால் பொருளாதா ரீதியில் விவசாயிகள் பெரும் பய அடைந்திருப்பதால் இது விவசா களால் பெரிதும் விரும்ப படுகிறது.

கால்நடைப் பராமரிப்புத்துை யில் இயங்கும் 9 கால்நடைப் பண் ணைகளும் விதைப் பண்ணை களாக இயங்குகின்றன. இ துறையில் உள்ள 59 பொல காளை நிலையங்களுக்கு தேவையான உயர் ரகப் பொல காளைகள் இப்பண்ணைகள லிருந்து விநியோகிக்கப்படுகின் றன. இப்பண்ணைகளுக்கா 1981-82 ஆம் ஆண்டில் 763.2 லட்சம் ரூபாய் தமிழக அ செலவு செய்துள்ளது.

கால்நடைகளுக்குச் சிகி சையளிப்பதற்காக இம்மாநில தில் இத்துறையினரால் 67 கால்நடை மருத்துவ நிலையங் கள், 13 பரிசோதனைக்கூடங்கள் 6 நடமாடும் நிலையங்கள், 8 கால் நடைநோய்ப் புலனாய்வுப் பிரிவு கள் மற்றும் 2227 கிளை நிலையங்கள் செயல் படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் 10 புதி கால் 'நடை மருந் கங்கள் திறக்கப்பட் டன. 5 கால்நடை மருந்தகங்கள் கால் நடை மருத்துவம னைகளாக உயர்த் தப்பட்டன. 2 கால் நடை மருத்துவம னைகள் பிரதம மருத்துவம களாக உய தப்பட்டன.



1981-82 ஆம் ஆண்டில் 20 புதிய கால்நடை மருந்தகங் கள் துவக்கப்பட்டன. 4 மருந் தகங்கள் மருத்துவமனைக ளாகவும் 3 மருத்துவமனைகள் பிரதம மருத்துவ மனைகளாகவும் உயர்த்தப்பட்டன.



# ஆலய மணி ஓசை

சமயம், மனித வாழ்க்கைக்கு அடிப்படையானதொரு நெறி. இந்து மக்களின் மனத்திலும், வாழ்விலும் நிலைத்திருக்கும் எண்ணங்களோடு இந்து சமயம் இணைந்துள்ளது.

மனிதனை இயக்குகின்ற பொருளுக்கு 'உயிர்' என்ற பெயர் கொடுத்துள்ளோம். உயிர் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதற்கு உருவமில்லை. இருப்பினும் 'உயிர்' என்ற பெயரால் குறிப்பிடப்படும் பொருள் உண்மையானது. நம்மால் காணமுடியாத உருவமில்லாத, வடிவமில்லாத பொருள்கள் பல உலகின் கண் உள. அத்தகைய பொருள்களையும் பெயரிட்டுக் குறிப்பிடுகிறோம். உதாரணம்: காற்று, ஒலி, மணம், சுவை முதலியன, இதே போல் தான் உலகத்தையும் உலகத்தில் உள்ள உயிரினங்களையும் இதர பொருள்களையும் இயக்குகின்ற பொருளைக் 'கடவுள்' 'இறைவன்', 'ஆண்டவன்' என்று குறிப்பிடுகிறோம். பார்க்க முடியாத உயிர், காற்று, ஒலி, மணம், சுவை முதலியவைகள் இருப்பதை எவ்வாறு அனுபவத்தின் மூலம் தெரிந்து கொள்கின்றோமோ, அவ்வாறே 'கடவுள்', இறைவன்', 'சக்தி' எனப்-பெயரிட்டுக் குறிக்கப்படுகின்ற பொருளை அனுபவ மூலமாக உணரலாம். கடவுள் பற்றிய கொள்கையே சமயம். இந்து சமயக் கோட்பாடுகள், மனித வாழ்க்கை நலத்திற்கு வழிகாட்டியாகவும், இன் வாழ்வினை நல்குவதாயும், மனித வாழ்வை மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

சமய வாழ்வில் தெய்வ வழிபாடு முக்கிய இடம் பெற்றுள்ளது. எங்கும் இறைவன் நிறைந்துள்ளான் என்பது நமது சமய தத்துவமானாலும், இறைவனை ஆர்வ மனத்தால் சிந்திக்கவும், மனமுருகிப் பாடவும் அவனுக்குத். திருத்தொண்டு புரியவும் தேர்ந்த இடம் திருக்கோயில் என மக்கள் கொண்டனர். சமய அடிப்படையிலும் தத்துவ அடிப்படையிலும் உருவாக்கப்பெற்றன திருக்கோயில்கள். திருக்கோயில் ஊரின் மையமாக அமைந்துள்ளதைத் தமிழகத்தில் பல இடங்களில் காண்கின்றோம். ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'', கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' எனப் பண்டு தொட்டு தமிழ்ப் பெருமக்கள் கூறி வருத

திருவேற்காடு கருமாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற சமபந்தி போஜனத்தில் மாண்புமிகு முதல்வர்.



லால் திருக்கோயிலைத் தம் வாழ்க்கையுடன் தமிழர்கள் பிணைத்துக் கொண்டார்கள் என்பது தெளிவு. பொன்னும் பொருளும் மட்டுமின்றி, கலை இலக்கியப் படைப்பாற்றல் ஆகியவை மூலம் ஆலயத்தின் அழகையும், சிறப்பையும் தமிழர்கள் கூட்டினர் என்பதற்குச் சான்றாக இன்று தமிழகத்தில் பல சைவ, வைணவ ஆலயங்கள் உள்ளன.

தெய்வம், பெயர் வகையில் பல இருந்தாலும், ''யாதொரு தெய்வங்கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே...தாம் வருவர்'' என்றவாறு, யார் எந்த முறையில் எப்படி வழிபட்டாலும், அந்த வழிபாடு பரம் பொருளை, முழுமுதற் பொருளை, மெய்ப் பொருளைச் சாரும் என்று உறுதியான நம்பிக்கையோடு, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நமது சமய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் வகையில் தமிழர்களின் தொன்மையான பண்பாட்டினையும், ஆன்மீக நெறியையும், தல வளத்தையும் பெருக்குவதாயும் விளங்குகின்ற திருக்கோயில்களையும், இதர இந்துசமய நிலையங்களையும் நன்கு பாதுகாக்க வேண்டும், அவைகளின் நிருவாகம் சீராக இருக்க வேண்டும் என்ற கொள்கையைத் தமிழக அரசும், இத்துறையும் கடைப்பிடித்து ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

இத்துறையின் நிருவாகத்தின் கீழ் உள்ள சமய நிறுவனங்களாவன:

| | |
|---|---|
| ஆலயங்கள் | 31,612 |
| மடங்கள் | 55 |
| மடத்துக்கோயில்கள் | 55 |
| குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| அறக்கட்டளைகள் | 189 |
| சமண நிறுவனங்கள் | 17 |
| | 33,649 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் 8121 ஆலயங்கள் சேர்க்கப்பட்டன. 'சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிபட்டுத் தடுமாறாமல் ''வாய்த்தது நந்தமக்கு ஈதுஓர் பிறவி'' என மதித்து ''மண்ணில் நல்லவண்ணம் வாழ'' ''ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்று அவர்க்கு இன்னருள் சுரக்கும்'' தெய்வத்தை வழிபடும் மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு ஆலயங்களின் பூசைகளும், திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற [illegible] கள் பல [illegible]



ஆகிய 3 ஆலயங்களில் தங்கரதம் செய்யப்பட்டுள்ளன.

**சமய நிறுவனங்களின் நிருவாகத்தை செம்மைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் மிக முக்கியமானவை.**

1. தணிக்கை செய்வதில் முன்பு உபயோகத்தில் இருந்த தணிக்கை அட்டவணைகளை மாற்றித் தேவையான விவரங்கள் அடங்கப்பெற்ற வினாப்படிவத்தின் மூலம் மாற்றி அமைத்து தீவிர திடீர் தணிக்கைச் சோதனைகளால் தணிக்கை மறுப்புகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கும் ஏதுவாக இருப்பதுடன் தணிக்கையின் தரமும் நன்கு உயர்ந்துள்ளது.

2. சமய நிறுவனங்களின் உண்டியல்களைத் திறப்பதற்கும், மற்றும் அதில் உள்ளவற்றை எண்ணுவதற்குமான முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

**ஆலயப் பணியாளர்கள்**

1.4.'81 முதல் பணியாளர்களின் சம்பளம், படி முதலிய செலவு ஆண்டு உதவித்தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும் என்ற வரம்பு 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், அவ்வப்போது பழனி, சுசீந்திரம், உதவி ஆணையர்-செயல் அலுவலர் உள்ள ஆலயங்கள் மற்றும் இதர ஆலயப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆலயப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப்படி, குடும்பநல நிதித்திட்டம், பண்டிகை முன் பணம், திருவிழா சிறப்பு ஊதியம் மற்றும் பணிக்காலத்தில் இறந்துவிடும் பணியாளர்களுக்கு இறுதிச் சடங்குகளுக்காக ரூ.250





மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவச உடை வழங்குகிறார்கள்

அனுமதித்தல் ஆகிய இதர சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு ரூ. 10,000 அல்லது அதற்கு மேலும் வருமானம் வரும் 345 திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்குப்பணிக்காலக் கொடை நிதித்திட்டம் நடைமுறையில் உள்ளது.

**தமிழ் இசை வளர்ச்சி**

நாதசுரம், தவுல் மேற்பயிற்சி பெற 5 மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 67,100 வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒதுவார்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 3 ஒதுவார்களுக்கு ரூ. 4,750 வழங்கப்பட்டுள்ளது:

**ஆலயங்களினால் வெளியிடப்பட்டுள்ள நூல்கள்**

- ஆதி சங்கீத மும்மூர்த்திகள்
- பகவத் கீதை (ஆங்கிலம்)
- தமிழ்நாட்டு ஆலயங்களில் சுற்றுப்பயணங்கள் (ஆங்கிலம்)
- அருணகிரிநாதர் அருளிய தலத்திருப்புகழ்
- ரெங்கநாதர் (ஆங்கிலம்)
- மயிலை உறை மகா சக்திகள்
- அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்
- முருகன் ஆயிரம்
- ஓம் சக்தி அன்னை கௌமாரி விஜயம்
- ஆண்டாள் திருப்பாவை (ஆங்கிலம்)
- திரு எழு கூற்றிருக்கை
- முருகன் நூவாயிரம்

**சிறப்பு வழிபாடு**

15.8.1981

| | |
|---|---|
| ஆலயங்களின் எண்ணிக்கை | 3,841 |
| கலந்துகொண்ட மக்கள் | 8 லட்சம் |

**சிறப்புத் திருமணங்கள்**

| | |
|---|---|
| நடைபெற்ற திருமணங்கள் | 711 |
| இதில் ஆதிதிராவிட மணமக்கள் | 455 |
| பிற்பட்டோர் | 183 |

**உலகத் தமிழ் மாநாடு மற்றும் பொருட்காட்சிகள்**

1981ம் ஆண்டு ஜனவரி திங்கள் உலகத்தமிழ் மாநாடு தொடர்பாக மதுரையில் நடைபெற்ற பொருட்காட்சியில் இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை கலந்து கொண்டு முதற் பரிசு பெற்றது.

மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்ற ஆறுஅரசுப் பொருட்காட்சிகளில் அறநிலையத்துறை கலந்து கொண்டு ஐந்து முதற் பரிசுகளையும் ஓர் இரண்டாம் பரிசையும் பெற்றது.

**வல்லுநர் குழு**

இந்துசமய நிறுவனங்களில் சாதி-இன உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமிக்க அரசினால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு தனது அறிக்கையை 3.2.82ல் அரசிடம் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள இந்து சமய நிறுவனங்களைப்பொறுத்து எழும் பொதுப் பிரச்சனைகளைப் பற்றிய கருத்துக்களை அரசுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறுவதற்காக மாண்புமிகு செய்தி-மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 37 பேர்கள் அடங்கிய உயர் மட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்களினால் ஆலய நிலங்களின் குத்தகைதாரர்களிடமிருந்து வரவேண்டிய குத்தகைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், சமீபத்தில் ஏற்படுத்திய சட்டதிருத்தத்தின் விளைவாக ஆலயங்களின் விளைபொருள் பங்கு 40 சதவீதத்திலிருந்து 25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆராய்ந்து அரக்குக்கருத்துக்களைத் தெரிவிக்க மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 13 பேர் கொண்ட உட்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

இக்குழுவின் முதற் கூட்டம் 30.3.'82 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

மேற்கண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல்வேறு முடிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.





**கடந்த இரண்டு ஆண்டுகளில்**

| | |
|---|---|
| குடமுழுக்கு | 166 ஆலயங்கள் |
| திருப்பணிக்கு நிருவாக அனுமதி | ரூ. 11.77 கோடி |
| மதிப்பீடுகள் 1168 | ரூ. 5.39 கோடி |
| அரசுமானியம் 161 ஆலயங்கள் | ரூ. 26 லட்சம் |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு 19 | ரூ. 1.27 லட்சம் |
| புதிய இராஜகோபுரங்கள் | 5 ஆலயங்கள் முடிக்கப்பட்டன 8 ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. |
| திருமண மண்டபங்கள் | 8 முடிக்கப்பட்டன. |
| திருமண மண்டபங்கள் | 28 கட்டப்பட்டுவருகின்றன. |
| பெருமளவில் திருப்பணி | 14 ஆலயங்கள் (பழனி, திருவரங்கம், சிதம்பரம், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம், உத்தரகோச மங்கை, திருச்செந்தூர், சேலம், பாரியூர் இராமே சுவரம்.) |
| முடிவுபெற்ற திருப்பணி | 874 வேலைகள்-ரூ.2.10கோடி |
| பக்தர்களுக்கு வசதிகள் | 90 அறைகள் கட்டப்பட்டுள்ளது. 136 அறைகள் கட்டப்பட்டுவருகின்றன. 9 குடில்கள் முடிக்கப்பட்டன. 30 குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. |
| வருமானப் பெருக்கம் | கூடுதல் வருமானம் |

| | ரூ. |
|---|---|
| 9,240 கட்டடங்கள் | 27.14 லட்சம் |
| 4,169 மனை | 4.69 லட்சம் |
| 13,719 ஏக்கர் சாகுபடி நிலம் | 2.26 லட்சம் |
| ஆக்ரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட நிலம்1532 ஏக்கர் | 0.32 லட்சம் |

**சிலைகள் பாதுகாப்பு :**

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட விக்கிரகங்கள் | 4819 |
| உலோகத்திருமேனிகள். புகைப்படம் எடுக்கப்பட்ட ஆலயங்கள் | 1,085 |
| அரசு மான்யம் வழங்கப்பட்ட ஆலயங்கள் | 1,085-ரூ. 3.82 இலட்சம் |



திருத்தணித் தெப்பத் திருவிழா



சமயபுரம் ஆலயத்தின் சிறப்புத் திருமண விழாவில்...



**தமிழ்ப் புலவர்கள் நியமனம்**

திருக்கோயில்களில் 88 தமிழ்ப்புலவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 165 வழங்கப்படுகிறது.

**சமூகப் பணிகள் விவரம்**

| | |
|---|---|
| சுவாமிமலை, திருப்போரூர், அழகர் கோயில் ஆலயங்கள் | 3 சித்த வைத்தியசாலை திறக்கப்பட்டன. |
| திருச்செந்தூர் | —தேவாரப்பள்ளி துவக்கப் பட்டது. |
| பழனி | —பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கப்பட்டது. |

**பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சமய நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட உதவி**

| | |
|---|---|
| 1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், பிஜித்தீவு | ரூ. 1 லட்சம் |
| 2. அருள்மிகு திருக்கேதீஸ்வரர் ஆலயம், திருக்கேதீஸ்வரம், இலங்கை | ரூ. 2,37,000 |
| 3. அருள்மிகு மீனாட்சி சொசைட்டி, ஹுஸ்டன் அமெரிக்கா | 6,000 |
| 4. அருள்மிகு ஆதிசங்கர விமான மண்டபக்குழு, அலகாபாத், உத்தரப்பிரதேச மாநிலம் | 2,00,000 |
| 5. அருள்மிகு உத்திர சிதம்பர நடராஜர் மந்திர், சதாரா, மகாராட்டிர மாநிலம் | 3,90,000. |



திருச்செந்தூர் ஆலயம்



# உறுதிமொழிகள் நிறைவேறுகின்றன!

## — மாண்புமிகு முதல்வர்

"எத்தனை தான் இடர்ப்பாடுகள் குறுக்கிட்டாலும், தடைகள் பல நேரிட்டாலும், நாங்கள் அரசுப் பொறுப்பேற்ற பொழுது மக்கள் மன்றத்தின முன்னால் அளித்த உறுதிமொழியை, வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என்பதை உறுதியுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பணியாற்றும்பொழுது வேண்டுமானால், சிற்சில சமயங்களில், தாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால், நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதுதான் எங்களுடைய இலட்சியம். அதற்காக முழுமுச்சுடன் தொடர்ந்து இந்த அரசு பாடுபடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை



பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு
1-7-1982



[illegible] 1982

16-7-1982 75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2013




மாயவரம் என்றும் மாயூரம் என்றும் வழங்கப்பட்டு வந்த பெயரை மயிலாடுதுறை என மாற்றிய விழாவில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி. சீனிவாசன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'மயிலாடுதுறை' என்னும் பெயர் பொறிக்கப் பெற்ற கல்லைத் திறந்து வைத்தார். (27.6.'82)



சென்னை இராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள கோவிந்தசாமி நகரில், ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் (30.6.82ல்) அரிசி, உடை, பணம் ஆகியவற்றை வழங்கினார்.



.7.82-ல் டில்லியில் நடை பெற்ற செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு மத்திய செய்தித் துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களை, மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சந்தித்து உரையாடினார்.



இந்திய நாட்டின் ஏழாவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள ஞானி ஜெயில் சிங் அவர்கள் எளிய, பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் 5.5.1916-ல் பிறந்தவர்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு பிரஜா மண்டல் என்னும் இயக்கத்தைத் துவக்கி அதன் தலைவராகப் பணியாற்றியுள்ளார். அந்த இயக்கத்தில் பங்கேற்றதற்காக 1938 முதல் 1943 வரை ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 1946–ஆம் ஆண்டில் தேசியக் கொடி இயக்கத்தைத் தமது மாநிலத்தில் துவக்கினார்.

இந்திய நாடு விடுதலையடைந்த பின்னர் அந்நாளைய பெப்சு மாநிலத்தில் இருமுறை அமைச்சர் பொறுப்பை ஏற்று, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை ஆகிய துறைகளை நிருவகித்து வந்திருக்கிறார். 1956-ஆம் ஆண்டு மாநிலங்களவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1962 ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநில அமைச்சரவையில் இடம் பெற்ற இவர், 1972 முதல் 1977 வரை பஞ்சாப் மாநிலத்தின் முதல்வராகவும் பொறுப்பேற்றிருக்கிறார். 1980-ல் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று, மைய அரசின் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இந்தியாவின் ஏழாவது குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட ஜெயில்சிங் அவர்கள் 7,54,113 வாக்குகள் பெற்று, குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தியாகத் திருவுருவம்



''போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராசர். இன்றைக்கு நான் பல கோப்புகளைப் பார்க்கிறேன். காமராசர் முதல்வராக இருந்தபோது வீணாகச் சட்டப்பிரச்சினையை வைத்து, அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை. மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும் வீரமும் துணிவும் அறிவும் வரச் செயல்பட்டவர் காமராசர்.

''காமராசர் எப்போதும் ஒரு சிறிய பெட்டியை வைத்திருப்பாராம். அதை யாரையும் திறக்க அனுமதிப்பதில்லையாம். இப்போது அதைத் திறந்து பார்த்தபோது, அதில் இருந்த முக்கியமான பொருள் என்னவென்றால், அது அவரது தாயாரது படம்தான்.

''அந்தத் தாய் நோய்வாய்ப்பட்டபோது கூட அவர் போய்ப் பார்க்கவில்லை. பாசம், கடமை, உரிமை, உணர்வு அத்தனையும் அவருக்கு இருந்தபோதிலும் பிறருக்காக, நாட்டுக்காகத் தொண்டு செய்யும் பண்பு இருந்ததே-அதுதான் தியாகம்.

மாண்புமிகு முதல்வர்

*(1978-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பிறந்த நாளில் ஆற்றிய உரையில்)*

தமிழரசு
மலர்: 13
இதழ்: 2
துந்துபி — ஆனி 32 16—7—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013

**முகப்பில் :**

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு ஜெயில்சிங் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும்,



## தூரக்கிழக்காசியப் பயணம் -

# தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒரு திறவுகோல்

மனித வாழ்வில் எத்தனையோ சம்பவங்களும் நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. ஆனால் அவையனைத்தும் நெஞ்சில் நிலைத்து நிற்பதுமில்லை. நினைவுகூர்ந்துபோற்றும் தன்மையுடையதாக இருப்பதுமில்லை. நாம் ஆற்றுகின்ற பணியும் மேற்கொள்ளும் பயணமும் நாட்டின் வளர்ச்சிக்கு உதவி, மக்களின் வளமான வாழ்வுக்குத் தேவையான, வலிவான அடிப்படைகளை உருவாக்கித் தரும்போது பெருமையும் சிறப்பும், தாமே வந்து சேருகின்றன.

தன்னலம் மறந்து தமிழ்நாட்டின் ஏற்றத்திற்காகப் பாடுபடும் அன்பிற்கும் அருளுக்கும் உரிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அன்பு வாழ்த்துக்களுடன் அண்மையில் நான் மேற்கொண்ட தூரக் கிழக்காசியப் பயணம் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் நலம்பயக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமைந்ததை என்னால் உணர முடிகின்றது.

நான் சென்ற நாடுகளில் கண்ட காட்சிகளும் - அனுபவம் வாய்ந்த பெருமக்களிடம் கலந்துபேசியதன் வாயிலாகப் பெற்ற கருத்துக்களும் அதன் காரணமாக எனது உள்ளத்தில் எழுந்த எண்ணங்களும் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ சமுதாய அமைப்பினை நிறுவிட உழைத்திடும் மாண்புமிகு புரட்சித்தலைவரின் இலட்சியக் கனவுகளை ஈடேற்றப் பெரிதும் உதவும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

30.5.1982 அன்று மதியம் எனது பயணம் தொடங்கியது.

மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்திருந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் என்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

"சென்று வா! செந்தமிழ் நாட்டிற்கு வளம் சேர்க்கப் புதிய முறைகளைக் கண்டு வா!" என்றுசொல்லாமல் சொல்லி மகிழ்ச்சியும் உவகையும் நிறைந்த உள்ளத்தோடு என்னை வழியனுப்பி வைத்தார்கள்.

நான் எண்ணிப்பார்க்கிறேன்!

அன்றொருநாள். 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் சமதர்ம மணம் கமழும் சோவியத் நாட்டில்-மாஸ்கோ மாநகரில்

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்

### திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி

நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் கலந்துகொள்ள நான் சென்றபோது எனது இனிய தலைவர் என்னை வாழ்த்தி வழியனுப்பிவைத்த அந்தக் காட்சி எனது மனக்கண் முன் நிழலாடுவதைக் காணுகின்றேன்.

இது, பத்தாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இனிய நிகழ்ச்சி. ஆனாலும் இன்னும் என் நினைவில் அது பசுமையாக இருக்கின்றது.

என்னைச் சுமந்துசென்ற விமானம் சிங்கப்பூர் நோக்கிப் பறந்தது! எனது சிந்தனையும் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது! எனது பயணத்தின் நோக்கம் குறித்த சிந்தனையில் ஆழ்ந்தேன்.

தமிழ்நாட்டில் வளமிருந்தும் வறுமை தாண்டவமாடுகின்றது! உழைக்கும்திறன் படைத்த மக்களிருந்தும் உற்பத்தி பெருகவில்லை! செல்வச் செழிப்பு மிகுந்திருக்கும் நிலை ஒருபுறம்-அதே நேரத்தில் ஏழ்மையும் இல்லாமையும் இணைந்து நிற்கும் காட்சி மறுபுறம்.





தூரக் கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழியனுப்பி வைத்தல்.

இந்த அவலநிலையைப் போக்க-முரண்பாடுகள் நிறைந்த இந்தத் தன்மையினை நீக்க - கீழ்த்திசை நாட்டினரின் அனுபவம் நமக்கு எந்த வகையில் உதவிடும் என்பதனை அறிந்திடச் செல்கிறோம். அதுவும் புத்துலகச் சிற்பி-புரட்சித்தலைவரின் தூதுவராகச் செல்கிறோம் என்பதை எண்ணியபோது - அச்சமும் தயக்கமும் ஒரு கணம் என்னை ஆட்டிப்படைத்தன.

புரட்சித்தலைவர் நம்மிடம் ஒப்படைத்திருக்கின்ற பெரும் பொறுப்பினை எப்படி நிறைவேற்றப்போகிறோம் என்ற ஆர்வமும் துடிப்பும் மாறி மாறி எழுந்தன.

"நாம் சாமான்யர்கள்; ஆனால் நாம் சாமான்யமான பணிகளை மேற்கொள்ளவில்லை. மகத்தான இலட்சியத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம்"

"We are common men, shouldering 'uncommon Tasks"

என்று நமது அறிவு ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிட்ட கருத்தினை என் நெஞ்சம் அசைபோடத் தொடங்கியது. தமிழ்நாட்டில் அடிப்படையான சமூக மாறுதலைக் (Structural changes) கொண்டுவரும் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் புரட்சித்தலைவரின் அரசில் ஒரு தொண்டராக இருப்பதை எண்ணி-இந்தக் கடமையினை - புரட்சித்தலைவர் எனக்கிட்ட இந்தக் கட்டளையினைச் செவ்வனே ஆற்றிட முடியும் என்ற துணிவினைப்பெற்றேன்.

30.5.'82 அன்று தொடங்கிய எனது பயணம் 24.6.'82 வரை நிகழ்ந்தது. ஏறத்தாழ 25 நாட்களில் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், தென் கொரியா, மலேசியா ஆகிய நாடுகளைக் கண்டுவந்தேன்.

தோல் தொழில், பட்டு வளர்ச்சி, பால் பண்ணைத்தொழில் ஆகியவற்றில் அந்த நாடுகள் நிகழ்த்தியிருக்கும் சாதனைகளையும் அவர்களின் முயற்சி எந்த வகையில் நமது வளர்ச்சிக்குத் துணைநிற்கும் என்ற உண்மையினையும் ஒரு ஆராய்ச்சி மாணவனைப்போல் கண்டறிந்தேன்.

அந்த நாடுகள் பெற்ற வெற்றிக்கு அடிப்படையாக விளங்கும் சிறப்பம்சங்களை நாமும் மேற்கொள்வோமேயானால், தமிழகம் வளமும் வலிவும் பொருந்திய நாடாக மாறி உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது.

25 இலட்சம் பேர் மட்டுமே வாழ்கின்ற நாடாகிய நியூசிலாந்து, பால் பொருள் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் உலக அரங்கில் சிறப்பான இடத்தைப் பெற்றுத்திகழ்கின்றது.

இரண்டாவது உலகப்போரின் போது அணுகுண்டு வீச்சுக்கு ஆளாகி அழிவின் விளிம்பிற்கே சென்ற ஜப்பான் நாடு, இன்று உலக வல்லரசுகளோடு போட்டிபோடும் அளவுக்கு தொழில்துறையிலும், அறிவியல் துறையிலும் வளர்ச்சிபெற்று விளங்குகின்றது.

அண்மைக்காலம் வரை உள்நாட்டுப் போரில் சிக்கித் தவித்த தென் கொரியா, உலகமே கண்டு வியக்கும் வகையில் இன்று முன்னேற்றப் பாதையில் முனைந்து நிற்கிறது.

துறைமுகங்களை மட்டுமே ஆதாரங்களாகக் கொண்டு உலக வணிகத்தின் கேந்திரமாகத் திகழ முடியுமென்று சிங்கப்பூரும் ஹாங்காங்கும் நிரூபித்துக் காட்டிக்கொண்டு இருக்கின்றன.

இயற்கை வளம் குறைவாகப் பெற்றிருக்

கின்ற இந்த நாடுகள் பொருளாதாரத்தில் வலிவு பெற்று, புதுயுகத்தின் தலைவாயிலில் நுழைந்திருக்கும் போது எல்லா வளங்களையும் பெற்றிருக்கின்ற தமிழகம் அவற்றை முறையாகப் பயன்படுத்தி வெற்றிபுரி நோக்கி ஏன் வீறு நடைபோடமுடியாது என்ற வினா என்னுள் எழுந்தது.

அதனால்தான், இடையூறுகளையும் தடைக்கற்களையும் தாண்டி அந்த நாடுகள் பெற்றிருக்கின்ற அபரிமிதமான வளர்ச்சியினையும் - வளர்ச்சிக்கான காரணங்களையும் கூர்ந்து ஆராய்ந்தேன்.

அங்குள்ள அமைதியான சூழ்நிலையும், மக்களின் நெறியான வாழ்வும்தான் இத்தகைய வெற்றியினை அவர்களுக்கு ஈட்டித் தந்திருக்கின்றது என்ற முடிவுக்கு வந்தேன்.

தேசிய நலனுக்கு முதலிடமும், முன்னுரிமையும் தருகின்ற மனப்பான்மையினை மக்கள் பெற்றிருப்பதை நேரிடையாகக் காண முடிந்தது. தங்களின் தனி நலனுக்கும் நாட்டின் பொது நலனுக்கும் மோதல் எழுகின்ற போது தங்கள் நலனைப் பின்னுக்கு நிறுத்தி நாட்டின் பொது நன்மையினை முன்னுக்கு நிறுத்துகின்ற உளப்பாங்கினை ( National Consciousness) அவர்கள் பெற்றிருப்பதைக் கண்டு வியந்தேன். அதுதான் அவர்களின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருக்கின்றது.

அந்நாடுகளில் தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் இடையே ஒற்றுமையும், நல்லெண்ணமும், பரஸ்பர நம்பிக்கையும் நிலவுகின்றன. கருத்து வேறுபாடும் மனமாச்சரியங்களும் அவர்களிடையே எழும்போது அவற்றைத் தனிப்பட்ட பிரச்சினையாகக் கருதித் தீர்த்துக்கொள்ள முயல்கின்றார்களே தவிர நாட்டின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் பாதிக்கும் அளவுக்கு அவை வடிவம் எடுக்க அனுமதிப்பதில்லை.

தொழிலாளர்களும் சரி-தொழிலதிபர்களும் சரி- பொருள் உற்பத்தியிலும், தொழில் வளர்ச்சியிலும் இணைந்து நிற்கிறார்கள் என்பது மட்டுமல்ல, எல்லாச் செயல்களையும் ஈடுபாட்டுணர்ச்சியுடன் (Involvement) நிறைவேற்றுவதைக் கண்டேன்.

''ஆட்சி உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால் வயலில், தொழிற்சாலையில், அங்காடியில் பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் ஆட்சி நடத்திடுவோர் நாமே என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்யவேண்டும்.''

—என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்துக்கு எடுத்துக்காட்டாக இருப்பதைப்போல அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது:

கால மாறுதலின் வேகத்தினை உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுகின்ற திறனையும்-விழிப்புணர்ச்சியினையும் (Awareness) பெற்றிருக்கின்ற மக்கள் கடின உழைப்புக்கும், கட்டுப்பாடான வாழ்வுக்கும் சொந்தக் காரர்களாக இருக்கின்றனர். அதன் காரணமாக வளர்ச்சிப்பாதையில் ஒவ்வொரு படிக்கட்டாக ஏறி இன்று வெற்றியின் உச்சியில் தவழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

ஆற்றலால், அறிவுத்திறனால் மக்களின் கடமையும் கட்டுப்பாடும் மிக்க வாழ்வின் வாயிலாக வளர்ச்சியினைப் பெற்றிருக்கின்ற அந்த நாடுகளைக் கண்டபோது நமது நாடும் அத்தகைய நிலையினைப் பெற்றிட முடியாதா என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. தமிழ்நாட்டில் அந்த நிலை உருவாகிட நமது பயணம் எந்த வகையில் உதவிடும் என்ற ஆதங்கம் எழுந்தது.

நான் சென்ற நாடுகளில் தொழிற்கூடங்கள் பலவற்றைக்கண்டேன். பலருடன் கலந்துரையாடினேன். பல இடங்களில் தொழில் மற்றும் வர்த்தகக்கழகத்தைச் ( Chamber of Commerce & Industry ) சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்து உரையாடினார்கள். அந்த சந்திப்புகள் நமது ஏற்றுமதி பெருக நல்லதோர் தொடக்கம் என்பதை எண்ணிடும் போது பெருமையும் பெருமிதமும் கொள்கிறேன்.

பதனிடப்பட்ட தோல், தோல் சம்பந்தமான பொருள்களை அந்நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்புள்ளது. ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று நமது 'டான்சி' அமைப்புடன் இணைந்து கூட்டுறவுத்துறையில் 'தோல் பொருள் தொழிற்சாலை' நிறுவுவதற்கான பேச்சுவார்த்தை தொடங்கிட இந்தப் பயணம் வழிகோலியிருக்கின்றது.

தமிழ்நாட்டின் ஆட்டு ரோமத்திற்கு ( Goat hair ) ஆஸ்திரேலியா நாட்டில் நல்ல தேவையிருப்பதும், அதனை அதிக அளவில் ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணி ஈட்டிட முடியும் என்பதும் இந்தப் பயணத்தின்போது நான் கண்ட உண்மையாகும்.

ஆஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்ன் போன்ற இடங்களில் தோல் தொழில் கழிவு நீரைத் தரையில் ஓடவிடாமல் உயரமான தொட்டிகளில் ஏற்றிப்பல தட்டுகளில் மருந்தைக் கலந்து வடிகட்டும் முறையினை (Vertical Pumping out and processing of Tanneries effluent aud disposals) கண்டபோது தமிழ் நாட்டில் ஆம்பூரிலும், வாணியம்பாடியிலும் இந்த முறையைப் பயன்படுத்திப் பெரும் பலனைப் பெறலாம் என்ற எண்ணம் உதயமானது.

தென்கொரியாவில் பட்டு நூற்பாலையைப் பார்வையிடுதல்







உலகம் சுருங்கி வருகிறது; உலக நாடுகள் நெருங்கி வருகின்றன.

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதது பழைய காலப் பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்து கொள்ள விழைகிறோம்.

—பேரறிஞர் அண்ணா

ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகள் பட்டுத்தொழிலில் நிகழ்த்தியிருக்கின்ற சாதனைகளையும் முன்னேற்றத்தினையும் ஆர்வத்துடன் ஆராய்ந்தறிந்தேன். கிராமப் பொருளாதார முன்னேற்றத்திலும் அடித்தள மக்களின் வாழ்வு மேம்பாட்டிலும் அக்கறை கொண்டு செயலாற்றிவரும் புரட்சித் தலைவரின் அரசு குறைந்த மூலதனத்தில் பெரும் வருவாயும், அதிக அளவில் வேலை வாய்ப்பும் தரக்கூடிய தொழில்களைத் தொடங்குவதில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றது. நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்வு மறுமலர்ச்சிக்கும் வழிகோலும் அத்தகைய தொழில்களில் பட்டுவளர்ப்புத் தொழில் தலையாய இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. "SeriCulture" என்றால் "Self Employment and Remunerative Industry" என்று பொருள் சொல்லும் வகையில் உள்ள இத்துறையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது புரட்சித்தலைவரின் அரசு.

கோலாலம்பூரில் அமைக்கப்பெற்றுவரும் திருவள்ளுவர் கலைக்கூடத்தில் மாண்புமிகு அமைச்சர்



புரட்சித்தலைவரின் ஆணையால் தனக்கென்று தனி இயக்ககம் ( Directorate of Sericulture) கண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் பட்டுவளர்ப்புத் துறையில் நவீன யுக்திகளைக் கையாள்வது எப்படி, விஞ்ஞான முறைகளைப் புகுத்தி வெற்றி காண்பது எப்படி, என்ற அவாவினால் உந்தப்பட்ட நான் இத் தொழிலில் ஜப்பானும், தென் கொரியாவும் காட்டுகின்ற ஆர்வத்தையும் அடைந்திருக்கின்ற முன்னேற்றத்தினையும் ,கவனத்துடன் கண்டறிந்தேன்.

நூறாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட பழமையினையும், முதிர்ச்சியையும் உடையதாக அந்த நாடுகளில் பட்டுத்தொழில் இருப்பதை அறிகிறோம். பட்டு வளர்ப்பில் உள்ள நான்கு முக்கிய கட்டங்களில்-'மல்பரி பயிரிடுதல்' 'இளம் புழுவளர்த்தல்'-'பட்டுக்கூடுகளை உருவாக்குதல்' -'பட்டுநூல் உற்பத்தி' ஆகியவற்றில், இந்நாடுகள் பெற்றிருக்கின்ற வளர்ச்சி அவர்களின் ஆராய்ச்சித் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றது.

பட்டுத் தொழிலில் புழு வளர்த்தல் என்பது, கடினமான பணியாகும். அதுவும் எட்டு நாட்கள்வரை புழுக்களைப் பாதுகாத்து வளர்ப்பது என்பது சிரமமான வேலையாகும். விவசாயிகளின் இந்த இன்னல்களைப் போக்கும் வகையில் அந்நாடுகளில் முட்டைகளுக்குப் பதிலாக எட்டு நாள் வளர்ந்த இளம் பட்டுப் புழுக்களையே கூட்டுறவு அமைப்புகளின் வாயிலாக அளிக்கின்றார்கள். தமிழ்நாட்டிலும் சில இடங்களில் இந்த முறையினை நாம் அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். அதனை எல்லா இடங்களுக்கும் பரவலாக்கிட அவர்களின் அனுபவம் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

பட்டு நூல் நூற்க நவீன இயந்திரங்களையே முழுமையாக அவர்கள் பயன்படுத்து

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)



# ஒருமைப்பாடு உருவாக...

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சமூக, பண்பாட்டு நிலைகளை மேம்படுத்தவும் பசி, வறுமை, அறியாமை இவற்றை ஒழிப்பதற்கும், பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஆர்வமும் அவசியமாகுமென்பதை நாம் அறிவோம். இம்முயற்சியில் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவற்றின் பங்கும் கள விளம்பரப் பணியின் பாங்கும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுத் திகழ்வதைக் காண முடியும். இத்தகைய மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது நாம் இப்பரந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்தில் நிலவும் வேறுபட்ட தன்மைகளையும் பலதரப்பட்ட இன, மொழி மாறுபாடுகளையும் கருத்தில் கொண்டு செயல்பட்டாக வேண்டும்.

தமிழ்நாட்டில் விளம்பரத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகளிடையே சீரிய கூட்டுறவும் ஒத்துழைப்பும் இருந்து வந்துள்ளது. எங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் உறுப்பினராகவுள்ள ஒருங்கிணைப்பு விளம்பரப் பணிக்குழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறதென்பதை இம்மாநாட்டில் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்குழுவின் மாதாந்தரக் கூட்டங்களில் மத்திய, மாநில அரசுகளின் செய்தித் துறை அலுவலர்கள் பெருவாரியாகக் கலந்து கொள்வதுடன் அவ்வப்போது மத்திய,மாநில அரசுகள் அறிவித்திடும் பல்வேறு விளம்பரத் திட்டங்களையும் செவ்வனே செயலாற்ற முனைகின்றனர். இதன் தொடர்பாக நமது மதிப்புமிக்க இந்தியப் பிரதமர் அறிவித்த புதிய 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து பணியாற்றுவதை ஈண்டு குறிப்பிட முடியும். இந்த இருபது அம்சத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் எய்திய முன்னேற்றம் குறித்து எங்கள் முதல்வர் ஆர்வம் காட்டி வருவதுடன் இந்தியப் பிரதமருக்குச் சிறப்பான கருத்துரைகளையும் அனுப்பியுள்ளார்.

நாகர்கோயிலில் மாவட்ட அளவிலான வானொலி நிலையம் அமைப்பதற்கும் மதுரையில் வானொலி நிலையம் ஏற்படுத்துவதற்கான பணியைத் தொடங்கியதற்கும் இந்திய அரசிற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்த இரண்டு நிலையங்களும் செயல்படத் தொடங்கினால் தென் மாவட்ட மக்களின் நெடுநாள் ஆசை, குறிப்பாக உழவர் பெருமக்களின் விருப்பம் நிறைவேற்றப்பட்டதாக ஆகும். எனினும் 30,540 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட சேலம், வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் அப்பகுதிகளிலுள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வானொலி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கை இருந்து வருகிறது. இவர்களின் கோரிக்கை, கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். போதுமான ஒலிபரப்புத் திறன் கொண்ட வானொலிச் சாதனங்களுடன் தமிழகம் முழுவதிலும் ஒலிபரப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்திந்திய வானொலி நிலையத்தின் பணிகள் விரிவடைவதற்கான முயற்சிகளைப் பாராட்டும் வேளையில், மாநில அரசுக்கு வருத்தம் தரும் பிரச்சினை ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சட்டப்பேரவைக் கூட்டம் நிகழும் நாட்களில் சென்னையிலிருந்து ஒலிபரப்பப்படும் ‘சட்டமன்றத்தில் இன்று’ என்ற சிறப்பு அறிக்கையில் தற்போது பின்பற்றப்படும் நடைமுறை பற்றிய ஒன்றாகும். இந்த அறிக்கைகளைச் சுயேச்சையான பத்திரிகையாளர்களும் நிருபர்களும் தயாரிக்கின்றனர். இந்த ஒலிபரப்பிற்கான நேரம் போதுமானதல்லவென்றும் இவ்வாறு ஒலிபரப்பப்படும் அறிக்கையில் செய்திகள் தவறாகக் கூறப்படுவதாகவும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் குறை கூறுகின்றனர். இத்தகைய அறிக்கைகள் சில, விருப்பு வெறுப்புக்கும் மாறுபாட்டுக்கும் இடமளிப்பதாக மாநில அரசுக்குத் தெரியவந்துள்ளது. இது குறித்து மாநில அரசு, ஏற்கெனவே சென்னையிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தினரிடம் தெரிவித்துள்ளது. சட்டப்பேரவை நடவடிக்கைகள் குறித்த சிறப்பு அறிக்கைகள், குறைபாடுகளுக்கும் மாறுபாடுகளுக்கும் இடமளிக்காது சரியான உண்மைச் செய்திகளை அறிவிக்க இம்மாநாடு வழிவகை காண விவாதிக்க வேண்டும். சட்டப்பேரவை உறுப்பினர்களின் எதிர்ப்பைத் தவிர்க்கவும் மாநில அரசுக்கு இதனால் ஏற்படும் இடர்ப்பாட்டைப் போக்கவும் இது குறித்துச் சீரான கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

வட்டார ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தின் நிலைய இயக்குநர்கள், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர்ப்பட்டியலை அனுப்பி மாநில அரசின் பரிந்துரையைக் கேட்கின்றனர். இத்தகைய ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, பலதரப்பட்ட துறைகளில் உள்ள திறன்மிக்க தக்கோரின் பெயர்களைத் தருமாறு கேட்டு மாநில அரசுக்குக் கடிதம் வருமானால் பொருத்தமாகவும் நியாயமாகவும் அமையும்.

மக்களுக்குச் செய்திகளைத் தரும் தொடர்புச் சாதனங்களில் இன்று தொலைக்காட்சி மிகுந்த முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. 10 கி. வாட் ஒளிபரப்பு நிலையம் தமிழ்நாட்டிலுள்ள கொடைக்கானலில் அமைக்கும் பணி தொடங்கப்பட இருக்கிறது. ஒளிபரப்புக் கருவிகள் சக்தி வாய்ந்தவையாகவும், போதுமான பரப்பளவிற்கு ஒளிபரப்பக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு அமையவில்லையெனில் அண்டை நாடுகளிலிருந்து ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மக்கள் பயன்படுத்தத் தொடங்குவர். வண்ணத்தில் தொலைக்காட்சியை நடத்துவது வலியுறுத்தப்படத்தக்கதாகும். இதற்கான முயற்சியை மேற்கொண்டிருப்பதற்காக நான் மத்திய அரசின் செய்தி, ஒலிபரப்பு அமைச்சரைப் பாராட்டுகிறேன். தொடக்கத்தில் வட இந்தியப் பகுதியில் மட்டும் இந்த வசதி விரிவாக்கப்படுமென்பது எங்களுக்குக் கவலை தரும் செய்தியாகும். எவ்வளவு செலவாயினும் இந்தியா முழுமைக்கும் இந்த வண்ணத் தொலைக்காட்சி செயலாக்கப்படவேண்டும்.

1982, ஆகஸ்டு 15-ஆம் நாள் முதற்கொண்டு தேசிய தொலைக்காட்சித் திட்டங்கள் தொடங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் முயற்சியை வரவேற்கிறோம். இத்திட்டங்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே அமையுமென்று தெரிகிறது. அனைத்து மொழிகள் பேசுவோரும் மனநிறைவடையும் வகையில் தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எல்லா வட்டார மொழிகளிலும் சேர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் தேசிய ஒற்றுமையும் உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாடும் பேணப்படும்.

திரைப்படங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு. இத்தொழிலின் வளர்ச்சிக்காக எல்லா முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பல்வேறு உதவித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. குழந்தைகள் திரைப்படங்கள் தயாரிப்பதற்காகப் போதுமான நிதி வசதிகளைச் செய்யவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. திரைப்படத் தயாரிப்பு முறைகளிலும் திரைப்படத் தொழில் நுட்பம் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளதென்பதிலும் மாணவ, மாணவிகளுக்குப் பயிற்சியளிக்கத் தமிழ்நாடு அரசு தொலைக்காட்சி, திரைப்படக் கல்லூரியை நடத்தி வருகிறது.

இரண்டாவது உலகக் குழந்தைகள் திரைப்பட விழாவின் போது, பண்டித ஜவகர்லால் நேருவின் நினைவாக மிகச் சிறந்த மூன்று குழந்தைகள் படங்களுக்கு ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கமுடன் ரூ. 10,000 ரொக்கப் பணமும் பரிசாக அளிப்பதாக எங்கள் முதலமைச்சர் அறிவித்தார்கள்.

கள விளம்பரப்பணியகம், அனைத்திந்திய வானொலி நிலையம், தொலைக் காட்சியகம் ஆகியவற்றில் மத்திய, மாநில அரசுகளிடையே ஒத்துழைப்பு நிலவுகிறது. ஆனால் திரைப்படம் தொடர்பாக இந்த ஒத்துழைப்பு சிறிதும் இல்லை. திரைப்படம் காட்டப்படுவதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், மாநில அரசுகள் செயல்படுத்தும் திரைப்படச் சாதனச் சட்டத்தினால் நிறைவேற்றப்படுகிறது. படத் தணிக்கை குறித்த நடவடிக்கைகளினாலும் மாநில அரசுகள் சேர்க்கப்படுவதன் அவசியத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். படத் தணிக்கை குறித்து முடிவெடுத்தல் பற்றியும், படத் தணிக்கை பற்றி மேற்கொண்டும் எடுக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் படத் தணிக்கை அமைப்பிற்கும் திரைப்படத் தொழிலுக்கும் உள்ள பொதுத் தொடர்பு பற்றியும் மாநில அரசு கவலை கொண்டுள்ளது.

திரைப்படங்கள் உருவாக்கும் சமூக விழிப்புணர்வும் விளைவும் சட்ட, ஒழுங்குப் பிரச்சினையும் மாநில அரசு நிருவாகப் பிரச்சினையாகக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழில் நுட்பப் பணியாளர்கள், தொழிலாளர்கள் நலன்களையும் மாநில அரசு பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ளது. திரைப்படத் தணிக்கைக்கு வட்டார ஆலோசனைக் குழுக்களை நியமிக்கும் போது மாநில அரசைக் கலந்து அவர்களின் பரிந்துரையையும் கருத்தில் கொள்ளுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். இதன்மீது இது வரை தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கு வருந்துகிறேன்.

திரைப்படத் தணிக்கைக்காக மேற்கொள்ளப்படும் கொள்கைகள் யாவை, வழிகாட்டு முறைகள் எவை எவை என்பதை மாநில அரசு அறிந்து கொண்டிருப்பது முக்கியமாகும். நமது நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் திரைப்படங்கள் குறித்தும் அவற்றைத் தணிக்கை செய்யும் விதிமுறைகள் குறித்தும் மாநில அரசுகளுக்கு எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை. திரைப்படத் தணிக்கையில் ஒரே சீரான முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இக்கருத்து அனுபவத்தில் எழுந்ததொன்றாகும். அண்மையில் தென் மாநிலங்களில் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்களும் சங்கங்களும் சென்னை வட்டாரத்தில் திரைப்படத் தணிக்கைக்கு மேற்கொள்ளப்படும் முறையில் பாரபட்சம் நிலவுவதாக எதிர்ப்புத் தெரிவித்தனர். எங்கள்

முதலமைச்சரின் முயற்சியால் சமரசக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுத் தீர்வு காணப் பட்டது. திரைப்படத் தணிக்கைக்குப் பின்பற்றப்படும் விதிமுறைகளை மீண்டும் ஆய்ந்து தெளிவுபடுத்த வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான விதிமுறைகளும் நடைமுறைகளும் வகுக்கப்பட்டுப் பின்பற்றப்பட வேண்டுமென்னும் கருத்தை நான் பெரிதும் ஒப்புக் கொள்கிறேன். 'பால் உணர்வைத் தூண்டுதல்', 'வன்முறையைத் தூண்டுதல்' என்பதற்கு அவை எப்பொருளில் பயன்படுத்தப்படுகின்றனவோ அவற்றிற்கேற்ப விளக்கம் சரியான முறையில் அளித்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

சில படங்களில் அண்மைக் காலத்தில் மக்கள் பிரதிநிதிகளையும் சட்டப் பேரவை உறுப்பினர்களையும், நிருவாகிகளையும், காவல்துறை அதிகாரிகளையும் இழிவுபடுத்தும் முறையில் காட்சிகள் அமைந்துள்ளதை இம் மாநாட்டின் நாட்டத்திற்குக் கொண்டு வர விழைகின்றேன். குறிப்பிட்ட நேர்வுகளில் குறை கூறப்படுவதற்கு மறுப்பில்லை. ஆனால் அத்தகைய திரைப்படங்கள் மக்களாட்சி அமைப்பு முறையைக் குறை கூறுவதாய் அமைகின்றன. வட்டாரத் தணிக்கையாளர்களின் விருப்பு, வெறுப்பிற்கேற்பத் தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டு வருவது வியப்பை அளிக்கிறது. நமது அரசியல் அமைப்பிலுள்ள சீரிய, உயரிய கொள்கைகளைப் பாதுகாப்பதில் மத்திய அரசுக்குள்ளதைப் போன்றே மாநில அரசுகளுக்கும் சிறப்பான பங்கு உள்ளது.

தேசிய ஒருமித்த கருத்து இதில் உருவாக்கப்பட்டு மாநில, மத்திய அரசுகளுக்கிடையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நிலவுதல் அவசியமாகும்.

தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் செய்திப் படங்களுக்கு மக்களிடையே பரவலான செல்வாக்கு ஓங்கியுள்ளது. இந்திய அரசின் செய்திப் படங்கள், தணிக்கையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. அது போன்றே இவற்றிற்கும் விலக்களிக்க வேண்டுவது விரும்பத்தக்கதாகும். ஆயத் தீர்வையிலிருந்தும் இவற்றிற்கு விலக்களிக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகளிலுள்ள செய்தித் துறை அலுவலர்களைப் பரிமாற்றம் செய்வது குறித்து ஆலோசிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாநில அரசுகளிலுள்ள அனுபவம் மிக்க அலுவலர்கள் அனைத்திந்திய வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம், ஆகியவற்றில் பணியாற்றலாம். இது குறித்து மத்திய அரசு விரிவாக ஆராய வேண்டும்.

**(புதுடில்லியில் 1982, ஜூலை திங்கள் 3-ஆம் நாள் நடைபெற்ற செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்)**

# அயல்நாடுகளில் ஆராய்ச்சி

தமிழர்கள் பேரெண்ணிக்கையில் வாழும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தமிழாராய்ச்சிக்கான வாய்ப்புக்களை அறிந்து வரத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக அனுப்பப்பட்ட இயக்குநர் டாக்டர் தி. முருகரத்தினம், இந்நாடுகளுக்கு சென்று ஒருமாதம் சுற்றுப் பயணம் செய்து விட்டு 22-6-82ல் தாயகம் திரும்பினார். இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை அவர் சென்று பார்வையிட்டார். பல்வேறு துறைப் பேராசிரியர்கள், துணைவேந்தர்கள், உயர் கல்வி அலுவலர்கள், அமைச்சர்கள் ஆகியோரைக் கண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டங்கள் பற்றி அவர் விளக்கினார். தொழிலாளர் மன்றங்கள், இலக்கியக் கழகங்கள், நூலகங்கள், எழுத்தாளர் மன்றங்கள், கோவில்கள், நூல் விற்பனையகங்கள் முதலியவற்றையும் அவர் பார்வையிட்டார். இந்நாடுகளில் நடைபெறும் தமிழாராய்ச்சி வல்ல பொருள்கள் எவை, எவை? ஆராய்ச்சி இருபுறத்தும் அறிஞர்கள் எவர் எவர்? பொருளுதவிக்கான வாய்ப்புக்கள் எவை எவை? ஆராய்ச்சி மாணவர், ஆராய்ச்சிக்குப் பேராசிரியர் பரிமாற்றத்துக்கான வாய்ப்புக்கள் எவை எவை? என்ற விவரங்களை இவர் அறிந்து வந்துள்ளார். அயல்நாடுகளில் தமிழ்த் தொழிலாளர் சங்கங்களும் தம்மைப் பற்றி ஆராய்தலிலும் அவ்வாராய்ச்சிக்கு உதவி செய்தலிலும் ஆர்வம் காட்டுகின்றனர் என்பதையும் அவர் கண்டறிந்தார்.

இவ்வியக்குநரின் தென்கிழக்காசிய நாடுகளின் பயணத்தால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திட்டங்கள் உருவாவதற்கும், அறிஞர் பரிமாற்றங்கள் ஏற்படுவதற்கும், நுணுக்க விவரங்களும், அறிவு நிலையங்களோடு தொடர்பும் ஏற்பட்டுள்ளன.

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முயற்சி!

சென்னை நகரில்...



# கோடையிலும் குடிதண்ணீர் கிடைத்திட...

"1978-ஆம் ஆண்டில் குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட தேதியில் இருந்து கூடுதலாக 50 இலட்சம் லிட்டர் தண்ணீர், குழாய்க்கிணறு மூலம் அதிகப்படியாகச் சேர்த்து இருக்கிறோம். அந்தத் தண்ணீர்தான் தாமிரபாக்கத்தில் இருந்து குழாய் மூலம் வடசென்னை ராபின்சன் பூங்கா தொட்டிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

"இதே போல, திருவான்மியூர்-முட்டுக்காடு இவற்றிற்கு இடைப்பட்ட பகுதிகளில் நாலைந்து குழாய்க் கிணறுகள் தோண்டி அதில் இருந்து கிடைக்கும் 40 இலட்சம் லிட்டர் தண்ணீரில் 20 இலட்சம் லிட்டர் தண்ணீரை அந்த உள்ளூர்ப் பகுதிகளுக்குக் கொடுத்துவிட்டு, மீதி 20 இலட்சம் லிட்டர் தண்ணீரைச் சென்னை குடிநீர்க் குழாயுடன் 1½ ஆண்டில் இணைக்க இருக்கிறோம்.

"இப்படியே வருகிற 1985-ஆம் ஆண்டுக்குள் சென்னை நகருக்கு எந்தக் கோடையானாலும், குடிதண்ணீர் தடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்து விடுவோம். அந்துடன் கொத்தலை ஆற்றுப் படுகையில், உலக வங்கியின் உதவியுடன் நிலத்தடிக் குளங்களில் தண்ணீரைத் தேக்கும் திட்டத்தின் மூலம் கூடுதலாக 50 சதவீதம் தண்ணீர் மிகையாகக் கிடைக்கும்படியாகச் செய்து விடுவோம்.

"இப்போது சென்னையில் தினம்5 கோடி காலன் விநியோகம் செய்யப்படும் தண்ணீருக்குப் பதிலாக 10 இலட்சம் காலன் மட்டும் குறைத்து, 4 கோடியே 90 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கி வருகிறோம்.

"மழை வந்துவிடும் என்ற நம்பிக்கையில் தான் கொஞ்சமாகக் குறைத்து வருகிறோம். வாரத்திற்கு 10 இலட்சம் காலன் வீதம் கூடுதலாகக் குறைத்து ஜூலை கடைசியில் 4 கோடியே 50 இலட்சம் காலன் அளவில் தண்ணீர் வழங்கப்படும். அதற்கும் குறையாமல் பார்த்துக்கொள்கிறோம். ஆனால், இதைவிட மோசமான வறட்சி நிலைமை எல்லாம் சென்னை நகரில் இருந்துள்ளது. '74-ஆம் ஆண்டில் இதே நேரத்தில் 3½ கோடி காலன்தான் தண்ணீர் விடப்பட்டது. அந்த ஆண்டு செப்டம்பரில் 2½ கோடி காலன்தான் விடப்பட்டது. '75-ஆம் ஆண்டு ஜனவரியிலேயே 3 கோடி காலன்தான். பிப்ரவரியில் 2½கோடி காலன் தான். மே மாதத்தில் இருந்து அதே தண்ணீரை அக்டோபர் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் கொடுக்க முடிந்தது. அந்த அளவுக்கு . மோசமான வறட்சியும் இருந்து இருக்கிறது. ஆனால், அப்படி வறட்சிக்கு நாங்கள் விட்டுவிட மாட்டோம். அக்டோபர் வரை 4½ கோடி காலன் வரை சமாளிக்க முடியும்.

"சென்னை நகரில் குடிநீர் வாரியத்தின் குழாய்க்கிணறுகள் 3,222 உள்ளன. பெரிய கிணறுகள் 1,116, இரும்புத் தொட்டிகள் 289, சிமெண்ட் தொட்டிகள் 125, தண்ணீர் லாரி 48. இவைகளைப் பயன்படுத்தி, தேவையான இடங்களுக்குத் தண்ணீர் உடனுக்குடன் அனுப்பி வைக்கிறோம்.

"எருக்கஞ்சேரியில் கொடுங்கையூர் பகுதியில் 21 இரும்புத் தொட்டிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. அங்கு நிலத்தடித் தண்ணீர் உப்பாக இருப்பதால், சென்னை நகரக் குழாய்த் தண்ணீரை அங்கு 1½ ஆண்டுக்

காலத்தில் நீட்டித்துத் தெருக் குழாய் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படும்.

"இந்தக் குடிநீர் அவசர நிலைமையைச் சமாளிப்பதற்காகவும், புகார்களை அணுகுவதற்காகவும், வாரியத்தில் மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரை 3 மாத காலத்துக்கு நியமித்து உள்ளோம்.

''திருவான்மியூர் பகுதியிலுள்ளவர்களுக்குக் குடிநீர் வழங்க மேல் நிலைத் தொட்டி அமைக்கும் பணி முடிந்துவிட்டது. விரைவில் அங்கிருந்து குடிநீர் வழங்கப்படும். தற்போது அந்தப் பகுதியில் மிகையாகக் கிடைக்கும் தண்ணீரை இந்திரா நகர், சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளுக்குத் தண்ணீர் லாரிகள் மூலம் வழங்கி வருகிறோம்.

''திருவான்மியூரையடுத்த பாலவாக்கம் பகுதியில் சில தனிப்பட்டவர்கள். கிணறுகளைத் தோண்டி, தண்ணீர் எடுத்து லாரிகள் மூலம் சென்னை நகரில் ஓட்டல்கள் போன்ற நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருவதாக என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இது குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

''குடிநீர் வாரியத்தைச் சேர்ந்தவர்கள் எவரேனும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீரை விற்பனை செய்வதாகப் புகார் தெரிவிக்கப்பட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.''

[2.7.'82 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள்.]




**உள்ளம் கவர்ந்தது!**

தமிழரசு இதழ்களின் ஒவ்வொரு அட்டையும் உள்ளத்தைக் கவரும் வண்ணம் உள்ளன.

'தன்னிறைவுத் திட்டப்பணிகள் பற்றிய கட்டுரைகள் மிக்க பயனுள்ளவையாக இருக்கின்றன. பண்டிதமணி நூற்றாண்டு நிறைவு விழாக் கட்டுரை சிறப்பாக இருந்தது.

—ச. புகழேந்தி.
திருவையாறு.

**சிறப்பாக இருந்தது!**

'பண்டிதமணி' பற்றி டாக்டர் மெ. சுந்தரம் எழுதிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.

—இராம. முத்துக்கருப்பன்
திருக்கோவிலூர்.

**அருமை! அருமை!**

மாணவர் பக்கம் —ஓவியர்களுக்கு உதவுவோம் - கீரை' பற்றிய கட்டுரைகள் அருமை! அருமை!

—பு. இளங்கோ
திருவையாறு

**படம் பிடித்துக் காட்டியது!**

தருமபுரி மாவட்டத்தில் ஐந்து நாட்கள் கட்டுரை, எங்கள் மாவட்ட வளர்ச்சிப் பணிகளைப் படம் பிடித்துக் காட்டியது.

—அ. விவேகானந்தன்
கிருஷ்ணகிரி.

**சிறுகதை வேண்டும்!**

தமிழரசில் சிறுகதைகள் — துணுக்குகள் நிறைய இடம் பெற வேண்டும்.

—வி. பி. செல்வராஜ்
கும்பகோணம்.

**வளரும் தமிழகம்!**

'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் வெளியிடும் அமைச்சர் பெருமக்களின் உரைத் தொகுப்பு நெஞ்சைத் தொடுகின்றன.

—டி. சுவாமிநாதன்
பேரணாம்பட்டு.

**படமும் செய்தியும்**

'தமிழரசு' முன்பு 'படமும் செய்தியும்' வெளியிட்டு வந்தது. அதைப்போல மீண்டும் தொடர்ந்து வெளியிட வேண்டும்.

—இரத்தினவேல்
ஸ்ரீபெரும்புதூர்.

**அரசுப்பணிகள் :**

அரசின் அறிவிப்புகள் - ஆக்கப் பணிகள் பற்றிய தொகுப்பு, தமிழக அரசின் திட்டங்கள்-ஆற்றி வரும் பணிகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

—பி. நீலாவதி
திருவள்ளூர்.

# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

'தனி ஒருவனுக்குணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாட்டுக்கொரு புலவர் பாரதி.

உயிருக்கு உறுதுணையாவது உணவு. உணவு இல்லையெனில் வாழ்க்கை இல்லை. குழந்தைப் பருவத்தில் போதிய சத்துணவு இல்லையெனில் குழந்தையின் உடல் நலத்துடன், அறிவுத்திறனும் பெரிதும் பாதிக்கப்படுமென அறிவியல் ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன.

நாட்டின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சி அந்த நாட்டின் கல்வி வளத்தைப் பொறுத்தது என்று நம் ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர். குழந்தைப் பருவத்தில் நல்ல சத்துணவு இல்லையெனில் குழந்தையின் கல்வியும் கெடுறும். எனவேதான், மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இம்மாபெரும் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினை வழங்கியுள்ளார்கள்.



**இலவசச் சத்துணவுத் திட்டம் —துவக்க விழா!**

செங்கல்பட்டு மாவட்டம், வில்லிவாக்கம் தொகுதியைச் சேர்ந்த 'மேல்அயனம்பாக்கம்' என்ற கிராமத்தில் இலவசச் சத்துணவுத் திட்டத் துவக்க விழா 1-7-'82 காலை, சீரோடும் சிறப்போடும் மங்கள இசையுடன் துவங்கியது. சைதாப்பேட்டை கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. சி. சண்முகசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழாவுக்கு, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. இராமச்சந்திரன் இ. ஆ. ப., அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''செங்கல்பட்டு மாவட்டத்தில் 4,315 மையங்கள் இருக்கின்றன. அதில் சமூகநலத்துறையின் கீழ் இயங்கும் மையங்கள் 2,005. செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 18 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இதற்கு மாதம் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவாகும். வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை பதினேழு. இதில் ஒரு வேளை இலவச சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை 4989. மேல்அயனம்பாக்கத்தில் 140 குழந்தைகளும், கீழ்அயனம்பாக்கத்தில் 123 குழந்தைகளும் இலவசச் சத்துணவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளனர்.

**நல்லதொரு திட்டம் நாடு பாராட்டுகிறது**

குத்து விளக்கை ஏற்றி சத்துணவுத் திட்டத்தினைத் துவக்கி வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றியபோது குறிப்பிட்டார்:

"இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏழைக் குழந்தைகளுக்குஇலவசச் சத்துணவுத் திட்டத்தைத் துணிச்சலோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். நல்ல எண்ணத்தில் நல்லவைதான் தோன்றும். அந்த அடிப்

**ஆனந்தன்**

படையில் இந்த நல்ல, பயனுள்ள திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திற்குக் கொண்டு வந்திருப்பதை நல்ல உள்ளம் கொண்ட அனைவரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். நல்ல நிலத்தில்தான் நல்ல பயிர் விளையும் என்பதைப் போல, புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல மனத்தில் நல்லதொரு திட்டம் உருவாகியிருப்

பதை நாம் மட்டுமல்ல, மற்றைய மாநிலத்தவர்களும் பாராட்டுகின்றனர்.

**குழந்தைகளின் அறிவு வளர்ச்சி**

"வருங்காலக் குடிமக்களாகிய நம் குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் முழு வளர்ச்சியையும் காண வைப்பது நமது தலையாய கடமையாகும். இந்தப் பணியில் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ள பொறுப்பு, மிகவும் முக்கியமானது, அதிலும் குழந்தைகளின் இளம் பருவத்தில் பாடம் கற்பிக்கும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் பங்கு, மிகமிகப் பெரியது. அவர்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மட்டுமின்றி, உடல், உணர்வு, பண்பு ஆகியவற்றின் வளர்ச்சிகளையும் ஒருங்கே கவனிப்பதற்கு, இப்புதிய சத்துணவுத் திட்டம் பல வாய்ப்புக்களை அளிக்கிறது. இப்புதிய சத்துணவுத் திட்டத்தின் நோக்கங்களில் உணவியற் கல்வியும், குழந்தைகளின் வளர்ச்சியும் முதலிடம் பெற்றுள்ளன. இவ்வுணவுத் திட்டத்தில் நலம் தரும் நல்லுணர்வைத் தருவதுடன், அதன் நன்மைகளைக் குழந்தைகள் உணரும் பொருட்டுப் படக்காட்சிகள், கதை சொல்லுதல், ஆடல் பாடல்கள், பள்ளித் தோட்டம் அமைத்தல் முதலிய செயல்முறைகள் மூலம் உளவியற் கல்வியும் புகட்டப்படுகிறது.

**ஒரு வேளையாவது**

"தமிழ்நாட்டில் 100-க்கு 52 பேர் ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். 100-க்கு 18 பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கிறார்கள். 100-க்கு 11 பேர் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏழ்மையில் பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது உடலைத் தேற்றுகின்ற அளவுக்குச் சத்துணவு அளிக்க வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம். புரட்சித் தலைவர் நல்லவர்-வல்லவர் என்று பேர், பெற்றதோடு நின்று விடாமல் அவர் நம்மவர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதனால்தான் இந்த நல்ல திட்டத்தினை - யாரும் நினைக்காததைச் செய்ய முன்வந்துள்ளார்.

**60 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுவர்**

"தமிழ்நாட்டில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 42,10,000. 5 வயது முதல் 10 வயது வரையிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 63,73,000. ஆக 2 வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 1 கோடியே 5 இலட்சத்து 83 ஆயிரம். இதில் ஏழ்மை நிலையில் உள்ள 60 இலட்சம் குழந்தைகளுக்கு இச்சத்துணவு அளிக்கும் பொறுப்பைத் தமிழக அரசு பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 4 ஆயிரத்து 343 குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. மேலும் 20 ஆயிரம் காப்பகங்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. சமையல்கூடம், உணவுக் கூடம் கட்ட ரூ. 38 ஆயிரம் வரை ஆகிறது.

**பணத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை!**

"தமிழக வரவு-செலவுத் திட்டம் (பட்ஜெட்) பற்றாக் குறையில் இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏழைகளுக்கு இலவச உணவு அளிக்க வேண்டும் என்ற நோக்கில் அதைப் பொருட்படுத்தாமல் செலவு செய்ய முன்வந்து இருக்கிறோம். விலைவாசி ஆண்டுக்கு ஆண்டு கூடினாலும், சத்துணவுத் திட்டத்திற்கான பணமும் கூடுதலாகும். அதனைக் கருத்தில் கொள்ளாமல் செலவு செய்யப்படும்.

**கண்காணிக்க வேண்டும்**

"சத்துணவுத் திட்டத்துக்காக 100 கோடி ரூபாய் செலவழிப்பது என்பது முக்கியமல்ல. அந்தத் திட்டம் சரியாக, ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பது தான் முக்கியம். இந்தத் திட்டத்தில் கட்சி வேறுபாடு கிடையாது.

"அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் . கண்காணிப்பதோடு இந்தத் திட்டம் வெற்றி பெற மக்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

குழந்தைகள் காப்பகத்தில் ஒரு குழந்தைக்கு சத்துணவு ஊட்டப்படுகிறது





**சிலம்புச் செல்வர்**

இவ்விழாவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் தமது உரையில், தெரிவித்ததாவது:

"பட்டினி - பசி என்பது பரம்பரையான வியாதி - கல்தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் இதுவரை எந்த அரசும் ஏழைக் குழந்தைகளின் பட்டினியைப் போக்க முன் வந்ததில்லை. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான அரசு ஒன்றுதான் பட்டினியைப் போக்க முன் வந்து இருக்கிறது. இதைவிட வேறு என்ன இருக்க முடியும்? போட்ட உணவையே மீண்டும் மீண்டும் போடாமல், நாளுக்கு ஒரு சுவையான சத்தான உணவு வழங்கப் போகிறார்கள் புரட்சித் தலைவர் என்று சொல்ல இதைவிட வேறு என்ன செய்ய வேண்டும்? தீ விபத்து, வெள்ளச் சேதம் ஏற்படும் போதெல்லாம் ஓடி வந்து உதவும் முதல் கரமாக இந்தப் புரட்சித் தலைவர் அவர்களின் கரம்தான் இருந்ததை நாமெல்லாம்பார்த்திருக்கிறோம். இயற்கையாக அவர் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுதான், இந்தச் சத்துணவுத் திட்டம், எந்த ஆட்சி வந்தாலும் இந்தத் திட்டத்தைக் கைவிட முடியாது.

"உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே"

என்கிறது மணிமேகலைக் காப்பியம். அந்தச் செயலை இன்று முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் செய்து வருகிறார். மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்துடன் இதனைச் சேர்த்து 21 அம்சத்திட்டமாக இனி இருக்கும். இப்படிப்பட்ட திட்டத்தைக் குறைவாக யாராவது மதிப்பிட்டால் இதைவிடப் பாவமானது வேறு எதுவும் இருக்க முடியாது" என்றார்.



**மேலவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு மேலவைத்துணை தலைவர் திரு புலமைப்பித்தன் அவர்கள் தமது உரையில்.

"வயிற்றுக்குச் சோறு உண்டு
கண்டீர்-இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்"

என்றார் பாரதி-அந்தப் பாரதி கண்ட கனவை நனவாக்கி வருகிறார் புரட்சித் தலைவர் அவர்கள். தான் பெற்ற பசித் துன்பத்தை நாட்டு மக்களும் பெற்றுவிடக் கூடாதே என்பதில் அக்கறை கொண்டு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். பசிப் பிணி என்ற நோயைத் தீர்த்து வைக்கிற வைத்தியராக முதல்வர் அவர்கள் விளங்கி வருகிறார்" என்று குறிப்பிட்டார்.

வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.சி.டி. பிரபாகரன் அவர்கள் பேசுகையில்—

"அரசியல் மறுமலர்ச்சிக்கு வித்திடப் போகிற திட்டம் இந்தச் சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டம் எனது தொகுதியில் துவக்கி வைக்கப்பட்டதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். திட்டம் வெற்றி பெறத்தொகுதி மக்களின் சார்பில் உத்தரவாதத்தைத் தருகிறேன்" என்று குறிப்பிட்டார்.

விழாவில் சமூகநலத்துறை ஆணையர் திருமதி ஜே. அஞ்சனி தயானந்த் இ.ஆ.ப., அவர்கள், செங்கல்பட்டு மாவட்டக் கல்வி அலுவலர் திரு சிவதாணுப் பிள்ளை, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி இராஜம்மாள் ஆகியோர் உரையாற்றினர்.

263 ஏழைக் குழந்தைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல், சாம்பார் சாதம், தயிர்சாதம், கூட்டு, பொரியல், கீரை ஆகியவைகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிமாறினார்கள்.

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ். எம். சண்முகசுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.

குழந்தைகளைத் தெய்வமெனப் போற்றித் தூய்மையுடனும் சக்தியுடனும் அவர்களை வளர்ப்பதே ஒரு சமுதாயம் குழந்தைகளுக்கும் நாட்டிற்கும் செய்யக் கூடிய பெரும்பணியாகும்.

இத்திட்டம் எதிர்காலத்தில் தமிழகத்தின் மனித ஆற்றலைப் பெருக்குவதற்கான முதலீடு என்றால் அது மிகையாகாது.

# தமிழகத்தின் புகழ்பரப்பும் பீங்கான்

தமிழ்நாட்டில் மட்பாண்டம், கண்ணாடி மற்றும் உருகாத கலவை செய்வதற்குத் தேவையான மான்சைட், கிரானைட், மைக்கா களிமண் போன்ற பல தாதுப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. பல்லாண்டுகளுக்கு முன்பே மட்பாண்டத் தொழில்வளர்ச்சிக்கு இம்மாநிலத்தில் வாய்ப்பிருப்பதை உணர்ந்தே அரசு,மட்பாண்டத் தொழில் அபிவிருத்திக்கு உதவ முன்வந்தது. அதனால்தான் சேஷசாயி தொழிலகம் வடலூர், நெய்வேலி மட்பாண்டத் தொழிலகம், பாரி கம்பெனி,ராணிப்பேட்டைமுதலியன துவக்கப்பட்டன. அரசு மட்பாண்டத் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை ஊறுகாய் ஜாடிகள், கற்குழாய் தொழிற்சாலைகள், பீங்கான் கலைப் பொருள்கள் உற்பத்தி நிலையங்கள், மின் தடைகள், மற்றும் இதர பீங்கான் சாமான்களைச் செய்யும் தொழிலகங்கள் ஆகியவற்றை அமைத்துள்ளது. மேலும் மட்பாண்ட சிறு தொழில் அதிபர்களுக்கு உதவும் வகையில் ஒரு தனிப்பட்ட தொழிற்பேட்டையையும் ஏற்படுத்தியுள்ளது. தென் இந்தியாவிலேயே மட்பாண்டத் தொழிலில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகள் தொழிற் பயிற்சி கொடுக்க ஒரு பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது.



பீங்கான் உற்பத்திக்கான மூலப்பொருள் ஆய்வுக் கூடம்

1973-ஆம் ஆண்டு இறுதியில் அரசு தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள மட்பாண்டப் பிரிவுகளை தனியாக ஒரு பொது நிறுவனம் அமைத்து அவைகளை வணிக நோக்கத்தோடு இயக்க முடிவு செய்தது. இதனால் 1974 ஆம் ஆண்டின் இடையில் தமிழ் நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அது திருமழிசை இயந்திரச் செங்கல் தொழிற்சாலை, பீங்கான் தொழிலகம், கற்குழாய்த் தொழிற்சாலை, கலை நிலையங்கள், விருத்தாசலம், பெரம்பூர் பீங்கான் தொழில் மையம், ஓமலூர் மற்றும் பணி வசதி நிலையம், தொழிற்பேட்டை ஆகியவற்றை இயக்கி வருகிறது. 1968-ல் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை ரூ. 75 இலட்சம் மூலதனத்துடன் செக்கோஸ்லோவியா இயந்திரங்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. தேவையான களிமண் அதனை அடுத்துள்ள 180 ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கிறது. முதலில் உலை எண்ணெய்யைக் கொண்டு இங்குள்ள ஹாப்மேன் சூளை இயங்கியதால் சுமார் 60,000 செங்கற்கள் ஒரு நாளைக்கு உற்பத்தியாயின. ஆனால் இப்போது நிலக்கரி கொண்டு இயக்குவதால் சுமார் 20,000 முதல் 25,000 வரை ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் செங்கற்கள் மற்றவற்றைவிட உறுதியாக உள்ளன. இத்தொழிலகத்தின் வளர்ச்சிக்காக துளையிட்ட செங்கற்கள்பளபளப்பான கற்கள் முதலியவையும் உற்பத்தி செய்ய ஆராயப்பட்டது. கல்பாக்கம் அணு மின்நிலையத்துக்கான பிரத்தியேக கூரை ஓடுகள் இங்குதான் உற்பத்தி செய்யப்பட்டன. தடுப்புக்கட்டைகளும், தக்கை ஓடுகளும் கூட இங்கு உற்பத்தி செய்ய முடிகிறது. விருத்தாசலம் பீங்கான் தொழிலகம் துப்புரவுச் சாமான்கள்,மின் தடைகள், மற்ற பீங்கான் பொருள்களை உற்பத்தி செய்கிறது. இங்கு உள்ளூர் தொழில் நுட்பமே பின்பற்றப்படுகிறது. உற்பத்திப் பொருள்கள் நீடித்த உழைப்பிற்கும் குறைந்த விலைக்கும் பெயர் பெற்றவை. பீங்கான் பொருள்கள், தாஜ்மஹால் சென்டியர் போன்ற 5 நட்சத்திர ஓட்டல்களால் வாங்கி ஆதரிக்கப்படுகின்றன. முகவர்கள் மூலமாக தெற்கு மாநிலங்களில் எல்லா இடங்களிலும் பீங்கான் பொருள்கள் விற்கப்படுகின்றன.



உப்பு மெருகிட்ட கற்குழாய்கள் தயாரிக்க உதவும் சூளைகள்.

கற்குழாய் செய்வதற்கான களிமண் அதிகமாக உள்ள இடங்களில் சுரங்க வேலைக்கான வசதிகளை இக்கம்பெனி பெற்றுள்ளது. இக்களிமண்ணைக் கற்குழாய் தொழிற்சாலை பயன்படுத்தி மிக நேர்த்தியான கற்குழாய்களை ஐ. எஸ். ஐ. தரத்திற்குக் குறையாமல், கடந்த பல்லாண்டுகளாக உற்பத்தி செய்து வருகிறது. சாதாரண உப்பைக் கொண்டு இக்குழாய்கள் மெருகேற்றப்படுகின்றன. நகராட்சிகள், வடிகால் வாரியங்கள், மற்றும் பலவகைக் கட்டிடத் தயாரிப்பாளர்கள் டாசல் கற்குழாய்களையே அதன் சூளையிடப்பட்ட தரத்திற்கும் மெருகின் நீடித்த உழைப்பிற்கும் தேர்ந்தெடுத்து வாங்குகிறார்கள். ஆனால் அதிக உஷ்ணம் கொடுக்கக்கூடிய தகுந்த உயர்ந்த ரக நிலக்கரி போதுமான அளவிலும் குறிப்பிட்ட நேரத்திலும் கிடைக்காமையால் இத்தொழிலகம் தனது முழு உற்பத்தித் திறனுடன் இயங்க முடியவில்லை. எனினும் இத்தொழிலகத்தின் சிறப்பான இயக்கத்தைக் கருதி சுமார்ரூ100 இலட்சம் செலவில் இன்னொரு கற்குழாய்த் தொழிலகத்தை கும்மிடிபூண்டியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பூர்வாங்க வேலைகள் முடிந்த பிறகு, தொழிலகம் விரைவில் அமைக்கப்படலாம்.





பீங்கான் சிறுதொழிலதிபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே 40 தொழிற் கூடங்களைக் கொண்ட தொழிற்பேட்டையை விருத்தாசலத்தில் டாசல் இயக்கி வருகிறது. இங்கு ஒரு நாளைக்கு 4 டன் பீங்கான் பொருள்களைச் சூளையிட்டு தரவல்ல உலை எண்ணெய் கொண்டு இயங்கும்தொடர் சுரங்கச்சூளை ஒன்று சிறு தொழிலதிபர்களின்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட திருக்குறளிலேயே ஹைட்ரஜன் இல்லையே அணுகுண்டு இல்லையே என்று சொல்வது பொருந்தாது. எழுதப்பட்ட காலத்தையும் ஒப்பு நோக்கவேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளது. கரியைக் கொண்டு இயக்கும் சூளைகளில் ஒரு பொருள் சூளையிட 10 நாட்கள்கூட ஆகும். ஆனால் இந்த நவீன சூளையில் பொருள்கள் 24 முதல் 30 மணி நேரத்தில் சூளையிடப்படுகின்றன. புதிய பீங்கான் வடிவமைப்புகள், மெருகுகள் கண்டு பிடிக்கப்பட்டுப் பல இடங்களிலிருந்து கிடைக்கும்மூலப்பொருள்களைப் பயன்படுத்தும் வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொரு வருஷமும் சில குறிப்பிட்ட மட்பாண்டக் கலைஞர்களுக்கு மின்தடைகள், துப்புரவுச் சாமான்கள் முதலியவை செய்வதில் பயிற்சி அளிக்கப்பட்டும் வருகிறது.



பீங்கான் துப்புரவுச் சாமான்கள் வடிவ வார்ப்புப் பணிநடைபெறுகிறது.

விருத்தாசலம், பெரம்பூர் ஆகிய இடங்களிலுள்ள கலை நிலையங்கள் ஒரு மாதத்திற்கு ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள 4 டன் கலைப்பொருள்களை உற்பத்தி செய்கின்றன. கலை மற்றும் கைத்திறன் பள்ளியிலிருந்து வெளிவரும் கலைஞர்கள், டிசைனர்கள் ஆகிய பலருக்கு இங்கு வேலை தரப்பட்டு புதிய புதிய கலைப் பொருள்களை உருவாக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்களின் உற்பத்திப் பொருள்கள், பெங்களூர், ஐதராபாத், பம்பாய், டில்லி முதலிய இடங்களில் சிறப்புக் கண்காட்சியில் வைக்கப்படுகின்றன. பொது மக்கள் விருப்பத்திற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 பேருக்கு, கலைப் பொருள்கள் செய்வதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிரத்தியேக வண்ணங்கள், கலவைகள், முதலியவற்றை உபயோகித்து மரத்தால் செய்தது போன்ற தோற்றமுள்ள பீங்கான் பொருள்களும் செய்யப்படுகின்றன.

ஓமலூரில் ஒரு சிறிய பீங்கான் தொழில் மையத்தை அமைத்து கிராமப்புற மக்களுக்கும் மட்பாண்டம் செய்வதில் பயிற்சியளிக்கவும் டாசல் மறக்கவில்லை. இத்தொழிலகம் நகரை விட்டு மிக தூரத்தில் அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு குறைவாகப் படித்த கிராமப்புற இளைஞர்கள் மிகவும் கவனமாக பல தரப்பட்ட ஊறுகாய் ஜாடிகளைச் செய்வதைக் காணலாம். இத்தொழிலகம் ஆதாயத்தைத் தரவில்லையானாலும் சமூக நன்மைகளைக் கருதியே டாசல் இதை இயக்கி வருகிறது.

மேற்கூறியவைகளிலிருந்து டாசல் தொழில் நுட்பத்திலும், உற்பத்திப் பொருள்களின் வகைகளிலும், சமூக நன்மைகளைக் கருதியும் பல முனைகளில்இயங்குகிறது என்பதைக் காணலாம். மிகுந்த முயற்சிக்கு பிறகே டாசல் பெயர் தமிழ்நாடு முழுவதும் மற்றும் வடக்கில் முக்கிய நகரங்களிலும் புகழ் பெற்றிருக்கிறது. இது குறித்து டாசல் மிகவும் பெருமைப்படுகிறது.

# பாலர்க்குப் பண்பட்ட கல்வி

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்''.

என்றார் வள்ளுவப் பெருந்தகை. மாணவர் அறிவுச் செல்வம் பெற்று விட்டால், எல்லாச் செல்வமும் பெற்றவர்களாவர். அறிவுச் செல்வம், பண்பட்ட கல்வியின் மூலமே பெற இயலும். பாலர்க்குப் பண்பட்ட கல்வியை அளிப்பதற்குத் தமிழக அரசும், கல்வித்துறையும் பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகின்றன.

மேலும்,
''அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்''.

என்கின்றார் திருவள்ளுவர். பாலர்க்குப் பாதுகாப்பாக இருக்கக் கூடியது அறிவும் கல்வியுமே ஆகும்.

**கல்வியும் பொருளாதார முன்னேற்றமும்:**

ஒரு நாட்டின், சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு முன்னேற்றம், அந்நாட்டின் கல்வி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது என்றும், நோக்கமுடைய கல்வி நிலையில் உயர்வு இருந்தால், அம்மக்களின் வாழ்க்கைத்தரம் சிறப்படையும் என்றும் பல கல்வி ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன. எனவேதான், நாட்டின் வருவாய்க் கணக்கில் கிட்டத்தட்ட, கால் பங்கினை நம் தமிழகத்தில் கல்விக்காக ஒதுக்கீடு செய்து, பல புதிய, பயனுள்ள திட்டங்களை அமல்படுத்தி வருகின்றோம்.







**கல்வி முதலீடு:**

1982-83ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் ரூ. 291 கோடி கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 1975-76ல் கல்விக்கு ஒதுக்கிய தொகை ரூ. 123 கோடிதான். 1982-83ல் பள்ளிக் கல்விக்காக மட்டும் ரூ. 239 கோடி செலவழிக்கப்படும். முன்பெல்லாம், உயர் கல்விக்கு அதிக செலவு செய்யப்பட்டுள்ளதால் ''இந்தியக் கல்வி அமைப்பு, உயர் மட்டம் வலிமை கொண்டும், அடித்தளம் வலிமையற்றும் இருந்தது'' என்று குறை கூறப்பட்டது. இப்போது அந்நிலை இன்றி, அடிப்படையாகிய பள்ளிக் கல்விக்கே பெருந்தொகை செலவழிக்கப்படுகின்றது. குறிப்பாக இப்போது தொடக்கக்கல்விக்கு மட்டும் சுமார் ரூ. 123 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

**பண்பட்ட கல்வி**

பாலர் பண்பட்ட கல்வியைப் பெற, கல்வி அமைப்பு முறைகளில், பல வகைகளிலும் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியுள்ளது. போதுமான பள்ளி வசதிகளைச் செய்து கொடுத்தல், ஆசிரியர்களை நியமித்தல், ஆசிரியர்களின் வசதிகளை கவனித்தல், ஆசிரியர்களின் கல்வித்தர வளர்ச்சிக்குப் பல்வேறு பயிற்சிகளை அளித்தல், மாணவர்கள் நலனுக்காகப் பல திட்டங்களை அமல்படுத்தல் போன்ற வகைகளில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, செயல்பட்டு, வெற்றி கண்டுள்ளோம்.

## சாதனைகள்

**மாணவர்கள் சேர்க்கை**

பள்ளி வயது வந்த பிள்ளைகள் பள்ளிகளில் சேர்க்கப்படுவதற்கு, பல திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு எல்லா வகையிலும் சேர்க்கையை அதிகரிக்கவும், மாணவர் விட்டுப் போகும் நிலை குறையவும் வழிவகைகள் காணப்பட்டன. இதனைப் பின் வரும் புள்ளி விவரங்கள் காட்டும்.

| கல்விநிலை | சேர்க்கப்பட்டவர் சதவீதம் | |
|---|---|---|
| | 1975-76 | 1981-82 |
| தொடக்கநிலை உயர் | 90 | 94.76 |
| தொடக்கநிலை | 52 | 64.55 |
| இடைநிலை | 32 | 41.36 |

1975-76க்கும் 1981-82க்கும் இடைப்பட்ட காலத்தில் கூடுதலாக 12.07 இலட்சம் மாணவர்களைச் சேர்த்துள்ளோம். இவ்வாறு மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப, ஆசிரியர்கள் எண்ணிக்கை வளர்ந்துள்ளதையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆசிரியர்கள் எண்ணிக்கை | 1975-76 | 1981-82 |
|---|---|---|
| 1. உயர்நிலை-மேல்நிலை | 67,712 | 83,914 |
| 2. உயர் தொடக்கப்பள்ளி | 67,926 | 66,221 |
| 3. தொடக்கப் பள்ளி | 1,10,477 | 1,13,036 |
| மொத்தம் | 2,46,115 | 2,63,171 |



**பள்ளிகள் பெருகுவதும் பள்ளிகளில் இட நெருக்கடி ஏற்படுகிற அளவுக்குப் படிக்கின்ற ஆர்வம் பெருகுவதும் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்ல அறிகுறியாகும்.**

**—பேரறிஞர் அண்ணா**

(பல உயர்தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் ஆக மாற்றப்பட்டதால், 1981-82ல் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைந்து தோன்றுகிறது.)

பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஓர் அம்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984-85க்குள்) இந்தியா அனைத்திலும் 6-11 வயதுத் தொகுதியினரில் 95 சதவீதத்தினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகத்தில் 6-11 வயதுத் தொகுதியைப் பொறுத்தவரை அந்த இலக்கு இப்பொழுதே எய்தப்பட்டு இருப்பதும் 11-14 வயதுத் தொகுதியினரைப் பொறுத்தவரை அந்த இலக்கை விஞ்சியிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

மேலும் 1982-83ஆம் ஆண்டில் 1,000 இடை நிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 150 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 500 தமிழாசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர் பதவிகள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 300 பி.எட். தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100, முழுநேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

1981 அக்டோபர் 1ம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,896 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல் நிலைப் பள்ளிகள் 27,767. நடுநிலைப் பள்ளிகள் 5,556. உயர்நிலைப் பள்ளிகள் 3,573 (1,405 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட). மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 137 பள்ளிகளும் -79 உயர்நிலைப் பள்ளிகளும் 58 மேல்நிலைப் பள்ளிகளும் - மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 36,896-ல் அடங்கும்.

**பள்ளியை விட்டு இடையில் நின்று விடுவோர்**

பொருளாதார சமூகப் பிரச்சினைகளால் அரும்பாடுபட்டுச் சேர்த்த மாணவர்களில் பெரும்பாலோர் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். அவ்வாறு நிற்காமல் இருக்கப் பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1977-78முதல் 1-3 வகுப்புகளில் தோல்வி என்ற நிலை இருக்கக் கூடாது என்று ஆணையிட்டு, தேக்கத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டது. இந்நிலையில் ஆசிரியர்கள், புது நோக்கோடு பயிற்சிபெற வேண்டும் என்று 1-3 வகுப்புகளில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் விளைவாக 1-5 வகுப்புகளில் பள்ளியை விட்டு நின்றவர்கள் 1975-76ல் 42.29 %. இருந்தது 1981-82ல் 30.67 %. ஆக குறைந்து விட்டது.

**தாழ்த்தப்பட்டோரின் பங்கேற்பு உயர்வு**

மேலும் மாணவ மாணவியரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கையும் முன்னேற்றம் கண்டுள்ளது. 1975-76ல் 18 %. மாணவ மாணவியர்தான் ஆதிதிராவிடர் பழங்குடியினர். 1981-82ல் இது 21 %. ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறே ஆதிதிராவிடர் பழங்குடியினத்தைச் சார்ந்த ஆசிரியர்களின் சதவீதம் 9 %. லிருந்து 13 %.ஆக உயர்ந்துள்ளது.

**நலிந்தவர்களுக்குச் சிறப்புத் தனிப்பாடம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981-82ஆம் ஆண்டில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் $1\frac{1}{2}$ மணி நேரம் உரிய ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு சுமார் 37,600 மாணவர் பயன் பெற்றனர். இந்த முன்னோடித் திட்டம் 1982-83லும் தொடர்ந்து செயல்படும். மேலும் 300 பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படும்.

**ஊக்கச்செயல்களும் ஆக்கப்பணிகளும்**

மாணவர்களின் சேர்க்கை நிலை உயரவும், தேக்கம்-விரையம் குறையவும் மேற்கொண்ட பல ஊக்கச் செயல்களில், மதிய உணவு, இலவசச் சீருடை, இலவசக் கற்பலகை புத்தகங்கள் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

1975-76ல் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் இலவசக் கற்பலகை, புத்தகங்களைப் பெற்றார்கள். 1981-82ல் இவ்வுதவி பெறுவோர் 13 இலட்சம் ஆக உயர்ந்துள்ளனர்.

**மதிய உணவு**

1975-76ல் 28286 மதிய உணவு மையங்களில் 20.03 இலட்சம் குழந்தைகள் மதிய உணவு பெற்றார்கள். அதற்கு ஆன செலவு ரூ458 இலட்சங்கள். 1981-82ல் இது 30493 மையங்களாகவும், 20.51 இலட்சம் பிள்ளைகளாக





வும் உயர்ந்தன. இவர்களுக்கான செலவு ரூ. 505 லட்சமாகும்.

## மாண்புமிகு முதல்வரின் ஏழை இளஞ் சிறார்க்கு அமுதூட்டும் திட்டம்

சத்துணவு குழந்தைப் பருவத்தில் கிடைக்காவிட்டால் இளஞ்சிறார்களின் அறிவுத் திறனும் பாதிக்கும் என்று ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன. எனவே, வறுமையில் உழன்று சத்துணவு இன்றி, ஆற்றலையும் திறனையும் வளர்த்துக் கொள்ள இயலாத நிலையைக் களைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2 முதல் 10 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982 ஜுலை முதல் தேதியிலிருந்து வழங்கியுள்ளார்கள். இதன்படி 5 முதல் 9 வயது வரை உள்ள 38.15 இலட்சம் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் நாளும் 50 காசு செலவில் சத்துணவு, கல்வித் துறையால் வழங்கப்படும். ஆண்டொன்றுக்கு இதற்குச் சுமார் ரூ. 70 கோடி பள்ளிக் கல்வித் துறையில் செலவாகும்.

## பள்ளிச் சீரமைப்பு மாநாடும் இலவசச் சீருடையும்

இவ்வாண்டில் (1981-82) டிசம்பர் 1981 வரை நடத்தப்பட்ட 50 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் ரூ. 63 இலட்சம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு அதே காலக் கட்டத்தில் 49,378 மாணவர்களுக்குச் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

## புத்தக வங்கி

ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1.10.81 நிலவரப்படி 32,630 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இவ்வங்கிகளில் மொத்தம் உள்ள புத்தகங்கள் 22 இலட்சத்திற்கும் அதிகமாகும். பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன.

## ஆசிரியர் நலன்கள்

பாலர் ப்ண்பட்ட கல்வி பெற வேண்டுமானால் ஆசிரியர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; தேவையான அடிப்படை நலன்களும் பெற வேண்டும். இவ்வகையில் அண்மைக் காலத்தில் பல புதிய சலுகைகள் அளிக்கப்பட்டன.

பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரே தகுதியில் 20 ஆண்டுகள் பணி முடித்திருந்தால் 10 ஆண்டுகள் தேர்வு நிலையில் 10 ஆண்டுகள் தகுதி முடிக்காமல் இருந்தால் கூடி சிறப்பு நிலை (Special Grade) அனைத்து நிலை ஆசியர்களுக்கும் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எஞ்சியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் அனைவரும் 1.1.81 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாக உயர்த்தப்பட்டார்கள். இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் எவருமே இல்லையென்ற நிலை உருவாக்கப்பட்டது இப்போது.

முன்னாள் இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் (தமிழ் தவிர )அரசின் மொழிக் கொள்கை காரணமாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு 1.4.'73 மற்றும் 1.4.74 முதல் தேர்வு நிலை வழங்கும்போது அவர்கள் முன்னாள் பணியாற்றிய பணிக்காலத்தையும் கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்கலாம் என அரசு ஜுலை 1981ல் ஆணை வழங்கியுள்ளது.

அனைத்து நிலை ஆசிரியர்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. முன்பு ஆண்டுக்கு 3 நாட்களே இருந்தன. இதுவும் மற்ற எந்த மாநிலமும் வழங்காத சாதனை.

பல ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பி வந்த தலைமை ஆசிரியர்களுக்கென படி ரூபாய் 5 வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்காக ஊக்க ஊதியம் ஒன்று வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் காசோலை மூலம் நேரடியாகச் சம்பளம் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

பட்டதாரி ஆசிரியர் தகுதியுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் உதவித் தலைமையாசிரியர்களாக வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர் தகுதித் தேர்வு பெற்ற அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1.4.'82 முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு உதவிக் கல்வி அலுவலர்கள் மூலம் சம்பளம் காசோலையாக வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு சைக்கிள் கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு மூக்குக் கண்ணாடி மற்றும் காதுகேட்கும் கருவி இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

## கல்வி நிருவாக முன்னேற்றம்

அனைத்து வசதிகளையும் சிறந்த முறையில் பயன்படுத்தி எதிர்பார்க்கும் கல்விப் பலனைப் பெற, கல்வி நிருவாக அமைப்பு வலிமை பெற வேண்டும். இவ்வகையில் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டன.

பெண்கள் பள்ளிகளை ஆய்வு செய்யத் தனியாக இரண்டு மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் இருந்தனர். தற்போது மேலும் 10 ஆய்வர் பதவிகள் வழங்கப்பட்டு 12 மகளிர் பள்ளி ஆய்வர்கள் பணியாற்றுகின்றனர்.

அனைத்து வருவாய் மாவட்டங்களுக்கும் தனியாக முதன்மைக் கல்வி அலுவலர்கள் இல்லாது இருந்த நிலையை மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் வீதம் 16 முதன்மைக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இத்திட்டத்திற்கு என இரண்டு களப்பணி அலுவலர்கள் (Field Officers) தான் இருந்தனர். 1980ல் மேலும் 9 களப்பணி அலுவலர் பணியிடம் வழங்கி இத்திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்ததோடு, 97 மையச் சமையல் கூடங்களுக்குக் கண்காணிப்பாளர் தகுதியில் உயர்த்தப்பட்டது.

# புதிய சாதனைகள்

## ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியராக்குதல்

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1.6.81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டடப் பராமரிப்புத் தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதும் பள்ளிக் கல்வித்துறைக்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஓர் உதவிக் கல்வி அலுவலர் வீதம், 366 உதவிக் கல்வி அலுவலர்களை நியமித்து அவர்கள் மூலம் இப்பள்ளிகளைப்பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு உதவிக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் இளநிலை உதவியாளர் ஒருவரும் தட்டச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் வேலைப் பளுவைச் சமாளிக்க ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் உதவியாளர் பணியிடம் ஒன்றும் தட்டச்சர் பணியிடம் ஒன்றும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்கக் கல்விக்காகப் பள்ளிக் கல்வி (கூடுதல்) இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய இம்மாபெரும் மாற்றம், தொடக்கக் கல்வித் தர உயர்வுக்கும், விரிவாக்கத்திற்கும் உறுதுணையான ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

## இளஞ்சிறார் கல்வி

தமிழக அரசு, முதன் முறையாக 1982-83ல் இளஞ் சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான ஒரு திட்டத்தினைத் தொடங்கவிருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப்போக்கைப் புகட்டுவதன் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக்



கல்வி வளரவும் உதவும். மேலும் இது பள்ளி செல்லும் வயதுள்ள சிறுமியர் தம் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுபட்டு அச்சிறுமியர் பள்ளி செல்வதற்கும் உறுதுணை புரியும். பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் சிறுமியரிடையே தொடக்கக் கல்வியை மேலும் பரப்புவதற்கு குறிப்பான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1982-83ல் தொடங்கவிருக்கும் இத்திட்டத்தின் முதற்கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால் வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரிப் பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த நர்சரிப் பிரிவுகளுக்கான பாடத்திட்டங்களை வகுப்பதற்காக 1981 நவம்பரில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கென 1982-83ல் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### அஞ்சல் மற்றும் நேர்முகப் பயிற்சி

தொடக்க நிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு) இடைநிலைத் (செகண்டிரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டுத் தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் 5 மாத அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி ஒன்றினை நடத்தி வருகிறது. இத் திட்டத்தில் கீழ் ஆண்டுதோறும் பயன்பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1982-83லிருந்து 5,000லிருந்து 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### யூனிசிப் திட்டங்கள்

தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் செயற்படுத்தி வருகிறது:

1. தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல்.
2. சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி
3. தொடக்கக்கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்குதல்.

இம்மூன்று திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் பாங்கினைச் சாலச் சிறந்தது என தேசிய கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் பாராட்டியுள்ளது.

### தேர்வுமுறைச் சீர்திருத்தம்

மேலும் தேர்வு முறைச் சீர்திருத்த ஆராய்ச்சி, சென்னையிலும் வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர் கல்விமையங்களை நடத்துதல் ஆகிய பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

### மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி

மக்கள் தொகைக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி (UNFRA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள



பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 லட்சம் அளவில் செலவிடும்.

### அனைவருக்குமான திறந்த நிலைக் கல்வி

உயர்நிலைப் பள்ளி நிலையில் பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான திறந்த நிலைப் பள்ளி ஒன்றை உருவாக்குவது பற்றி ஆலோசனை கூற, குழு ஒன்றுஅமைக்கப்பட்டுள்ளது. வேலை செய்து வருபவர்கள், இல்லத்தரசியர் போன்றோருள் 8 வது தேறியவர்கள் இப்பள்ளி மூலம்' உயர்நிலைப் பள்ளிப் படிப்பினைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

### மக்கள் நிலை உயர, கல்வி நலம் பெருக்குதல்

இவ்வாறு பாலர் பண்பட்ட கல்வியைப் பெறப் பள்ளி வசதிகளைப் பெருக்கியும், ஆசிரியர் நலனில் ஆர்வங்காட்டியும் கல்விக் கூடங்களின் தரம் உயரும் வழிகளை ஆய்ந்து செயல்படுத்தவும் பள்ளிக் கல்வித்துறை முனைந்து வருகின்றது. இதனால் தமிழகம் கல்வியில் தொடர்ந்து முன்னோடியாக இருந்து, மக்கள் நிலை உயரும் வகையில் கல்வியைப் பரப்பும்; சமூகப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும்; அண்ணா காண விழைந்த தமிழகத்தை நிர்மாணிக்கும்.

## இறால் வளர்ப்பு

தற்போது பலனற்றுக் கிடக்கும் நீர்ப் பரப்புக்களைப் பயன்படுத்தி மீனவர்களுக்கும் மற்றையோருக்கும் இலாபகரமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி அயல் நாடுகளில் விரும்பி உண்ணப்படும் விலை மதிப்புயர்ந்த இறால்களையும் பால் கெண்டை, மடவை, கொடுவா போன்றவைகளையும் கடலோரப் பகுதிகளை அடுத்துக் கிடக்கும் உவர் நீர்ப் பரப்புகளில் வளர்த்து மீன் உற்பத்தியைப் பெருக்க முடியும், கடல் ஏற்றுமதிப் பொருள்களில் முக்கிய இனமான இறால்கள் தற்போது கடலிலிருந்துதான் பிடிக்கப்படுகின்றன. இயற்கை வளங்கள் வரையறையற்றவை எனக் கூற முடியாது. கடலில் அதிகப்படியாக மீன்பிடித் தன்மைக்கான அறிகுறிகள் காணப்பட்டுள்ளன.

தாழ்வான நிலப்பகுதிகள், சதுப்பு நிலங்கள், உவர் நீர்ப் பரப்புகள், கடலுடன் தொடர்புள்ள ஆழமில்லாத ஏரிகள் கடலையடுத்துள்ள உவர் நீர் ஏரிகள் இவைகளில் இறால் வளர்ப்பை மேற்கொள்வதன் மூலம் கடலிலிருந்து பிடிக்கப்படும் இறால்களன்றி உபரியாக இறால்களைப் பிடித்து ஏற்றுமதி செய்துஅந்நியச்செலாவணியைப் பெருக்க முடியும். கடலிலிருந்து கிடைக்கும் இறாலின் அளவு குறையத் தொடங்கியுள்ளதோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் தமிழ்நாட்டிலுள்ள 56,000 ஹெக்டேர் பரப்பில் (பெரும்பாலும் தஞ்சை, செங்கை, முகவை மாவட்டங்களில்) இறால் வளர்ப்பு செய்யலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இறால் உற்பத்தியை வளர்ப்பு முறைகள் மூலம் அதிகரித்து எதிர்காலத்தில் இறால் ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் என்று கருதப்படுகிறது. ஆகவே கடந்த இரண்டாண்டுக் காலமாகவே தமிழக மீன்துறை இறால்களின் உயிரியல், அவைகள் கிடைக்குமிடங்கள், உணவு மற்றும் இனவிருத்திப் பழக்கங்கள் ஆகியவைகளைக் கண்டறிவதற்கு இறால் வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சி மற்றும் முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தத் துவங்கியுள்ளது.

மேலும், மீன்துறை கடந்த ஏழாண்டுக் காலமாக இந்திய அரசின் விவசாய ஆராய்ச்சித் துறையினருடன் ஒருங்கிணைந்து சென்னையிலுள்ள சாந்தோம் மீன் பண்ணையில் இறால் வளர்ப்பினைச் செயல்படுத்தி அரிய சாதனைகளை நிகழ்த்தி இறால் வளர்ப்பு சம்பந்தமான அடிப்படை விவரங்களைச் சேகரித்துள்ளது. ஒரு ஹெக்டேர் உவர் நீர்ப்பரப்பில் அறிவியல் அடிப்படையில் வளர்ப்பு முறைகளைக் கையாண்டால் ஒரு வருடத்தில் 1,000 கிலோ இறால் உற்பத்தி செய்யலாம் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், பத்து மாதிரி இறால் பண்ணைகளை அமைக்க தமிழக அரசு ரூ. 80 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இப்பண்ணைகள் கடலோர மாவட்டங்களில் 250 ஹெக்டேர் பரப்பில் இறால் வளர்ப்பை மேற்கொள்ள கூட்டுறவுகளுக்குதவ திட்டமிடப்பட்டுள்ளது. கறுப்பு மற்றும் வெள்ளை இறால் குஞ்சுகள் வளர்ப்பிற்குத் தொடர்ந்து கிடைப்பது அரிதாக இருப்பதாலும், இறால் வளர்ப்புப் பண்ணைகளை அமைக்க துவக்க நிலையில் அதிக முதலீடு தேவைப்படுவதாலும் அரசு மேற்கொள்ளும் இம்முயற்சிகள் இறால் வளர்ப்பில் ஓர் துவக்கமேயாகும்.

அரசினால் அமைக்கப்படும் இப்பண்ணைகளில், இறால் வளர்ப்பில் ஆர்வம் கொண்டவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கவும், தொழில் நுட்ப அடிப்படையில் இறால் வளர்ப்பைக் கற்பிக்கவும் உதவும். செயல்விளக்கப் பண்ணைகளாகவும் விரிவாக்க கேந்திரங்களாகவும் செயல்படும். கடலோரப் பகுதிகளிலோ அல்லது கழிமுகங்களிலோ சொந்த நிலமுள்ளவர்கள் இறால் வளர்ப்பை இலாபகரமாக மேற்கொண்டு அரசு மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவ வேண்டும்.

ஒரு ஹெக்டேர் பரப்பில் குஞ்சு வளர்ப்பிடம் உள்ளடக்கிய இறால் பண்ணை ஒன்று அமைக்க ரூ. 75,000 முதலீட்டுத் தொகையாகத் தேவைப்படும்.





இப் பண்ணைகளில் கறுப்பு மற்றும் வெள்ளை இறால் குஞ்சுகளை கழிமுகங்கள், உவர் நீர்ப்பரப்புகள், உவர்நீர் ஏரி போன்ற இயற்கை மூலகங்களிலிருந்து சேகரித்து ஒரு ஹெக்டேருக்கு 20,000 முதல் 30,000 வரை இறால் வகைக்கேற்ப இருப்பு செய்யலாம். இவை 110 முதல் 120 நாட்களில் விற்பனைச் செய்யக்கூடிய அளவிற்கு வளர்ந்துவிடும். முதல் அறுவடையை 110-120 நாட்களில் செய்யலாம். இறால் குஞ்சுகளுக்கு வளர்ப்புக் காலத்தில், பிண்ணாக்கு, மீன்தூள், தவிடு. ஆளியின் சதை. சிறிய மீன் குஞ்சுகள், மீன் வெட்டப்படும் போது ஏற்படும் கழிவு ஆகியவைகளை உணவாக அளிக்கலாம். பண்ணையில் உவர் நீரின் அளவு 90 செ. மீ. முதல் 100 செ. மீ. வரை இருக்கவேண்டும். தினந்தோறும் கடலிலிருந்து 15% உவர் நீரை வெளியேற்றி அதற்குப் பதிலாக புதிய நீரைப் பண்ணையில் உள்ள நீருடன் கலக்க வேண்டும்.

முறைப்படியாக வளர்ப்பு முறைகளைக் கையாளுவதன் மூலம் ஒரு வருடத்தில் இரண்டு [illegible] இறால் அறுவடை செய்யலாம். வளர்ப்பிற்கான அனைத்துச் செலவுகளும் போக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 5000/- நிகர இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மீன்துறை இறால் வளர்ப்புத் திட்டத்திற்கும் பெருமளவு பிரச்சாரம் செய்து இதுவரை 650 இளைஞர்களுக்கு இறால் வளர்ப்பில் பயிற்சியளித்துள்ளது. 1979-ஆம் ஆண்டில் தஞ்சையில் 20க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்கள் அவர்களுடைய சொந்த இடத்திலேயே இறால் வளர்ப்பினை மேற்கொண்டு பல்வகை இலாபத் தொகைகளை அடைந்தார்கள். இத்திட்டத்தைமுனைப்புடன் செயல்நோக்குக் கொண்டதாய் ஆக்குவது அவசியமாகும். செங்கல்பட்டு, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் 1லிருந்து 1.5 ஹெக்டேர் பரப்பில் நான்கு இறால் பண்ணைகள் மீன்துறையால் அமைக்கப் பட்டுள்ளன. இதைப் போன்ற ஆறு பண்ணைகள் ஏனைய கடலோர மாவட்டங்களில் நிறுவப்படும்.

தஞ்சை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் முறையே





அதிராம்பட்டினம் மற்றும் காரங்காடு ஆகிய ஊர்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இறால் வளர்ப்பிற்காகவே அமைக்கப் பட்டு இறால் வளர்ப்பில் ஏற்கெனவே ஈடுபடத் துவங்கியுள்ளன.

கிள்ளை (தென்னார்க்காடு மாவட்டம்) உப்பங்கழிகளில் ரூ. 15.8 இலட்சம் செலவில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்க மத்திய அரசு நிதியுதவியளித்து இப்பண்ணையின் வேலை துவங்கும் நிலையிலுள்ளது.

மேலும், 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ‘சுற்றுப்புற அபிவிருத்தித்திட்டத்தின்(Area development approach Project) அடிப்படையில் மத்திய அரசு, கடலோர மாநில அரசுகளுக்கு உவர் நீர் வளத்தில் இறால் வளர்ப்பு மூலம் அபிவிருத்தி செய்ய உதவ முன்வந்துள்ளது. ஆகவே, மாநில அரசு இறால் பண்ணைகள் அமைக்கத் தேவையான, கால்வாய்கள், மதகுகள், சாலைகள், கட்டடங்கள், மின்சாரம் ஆகிய பொது வசதிகளைச் செய்து கொடுக்கலாம். மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் முதலீட்டுச் செலவினை ஏற்கும். இறால் வளர்ப்பிற்குத் தேவையான பொருள்களுக்கான செலவில் இறால் வளர்ப்போருக்கு 25% மானியம் வழங்கப்படும், இச் செலவினையும் மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கும். மத்திய அரசின் இத்திட்டத்திற்கு மாநில அரசு இணக்கம் தெரிவித்து பழவேற்காடு, (செங்கை மாவட்டம்), வாலிநோக்கம் (இராமநாதபுரம் மாவட்டம்) முத்துப்பேட்டை (தஞ்சை மாவட்டம்) ஆகிய இடங்களில் மொத்தம் 300 ஹெக்டேர். உவர் நீர்ப் பரப்பில் இறால் பண்ணைகள் படிப்படியாக மூன்று வருடத்திற்குள் செயல்படும். இதற்காக மொத்தம் முதலீடு ரூ. 2.627 கோடியாகும். ரூ. 10 இலட்சம் இறால் குஞ்சு பொரிப்பகம் (Prawn Hatchery) நிறுவ பயன் படுத்தப்படும். செலவுத்தொகையில் ரூ. 113.57 இலட்சத்தினை மத்திய அரசும், ரூ. 149.10 இலட்சத்தினை மாநில அரசும் ஏற்கும். மூன்றாண்டு முடிவில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படும் போது 300 டன்கள் எடை





யுள்ள இறால் ஒரு வருடத்திற்கு கிடைக்க வாய்ப்புள்ளது. ஏற்றுமதியாகக் கூடிய இந்த இறால்களின் மூலம் ரூ 90 இலட்சம் கிடைப்பதுடன் இத்திட்டத்தின் மூலம் 300 குடும்பங்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 200 நபர்களுக்கு பகுதி நேர வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

இதைத் தவிர உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்/வங்காள விரிகுடாத் திட்டம் (F.A.D/B.O.B.P) கிள்ளை (தென் ஆர்க்காடு மாவட்டம்) பகுதியில் '82-'83 ஆண்டில் ரூ. 8 இலட்சம் செலவில் 'பென் கல்சர்' என்ற முறையில் பரீட்சார்த்தமாக 3 ஹெக்டேர் பரப்பில் இறால் வளர்ப்பினை மேற்கொள்ளும். இத்திட்டம் வெற்றி அடைந்தால் இம்முறை மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

காலப்போக்கில் கடலோரப் பகுதிகளிலுள்ள பொருத்தமான இடங்கள் இறால் வளர்ப்பிற்குக் கொண்டுவரப்பட்டு இப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தலா 5 ஹெக்டேர் பகுதியை நீண்ட நாள் குத்தகைக்கு அளித்து, வசதிகளை மாநில அரசு செய்து கொடுக்கலாம். இறால் வளர்ப்பு சம்பந்தமான தொழில் நுட்ப உதவிகளையும் இறால் குஞ்சுகளையும் அளிக்கும் பொறுப்பு மீன் துறையைச் சார்ந்ததாகும்.



இவ்வளர்ச்சித் திட்டத்தின் துவக்க நிலையில் இறால்களுக்காகும் தீவனச் செலவு, தண்ணீர் இறைப்பதற்காகும் சக்தி, மீன்பிடி உபகரணங்கள் போன்றவைகளுக்காகும் செலவில் ஊக்குவிப்புத் தொகை அளிக்கலாம். அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கடலோரத்தில் 1000 ஹெக்டேர் பரப்புள்ள பகுதி உவர் நீர் மீன் வளர்ப்பின் கீழ் கொண்டு வரலாம்.



# ஊராட்சி ஒன்றியங்களில் மகா கவி பாரதி விழா

"எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந்நாட்டு மக்கள்'' என்ற ஒருமைப்பாட்டு உணர்ச்சியை மக்களிடையே வலியுறுத்திய மகாகவி பாரதிக்கு நூற்றாண்டு விழா. தேசிய கவியாக மட்டுமின்றிச் சீர்திருத்தக் கருத்துக்களை இனிய தமிழ்க் கவிதைகளால் பாமர மக்களின் நெஞ்சில் புகுத்திய பாரதியின் கொள்கைகளைப்பரப்ப தமிழ் நாடெங்கும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் விழா நடத்தப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்ததற்கிணங்க நாள்தோறும் பாரதி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து மாதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விழாக்களைச் சாதாரண விழாவாக கொண்டாடாமல் அரசின் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் தொடங்கப்படுவதுடன் ஏழை எளிய மக்களுக்கு, விவசாயிகள் ஊனமுற்றோர், மகளிர், ஆகியோர்க்கு உறுதுணையளிக்கும் வகையில் கடனுதவிகளும் பயிற்சித் திட்டங்களும் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

அரசின் புதிய கட்டிடங்களுக்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நினைவுக்கட்டிடம் எனப் பெயரிடப்பட்டு வருகிறது.

## மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, பெரிய குளம், ரெட்டியார் சத்திரம், மதுரை மேற்கு, ஆத்தூர், சாணார்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் விழா செவ்வனே நடைபெற்றன.

## மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்

கள்ளந்திரி ஊராட்சியில் 9-1-82 அன்று விழா நடைபெற்றது. பள்ளிக் கட்டிடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டுத் திறக்கப்பட்டது. இவ்விழாவில் கறவை மாடுகள் வாங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கிய கடன்தொகை கிராம மக்களுக்கு வழங்கப்பட்டது. வசதியற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சிக் கொடுக்கப்பட்டு,மானிய உதவியுடன் தையல் மிஷின் வழங்கப்பட்டது. ஏழை எளிய மக்களுக்காக மானிய உதவியுடன் பொம்மைப் பயிற்சி நிலையம் ஒத்தக்கடையில் துவக்கப்பட்டது. இக்கிராமத்தில் பாரதியார் நூற்றாண்டு விழா குடியிருப்பில் வசித்து வரும் ஆதி திராவிடர்களுக்கு வானொலிப் பெட்டி அளிக்கப்பட்டது. இரு குழந்தைகளுக்கு பாரதி பெயர் சூட்டப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ மாணவிகளால் இசை நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

## பெரிய குளம்

23-1-82 அன்று விழா நடைபெற்றது. பொம்மி நாயக்கன் பட்டியில் ரூ. 60,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட நடுநிலைப் பள்ளிக்கூடத்திற்குப் பாரதியார் பெயரிடப்பட்டு மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப்பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி மாணவிகளின் பாஞ்சாலி சபதம் நாடகமும், பள்ளி மாணவிகளின் பாரதியார் நாடகமும், ஒயிலாட்டமும் நடைபெற்றன.

## ரெட்டியார் சத்திரம்

26-1-82 அன்று விழா சீரிய முறையில் கொண்டாடப்பட்டது.

தெள்ளூரில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 5.4.'82ல் நடைபெற்ற விழா



தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட பள்ளி திறக்கப்பட்டது. திருமால்நாயபுரம் ஆரம்பப்பள்ளி கட்டிடத்திற்குப் பாரதியார்பெயர் சூட்டப்பட்டது. மாணவ மாணவிகளுக்குப் போட்டிகள் நடத்தப் பெற்று 62 பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

**மதுரை மேற்கு**

கொடிமங்கலம் ஊராட்சியில் 2-2-'82 அன்று விழா செவ்வனே நடந்தேறியது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட புதிய பள்ளிக்கூடத்திற்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டிடம் எனப் பெயரிடப்பட்டது. மாணவ-மாணவிகள், மற்றும் கிராம மக்களுக்கு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

**ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

13-2-'82 அன்று விழா சிறப்புற நடைபெற்றது. ஏ. இராமநாதபுரத்தில் பாரதியார் நூற்றாண்டு விழா புதிய பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா செய்யப்பட்டது. சின்னாளப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய பாரதியார் நூற்றாண்டு பள்ளிக்கட்டிடக் கால்கோள்விழா மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் செய்யப்பட்டது. மாணவ மாணவியருக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. ஊனமுற்றோருக்கு ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 81 நபர்களுக்குக் கறவைமாடுகள் வாங்கக் கடன் வழங்கப்பட்டது. விழாவில் பட்டிமன்றமும், பாரதியின் பாட்டுக்கேற்ப நடன நிகழ்ச்சியும், கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. ஊரக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**சாணார்பட்டி**

பிப்ரவரி திங்கள் 23-ஆம் நாள் சிறந்த முறையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. பாரதியார் திருவுருவப்படந்தாங்கிய யானையுடன் ஊர்வலம் நடத்தப்பட்டது. மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும், வில்லுப் பாட்டும் இனிய நிகழ்ச்சிகளாக நடத்தப்பட்டன. வேம்பார்ப்பட்டி, கோபாலப்பட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட இரண்டு பள்ளிக்கூடங்களுக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பட்டது.





கும்பகோணம் (தஞ்சை மாவட்டம்) நகராட்சியில் 14.2.'82ல் நடைபெற்ற விழா

**வட ஆர்க்காடு மாவட்டம்**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் மே திங்கள் வரை திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி, பேரணாம்பட்டு, பெரணமல்லூர், காதிலி, குடியாத்தம், கே. வி. குப்பம், தண்டராம்பட்டு, ஆலங்காயம் அணைக்கட்டு, காட்பாடி, வேலூர், மாதனூர், ஆர்க்காடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பாரதி நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

4-1-'82 அன்று விழா நடைபெற்றது. விழாவில் சமுதாய மன்றம், ஆசிரியர் நகர் தொடங்கப் பெற்று பாரதியார் பெயரிடப்பட்டது. மாணவ மாணவியரிடையே பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, நடத்தப் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ மாணவியரால் நாடகங்கள், நாட்டியங்கள் நடத்தப்பட்டன. எக்கணம்பட்டியிலுள்ள நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட உள்ளது.

**நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்**

14-1-'82-ல் விழா நடத்தப்பட்டது. மாணவ- மாணவியருக்குப் பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சியுடன் விழா இனிதே நடைபெற்றது.

**பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்**

24-1-'82 அன்று பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திடலில் மகாகவி பாரதியார் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்று பரிசுகள்மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டன. கவின்மிகு கவியரங்கமும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கண்டு களித்தனர்.

**பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம்**

விழா 27-1-'82 அன்று நடைபெற்றது. விழாவில் கவியரங்கமும், பட்டிமன்றமும், கிராமியக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழாவில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், பால்வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கப் பெற்றன. ஆயில்வாடி, நடத்தோடு, இருச்சிமேடு, செபடாங்குளம், சோரைமங்கலம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு பாரதியார் பெயரிட முடிவு செய்யப்பட்டுள்ளது. மாணவ-மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பெற்றன. மாணவ-மாணவியரின்கலை நிகழ்ச்சிகளுடன் விழா செவ்வனே நடந்தேறியது.

**கந்திலி ஊராட்சி ஒன்றியம்**

4-2-82 அன்று விழா நடத்தப்பட்டது. விழாவில் களரபதி கிராமத்தில் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பள்ளிக்கூடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. பட்டிமன்றமும், மாணவ - மாணவியர்க்குப்பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டிகளும் நடத்தப்பெற்றன. மாணவியர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

**குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம்**

14-2-'82-ல் விழா ஓர்த்தாங்கல் நடுநிலைப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. வி. ராமாபுரம் பள்ளிக்கட்டிடம், சாண்டிபுரம் மேநீர்த்தேக்கத்தொட்டி மற்றும் பெரும்பாடி மேநீர் தேக்கத் தொட்டி ஆகியவைகளுக்குப் பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டிடம் எனப் பெயர் சூட்டப்பட்டது. பள்ளி மாணவ— மாணவியருக்குப் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. பாரதியார் கலைநிகழ்ச்சியும், பாரதியார் வரலாற்று நாடகமும் நடைபெற்றன.

**கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியம்**

விழா 24-2-'82 அன்று கீழ் வழித்துணையாள் குப்பத்தில் நடைபெற்றது. மகமதுபுரத்தில் கட்டப்பட்ட பள்ளிக்கட்டிடத்திற்கும், கொத்தமங்கலம் கிராமத்தில் போடப்பட்ட கப்பிச் சாலைக்கும், அன்னங்குடியில் உள்ள பாலத்திற்கும் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. விழாவில் காட்பாடி சட்டமன்ற உறுப்பினரும், அரசு அலுவலர்களும், புலவர் பெருமக்களும்பங்கேற்றுச் சிறப்பித்தனர். கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம்**

27-2-'82-ல் விழா. டி. கிருஷ்ணபுரம் மற்றும் அகரம் என்னும் இரு கிராமங்களில் கொண்டாடப்பட்டது. டி. கிருஷ்ணபுரம் மற்றும் அகரம் ஆகிய பள்ளிக்கூடங்களுக்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவுப் பள்ளிக்கூடம் என்று பெயர் சூட்டப்பட்டது. மேல்நிலை, உயர் நிலைப்பள்ளி மாணவ -மாணவியருக்குப் பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப் பட்டன. பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

**ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்**

4-3-'82-ல் விழா நடைபெற்றது. மாணவ-மாணவியருக்குப்பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியன நடத்தப்பட்டன. பாரதியார் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும்-நடனம், கும்மி, கோலாட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்**

15-3-'82 அன்று விழா சிறப்புற நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு கட்டி முடிக்கப்பட்ட துவக்கப்பள்ளிக்கூடத்துக்குப் பாரதியார் பெயர் சூட்டித் திறந்து வைத்தார். மாணவ-மாணவியருக்குப்பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, இசைப் போட்டி நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், 'பாரதி கண்ட சமுதாயம்' என்ற நாடகமும் நடைபெற்றது.



ஆர். எஸ். மங்கலத்தில் (இராமநாதபுர மாவட்டம்) நடைபெற்ற விழா

**காட்பாடி**

காட்பாடி அரசினர் மேல் நிலைப்பள்ளியின் திறந்தவெளி அரங்கில் விழா 24-3-'82 அன்று நடைபெற்றது. விழாக்காலத்தில் மேல்வடுகள், குட்டை, கார் விம்பட்டு, அருப்புமேடு, ஒட்டந்தாங்கல் ஆகிய இடங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. பள்ளி-கல்லூரி மாணவ-மாணவியருக்குப் பாட்டு பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ -மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா முடிவுற்றது.

**வேலூர் ஊராட்சி ஒன்றியம்**

5-4-'82 அன்று விழா கொண்டாடப்பட்டது. சேக்கனூர் துவக்கப்பள்ளிக்கட்டிடத்திற்குப்பாரதியார் பெயரிடப்பட்டது. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப்போட்டி, நடத்தப்பெற்று மாணவ-மாணவியருக்குப் பாரதியார் பற்றிய புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. மாணவ-மாணவிகள் கலை நிகழ்ச்சிகளோடு விழா இனிதே முடிவுற்றது.

13-4-82 அன்று விழா நடைபெற்றது. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்தார்கள். கதிதம்பாக்கம் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம், திருமலைக்குப்பம் நடுநிலைப்பள்ளிக்கட்டிடம். ஊராட்சி அலுவலகக் கட்டிடம், மாதனூர் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் ஆகியவற்றிற்குப் பாரதியார் நூற்றாண்டுவிழா நினைவுக் கட்டிடம் எனப் பெயரிடப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாணவ-மாணவியருக்குப் பேச்சு, பாட்டுமற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் அளிக்கப்பட்டன. நடனம், கோலாட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பட்டன.

**ஆர்க்காடு ஊராட்சி ஒன்றியம்**

ஆர்க்காட்டில் 24-4-'82ல் விழா நடைபெற்றது. இலப்பைப்

பேட்டை துவக்கப்பள்ளி புதுக் கட்டிடத்திற்குப் பாரதியார் பெயரிடப்பட்டது. மாணவ - மாணயருக்குப் பேச்சு, கட்டுரை கவிதை, இசைப்போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவ-மாணவிகளினால், பள்ளிகளிலும், விழாவிலும், தாய்மொழியின் சிறப்பு, சாதி ஒழிப்பு, விதவைகள் மறுமணம், பெண்கள் விடுதலை, ஒருமைப்பாடு ஆகியவைகள் குறித்து ஓரங்க நாடகங்கள் நடத்தப்பட்டன. காட்பாடி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

## கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் மே திங்கள்வரை உடுமலைப்பேட்டை, வால்பாறை, சுல்தான்பேட்டை, அவிநாசி, திருப்பூர், அன்னூர், சூலூர், காரமடை, பொங்கலூர், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களிலும் பொள்ளாச்சி நகராட்சியிலும் பாரதி நூற்றாண்டுவிழா சிறப்புறக்கொண்டாடப்பட்டது. இவ்விழாக்களில் பாரதி நூற்றாண்டு நினைவாகக் கீழ்க்கண்ட கட்டிடங்களுக்குப் பாரதியின் பெயர் சூட்டப்பட்டன. போடிப்பட்டி கூடுதல் பள்ளிக் கட்டிடத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொள்ளாச்சி நகரமன்றஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கட்டிடத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும்திறந்துவைத்தார்கள். அவிநாசியில் கட்டப்பட்ட துவக்கப்பள்ளிக்கூடம், பொம்மநாயக்கன்பாளையத்தில் ஒரு பள்ளிக் கட்டிடம் சூலூரில் இரண்டு பள்ளிக் கூடுதல் கட்டிடம் சிறுமுகை புதூர் கூடுதல் பள்ளிக் கட்டிடம் ஆகியவைகளுக்கும் பாரதியார் பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. விழாக்களில் நடைபெற்ற பட்டிமன்றம் கருத்தரங்கம், கவியரங்கம், சிறப்புக்கூட்டம் ஆகியவற்றில் தமிழறிஞர்கள், கவிஞர்கள், அரசியல் விற்பன்னர்கள் கலந்து கொண்டு பாரதி கருத்துக்களை முழங்கினர். மாணவ - மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, இசைப்போட்டி, நாடகப் போட்டி, ஆகியவை நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழா நடைபெறும் இடங்களில் பாரதி வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் கண் காட்சிகளும் நடத்தப்பட்டன. அனைத்து விழாக்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டம்

### திருவையாறு ஊராட்சி ஒன்றியம்

திருவையாற்றில் 12-1-'82 அன்று விழா நடத்தப்பட்டது. கண்டியூர் பள்ளிக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் சிறப்புற நடைபெற்றது. விழாவில் பட்டிமன்றம், நாட்டிய நாடகம், நாதசுர இன்னிசை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சியில் 14-2-82 அன்று பாரதி விழா சிறப்புற நடைபெற்றது. மூன்று சாலைகள் சந்திக்கும் இடத்திலுள்ள மையப் பூங்காவிற்குப் பாரதியார் நூற்றாண்டு விழா நினைவுச் சதுக்கம் எனப் பெயரிடப்பட்டது. பாரதியார் பற்றிய கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, பட்டிமன்றம், இசைப்போட்டி, கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## கன்னியாகுமரி மாவட்டம்

### தோவாளை ஊராட்சி ஒன்றியம்

4-2-'82 அன்று விழா நடத்தப்பட்டது. ஆரல்வாய்மொழி பேரூராட்சி பூங்கா திடலிலுள்ள கலையரங்கத்திற்குப் பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கலையரங்கம் எனப் பெயரிடப்பட்டது. பள்ளி மாணவ-மாணவிகளுக்குப்பேச்சுப் போட்டி, கவிதை, கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டன. பாரதியாரின் கொள்கைகளைப் பற்றிய கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

## திருநெல்வேலி மாவட்டம்

### ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்

நெட்டூர் கிராமத்தில் விழா 15-2-'82 அன்றுநடத்தப் பட்டது. மாணவ,மாணவிகளுக்குப்பேச்சுப் போட்டி நடத்தப்பெற்று,பரிசுகள் வழங்கப்பட்டன. பாரதி பற்றிய வில்லிசை நடைபெற்றது. தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

### சேரன் மகாதேவி ஊராட்சி ஒன்றியம்

25-2-'82 அன்று விழா நடைபெற்றது. மாணவ-மாணவிகளால் கலைநிகழ்ச்சி பாஞ்சாலி சபதம் ஓரங்க நாடகம், இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை நடத்தப்பட்டன. கிராமமெங்கும் பாரதி பொன்மொழிகள் கொண்ட வளைவுகள் அமைக்கப்பட்டன. பிராஞ்சேரி, கூனியூர் வானொலி கட்டிடங்கள், மேலச்செவல் கிராமத்தில் மருந்தகக் கட்டிடம் ஆகியவற்றிற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. மாணவ மாணவியருக்குப்பேச்சுப்போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகளோடு விழா இனிதே நடந்தேறியது.

## நீலகிரி மாவட்டம்

உதகை ஊராட்சி ஒன்றியத்தில் 25-4-'82-ம் நாளன்று பாரதி நூற்றாண்டு விழா சிறப்புற நடந்தேறியது. விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு அவர்கள் கலந்துகொண்டு பாரதியார் நூற்றாண்டு நினைவு பள்ளிக் கட்டிடந்தைத் திறந்து வைந்தார். தூனேரி. ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கு பாரதியார் பெயரிடப்பட்டது. பாரதியார் திருவுருவப் படத்தைச் சட்ட மேலவை உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் அவர்கள் திறந்து வைத்தார். விழாத் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. உச்சிகவுடர் தலைமையுரையாற்றினார். மாணவ—மாணவியருக்காக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவைகளில் வெற்றி பெற்றோர்க்குப்பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ-மாணவியரின் கலைநிகழ்ச்சியோடு விழா இனிதே முடிவுற்றது. விழாவில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.



நம் நாட்டில் மக்கள் எல்லாவற்றையும் படித்துத் தெரிந்து கொள்வார்கள் என்றிருந்தால் அது இயலாத காரியம். கண்ணால் கண்டு, கேள்விகள் கேட்டு விளக்கங்களைப் பெறும் கண்காட்சியின் மூலம்தான் நம் நாட்டு மக்களுக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்த முடியும்.

—பேறிஞர் அண்ணா



டாக்டர் பி. பி. ராஜன் எம்.டி.எஸ்.
முதல்வர்: சென்னை பல் மருத்துவக் கல்லூரி.

# சமுதாயப் பல் மருத்துவத் தொண்டு

மனிதன் தோன்றிய காலந்தொட்டே அவனைப் பாகுபாடின்றித் தாக்கும் நோய்களும் வருகின்றன. உடலின் ஒவ்வொரு உறுப்பும் நோய்க்குப் பலியாகித் தொல்லைகள் கொடுப்பது நாம் கண்டறிந்த உண்மை.

வாயிலும் பற்களிலும் ஏற்படுகின்ற நோய்கள் கடுமையான பல்வலி, வாய் எரிச்சல், ஈறுகளில் ரத்தம் வருதல், கன்னங்களில் வீக்கம் போன்ற தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே வரும். மேலும் வாய் திறவாமை, தொண்டை விழுங்காமை, நாக்கு நீளாமை போன்ற தொல்லைகளால் உட்கொள்ள முடியாமலும், உச்சரிப்பு தடைப்பட்டு சரிவரப்பேச முடியாமலும், கஷ்டப்படுவதும் உண்டு. சொத்தையால் பழுதடைந்த பற்களிலும் ஈறுகளிலும் கிருமிகளின் தாக்குதலால் சீழ்கட்டிகள் தோன்றி, அந்தச்சீழ் இரத்தத்தின் வழியாக உடலெங்கும் பரவி, இதய நோய், சிறுநீரக நோய், மூட்டு நோய் ஆகிய நோய்களை உடலின் மற்ற பாகங்களில் உண்டாக்கும். பாதிக்கப்பட்ட பற்களிலும் ஈறுகளிலும் நச்சுப் பொருட்சள் தங்கி, வெறுக்கத் தக்க வாய் துர்நாற்றத்தைக் கொடுப்பதோடு, அந்த நச்சுப் பொருட்கள் உண்ணுகின்ற உணவுடன் கலந்து உணவு மண்டலத்தில் நுழைந்து, இரைப்பையிலும் குடலிலும் நோய்களை உண்டாக்கும். அத்துடன் தாங்கமுடியாத வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு ஆகிய தொல்லைகளையும் கொடுக்கும். வாயிலும் பற்களிலும் ஏற்படுகின்ற நோய்கள் உடல் நலத்தைப் பாதிப்பதால் உடல் நலம் பேணும் மருத்துவத் துறையில், பல் மருத்துவத்துறை வளம் பெற்று பற்களில் நோய் வராமல் தடுக்கவும், வந்த நோய்களைக் குணப்படுத்தவும் மக்களுக்குப் பல் மருத்துவர்கள் நற்பணி புரிந்து வருகின்றனர்.

சென்னை பல் மருத்துவக் கல்லூரியில், சிறப்புக்குரிய தகுதியும் சிறந்த அனுபவமும் பெற்ற மருத்துவர்கள் பல்வேறு துறைகளின் மூலம் செவ்வனே பல் மருத்துவத் தொண்டு புரிந்து வருகின்றனர். வாயிலும் பற்களிலும் தோன்றுகின்ற பல்வேறு நோய்களை, அறிவியல் முறைப்படிக் கண்டறிந்து, மருத்துவச் சிகிச்சை அளிப்பது, பழுதடைந்த பற்களைப் பக்குவமாய் எடுத்தெறிவது, பாழ்பட்ட பற்களைச் செப்பனிடுவது, வரிசையிலே குலைந்த பற்களைச் சீராக்குவது, இழந்த பற்களுக்குச் செயற்கைப் பல்பொருத்துவது, ஈறுகளை வளமுடன் காப்பது, நோய்களைத் தடுக்கும் முறைகளை மக்களுக்கு எடுத்து விளக்குவது ஆகிய நற்பணிகளில் நாள்தோறும் ஈடுபட்டு, மருத்துவர்களும் மருத்துவமனை ஊழியர்களும் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றனர்.

நாகரீக உலகில் ஏறுநடை போடும் நகரத்து மக்கள் இந்த நல்லதொண்டுகளைப் பெறுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாலும், நமது கடமை முடிந்துவிட்டதாகக் கருதக் கூடாது. அக நாகரீகத்தில் மேம்படு சிறப்பினைப் பெற்று, ஏர் முனையிலே பார் எனும் தத்துவப்படி நாளெல்லாம் நாட்டுக்காக உழைத்துவரும், உத்தமர்களாகிய கிராம மக்களுக்கு இந்த நவீன வைத்திய முறைகள் பயன்படவில்லையே என்பதை நினைக்கும்பொழுது உண்மையிலேயே நாம் வருத்தப்படவேண்டும்.

கிராம மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளைத் தீரஆராய்ந்து அவர் தம் வாழ்வு மலர சீரிய திட்டங்களைச் செவ்வனே தீட்டி கிராமங்களில் ஒரு மறுமலர்ச்சியையுண்டு பண்ண நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரும்பாடுபட்டுவருவதுநாடறிந்த உண்மை. அரசின்இவ்வரிய திட்டத்திற்குத் துணை புரியும் வண்ணம் சென்னை பல் மருத்துவக் கல்லூரி கிராமங்களுக்கென்று தனிப்பட்ட முறையில் பல் மருத்துவத் தொண்டு புரிய "சமுதாயப் பல் நலப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி மருத்துவர்களும் மாணவர்களும் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று



புகைபிடிக்கும் கிராமவாசிக்குப் புற்றுநோய் இருக்கிறதா என்று பரிசோதிக்கப்படுகிறது.

ஆங்காங்கு பல மருத்துவ முகாமிட்டு பல் பரிசோதனை செய்வதோடு, பல் வைத்தியத்தையும் அந்த முகாமிலேயே செய்துவருகின்றனர்.

*1981-'82* ஆம் ஆண்டில் 59 பல் மருத்துவ முகாம்கள் நடத்தி 61,223 பேர்களுக்குப் பல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. 2735 பேர்களுக்கு முகாமிலேயே பற்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2694 பேர்களுக்குப் பற்களில் உள்ள சொத்தை போக்கி அடைப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. 2528 பேர்களுக்குப் பற்களில் உள்ள காரைகளைச் சுத்தம் செய்து மருந்திடப்பட்டிருக்கிறது. மற்றும் செயற்கைப்பல் கட்டுதல், பல் சீரமைப்பு ஆகிய வைத்திய முறைகள் செய்யப் பட்டிருக்கிறது. பணி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பல் மருத்துவமுகாம்களில் கண்டறிந்த செய்திகள் பலப்பல. கிராம மக்களில் 93% இன்னும் மண், மணல், சாம்பல் கரிப் பொடி, செங்கல் பொடி ஆகியவைகளை உபயோகித்துப் பற்களைத் துலக்கி வருகின்றனர். அவர்களுடைய பற்களெல்லாம் பழுதடைந்து, உருமாறி, நிறம் மாறி, பொலிவிழந்து காணப்படுகின்றன. பல் துலக்குவதைப் பற்றிக் கவலைப் படாதுகாலங்கழிப்போரும் உண்டு. ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்ற பழமொழிக்கிணங்க, கிராம மக்களில் சிலர், ஆலங்குச்சியையும் வேப்பங்குச்சியையும் உபயோகித்து வந்தாலும் இன்னும் சிலர் மாங்குச்சி, சவுக்குக் குச்சி ஆகியவைகளால் பல் துலக்கி வருகிறார்கள். பல் வலி வந்தவர்களுக்கு லவங்க எண்ணெய் வைப்பதும் மண்ணெண்ணெய் தடவுவதும் சுண்ணாம்பை வைத்து அழுத்துவதும், சுக்கை அரைத்துப் போடுவதும் கை வைத்தியங்களாகக் காணப்படுகின்றன. இவைகளை உபயோகிப்பதால் வாயில் ரணம் ஏற்பட்டு வேதனைப்படுவோர்கள் பலருண்டு. உண்மை தெரியாமல் இது ஆண்டவனின் சோதனை என்று அலுத்துக் கொள்வோரும் உண்டு. பல் மருத்துவ முகாமில் கிராம மக்களை ஒன்று திரட்டி இதுபோன்ற பழக்கங்களினால் ஏற்படும் தீமைகளை தெளிவுபடுத்தி அவைகளைத் தவிர்க்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. முகாமில் வாய், பல் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு வியாதிகளின், கொடுமைகளை விளக்கி. நோயைக் குணப்படுத்த தக்க மருந்துகளைக் கொடுத்து, அந்த நோய்கள் வராமல் தடுக்கவேண்டிய வழி முறைகளையும் எடுத்துச் சொல்லி, மருத்துவர்கள் தொண்டு புரிந்து வருகின்றனர்.

சொத்தைப் பற்களாலும், உடைந்த பற்களாலும் பல நாட்கள் பல்வலியால் வேதனைப் பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அந்த முகாமிலேயே பழுதடைந்த பற்களைப் பக்குவமாய் மரப்பு மருந்து கொடுத்து வலியில்லாமல் எடுத்து அவர்களின் வேதனை நீக்கப்படுகிறது.

பல்நோய்களில் பெருமளவுக்குக் காணப்படும் நோய் பற்சொத்தை. முகாமிற்கு எடுத்துச் செல்லும் இயந்திரங்களின் உதவியால், பற்களில் ஏற்பட்டிருக்கும் ஆரம்பக் கால சொத்தையை அகற்றி, அடைப்பு மருந்துகளால் அடைத்து, பழுதடைந்த பற்கள் செப்பனிடப்படுகின்றன.

பற்களைச் சுற்றிப் படிந்துள்ள அழுக்குகளும், காரைகளும், ஈறுகளைத் தாக்கி, ஈறுகளில் ரத்தம் கசிந்து வாய்த் துர்நாற்றம் ஏற்படுவதுண்டு. இப்படிப்பட்ட நோய்களில் வாடுபவர்களுக்குப் பல் மருத்துவ முகாமிலேயே பற்களைச் சுத்தம் செய்து, ஈறுகளுக்கு மருந்திட்டு அவர்களின் வாய் நலம் பாதுகாக்கப்படுகிறது.

கொடுமையான நோய்களில் ஒன்றுதான், புற்று நோய். கூரான பற்களால் ஏற்படும் ஆறாத புண்களும், அளவுக்கு மீறிப் புகை பிடிப்பதால் ஏற்படும் வெண்படைகளும், அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் புகையிலையால் ஏற்படும் ரணமும் புற்றுநோயை வரவழைக்கும் என்பது அறிவியல் கண்ட உண்மை. முகாம்களில் நடத்திய பரிசோதனையில் இது போன்ற புற்று நோயின் முன் குறிகளைக் கண்டுபிடித்து அதன் விளைவுகளைக் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லி, புகைபிடிப்பதையும், புகையிலை போடுவதையும் தடுத்து நிறுத்துவதோடு, அந்நோய்களில் தாக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துவந்து, நோயைக் குணப்படுத்தி, புற்றுநோய்த் தடுப்பு முறையில் இத்தகைய முகாம்கள் பெரும்பங்கு கொள்கின்றன.

பழுதடைந்த பல்லை நீக்க மரப்பு மருந்து கொடுக்கப்படுகிறது.

வலியில்லாமல் பல் நீக்கப்படுகிறது.





பற்சொத்தை இயந்திரத்தால் பக்குவமாய் எடுக்கப்படுகிறது.



சொத்தையை எடுத்தபின் பற்களில் அடைப்பு மருந்துகள் வைக்கப்படுகின்றன

கிராம மக்களில் ஒரு சிலர் பற்களை இழந்து, உண்ணும்உணவை அரைக்க முடியாமலும், ஓசை நயம் படப் பேச முடியாமலும் தவித்து வருகின்றனர். அவர்களில் சிலரைப் பல்மருத்துவ மனைக்கு கொண்டுவந்து, செயற்கைப் பல் பொருத்தி, பல் இழந்தோர் சொல் இழந்தோர் என்று பழிக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்படுகின்றனர். பழக்க வழக்கங்களாலும், பல்வேறு பாரம்பரியக் காரணங்களாலும், மாறுபட்ட தாடை வளர்ச்சி உடையவர்களும், நிலைமாறி அலங்கோலமானபல் வரிசைஉள்ள ஒரு சிலருக்கும் மருத்துவ மனையில் நவீன முறைப்படி கம்பிகள் வைத்துக் கட்டி, அலங்கோலப் பற்களை அலங்காரப் பற்களாக மாற்றி அவர்தம் குறைகள் போக்கப்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் கல்வியாளர்கள் பெருகியிருந்தும், சீர்திருத்தவாதிகள் சிறந்த முறையில் பணிபுரிந்தும், மூடப்பழக்க வழக்கங்களுக்கு இன்னும் கிராமங்களில் முடிவுகட்டவில்லை. அம் மூடப்பழக்க வழக்கங்கள் பல் மருத்துவத்திலும் படமெடுத்தாடுவதைக் காணும்போது வேதனையாக இருக்கிறது. ஒரு கிராமத்தில் 20 வயது இளமங்கை ஒருத்திக்கு கன்னத்தில்ஒருதழும்பு இருப்பதைக் கண்டபோது, காரணம் கேட்கப்பட்டது. மங்கையவள் மன வேதனையுடன் சொன்னாள்: ''எனக்கு ஞானப்பல்

இலவச பல் மருத்துவ முகாமில் கிராம மக்கள்






முளைக்கும்போது கன்னம் வீங்கி பல்வலி ஏற்பட்டது, அப்போது பக்கத்து வீட்டுப்பாட்டி, பழுக்கக் காய்ச்சிய இரும்பை என் கன்னத்தில் வைத்துச் சுட்டாள். வீக்கமுடன் பெரிய ரணம் ஏற்பட்டு வேதனைப்பட்டேன். வெந்த இடம் ஆறிவரும்போது இந்தத் தழும்பு வந்தது'' என்றாள். பல் வலிக்கு பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஒரு மருந்து! நெஞ்சு கலங்குகிறது. விழிகள்ல் நீர் பெருகுகிறதுகுடிசையில் வாழும் ஒரு பாம்பு வைத்தியன். அவன் பச்சிலையை பல்லில் வைத்து பல் எடுக்கிறானாம். வலி வரும்போது சாவறுக் கயிற்றைத் தாடையில் கட்டுகிறானாம். பல்வலிக்குப் பார்வை பார்ப்பதும், மந்திரங்கள் ஓதுவதும், தாயத்துகள் கட்டுவதும் பழக்கங்களாக கிராம மக்களிடம் இருந்து வருகின்றன. கிராம மக்களின் மன நிலைக்குத் தக்கவாறு மூடப் பழக்க வழக்கங்களால் ஏற்படும் தீமைகள் பல் மருத்துவ முகாமில் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது.

சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் சமுதாய பல் நலப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆற்றிவரும் நற்பணிகள் கிராம மக்களுக்கு, மட்டுமல்லாமல், நகரத்தில் வாழும் ஏழை, எளியவர்களுக்கும், மாநகராட்சி பள்ளிச் சிறுவர்களுக்கும், குடிசை வாழ் மக்களுக்கும் பயன்பட்டு வருகிறது. சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வரை அணுகினால், எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும், பல் மருத்துவ முகாமிட்டு பல் மருத்துவத் தொண்டாற்ற உடனடியாக ஆவன செய்யப்படும். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் பற்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாததே பல்நோய்களுக்குக் காரணம் என்பது. அறிவியல் ஆராய்ச்சியாலும் பேரறிஞர்களின் அனுபவத்தாலும், பல் மருத்துவ முகாம்களின் குறிப்புகளாலும் கண்டறிந்த மாபெரும் உண்மை.

இருமுறை பல்துலக்கினால் ஒரு முறையும் பல் மருத்துவரிடம் செல்லவேண்டாம் என்று மருத்துவர்கள் விளக்கம் சொன்னாலும், கிராமங்களில் ஒரு முறைகூட பல் துலக்காமல் இருப்பவர்களும், பல் துலக்குவதற்குப் பல் பொடியைத் தவிர மற்றப்பொருட்களை உபயோகிப்பவர்களும் ஏராளமாக இருக்கின்றனர். அவர்களுடைய பற்களில் பல்வேறு நோய்கள் தோன்றி, உடலில் பரவி, உடல் நலம் பாதிக்கப்பட்டு, வாடுகிறார்கள். இந்தக் கொடுமைகளை அகற்றி, ஒவ்வொருவரும் சுத்தமான பற்களோடு இருக்க வேண்டும் என்றும், அதன் மூலம் உடல் நலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும், பரந்த எண்ணமுடன் தமிழக முதல்வர் கிராம மக்களுக்கு இலவசப் பல்பொடி வழங்கும் திட்டத்தைத் தீட்டி செயல்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். இத்திட்டம் உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான திட்டம்.

பல்நலம் காப்பதன் அடிப்படைத் தத்துவமான பல் துலக்கும் முறை, அதுவும் அறிவியல் முறைப்படி தயாரித்த பல் பொடியால் பல் துலக்குவது சாலச் சிறந்தது. இதை நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டும். இத்திட்டத்தால் ஆயிரமாயிரம் ஏழை கிராம மக்கள் தங்கள் பற்களைப் பாதுகாக்கும் வாய்ப்பினைப் பெறுவதோடு பல்வேறு நோய்களின் பிடியிலிருந்து விடுபட்டு ஒரு நல் வாழ்வினைப் பெற்று, நலமோடு வாழ ஏதுவாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, நோயற்ற ஒரு சமுதாயத்தைக் கிராமங்களிடம் உருவாக்க இந்த இலவசப் பல் பொடி வழங்கும் திட்டமும் உதவும் என்பது உண்மை. கிராம மக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தால் பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்






# வெள்ளிவிழாக் கண்ட காதி பவனம்!

ஜி. ஆனந்தன்

'காதி கிராமோத்யோக்பவன்' வெள்ளிவிழா, சென்னை அவ்வை சண்முகம் சாலையிலுள்ள 'காதி கிராமோத் யோக் பவன்' வளாகத்தில், 14-6-82 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

வெள்ளி விழாவிக்கு அனைத் திந்தியக் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுத் தலைவர் திரு ஏ. எம். தாமஸ் அவர்கள் தலைமை வகித்தார்:

**மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்**

''விழாவை மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறைஅமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

'காந்தியடிகள் வகுத்த கொள்கையின் அடிப்படையில் கிராமத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் அக்கறை காட்டி வருகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரிதும் கிராமப்புறப் பொருளாதாரத்தை, அடிப்படையாகக் கொண்டது. இந்தக் 'காதி கிராமோத்யோக் பவன்' சிறப்போடு செயல்பட்டு வருகிறது. மற்ற நிறுவனங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் திகழ்கிறது.''

வெள்ளி விழாவையொட்டி கதர்-கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பொருட்காட்சியை, மாண்புமிகு கதர்- மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார். அவர் தமது உரையில்—

''காதி கிராமோத்யோக் பவன்' சிறப்பாகச் செயல்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். கதர் என்றால் ஒரு குறிப்பிட்ட கட்சியினருக்கும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்குமே உரியது என்ற நிலை இன்று மாறியுள்ளது. கதரின் மகிமையை எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. கதர்த்துறை சிறப்பாக வளர மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அதிக அக்கறை காட்டிக் காரிய மாற்றி வருகிறார்கள்.

''இந்த ஆண்டு கதர்த் துணி 6 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகியுள்ளது. கதர்த் துணி விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதேபோல பட்டுத் துணிக்கும் நமது நாட்டில் மட்டுமின்றி மேலை நாடுகளிலும் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணிகளை வெளிநாடுகளுக்கு



‚விரைவில் அனுப்பி வைக்க இருக்கிறது தமிழக அரசு'' என்றார்.

**மலர் வெளியீடு!**

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் மாண்புமிகு கதர்-மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். ராஜேந்திரன் அவர்களும் வெள்ளி விழாவையொட்டி அமைக்கப்பட்ட பொருட்காட்சியைப் பார்வையிட்டனர்.

மாண்புமிகு ஆந்திர கதர்த் துறை அமைச்சர் திரு. எம். மாணிக்கராவ் நரேந்திரதுபே, 'காதி கிராமோத்யோக்பவன்' செயலாளர் திரு. டி. வி. மல்லையா, பொருளாளர் திரு. சி. பி. வி. ராகவலு, 'சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. கே. கரியாலி, 'காதி கிராமோத்யோக்பவன்' சங்க அறங்காவலரும், மக்கள் தொடர்பு அலுவலருமான திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உரையாற்றினார்கள்.

விழா மலரை திரு அருணாசலம் எம். எல். சி. வெளியிட்டார். மலரைத் தயாரித்த திரு ஆ. சுகுமாறனுக்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார். திரு. எம். எஸ். அனந்தராம் நன்றி கூறினார்.

**காந்தி வாழ்க்கை வரலாற்றுக் கண்காட்சி**

வெள்ளி விழா அரங்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ''மகாத்மா காந்தியடிகள்'' வாழ்க்கை வரலாற்றைச்சித்திரிக்கும் படத்தொகுப்பு இடம் பெற்று இருக்கின்றது. புகைப் படங்கள் மட்டுமின்றி, காந்தி வரலாற்றைக் குறிக்கும் சிலைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடத்தைப் பார்த்தால் சென்னை அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 'காந்தி இல்லம்' நமக்கு நினைவுக்கு வருகிறது. அந்த அளவுக்குக் காந்தியடிகளின் வரலாற்றுப் படங்கள்,பார்ப்போர் மனத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது.

பொருட்காட்சி அரங்கில் ஒவ்வொரு குடும்பத்திற்குத் தேவையான சமையல் பண்டங்களும், காந்தி கிராமோத்யோக் பவனில் தயாரிக்கப்பட்ட 'பாலிவஸ்திரா' துணி வகைகளையும், கதர்வாரியம் தயாரித்துள்ள வாசனைச் சலவை சோப்பு வகைகளும், கிராமத் தொழில்களில் தயாரிக்கும் பொருள்களும், பனை மரத்தினால் செய்யப்பட்ட-பயன்படும் 32 வகையான பொருள்களும் இடம் பெற்றிருந்தன.

**மருத்துவத்தின் சிறப்பு**

மனித உயிர்வாழத் தேவையான சித்த-ஆயுர் வேத மருத்துவத்தின் சிறப்பை விளக்கும் அரங்கும் பொருட்காட்சி மைதானத்தில் இடம் பெற்றன. திண்டுக்கல் சிறுமலைப் பகுதிகளில் திரட்டப்பட்ட மூலிகையால் தயாரிக்கப்பட்ட மருந்து வகைகளை டாக்டர் கொண்டல்ராவ் அவர்கள் விவரித்துக் கொண்டிருந்தார்.

காந்திகிராமம் லட்சுமி சேவா சங்கத்தினர் அமைத்துள்ள இந்த சித்த-ஆயுர்வேத மருத்துவத்தின் சிறப்பை கடந்த 35 ஆண்டுகளாக மக்களுக்குப் பயன்படும் வகையில் நடத்தி வருகிறார் டாக்டர் கொண்டல்ராவ்.

வெள்ளிவிழாவைக் கண்ட காதி கிராமோத் யோக்பவன், இதனைத் தொடர்ந்து பொன் விழாவையும், வைர விழாவையும் காண நாமும் வாழ்த்துவோம்



கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்களுக்கு நாம் உலக அறிவை ஊட்ட வில்லையென்றால் அது நாட்டை வாழ வைக்காது; வளர வைக்காது.

—பேரறிஞர் அண்ணா

# பொலிவு பெறும் பெரியார் மாவட்டம்

**என். தில்லை கோவிந்தன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், (தகவல்)**
**பெரியார் மாவட்டம்,**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் அண்ணாவின் அரசு காட்டிவரும் அக்கறையால் பல்வேறு ஆக்கப்பணிகள் விரைந்து செயல்பட்டு வருகின்றன.

தந்தை பெரியார் அவர்களின் பெயரால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த 'மாவட்டம், தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கி மூன்று ஆண்டுகள் கூட முடியவில்லை. எனினும் அரசின் தனிக் கவனம் பெற்றமையால் பெரியார் மாவட்டம், குறிப்பாக அதன் தலைநகரமாம் ஈரோடு இன்றைக்குப் பல்வேறு நலன்களைப் பெற்று வருகின்றது.

ரூபாய் 2 கோடி செலவில் எட்டு அடுக்குக் கொண்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், கருவூலமும் உருவாகி வருகின்றன.

குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 2.93 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

ரூ. 3 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டமும் தீட்டப்பட்டுள்ளது.

நகரின் மையப் பகுதியான மணிக்கூண்டைச் சுற்றிலும் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காதவாறு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 480 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆயிரம் வீடுகள் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகமும், காவலர் குடியிருப்பும் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த10-11-'81 ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஈரோடு நகரை அழகு படுத்திட, வ. உ. சி. பூங்காவை மக்கள் மனம் நிறைவு கொள்ளத் தக்க வகையில் பயனுள்ளதாக மாற்றி அமைத்திட, பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு மிகுந்த விரைவில் செயல்பட்டு வருகின்றன. தந்தை பெரியார் அவர்களால் கட்டப்பெற்று, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் திறக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி புதிய வண்ணம் தீட்டப் பெற்று, ஒரு கோட்டையைப்போல் காட்சியளிக்கின்றது!

வெடித்துச் சிதறிய முத்துக்கள் போல்!

வெண்பனித் துளிகள் போல்!

இரவு நேரங்களில் குடிநீர்த் தொட்டியையும், மரங்களையும் அழகு செய்திடும் மின்விளக்குகள்!

இரவு வேளையில் மின்னொளியில் கைப்பந்தாட புதிய மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. அழகிய நீச்சல் குளம், மாவட்ட மைய நூலகம், திறந்த வெளிச் சிற்றுண்டிச் சாலை அமைக்கப்படவிருக்கின்றன.

எட்டு மாடிகளுடனும், லிப்ட் வசதிகளுடனும் ரூ. 2 கோடி செலவில் ஈரோட்டில் உருவாகி வரும் பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்.





ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் மழைக்காலத்தில தேங்கும் தண்ணீரை வெளியேற்றும் திட்டத்திற்கு அரசு ரூ. 22 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. வேலைகள் நடைபெறுவதை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் பார்வையிடுதல்.

பள்ளிப்பாளையம, சேசாயி காகித ஆலையினர் மனமுவந்து அளிக்கவிருக்கும் குழந்தைகள் ரெயில் விரைவில் பூங்காவில் ஓடத் துவங்கும்.

ஸ்டேடியம், பெரியார் மன்றம் அமைப்பதற்காக ரூ. 70 இலட்சம் செலவுகளுக்கான மதிப்பீடுகள் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரால் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இருளடைந்து கிடந்த வ.உ.சி. பூங்கா ஒளிபெற்று வருகின்றது. ஈரோட்டு மக்கள் பாராட்டுகின்றனர் அண்ணாவின் அரசை.

பாம்புப் புற்றுகள் நிறைந்திருந்த வ. உ. சி. பூங்கா மக்களின் மனம் கவரும் பல்வேறு திட்டங்களைப் பெற்று வருகின்றது.

இந்தியாவிலேயே ஈரோடு நகராட்சி வருவாயில் முதலிடம் வகித்து வருகின்றது. ஈரோட்டுப் பெருமக்கள் மாலை வேளையை உல்லாசமாகக் களித்திடும் இடமாக வ. உ. சி. திடல் மாற்றப்பட்டு வருகின்றது. இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் பயிற்சி பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு இனிய பொழுது போக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலாளர்களுக்கு ரூ. 20.07 கோடி செலவில் 856 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அலுவலாளர்கள் குடியிருந்து வருகின்றனர்.

ரூ. 379.12 இலட்சம் செலவில் 1,293 வீடுகளும், குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்து தரப்படவுள்ளன.

புதன்கிழமை தோறும் போக்குவரத்துக்கு இடையூறாக விளங்கி வரும் துணிச் சந்தையை, வசதியான வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் சித்தோட்டுக்கருகில் புதிய நகர் அமையவிருக்கின்றது.

போக்குவரத்து விபத்தின்றி நடந்திட நகரில் பல்வேறு முக்கிய இடங்களில் சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. வளைவுகள் அமைக்கப்பட்டு, அவை அழகுபடுத்தப்பட்டு வருகின்றன.

''சோடியம் வேப்பர்'' மின் விளக்குகள் ஈரோட்டுத் தெருக்களை ஒளி செய்யத் தொடங்கியுள்ளன.

''பிரப்'' ரோடு என அழைக்கப்பட்டு நகரின் முக்கியசாலையை சென்னையிலுள்ள அண்ணா சாலையைப்போல் மாற்றத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சு.முத்துச்சாமி, அவர்கள் சீரிய முயற்சிகள் இப்பணிகளுக்கு ஆணி வேராகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. ந. தியானேசுவரன் இ. ஆ. ப., அவர்கள் துடிப்புமிக்க நடவடிக்கைகள், திட்டங்கள் விரைவில் முடிந்திடத் துணை புரியும்.

மக்கள் நலத் திட்டங்களுக்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்புத் தரும் ஈரோட்டுப் பெருமக்களின் ஒத்துழைப்பால், புதிய ஈரோட்டை — பொலிவுமிக்க ஈரோட்டை விரைவில் காண்போம்

புதியதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் பார்வையிடுதல்.



# முழுமை பெற்று வாழ்ந்திடுவோம்!

இளமை என்னும் நிலத்திலே
திறமை என்னும் விதைவிதைப்போம்!
நேர்மை என்னும் எருவிடுவோம்
பொறுமை என்னும் ஏர்உழுவோம்!

மடமை என்னும் களைபறிப்போம்!
கடமை என்னும் நீரிடுவோம்
வன்மை என்னும் தீதொழிப்போம்!
வளமை என்னும் பயிர்காப்போம்

நன்மை என்னும் அறுவடையால்
வறுமை என்னும் திரைநீக்கி
பசுமை என்னும் பயனடைந்து
தூய்மை என்னும் உயர்வடைவோம்!

எளிமை என்னும் போக்குடனே
உண்மை என்னும் சொல்லுடனே
மேன்மை என்னும் நிலையுடனே
முழுமை என்னும் பேறடைவோம்!

சு. சந்திரசேகர்,
பிளாட் நெ. 14,
13வது குறுக்குத் தெரு,
குரோம்பேட்டை,
நியூ காலனி,
சென்னை-600 044.



## மாணவர் பக்கம்



### விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே, பல்துறையிலும் சிறந்து விளங்குகின்ற மாணவமணிகளை நாம் பார்க்கின்றோம்.

ஆடல், பாடல், நடிப்பு, ஓவியம், விளையாட்டு இப்படி பல துறைகளில் அவர்கள் 'பளிச்'சிடுவதை பள்ளி விழாக்களில், கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பரிசுகள் பெறும்போது பார்க்கின்றோம்.

நீலகிரி, செயின்ட் ஜார்ஜ் ஹோம்ஸ் பள்ளியில் பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர் திரு ஜி. ராஜேஷ். இவர் விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகள், சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

100 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பந்தயங்கள், உயரத் தாண்டுதல் போன்றவற்றில் இவர் கோப்பைகள், பதக்கங்கள் பெற்றுள்ளார். இவருக்குப் பொழுதுபோக்கு என்ன?

பாட்டுப் பாடுவது, ஆட்டோ மொபைல் ரிப்பேர். இவரது நினைவு எல்லாம் தொழில் நுட்பத்திலேயே செல்கிறது. படிப்பிலும் சிறந்து விளங்கும் இம்மாணவரின் எதிர் காலம் ஒளிமயமாக அமையும் என்று நம்பலாம்.

### கடலில் மிகப் பெரிய ''நீர் வீழ்ச்சி''

உலகத்தின் மிகப்பெரிய நீர் வீழ்ச்சிகளைவிட மிகமிகப்பெரிய நீர் வீழ்ச்சி ஒன்று ஆர்க்டிக் கடலும் அட்லாண்டிக் கடலும் சேரும் இடத்தில் (கடலுக்கு அடியில்) இருப்பதாக, லெனின்கிராடில் உள்ள ஆர்க்டிக்-அண்டார்க்டிக் கடலியல் ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆர்க்டிக் கடலுக்கும், அட்லாண்டிக் கடலுக்கும் எல்லையாக விளங்கும் கிரீன்லாந்து ஸ்காட்லாந்து ஆர்க் எனப்படும் தீவுக் கூட்டத்தருகே இந்த நீர் வீழ்ச்சி உள்ளது, ஆர்க்டிக் பகுதிகளிலிருந்து வரும் குளிர்ந்த நீர் அட்லாண்டிக் மாகடலில் 3000 மீட்டர் பள்ளத்தில் வீழ்கிறது. இங்கு பாயும் தண்ணீரின் அளவு ஒன்றரை இலட்சம் கன கிலோமீட்டர் என்று மதிப்பிடப்படுகிறது. உலகத்தில் பாயும் அத்தனை நதிகளின் தண்ணீர் அளவையும் விட இது அதிகமாகும்.

அட்லாண்டிக் மாகடலில், அதன் தென் கோடி எல்லை வரை உள்ள நீரோட்டம் முழுவதையுமே இந்த நீர்வீழ்ச்சி பாதிப்பதாகக் கடல்-இயல் வல்லுநர்கள் கருதுகின்றனர். ஆக்சிஜன் வாயு அதிகம் கலந்துள்ள ஆர்க்டிக் கடல் நீர் பாய்ந்து எந்நேரமும் அட்லாண்டிக் கடல் நீரைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறது.

# சோவியத் வன விலங்குகள்

சோவியத் யூனியனது இயற்கை அமைப்புகள் மிகவும் பலதரப்பட்டவை; எனவே, இந்த நாட்டில் கணக்கற்ற விலங்கு வகைகள் உள்ளன. சோவியத் நாட்டின் கானகங்களிலும் சமவெளிகளிலும் மலைகளிலும் நாம் விதம் விதமான விலங்குகளைக் காணலாம்,











பின்கண்ட விலங்குகள் அரசப் பாதுகாப்பில் உள்ளன: புலி, பனிவேங்கை. இமாலயக்கரடி, காட்டெருது, ஆசிய சிறுத்தைப் புலி

## தெரிந்து கொள்க!

கஸ்தூரி தரும் மிருகம்—மான்
பறக்காத பறவை—பெங்குவின்
நாய்க்கு வேர்க்கும் பாகம்—நாக்கு
கொம்பிலே கண் உள்ள பிராணி—நத்தை
காலில் காதுள்ள பூச்சி—வெட்டுக்கிளி
நீந்தத் தெரியாத மிருகம்—ஒட்டகம்
இந்தியாவில் முதன் முதலில் நடத்தப்பட்ட பத்திரிகை—பெங்கால் கெசட்
இந்தியாவில் முதன்முதலில் மதுவிலக்கு அமலுக்கு வந்த மாவட்டம்—சேலம்
தமிழில் வெளிவந்த முதல் நூல்—பைபிள்
இசைத் தட்டு செய்யப் பயன்படும் பொருள்—அரக்கு

வ. இரவிச்சந்திரன்,
12-ஆம் வகுப்பு "அ" பிரிவு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கலவை (அஞ்சல்), 632 506.
வ. ஆ. மாவட்டம்.



சிங்கப்பூரில் நடைபெற்ற உலகத் தோல் தொழிற் கண் காட்சித் துவக்க விழாவில் கலந்துகொண்டபோது...

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதினால் உற்பத்தியின் அளவு அங்கே அதிகமாக இருக்கின்றது. ஆனால் நம்மைப்பொறுத்தவரை உற்பத்தி ( Productivity ) யுடன் வேலை வாய்ப்பும் குறிக்கோளாக இருப்பதால் நூல் நூற்க இயந்திரத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. வேலை வாய்ப்பில் தமிழகம் தன்னிறைவு பெற்றுச் செல்வச் செழிப்பில் ஓங்கும்போது நமது நாடும் முழு அளவுக்கு இயந்திரமயமாகும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

ஜப்பான் நாட்டினர், ஆராய்ச்சியுடன் கூடிய வளர்ச்சிக்கு (Research and Development) முக்கியத்துவம் தருகிறார்கள். பட்டுவளர்ப்பு குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகப் பல நிறுவனங்களை அமைத்துச் செயல்பட்டு வருகிறார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட கலப்பின வகை பட்டு முட்டைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த முறையைப் பின்பற்றி தமிழ்நாட்டிலும் மாவட்டந்தோறும் ஆராய்ச்சி அமைப்புகளை நிறுவ மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

பால் பண்ணைத் தொழில் என்று எண்ணும்போது தமிழ்நாட்டிலிருப்பவர்களுக்கு மாதவரம் பால் பண்ணைதான் நினைவுக்கு வரும். அங்கிருக்கும் நவீன பால்பண்ணை 1962-ஆம் ஆண்டு 'நியூசிலாந்து நாட்டின்' ஒத்துழைப்போடு தொடங்கப்பட்டதாகும். அதனால்தான் அந்நாட்டிற்குச் செல்லும் போது காலத்தால் உதவிய ஒரு நண்பரின் இல்லத்திற்குச் செல்வதுபோன்ற உணர்வோடு சென்றேன்.

நியூசிலாந்து நாட்டின் தேசிய பொருளாதாரமே பால் பண்ணைத் தொழிலைத் தான் நம்பியிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. உற்பத்தியாளர்கள் என்ற வகையில் அந்நாட்டில் இத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் 15,000 பேர்தான், ஆனால் அவர்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பால் பொருள்களின் மதிப்பு ரூ. 800 கோடியாகும். உலகில் ஏற்றுமதி செய்யப்படும் பால்பொருள்களின் மொத்த அளவில் இது கால் பங்காகும்.

பால்வளத்துறையில் இத்தகைய வெற்றியினை அவர்கள் பெற்றதற்கான அடிப்படையான காரணம், அங்குள்ள முறையும் அமைப்பும் தான் (Structure, System & Organisation) என்பதை நம்மால் அறிந்திட முடிகின்றது.

அத்தகைய அமைப்பினையும், முறையினையும், வடிவத்தினையும் நாம் பெற்று

ஜப்பான் நாட்டு மின் அணுத் தொழிற்சாலைக்குச் சென்றிருந்தபோது...



விட்டால்-இத்துறையில் தமிழகம் தோற்றுவித்துள்ள வெண்மைப் புரட்சி விரைவில் வெற்றியடையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

10 லட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் ரூ.40 கோடி செலவில் இரண்டாம் பால் வளத்திட்டத்தின் மூலம் புரட்சித்தலைவர் அவர்களின் விழுமிய முயற்சியால் நிறைவேற்றப்படவிருக்கும் சீரிய திட்டத்தினைச் செம்மையுடன் செயல்படுத்த நியூசிலாந்து நாட்டின் முயற்சி சிறந்த முன்னுதாரணமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தமிழகத்தில் பூம்புகார் நிறுவனத்தால் உருவாக்கப்படும் கைவினை கலைப்பொருள்களுக்கு கோலாலம்பூர் போன்ற இடங்களில் களாக வடிக்கும் அந்தப் பெரும் பணிக்கு நமது பூம்புகார் நிறுவனத்தின் ஒத்துழைப்பினை அவர்கள் நாடியுள்ளனர்.

ஜெனிவா நகரில் அகில உலக அணு ஆயுத ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் பாரதக் கதையை அழகிய சித்திரமாகத் தீட்டித்தந்த பூம்புகார் நிறுவனம் இந்தப் பெரும்பணியினையும், சிறப்பாக நிறைவேற்ற இருக்கின்றது.

தமிழ்நாட்டின் கலைத்திறனையும், சித்திர வேலைப்பாட்டினையும், அந்நாட்டினர் பாராட்டியபோது,

"....I consider that the Dravidians have got something concrete, something distinct and something different to offer in the Nation at large...."



ஆஸ்திரேலிய நாட்டில் உள்ள தோல் தொழிற்சாலையில்

நல்ல வரவேற்பு இருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். அங்குள்ள சுப்ரமணியர் ஆலயத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த கைவினைக் கலைஞர்கள் வெள்ளித் தேர் ஒன்றினை உருவாக்கிடும் காட்சியினைக் கண்டேன். தமிழ்நாட்டின் கலைத்திறனையும் கற்பனை வளத்தையும் அந்நாட்டில் பறைசாற்ற இந்த வெள்ளித்தேர் ஒன்றே போதும்!

நான் கண்ட சுப்ரமணியர் ஆலயம் குன்றொன்றின் மீதுதான் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குன்றில் இரண்டு குகைகள் இருப்பதைக் கண்டேன். ஒரு குகைக்குள் அரிய கலைக்கண் காட்சி ஒன்றினை உருவாக்கியிருக்கிறார்கள். வள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் மாட்சியினையும் விவரிக்கும் அழகிய கண்காட்சியினை இன்னொரு குகையில் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். 1300 குறட்பாக்களையும் அழகிய காட்சி

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசும் போது பெருமைபட உரைத்த கருத்துத்தான் என் நினைவில் தோன்றியது!

தனி மனிதனின் நல்வாழ்வுக்கும், சமுதாய அறநெறிக்கும் உள்ளங்களின் இன்ப அன்பு வாழ்வுக்கும் அடிப்படையான கருத்துக்களை கோடிட்டுக்காட்டும் குறளுக்கு அழியாச் சின்னமாக அமையவிருக்கும் இந்தக்கலைக் கண்காட்சி பூம்புகார் நிறுவனத்தின் திறமையையும் தமிழ்நாட்டின் பெருமையையும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு எடுத்துக்காட்டும் என்ற பெருமித உணர்வோடு அவ்விடத்தைவிட்டு அகன்றேன்.



கோலாலம்பூர் சுப்ரமணியர் ஆலயத்திற்கு, பூம்புகார் நிறுவனத்தினால் அளிக்கப்பட்டுள்ள வெள்ளித்தேரைப் பார்வையிடுதல்

இப்படி புரட்சித்தலைவரின் ஆணையினையும், அன்புக்கட்டளையையும் ஏற்று 7 நாடுகளுக்குச் சென்று 25 நாட்களில் 50க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களையும் ஆராய்ச்சி மையங்களையும் கண்ட நான் ஒரு நம்பிக்கையோடு உள்ள உறுதியோடு தமிழகம் திரும்பியிருக்கின்றேன்.

வளர்ச்சியின் முகட்டினைத் தமிழகம் எட்டிப்பிடிக்க முடியும் - வளர்ந்து வரும் நாடுகளோடு போட்டியிடும் அளவுக்கு முன்னேற்றம் அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. வெளிநாட்டுப் பயணத்தின்போது நான் கற்ற படிப்பினையும் பெற்ற அனுபவமும், இந்த உண்மையினைத்தான் எனக்கு உணர்த்துகின்றன.

"He smote the rock of national resources and abundant streams of revenue gushed forth. He touched the dead corps of public credit and it sprang upon its feet"

''நாட்டிலே இருக்கின்ற செல்வங்கள் பாறையைப்போல் அழுத்திக்கொண்டு இருந்தன- அவைகளை அவன் தட்டிப்பார்க்கவில்லை - உடைத்தான். தேவையான வளம் பீறிட்டுப் பாய்ந்தது. செத்ததோ என்று கருதுகிற அளவுக்குச் சோர்ந்து போயிருந்த பொது மக்களுடைய செல்வ நிலைமையைத் தொட்டான், தொட்டவுடன் அது துள்ளியெழுந்தது.''

அமெரிக்க நாட்டில் ஹாமில்டன் என்பவருக்காக சொல்லப்பட்ட இந்தப்புகழுரை அண்ணாவின் இதயக்கனி புரட்சித்தலைவர் அவர்களுக்கு முழுக்க முழுக்கப் பொருத்தமுடையதாக இருக்கின்றது.

தமிழ்நாட்டு மக்களுடைய செல்வ நிலை துள்ளியெழுகின்ற வகையில் மாறுதல்கள் நிகழ்ந்திடவும், எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் இன்பநிலை மலர்ந்திடவும், திட்டங்கள் வகுத்துச் செயலாற்றிவரும் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய எண்ணங்கள் செயல்வடிவம் பெற எனது பயணம் துணை நின்று தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்கு ஒரு திறவுகோலாக அமையும் என்பதை எண்ணிடும்போது மகிழ்கிறேன்.

## கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ. 90 கோடி



தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதக் காலத்திற்கு ரூ. 90.3 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. 1982-83-ஆம் ஆண்டுக்கான திட்டத்தில், மத்திய அரசின் பங்கு ரூ. 190 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சமமான தொகையை மாநில அரசுகள் வழங்கும்.

இதில் பத்து சதவீதம் ஷெட்யூல்டு வகுப்பினர் / பழங்குடியினருக்கும், மற்றொரு பத்து சதவீதம் சமுதாயக் காடுகளுக்கும் ஒதுக்கப்படும். இதரப் பணிகளுக்காக ரூ. 72.27 கோடி செலவிடப்படும்.

ரூ. 24.75 கோடி மதிப்புள்ள உணவு தானியங்களும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் அரிசி 1 இலட்சம் டன். கோதுமை 50,000 டன்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 300 முதல் 350 மில்லியன் மனித நாட்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டம் முன்பு வேலைக்கு உணவுத் திட்டம் என்று அழைக்கப்பட்டு, 1977-78- ல் துவக்கப்பட்டது.



# பெருந்தலைவர் சில நினைவுகள்

**-எல்.எம்.மருதம்**

ஒட்டிய வயிறு, உலர்ந்த கண்கள், சலவையைச் சந்தித்துப் பல நாட்களாகி விட்ட பழுப்புக் கதர்ச்சட்டை, வறுமையோடு இறுக்கமான உறவின் காரணமாக வானவில்லாய் வளைந்து காணும் உடல்-இந்த நிலையில் ஒருவர்,

"நான் முதலமைச்சரைப் பார்க்க வேண்டும்" என்று கூறியவாறு முண்டியடித்துக் கொண்டு வந்தார். பாதுகாப்புப் போலீஸ் அதிகாரி ஒருவர் பாதியில் அவரை வழிமறித்துப் பின்னால் தள்ளினார். கெஞ்சும் குரலுக்குக் கொஞ்சமும் அவர் செவிசாய்க்கவில்லை. "முதலமைச்சர் ஓய்வு எடுக்கப் போகிறார்; பெரிய ஆட்கள் கூட இப்போது போக முடியாது" என்று போலீஸ் அதிகாரி அழுத்தமாக உரத்த குரலில் கூறினார்.

அப்போது தற்செயலாக மாடி வராந்தாவிற்கு வந்த முதல்வர் காமராசர் அந்தப் போராட்டக் காட்சியைக் கண்ணுற்றார். உடனே, "அவரை இங்கே அனுப்புங்கள்" என்று உரத்த குரலில் கூறினார். அந்த மனிதர் காமராசரிடம் சென்றார். "வா வேலு வா! எப்படி இருக்கேன்னேன்" என்று பாசம் பரிமளிக்க-அன்பு அரவணைக்க, வந்தவர் தோளில் தன் வலக்கரத்தைப் பதித்தவாறு கூறினார் காமராசர்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு, சுதந்திரப் போராட்டக் காலத்தில் தன்னுடன் சில காலம் சிறையில் இருந்த சாதாரணக் காங்கிரஸ் தொண்டர் அவர் என்பதை இத்தனை காலத்திற்குப் பிறகும் நினைவில் வைத்து அடையாளம் கண்டு, அழைத்து அளவளாவினார் காமராசர்.

1955-ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் அன்றைய தமிழக முதல்வராக இருந்த காமராசர் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது சிற்றூர் ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சி இது!

வந்தவர் சொந்த சோக வரலாற்றினைச் சொல்ல, அவரை வாட்டி வளைத்திருக்க வறுமைக்கு ஓரளவு பரிகாரம் கிடைத்ததாகக் கூறப்பட்டது. பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர் எங்கும் எத்தனை தொண்டர்கள் இருக்கிறார்களோ, அத்தனை பேரையும் நினைவில் வைத்து, தொண்டருக்குத் தொண்டராய் விளங்கியதால்தான் தமிழகம் அவரைப் பெருந்தலைவராக்கிப் பெருமையடைந்தது.

தியாகத் திருவுருவாக, எளிமையின் இலக்கணமாக, நேர்மையின் சின்னமாக வாழ்ந்தார் காமராசர் என்பது நாடறிந்த உண்மை. ஏன், உலகறிந்த உண்மை என்றுகூடக் கூறலாம்.

'இந்திய அரசியலில் தோன்றியிருக்கும் ஒரு புதுமைக்கு காமராசர் ஒரு சின்னம். தியாகமும், எளிமையும் அடக்கமும் ஒருங்கே அமைந்த அவர், பாமர மக்களிடத்தில் உதித்து பரிமளித்தவர் என்று 'நியூயார்க் டைம்ஸ்' ஏட்டின்செய்தியாளர் அந்தோனி லூகஸ் குறிப்பிட்டது எவ்வளவு பொருத்தம்?

பாரம்பரியக் குடும்பப் பெருமை படைத்தோர், பல்கலைக் கழகப் பட்டம் பெற்றோர்தான் நாடாள முடியும் என்ற பழம் கதையை, பொய்யாக்கி, புதிய வரலாறு படைத்த தமிழக முதல்வர்களுக்கு முதல்வர் காமராசர்.

"நான் படிக்கவில்லை என்று பலர் கூறுகின்றனர். நான் எந்தப் பல்கலைக் கழகத்திலும் படித்ததாகச் சொல்லிக் கொள்ளவில்லையே! ஆனாலும் எனக்குப் பூகோள சாத்திரம் நன்கு தெரியும். தமிழ்நாட்டில் அநேகமாக எல்லாப் பகுதியும் எனக்கு நன்கு தெரியும். எங்கெல்லாம் ஆறுகள் இருக்கின்றன? எங்கெல்லாம் ஏரிகள் இருக்கின்றன? எந்த நகரில் எந்தக் கிராமத்தில் மக்கள் என்னென்ன தொழில் செய்கிறார்கள்? எப்படி வாழ்கிறார்கள் என்பதும் தெரியும். இவைகள் எல்லாம் பூகோள சாத்திர அறிவு இல்லை. நேர்கோடுகளும் வளைகோடுகளும் கொண்டிருக்கும் புத்தகம் தான் பூகோள சாத்திரம் என்றால் அதுபற்றித் தெரிந்து கொள்ளாமலேயே இருந்து விடுகிறேன்."

அமெரிக்கப் பத்திரிகையாளருக்குப் பேட்டி அளித்த காமராசர் ஒரு வினாவிற்கு அளித்த விளக்கம் இது.

வல்லான் வகுத்த வழியைச் செல்லாக் காசாக்கி, எல்லாரும் எல்லாமே பெறவேண்டும் என்ற இதய கீதத்தை இலட்சியமாகக் கொண்டவர் காமராசர். எனவேதான் "இருட்டுக் குகையிலே குருட்டுத்தனமாகக்கிடப்பவனே, எழு, விழி! ஏற்ற நடைபோடு!" என்றார். பட்டிதொட்டி எல்லாம் பள்ளிகள், பகலுணவு, இலவசக் கல்வி, மின் இணைப்பு, எண்ணற்ற தொழிற் கூடங்கள் இவற்றிற்குக் கால்கோள் விழா வெடுத்து, கட்டடப் பணியையும் துவக்கியவர் காமராசர் தானே?

"சிலர் வாழ்வதற்கும் பலர் கஷ்டப்படுவதற்கும் அவரவர் தலையெழுத்துதான் காரணம் என்று சொல்வது சரியா? அப்படி கடவுன் எழுதியிருந்தான்னா, அவன் கையை முறுக்கி மாற்றி எழுதவைப்போம்னே" என்று 1963-இல் சென்னை சேப்பாக்கம் கூட்டத்திலே அவர் எளிய மொழியிலே பார்போற்றும் கருத்தைக் கூறியது எதைக் காட்டுகிறது? சாதி, மத, கடவுள் விவகாரங்களில் காமராசரும் ஒரு ஜவகர்லால் நேரு என்பது அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் தெரியும்.

1954-ஆம் ஆண்டு காமராசர் தமிழகத்தின் முதல்வர் ஆனதும் தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவரை மனப்பூர்வமாக வரவேற்றனர்.

ஒரு நாள் சென்னை பெரம்பூர் பொதுக் கூட்டம் முடிந்தவுடன் நேரமாகிவிட்டபடியால் பத்திரிகை நிருபர்களையும் தன் காரிலேயே ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தார் காமராசர். நடை பாதையில் பலர் படுத்திருப்பதைப்பார்த்தார். ஒரு அசைவ ஓட்டல் முன்பு இருந்த தொட்டியில் சில ஏழைக் குழந்தைகள் எச்சில் இலைகளை எடுத்து அவற்றில் ஒட்டிக் கொண்டிருப்பதைச் சாப்பிடுவதையும் பார்த்தார். ஏதேதோ பேசிக் கொண்டே வந்தார்.

"என்ன சுதந்திரம்? நம்ம ஆட்சி வந்தா போதுமா? இந்தக் குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டிய வயசு! பசி இருந்தா எப்படிப் படிப்பு வரும்னேன்? இதற்கெல்லாம் எப்படியாவது படிப்படியா ஒரு வழி பண்ணியாகணும்! அப்போதுதானே சுதந்திரம் என்று அர்த்தம்?"

இந்தச் சிந்தனைகளின் விளைவே பள்ளிப் பெருக்கமும் மதிய உணவுத் திட்டமும்.

அரசியல் இயக்கங்கள் என்ற வகையில் எதிரும் புதிருமாக பல நேரங்களில் இயங்குவது ஜனநாயக நாட்டில் இயல்பு. ஆனாலும் காமராசர், விடுதலை வீரர், தமிழகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் துவக்க விழா நடத்தியவர் என்ற வகையில், கட்சி மாச்சரியங்களுக்கு அப்பால் நின்று, பெருந்தலைவர் என்ற விருதைப் பெற்றிருக்கிறார்..







# சேலத்தில் பாரதியார் விழா

**— அ. மருது**

தமிழக அரசு சார்பில் நடத்தப்படும் பாரதியார் நூற்றாண்டு விழா சேலத்தில் 4-7-1982 அன்று நடைபெற்றது.

சேலம் நேரு கலையரங்கில் நாதஸ்வர இன்னிசைத் தென்றல் கலைமாமணி தர்மபுரி கோவிந்தராசலு சகோதரர்களின் இன்னிசையோடு விழா துவங்கியது.

பள்ளி மாணவ மாணவியர்கள் பாரதி பற்றிய இசை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராசலு இ.ஆ.ப. அவர்கள் பாரதி பற்றிய புகைப்பட, புத்தகக் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ப. செல்வம், இ.ஆ.ப. வரவேற்புரை ஆற்றினார்.

இளையபாரதம் நிகழ்ச்சி டாக்டர் கே. ராமமூர்த்தி (பாரதி இளைஞர் சங்கத் தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு பி. டி. சாமி 'பாரதியும் பாவேந்தரும்' என்ற தலைப்பிலும், செல்வி சாந்தி 'பாரதியும் வில்லியும்' என்ற தலைப்பிலும், செல்வி அ. குந்தவை 'பாரதியும் கம்பனும்' என்ற தலைப்பிலும், திரு எம். பி. ரகுமான் 'பாரதியும் பெரியாரும்' என்ற தலைப்பிலும், செல்வி இன்கவை 'பாரதியும் ஷெல்லியும்' என்ற தலைப்பிலும் உரையாற்றி அவையோரின் பலத்த கைபொலிகளைப் பெற்றனர்.

கவியரங்க நிகழ்ச்சியை மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

"பாரதியார் தமிழ் மொழி, தமிழ் இன வளர்ச்சிக்காகவும், இளம் சமுதாயத்தினரிடம் பகுத்தறிவு மிளிர வேண்டும் என்ற நோக்கத்தோடும் அயராது பாடுபட்டவர். அவரை மதிக்கவேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்று பட்டிதொட்டியிலெல்லாம் பாரதியாருக்கு விழா எடுத்துள்ளார்.

"பாரதியார் தந்தை பெரியார் போன்ற துணிவான கருத்துக்களைக் கொண்டு இருந்தார். புத்தம் புதுக் கலைகள் வேண்டும், பழையன பற்றிப் பேசிப் பயன் இல்லை என்று கூறினார், அதன்படியும் செயல்பட்டார்.

"விடுதலை வேள்விக்கு எரிவளர்க்கும் நெய்போல சுதந்திரப் போராட்டப் பாடல்களை மட்டும் பாரதியார் பாடவில்லை. விடுதலை பெற்ற இந்தியா, சமூக பொருளாதார அரசியல் வாழ்வில் எப்படி வாழவேண்டும் என்று எதிர்கால இந்தியாவுக்கு வழிகாட்டியாகவும் பாரதியார் திகழ்கின்றார்.

"சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் அரசுக்கு ஆண்டுக்கு 300 கோடி நட்டம் ஏற்படுகின்றது. இதை முன்பே நன்கு உணர்ந்த காரணத்தினால்தான் பாரதியார், தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் பாலம் வேண்டுமென்று அன்றே வலியுறுத்தினார். அன்று அண்ணா வலியுறுத்தியதைத் தொடர்ந்து இன்று இந்த அரசும் மைய அரசை வலியுறுத்தி வருகின்றது.

"வறுமை என்பது மிகக் கொடியது, அதிலும் இளமையில் வறுமை மிக மிகக் கொடியது. அதற்காகத்தான் தமிழகத்தில் குழந்தைகட்கு உணவுத் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை வகுத்துத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

"பாரதியின் கருத்துப்படி இன்று பாரதியின் வாரிசு என்ற அடிப்படையில் ஏழை எளிய குழந்தைகளுக்கு ரூ. 100 கோடி இலவச சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் தமிழ் மண்ணில் தவழவிட்டுள்ளார்.

"தமிழ் இனம் தலைநிமிர்ந்து வாழ ஒற்றுமை வேண்டும் என்றும், பாரதி கண்ட மொழி உணர்வு எல்லாம் பெற வேண்டுமென்று விரும்பி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கவியரங்க நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார்.

"ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி" என்ற பொருளில் பல்வேறு கவிஞர்கள் பாடினார்கள். கேற்றுக் கவிதை அறிவியல் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் பெ. வேலு அவர்களும், சமுதாயப் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் செந்தமிழ் மாறன் அவர்களும், கவிதைப் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் நாமக்கல் நாதன் அவர்களும், பகைமைப் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் மழை மகன் அவர்களும், மகளிர் விடுதலைப் புரட்சி என்ற தலைப்பில் செல்வி ஆ. மான்விழி அவர்களும் பங்கேற்றனர்.





காலை நிகழ்ச்சிகள் சீரும் சிறப்புடனும் முடிவுற்றன. விழாவின் இறுதியில் சேலம் நகராட்சித் தனிஅலுவலர் திரு த. அ. சிவசுப்ரமணியன் நன்றி கூறினார்.

பாரதி பற்றிய அலங்கார ஊர்திகள், சேலம் காந்தி மைதானத்திலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய சாலைகள் வழியாக சென்று நேரே நேரு கலையரங்கை அடைந்தது.

ஊர்வலத்தில் தேசிய மாணவர் படையினர், சாரணர் படையினர், ஊர்க்காவல் படையினர், கரகாட்டம், பள்ளி மாணவ மாணவியர்கள் ஆகியோர் அணிவகுத்துச் சென்றனர். நகரின் பல்வேறு பகுதிகளில் பாரதியார் பற்றிய அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. ஊர்வலத்தை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும், திட்டக்குழுத் துணைத் தலைவர் மா. முத்துச்சாமி அவர்களும் சேலம் அரசினர் பள்ளி அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையிலிருந்து பார்த்தனர்.

மாலையில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் நடுவராக இருந்தார்.

பாரதியார் கவிதைகள் மிகவும் வலியுறுத்துவது விடுதலை உணர்வு என்ற தலைப்பில் திரு சு. அண்ணாமலை, திரு ப. வேங்கடாசலம், திருமதி அன்னம்மாள் ஆகியோர் ஓர் அணியிலும், சமுதாய மலர்ச்சி என்ற தலைப்பில் திரு துக்காணி அ. வரதராசன், திரு க. திருநாவுக்கரசு, திருமதி முல்லை மாணிக்கம் ஆகியோர் மற்றொரு அணியிலும் ஆணித்தரமாக வாதிட்டனர்.

வழக்காடு மன்றம் நிகழ்ச்சிக்கு திரு வலம்புரி ஜான் அவர்கள் நடுவராக இருந்தார்.

பாரதியை முறையாகப் பின்பற்றாத சமுதாயம் குற்றமுடையதே என்ற பொருளில், வழக்குத் தொடுப்பவராக திரு மனம் சேர சந்திரசாசன் அவர்களும் எதிர் வழக்காடுபவராக பேராசிரியர் இரா. செல்வகணபதி அவர்களும் பங்கேற்றனர். இத்துடன் மாலை நிகழ்ச்சிகள் முடிவுபெற்றன.

விழா நிறைவுச் சிறப்புக் கூட்டத்திற்கு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராசலு இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இக் கூட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு திட்டக்குழுத்





85338

# ஆங்காங்கில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா

தமிழ்ப் பண்பாட்டு மன்றத்தின் சார்பில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா ஆங்காங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களும் ஆங்காங் நாட்டில் வாழும் இந்தியப் பிரமுகர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

துணைத் தலைவர் பாவலர் மா. முத்துச்சாமி அவர்கள் தலைமை தாங்கியும், பாரதி படத்தினைத் திறந்து வைத்தும், நல்வாழ்வுத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கியும், உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''பாரதியார் ஒரு தேசிய கவி—மகாகவி, விடுதலை வீரர், கவிதைப் பூங்கா, சமுதாயச் சிற்பி, புரட்சிக் கவிஞர் என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதியார் சொல்ல வேண்டிய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். ஆனால் சமுதாயம் அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

''பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்தத் தருணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பாரதியாரை நாம் உருவாக்க வேண்டும்.''

மருத்துவமனைக்கும், பள்ளிக் கட்டடத்திற்கும் பாரதி பெயர் சூட்டியும் அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''பாரதியார் பாடலில்-கவிதையில்-சொல்லில்-சுவை உள்ளது. சுதந்திர போராட்ட காலத்திலே பாரதியார் பாடலைப் பாடியதால் ஆங்கிலேயரிடம் அடிபட்டோம், சிறைபட்டோம். அதில் லட்சியம் இருந்தது, அதற்காக அடிபட்டோம். அவர்கள் அடிக்கும்போது ''வந்தே மாதரம்'' என்று பாடுவோம். ஏன் தெரியுமா? அடிக்கின்ற வலிதெரியாமல் இருக்கத்தான். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றான் பாரதி. சாதிகள் கூத்தாடுகின்றன என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். சாதிகள் கூத்தாடவில்லை, நாம் தான் கூத்தாட வைக்கின்றோம்.

''மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. தமிழக அரசின் இந்த இலவசச் சத்துணவுத் திட்டத்தையும் சேர்த்து 21 அம்சத் திட்டமாக மத்திய அரசு செயல்படவேண்டும். மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டும். பல திட்டங்களுக்கு ஐ. நா. சபை நிதி உதவி வழங்கத்தான் போகின்றது.''

மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்கு பரிசாகப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் (தனி அலுவலர், மகாகவிபாரதியார் நூற்றாண்டு விழாக் குழு) நன்றி கூறினார். செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் 'பாரதி கண்ணம்மா' நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.



தமிழக அரசின் நல்வாழ்வுத் திட்டங்களின் கீழ் சேலம் மாவட்டத்தில் பயனடைந்தோர் பட்டியல்.:

| | ஆதி திராவிடர் | மலைவாழ் மக்கள் | மற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிலப்பட்டா பெற்றவர்கள் | 7 | 22 | 64 | 93 |
| வீட்டு மனைப்பட்டாக்கள் | 308 | — | 266 | 574 |
| முதியோர் உதவித் தொகை பெறுவோர் | | | | 103 |
| விதவை உதவித் தொகை பெறுவோர் | | | | 12 |
| உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | | | | 75 |
| விவசாயக் கூலி வேலை செய்வோர் பெறும் உதவிகள் | | | | 26 |
| விபத்து நிவாரண நிதி | | | | 4 |
| சலவைத் தொழிற்கருவி பெறுவோர் | | | | 12 |
| சவரத் தொழிற்கருவி பெறுவோர் | | | | 12 |
| கல் உடைக்கும் கருவி பெறுவோர் | | | | 9 |
| நில உடமை பட்டாப் பெறுவோர் | | | | 8,986 |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !

பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

16-7-1982 75



16-6-1982 75 காசு

